

மாமன் மகள்
நாமக்கல் கவிஞர்

மாமன் மகள்

நாமக்கல் கவிஞர் :
வெ. இராமலிங்கம் பிள்ளை



பழனியப்பா பிரதர்ஸ்

திருச்சி & சென்னை

விலை ரூ. 7-0-0

முதற்பதிப்பு - ஜனவரி 1954.

பதிப்புரை

தன்னரசு பெற்றுத் திகழ்ந்துவரும் நம் நாட்டிலும் 'புரட்சி புரட்சி' என்று ஏதோ பேசப்படுகின்றது. அதன் பெயருக்கு அமைந்த உண்மைக் கருத்து என்ன, அதைக் கடைப்பிடிப்பவர்களின் போக்கு என்ன, அவர்கள் கொண்டுள்ள உள் நோக்கம் என்ன என்பதைப் பொது மக்கள் எளிதில் உணரமுடிவதில்லை. 'பொதுவுடைமை, சமதர்மம்' என்றெல்லாம் காரசாரமாகப் பேசப்படுகின் றது. இவற்றில் உட்பொருள் என்ன ?

இவற்றை யெல்லாம் இந்த ஒப்பற்ற நாடக நூலின் மூலம் தெள்ளிதின் விளக்குகின்றார், நம் **காந்தீயக் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை** யவர்கள். புரட்சிக் காரர்களின் உண்மையான சொரூபமும், பெரும் பணம் படைத்த மில் முதலாளி நடத்திய 'தர்பாரும்', இறுதியில் அவர் வகுத்த புரட்சிகரமான திட்டங்களும் மிகவும் போற்றத் தக்க முறையில் விறுவிறுப்பாக அமைந்துள் ளது. தமிழர் ஒவ்வொருவரும் உரிமைகொண்டு படிக்க வேண்டிய நூல் இந்த **'மாமன் மகள்'**.

பழனியப்பா பிரதர்ஸ்.

ASIAN PRINTERS, MADRAS–5

நாடக பாத்திரங்கள்

சுந்தரம்	...	பி. ஏ. பாஸ் செய்த ஓர் இளைஞன்
கோவிந்தன்	...	ஒரு மில் முதலாளியிடம் குமாஸ்தா
செங்கோடன்	...	மில் முதலாளியின் பண்ணையாள்
முத்துவீரப்பன்	...	சுந்தரத்தின் பள்ளித் தோழனுக பி. ஏ. பாஸ் செய்தவன்; புரட்சிக்கட்சியின் தலைவன்
மீனுட்சி அம்மாள்	...	சுந்தரத்தின் தாயார்
பங்கஜம்	...	சுந்தரத்தின் நான்கு தங்கைகளில் மூத்தவள்
வசந்தா	...	நல்லப்பருடைய ஒரே மகள்
நல்லப்பர்	...	பெரிய பணக்காரர்; மில் முதலாளி
நடராஜன்	...	சுந்தரத்தின் மாமன்
ராஜேஸ்வரி	...	நடராஜன் மகள்
காளியம்மாள்	...	செங்கோடன் மனைவி
ராஜப்பா	...	நல்லப்பருடைய வியாஜ்யங்களைக் கவனிப்பவர்
ராமநாதன்	...	நல்லப்பரிடத்தில் ஒரு குமாஸ்தா
நஞ்சப்பன்	...	நல்லப்பருடைய அந்தரங்க வேலைக்காரன்
செல்லம்மாள்	...	வசந்தாவின் அந்தரங்க பணிப்பெண்
கருப்பண்ணன் வீராசாமி இன்னும் சிலர்	...	புரட்சிக் கட்சியின் முக்கியஸ்தர்கள்
சொக்கன்	...	முத்துவீரப்பனுடைய ஆள்
டாக்டர் சேகர்	...	ஒரு மலையாள டாக்டர்
வீரபத்ரன்	...	நல்லப்பருடைய சொந்த சிப்பாய்களின் தலைவன்
ராமானுஜம்	...	வீரபத்ரனுடைய உதவி உத்யோகஸ்தன்
முத்தான்	...	நல்லப்பருடைய நந்தவனத் தோட்டக்காரன்
நாச்சிமுத்து	...	பெரிய மிராசுதார்; வீராசாமியின் நண்பன்
வேணு	...	நாச்சிமுத்துவின் காரியஸ்தன்
சஞ்சீவி, காசீம், கந்தன்	...	நல்லப்பர் டிரைவர்கள்
மோகனரங்கன்	...	ராஜப்பாவின் மகன்; சுந்தரத்தின் நண்பன்

இன்ஸ்பெக்டர் சப் இன்ஸ்பெக்டர் கலெக்டர் சூப்ரெண்ட் ஜோன்ஸ் துரை டாக்டர் உதவி டாக்டர் போலீஸ்காரர்கள்	}	சர்க்கார் உத்தியோகஸ்தர்கள்
முனுசாமி மருதை தெண்டாயுதம் சின்னசாமி வேலைக்காரி தொண்டர்கள்	}	காவல் காப்போர் வேலை செய்வோர்
மலையாண்டி	...	காளியம்மாளின் தாய்மாமன்
மோகனசுந்தரி	...	நாட்டியக்காரி
கங்காணி	...	நாச்சிமுத்துவின் நண்பர்

மாமன் மகள்

காட்சி I

காலம் : பிற்பகல்

இடம் : மல்லபாளையத்தில் ஒரு வாய்க்காலின் ஓரமாக உள்ள மரநிழல்

[சுந்தரம் B.A. என்பவன் மிகவும் களைப்புடன் மெள்ள மெள்ள நடந்து வந்து ஒரு மர நிழலில் நிற்கிறான். சுற்று முற்றும் பார்க்கிறான். பிறகு மரத்தின் பக்கத்தில் உட்கார்ந்து அலுப்புத்தீர மரத்தின்மீது சாய்ந்துகொண்டே பற்பல யோசனையில் ஆழ்ந்தவனைப் படுத்திருக்கிறான். திடீரென்று வேகமாக எழுந்து வாய்க்காலுக்குள் இறங்கி வயிறு நிரம்பத் தண்ணீர் குடித்துவிட்டுக் கரைக்கு வருகிறான். உடனே அவனுக்கு ஒரு புது வேகம் உதிக்கிறது.]

சுந்தரம் : புரட்சி வேண்டும். ஆம், புரட்சி வந்தாலன்றி இந்த நாட்டில் பசியும், நோயும், பஞ்சமும் போகாது. பணக்கார ஆதிக்கம் ஒழியவேண்டும். முதலாளிகளின் ஆட்சி முறிய வேண்டும். உழைப்பில்லாமல் உண்டு கொழுத்து டம்பச் செலவுகள் செய்து உல்லாச வாழ்க்கை நடத்தும் சோம்பேறிக் கும்பல்கள் தொலைய வேண்டும். அதற்குப் புரட்சி ஒன்றே தான் மார்க்கம். சரி.....

(என்று நிறுத்திவிட்டு, வேகமாகத் தன் வீட்டை நோக்கி நடக்கிறான். எதிரில் அவனுடைய பழைய நண்பன் கோவிந்தனும் அவர்களுக்கு அறிமுகமான செங்கோடனும் வருகின்றார்கள்.)

[**கோவிந்தன்** ஒரு மில் முதலாளியிடம் குமாஸ்தா. **செங்கோடன்** அந்த முதலாளியின் தோட்டத்தைப் பயிர்செய்யும் குடியானவன்.]

கோவிந்தன் : என்ன சுந்தரம் எங்கே யிருந்து வருகிறாய்? வெகு நாளாக உன்னைப் பார்க்கவே முடியவில்லையே! நாலைந்து தடவை உங்கள் வீட்டிற்கு வந்திருந்தேன். நீ வீட்டில் இல்லை. அப்படி எங்கே போவாய்?

சுந்தரம் : ஆறு மாதமாக நான் அலைகிற அலைச்சல்...அந்த... (என்று மௌனம்)

கோவி : நீ அலுகிற அலுச்சல் அந்த ஈசனுக்குத்தான் தெரியுமாக்கும்?

சுந் : ஈசனு! அவனெங்கே இருக்கிறான்?...நானும் ஈசன் ஒருவன் இருக்கிறான் என்றுதான் நம்பியிருந்தேன். இன்றோடு அந்த நம்பிக்கையை விட்டுவிட்டேன்.

கோவி : என்ன சுந்தரம் திடீரென்று இப்படி உன் சுபாவத்துக்கு முழுதும் விரோதமாகப் பேசுகிறாயே! இது என்ன விபரீதம்? உன் படிப்பும் ஒழுக்கமும் தெய்வ நம்பிக்கையும் மிக உயர்ந்த ரகம் என்றல்லவா நான் எண்ணியிருக்கிறேன்?

சுந் : ஆம். என் படிப்பு உயர்ந்த படிப்பு என்றுதான் நானும் எண்ணிக்கொண்டு 'சுந்தரம் பி. ஏ.' என்று சொல்லிக் கொண்டிருந்தேன். என் ஒழுக்கமும் நல்லொழுக்கம்தான். தெய்வத்தையும நம்பித்தான் இருந்தேன். அதனால் பயனென்ன? ஆறு மாதமாக நோயாளியான என் தாயும் நான்கு தங்கைமார்களும் பட்டினி கிடந்து பதைக்கின்றார்களே! (என்று பரிதாபக் குரலில் கண் கலங்குகிறான்.)

கோ : என்ன இருநூறு ரூபாய் சம்பாதிக்கிற உன் குடும்பம் பட்டினி கிடப்பானேன்?

சுந் : என் சம்பாதனே போய் ஆறு மாதமாச்சு.

கோ : ஏன்?

சுந் : என் முதலாளி என்னை 'டிஸ்மிஸ்' செய்துவிட்டார்.

கோ : எதற்காக?

சுந் : சுமார் ஆறு மாதத்துக்கு முன்னால் நான் இவ்வூர் சன்மார்க்க சங்கத்தில் ஒரு பிரசங்கம் செய்தேன். அதில் நான் "உலகத்தில் 'புரட்சி' பேசுகின்ற கூட்டத்தை உற்பத்தி செய்வது இந்தப் பணக்காரர்களின் கஞ்சத்தனம்தான். முதலாளிகள் ஏழைகளிடத்தில் கொஞ்சம் ஜீவகாருண்யத்தோடு நடந்து கொண்டால் 'புரட்சி' என்ற பேச்சுக்கே இடமிருக்காது" என்று பேசினேன். இதைக் கேட்டுக்கொண்டிருந்த யாரோ எங்கள் முதலாளியிடம் போய்ச் சொல்லிவிட்டார்கள். அவர் என்னைக் கூப்பிட்டுக் கேட்டார். நான் ஒத்துக்கொண்டேன். அதற்காக உடனே என்னை 'டிஸ்மிஸ்' செய்துவிட்டார்.

கோ : அப்படியா?...சரி உனக்கு சட்டப்படி வரவேண்டிய நோட்டீசும் சம்பளமும் என்ன ஆச்சு?

சுந் : என் தாயாருடைய வைத்தியத்துக்காக ஏற்கனவே எழு நூறு ரூபாய் அதிகப்பற்று செய்திருந்தேன். அதனல் பதில் பேசாமல் வந்துவிட்டேன்.

கோ : போனற் போகுது. அந்த மடம் இல்லாவிட்டால் இன்னெரு சந்த மடம். வேறு உத்யோகம் தேடினற் போச்சு. இதற்காகவா இவ்வளவு வருத்தம்?

சுந் : சந்த மடமும் கிடைக்கவில்லே, வேறு எந்த மடத்திலும் இடம் கிடைக்கவில்லே. ஆறு மாதமாக அலேந்து அலேந்து என் மனம் முறிந்துவிட்டது. பத்து நாளேக்கு முன் என் தகப்பனருடைய சட்ட புத்தகங்களில் சிலவற்றை விற்று, அதைக் கொண்டு அறை வயிற்றுக் கஞ்சி குடித்தோம். அந்தப் பணமும் தீர்ந்துவிட்டது...எங்கே போனலும் எல்லா முதலாளிகளும் ஒரே மாதிரிதான் சிடுசிடுக்கிறார்கள்.

கோ : அதென்னமோ உண்மைதான். எங்கள் முதலாளிகூட அப்படித்தான்; நானும் இன்னெரு குமாஸ்தாவும் நேற்று ஏதோ வேடிக்கை பேசிச் சிரித்துக் கொண்டிருந்தோம். அப் போது அங்கே திடீரென்று வந்துவிட்ட எங்கள் முதலாளி, "இப்படி யெல்லாம் வேலே நேரத்தில் சிரித்து விளேயாடிக் கொண்டிருந்தால் 'டிஸ்மிஸ்' செய்து விடுவேன்" என்ருர். எனக்கு ரொம்பவும் வருத்தமாய்ப் போச்சு.

சுந் : எங்கே பார்த்தாலும் இந்தப் பணத்திமிர் இப்படித்தான் இருக்கிறது. நம்மை அவர்கள் புழுக்களிலும் கேவலமாகத் தான் மதிக்கிறர்கள். சுகமும் சிரிப்பும் சந்தோஷமும் அவர் களுக்கே ஏகபோகம் என்றும், துன்பமும் துக்கமும் அழுகை யும் நமக்கென்றும் நினேக்கிறர்கள்.

செங்கோடன்: ஆமாங்கோ. அது சொம்ப நிசந்தானுங்க. ஒரு நாள் காலமே நான் எறப்பெறைச்சுக்கிட்டு இருந்தேனுங்க. பாத்திக்குத் தண்ணி கட்டிக்கிட்டிருந்த என் வீட்டுக்காரி எதுக்கோ 'கெக்கெக்'குண்ணு சிரிச்சாளுங்க. அப்போ அங்கே பல்லுவெளக்க வந்த எங்க எச்மாரு 'என்னபுள்ளே காலேயிலே சிரிப்பு கொம்மாளம் போடுது?' ண்ணு கேட்டாருங்க. எங் கூட்டுக்காரி கொஞ்சம் வாயாடிங்க. அவ 'எஞ்சாமி நாங்க மட்டும் சிரிக்கக்கூடாதா'ண்ணு கேட்டுட்டாளுங்க. மறு நாளே எங்களேத் தோட்டத்திலிருந்து நீக்கிப்புட்டாருங்க. அப்பறம் மூணு மாசம் திண்டாடிப் போனமுங்க. பொறவு கால்லே கைலே உழுந்து இப்பத்தான் மறுபடியும் சேத்துகினுருங்க. ஐயோ! இந்த பண்ணேயகாரர் ராங்கியை ஏஞ் சொல்றீங்க, போங்க.

கோ : அப்படி ஒட்டுக்க சொல்லிவிடவும் கூடாது. பணக்காரர் களிலும் எத்தனையோ பேர் நல்லவர்கள் இருக்கிறார்கள். நம்ம துரதிருஷ்டம் இப்படிப்பட்ட முதலாளிகளிடத்தில் வேலை செய்ய வேண்டியிருக்கிறது!

சுந் : அவர்கள் நல்லவர்களாக இருந்தாலும் அந்தப் பணம் அவர் களை நல்லவர்களாக இருக்க விடாது. ஏறத்தாழ எல்லா பணக்காரனும், கொஞ்சம் தன் மதிப்போடு சுதந்தர உணர்ச்சி யுள்ளவர்களை விரும்புவதேயில்லை. எதைச் சொன்னாலும் கேட்டுக்கொண்டு, குழைந்து குழைந்து கும்பிடு போடுகிறவர் களைத்தான் விரும்புகிறார்கள் ..... அந்த பணக் கொழுப்பு குறைந்தால்தான் நாட்டுக்கு நல்ல காலம் வரும்.

கோ : அதற்கு நாமென்ன செய்ய முடியும்? பணக்கொழுப்பைக் குறைக்க நம்மாலாகுமா?

சுந் : ஏன் நம்மாலாகாது? நாம்தான் அதைக் குறைக்கப் பாடு படவேண்டும்.

கோ : எப்படிப் பாடுபடுவது?

சுந் : புரட்சி! ... புரட்சி உண்டாக்க வேண்டும். புரட்சி வந்தா லன்றி இந்தத் திண்டாட்டம் போகாது.

கோ : புரட்சியா! அடடா ..... நீகூட புரட்சிக்காரன் ஆகிவிட் டாயா? புரட்சிக்காரரைக் கண்டனம் பண்ணிக் கொண்டிருந்த வனுச்சே நீ!

சுந் : ஆம் இன்றைக்குப் பனிரண்டு மணி வரைக்கும் கூட நான் புரட்சியைக் கண்டனம் பண்ணுகிறவனுகத்தான் இருந்தேன்.

கோ : பனிரண்டு மணிக்கு மேல் என்ன நடந்தது?

சுந் : ஒரு மில் முதலாளி எனக்கு வேலை தருவதாக இன்று பனி ரண்டு மணிக்கு வரச் சொன்னார். போனேன். நேற்று வெகு அனுதாபத்தோடு பேசி இன்றைக்கு வரச் சொன்ன அவர் நான் போன உடன் 'நீ மில் முதலாளிகளையும் பணக்காரர் களையும் தூஷிக்கிறவன் என்று தெரிய வருகிறது. ஆகை யால் நான் உனக்கு வேலை தர முடியாது' என்று சொல்லி விட்டார்.

கோ : சரி, இனி என்ன செய்யப் போகிறாய்?

சுந் : 'புரட்சி' உண்டாக்கப் போகிறேன்.

கோ : நோயாளியான உன் தாயும், அநாதைகளான உன் தங்கை மார்களும் என்ன கதியாவது?

சுந் : அவர்களை என் மாமா வீட்டுக்கு அனுப்பிவிடுகிறேன். ரொம்ப நாளாக மாமா அவர்களைத் தன்னுடன் வந்து இருக்கச் சொல்லி அழைத்துக் கொண்டே இருக்கிறார். என் தாயார் தான் என்னை விட்டுப்போக மறுக்கிறாள்.

கோ : ஏன் நீயும் அவர்களோடு உன் மாமா வீட்டிற்குப் போகலாமே! உன் மாமா தான் ரொம்ப சௌக்யமாக இருக்கிறாரே!

சுந் : ஆம் அவர் ரொம்ப சௌக்யமாகத்தானிருக்கிறார். ஆனால் அவரும் ஒரு பணக்காரர். அவருக்கும் அந்த பணச் செருக்கு உண்டு. என்னுடைய சுதந்தர சுபாவம் அவருக்குப் பிடிக்காது.

கோ : உன்னுடைய நன்மைகளைக் கவனிக்காமல் உன் தாயார் உன்னை மட்டும் விட்டுவிட்டுப் போய்விடுவாரா?

சுந் : என்னைப் பற்றி எனக்குக் கவலையில்லை. எனக்கு என்ன நேரிடினும் இந்த நாட்டின் ஏழை மக்களுக்கு நன்மை வரும்படி நான புரட்சி உண்டாக்க வேண்டும் என்று தீர்மானித்து விட்டேன். யார் சொன்னாலும் மாறப் போவதில்லை.

செங்கோடன் : 'புரட்சி'ண்ணு என்னங்க?

சுந் : 'புரட்சி' என்றால் ... இனிமேல் பணக்காரன்—ஏழை, முதலாளி—தொழிலாளி; ஆண்—பெண்; படிச்சவன்—படிக்காதவன் என்ற வித்தியாசம் இல்லாமல் எல்லாருக்கும் நல்ல சோறு, நல்ல துணி, நல்ல வீடு, நல்ல வைத்தியம் இதெல்லாம் கிடைக்கும்படியாக இப்போ திருக்கிற ஏற்பாடுகளையெல்லாம் புரட்டிவிடுவது. அதுதான் 'புரட்சி'.

செங் : அப்படிங்களா? அது ரொம்ப நல்லதாச்சுங்களே! ஆமாங்க, அப்படிச் செய்யுங்க சாமி. உங்களுக்கு ரொம்ப புண்ணியமுண்டு.

கோ : ஏது செங்கோடா நீயும் புரட்சிக் கூட்டத்தில் சேர்ந்திடுவாய் போலிருக்கிறதே!

செங் : சேராமெ.....பின் னென்னங்க?.....வாளப்பளம் வாண்டாங்குற கொரங்குண்டுங்களா? நல்ல சோறு, நல்ல துணி, நல்ல வீடு ..... இல்லேண்ணுதானுங்களே தவிச்சிக்கிட்டிருக்குறோம்?

கோ : சரி நீயும் 'புரட்சி'யிலே சேர்ந்துடு.

செங் : இதுவரைக்கும் பொரட்சிண்ணு நான் என்னுமோண்ணு பயந்துகிட்டிருந்தனுங்கோ. இப்போ ஐயா சொன்ன பொறகு நான் வெளங்குச்சிங்க. இன்னக்கிக்கூட சாய்ந்தரத்துக்கு

அடுத்த இச்சிப்பட்டியிலே ஒரு பெரிய 'பொரட்சி' கூட்டம் நடக்கப் போவுதுங்களாம். பக்கத்து ஊட்டு காளியப்பன் என்னேயும் கூப்பிட்டான். நான் சரியா அதுக்குக் காது குடுக்குலிங்க ..... இப்ப ஐயா, 'பொரட்சி'ண்ணு என்னண்ணு சொன்ன பொறகுதானுங்க அந்தக் கூட்டத்துக்குப் போகலாமுன்னு ஆசை வருதுங்க ..... போலாங்களா?

சுந் : இன்றைக்கா? இச்சிப்பட்டியிலா? யார் முத்து வீரப்பன் வந்திருக்கிறாரா? அவன் வரப் போவதாக யாரோ சொன்னார்கள்.

செங் : ஆமாங்க அப்படித்தான் என்னமோ பேர் சொன்னுங்க 'வீரப்பனு'ண்ணு. அவர் ரொம்ப நல்லா 'பொரட்சி' பேசுவாங்களாம்.

சுந் : சரி அப்படியானால் போகத்தான் வேண்டும். நாம் மூவரும் போவோம். கோவிந்தா! போகலாமா?

கோ : நான் புரட்சி பண்ணப் போகிறதில்லே. நீங்கள் இருவரும் வேணுமானால் போங்கள்.

சுந் : கோவிந்தா! நீ ஒன்றும் புரட்சியில் சேரவேண்டாம். சும்மா கூட வாயேன்.

கோ : சுந்தரம்! இதற்கெல்லாம் நீ போவதே எனக்குப் பிடிக்கவில்லே. ஆனால் நீதான் என்னமோ புரட்சி செய்தே தீர வேண்டும் என்று நிச்சயம் செய்துவிட்டாய். என்னே ஏன் இந்த வம்புக்கெல்லாம் இழுக்கிறாய்?

செங் : என்னங்க வம்புங்கிறீங்களே! பொரட்சி வந்தாத்தான் எல்லாருக்கும் நல்லதாச்சிங்களே! நல்ல சோறு, நல்ல துணி, நல்ல வீடு, இதெல்லாம் வாரதை வாண்டாமுண்ணு சொல்லுவாங்களா?

கோ : செங்கோடா, உனக்கு ஒன்றும் தெரியாது. சும்மாயிரு.

சுந் : கோவிந்தா! நீ ஒரு வம்பிலும் சேர வேண்டாம். வீரப்பன் நல்ல பேச்சாளி. சமீபத்தில்தான் அவன் அயல் நாடுகளுக்குப்போய் இந்தப் புரட்சி நடத்தும் விஷயத்தை நன்றாக அறிந்து வந்திருக்கிறதாகப் பத்திரிகையில் பார்த்தேன். அவன் எனக்கு ரொம்பத் தெரிந்தவன். என்னோடு பி. ஏ. படித்தவன். வெகு கெட்டிக்காரன். என்னதான் பேசுகிறான் கேட்போமே. சும்மா நீ கூட வந்தால் என்ன?

கோ : சரி, உனக்காக வேணுமானால் வேடிக்கையாக வருகிறேன்.

காட்சி II

இடம் :—இச்சிப்பட்டி கிராமம்
காலம் :—மாலை

[ஒரு மைதானத்தில் ஒலிபெருக்கிக் கருவி அமைக்கப்பட்ட ஒரு பிரசங்க மேடை இருக்கிறது. அதைச் சுற்றிலும் ஏராளமான ஏழை விவசாயிகளும் தொழிலாளிகளும் சுற்றுவட்டத்திலுள்ள பல கிராமத்திலிருந்து வந்து கூடுகிறார்கள். புரட்சிக் கட்சியைச்சேர்ந்த தொண்டர் பலர் 'புரட்சி ஓங்குக', 'பணக்கார ஆட்சி ஒழிக', 'முதலாளி வர்க்கம் ஒழிக', 'தொழிலாளர் ஆட்சி தோன்றுக', 'உழைப்பாளி வாழ்க்கை உயர்க' என்று எழுதப்பட்டுள்ள அட்டை விளம்பரங்களை உயரமான கோல்களில் கட்டிப் பிடித்துக் கொண்டு கூட்டத்தின் ஓரங்களில் அங்கங்கே நிற்கிறார்கள்.

மேடைக்குப் பின்னல் 'புரட்சி' இயக்கத் தலைவனான **முத்து வீரப்பன்** சில நண்பர்களுடன் கூட்டம் சரியாகக் கூடினதும் புரட்சிப் பிரசங்கத்தைச் செய்ய காத்துக்கொண்டிருக்கிறான். சுந்தரம், கோவிந்தன், செங்கோடன் மூவரும் கூட்டத்துக்கு வருகிறார்கள். சுந்தரத்தைக் கண்ட முத்துவீரப்பன், கிடைக்காத என்னவோ கிடைத்துவிட்டது போல வெகு சந்தோஷத்துடன் சுந்தரத்தை வரவேற்கிறான்.]

முத்துவீரப்பன் : சுந்தரமா? அடடா! என்ன பாக்யம் எங்களுக்கு. ஏது நீ கூட எங்கள் கூட்டத்துக்கு வந்து விட்டது?

சுந் : உன் 'புரட்சி' பிரசங்கத்தைக் கேட்கத்தான்.

முத்து : வாஸ்தவந்தானே? உனக்குத்தான் 'புரட்சி' என்றால் பிடிக்கவே பிடிக்காதே. ஏதாவது சி. ஐ. டி போலீசுக்கு உளவாக வந்திருக்கிறாயா என்ன?

சுந் : சி. ஐ. டி போலீசுக்கு உளவு வரக்கூடியவனா நான்? உன்னைப் பிடித்துப் போலீசுக்குக் கொடுக்கவா வந்திருக்கிறேன்? என்ன முத்துவீரா.....

முத்து : சுந்தரம்! கோபித்துக் கொள்ளாதே. விளையாட்டாகச் சொல்லிவிட்டேன். உன் கள்ளமான குணத்தை நான் சிறு பிராயத்திலிருந்து அறிவேன்.....சரி, எங்கள் புரட்சி இயக்கத்தைப்பற்றி நீ இப்போது என்ன நினைக்கிறாய்?

சுந் : இப்போது நான் 'புரட்சி' இயக்கத்தை முற்றிலும் ஆதரிக்கிறேன். புரட்சி வரத்தான் வேண்டும். புரட்சி வராமல் இந்த நாட்டிலுள்ள ஏழை மக்களின் துயரம் தீராது. பசியும் பஞ்சமும் போக வேண்டுமானால் இப்போதுள்ள முதலாளிகள் ஆதிக்கம் ஒழியத்தான் வேண்டும் என்பதைக் கண்டு கொண்டேன்.

முத்து : போகட்டும், உன்னை உன் முதலாளி ஒரு காரணமும் இல்லாமல் திடீரென்று வேலையிலிருந்து நீக்கின பிறகாவது உனக்கு என் கட்சியின் உண்மை விளங்கினதற்கு சந்தோஷப் படுகிறேன்.

சுந் : என்னை என் முதலாளி வேலையிலிருந்து நீக்கியதை நீ எப்படி அறிவாய்?

முத்து : எனக்குத் தெரியும். எந்த முதலாளி எந்த ஏழைக்கு, என்ன கொடுமை, எப்போது செய்கிறான் என்பதைக் கண் கொட்டாமல் பார்த்து, அதை மகா ஜனங்களின் கவனத் துக்குக் கொண்டு வருவது தானே எங்கள் கட்சியின் வேலை. நான் ஐந்து நாளைக்கு முன் இங்கு வந்த உடன் உன்னைப் பற்றி விசாரித்தேன். விவர மெல்லாம் தெரிந்தது.

சுந் : அப்படியா! இந்தமாதிரி அநீதிகளை யெல்லாம் உங்கள் கட்சி அறிந்திருப்பது மிகவும் மெச்சத்தக்கது தான்.

முத்து : அது மட்டுமா எங்களுக்குத் தெரியும்? அதற்கு மேலும் கூடத் தெரியும். நீ இருபது நாளாக இங்கே யிருக்கிற எல்லா முதலாளிகளிடத்திலும் வேலைக்காக அலைந்து திரிந்து எங்கும் வேலை கிடைக்காததும் எனக்குத் தெரியும். உங்கள் குடும்பம் செலவுக்கில்லாமல் தவிப்பதும் தெரியும். நீ உன் தகப்ப னுடைய சட்ட புஸ்தகங்கள் சிலவற்றை விற்றதும் தெரியும். இன்றைக்கு ஒரு மில் முதலாளி உனக்கு வேலை தருவதாக வரச்சொல்லி 'நீ முதலாளிகளைத் தூஷிக்கிறவன். உனக்கு வேலைகொடுக்க முடியாது' என்று சொல்லி விட்டது கூட எனக்குத் தெரியும். சரிதானே?

சுந் : அடடா! இதெல்லாம் உனக்கு யார் சொன்னது?

முத்து : எல்லா முதலாளிகள் ஸ்தாபனங்களிலும் எங்களுக்கு உளவு சொல்லக் கூடிய ஆள்கள் இருக்கிறார்கள்.

கோவிந்தன் : (குறுக்கிட்டு) அப்படியானால் நீங்களல்லவா ரகசி யப் போலீசு வேலை செய்கிறீர்கள்? சி. ஐ. டி. க்கு மேலே இருக்கிறதே உங்கள் துப்பறியும் வேலை!

முத்து : இதற் கொன்றும் துப்பறியும் சாமர்த்தியமே தேவை யில்லை. பொதுவாக எல்லா தொழிற் சாலையிலும் இந்த முதலாளித்தனத்தின் மேல் கோபம் கொண்ட தொழிலாளி கள்தான் நிரம்பியிருக்கிறார்கள். அவர்கள் எல்லாரும் புரட்சியை விரும்புகிறவர்கள்தானே! ஆகையால் எங்கள் இயக்கத்தில் மிகவும் அநுதாபம் உள்ளவர்கள். நாங்கள் கேட்காமலேயே இப்படிப்பட்ட தகவல்களை அவர்களே எங்களுக்கு உடனுக்குடன் அனுப்புவார்கள்.....சரி, சுந்தரம் இனி நீ என்ன செய்யப் போகிறாய்?

சுந்: கேட்பானேன்; இந்த நிமிஷம் முதல் உங்கள் 'புரட்சி' இயக்கத்தில் நானும் சேர்ந்து விட்டேன்.

முத்து: சபாஷ்! சுந்தரம்! அப்படிச் சொல்லு. (என்று முத்து வீரன் சுந்தரத்தின் முதுகைத் தட்டி, கை குலுக்கிவிட்டு)..... சுந்தரம் உன்னைப் போன்ற படிப்பாளிகளும் அறிவாளிகளும் இந்தப் 'புரட்சி' இயக்கத்தில் சேர்ந்தால் இது வெகு சிக்கிரத்தில் வெற்றிபெறும். இன்னும் மூன்றே மாதத்திற்குள் இங்கே மகத்தான புரட்சியை உண்டாக்கி, இந்த முதலாளிகளின் கொட்டத்தை அடக்கி, தொழிலாளி—உழவாளிகளின் ஆதிக்கத்தை ஸ்தாபிப்போம்..... சரி, கூட்டம் கூடிவிட்டது. ஜனங்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். மேடைக்குப் போவோம் வா. (என்று முத்துவீரப்பன் சுந்தரத்தின் கையைப் பிடித்துக் கூட்டிக்கொண்டு மேடைமீது ஏறுகிறான். கோவிந்தனும் செங்கோடனும் மற்ற ஜனங்களோடு கீழே உட்காருகிறார்கள்.)

(பிரசங்கம் ஆரம்பிக்குமுன் பின்னணியாக ஒலிபெருக்கியில் அடியிற்கண்ட பாட்டு முழங்குகிறது.)

1. பாட்டாளி மக்களின் பசிதீர வேண்டும்
பணமென்ற மோகத்தின் விசைதீர வேண்டும்
கூட்டாளி வர்க்கங்கள் குணம் மாறவேண்டும்
குற்றேவல் தொழில் என்றமனம் மாறவேண்டும். —(பாட்)

2. கடலொத்த தொழிலாளர் வெகுபாடு பட்டும்
கஞ்சிக்கும் வழியின்றி கண்ணீரைக் கொட்டும்
மடமிக்க நிலைமைக்கு மாற்றில்லை யானால்
மனிதர்க்கு அறிவுள்ள ஏற்றங்கள் ஏனே? —(பாட்)

3. உழவுக்கும் தொழிலுக்கும் சுகமொன்றும் இல்லை.
உதவாத வீணர்க்கு சுகபோகம் கொள்ளை.
அளவுக்கு மிகமீறி அவதிக்குள் ளானேம்
அநியாயம் இதுபோக வழியேதும் காணேம். —(பாட்)

[பாடல் நின்று பிரசங்கம் ஆரம்பமாகிறது. முத்துவீரப்பன் எழுந்து ஒலிபெருக்கியின் முன்வந்து நிற்கிறான். அவனுக்கு அங்குள்ள ஒருவர் மாலை சூட்டுகிறார். உடனே 'புரட்சி ஓங்குக' 'புரட்சி வீரர் முத்துவீரப்பனுக்கு ஜே' என்று தொண்டர்கள் கோஷிக்கிறார்கள்; கூட்டத்தில் இருந்தவர்களும் கோஷிக்கிறார்கள்.]

முத்துவீரப்பன் : (பிரசங்கம்)

அன்பு மிகுந்த சகோதர சகோதரிகளே! உங்கள் அனைவருக்கும் என்னுடைய தாழ்மையான வணக்கம். இங்கே கூடியிருக்கிற நீங்கள் எல்லாரும் உழவாளிகளும் தொழிலாளிகளுமாக இருக்கிறீர்கள். பரிதபிக்கத் தகுந்த உங்களைப் பார்த்தால் கல்லும் கூடக் கண்ணீர்விடும். அவ்வளவு கஷ்டப்படுகிறீர்கள் நீங்கள். ஆனால் இந்த நாட்டில் இப்போதுள்ள பணக்கார ஆதிக்கம் கல்லைக் காட்டிலும் கடின சித்தமுள்ளது. ஐயோ! ஆடுமாடுகளைக் காட்டிலும் கேவலமாக நடத்தப்படுகிற உங்கள் நிலைமை உங்களுக்கே தெரியாது. கொஞ்சம் கவனமாகக் கேளுங்கள். ஓய்வில்லாமல் உழைக்கிறீர்கள்; ஆனால் உண்ணக் கஞ்சிகூட இல்லை. களைப்பறியாமல் பாடுபடுகிறீர்கள். ஆனால் கட்டத் துணியில்லை. சூதறியாமல் முதலாளி சொன்னதெல்லாம் கேட்கிறீர்கள். ஆனால் சொந்தம் என்று சொல்ல ஓர் ஓட்டைக் குடிசைகூட உங்களுக்கு இல்லை...உழவாளிகளாகிய நீங்கள் உழுது, விதைத்து, பயிர் செய்து அந்தப் பயிரை பகலிரவாகப் பாதுகாத்து, அறுவடை செய்து மலை மலையாகத் தானியங்களைக் குவிக்கிறீர்கள். ஆனால் அந்தத் தானியத்தில் ஒரு கைப்பிடிகூட உங்களிஷ்டப்படி எடுத்துக் கொள்ள உங்களுக்கு உரிமையில்லை. நித்த நித்தம் நீங்கள் பாடுபடுகிற அந்த நிலத்திலிருக்கிற ஒரு கைப்பிடி மண்கூட உங்களுக்குச் சொந்தமில்லை...அது போகட்டும். இங்கே ஏராளமான மில் தொழிலாளிகள் வந்திருக்கிறீர்கள்; ஒவ்வொரு மில்லிலும் தினந்தினம் எத்தனையோ பேல்கள் நூலும் துணியும் உற்பத்தி செய்கிறீர்கள். ஆனால் உங்கள் வீட்டுப் பெண்களின் உடம்பை மூட முழுசாக ஒரு சேலை கூட உங்களிடம் இல்லை. ஏன்? சகோதர சகோதரிகளே! எண்ணிப் பாருங்கள் ... கூலி கட்டவில்லையே என்றால் கதவடைப்பு! கதவடைப்பு நியாயமல்லவென்றால் குண்டடிப்பு. குண்டடிப்பு அநியாயம் என்று கூக்குரல் போட்டால் சிறை வாசம். இது நியாயமா? நீங்களே சொல்லுங்கள்!

('அநியாயம்' 'அநியாயம்' 'அக்ரமம்' 'அயோக்கியத்தனம்' என்று கூட்டத்திலுள்ளவர்கள் கத்துகின்றார்கள். சத்தம் அடங்கும்படி கூட்டத்தை நோக்கிக் கையமர்த்தி விட்டு மீண்டும்)

முத்து : உழுது பயிரிடுகிறவர்கள் நீங்கள்; உண்கின்றவர் வேறே. நூல் நூற்கிறது நீங்கள்; துணி நெய்கிறது நீங்கள்; ஆனால் உடுத்திக் கொள்கிறவர்கள் வேறே. பாடெல்லாம் உங்களுக்கு; பலனெல்லாம் பிறருக்கு. துன்பமெல்லாம் உங்களுக்கு;

இன்பமெல்லாம் எவருக்கோ! இப்படிப்பட்ட நிலைமையை நாம் அடியோடு மாற்றவேண்டாமா?

(வேண்டும் வேண்டும், உடனே மாற்றவேண்டும்—என்று கூட்டத்திலிருந்து கூச்சல்)

முத்து : மில் ஸ்லங்களையும் தொழிற் சாலைகளையும் எட்டிக்கூடப் பார்க்காமல் எங்கேயோ இருந்துகொண்டு, மோட்டார்களிலும், ஆகாய விமானத்திலும் உல்லாசப் பிரயாணம் செய்து கொண்டு சோம்பேறி வாழ்க்கை நடத்துகின்ற இந்த முதலாளிகளுக்கு அவர்களுடைய சுகபோகங்களுக்குப் பணம் எங்கிருந்து வருகிறது? உங்கள் உழைப்பிலிருந்தல்லவா? நீங்கள் இல்லாவிட்டால் அவர்கள் இவ்வளவு ஆடம்பரமாக வாழ முடியுமா?

('முடியாது, முடியாது'—கூச்சல்)

அப்படியிருந்தும் உங்களுக்குக் கொஞ்சம் கூலியை உயர்த்தக் சொன்னால் அவர்களுக்கு வெகு கோபம் வருகிறது. இனிமேல் அவர்கள் கோபம் நம்மிடத்தில் செல்லாது; இது வரையிலும் வாயில்லாப் பூச்சிகளாக நாம் அவர்கள் சொன்னபடியெல்லாம் செய்தோம். இனிமேல் அந்தப் பாச்சா பலிக்காது. நமக்கும் அறிவிருக்கிறது; வெட்கமிருக்கிறது; ரோஷமிருக்கிறது. சோறில்லாமல் இன்னுந்திருந்தாலும், நம்முடைய தேகத்தில் வீரம் இருக்கிறது. கடுகு சிறுத்தாலும் காரம் போகுமா?

(போகாது—போகாது—போகாது—கூச்சல்)

முத்து : இன்னொன்று கேளுங்கள். இந்தக் கிராமத்தோடு சேர்ந்தது இருபது ஊர்கள்; இந்த இருபது ஊர்களிலும் சுமார் ஐம்பதாயிரம் ஜனங்களுக்கு மேல் வசிக்கிறார்கள். சாகுபடிக்கு லாயக்கான நிலங்கள் ஏறத்தாழ பத்தாயிரம் ஏக்கர்கள் இருக்கின்றன. இந்தப் பத்தாயிரம் ஏக்கர் நிலமும் சுமார் 175 பணக்காரர்களுக்குச் சொந்தம். அப்படியானால் மீதி 49825 பேர்களுக்கு ஒரு அங்குல நிலம்கூட சொந்தமில்லை. அவர்களைப் போலத்தானே நாமும் மனிதர்கள்? அவர்களுக்கு மட்டும் என்ன இந்த நிலத்தில் அவ்வளவு சொந்தம்? போனாலும் போகட்டும், நிலத்தில்தான் சொந்தமில்லை? அதில் நம்முடைய உழைப்பினால் உண்டாகும் தானியத்தில் கூடவா கொஞ்சம் பங்குதரக் கூடாது? அதைக் கேட்கப் போனால் நமக்குத் தண்டனை. இதைக் காட்டிலும் மோசம் வேறு உண்டா?

(இல்லை—இல்லை—இல்லவே இல்லை—கூச்சல்)

முத்து : ஆகையினால் சகோதர சகோதரிகளே ! இந்த நிலைமையை அடியோடு மாற்றி அமைக்க நாமெல்லோரும் இன்றைக்கு ஓர் உறுதி செய்து கொள்ள வேண்டும். இந்தப்பணக்காரரும் முதலாளிகளும் இனிமேல் நம்மை ஏமாற்ற விடக்கூடாது. நாமெல்லாரும் ஒன்று சேர்ந்து கட்டுப்பாடாக நின்றால் இன்னும் மூன்றே மாதத்தில் இந்த முதலாளி ஆதிக்கத்தை ஒழித்துக் கட்டி, குடியானவர்கள், தொழிலாளிகள் ஆதிக்கத்தை ஸ்தாபிப்போம். பிறகு நம் ஒவ்வொருவருக்கும் நிலம் உண்டு, வீடுஉண்டு, மற்றெல்லாவசதிகளுமுண்டு. இந்த மில்களில் நமக்குப்பங்கும் உண்டு. ஆனால் நாம் மட்டும் என்ன கஷ்டம் நஷ்டம் வந்தாலும் இன்னும் கொஞ்ச காலத்துக்கு கட்டுப்பாடாக இந்த முதலாளிவர்க்கத்தை எதிர்த்துப்போராட வேண்டும். நீங்கள் மட்டும் அந்த உறுதி கொடுத்து நான் சொல்லுகிற திட்டபடி நடந்தால் வெகுசீக்கிரத்தில் வெற்றி பெறுவோம். அந்த வாக்குறுதியைத் தருவீர்களா?

(தருவோம்—தருவோம்—தருவோம்—கூச்சல்)

முத்து : தருவீர்கள்...தருவீர்கள். எனக்குத் தெரியும். இந்த முதலாளிகள் உங்களுக்குச் செய்துவரும் அநீதிகளால் வாடி வதங்கிக்கிடக்கிற உங்கள் நெஞ்சம் கொதிக்கிற கொதிப்பை நான் நன்றாக அறிவேன். முதலாளிகளின் ஆட்சியை முறியடித்து உங்கள் தொல்லைகளையெல்லாம் தொலைக்கப் போகிறோம். அதற்காக என்னைப் போன்ற ஆயிரக்கணக்கான தொண்டர்கள் கங்கணம் கட்டிக் கொண்டு எதையும் செய்யக் காத்திருக்கிறார்கள். நீங்கள்மட்டும் எங்களுடைய திட்டப்படி கட்டுப்பாடாக நடப்பீர்களானால் வெகு சீக்கிரத்தில் ஒரு புரட்சி உண்டாக்கி மிகவும் புதுமையான ஒரு சமுதாயத்தை அமைப்போம். இதில் எள்ளளவும் சந்தேக மில்லை. அதன் பிறகு இங்கே தரித்திரம் தலை காட்டாது; பஞ்சமும் நோயும் பறந்தோடி விடும். உங்களில் ஒவ்வொருவருக்கும் நிலம் உண்டு, வீடுண்டு, சுகமுண்டு. ஆனால் சொற்ப காலத்துக்கு நீங்கள் சில கஷ்டங்களைப் பொறுத்துக் கொண்டு கொஞ்சம் தியாகம் செய்யத் தயாராக இருக்க வேண்டும். செய்வீர்களா ?

(செய்வோம்—செய்வோம் செய்வோம்—என்ன வேணுமானாலும் செய்வோம்—என்று பலமான கூச்சல்)

முத்து : ரொம்ப சந்தோஷம்..... இப்போது உங்களுக்கு ஒரு வெகுமுக்கியமான அன்பரை அறிமுகப்படுத்துகிறேன். அவர் இந்த முதலாளிகளின் கொடுமையால் பட்ட கஷ்டங்களை நீங்கள் அறிய வேண்டும். இதோ,இந்த மேடையில் வீற்றிருக்கிறாரே இவர் என்னுடைய பால்ய சிநேகர். பள்ளித் தோழர். இவருடைய பெயர் சுந்தரம். பி.ஏ. பட்டம் பெற்றவர். அடுத்த ஊரில் பிரபல வக்கீலாக இருந்து காலஞ் சென்ற சீனிவாசன்

அவர்களுடைய ஏக புத்திரன். அந்த சீனிவாசன் என்பவர் லக்ஷக்கணக்கில் சம்பாதித்து ஏழைகளுக்கெல்லாம் எவ்வள வோ உபகாரம் செய்தவர். அநேக தான தருமங்களைச் செய்த வர். இந்த வட்டத்திலுள்ள முதலாளிகளுக்கு வக்கீலாக இருந்து வாதாடி பல வழக்குகளை ஜெயித்துக் கொடுத்தவர். அப்படிப்பட்ட சீனிவாசனுடைய மகனை இந்த சுந்தரத்துக்கு அந்த சீனிவாசனுடைய சட்ட நிபுண சாமர்த்தியத்தால் ஒரு பெரிய வியாஜ்யத்தை ஜெயித்து, அதனால் பெரும் பணக்கார ரான ஒரு முதலாளி இவருக்குச் செய்திருக்கிற கொடுமையைப் பாருங்கள்! இந்த சுந்தரம் சுமார் ஆறு மாதங்களுக்கு முன் னால் ஒரு பிரசங்கம் செய்தார். அதில் இந்தப் பணக்காரர்கள் ஏழை ஜனங்களிடத்தில் கொஞ்சம் கருணையோடு நடந்தால் புரட்சியே வராது என்று பேசிவிட்டாராம். அதற்காக..... பாருங்கள்!...என்ன கொடுமை!.....அதற்காக இவரை உட னே வேலையிலிருந்து தள்ளி விட்டார்கள். இவர் சென்ற ஆறு மாதமாக அலைந்து இங்கேயுள்ள எல்லா முதலாளிகளிடத்தி லும் போய் தனக்கு வேலை கொடுக்கும்படி கேட்டுக் கொண் டார். எல்லா முதலாளிகளும் ஒரே மாதிரியாக 'நீ முதலாளி களைத் தூஷிக்கிறவன். உன்னை வேலைக்கு வைத்துக்கொள்ள முடியாது' என்று சொல்லி விட்டார்கள். நோயால் வருந்தி செத்துப் பிழைத்த இவருடைய தாயாரும் நான்கு தங்கைகளும் பட்டினி கிடக்கிறார்கள். சுந்தரம் வெகு நல்லவர். பரம யோக் கியர். இப்படிப்பட்ட ஓர் உத்தமருக்கு இந்தக் கொடுமையை நம்முடைய கண்ணுக்கு முன்னால் செய்கிற இந்த முதலாளிக் கும்பலை ஒழித்துக் கட்ட வேண்டாமா?

('ஆமாம்! ஒழித்துக் கட்டத்தான் வேண்டும்'—கூச்சல்)

முத்து: அன்பர்களே! கடைசியாக ஒரு வார்த்தை. நாம் எல்லா ரும் ஒற்றுமையாக இருந்து இந்த வட்டாரத்தில் சீக்கிரத்தில் ஒரு புரட்சியை உண்டாக்கித் துன்பங்களையெல்லாம் போக்க வேண்டும். அதற்கு எவ்வளவோ ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அதற்கெல்லாம் கொஞ்சம்செலவாகும். அதற்காக இங்கே வந்திருக்கிற வயது வந்த ஆண் பெண் எல்லாரும் புரட்சி இயக்கத்தின் அங்கத்தினர்களாகச் சேரவேண்டும். அதற்கு ஆள் ஒன்றுக்கு வருஷம் பூராவுக்கும் சந்தா ஒரு ரூபாய்தான். அதை நீங்கள் எல்லோரும் கூடுமானால் இப் போதே செலுத்தும்படி மிகவும் வணக்கத்துடன் கேட்டுக் கொள்ளுகிறேன். உடனே கொடுக்க முடியாதவர்கள் சௌ கரியம்போல் தாமதமாகத் தரலாம். ஏழைகளாகிய உங்க ளுடைய கஷ்டங்கள் எனக்குத் தெரியும்.

[என்று முத்துவீரப்பன் சுந்தரம்பக்கத்தில் உட்காருகிறான். உடனே கூட்டத்தில் பரபரப்பு உண்டாகிறது. பலபேர். 'நான்' 'நீ' என்று சந்தாத் தொகையைத் தருகிறார்கள்;

புரட்சி இயக்கத்தின் தொண்டர்களில் ஒருவன் அவற்றை வசூல் செய்கிறான். உடனே கொடுக்கத் தங்களிடம் பணம் இல்லாத சிலர் பக்கத்திலிருந்தவர்களிடம் கடன் வாங்கி சந்தா கட்டுகிறார்கள். சிலருக்குக் கடன் கிடைக்காமல் உடனே கட்டப் பணமில்லையே என்று துடிக்கிறார்கள். பணம் செலுத்த சில கிழடுகள் தங்கள் இடுப்பில் வெகு பந்தோபஸ்தாக முடிந்து வைத்திருந்த சில்லறைக் காசுகளை ஒவ்வொன்றாக எடுத்து எண்ணி ஒரு ரூபாய் கொடுக்கிறார்கள். சிலரிடத்தில் அந்த சில்லறை ஒரு ரூபாய்க்கு மிகவும் குறைவாக இருப்பதை அறிந்து வருந்துகிறார்கள். இப்படியாக பலவித காட்சிகளுடன் கூட்டம் சிறிது நேரம் சலசலப்பாக இருக்கிறது. சந்தா கொடுக்கக் கூடியவர்கள் கொடுத்தான பிறகு, அதுவரை சுந்தரத்துடன் உட்கார்ந்திருந்த முத்துவீரப்பன் மீண்டும் ஒலிபெருக்கியிடம் வந்து)

முத்து : கொஞ்சம் தயவு செய்து எல்லாரும் அமைதியாக இருங்கள். அன்பர் சுந்தரம் அவர்களை இரண்டொரு வார்த்தைகள் பேசும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். (சுந்தரம் எழுந்து)

சுந்தரம் : அன்பர்களே! வணக்கம். நான் எப்போதும் ஏழைகளிடத்தில் அனுதாபம் உள்ளவன். நானும் இப்போது பரம ஏழைதான். என் தந்தை வெகு செல்வாக்குடன் வாழ்ந்தவர். அவர் சம்பாதித்த ஏராளமான செல்வத்தை தான தர்மங்களிலேயே செலவு செய்துவிட்டு இரண்டு வருஷங்களுக்கு முன் திடீரென்று இறந்துபோனார். நான் அப்போதுதான் பி. ஏ. பாஸ் செய்திருந்தேன். குடும்ப கஷ்டங்கள் ஒன்றன்பின் ஒன்றாக அதிகரித்தன. என் தந்தை சாகுமுன் அவர் கடைசியாக ஜெயித்த வியாஜ்யம் ஒரு மில் முதலாளிக்கு சுமார் பத்து லட்சம் ரூபாய் வரவேண்டுமென்று தீர்ப்பானது. பத்து லட்சம் ரூபாய் கிடைக்கும்படி தன் கேசை நடத்தின வக்கீலின் மகன் என்பதற்காக உண்டான சந்தோஷத்தினால் அந்த முதலாளி எனக்குத் தம்முடைய மில்லில் உடனே ஒரு வேலை கொடுத்து ஆதரித்தார். சென்ற ஐந்து வருஷமாக அங்கே இருந்து வந்தேன். அந்த மில்லில் இந்த ஐந்து வருஷத்துக்குள் ஆறு தடவை வேலை நிறுத்தமும் மூன்று தரம் கதவடைப்பும் நடந்துவிட்டன. எப்போது பார்த்தாலும் ஏதாவது தகராறு. நான் இந்த வேலை நிறுத்தங்களையும் கதவடைப்புகளையும் சேர்ந்தவன் அல்ல. என் முதலாளிக்கு விசுவாசமாகத்தான் நடந்து வந்திருக்கிறேன். ஆனால் அடிக்கடி எங்கள் முதலாளியிடத்தில் சென்று வாதாடியிருக்கிறேன். கடைசியாக ஒரு நாள் அப்படி நான் தொழிலாளருக்குச் சலுகை பேசினபோது அவர் "நீ உன் வேலையைப் பார்த்துக் கொண்டு சும்மா இரு. எங்களுக்குப் புத்தி சொல்ல வரவேண்டாம். இப்படி நீ அவர்களுக்காகக் கட்சி பேசினால்

உன் பிழைப்பும் திண்டாட்டத்துக்கு வந்துவிடும்" என்றார். அதோடு நான் அவருடன் வாதிப்பதை விட்டுவிட்டேன். ஆனாலும் இந்த முதலாளிகள் ஏழைகளுக்குச் செய்யும் அநீதிகளைப் பற்றி என் மனம் குமுறிக் கொண்டே யிருந்தது. அதனால் ஒரு நாள் ஒரு சபையில் "பணக்காரர்கள் ஏழைகளிடத்தில் கருணையில்லாமல் நடந்து கொள்வதால்தான் 'புரட்சி' மனப்பான்மை வளர்ந்து வருகிறது" என்று பேசினேன். அதற்காக மறுநாளே என்னை வேலையிலிருந்து விலக்கிவிட்டார்கள். ஆறு மாதங்களாச்சு, நானும் எங்கெங்கோ அலைந்து வேலை கேட்டுப் பார்த்தேன். எல்லா முதலாளியும் நான் முதலாளிகளைத் தூஷிக்கிறவன் என்று வேலை கொடுக்க மறுத்து விட்டார்கள். என்னுடைய அருமைத் தாயும் தங்கைமார்களும் பட்டினி கிடந்து பரதவிக்கிறார்கள். இதிலிருந்து புரட்சி வந்தால்தான் இந்தமுதலாளிகளுக்குப் புத்தி வரும் என்று கண்டு கொண்டேன். இதுவரை நான் புரட்சி இயக்கத்தைப் பலமாக கண்டித்து வந்தவன். ஆனால் இன்று முதல் நானும் என்னுடைய நண்பர் முத்து வீரப்பனுடன் சேர்ந்து புரட்சி உண்டாக்கத் தீர்மானித்து விட்டேன். புரட்சி வரத்தான் வேண்டும். புரட்சி ஓங்குக. (என்று உட்காருகிறான்.)

(புரட்சி ஓங்குக—பணக்காரத்தனம் ஒழிக—முதலாளித்தனம் ஒழிக—என்று கூட்டத்தில் கோஷக்கள்)

முத்து வீரப்பன் இத்துடன் இந்தக் கூட்டத்தை முடித்துவிட்டு நாமெல்லாரும் புரட்சி கோஷங்களுடன் அடுத்த கிராமத்துக்குள் ஊர்வலம் போய்விட்டுக் கலைய வேண்டும். நாளை இதே நேரத்தில் இலுப்பநத்தம புதூரில் புரட்சிக் கூட்டம் நடக்கும். அதில் சுந்தரம் அவர்கள் இன்னும் விரிவாகப் பேசுவார்கள். நீங்கள் முடிந்தவரை அங்கேயும் வரவேண்டும். சந்தாத் தொகையை இங்கேசெலுத்தாதவர்கள் அங்கே செலுத்தலாம்.

[என்று முத்துவீரப்பன் மேடையை விட்டு இறங்குனன். மேடை கலைக்கப்படுகிறது. ஊர்வல அணிவகுப்புடன் தொண்டர்கள் நடக்கிறார்கள். பினால் முத்துவீரப்பனும் சுந்தரமும் நடக்கிறார்கள். முன்னாலும் பின்னாலும் கிராம ஜனங்களில் பலர் ஊர்வலத்துடன் போகிறார்கள்..... சுமார் இரண்டு மைலுக்கப்பாலுள்ள மல்லபாளையம் என்ற சுந்தரத்தின் சொந்த ஊருக்குள் ஊர்வலம் கோஷங்களுடன் பிரவேசிக்கிறது. பெரிய வீதியிலுள்ள சுந்தரத்தின் வீட்டுக்கு முன்னால் ஊர்வலம் வரும்போது சுந்தரத்தின் தாயாரும மூத்த தங்கை மட்டும் (மற்ற மூன்று தங்கைகள் துங்கி விட்டதனால்) புரட்சி கோஷங்களைக் கேட்டு வீட்டுக்கு வெளியில் வந்து வேடிக்கை பார்க்கிறார்கள். சுந்தரத்தின் தங்கைகளில்

மூத்தவளான பதிநான்கு வயதுள்ள பங்கஜம், சுந்தரம் அந்தக் கூட்டத்தின் மத்தியில் வருவதையும்—'புரட்சி ஓங்குக' 'முதலாளிவர்க்கம் ஒழிக' என்ற கோஷங்களைச் சுந்தரமும் கையை உயர்த்திக் கொண்டு உரக்கக் கத்துவதையும் பார்த்துவிட்டுத் தன் தாயாரிடம்]

பங்கஜம்: அம்மா! அண்ணுவைக் காணேம் காணேமென்று தவித்துக் கொண்டிருந்தோமே! இதோ இந்தக் கூட்டத்தின் மத்தியில் வருகிறாரம்மா?

தாயார்: இருக்காது; நீ யாரையோ பார்த்துச் சுந்தரம் என்று எண்ணி யிருக்கிறாய். அவன் இந்த வம்புக்கார கும்பல்களில் சேரவே மாட்டானே. இதையெல்லாம் கண்டாலே அவனுக்குப் பிடிக்காது.

பங்கஜம்: இல்லேம்மா. அண்ணனேதான். அதோ பார், அந்தக் கொடி பிடித்துக்கொண்டு வருகிறவனுக்குப் பக்கத்திலே. அதோ! அதோ! கையைத் தூக்கிக்கொண்டு கத்துகிறார், பார்.

(தாயார் கண்ணைச் சுருக்கிக்கொண்டு பங்கஜம் குறிப்பிட்ட ஆளைப் பார்க்கிறாள். சுந்தரம்தான் என்பதை அறிந்து கொண்டு)

தாயார்: ஐயையோ! உத்யோகம் தேடப்போறேனென்று போன வன் இந்தக் கூட்டத்திலா சேர்ந்துவிட்டான்! அட தெய்வமே! இது பழி பாவத்துக்கு அஞ்சாத கூட்டம் என்று சொல்லுவாங்களே! இருக்கிற கஷ்டமெல்லாம் போதாமல் இது வேறே சங்கடமா நமக்கு?

(என்று தாயார் தன் புடவையின் முன்றானையால் கண்களை மூடிக்கொண்டு தேம்புகிறாள்)

பங்கஜம்: அம்மா, ஏம்மா அழுகிறாய்? அண்ணன் — சும்மா — தமாஷாக அவர்களோடு கொஞ்சம் போய் வரட்டுமே. அதனாலென்னம்மா?

தாயார்: பங்கஜம், நீ குழந்தை. உனக்கு ஒன்றும் தெரியாது. தமாஷுக்குப்போனுக்கூட சர்க்கார் சுந்தரத்தைச் சந்தேகிப்பார்கள். உங்கள் அப்பா இருந்த பெருமைக்கு இதெல்லாம் நமக்குத் தகாதுடி, தகாது.

(என்று சொல்லிக் கொண்டே தாயார் வீட்டுக்குள் போகிறாள். பங்கஜமும் பின்னல் சென்று மறைகிறாள்.)

[ஊர்வலம் அவ்வூரில் மிகவும் பிரபலமான 'இன்பமாளிகை' என்ற ஹோட்டலுக்கு முன்னால் நின்று கோஷங்களுடன் கலைகிறது. அந்த ஹோட்டல், முத்துவீரப்பனும் அவனோடு சேர்ந்த சில அசலூர்க்காரர்களான புரட்சித் தொண்டர்களும் இறங்கியிருக்கிற இடம். கூட்டத்தைக் கலைத்து விட்டு முத்துவீரப்பன் சுந்தரத்தை அன்றிரவு தன்னுடன் ஹோட்டலில் சாப்பிட வேணும் என்று கையைப் பிடித்து ரகசியமாக அழைக்கிறான்.]

முத்துவீரப்பன்: சுந்தரம்! சொம்ப நேரமாகிவிட்டது. நீ இங்கேயே என்னுடன் சாப்பிட வேண்டும், வா.

சுந்: இல்லை நான் போகவேண்டும். என் தாயாரும் தங்கை மாரும் எனக்காகக் காத்துக் கொண்டிருப்பார்கள் ... நான் போகிற வரைக்கும், எவ்வளவு நேரமானாலும் என் தாயார் தூங்கவே மாட்டார்கள்.

முத்து: வேணுமானால் உன் தாயாருக்குச் சொல்லியனுப்பிவிடு வோம். நான் உன்னோடு கொஞ்சம் வெகு முக்கியமான திட் டங்களைப் பற்றிப் பேசவேண்டும்.

சுந்: நான் நாளைக்குச் சீக்கிரமே வருகிறேன்: பேசுவோம்.

முத்து: நாளைக்கு எனக்குப் பல ஜோலிகள் இருக்கின்றன. பகல் வேளையில் என்னைப் பார்க்கப் பலபேர் வந்துவிடுவார்கள். நாம் அப்போது அந்தரங்கமாகப் பேசமுடியாதே. பரவாயில்லை. இன்றைக்கு ஒரு இரவு நீ வெளியே தங்கிவிடுவதால் பாதக மில்லை. நாளைக்கு நானும் உன்னுடன் வந்து உங்கள் தாயா ருக்குச் சமாதானம் சொல்லுகிறேன்.

சுந்: அது வேண்டியதில்லை. என் தாயாருக்கு நான் சொன்னாலே போதும். இன்றைக்கு நான் அவசியம் இங்கு தங்கத்தான் வேணுமா?

முத்து: ஆம் வெகு ரகசியமான சில விஷயங்களைப் பேசவேண் டும்.

சுந்: அப்படியானால் சரி.

[என்று இருவரும் ஹோட்டலுக்குள் போகிறார்கள். சுந்தரத் தோடு புரட்சிப் பிரசங்கம் கேட்க வந்த அவனுடைய நண்பன் கோவிந்தன் கூட்டம் கலைந்த உடன் வீட்டுக்குப் போய் விட்டான். ஆனால் அவர்களுடன் வந்த **செங்கோடன்** மட்டும் கூட்டம் கலைந்த பிறகும் அங்கேயே இருந்து சுந்தர மும் முத்துவீரப்பனும் ஹோட்டலுக்குள் நுழையும் போது தானும் அவர்கள் பின்னால் நுழைந்தான். முத்துவீரப்பன் அந்த ஹோட்டலின் மேல்மாடியில் தினசரி வாடகைக்குப்

பிடித்திருந்த வெகு விஸ்தாரமான அறைக்குள் முத்துவீரப் பனும் சுந்தரமும் நுழைகிறார்கள். செங்கோடன் அந்த அறையின் வாசற்படியோடு வெளியில் நிற்கிறான். சுந்தரம் திரும்பிப் பார்த்து, செங்கோடனைக் கண்டு]

சுந்தரம் : என்ன செங்கோடா? வீட்டிற்குப் போகவில்லையா? கோவிந்தன் எங்கே?

செங் : அவரைக் காணமுங்க.

சுந் : பின் நீ மட்டும் இங்கு வந்த காரியம் ஏதாவது உண்டா?

செங் : ஆமாங்க. இதை ... அந்த ஐயாவிடம் குடுக்கலா முண்ணு வந்தேனுங்க.

(என்று ஒரு ரூபாயை முத்துவீரப்பனுக்குக் கொடுக்க நீட்டு கிறான். அதையறிந்த முத்துவீரப்பன் முன்னால்வந்து அதைப் பெற்றுக் கொண்டு)

முத்து : உங்கள் சந்தாவா? சரி, ரொம்ப வந்தனம். உங்கள் பேரென்ன?

செங் : செங்கோடனுங்க.

முத்து : சரி ரொம்ப சந்தோஷம் ..... நாளைக்கு நடக்கிற கூட்டத் துக்கு வாங்க.

(செங்கோடன் வீட்டுக்குப் போக இரண்டெட்டு சென்று உடனே திரும்பி வந்து முத்துவீரப்பனைப் பார்த்து)

செங் : பொரட்சி பண்ணினு, அல்லாருக்கும் நெலமும் ஊடும் கெடைக்குங்களா?

முத்து : ஓ! கண்டிப்பாகக் கிடைக்கும். உனக்கும் கிடைக்கும்.

செங் : பொம்பளைக்குக் கூட கெடைக்குங்களா?

முத்து : ஆண் — பெண் எல்லாருக்கும் உண்டு. நம்முடைய புரட்சி எற்பாட்டில் ஆணுக்கும் பெண்ணும் வித்தியாசமே பாராட்டுவதில்லை; சரிநிகர் சமானமாகத்தான் நடத்துவோம்.

செங் : செரிங்க. அப்படிச் செய்யுங்க; மவராசா, அதுதான் வேணும்.

காட்சி III

இடம் : செங்கோடன் வீடு

காலம் : இரவு

[செங்கோடன் இன்ப மாளிகை ஹோட்டலிலிருந்து வந்து தன்னுடைய வீட்டுக்குள் நுழைகிறான். வீடு ஓர் ஏழைக் குடியானவன் வீடுதான். அடுக்குப் பானை, உரி, அடுப்பு, அம்மி, குழவி, தண்ணீர்ப் பானை, பக்கத்தில் ஒரு செப்புக் குடம் முதலியன காணப்படுகின்றன. ஒரு அடுப்பு. அதில் தணல் இருக்கிறது. அந்த அறையின் ஒரு புறத்தில் சுவர் ஓரமாக ஒரு கயிற்றுக்கட்டிலில் செங்கோடனுடைய மனைவி காளியம்மாள் அசந்து தூங்குகிறாள். அவனுடைய இரண்டு குழந்தைகள் கீழே தரையில் தூங்குகின்றன. காளியம்மாள் ஓர் ஏழைக் குடியானவனுடைய மனைவியானாலும் விநய மறிந்தவள். நல்ல பேச்சுக்காரி. செங்கோடனுக்கு அவளிடத்தில் வெகு பிரியம்.....வீட்டுக்குள் வந்ததும் மனைவியின் இருப்பிடத்தை நாடுகின்றான். அவள் மெய்மறந்து மல்லாந்து படுத்துத்தூங்குவதைக் கவனிக்கிறான். சில சமயங்களில் அவள் கணவனுடன் பரிகாசத்துக்காகத் தூங்குவது போலப் பாசாங்கு செய்ததுண்டு. கதவுதாளிடாமல் இருந்ததால் அவள் பொய் உறக்கம் தான் செய்கிறாள் என்று செங்கோடன் எண்ணிக்கொண்டு கிட்டப்போய் உற்றுப் பார்க்கிறான். அவள் அசையவில்லை.....அவளைக் கேலி செய்ய எண்ணம் வந்தது. செங்கோடன் மெதுவாகக் குனிந்து மல்லாந்த வாக்கில் படுத்திருந்த காளியம்மாளின் தோளின் கீழும் முழங்காலின் கீழும் தன்னுடைய இரண்டு கைகளையும் நுழைத்துச் சட்டென்று காளியம்மாளைக் குப்புறப் புரட்டிவிடுகிறான். அப்படிப் புரட்டும்போதே]

செங் : புரட்சி ஓங்குக! (என்று கத்திச் சிரிக்கிறான்.)

(திடுக்கிட்டு விழித்த காளியம்மாள் எதிரில் நிற்கிற செங்கோடனைப் பார்த்து, கோபத்தோடு)

காளி : அடப் பாவி மனுசா! விடியக் காலத்திலிருந்து ஒனக்காக மாடாட்டமா ஒளச்சிப்புட்டு அலுத்துப் போயி செத்தே கண்ணசந்து படுத்தேன். ஊரைச் சுத்திப்பிட்டு இப்படி வந்து பொரட்டித் தள்ளிப்பிட்டியே! நல்லாருக்குது போ.

செங் : (பதில் சொல்லாமல்) 'பொரட்சி ஓங்குக'. (என்று மட்டும் மறுபடியும் சொல்லிச் சிரிக்கிறான்.)

காளி : என்னத்தெப் பொரட்சி ஓங்கறது! வீங்கறது!

செங் : பொரட்சிடி — பொரட்சி. பொரட்சி செய்ய போறேம்டி.

காளி : என்னத்தெப் பொரட்டப் போறே ?

செங் : அடி பைத்தியமே ; நம்ம ஊருக்கெல்லாம் பொரட்சி வரப் போவுதுடி.

காளி : பொரட்சி வந்தா வந்துட்டுப் போவுட்டுமே! நமக்கென்ன ?

செங் : பொரட்சி வந்தா அப்புறம் இனிமேல் எல்லாம் புது மாதிரிதான்.

காளி : அதென்ன மாதிரி ?—புது மாதிரி ?

செங் : பொரட்சி வந்தா எல்லாம் மாறிப் போகும்டி. மேலே இருந்ததெல்லாம் கீளே. கீளே இருந்ததெல்லாம் மேலே... அது புது மாதிரி அல்லவா ?

காளி : ஓஹோ! மேலே யிருந்ததெல்லாம் கீளே ! கீளே இருந்ததெல்லாம் மேலேயா ?

செங் : ஆ...மா...ண்...டி, ஆமாம்.

காளி : அப்படிண்ணு மேலே இருக்கிற கூரை கீளே வந்துடும் ; கீளே இருக்கிற தரை மேலே போயிடுமா ? கொளவி கீளே போயிடும், அம்மி மேலே வந்துடும் ? அடுப்புலே இருக்கிற சட்டி கீளே போயிடும், நெருப்பு மேலே வந்துடும். நாம்ப கீளே—கட்டில் மேலே ! அப்படியா ?

செங் : பொட்டச்சிங்கிறது சரியாத்தானிருக்குது. ஏண்டி—ஊடும்—கூரையும், அம்மியும்—கொளவியும், அடுப்பும்—நெருப்புமா பொரட்சி செய்யும் ? மனுசருக்குள்ளே பொரட்சி வரப்போகுதுண்ணு சொன்னு, நீ அடுப்பையும், நெருப்பையும், சொல்றே. பொம்பளே அடுப்பூதறத்துக்குத்தான் ஆவாங்கிறது சரியாப் போச்சி.

காளி : ஓஹோ மனுசருக்குள்ளே பொரட்சியா ? அப்படிண்ணு என்ன ?

செங் : அப்படின்னுக்கா மேலே இருக்கிற மனுசர் கீளே வந்துடுவாங்க, கீளே இருக்கிற மனுசர் மேலே போயிடுவாங்க. அவ்வளவுதான்.

காளி : அப்படின்னு மச்சுமேலே இருக்கிறவங்க கீளே வந்துடுவாங்க, கீளே இருந்தவங்க மச்சுமேலே ஏறிக்குவாங்க. அதுதானே !

செங் : ஆமாம்—அதான்—இப்பத் தெரிஞ்சுதா ?

காளி : அதனாலே நமக்கென்ன ? நம்ப குடிசையிலே தான் மச்சியுமில்லே மாடியுமில்லியே. நாம்ப ரெண்டு பேரும் கீளேயேதான் இருக்கணும்.

செங் : அடிப் போடி புத்தியில்லாதவளே. மத்ததுக் கெல்லாம் என்னென்னமோ வக்கணையெல்லாம் பேசுறே. பொரட்சிண்ணு ஒனக்கு ஒண்ணுமே புரியிலே.

காளி : பொரட்சிண்ணு என்னு? வெவரமாத்தான் சொல்லேன்.

செங் : வெவரமாச் சொல்றேன், நல்லாக் கேளு—பொரட்சிண்ணு இனிமேலே பணக்காரன்—ஏழை, முதலாளி—வேலைக்காரன், படிச்சவன்—படிக்காதவன், ஆம்புளே—பொம்பிளே, இங்குற வேத்துமையெல்லாம் இருக்காது. தெரியுதா?

காளி : அடேயப்பா! ஆம்புளே—பொம்புளே இங்குற வேத்துமை கூட இருக்காதா?

செங் : ஊஹூம்; இருக்கவே இருக்காது. இனிமேலே பொம் புளேங்களே மட்டமா நெனைக்கிற நெனைப்பே போயிடும். பொம் புளேங்களும் ஆம்புளேங்களைப் போல எல்லா வேலைக்கும் போகலாம். ஆம்புளேயும் பொம்புளேயும் சரிநெகர் சமான மாம். பொரட்சிக்காரரையே கேட்டேன். அவரே சொல்லிப் பிட்டாரு. இதுவரைக்கும் இருந்தாப்பிலே பொம்பளேங்க ஊட்டுக்குளியே அடுப்பங்கரையைக் காத்துக்கெடக்க வேண் டியதில்லே. கச்சேரி வேலைக்குக்கூடப் போகலாம்.

காளி : அப்படியா? நாங்க கச்சேரி வேலைக்குப் போனு நீங்க சோறுக்குவிங்களா?

செங் : ஓ! ஆக்குவோம். அதுதாண்டி பொரட்சி. பொம்பளேங் களுக்கு இனிமேலே நல்ல காலம் வருதுடி. எல்லாம் இனி மேல் தலேகீளா மாறிப் போகும்டி. பின்னே பொரட்சிண்ணு என்னண்ணு நெனச்சே?

காளி : அப்படிண்ணு மவராசரா இருப்பிங்க. அந்தப் பொரட்சி யைக் கொஞ்சம் ஒடனே வரப்பண்ணுங்க சாமி...பொம்பளேங் களுக்கு சொம்ப நாளா ஆசை. கொஞ்ச நாளேக்காச்சும் நாங்க கச்சேரிக்கும் கடைக்கும் போறோம். நீங்க—ஆம்புளேங்க—ஊட்டெப் பாத்துக்கொங்க. இத்தனே நாளும் கொழந்தை குட்டிகளேப் பெக்கறதும் வளக்கறதும் எல்லாம் நாங்களே செஞ்சி நொந்து நொந்து போய்க் கெடக்குறோம். இனிமேலா வது கொஞ்சம் அதையும் நீங்களே பாத்துக்குங்க! (என்று சிரிக்கிறாள்.)

செங் : (கொஞ்சம் கோபத்துடன்) ஏண்டி கேலியா பண்றே பொரட்சியை? (என்று முறைக்கிறான்.)

காளி : நான் ஒண்ணும் கேலி பண்ணலே. பொம்பளேங்களுக் கெல்லாம் நல்ல காலம் வந்திடுச்சி, ஆம்பளேங்க செஞ்ச வேலேயெல்லாம் இனிமே பொம்பளேங்க செய்யலாம், பொம் பளேங்க செஞ்சதெல்லாம் இனிமேலே ஆம்பளேங்க செய்

யலாம். எல்லாம் தலைகீளை மாறிப் போகுமுண்ணு நீதானே இப்பச் சொன்னே! என்னே ஏம் மொறச்சிப் பாக்கிறே, மச்சான்! (என்று மறுபடியும் சிரிக்கிறாள். செங்கோடனுக்கும் சிரிப்பு வந்து விடுகிறது. கொஞ்சம் சிரித்துவிட்டு)

செங் : போடி, போ. ஒனக்கு எப்பப் பாத்தாலும் கேலிதான். 'காளியம்மா வாயாடின்னு' அல்லாரும் சொல்றது சரியாத் தானிருக்குது...அடி! ... எல்லாம் தலைகீளே மாறிப்போகு மிண்ணு நாஞ்சொன்னது என்னுண்ணுக்கா: நம்மைப்போல ஏழையெல்லாம் பணக்காரர் ஆயிடுவாங்க. நெலம் இல்லாத வங்களுக்கெல்லாம் சொந்தமாக நெலம் கெடைக்கும். ஊடு இல்லாதவங்களுக்கெல்லாம் ஊடு கெடைக்கும். ஆம்பிள்ளே களுக்கு மட்டும் அல்லடி. பொம்பளேங்களுக்கும் சரிபங்கு கெடைக்குண்டி. அதுதாம் பொரட்சி. இன்னும் மூணு மாசத் திலே அது வந்துடும். அப்பறம் நம்ப சொந்த நெலத்திலே தான் நீயும் நானும் வெள்ளாமை பண்ணுவோம். இப்பத் தெரியுதா? பொரட்சிண்ணு என்னு—ண்ணு?

காளி : அப்பிடியா சேதி? அதுதாம் பொரட்சியா? அதுக்கா என்னே அப்புடிப் பொரட்டி குப்புறத் தள்ளினே?...நம்பு ளுக்குச் சொந்தமா நெலம் வாரதுண்ணு ரெம்ப சந்தோசம் தான். ஆமா நமக்கு நெலந் தாரவங்க யாரு?

செங் : எல்லாம் அந்தப் பொரட்சிக்காரங்கதான் தருவாங்க.

காளி : பொரட்சிக்காரருண்ணு அதாரு? நம்ப பண்ணேயக்காரரா? முனிசிப்பா? மணியக்காரரா? கணக்கப்பிள்ளேயா?

செங் : அட சே! இவுங்களேயெல்லாம் இனிமே யாருடி கேக்கப் போறுங்க. இவுங்களேக் கேட்டாத் தருவாங்களா? இவுங்க கிட்டே இருக்கிறதை புடுங்கித்தான் பொரட்சிக்காரர் நமக்குத் தரப் போறுங்களே.

காளி : புடுங்கினுக்கா அவுங்க சும்மா உட்டுடுவாங்களா?

செங் : அதைப் பத்தி நமக்கென்னடி? அதையெல்லாம் அந்தப் பொரட்சிக்கார ஐயா பாத்துக்குவாரு. எப்படியாச்சும் நம்பு ளுக்கு நாலு ஏக்கரா நெலம் வந்துடுது...சரி வவுறு பசிக்குது. சோறு குடு.

[என்று செங்கோடன் கட்டிலின்மீது உட்காருகிறான். காளியம் மாள் உடனே போய் சோற்றுப் பானேயிலிருந்து சோளச் சோற்றை ஒரு வட்டியில் போட்டு, கடைந்த கீரையை அதில் எடுத்துப் போட்டு வைக்கிறாள். செங்கோடன் எழுந்து கைகால்களேக் கழுவிக்கொண்டு, கீரையோடு போட்ட சோற்றைத் தின்றுவிட்ட பிறகு—மோர் ஊற்றிக் கரைத்துக் குடிப்பதற்கு மீட்டும் கொஞ்சம் சோற்றைப் போட்டுவிட்டு காளியம்மாள் உரியிலிருந்த மோர்க் கலே

யத்தை எடுத்துப் பக்கத்தில் வைத்துவிட்டு உப்பு கொண்டு வரப் போய் உப்புச் சட்டியில் கையைவிடுகிறாள். அதில் துளிகூட உப்பு இல்லை...உடனே திரும்பி வந்து]

காளி : *அது சரி...உப்பு வாங்கியாறச் சொல்லி ஒரு ரூவா குடுத்தேனே, உப்பெங்கே ?*

செங் : *அந்த ரூவாயைத்தான் பொரட்சிக்குத் தந்தேன். சும்மா வருமா நெலம் ?*

காளி : *அதெல்லாந்தான் அந்த பொரட்சிக்கார ஐயா பாத்துக்கு வாங்கோண்ணு சொன்னியே ? நீ எதுக்குப் பணம் தந்தே ?*

செங் : *அவுங்கதாம் பாத்துக்குவாங்க. இருந்தாலும் அந்தச் செலவுக்கு நாம்ப ஏதாச்சும் குடுக்க வாண்டாமா ? அதுகூட இல்லாமையா நாளைக்கு நாலு எக்கரா நெலம் வரும் ?*

காளி : *நல்லா வந்துது போ, நாலு ஏக்கரா ? அண்ணைக்கு அப்பிடித்தான் ஐயாயிரம் பத்தாயிரம் வரப்போவுதுண்ணு கம்பு வாங்கக் குடுத்த அஞ்சு ரூவாயைக் கொண்டு போய் என்னுமோ 'லாட்டேரி' சீட்டு வாங்கிப்பிட்டே. வருசம ரெண்டாகப் போவுது, அரைக் காசுகூட வல்லே. இண்ணைக்கி என்னடாண்ணு உப்பு வாங்கத் தந்த ரூவாயெ யாரோ என்னுமோ நெலம் வரப்போவுதுண்ணு சொன்னுங்கோண்ணு குடுத்துபுட்டு வந்துட்டே. சுத்தக் கூறுகெட்ட ஆம்பிளையா இருக்கிறியே ? நீதான் சொரணகெட்டு உப்பில்லாமெ கூட குடிச்சுப்புடுவே. விடிஞ்சா கொளந்தைங்களுக்கு உப்புக்கு எங்கே போறது ?*

செங் : *சும்மா கத்தாதெடி. நாளைக்கி நெலம் கெடைச்சா அப்போ ?*

காளி : *நல்லா நெலங் கெடைச்சுது போ. லாட்டேரிச் சீட்டுக்கு ஐயாயிரம் பத்தாயிரம் வரப்போவுதுண்ணியே அப்படித்தான்—நெலமும் வருமாக்கும்.*

செங் : *மூணே மூணு மாசம் பொறுத்துக்கடி. நெலம் வருதா இல்லியாண்ணு பாரு...இண்ணிக்கி நம்ம...பெரிய வக்கீல் ஐயா செத்துப்போனாரு பாரு...நம்ம கண்ணாலத்துக்கு எரனூறு ரூவா எனம் தந்தாரு பாரு...சீனுவாசரு, அவர் மகன் சுந்தரம் இருக்கிறாரு பாரு அவர்கூடப் பொரட்சியிலே சேர்ந்துட்டாரு. அவர் கூடத்தான் பொரட்சி வரத்தான் வேணும், வரத்தாம் போவுதூண்ணு சொன்னாரு. ஏண்டி, அவர் கூடவா ஏமாந்து பேசுவாரு ?*

காளி : ஐயோ அவரா? வக்கீல் ஐயா மகனு? சுந்தரமா? அவர் சொம்ப நல்லவராச்சே. அவர்தான் முன்னே ஒருநாள் என்னுமோ வேறெ மாதிரி பெரசங்கம் பண்ணினாரே?

செங் : அதெப்போ, நாங் கேக்கிலியே!

காளி : நீ அண்ணைக்கு ஊர்லே இல்லே. மாடு வாங்கப் போயிட்டே.

செங் : என்னு சொன்னாரு?

காளி : அவரு சொன்னாரு: கலகக்காரப் பசங்க வந்து உங்களுக்கும் பண்ணீயக்காரருக்கும் சண்டை மூட்டிவிடப் பாப் பாங்க. அதுக்காக பணக்காரர் நெலத்தையும் பணத்தையும் புடுங்கி உங்களுக்குப் பங்கு போட்டுத் தாரமுண்ணு சொல்லுவாங்க. நீங்க ஏமாந்து போயி பண்ணீக்காரரோடே ஒண்ணும் சச்சரவு வச்சிக்கப் படாது. அப்படி வச்சிக்கிட்டா சர்க்காரு ஒங்களே ஜெயில்லே போட்டுடுவாங்க - இண்ணு இன்னும் என்னென்னமோ சொன்னாரே—அவரா இந்தப் பொரட்சியிலே சேந்துட்டாரு?

செங் : ஆமாண்டி, ஆமாம். அவரேதான் இண்ணீயோட பொரட்சி பண்ணப் போறெண்ணு சொன்னாரு. அவர் கிட்டேதான் நான் அந்த ஒரு ரூவாயைக்கூட தந்தேன். அவருக்கு முன்னுலேதான் அந்த ஐயா நமக்கெல்லாம் நெலம் கண்டிப்பா கெடைக்கு முண்ணாரு.

காளி : செரி...போய்த் தொலையுது. போ...தூக்கம் வருது... நெசந்தானு? நெலம் வருமா?.....

செங் : வருமுடி...வரும். மூணே மாசம் பொறுத்துக்கோ.

காட்சி IV

இடம் :—இன்ப மாளிகையில் ஓர் ஏகாந்த அறை

காலம் :—இரவு

(முத்து வீரப்பனும் சுந்தரமும் மட்டும் அந்தரங்கமாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள்)

முத்து : சுந்தரம்! நீ எங்களுடன் சேர்ந்துவிட்டதுதான் எனக்கு எதிர்பாராத அதிருஷ்டம்.

சுந் : நானென்ன ஒரு பிரமாதம் ?

முத்து : அப்படிச் சொல்லாதே. இந்தப் பக்கத்தில் நீதான் எங்களுக்குப் பிரமாதம். எழுத்தாலும், பேச்சாலும் எங்கள் இயக்கத்துக்கு எதிர்ப்பிரசாரம் செய்து பிரமாத இடையூறு உண்டாக்கினவர் உன்னைப் போல் வேறு யாருமில்லை. இப்போது நீயும் எங்களுடன் சேர்ந்து விட்டதால் இனி வெறறிக்குத் தடையே இல்லை. நீ எங்கள் இயக்கத்துக்கு வேறென்றும் செய்யாவிட்டாலும் இனிமேல் உன்னுடைய எதிர்ப்பு இருக்காது என்ற ஒன்றே எனக்குப் போதும். புரட்சிக்குப் பிரமாத எதிரியாக இருந்த நீ எங்களுடன் சேர்ந்து விட்டது பிரமாதம் அல்லவா ?

சுந் : நான் புரட்சிக்கு எதிரியாக இருந்ததில்லை. ஆனால் உங்கள் புரட்சிமுறை வெறும் குழப்பத்தை மட்டும் உண்டாக்குகிறது. அதைத்தான் நான் எதிர்த்தேன்.

முத்து : குழப்பம் எங்களுடைய நோக்கமல்ல. ஆனால் புரட்சி வரும்போது கொஞ்சம் குழப்பமும் வரத்தானே செய்யும் ?

சுந் : நான் சொல்லுவது அந்தக் குழப்பமல்ல. புரட்சி இயக்கத்தை நடத்துகிறவர்கள் ஆயுதபாணிகளாகச் சென்று முதலாளிகளையும் அவர்களுடைய இருப்பிடங்களையும் தாக்குவதும், பலாத்காரமும் பயங்கரமுமான செயல்களைச் செய்யச்சொல்லி ஏழைகளைத் தூண்டிவிடுவதும்தான், தகாது என்கிறேன்.

முத்து : நம்மிடத்திலும் ஆயுதங்கள் இருக்கவேணும் என்பது வெறும் தற்காப்புக்காகத்தான். அதைச் சில இடங்களில் நம்முடைய ஆட்கள் அவசரப்பட்டு உபயோகித்துவிடுகிறார்கள். அது தப்புதான். இருந்தாலும் இந்த பயங்கரச் செயல்களுக்கு நாமா ஜவாப்தாரி? இந்த முதலாளிகள்தானே ? வேறென்றும் வேண்டாம்—உன்னை இந்த முதலாளிகள் படுத்தியிருக்கிற பாட்டுக்கு உன்னைத் தவிர வேறு யாராவது கொஞ்சம் கோபக்காரனாயிருந்தால் என்னவாயிருக்கும் ?

எவனுவது ஒரு முதலாளிட்டத்திலாவது அடிதடி ரகளைகள் செய்திருப்பான். அதிலிருந்து வேறு பயங்கரச் செயல்கள் நேர்ந்திருந்தாலும் இருக்கும் அல்லவா? யோசித்துப் பார்.

சுந்: அதென்னமோ உண்மைதான். எனக்கும் வெகு ஆத்திரம் தான் வருகிறது. இருந்தாலும் நாம் பயங்கரச் செயல்களுக்கு இடமே கொடுக்காமல் புரட்சி உண்டாக்க வேண்டும்.

முத்து: எனக்கும் அதுதான் ஆசை. ஆனால் முழுதும் அப்படிச் செய்ய முடிகிறதில்லை. நாமும் இந்த முதலாளிகளைப் பயப் படுத்தக்கூடிய விதமாக இருந்தால்தான் இந்தப் புரட்சியை உண்டாக்கலாம்.

சுந்: நாமேன் அவர்களைப் பயப்படுத்த வேண்டும்?

முத்து: பின் என்ன செய்வது? வெறும் நியாயத்துக்கு அவர்கள் இணங்குவதாயிருந்தால் —நீ சொன்ன மாதிரி— இவர்கள் ஏழைகளிடத்தில் சற்று கருணையோடு நடந்து கொண்டால் புரட்சியே வராது. அதனால்தான் கொஞ்சம் அவர்கள் பயப்படும்படியாக நாம் இருக்க வேண்டும் என்பது.

சுந்: நல்ல பிரசாரம் செய்து தொழிலாளிகளையும் விவசாயி களையும் நாம் வசப்படுத்தி விட்டால் அதுவே போதாதா— இந்த முதலாளிகளைப் பயப்படுத்த?

முத்து: அதுதான் நம்முடைய முயற்சி. ஆனால் தொழிலாளி களிடத்தில் நாம் பிரசாரம் செய்யவே இவர்கள் இடங் கொடுப்பதில்லையே?

சுந்: ஏன் இன்றைக்கு நீ செய்த பிரசங்கம் நல்ல பிரசாரம் அல்லவா?

முத்து: இன்றைக்கு என்னமோ நம்முடைய கூட்டம் வெகு வெற்றிகரமாகத்தான் நடந்து விட்டது. இப்படி எல்லா இடங்களிலும் நடத்த முடிகிறதேயில்லை. சில இடங்களில் நம்முடைய கட்சிக்காரர்கள் தொழிலாளிகளுடன் பழகக்கூட முடிவதில்லை. உதாரணமாக மலையடிப்பட்டி முதலாளி நல்லப்பன் இருக்கிறாரே, தெரியுமா?

சுந்: நல்லாத் தெரியும்.

முத்து: அவருடைய மில்களிலும் வயல்களிலும், எல்லாம் சேர்ந்து சுமார் பத்தாயிரம் ஏழைகள் வேலை செய்கிறார்கள். அவர்கள் படும் பாடு சொல்லிமுடியாது. நல்லப்பன் மகா கொடுமைக்காரன். பணத்திமிரின் வடிவம் என்றால் அந்த நல்லப்பனைத்தான் சொல்லவேண்டும். நாகப்பாம்பை 'நல்லபாம்பு' என்பது போலத்தான் அவனுக்கு 'நல்லப்பன்' என்று பெயர்.....அவனுடைய எல்லைக்குள் நம்முடைய

ஆட்கள் பிரசாரத்துக்கு நுழையவே முடியவில்லை. நாங்களும் இரண்டு வருஷமாக முயற்சி செய்கிறோம். பெரிய பெரிய அதிகாரிகள் எல்லாம் நல்லப்பன் சொன்னபடி. இப்படிப்பட்ட வர்களோ எப்படியாவது தொலைத்தால்தான் நல்லது என்று தானே எண்ணம் வருகிறது?

சுந்: நல்லப்பர் வெகு பொல்லாதவர் என்றுதான் கேள்வி. ஆனால் அவர் இளமையில் கொம்ப நல்லவராகத்தானிருந் தாராம். பணம் சேரச் சேர குணம் கெட்டுப் போனாராம்.

முத்து: அவர் இளமையை யார் கண்டது? இளமையில் அவர் நல்லவராக இருந்தாரென்பதில் இப்போது யாருக்கென்ன? இப்போது அவர் ஏழைகளுக்குச் செய்கிற கொடுமைகளைத் தானே சகிக்க முடியவில்லை! அவரைப் பற்றி உனக்கு நன்றாகத் தெரியாது போலிருக்கிறது.

சுந்: எனக்கு அவரைப்பற்றி நன்றாகத் தெரியும். என் தகப்பனார் அவருடைய சிறு பிராயத்திலிருந்து அவரை நன்றாக அறிந்தவர். நல்லப்பர் இளமையில் வெகு நல்லவராக இருந்தவர் என்பதை என் தந்தை சொல்லித்தான் எனக்குத் தெரியும்.

முத்து: உன் தந்தை, நல்லப்பன் இளமையில் நல்லவனாக இருந்ததைப் பற்றி மட்டும்தான் சொன்னாரா? பத்து வருஷங் களாக இவன் செய்துவருகிற பாதகச் செயல்களைப் பற்றி ஒன்றும் சொன்னதில்லையா?

சுந்: அதையும் சொல்லியிருக்கிறார்.....சொல்லுகிறேன், கேள்.....நல்லப்பருடைய தகப்பனார் காலத்திலிருந்து அவ ரது குடும்பத்துக்கு என் தந்தைதான் வக்கீலாக இருந்தார். நல்லப்பருடைய தகப்பனார் சாகிறபோது அவருக்கு சொத்து மிகவும் சொற்பந்தான். என் தகப்பனார் தான் அநேக வியாஜ் யங்களை ஜெயித்துக் கொடுத்தார். அதற் கப்புறந்தான் இவர் முதலாளியாக ஆரம்பித்தது. பண ஆசையினால் நாளுக்கு நாள் இங்கு அநேக அக்கிரமங்களுக்குத் தலைப் பட்டு பொய் வியாஜ்யங்களையும் செய்யத் துணிந்து விட்டார். அதற்காக என் தகப்பனார் இவரைக் கண்டித்தார். இவர் கேட்கவில்லை. உடனே என் தந்தை இவருக்கு வக்கீலாக இருக்க மறுத்து விட்டார். ஒரு முக்கியமான வியாஜ்யத்தில் என் தந்தை இவ ருடைய எதிர்க் கட்சிக்கு வக்கீலாக அதை நடத்தினார். அதில் நல்லப்பர் எதிரிக்குப் பத்து லட்ச ரூபாய் கொடுக்க வேண்டி யதாகி விட்டது.

முத்து: ஓஹோ! அந்த எதிர்க் கட்சிக்காரன் தான் உன்னை இப் போது வேலையை விட்டுத் தள்ளின முதலாளியா? சரி—சரி; சரி.

சுந்: ஆமாம், அவர்தான்...அந்த வியாஜ்யத்திலிருந்து என் தகப்பனார்மேல் நல்லப்பருக்கு வெகு கோபம். அதற்காக என் தந்தையை இவர் ஆள்வைத்து அடிக்க ஏற்பாடு செய்திருந்தார்.

முத்து: அப்படியா! உன் தந்தையை அடிக்கவா! இந்த அயோக்கியப் பயலையா 'இளமையில் வெகு நல்லவனாக இருந்தவன்' என்று சொல்ல வந்தாய்? சரி அப்புறம்? உன் தந்தை அடிபட்டாரா என்ன?

சுந்: எல்லோரையும்போல என் தந்தையும் ஏமாளியாக இருந்தால் அடிபட்டுத் தான் இருப்பார்...ஆனால் என் தந்தையா...அவர் ரொம்ப முன்யோசனைக்காரர்...நல்லப்பன் இப்படி ஏதாவது செய்வான் என்பதை அனுமானித்து அவன் செய்திருந்த ஏற்பாட்டை முற்றிலும் முறியடித்து விட்டார்...என் தகப்பனார்.

முத்து: எப்படி? விவரமாகச் சொல்லு. விஷயம் ரொம்ப சுவாரஸ்யமாக இருக்கிறது. உன் தந்தையை அடிக்கவா முயற்சி செய்தான் இந்தப் பணமூட்டை!— சரி அப்புறம்?

சுந்: எங்கள் வீடு 'டவுனுக்கு' வெளியில் ஒன்றரை மைல் தூரத்தில் இருக்கிறது. உனக்குத்தான் தெரியுமே.

முத்து: ஆமாம்.

சுந்: தினந்தினம் என் தந்தை கச்சேரி வேலைகள் முடிந்த பின் 'கிளப்'பில் சாயங்காலம் ஏழு, ஏழரை மணி வரையிலும் சினேகிதருடன் 'டென்னிஸ்' 'சிட்டாட்டம்' இதுகளில் பொழுது போக்கி விட்டுத் தான் வீட்டுக்கு வருவார். இருட்டின பின் அந்தப் பாதையில் ஜன நடமாட்டம் மிகக் குறைவு. வீட்டுக்கு முக்கால் மைல் தூரத்தில், மரம் அடர்ந்த ஒரு குறுகலான மூலை இருக்கிறது. அந்த இடத்தில் என் தகப்பனாருடைய குதிரைவண்டியை மடக்கி, அவரை அடித்து விடுவது என்று ஏற்பாடு செய்திருந்தார்கள்.

முத்து: அடித்து விடுவதா, கொன்றே விடுவதா?

சுந்: அது நடந்திருந்தால் என்னவா யிருக்குமோ தெரியாது. கொலையே நடந்திருந்தாலும் நடந்திருக்கும்.

முத்து: சரி. அப்புறம் சொல்லு.

சுந்: இந்தச் சதியை எப்படியோ என் தந்தை புலன் வைத்து அறிந்து விட்டார். அதை வெகு ரகசியமாக டவுன் போலீஸ் சப் இன்ஸ்பெக்டரிடம் சொல்லி, அதை முறியடிக்க வழியும் என் தந்தையே சொல்லித் தந்தாராம்.

முத்து : என்ன வழி ?

சுந் : என் தகப்பனுர் வழக்கமாக வீட்டுக்கு வருகிற நேரத்தில் வெள்ளைக் குதிரை பூட்டிய அவருடைய வண்டி, முன் சொன்ன அந்த மூலைக்கு வந்தது. உடனே இருட்டிலிருந்து நான்கு குண்டர்கள் தடியும் கையுமாக வண்டியை வழி மறித்து நிறுத்தினர்கள். அதில் ஒருவன் 'டேய்! வக்கீல் பயலே! சினிவாசா! எறங்கு கீளே. எங்க நல்லப்ப ருக்கா நீ எதிர் வியாச்சியம் செஞ்சே! எறங்குடா கீளே' என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே இரண்டு பேர் குதிரையைப் பிடித்துக் கொள்ள, மற்ற இரண்டு பேர் வண்டிக்குப் பின்னல் வந்து நின்றார்கள். உடனே வண்டியிலிருந்து ஒரு 'எலெக்ட்ரிக் டார்ச்' விளக்கு வெளியே நின்றவர்களின் மீது வெளிச்சம் வீசிற்று. அந்த சமயத்தில் தன் கையிலிருந்த 'ரிவால்வர்' அவர்கள் கண்ணில் படும்படி சப் இன்ஸ்பெக்டர் வண்டியை விட்டு இறங்கினர். கூடவே மூன்று கான்ஸ்டெபிள்களும் துப்பாக்கிகளுடன் குதித்தார்கள். இதற்குள் இன்னொரு குதிரை வண்டி வந்தது. அதிலிருந்து ஐந்து ஜவான்கள் ஆயுதங்களுடன் இறங்கினர்கள். அடிக்க வந்த குண்டர்களுக்கு விஷயம் என்னவென்று தெரிவதற்குள் எட்டு ஜவான்களும் அவர்களைச் சுற்றிக்கொண்டார்கள். 'யாராவது ஓட முயன்றால் சுட்டு விடுவேன்' என்று சப் இன்ஸ்பெக்டர் கர்ஜித்து ஆகாயத்தில் ஒரு வேட்டு விட்டார்.

முத்து : அப்புறம் ?

சுந் : அப்புறம் என்ன? எல்லோரும் சரணகதி அடைந்து தங்களை நல்லப்ப முதலாளி ஏவி விட்ட விவரத்தையும், அதற்காக அவர்களுக்கு ஆளுக்கு ஐந்நூறு ரூபாய் தந்ததையும் ஒப்புக் கொண்டு கெஞ்சினர். அவர்களைப் போலீஸ் கச்சேரிக்குக் கொண்டு போனார்கள். அவர்கள் அடிக்க வந்த என் தந்தை அங்கே போலீஸ் ஸ்டேஷனில் இருந்தார். எப்படி ... என் தகதையின் தந்திரம்?.....

முத்து : பிறகு? அவர்களை என்ன செய்தார்கள்? அந்த நல்லப்பனைக் னகது செய்யவில்லையா?

சுந் : என் தகப்பனுர் ரொம்ப இளகின நெஞ்சமுடையவர். மறு நாள் நல்லப்பரைக் கைது செய்ய போலீசார் ஏற்பாடு செய்து கொண்டிருப்பதை அறிந்த நல்லப்பர் என் தகப்பனுரிடம் ஓடி வந்து கெஞ்சிக் கூத்தாடி மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். என் தந்தை போலீசாரிடம் மிகவும் கேட்டுக்கொண்டு நல்லப்பரை விட்டுவிட்டு மற்ற நால்வருக்கும் நல்ல நடத்தைக்கு ஜாமீன் வாங்கச் செய்து விட்டுவிட்டார்கள்.

முத்து : ஐயையோ ! இந்தப் பாதகனுக்கா பச்சாதாபம் காட்டுவது? உன் தந்தை செய்தது முற்றும் தவறு. சுந்தரம்! நீயாவது இதைப் பழிவாங்க வேண்டும். இவர்களுக்கு கருணை காட்டுவதே தப்பு. இந்த முதலாளிக்கு அனுகூலமாகத் தானே நீயும் எங்களுக்கு எதிர்ப் பிரசாரம் செய்து கொண்டிருந்தாய்? உன் தகப்பனாரையே கொல்ல முயன்றான். இவருக்கு எதிராக வியாஜ்யம் நடத்தி பத்து லட்சம் ரூபாய் கிடைக்கும்படி உன் தகப்பனார் உதவி செய்த இன்னொரு முதலாளி அந்தப் பொன்னுசாமி உன்னைக் காரணமின்றி டிஸ்மிஸ் செய்து திண்டாட விட்டிருக்கிறான். சுந்தரம்! இப்போதாவது தெரிகிறதா? இந்தச் சண்டாள முதலாளிகளைக் கூண்டோடு ஒழிக்க வேண்டாமா?

சுந் : இவர்களை ஒழித்து என்ன பிரயோஜனம்? இந்நாட்டிலுள்ள சட்ட திட்டங்களை அடியோடி மாற்றி முதலாளித் தனத்தைத் தான் ஒழிக்க வேண்டும். நல்லப்பனையும் பொன்னுசாமியையும் ஒழித்து விட்டதனாலேயே ஏழைகளுக்கு நன்மை வந்து விடாது. தொழிலாளிகளையும் பொது ஜனங்களையும் வசப் படுத்த, இப்போதுள்ள சமுதாய முறையை மாற்ற வேண்டும், அரசியலமைப்பையும் திருத்த வேண்டும்.

முத்து : அதை எப்படிச் செய்வது?

சுந் : புரட்சிகரமான பிரசாரத்தால் தான்.

முத்து : யாரிடம் பிரசாரம் செய்வது?

சுந் : தொழிலாளிகள்—விவசாயிகள்—மற்றுமுள்ள பொது மக்களிடம்தான்.

முத்து : நல்லப்பனுடைய எல்லைக்குள் போகக்கூட முடியவில்லையே! பிரசாரம் செய்வதெப்படி?

சுந் : நல்லப்பருடைய எல்லைக்குள் புரட்சி உண்டாக்க வேணுமானால் கொஞ்ச நாளைக்கு அங்கே பொறுமையாக உழைக்க வேணும். சந்தடி செய்யாமல் அங்குள்ள முக்கியமான தொழிலாளிகளை வசப்படுத்த வேண்டும். சும்மா..... 'முதலாளிகள்' ஒழிக' 'பணக்காரர்கள் ஒழிக' என்று கூச்சல்களைப் போட்டுக் கொண்டு கூட்டங்கள் நடத்துவது இப்போது அங்கே முடியாது. ஓசையில்லாமல் பிரசாரம் செய்து தொழிலாளிகளை வசப்படுத்த வேண்டும்.

முத்து : இதற்கு என்ன செய்யலாம்? நீயே சொல்லு.

சுந் : அதற்கு நாம் யாராவது அங்கே ஒரு தொழிலில் நுழைந்து சிறுகச் சிறுக உளவுகளை அறிந்து புரட்சி மனப்பான்மையைத் தொழிலாளிகளிடம் பரப்ப வேணும்.

முத்து : ஆமாம் சுந்தரம்! அது வெகு நல்ல யோசனை. ஆனால் நாங்கள் யாரும் அங்கே எந்த வேலைக்கும் எட்டிக்கூடப் பார்க்க முடியாது. நீ முயன்றால் முடியும். நீ ஒரு பி. ஏ. டைப் அடித்தல், கணக்கு வேலை எல்லாம் தெரிந்தவன் நீ. எல்லாவற்றிலும் முக்கியமாக இத்தனை நாளும் நீ முதலாளிகளுக்குச் சாதகமாகவும் எங்களுக்கு விரோதமாகவும் பிரசாரங்கள் செய்திருக்கிறாய்.

சுந்: நான் போனால் சுலபமாக வேலை கிடைக்கலாம். ஆனால் இந்த ஆறு மாத காலமாக வேறு எத்தனையோ முதலாளிகளிடம் வேலை கேட்க இசைந்த என் மனம் அவரிடம் போக ஆசைப்படவில்லையே.

முத்து : ஏன்?

சுந்: ஏனென்றால் அவர் என் தந்தைக்குத் தீங்குசெய்ய நினைத்தவர் என்ற அருவருப்பு ... எனக்கு. அவரும் என்னைத் தனக்கு விரோதம் செய்த வக்கீலுடைய மகன் என்றுதான் மதிப்பார்.

முத்து: எனக்கென்னமோ ... அப்படித் தோன்றவில்லை. நீ மட்டும் அவனிடம் போய் வேலை கேட்டால் உடனே கிடைக்கும். ஏனென்றால் உன் தந்தை அவனை மன்னித்திருக்கிறார். அதை அவன் நினைக்காமலிருக்க முடியாது?

சுந்: என் தாயார் கூட நீ சொல்லுகிற மாதிரிதான் சொல்லி என்னை அவரிடம் போய் வேலை கேட்கச் சொன்னார்கள். நான் போகவில்லை.

முத்து : இனிமேலாவது நீ போகத்தான் வேண்டும். நம்முடைய புரட்சி இயக்கம் வெற்றியடைவதற்காகவாவது நீ இந்த முயற்சி செய்ய வேண்டும். உனக்கும் அவனுக்கும் நேரான மனஸ்தாபம் ஒன்றுமில்லையே?

சுந்: இல்லை. நான் வெகு சிறுவனாக இருந்தபோது என்னிடம் அவர் வெகு பிரியமாகத்தானிருந்தார். அவருடைய மகள் வசந்தா என்னோடு ஒரே ஹைஸ்கூலில் ஆறுவது பாரம் வரை படித்தவள். வெகு நல்ல பெண். அடிக்கடி அங்கே நான் போவதுண்டு.

முத்து : வசந்தா உன்னோடு படித்தவளா? எதுவரை படித்திருக்கிறாள்?

சுந்: அவள் பி. ஏ. பாஸானவள். உயர்தரப் பள்ளியில் என்னோடு படித்தாள். பிறகு பெண்கள் கலாசாலையில் பி. ஏ. படித்தாள். அவளுக்கு ஒரு பெரிய ஆபத்தில் நான் உதவினவன். அதற்காக எனக்கு அடிக்கடி நன்றி செலுத்தி என்னிடத்தில் வெகு பக்ஷமாக இருந்தவள்.

முத்து : அப்படியா ? அடடா ! அவளுக்கு என்ன ஆபத்து நேர்ந்தது ?

சுந் : அவள் ஒரு நாள் பள்ளிக்கூடத்துக்கு வரும்போது குடை பிடித்துக்கொண்டு வந்தாள். அந்தக் குடையைக் கண்டு மருண்டு ஒரு மாடு அவளைத் துரத்திற்று. நான் குறுக்கே ஓடி அந்த எருதைப் பயப்படுத்த முயன்றேன். அது அவளை விட்டுவிட்டு என்மீது பாய்ந்தது. அந்த அடையாளம் இதோ பார்! (என்று தன் இடது புஜத்தில் மாடு முட்டி விட்டதனாலான தழும்பைக் காட்டுகிறான்.)

முத்து : பின்னென்ன ? ரொம்ப நல்லதாப் போச்சு. நல்லப்பன் வீட்டு ரகசியங்களைக்கூட நீ அறிந்து விடலாம் ..... அந்த வசந்தாவை நானும் இரண்டு மூன்று தடவை பார்த்திருக்கிறேன். ரொம்ப அழகான பெண் ... நல்லவளாகத்தான் தோன்றுகிறாள்.

சுந் : அப்போது நல்லவளாகத்தான் இருந்தாள். இப்போது எப்படி யிருக்கிறாளோ யார் கண்டது ? பணக்காரன் வீட்டுப் பெண்ணல்லவா ? பணச் செருக்கு இல்லாமலா போய்விடும் ? மேலும் அவளா நமக்கு வேலை கொடுப்பவள் ..... நல்லப்பர் அல்லவா ?...நல்லப்பரைப் பார்ப்பதே ரொம்ப கஷ்டமாம்.

முத்து : எப்படி யிருந்தாலும் சுந்தரம் ! நீ அங்கே வேலைக்கு முயற்சி செய்யத்தான் வேண்டும். அங்குள்ள ரகசியங்களை அறியவும் சந்தடியில்லாமல் ஒரு புரட்சி உண்டாக்கவும் உன்னுடைய ஒத்தாசைதான் இப்போது ரொம்ப அவசியம்.

சுந் : என்னமோ பார்க்கலாம்.

முத்து : பார்க்கலாமா ! என்ன சுந்தரம் ? இதற்குள்ளாக தளர்ந்து விட்டாயே ! நீ உறுதியாக இருந்தால்தான் நாம் எண்ணுகிற புரட்சியை உண்டாக்கலாம். அப்போதுதான் உன்னை இப்படித் தவிக்கவிட்ட பண மூட்டைகளின் கொடுமைகளை ஒழிக்கலாம்.

சுந் : ஆம். இந்த பணக்கார ஆட்சியை ஒழிக்கத்தான் வேண்டும். அதில் எனக்குக் கொஞ்சம் கூடத் தளர்ச்சியில்லை. இருந்த சந்தேகமெல்லாம் இன்றோடு விட்டுவிட்டேன். முதலாளித்தனம் போகாமல் இந்த நாட்டு ஏழை மக்களுக்கு விமோசனம் வராது. புரட்சி வரத்தான் வேண்டும். அதற்காக நான் கஷ்டப்படத் தயாராகிவிட்டேன் ..... ஆனால்.

முத்து : 'ஆனால்' என்ன ! ..... நீ சொன்ன முறையிலே புரட்சி உண்டாக்குவோம். பயங்கரச் செயல்கள் இல்லாமல் பார்த்துக் கொள்வோம் ... அதுதானே உன் சந்தேகம் ? ... அதற்கென்ன ? உன் இஷ்டப்படியே செய்வோம்.

சுந்: சரி. அப்படியானால் நான் நல்லப்பரைப் பார்த்து ஒரு வேலைக்கு முயற்சிக்கிறேன் ..... வேலை கிடைத்தால் அங்கிருந்து அப்போதைக்கப்போது உனக்குத் தகவல்கள் அனுப்புகிறேன். சத்தமில்லாத ஒரு புரட்சி உண்டாக்கி, இந்தப் பணக்காரர்கள் சரணாகதி அடையச் செய்யவேண்டும்.

முத்து: சரி. ரொம்ப சந்தோஷம் ... இனி நாம் தூங்கப் போவோம்.

சுந்: [எதிரில் இருந்த கடிகாரத்தைப் பார்த்துவிட்டு] ... மணி ஒன்றுதான் ஆகிறது. நான் வீட்டுக்குப் போய்விடுகிறேன்.

முத்து: வேண்டாம் ... நீ இன்றிரவு இங்கிருந்துவிட்டு நாளை காலையில்தான் வீட்டுக்கு வருவாய் என்று உன்னுடைய தாயாருக்குச் சொல்லும்படி ஆள் அனுப்பிவிட்டேன்.

சுந்: பரவாயில்லை. நாம் பேசவேண்டியதெல்லாம் பேசியாகி விட்டது. நான் வீட்டுக்கே போய்விடுகிறேன். நான் போகா விட்டால் என் தாயாருக்குத் தூக்கம் வராது.

முத்து: சரி அப்படியானால் வீட்டுக்கே போ ...
[சுந்தரம் விடை பெற்றுக்கொண்டு புறப்படுகிறான்.]
(உடனே முத்துவீரப்பன்)

முத்து: ஆ! சுந்தரம்! கொஞ்சம் பொறு. இதோ வந்துவிட்டேன்.
(என்று சொல்லிவிட்டு பக்கத்திலிருந்த அறைக்குள் சென்று ஒரு ரிவால்வரையும், ஐந்நூறு ரூபாயையும் கொண்டுவந்து)

முத்து: இந்தா, இதை வைத்துக்கொள்.
(என்று சுந்திரத்திடம் கொடுக்கிறான். இன்னதென்று தெரியாமல் ரிவால்வரை வாங்கி அதைப் பார்த்துவிட்டுத் திகைப்படைந்து)

சுந்: எனக்கென்னத்திற்கு இது?

முத்து: எதற்கும் அது ஒன்று கையில் இருப்பது நல்லது. அதை நீ உபயோகிக்காவிட்டாலும் அது ஒரு தற்காப்பு. ஆபத்துக்கு உதவும்.

சுந்: ஐயோ! தற்காப்பா! இது எப்படி ஆபத்துக்கு உதவும்? ஆபத்தைத் தேடி அழைத்து வருவதே இதுதானே! எனக்கு ஒரு ஆபத்தும் இல்லை. எனக்கு வேண்டவே வேண்டாம் இது. ... இதை வைத்துக்கொண்டு நல்லப்பரிடம் வேலை கேட்கப் போகவா?

முத்து: சரி ... அது வேண்டாம் ... இதையாவது வாங்கிக் கொள்.

(என்று ரூபாய் நோட்டுகளைத் தருகிறான்.)

சுந்: இது வேண்டுமானால் ஆபத்துக்கு உதவும். இப்போதைக்குள்ள கவலைகளை உடனடியாகத் தீர்க்கும்.

(என்று சொல்லி சுந்தரம் ரூபாயை எண்ணி வாங்கிக் கொள்ளுகிறான். போகப் புறப்படுகிறான். இரண்டெட்டு நடந்து நின்று தயங்குகிறான். உடனே திரும்பி)

சுந்: முத்து! இதுகூட இப்ப வேண்டாம். பின்னால் வேணுமானால் வாங்கிக் கொள்கிறேன்.

(என்று திருப்பிக் கொடுக்கிறான்.)

முத்து: (அதை வாங்க மறுத்து) சுந்தரம் என்ன இப்படியெல்லாம் யோசிக்கிறாய்? நான் உன் நண்பன் அல்லவா? உன்னுடைய கஷ்டகாலத்தில் உதவி செய்ய எனக்கு உரிமையில்லையா?

சுந்: உரிமை உண்டு. ஆனால் இந்த சந்தர்ப்பத்தில் நீ அந்த உரிமை கொண்டாட வேண்டாம். நான் இதை இப்போது வாங்கிக் கொள்வது ஏதோ கூலிக்கு வேலை செய்ய ஒத்துக் கொள்வதுபோல் இருக்கிறது. மேலும் இது ஏழைகளிடத்திருந்து சந்தாவாக வசூலிக்கப்பட்டது. நான் ஒருவனே அதிலிருந்து இவ்வளவு தொகை எடுத்துக் கொள்வது சரியல்ல.

முத்து: பரவாயில்லை. இது சந்தாப் பணமல்ல. உனக்கு இப்போது பணம் மிகவும் அவசியம். இருக்கட்டும் வைத்துக் கொள்.

சுந்: பணம் மிகவும் அவசியம்தான். இருந்தாலும் இப்போது வேண்டாம். எனக்கு நல்லப்பரிடத்தில் வேலை கிடைக்காவிட்டால் அப்புறம் வாங்கிக் கொள்ளுகிறேன்.

(என்று பணத்தை அருகிலிருந்த மேஜையின் மேல் வைத்துவிடுகிறான்.)

முத்து: சரி. உன் இஷ்டம். நானேக்கே நல்லப்பரிடம் உனக்கு வேலை கிடைத்துவிடுமா?

சுந்: ஏன் கிடைக்கக் கூடாது? நானேக்கே முயற்சி செய்கிறேன்.

முத்து: சரி. உன் இஷ்டம்.

(சுந்தரம் போய்விடுகிறான்.)

காட்சி V

இடம்: சுந்தரத்தின் வீடு
காலம்: காலை

[' இன்ப மாளிகை ' ஹோட்டலில் இருந்து சுந்தரம் தன் வீட்டிற்குப் போகிறான். கதவைத் தட்டுகிறான். மகனைப்பற்றிய விசாரத்தால் தூக்கம் வராமல் விழித்துக்கொண்டிருந்த சுந்தரத்தின் தாயார் மீனாக்ஷியம்மாள் உடனே கதவைத் திறக்கிறாள். மகன் வந்துவிட்ட சந்தோஷத்தால் அந்நேரத்தில் அவனை ஒன்றும் கேட்க வேண்டாம் என்று எண்ணி, சுந்தரம் உள்ளே சென்ற பின் கதவைத் தாழிட்டுவிட்டு படுத்துக் கொள்ளுகிறாள். விடிந்து வெகுநேரம் கழித்து சுந்தரம் எழுந்தான். காலைக் கடன்களை முடித்துக்கொண்டு அரைகுறையாக கொஞ்சம் ஆகாரம் செய்துவிட்டு ஒரு நாற்காலியின்மேல் உட்கார்ந்து ஆழ்ந்த சிந்தனையில் இருக்கிறான். சுந்தரத்தின் தங்கைமார்கள் பள்ளிக்கூடம் போய் விட்டார்கள்.

மீனுட்சியம்மாள் மெள்ள வந்து அருகிலிருந்த பெஞ்சியின் மீது உட்காருகிறாள்: மீனுட்சி நெடுநாள் நோயாளியாக இருந்து சமீபத்தில்தான் சற்று குணமடைந்தவள். ரொம்ப பலஹீனமுற்றவள்.]

மீனுட்சி: சுந்தரம்! ஏண்டா சாமி? இப்படி என்னுமோ மாதிரியிருக்கிறாயே! எவ்வளவு கஷ்டம் வந்தாலும் கலங்கமாட்டாயே! உன்னுடைய உத்ஸாகம் ஒன்றுதானே என்னுடைய உயிரைக் காத்து வருகிறது. நீ நாளுக்குநாள் களையிழந்து இப்படி வாடிப்போவதைப் பார்க்கவா இந்த ஜன்ம மெடுத்தேன்? ஐயோ! (என்று கலங்குகிறாள்.)

சுந்: அம்மா! நான் என்னம்மா செய்வேன்! என்னையும் மீறி என் மனம் கொதிக்கிறது; என் உடல் பதைக்கிறது: உயிர் துடிக்கிறது.

மீனு: ஏன்? அப்படி என்ன வந்துவிட்டது நமக்கு?

சுந்: இன்னும் என்ன வரவேண்டும்? அம்மா! என்னை எவ்வளவு அருமையாகப் பெற்று வளர்த்துப் பாராட்டிச் சீராட்டிப் படிக்கவைத்தீர்கள்! நோய் கிடந்து செத்துப் பிழைத்த உங்களுக்கு ஒரு பாட்டில் 'டானிக்' மருந்து வாங்கித்தரக்கூட

நான் உதவியற்றவனாகிவிட்டேனே! மிச்சமிருந்த உங்களுடைய இரண்டொரு நகைகளாக் கூட அடகு வைத்துவிட்டேனே. அப்பாவின் அடையாளம் போல் இருந்த அவருடைய சட்ட புத்தகங்களை விற்றுச் சோறு தின்ன வேண்டிய கதிக்கு வந்துவிட்டோமே! ஆறு மாதமாக உங்களுக்கு நல்ல சோறு இல்லையே! போன நோய் வந்துவிடும் போல் இருக்கிறீர்களே! இதைவிட இன்னும் என்ன வர வேண்டும்?

மீனு: அதற்கென்னப்பா செய்யலாம். என்னுடைய கர்மத்தை நான்தானே அனுபவித்துத் தீரவேண்டும். அதற்கு நீ என்ன செய்வாய்?

சுந்: அம்மா! இந்த 'கர்மம்' 'கிர்மம்' என்கிற பேச்செல்லாம் எனக்குக் கசந்து போய்விட்டது.....அப்படித்தான் உங்கள் கர்மத்தை நீங்கள் அனுபவிக்கிறீர்கள் என்று வைத்துக் கொண்டாலும், என்னுடைய கடமை உங்களுக்கு எல்லா சௌகரியங்களையும் செய்து வைக்க வேண்டியது அல்லவா?

மீனு: ஏன்? நீ எனக்கு என்ன சௌகரியம் செய்யவில்லை? என்ன சௌகரியம் செய்யமாட்டாய்? இன்றைக்கு உனக்கு உத்யோகம் இல்லாததால் பணக்கஷ்டத்தால் இப்படியெல்லாம் நினைக்கிறாய். நாளைக்கு உனக்கு ஒரு வேலை கிடைத்து விட்டால் எல்லாம் சரியாகப் போய்விடும்.

சுந்: வேலை கிடைத்தால்தானே?

மீனு: ஏன், வேலை கிடைக்காமலா போய்விடும்?

சுந்: கிடைக்காது என்றுதான் தெரிகிறது. அம்மா, எனக்கு எனன ஆத்திரம் வருகிறது தெரியுமா? பார்க்காதவனையெல்லாம் பார்த்தாச்சு; பேசாதவனெடெல்லாம் பேசியாச்சு: கெஞ்சாத விதமெல்லாம் கெஞ்சியாச்சு.....அம்மா! இந்த முதலாளிகளின் பணத்திமிர் ஒழிந்தாலல்லாமல் என்னைப் போன்றவர்களுக்கு வேலையும் கிடைக்காது. இந்த நாட்டின் கோடானு கோடி ஏழைகளின் கஷ்டங்களும் தீராது. முதலாளித்தனம் தொலைய வேணும். பணக்கார வர்க்கம் ஒழிய வேண்டும்.

மீனு: பணக்கார வர்க்கம் ஒழிந்துபோனால் எல்லாம் தரித்திர வர்க்கம்தானே ஆகிவிடும்? அதனால் யாருக்கென்ன லாபம்? என்னடா குழந்தை! நீ கூட இப்படிப் பேச ஆரம்பித்து விட்டாயே! இத்தனை நாளும் இப்படிப்பட்ட பேச்சே உன் வாயில் வராதே! ஐயோ! இதென்ன விபரீதம். அடதெய்வமே!

சுந் : அம்மா! தெய்வம் - தெய்வம் - என்று தானே இத்தனை நாளும் நம்பினேன்? தெய்வம் இருப்பது உண்மையானால் நாம் இந்த கதிக்கு ஆளாவோமா?

மீனு : தெய்வம் இல்லாமலா போய்விட்டது? தெய்வம் இருக்கத்தான் செய்கிறது. நம்முடைய புண்ணிய பாவத்துக்குத் தகபடிதானே தெய்வமும் நமக்குப் படியளக்கும்?

சுந் : புண்ணியமாவது பாவமாவது!.....அம்மா! நீங்களும் அப்பாவும் செய்த புண்ணியம் கொஞ்சமா நஞ்சமா? லட்சம் லட்சமாகச் சம்பாதித்து, எங்கள் அப்பா எல்லாவற்றையும் புண்ணியம், புண்ணியம் என்று தான தர்மங்களுக்கே செலவு செய்துவிட்டுப் போனாரே! அந்த புண்ணியம் எங்கேம்மா?

மீனு : உன் அப்பா செய்த தருமம் அப்பாவுக்கு. அது நம்முடைய விதியை எப்படி மாற்றும்?

சுந் : அப்பா செய்த தருமம் அப்பாவுக்கே போகட்டும். அதைப் பற்றி எனக்கு சந்தோஷம்தான். ஆனால் அப்பாவைக் காட்டிலும் நீங்கள் தானே ஓடி ஓடி தருமம் செய்து புண்ணியம், புண்ணியம் என்று மகிழ்ந்தீர்கள். நானும் உங்களுக்கு உதவியாகத்தானே அந்த தானதர்மங்களை மனமார வாழ்த்தினேன். நாமடைந்த பலன் என்ன?

மீனு : இந்த ஜன்மத்தில் தானே அந்த புண்ணியங்களைச் செய்திருக்கிறோம். போன ஜன்மத்தில் நானும் நீயும் என்னென்ன பாவம் செய்தோமோ? அது விட்டு விடுமா? அதைத்தான் இப்போது அனுபவிக்கிறோம். தலையெழுத்து. விதியை வெல்ல முடியாதப்பா.

சுந் : அம்மா! எடுத்ததற்கெல்லாம் இப்படி புண்யம் - பாவம்; போன ஜன்மம் - இந்த ஜன்மம்; கர்மம் - தர்மம்; விதி - தலையெழுத்து என்று பேசிப் பேசித்தான் இந்த நாடு குட்டிச் சுவராய்ப் போனது. கோடிக் கணக்கில் பணம் வைத்துக் கொண்டு - ஏழைகளைச் சாகுகப் பிழிந்து அவர்களுடைய உழைப்பால் சுகபோகங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிற சோம்பேறிப் பணக்காரர்களெல்லாம் போன ஜன்மத்தில் தருமம் செய்த புண்ணிய மூர்த்திகளாக்கும்! சோறும், துணியும், நிற்க நிழலும் கூட இல்லாமல் தவிக்கின்ற ஏழைகளெல்லாம் போன ஜன்மத்தில் பாவம் செய்தவர்களாக்கும்? இதைப் பார்த்துக் கொண்டிருப்பவர் பகவானுக்கும்? இந்த வேதாந்தத்திலிருந்த நம்பிக்கை எனக்கு மேற்கொடு போய் விட்டது.

மீனு : யார் நம்பினாலும் சரி, நம்பாவிட்டாலும் சரி, பகவான் இருப்பது உண்மை. பாவம் - புண்ணியம் என்பவற்றின்

பலன்களும் உண்மைதான். போன ஜன்மம், தலையெழுத்து-விதி என்பனவற்றையும் நம்புகிறவர்கள் எக்காலத்திலும் உண்டு.

சுந்: அம்மா! பாடுபட்டு உழைக்கும் ஏழை மக்கள் பசிக்கொடுமையால் பதைபதைக்கிறார்கள். பணத்தையும் உணவுப் பொருள்களையும் பதுக்கி வைத்துக்கொண்டு இந்த சோம்பேறிப் பணக்காரர்கள் ஏகபோகமாகச் சுகிக்கிறார்கள். இதை மாற்ற வேண்டாமா?

மீனு: மாற்றினால் நல்லதுதான். அதற்கு நாமென்ன செய்ய முடியும்?

சுந்: நாம் எவ்வளவோ செய்ய முடியும்; செய்யத்தான் வேண்டும். தொழிலாளிகளையும் - உழவாளிகளையும் வசப்படுத்தி கட்டுப்பாடாக ஒரு புரட்சி உண்டாக்க வேண்டும். பணக்காரர்களும் முதலாளிகளும் அனுபவிக்கிற சுகங்களில் ஏழைகளுக்கும் பங்கு கொடுத்தே தீரவேண்டிய ஒரு நெருக்கடியை உண்டாக்க வேண்டும். அம்மா! நான் அதைச் செய்யப் போகிறேன்...நீங்கள்மட்டும்.....

மீனு: ஓஹோ! அதற்காகத்தான் நேற்று அந்தப் புரட்சிக்காரர்கள் கூட்டத்தில் சேர்ந்துவிட்டாயா?.....அப்பா! அது வேண்டாம்.....அது ஒரு பழிகாரக் கும்பல். அந்த அக்ரமங்களுக்கு நீ ஆளாகக்கூடாது? நம்முடைய குடும்பத்தின் கௌரவமே போய்விடும். உங்கள் அப்பாவின் பேருக்கு அபகீர்த்தி உண்டாக்காதே.....உன்னை நேற்று அந்தக் கூட்டத்தில் பார்த்த நிமிஷம் முதல் என் மனம் வெகு பாடுபடுகிறது. வேண்டாமடா சாமி. வேண்டாம். பணம் இன்றைக்கில்லாவிட்டாலும் நாளைக்கு வரும். குணம் போனால் வராது.

சுந்: அம்மா, நான் எந்தவிதமான அக்ரமத்தையும் செய்யமாட்டேன். இது சத்தியம். தந்தையின் பேருக்கு அபகீர்த்தியோ உங்களுக்கு வருத்தமோ வரக்கூடிய எதையும் செய்யமாட்டேன். நான் நினைக்கிற புரட்சி நீங்கள் சந்தேகிக்கிற மாதிரி அல்ல. இந்த நாட்டில் ஏழை மக்களுக்கு ஒரு விமோசனம் வர என்னாலான சேவைகளைச் செய்யத் தீர்மானித்து விட்டேன்.

மீனு: அந்தப் புரட்சிக்காரர்களோடு சேர்ந்தால் நீ நினைக்கிற முறையில் ஒன்றும் செய்ய முடியாது. கொலையிலும் கொள்ளைகளிலும்தான் கொண்டு போய் விட்டு விடும். வேண்டாமப்பா, அவர்களோடு சேராதே. நீ நினைக்கிற வழியில் புரட்சி ஒன்றும் நடத்த முடியாது.

சுந் : முடியாவிட்டால் நான் விட்டுவிடுவேன். நீங்கள் .துளிகூட சந்தேகிக்க வேண்டாம். ஆனால் என்னாலான முயற்சிகளை செய்யத்தான் போகிறேன்.

மீனு : அந்த சங்கடமெல்லாம் எதற்காக? நீ இன்னும் கொஞ்சம் பொறுமையோடு ஒரு உத்யோகம் தேட முயற்சி செய். பிறகு எல்லாம் சரியாகிவிடும். நான் சொல்வதைக் கேள்.

சுந் : ஆமாம்மா! நான் மிகவும் பொறுமையோடு ... உத்யோகம் தேடத்தான் நாளை ஒரு பெரிய முதலாளியிடம் போகப் போகிறேன். ஆனால் ஒரு புரட்சி உண்டாக்கியே ஆக வேண்டும். நீங்கள் மட்டும் ...

மீனு : அந்தப் புரட்சியைப் பற்றி இப்போது நினைக்காதே. முதலில் வேலை தேடு. நாளைக்கு எந்த முதலாளியிடம் போகப் போகிறாய்?

சுந் : நீங்கள் அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கிறீர்களே, அந்த முதலாளியிடம்தான்.

மீனு : யார்?

சுந் : நல்லப்பர்தான்.

மீனு : ஆமாப்பா, ஆமர்ம். அங்கே உனக்கு நிச்சயம் வேலை கிடைக்கும். ஆனால் நீ எப்போதும் போல நல்ல பிள்ளையாகவே நடந்து கொள்ளு. புதுசாக உன் மனசில் புகுந்திருக்கிற இந்த புரட்சி வேகத்தைக் காட்டி விடாதே.

சுந் : சரியம்மா, கடைசி கடைசியாக நல்லப்பரையும் கேட்டுப் பார்த்துவிடுகிறேன் ... ஆனால். அம்மா! நீங்கள் மட்டும் ...

மீனு : என்ன? நான் செய்ய வேண்டியது என்ன?

சுந் : எனக்கு வேலை கிடைத்து கொஞ்சம் சௌகரியங்கள் உண்டாகிற வரைக்கும் நீங்களும் தங்கைகளும் ... கொஞ்ச நாளைக்கு மாமாவுடன் அவர் வீட்டிலிருந்தால் நல்லது.

மீனு : எதற்காக?

சுந் : கொஞ்ச காலத்துக்கு அங்கே இருந்தால் உங்கள் உடம்பு தேறும். நானும் நிம்மதியாக வேலைக்கு அங்குமிங்கும் அலையலாம். நோயாளியான உங்களை இப்படி பட்டினி கிடக்க விட்டுவிட்டு நான் எங்கே வேலை தேடப் போனாலும் உங்கள் நினைப்பே வந்து வந்து வாட்டுகிறது. முதலில் உங்களுடைய சௌக்யத்தைத்தான் கவனிக்க வேண்டும்.

மீனு : என்னுடைய சௌக்யம் உன்னைத்திருப்பதுதான். உன்னைப் பார்த்துக் கொண்டுதான் இந்த உயிரை வைத்திருக்கிறேன்.

உன்னை விட்டுப் போனால் எனக்கு இந்த சந்தோஷம் கூட போய்விடும். நீ இங்கே வேலைக்காகத் தவிப்பது! நான் என் பிறந்த வீட்டிற்குப் போய் சுகப்படுவதா? சொம்ப நன்றியிருக் கிறது, உன் யோசனை?

சுந்: கொஞ்ச நாளைக்குத்தானே அம்மா. வேறெங்கே? ... உங் கள் தம்பி வீட்டுக்குத்தானே.

மீனு: என் தம்பி வீடுதான். உனக்கும் மாமா வீடுதானே? உங்கள் அப்பா போனதிலிருந்து என் தம்பி நம்மெல்லோரை யும் அங்கேயே வந்துவிடும்படி எத்தனை தரம் அழைத்தார்! நீ சம்மதிக்கவில்லையே! இப்போது எங்களை மட்டும் போகச் சொல்லுகிறாயே ... நீயும் வருவதாயிருந்தால் சரி, வா, போக லாம். நீ வேலையே தேடவேண்டாம்.

சுந்: அம்மா! நான் வேலையில் இருந்த போதாவது அந்த வேலையை நானாக விட்டுவிட்டு அங்கே போயிருந்தாலும் பாதகமில்லை. வேலையை இழந்துவிட்டு இந்த ஆறு மாச மாகத் தின்டாடிவிட்டு இப்போது அங்கே போவது மரியா தைக் குறைவு.

மீனு: எனக்கு மட்டும்?

சுந்: நீங்கள் நோயாளி. பிறந்த வீட்டில் கொஞ்ச நாளைக்கு விருந்தாளியாகப் போயிருக்க உரிமை உண்டு. நான் வேலை யிலிருந்து 'டிஸ்மிஸ்' ஆனவன். அங்கே வந்து நான் சும்மா சோற்றுளாக இருப்பது சரியல்ல.

மீனு: சோற்றுளாக இருப்பானேன். தம்பிதான் அவனுடைய நிலபுலன்களை யெல்லாம் நீயே பார்க்க வேணும் என்று சொன்னானே! ... அது மட்டுமா; அவனுடைய பெண் ராஜேஸ்வரியை உனக்கே தரவேணும என்று ... சொல்லிக் கொண்டே யிருக்கிறான் ... போன வருஷம் உன்னைக் கேட்ட தற்கு 'இப்போது என்ன கலியாணத்துக்கு அவசரம், பின் னல் ஆகட்டும்' என்று சம்மதம் போலப் பேசினாய் ... அடடா மறந்தே போனேன். நேற்று வந்த மாமா கடிதத்தைப் பார்க்கவில்லையே நீ?

சுந்: இல்லையே. மாமா என்ன எழுதியிருக்கிறார்?

மீனு: இரு, கடிதத்தைக் கொண்டு வருகிறேன். நீயே பார். (என்று கடிதத்தை எடுத்துவர மீனுட்சி எழுந்திருக்கிறாள். சுந்தரம் அவளைத் தடுத்து)

சுந்: வேண்டாமம்மா. அதற்காக நீங்கள் எழுந்துபோய் உடம்பை அலுக்கடிக்க வேண்டாம் ... கடிதம் வேண்டாம். சொன்னாற் போதும். மாமா என்ன எழுதியிருக்கிறார்?

மீனு : ராஜேஸ்வரியைப் பல இடங்களில் கேட்கிறார்களாம். அவளுக்குக் கல்யாணம் செய்துவிட வேண்டிய வயசாகி விட்டது. அவளை உனக்கே தரவேணும் என்று நான் வெகு நாளாகக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். உங்கள் அப்பாவும் ராஜேஸ்வரியைத்தான் உனக்கு விவாகம் செய்ய வேணும் என்று சொல்லிக்கொண்டே யிருந்தார்கள். ராஜேஸ்வரி தங்கமான பெண். அழகு, குணம், படிப்பு - எல்லாம் பொருந்தி யிருக்கிறது. அப்படிப் பெண் கிடைப்பது வெகு கஷ்டம் ... அவளும் உன்மேல் உசிராக உன்னையேதான் கட்டிக் கொள்வ தாகச் சொல்லிக் கொண்டிருக்கிறாள். நீயும் அவளையேதான் கல்யாணம் செய்து கொள்ளப் போவதாக சபதம் பேசினாய். உன் மாமாவுக்கும் உனக்கே கொடுக்கத்தான் இஷ்டம். நீ கேட்கிற போதெல்லாம் 'கலியாணத்துக்கு இப்போதென்ன அவசரம்' என்று தட்டிக் கழித்து வருகிறாய். அதற்காக மாமா உன் அபிப்ராயத்தை அறிய வேணும் என்று எனக்கு எழுதி இருக்கிறார்.

சுந் : அம்மா ! இப்போது எனக்குக் கலியாணத்தைப் பற்றிய சிந்தனையே இல்லை. ராஜேஸ்வரி தங்கமான பெண்தான். மாமா அவளை எனக்கே கொடுக்க நினைப்பதும சரிதான். ஆனால் எனக்குக் கல்யாணத்தைப் பற்றிய அவசரமே இல்லை.

மீனு : என் ?

சுந் : முதலில், எனக்கு இப்போது உத்தியோகம் இல்லை. இரண்டாவது : இன்னும் கொஞ்ச காலத்துக்காவது நான் இந்த நாட்டின் ஏழைகளுக்கு ஒரு விமோசனம் வரக்கூடிய முயற்சி களைச் செய்யத் தீர்மானித்துவிட்டேன். என் மனமெல்லாம் இப்போது அதிலேயே இருக்கிறது.

மீனு : ஏழைகளுக்காக நீ உழைப்பதை யாரப்பா வேண்டாமென் பார்கள்? கலியாணம் செய்துகொண்டு ஏழைகளுக்கு உப காரமான வேலைகள் செய்யக்கூடாதா ? அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம் ?

சுந் : அம்மா ! உங்களுடன் நான் எதிர் வாதம் செய்வது தகாது. உங்களை சொம்பக் கேட்டுக்கொள்கிறேன. இன்னும் கொஞ்ச நாளைக்கு இந்தக் கல்யாணப் பேச்சே வேண்டாம்.

மீனு : நான் மாமாவுக்குப் பதில் எழுத வேண்டாமா ? என்ன எழுதட்டும் ?

சுந் : 'அவசரப்படவேண்டாம்' என்று எழுதுங்கள்.

(இந்த சமயத்தில் யாரோ வீதிக் கதவைத் தட்டுகிறார்கள். சுந்தரம் எழுந்து போய்க் கதவைத் திறக்கிறான். அங்கே கோவிந்தன் விசனத்தோடு நிற்கிறான். அவனைக் கண்டு)

சுந் : என்ன கோவிந்தா, என்ன இந்நேரத்தில் வந்தது? வேலைக்குப் போகவில்லையா?

கோவி : வேலைக்குப் போனேன் ... போனேன் ... ஆனால் ... (என்று கலங்குகிறான்.)

சுந் : என்ன நடந்தது? ஏன் அழவேண்டும்?

கோவி : என்னை மூணு .... மூணு ... மூணு மாசத்துக்கு 'சஸ்பெண்டு' செய்துவிட்டார்களாம்.

சுந் : எதற்காக?

கோ : நேற்று நான் புரட்சிக் கூட்டத்துக்கு வந்ததற்காக.

சுந் : வெறும் வேடிக்கை பார்த்ததற்காகவா?

கோ : நானும் ஊர்வலத்தில் 'புரட்சி ஒங்குக' 'பணக்காரர் ஒழிக' 'முதலாளி ஒழிக' என்று சொன்னேனும்.

சுந் : நீ அந்த ஊர்வலத்தில் வரவில்லையே! செங்கோடன் மட்டும் தானே வந்தான்.

கோ : நான் கொஞ்சதூரம் வேடிக்கை பார்த்துவிட்டு வீட்டுக்குப் போய்விட்டேன். நான் ஒன்றும் வாயே திறக்கவில்லை சுந்தரம்! யாரோ போய் நானும் அதில் கத்திக்கொண்டு போனதாகப் பொய் சொல்லி விட்டார்கள். அதைக்கேட்டு ... சுந்தரம் ... என்ன அநியாயம்! இப்படி ஏழைகள் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்ளுகிறார்களே இந்த முதலாளிகள்!... நேற்று முத்துவீரப்பன் சொன்னது சரியாத்தானே போச்சு.

சுந் : பார்த்தாயா இந்த முதலாளி வர்க்கத்தின் பணத்திமிரை? நேற்று நான் புரட்சி வரத்தான் வேண்டும் என்று சொன்னதற்கு நீ வருத்தப்பட்டாயே, இப்பத் தெரியுதா?

கோ : ஆமப்பா, புரட்சி வரத்தான் வேணும். இந்த முதலாளித் திமிரை ஒழிச்சிக் கட்டினால்தான் தேவலை. முத்து வீரப்பன் சொன்னப்பிலே இன்னும் மூணு மாசத்துக்குள்ளே புரட்சி வந்துவிடுமா? வந்துட்டாதானப்பா நல்லது.

சுந் : மூன்று மாசமோ, மூன்று வாரமோ, மூன்று வருஷமோ; புரட்சி வரத்தான் வேணும். வந்தால்தான் இவர்கள் கொட்டம் அடங்கும். ஆனால் புரட்சி வரவேணுமானால் சொம்பப் பொறுமையோடு நாமெல்லாம் அதற்காகப் பாடுபட வேண்டும். நீயும் புரட்சியில் சேருகிறாயா?

கோ : ஐயோ! சுந்தரம் ... உனக்குத் தெரியாதா, நான் புள்ளை குட்டிக்காரன்; நீ கல்யாணமாகாதவன், கவலையில்லை. நான் எப்படி அதிலே சேருவது? வேணுமானால் நானும் சந்தா பணம் தருகிறேன்.

சுந்: நீ ஒன்றும் பகிரங்கமாகப் புரட்சியில் சேரவேண்டாம். மூன்று மாதம் கழித்து வேலை கொடுத்தால் போ ... ஆனால் நான் அப்போதைக்கப்போது சொல்லுகிறபடி சில முயற்சிகளுக்கு நீ உதவியாக இருந்தால் போதும்.

கோ: ஓ! பேஷா. அது வேணுமென்றால் செய்கிறேன்.

சுந்: சரி, அது போதும். நான் இன்றைக்காவது நாளைக்காவது மகிழ்ச்சிப்பட்டி பெரிய முதலாளி நல்லப்பரிடம் வேலை கேட்கப் போகிறேன். அங்கே வேலை கிடைத்தால் உனக்குத் தகவல் கொடுக்கிறேன். அதன் பின் நான் சொல்லுகிறபடி செய்.

கோ: சொம்ப நல்லது. ஆனால் நல்லப்பர் ஊரில் இல்லையே.

சுந்: ஊரில் இல்லையா?

கோ: இல்லை. இரண்டு நாளைக்கு முன் ஒரு வேலையாக அவருடைய ஆபீசுக்குப் போயிருந்தேன். அங்கே நல்லப்பர் பத்து நாளாக ஊரில் இல்லையென்றும், அவருடைய மகளுடைய கல்யாண விஷயமாக யாரோ ஒரு ஜமீன்தார் ஊருக்குப் போயிருக்கிறதாகவும் சொன்னார்கள். வருகிற புதன்கிழமை தான் வருவாராம்.

சுந்: சரி, அப்படியே புதன்கிழமைக்குமேல் போகிறேன்.

கோ: ஆமாம். அந்த நல்லப்பன் இந்த எல்லா முதலாளிகளைக் காட்டிலும் ரொம்பப் பொல்லாதவனுச்சே. புரட்சிக்காரரைக் கிட்ட அண்ட விடமாட்டார்களே. அவனுடைய பங்களா கிட்டகூடப் போவது கஷ்டமாச்சே.

சுந்: ஆமாம். அப்படித்தான் கேள்வி. இருந்தாலும் அவர் என் தகப்பனாருக்கு ரொம்பப் பழக்கமானவர். என்னையும் நன்றாக அறிந்தவர். போய்ப் பார்க்கிறேன்.

கோ: போய்ப் பார் ... இருந்தாலும் அவனெல்லாம் நேரத்துக்கு ஒரு வேஷம், நிமிஷத்துக்கு ஒரு கும்பிடுபோடுகிறவர்களைத் தானே விரும்புவான். உன்னைப்போல கண்ணியமானவர்களுக்கு அங்கே வேலை கிடைக்குமா?

சுந்: கிடைத்தால் கிடைக்கட்டும், கிடைக்காவிட்டால் போகட்டும். முயற்சி செய்து பார்ப்போமே. ஆமாம் ... நல்லப்பருடைய பெண்ணுக்கு கலியாணம் நிச்சயமாகிவிட்டதா?

கோ: அதெல்லாம் எனக்கொன்றும் தெரியாது — நல்லப்பர் பார்த்திருக்கிற மாப்பிள்ளை அவருடைய மகளுக்குப் பிடிக்க வில்லையாம். தகப்பனுக்கும் பெண்ணுக்கும் அதிலே தகராறு என்று அங்கே பேசிக் கொண்டார்கள். — சரி நான் போய் வருகிறேன். நல்லப்பரண்டை வேலை கிடைத்தால் என்னையும் கொஞ்சம் கவனித்துக் கொள்ள வேணும்.

சுந்: ஆஹா! அதற்கென்ன தடை.

காட்சி VI

இடம் : நல்லப்பருடைய மாளிகை
காலம் : அதிகாலை

[சுந்தரம் தனக்கு உத்யோகம் கேட்பதற்காக நல்லப்பரைப் பார்க்க வருகிறான். நல்லப்பருடைய வீடு வெகு கட்டுக் காவலுள்ள விலையுயர்ந்த மாளிகை. கோட்டை போன்ற அந்தக் கட்டிடத்தின் வெளிவாசலண்டை ராணுவ வீரர்கள் போல உடையணிந்த இரண்டு காவலாளிகள் ஆயுதபாணி களாகப் பாரா கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களிடம்]

சுந் : முதலாளி இருக்கிறாரா ?

முதல் காவலன் } எதுக்காக ?

சுந் : நான் அவரைப் பார்க்க வேணும்.

இரண்டாம் காவலன் } எஜமானை இப்போது பார்க்க முடியாது.

சுந் : ரொம்ப முக்யமான வேலையாக அவரைப் பார்க்க வேணும்.
(அழுக்கான உடையோடும்—சிரி விடாத சிகையோடும் கூவரம் செய்யாத முகத்தோடும் இருந்த சுந்தரத்தை ஏற இறங்கப் பார்த்துவிட்டு)

மு. கா : ஆமாம், ரொம்ப முக்கியமான வேலை ! ஆளைப் பார்த் தாலே தெரியுதே.....ஒங்க முக்யமான வேலை என்னண்ணு !

இ. கா : பிச்சை கேக்க வந்தவங்களெல்லாம் 'ரொம்ப முக்யமான வேலை' 'அவசரமான வேலை' இண்ணுதான் சொல்றுங்க.

சுந் : நான் பிச்சைக்காரனல்ல. இதோ இந்தச் சீட்டை உள்ளே அனுப்புங்கள். அதில் நான் யார் என்பதை எழுதியிருக் கிறேன். அதைப் பார்த்தால் உங்கள் எஜமான் என்னை உள்ளே விடச் சொல்லுவார்.

(என்று சுந்தரம் தன் விலாசம் எழுதிய துண்டுச் சீட்டை நீட்டுகிறான்.)

மு. க : அதுக்கெல்லாம் குமாஸ்தா வருவாரு. அவர்கிட்டே காமிங்க. தோ.....அப்படி ஓரமா இரு. குமாஸ்தா வந்தா சீட்டெ குடுக்கலாம்.....வச்சிருங்க.

(சுந்தரம் காவலாளி காட்டின ஓரத்துக்குப் போய் நின்று கொண்டு குமாஸ்தாவுக்காகக் காத்திருக்கிறான். சற்று நேரங்கழித்து உள்ளேயிருந்து வெகு ராஜரீகமாக உடை தரித்த ஒரு வாலிபன் வெளியேவருகிறான்.)

மு. கா : இந்தாய்யா! சீட்டெ அவரண்டை கொடு,உடச்சொன்னு உடுறேரும்.

(வெளியே வந்த வாலிபன் அங்கே ஒரு குமாஸ்தா. அவன் சுந்தரத்தை அறியாதவன். அவனிடம் சுந்தரம் தன்னுடைய விலாசச் சீட்டை கொடுக்கிறான். அவன் அதை வாங்கிப் படித்துப் பார்த்துவிட்டு)

குமாஸ்தா : முதலாளி பத்துப் பதினேந்துநாளாக ஊருக்குப் போயிருந்து நேற்று தான் வந்திருக்கிறார். அவசர வேலைகள் ரொம்ப பாக்கி. அவர் இப்போது புது மனுஷாள் யாரையும் பார்க்கமாட்டார். இன்னும் இரண்டு மூன்று நாளைக்கப்புறம் வந்தால் ஒரு வேளை பார்த்தாலும் பார்ப்பார்.

(என்று சீட்டைத் திருப்பிக் கொடுத்து விட்டு தன் ஜோலியாகப் போய்விடுகிறான். சுந்தரம் திகைத்து நிற்கிறான்.)

மு. க : ஏய்யா இன்னும் நிக்கிறே?.....குறுக்க.....வழியிலே. போயேன். .....போயிட்டு ரெண்டு நாள் களிச்சு வா. போ.

[சுந்தரம் வெகு ஏமாற்றத்தோடு திரும்பிப் போகிறான். எதிரில் மிகவும் பழக்கமான ராஜப்பா என்பவர் வருகிறார். ராஜப்பா நல்லப்பருடைய கச்சேரி விவகாரங்களைக் கவனித்துக் கொள்ளுகிற காரியஸ்தர். சுந்தரத்தின் தந்தை ஸ்ரீனிவாசனிடம் நல்லப்பருடைய வியாஜ்யங்கள் விஷயமாக அடிக்கடி வந்தவர். சுந்தரத்தை வெகு நன்றாக அறிந்தவர். வயசானவர். அவரைக் கண்டதும்]

சுந் : ராஜப்பா! நமஸ்காரம். என்னைத் தெரிகிறதா?

ராஜப்பா : (சுந்தரத்தைச் சற்று நேரம் உற்றுப் பார்த்து விட்டு) எங்கேயோ ரொம்ப பழகின முகமாத்தானிருக்கிறது.....சட்டுண்ணு நினைவுக்குவர்லேயே.....ஓ! அடடா! சுந்தரமா! சுந்தரம், என்ன இப்படி யிருக்கிறயே? கொஞ்சம்கூட அடையாளமே தெரிய வில்லையே! உன் கலையே மாறிப் போச்சே. உங்கப்பா இருக்கிறபோது பார்த்தது உன்னை. அப்போ ரொம்ப லக்ஷணமாயிருப்பையே! ஏன் இப்படி?

சுந் : ஒன்றுமில்லை, கொஞ்சநாளாக சௌக்யமில்லை.

ராஜ : ஏன் ? என்ன உடம்புக்கு ?.....உங்கம்மா சௌக்யமா . உத்தமின்னு உங்கள் தாயாரைத்தான் சொல்லவேணும்? எனக்கு ரொம்ப உபகாரம், உங்கப்பாவைக் காட்டிலும் உங்கள் தாயார்தான்.

சுந் : அம்மா ஒரு வருஷமாகப் படுத்திருந்து செத்துப் பிழைத்தார்கள். எனக்கும் அதுதான் பெருத்த விசனமாக இருந்தது.

ராஜ : இப்போ சௌக்யந் தானே ?

சுந் : சௌக்யம்தான். ஆனாலும் ரொம்ப பலவீனம்.

ராஜ : கொஞ்ச நாளைக்கு பலவீனமாகத்தானிருக்கும்...—சரி எங்கே வந்துட்டுப் போறே ?.

சுந் : நல்லப்பரைப் பார்க்கலாம் என்று வந்தேன்.

ராஜ : பார்த்தாச்சா ?

சுந் : இல்லே. காவலாளிகள் உள்ளே விடமாட்டோமென்கிறார்கள்.

ராஜ : உன்னைப்பற்றி அந்தப் பயல்களுக்கு என்ன தெரியும் ? வா. நான் விடச் சொல்றேன்.....ஆமாம் .....நல்லப்பரை என்ன காரியமாகப் பார்க்க வேணும்?

சுந் : நல்ல சம்பளத்தில் அவரிடம் ஏதாவது உத்யோகம் கேட்கலாமென்று வந்தேன்.

ராஜ : ஆஹா—நல்லாக் கேட்கலாம். உனக்கு நல்ல வேலை தர வேண்டியது அவர் கடமை. இப்பக்கூட எத்தனையோ உத்யோகம் அவரிடத்தில் காலியாக இருக்கிறது.....ஆனால் அவருடைய மாதிரியே இப்ப ரொம்ப மாறிப் போய்விட்டது. போக்கிரி, சாக்கிரி, பொய்சாட்சி தயார் செய்கிறவன்,—இவர்கள் தான் அவரிடம் காலந்தள்ள முடியும். யோக்கியர்களுக்கு அவரிடத்தில் கஷ்டம்தான்.

சுந் : அப்படியா ?

ராஜ : ஏன் ? என் மகன் **மோகனரங்கனை** உனக்குத் தெரியுமோல்லியோ ?

சுந் : அதென்ன அப்படிக் கேட்கிறீர்கள் ? மோகனரங்கன், நல்லப்பர் மகள் **வசந்தா**, நான்..... எல்லாம் ஹைஸ்கூலில் நாலைந்து வருஷம் சேர்ந்து படித்தவர்களாச்சே.

ராஜ : அது தெரியும்...மோகனரங்கன் படிப்புக்கே உங்கள் அம்மா அப்பாவும் தானே எனக்கு ரொம்ப உதவி செய்தார்கள்.

உனக்குத்தெரியாது. .....மோகனரங்கன் பி. ஏ. படிக்கும் போதுகூட உங்கள் தாயாரும் தகப்பனரும் எனக்கு ரொம்ப உபகாரம்செய்தார்கள்.....மோகனரங்கன் பி. ஏ. பாஸ் ஆன உடன் மூன்றுவருஷம் நல்லப்பரிடம் காரியஸ்தனாக இருந்தான். நல்லப்பருடைய குணம் அவனுக்குக் கொஞ்சங் கூடப் பிடிக்காமல் வேலையை விட்டு அவனாகவே நின்று விட்டான்.

சுந்: ஏன்?

ராஜ: மட்டு மரியாதை இல்லே. ஏழை வீட்டுப் பையன் என்று ஏளனமாகப் பேசுவது. பொய்க்கணக்கு, பொய்சாட்சி தயார் செய்யச் சொல்லுவது: இது தான்.....அவனுக்குப் பிடிக்க வில்லே.....நான் எவ்வளவோ சொல்லியும் கேட்கமாட்டேன் என்று நின்று விட்டான்.

சுந்: மோகனரங்கன் இப்ப என்ன செய்கிறான்?

ராஜ: இப்பவா? அவனுக்கு ஒரு அதிருஷ்டம் வந்தது. யாரோ ஒரு சினேகிதனும் அவனும் 'மோட்டார் கார்' உற்பத்தி செய்கிற படிப்புப் படிக்க.....அந்த சினேகிதன் செலவில் ரெண்டு பேரும் அமெரிக்காவுக்குப் போயிருக்கிறார்கள்.

சுந்: போய் எவ்வளவு நாளாச்சு?

ராஜ: அவன் போய் கிட்டத்தட்ட ரெண்டு வருஷமாச்சு?

சுந்: அப்படியா! எனக்கும் அப்படி ஏதாவது உதவி கிடைத்தால் போய் விடலாம்.....நீங்கள் இப்போது நல்லப்பரிடம் தான் வேலை பார்க்கிறீர்களா?

ராஜ: இல்லே நானும் அவரிடம் சம்பளமாக வேலைக்கிருந்ததை விட்டு நாலு வருஷமாச்சு. ஆனால் மனஸ்தாபம் இல்லே. வயசாச்சு என்று சாக்குச் சொல்லி விலகிக் கொண்டேன். அவரிடம் சுமார் இருபது வருஷம் இருந்தேன். அவருடைய கோர்ட்டு விவகாரங்களை யெல்லாம் நான் தான் பார்த்து வந்தேன். அதற்காகத்தான் உங்கள் அப்பாவிடம் அடிக்கடி வருவது.....

சுந்: அது எனக்குத் தெரியுமே.

ராஜ: தெரியுமோல்லியோ.....அப்படி உழைத்த எனக்கே பிடிக்காமல் தான்.....உங்கப்பா விலகின போதே எனக்கும் மனசு விட்டுப் போச்சு.....அப்படித்தான்...உழைப்புக்குத் தகுந்த கூலி உண்டா?.....லஞ்சம் என்றால் பத்தாயிரம் இருபதாயிரம், லட்சம்கூடத் தந்து விடுகிறார். உழைக்கிறவனுக்குக் கொடுக்கத்தான் மனசு வராது.....

சுந்: இப்போது நீங்கள் நல்லப்பரிடத்தில் இல்லையா?

ராஜ: இல்லை. ஆனாலும் அடிக்கடி அவரும் கூப்பிடுவார். நானும் போவேன். இப்பக்கூட அவருடைய பெண்ணின் கல்யாண விஷயமாக ஏதோ என்னைப் பார்க்க வேணும் என்று சொல்லியனுப்பினார். அங்கே தான் போறேன்.

சுந்: நான் அவரை வேலைக்காகப் பார்க்கட்டுமா, வாண்டாமா?

ராஜ: ஏம் பாரேன். இப்ப நல்ல சம்பளத்தில் சில வேலைகள் அவரிடம் காலி இருக்குது. அது கிடைத்தால் இப்போதைக்கு நல்லது தானே. வேண்டாமென்றால் பிறகு விட்டுவிடேன். உனக்கென்னமோ அவர் நல்ல வேலை கொடுத்து ஆதரிக்கத்தான் வேணும். உங்கள் அப்பா ஆதி காலத்தில் இவருக்கு எவ்வளவோ உதவி செய்திருக்கிறார்.....அது மட்டுமா: உங்கள் அப்பாவை இவர் அடித்துவிட ஏற்பாடு செய்திருந்த கேசில்கூட உங்கள் அப்பா மன்னிக்காவிட்டால் இவர் ஜெயிலுக்குப் போயிருக்க வேணுமே!

சுந்: அதைக் கொண்டா நான் வேலை கேட்பது?

ராஜ: அதற்கென்று நீ கேட்கக் கூடாது. ஆனால் அவர் அதை நினைத்துப் பார்க்க வேண்டாமா?

சுந்: நீங்களும் எனக்காகக் கொஞ்சம் சிபார்சுசெய்யுங்கள்.

ராஜ: கொஞ்சம் சிபார்சு என்ன? வேண்டிய மட்டும் சொல்லுகிறேன்..... ஆனால் முதலில் நீ அவரைப்பார்த்து கேட்டுக் கொள்ள வேணும். அப்புறந்தான் சிபார்செல்லாம் செல்லும். அவன் ஒரு முரட்டுப் பேர்வழி. உன்னைப் போலொத்தவர்களுக்கு, நீ கேட்காமல் நாடாகப் போய் முதலில் சொன்னால் 'அவனுக்கென்ன நீர் வக்கிலா? அவனுக்கு வாயில்லையா?' என்று எரிந்து விழுவான்.

சுந்: சரி, நானே அவரைக் கேட்கிறேன். நீங்கள் வந்து என்னை உள்ளேவிடச் செய்யுங்கள்.

ராஜ: சரி, வா போவோம்.....ஆனால் அவரை உடனே பார்த்து விட முடியாது. கொஞ்சம் பொறுமையோடு நீ காத்திருக்க வேணும். இப்ப அங்கே இருக்கிறவர்கள் எல்லாம் புது ஆட்கள். அதனால்.....

சுந்: எவ்வளவு வேணுமானாலும் பொறுக்கத் தயாராகத்தான் வந்திருக்கிறேன்.

[இருவரும் பங்களாவின் கேட்டுக்கு வருகிறார்கள். ராஜப்பாவை நன்றாக அறிந்த காவலர் அவருக்கு சலாம் செய்து கேட்டைத் திறந்து விடுகிறார்கள். ராஜப்பாவும்

சுந்தரமும் உள்ளே சென்றதும் முன்போல் கேட் மூடப் படுகிறது.

சுற்றுச்சுவர்களுக்கு உட்புறத்தில் (காம்பவுண்டுக்குள்) இருபுறத்திலும் அழகான பூச்செடிகள் வளர்க்கப்பட்டுள்ள வெகு அகலமான ஒரு பாதையில் சிறிது தூரம் சென்ற பின் அங்கே நல்லப்பருடைய மாளிகை இருக்கிறது. மாளிகையின் சுற்று முன்னில் இரு புறத்திலும் இரண்டு கட்டிடங்கள் தனியே இருக்கின்றன. அவற்றில் ஒன்று காரியாலயம் (ஆபீஸ்). மற்றொன்று முதலாளியை பேட்டிகாண வருகிறவர்கள் காத்திருக்க வேண்டிய ஒரு அலங்காரமான கூடம். அங்கே காத்திருந்து, உத்தரவு கிடைத்த பின் முதலாளியைப் பார்க்க வேணும். சில சமயங்களில் முதலாளியே அங்கு வந்து பேட்டிகொடுத்தாலும் கொடுப்பார்..... உள்ளே போனபின் ராஜப்பா சுந்தரத்திடம் :-]

ராஜ : சுந்தரம்! நீ அந்த 'வெயிட்டிங் ரூமில்' இரு. நான் ஆபீஸில் மானேஜருடன் பேசி உனக்கு பேட்டி கிடைக்கும் படிச் செய்கிறேன். நீ நல்லப்பரைக் கண்டு பேசினபின் நானும் உன்னைப் பற்றி அவரிடம் சொல்லுகிறேன்.

(ராஜப்பா ஆபீஸ் கட்டிடத்துக்குள் போய் விடுகிறார். சுந்தரம் சாவதானமாக நடந்து அங்குள்ள அலங்காரங்களைப் பார்த்துக் கொண்டே மாளிகையின் தலைவாசலுக்கு வருகிறான்... அங்கேயிருந்த ஒரு பெரிய காவல் நாய் இவனைக் கடித்து விடும் போல் பலமாகக் குரைத்துக் கொண்டு வந்து வழி மறிக்கிறது. சுந்தரம் அந்த நாய்க்குச் சிட்டிகை போட்டு சமாதானச் சைகைகள் செய்கிறான். உள்ளேயிருந்து ஒரு சேவகன் நாய் குரைப்பதைக் கேட்டு யாரோ புது ஆள் வந்திருப்பதை அறிந்து ஓடி வந்து நாயைச் சமாதானப் படுத்தி விட்டு)

சேவகன் : யாரையா அது? இங்கெங்கே வந்தே?

சுந் : முதலாளியைப் பார்க்க வந்தேன்.

சேவ : எஜமானைப் பாக்குணுமுண்ணு தோ! அங்கே போய் ஒக்காந்திருய்யா. இங்காரும் வரப்படாது.
(என்று வெயிட்டிங் கூடத்தைக் காட்டுகிறான்.)

[சுந்தரம் அந்த 'வெயிட்டிங் ஹாலுக்கு'ப் போய் அந்தக் கூடத்தில் வெகு விலையுயர்ந்த ரத்தினக் கம்பளம் விரித்திருப்பதையும், மிகவும் நவீனமான மேஜை நாற்காலிகள் இருப்பதையும், நாற்புறமும் சுவர்களில் அழகான சித்திரப் படங்கள் இருப்பதையும் பார்த்து விட்டு அங்குள்ள நாற்காலிகளில் ஒன்றில் உட்காருகிறான். சிறிது நேரத்துக்குள் ஒரு குமஸ்தா (முன் சந்தித்தவன் அல்ல வேறொரு குமஸ்தா) அங்கே வந்து]

குமா : யாரையா அது! இன்றைக்கு யாருக்கும் பேட்டி கிடைக்காது. எஜமான் வெளியூருக்குப் போகப் போகிறார். நேற்றே எனக்கு உத்தரவிட்டார். நீர் இங்கே காத்திருந்து பிரயோஜனமில்லை. நாளை மறுதினம் வாரும்.

சுந் : ராஜப்பா என்னை அழைத்துவந்தார். அவர் மானேஜருடன் சொல்லி எனக்கு பேட்டி ஏற்பாடு செய்யப் போயிருக்கிறார். என்னை இங்கே இருக்கச் சொன்னார் :

குமா : அப்படியா ? நீங்கள் யார் ?

சுந் : நான் உங்கள் எஜமானருக்கு மிகவும் பழக்கமான ஒரு வக்கீலுடைய மகன். என் பெயர் சுந்தரம்.

குமா : உங்கள் தகப்பனார் பெயர் ?

சுந் : ஸ்ரீனிவாசன் M. A., L. L. B. அவர் இப்போதில்லை.

குமா : ஓ! அந்த ஸ்ரீனிவாசருடைய மகனா நீங்கள்? அவர் தானே எங்கள் எஜமானுக்கு எதிர்க் கட்சியில் பொன்னுசாமி என்பவருக்கு அனுகூலமாக கேஸ் நடத்தினவர் ?

சுந் : , ஆமாம் - அதைப்பற்றி என்ன ?

குமா : ஒன்றுமில்லை.....உங்கள் தகப்பனாரைப்பற்றி என் தகப்பனார் ரொம்ப உயர்வாகப் பேசியதை நான் கேட்டிருக்கிறேன். என்னுடைய படிப்புக்குக்கூட உங்கள் தகப்பனார் மிகவும் உதவி செய்ததாக என் தந்தை சொல்லியிருக்கிறார்..... (தணிந்த குரலில்) நேற்று.....நல்லப்பர்.....உங்கள் தகப்பனாரை ரொம்ப திட்டிப் பேசிக் கொண்டிருந்தார்.....நீங்கள் இன்றைக்கு அவரைப் பேட்டி காண வந்திருக்கிறீர்களே..... என்று யோசிக்கிறேன்.

சுந் : நேற்று என் தகப்பனாரை நல்லப்பர் எதற்காகத் திட்டிப் பேசினார்?

குமா : நல்லப்பர் மேல் இப்போது ஒரு வியாஜ்யம் நடக்கிறது. அதில் ஐம்பது லட்சம் ரூபாய் கொடுக்க வேணும் என்று தாவா.....உங்கள் தகப்பனார் முன்னே நடத்தின வியாஜ்யத்தில் அவர் நல்லப்பருக்கு விரோதமாகத் தயார்செய்த சாட்சியங்கள் இப்போ இந்தக் கேசுக்கும் அனுகூலமாக இருக்கிறதாம்.....நேற்று இவருடைய வக்கீல் வந்து பேசிக்கொண்டிருந்தார்.....அப்போது.....உங்கள் தகப்பனாரை நிந்தித்தார்.

சுந் : என் தகப்பனார் தயார் செய்த சாட்சியங்கள் துளிகூட நியாயத்துக்கும் சத்தியத்துக்கும் விரோதமாக இருக்காதே?

குமா : அது சரி. நியாயமும்சத்தியமுந்தான் இந்த இடத்துக்குப் பிடிக்காதே!

(என்று ரகசியம் போல் சொல்லுகிறான். சுந்தரம் அதைக்கேட்டு மகிழ்ந்து, புன்முறுவல் செய்து)

சுந் : அவ்வளவு மோசமா இந்த இடம் ?

குமா : அடே! அப்பா!.....அதைச் சொல்லவே முடியாது. யோக்யனுக்கு இங்கே ஒரு நிமிஷங்கூட இருக்கப் பிடிக்காது. பொய் பித்தலாட்டம் - நயவஞ்சகம் - கூழைக்கும்பிடு- இதுகளுக்குத்தான் செல்வாக்கு. நானெல்லாம் - வயிற்றுப் பிழைப்புக்கு.....வேறே வழியில்லாமல்.....பல்லை கடிச்சுக் கொண்டு இருக்கிறேன்.....நேற்று ஒரு ஆசாமி வந்தார். பெரிய இடத்துக்கு லஞ்சம் கொடுத்து ஒரு காரியம் சாதிக்கிறேன் என்று சொல்லி..... நிமிஷத்திலே இருபதினாயிரம் ரூபாய் நோட்டாக எண்ணி வாங்கிக் கொண்டு போய் விட்டார்.....உழைக்கிறவனுக்கு ஒன்றுமில்லை.....நான் ஆறு மாசமாக என் கலியாணத்துக்கு ஒரு இரண்டாயிரம் ரூபாய்- அட்வான்சாக என் சம்பளத்தில் பிடித்துக் கொள்ளச் சொல்லிக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். அதற்கு மனசு வரலை!

சுந் : உங்களுக்கு இங்கே என்ன வேலை ?

குமா : நான் ஒரு டிராவ்ட்ஸ்மன் (Drfatsman); டைபிஸ்ட்டும்கூட. இன்னும் வேறு என்ன சொன்னாலும் செய்கிறேன். ஆனால் குனிந்து குனிந்து கும்பிடத் தெரியாது. பொய் பித்தலாட்டம் செய்யத் தெரியாது.....

சுந் : இந்த முதலாளிகளே எல்லாரும் இப்படித்தான். உழைக்கிறவர்களைக் கவனிப்பதில்லை. மோசக்காரர்களுக்குத்தான் தருவார்கள். இந்த நிலைமையை அடியோடு மாற்ற வேண்டும். இந்தப் பணக்காரருடைய கொட்டம் வெகு சீக்கிரத்தில் அடங்கப் போகிறது.

குமா : அதெங்கே சார்.....இப்போதைக்கு இவர்கள் கொட்டம் அடங்கு மென்று தோன்றவில்லை. மற்ற இடங்களிலாவது என்னமோ 'புரட்சி கிரட்சி' என்று பேச்சளவிலாவது சத்தம் கேட்கிறது. இங்கே அதுகூட முடியாது.

சுந் : ஏன், நாம் செய்வோம் அந்தப் புரட்சியை?

குமா : ஐயோ! நம்மால் அதை நினைக்கக்கூட முடியுமா?..... வாயைத் திறந்தால் வயற்றிலே மண் விழுந்துடும் சார்.

சுந் : நீங்கள் புரட்சியை விரும்புகிறீர்களா ?

குமர : அதை விரும்பாத குமாஸ்தாகூட உண்டா ?

சுந் : சரி. உங்கள் வயிற்றில் மண் விழுந்துவிடும்படியாக வாயை ஒன்றும் திறக்கவே வேண்டாம். சத்தமில்லாமல் ஒரு புரட்சி வருவதானால் உங்களுக்கு சம்மதம் தானே ?

குமா : ஓ ! சம்மதம்.

சுந் : உங்கள் பெயரென்ன ?

குமா : ராமநாதன்.

சுந் : வீடு எங்கே ?

குமா : அமீர் ராவுத்தர் தெரு, 73 நெம்பர்.

சுந் : இங்கே எவ்வளவு நாளாக வேலையில் இருக்கிறீர் ?

குமா : ஏழு வருஷமாக.

சுந் : உங்கள் முதலாளியின் மில்கள்—நிலபுலங்கள் இவற்றில் யாரார் எங்கெங்கே என்னென்ன வேலை செய்கிறார்கள் என்ற விபரங்கள் தெரியுமா ?

குமா : பெரும்பாலும் தெரியும்.

சுந் : நான் ஒரு புரட்சி உண்டாக்க வேண்டிய முயற்சிகள் செய்தால் உங்களாலான தகவல்களை எனக்குத் தந்து ஒத்துழைப்பீரா ?

குமா : ஓ !.....ஆனால் அது வெளியில் தெரியப்படாது.

சுந் : யாருக்கும் தெரியாதபடி நான் பார்த்துக் கொள்ளுகிறேன்.

குமா : சரி——எனக்கு வேறொரு அவசர ஜோலியிருக்கிறது. நான் சொன்ன விஷயம்——உங்கள் தகப்பனாரை எங்கள் முதலாளி திட்டின விஷயம்——நான் சொன்னதாக யாருக்கும் தெரியப்படாது.

சுந் : யாருக்கும் சொல்லமாட்டேன், சத்தியம்.

குமா : சரி. மறுபடியும் சந்திப்போம்.....உங்கள் வீடு எனக்குத் தெரியும். அங்கே வருகிறேன். விவரமாகப் பேசுவோம்.
(என்று குமாஸ்தா போய் விடுகிறான்.)

காட்சி VII

இடம் : நல்லப்பருடைய மாளிகையின் மாடியில் அவருடைய பிரத்யேக அறை.

காலம் : காலை.

[சுமார் 50 வயதுள்ள நல்லப்பர் ஒரு நிலைக் கண்ணாடியின் முன் நின்று வெளியே புறப்பட உடைகளை அணிந்து கொண்டு —அழகு பார்த்துக் கொள்கிறார். மேஜையின் மீதிருக்கும் 'டெலிபோன்' மணியடிக்கிறது. ரிஸீவரை எடுத்துப் பேசுகிறார்.]

நல்லப்பர் : ஹல்லோ ! யாரது ? .....

..... மானேஜரா ? ...

..... சரி, ராஜப்பா வந்திருக்கிறாரா ? ...

ஆல் ரைட். ராஜப்பாவை உடனே பாரிஸ்டர் ராஜாராம் வீட்டுக்குப் போகச் சொல்லும் ... சரியாக ஒன்பது மணிக்கு நான் வருவதாக ராஜாராமுக்குச் சொல்லியிருந்தேன். மணி எட்டே முக்கால் ஆகிவிட்டது. நான் கொஞ்சம் முருகேசர் வீட்டுக்குப் போக வேண்டியிருக்குது. அங்கே போய்விட்டு பத்தரை மணிக்குள் ராஜாராம் பங்களாவுக்கு வருவதாகச் சொல்லியனுப்பும். தஸ்தாவேஜுகளை உடனே பார்க்க வேணும் என்று ராஜாராம் சொல்லியிருந்தார். அவற்றையும் ராஜப்பாவிடம் கொடுத்து அனுப்பும். நான் வருகிறவரை ராஜப்பாவை ராஜாராம் பங்களாவிலேயே இருக்கச் சொல்லும் ... சரி ...

(ரிஸீவரை வைத்துவிட்டு மறுபடியும் கண்ணாடியில் அழகு பார்த்துக்கொண்டு புறப்படத் தயாராகிறார். நல்லப்பருடைய ஏக புத்திரியான வசந்தா ஒரு தட்டில் இட்டிலி, தோசை முதலானவற்றையும் ஒரு கூஜாவில் காப்பியும் எடுத்துக் கொண்டு அறைக்குள் வருகிறாள்.)

வச : அப்பா ! மணி ஒன்பதாகப் போகிறதே. இன்னும் காப்பி சாப்பிடவில்லையே !

நல் : எனக்குக் காப்பி மேலேகூட நினைப்பில்லேம்மா.

வச : எப்படி நினைவிருக்கும் ? உங்களுக்கு என்னேரமும் வியாஜ்யம். விவகாரம் ... பணம் ... இதுதானே நினைவு. என்னை

டும் ... அம்மாவோடும் ... கொஞ்ச நேரம் உட்கார்ந்து பேசக் கூட உங்களுக்கு நேரமிருக்கிறதில்லையே!;

நல்: எல்லாம் உனக்காகத்தான்.

வச: எனக்காக நீங்கள் சாப்பாடுகூட இல்லாமல் உடம்பைக் கெடுத்துக் கொள்ள வேணுமா? ... இருக்கிறது போதாதா எனக்கு?

நல்: சரி. நீ நவீன நாகரீகப் படிப்புக்காரப் பெண். உன்னோடு நான் தர்க்கம் பண்ணி ஜெயிக்க முடியாது ... எனக்கு வேறென்றும் வேண்டாம் ... பசியில்லை. கொஞ்சம் காப்பி மட்டும் கொடு.

(வசந்தா காப்பியை டம்ளரில் ஊற்றி ஆற்றிக் கொடுக்கிறாள். காப்பியை வாங்கிக் குடித்துவிட்டு)

நல்: ஏம்மா ... வசந்தம்! ... நான் சொன்ன விஷயத்தை யோசனை செய்தாயா? நான் செய்திருக்கிற ஏற்பாடு சரி தானே?

(வசந்தா பதில் பேசாமல் முகத்தைச் சுளிக்கிக் கொண்டு தலை குனிந்து கொள்ளுகிறாள்.)

நல்: ஏம்மா, பதிலே சொல்ல மாட்டேனென்கிறாயே!... நான் ... என்ன உனக்கு ... கெடுதலான காரியத்தையா செய்வேன்? ... அம்மா ... நீ தானே என் உசிரெல்லாம்.

வச: அப்பா நீங்கள் எனக்குக் கெடுதல் நினைப்பீர்கள் என்று நான் சொல்லுவேன்! நீங்கள் என்னை எவ்வளவு செல்லமாக வைத்திருக்கிறீர்கள் என்பதை அறிந்து கொள்ள முடியாத அவ்வளவு புத்தியில்லாதவளா நான்?

நல்: ரொம்ப சந்தோஷம். பின்னென்ன; நான் செய்கிற ஏற்பாட்டுக்கு நீ சம்மதித்தால் என்ன?

வச: (மறுபடியும் தலையைக் கவிழ்த்துக் கொண்டு மௌனம்.)

நல்: ஏம்மா, நான் சொல்லுவது உனக்குப் பிடிக்கவில்லையா?

வச: (மௌனம்.)

நல்: வசந்தா! நான் சொல்வதைக் கேள். அதனால் உனக்குக் கெடுதி வந்து விடாது ... நம்முடைய அந்தஸ்துக்கு உனக்குச் சரியான மாப்பிள்ளை கணேசர்தான். கிட்டத்தட்ட மூன்று கோடி ரூபாய் சொத்திருக்கிறது. உன் மேல் ரொம்பப் பிரியப்படுகிறார் ... அவர் வீட்டு மனுஷாளும் ரொம்ப நல்லவர்கள் ... ஏம்மா?

வச: (பதிலில்லை.)

நல் : உங்கம்மா கூட முதலில் அந்த இடம் தனக்குப் பிடிக்க வில்லே என்றுதான் சொன்னாள். இப்ப ... நேரே ... போய்ப் பார்த்த பிறபாடு அவளுக்கும் திருப்தியாகி விட்டது. அதனால்தான் அவளும் இன்னும் ஒரு வாரம் அங்கே தங்கி வரச் சம்மதித்தாள் ... விட்டு வந்தேன். நானும் உன் தாயாரும் விரும்புகிறபடி நீ ஒத்துக் கொள்ளக் கூடாதா? ஏம்மா. என்ன சொல்லுகிறாய்?

வச : (மௌனம்)

நல் : ஏம்மா பிரியமில்லேயா?

வச : (குனிந்தபடியே) எப்படியப்பா பிரியமிருக்கும்?

நல் : ஏன்?

வச : (தலையைச் சற்று நிமிர்ந்து) அப்பா, நீங்களும் அம்மாவும் பணத்தைமட்டும் மதிப்பிட்டு அதற்காகப் பிரியப்படுகிறீர்கள்.

நல் : பணத்தை மட்டுமல்ல. குணத்தையுங்கூட ...

வச : குணம் எப்படியோ...யார் கண்டது? அந்த வீட்டு மனுஷர் கள் நல்லவர்களாக இருக்கலாம் ...

நல் : ஏன்! கணேசரும் நல்லவர்தான்.

வச : இருக்கலாம்.

நல் : பின்னென்ன? பணமும், குணமும் இருந்துவிட்டால் வேறென்ன வேண்டும்?

வச : அப்பா நீங்களே சொல்லுங்கள். நான் பி. ஏ. பாஸ் செய்த வள். அவர் முதல் பாரத்திலேயே பெயிலாகி நின்றுவிட் டாராம். அது போனலும் தாரமிழந்தவர்.

நல் : அதனலென்னம்மா? வயசு முப்பதுதானே.. முதல் தாரம் இழந்துவிட்டவர்கள் மறுபடியும் கல்யாணம் செய்து கொள்வ தில்லேயா?

வச : அது மட்டுமல்ல. அவர் நடத்தையும் சரியில்லே என்று கேள்வி.

நல் : அதெல்லாம் பொய்யம்மா! சும்மா யாரோ விரோதிகள் கட்டிவிட்ட கதை.

வச : என்னேரம் பார்த்தாலும் சீட்டாடிக் கொண்டிருப்பதே தான் அவருக்கு வேலேயாம்.

நல் : அடேயப்பா! அது ஒரு பெரிய குற்றமா? பெரிய மனிதர் கள் எல்லாருந்தான் பொழுது போக்காக சீட்டாடுகிறார்கள்.

வச : (மௌனம். மீண்டும் தலை குனிந்து கொள்ளுகிறாள்.)

நல் : என்னமோம்மா. நானும் உங்கம்மாவும் வாக்குக் கொடுத்து விட்டோம். எங்கள் மூக்கை அறுத்துவிடாதே. அவ்வளவு தான்.

வச : என்னப்பா இப்படிச் சொல்லுகிறீர்கள்? இது உங்களுக்கே தர்மமா? எனக்குத் திருப்தியில்லாமல் நீங்கள் வாக்கு கொடுத்துவிட்டதற்காகவா நான் சம்மதிக்க வேணும்?

நல் : சரி. நீ அதிகப் படிச்சவள் ... உன் இஷ்டம் ... நன்றாக யோசனை செய்து பார் ... நான் அவசரமாகக் கொஞ்சம் வெளியில் போய் வரவேணும். இன்னும் நன்றாக யோசனை செய், போ...

(பதில் பேசாமல் — வசந்தா — கூஜாவையும் தட்டையும் எடுத்துக் கொண்டு சரேலென்று போய்விடுகிறாள்)

நல்லப்பர் : (டெலிபோனில்)

... ஹல்லோ! யாரது?
... ரோ ... கார் ரெடியாக இருக்கிறதா?
... சரி இதோ வருகிறேன்.

(அறையை விட்டு அதற்கு அடுத்த ஹாலுக்கு வருகிறார். அங்குள்ள பொருள்களை யெல்லாம் கவனித்துவிட்டு)

நல் : டேய் நஞ்சப்பா!

(உடனே ஒரு ஆள் — நஞ்சப்பன் — ஓடி வருகிறான். வணங்கி வாய் பொத்தி நிற்கிறான்.)

நல் : டேய். இந்த நாற்காலி, மேஜை இதுக்கெல்லாம் பாலிஷ் கொடுத்தது சரியாயில்லை. மறுபடியும் நல்லா தேய்த்து விட்டு அந்த கம்பெனிக்காரனை புது பாலிஷ் 'ஸ்விஸ்' மாடலாகக் கொடுக்கச் சொல்லு ...

(என்று சொல்லிக்கொண்டே போய், மாடிப்படிகளில் இறங்கி கீழே உள்ள ஹாலுக்கு வருகிறார். அங்கே அவருக்குப் பிரியமான ஒரு சீமைப் பூனை அதற்கென்று செய்யப்பட்ட ஒரு மெத்தையில் படுத்திருக்கிறது. அதை நீவிக் கொடுத்து விட்டு மறுபடியும்)

நல் : நஞ்சப்பா!

(நஞ்சப்பன் வருகிறான்.)

நல் : டேய்! நம்ம தையற்காரனிடம் சொல்லி இந்தப் பூனைக்கு வேறு புது மெத்தை உடனே தைக்கச் சொல்லு.

நஞ் : ஆகட்டும் எஜமான்.

(இதே சமயத்தில் அவருடைய பிரியமான **டைகர்** என்ற சீமை நாய் வாலைக் குழைத்துக்கொண்டு அவர்மேல் தாவுகிறது.)

நல் : டேய் நஞ்சப்பா! இந்த 'டைகர்' என்னுமோ ரொம்ப இளைத்து விட்டாற் போலிருக்கிறது. சிதம்பரம் எங்கே?.....அவனை நம்ம 'வெடரிநரி' டாக்டரைக் கூட்டி வரச் சொல்லி, நாய்க்கு உடம்புக்கு என்ன என்று கவனித்து, மருந்து கொடுக்கச் சொல்லு.

நஞ் : (வணங்கி, வாய் பொத்தி) ஆகட்டுங்க எஜமானே.

[நல்லப்பர் தலைவாசலைத் தாண்டி வெளியே வருகிறார். தனக்கு பேட்டிக்கு ஏற்பாடாகுமென்று காத்துக்கொண்டிருந்த சுந்தரம், நல்லப்பர் தலைவாசலை விட்டு வெளியே வருவதை ஜன்னல் வழியாகப் பார்த்து 'வெயிட்டிங்' கூடத்துக்கு அவர் வரலாம் என்று எதிர்பார்த்து நிற்கிறான். அங்கிருந்துகொண்டே நடப்பதை யெல்லாம் கவனிக்கிறான். அங்கே நல்லப்பருடைய விலையுயர்ந்த 'மோட்டார்கார்' தயாராக நிற்கிறது. அதில் ஏறப் போகிறார். அந்த வண்டியின் 'மட்காரட்' ஒன்றில் சிறிது அடிபட்டு கொஞ்சம் மினுமினுப்பு உதிர்ந்திருக்கிறது. உடனே டிரைவர் சஞ்சீவியைப் பார்த்து]

நல் : சஞ்சீவி!

சஞ் : எஜமானே!

நல் : என்ன, இங்கே பாலிஷ் போயிருக்கிறது?

சஞ் : நேற்று எஜமான், நீங்க ஓட்டிக்கொண்டு போனபோது எதிரில் மாட்டு வண்டி வந்ததுண்ணு ஒதுக்கினபோது, அந்தப் பாலத்திலே மோதிடிச்சிங்களே. அது.

நல் : ஓ! அதுவா!.....சரி, உடனே இதைக் கொண்டு போய் கம்பெனியில் விட்டு அதை சரி பண்ணச் சொல்லு. காசிமை ஓட்டிக்கொண்டு போகச் சொல்லு,.....இப்பப் போக அந்தப் புது 'டிஸாட்டோ' காரைக் கொண்டா.

[இந்த சமயத்தில் நல்லப்பரிடம் உள்ள மோட்டார் டிரைவர்கள் ஆறுபேர்களில் ஒருவனான கந்தன் என்பவன் நல்லப்பர் வீட்டுக்கு விறகு கொண்டு வர ஒரு லாரியை ஓட்டிக் கொண்டு போய் எங்கேயோ 'டாஷ்' அடித்து அவனுடைய கால் முறிந்து போய்விட்டதை என்று அவனைத் தூக்கிக் கொண்டு காம்பவுண்டுக்குள் இருக்கிற ஆஸ்பத்திரிக்கு வருகிறார்கள். அதையறிந்து பலபேர் அவனைப் பார்க்க ஓடுகிறார்கள். அதைக் கண்ட நல்லப்பர் அதை என்னவென்று விசாரிக்கச் சொல்லுகிறார். சஞ்சீவி ஓடிப்போய் விசாரித்து வருகிறான்.]

சஞ் : நம்ப டிரைவர் கந்தன் லாரியை எங்கேயோ 'டாஷ்' அடிச்சி அவனுடைய கால் முறிஞ்சி போச்சுங்க.

நல் : தெரியுமே எனக்கு! அந்த ராஸ்கல் நிதானமாக ஓட்டுவதே கிடையாது.....சரி, போய் காரைக் கொண்டா.....நேர மாச்சு.

[காசிம் அங்கு நின்ற காரை கம்பெனிக்கு ஓட்டிக்கொண்டு போகிறான். சஞ்சீவி உடனே போய் புதுக் கார் கொண்டு வருகிறான். நல்லப்பர் ஏறிக்கொள்ளுகிறார். கார் போய் விடுகிறது. நல்லப்பர் போனபின் கந்தன் காலொடிந்த விஷயத்தைக் கேட்டு அனுதாபக் கூட்டம் அதிகமாகிறது. வசந்தாவும் அவளுடைய தாயாரும் போவதற்குள்ள ஒரு தனி மோட்டாருக்கு டிரைவர் அந்தக் கந்தன். அதனால் அவனுக்குக் கால் ஒடிந்துவிட்டதை அறிந்த வசந்தா ஒரு வேலைக்காரியுடன் கந்தனைப் பார்க்க அந்த காம்பவுண்டுக்குள் மில்லுக்குச் சேர்ந்த ஆஸ்பத்திரிக்குப் போகிறாள். வசந்தாவைக் கண்டு சுந்தரம் தானும் அவள் போகிற பக்கம் போகிறான். வசந்தா ஆஸ்பத்திரிக்குள் போய்விடுகிறாள். சுந்தரம் வெளியிலிருந்த கும்பலோடு நின்றுவிடுகிறான். கந்தனுடைய காலுக்கு டாக்டர் கட்டுப் போடுகிற வரைக்கும் வசந்தா அங்கிருந்துவிட்டு வெளியே வருகிறாள். சுந்தரம் அவளுக்கு எதிரில் அவள் தன்னைப் பார்க்க வேணுமென்றே போகிறான். சுந்தரத்தை அடையாளம் தெரிந்து கொள்ளாமல் அவனை யாரோ மில் தொழிலாளி என்று எண்ணிக் கொண்டு வசந்தா பார்த்தும் பார்க்காது போல் ஒதுங்கிப் போகிறாள். வசந்தா வீட்டுக்குள் நுழையத் தலை வாசலண்டை போன உடன், இனி சும்மா இருந்தால் சந்திக்கக் கூடிய சந்தர்ப்பம் நழுவிவிடும் என்று,]

சுந் : வசந்தா! (என்று கூப்பிடுகிறான்.)

[தன்னைப் பேரிட்டுக் கூப்பிடக் கூடிய உரிமையுள்ளவர்கள் அங்கே யாரும் இல்லாததால் திடுக்கிட்டு வசந்தா திரும்பிப் பார்க்கிறாள். வசந்தாவைப் பெயர் சொல்லி யாரோ கூப்பிட்டதை அறிந்து அங்குள்ள வாசல் காப்போன் "யாரடாது? அம்மாளைப் பேர் சொல்லிக் கூப்பிட்டுப் பின்னலியே வர்றே" என்று மிரட்டுகிறான். வசந்தா அந்தக் காவலனை சும்மா இருக்கச் சொல்லிவிட்டு]

வச : யாரது? என்ன வேணும்?

சுந் : வசந்தா! என்னை அடையாளம் தெரியவில்லையா?

வச : (சுந்தரத்தின் கிட்ட வந்து அவனை உற்றுப் பார்த்துவிட்டு) சுந்தரமா?

சுந் : ஆம் பார்த்துப் பல வருஷமாச்சல்லவா? அடையாளம் சிக்கிரம் தெரியாது! (என்று சிரிக்கிறான்.)

வச : ஐயையோ ! சுந்தரம் என்ன இப்படி உருக்குலைந்து போயிருக்கிறீர்களே ! பல வருஷமா ! எத்தனை வருஷம் ஆனாலும் உங்களை நான் மறக்க முடியுமா ? உங்கள் அடையாளமே முழுக்க மாறிப் போய் விட்டதே ! என்னோடு படித்த சுந்தர உருவமா இது ? நீங்கள் சிரித்த பிறகுதான் அந்தச் சிரிப்பில் கொஞ்சம் அடையாளம் கண்டேன். குரல் கூட மாறிப் போச்சே! ஏன் இப்படி ?

சுந் : அதெல்லாம் சாவகாசமாகப் பேசவேண்டிய விஷயம்.

வச : சாவகாசமாகவே பேசலாம் வாங்க. இப்போ எனக்கு ரொம்ப சாவகாசம்தான். உள்ளே போகலாம். அப்பாகூட இல்லை.

சுந் : அம்மா சௌக்யமா ?

வச : அம்மா சௌக்யந்தான். அம்மா அடிக்கடி உங்களைப் பற்றி விசாரிப்பதுண்டு. ஆனால் அம்மாவும் இப்போ ஊரில் இல்லை.

சுந் : எங்கே போயிருக்கிறார்கள் ?

வச : சொல்றேன், வாங்க.

(என்று சுந்தரத்தை அழைத்துக் கொண்டு இருவரும் மாடிக்குப் போகிறார்கள். வழியில் தன்னுடனிருந்த வேலைக்காரியைப் பார்த்து)

வச : செல்லம்மா ! நீ போய் சுடச்சுட டிபனும் நல்ல காப்பியும் வாங்கிக்கொண்டு என் ரூமுக்கு வா.

(செல்லம்மா போகிறாள்.)

காட்சி VIII

இடம்: வசந்தாவின் பிரத்யேக 'ரூம்'
காலம்: முற்பகல்

[சுந்தரத்தை வசந்தா தன்னுடைய பிரத்யேக அறைக்கு அழைத்துக் கொண்டு போகிறாள். அந்த அறை மாடியின் பின் பகுதியிலுள்ளது. சுந்தரத்தை ஒரு நாற்காலியில் உட்காரச்சொல்லி வசந்தாவும் எதிரில் இன்னொரு நாற்காலியில் அமருகிறாள்.]

வச: இப்போ சொல்லுங்கள்— சாவகாசமாக— ஏன் இப்படி வாடி, வதங்கி, மெலிந்து, போயிருக்கிறீர்கள்? நாம் பள்ளிக் கூடத்தில் படிக்கிறபோது இருந்த உங்கள் வசீகரமான வடிவம் எப்போதும் என் மனதில் இருந்து கொண்டேயிருக்கிறது. அந்த கெம்பீரமான உருவத்துக்கும்— இப்போதிருக்கிறதற்கும் ஐயோ!... எவ்வளவு வித்யாசம்!

சுந்: வசந்தா! உன் கேள்வியே என்னைப் பூரிப்படையச் செய்கிறது. நீ என்னை முற்றிலும் மறந்திருப்பாய் என்று நினைத்தேன்.

வச: மறப்பேனா? மறக்கவே முடியாத உதவி செய்த உங்களை மறக்க முடியுமா? நீங்களில்லாவிட்டால் என்னை அந்த மாடு முட்டிக் கொன்றிருக்குமே! என் வயிற்றைக் கிழித்திருக்க வேண்டிய கொம்பு உங்கள் தோளைக் கிழித்தது... மூன்று மாதம் கட்டுக் கட்டிக்கொண்டு படுத்திருந்தீர்களே! அது மறந்து போகுமா? அந்த தழும்புகூட இன்னும் இருக்குமே?

சுந்: (தன் தோளில் மாடு முட்டிக் கிழித்த தழும்பைக் காட்டி) இந்தத் தழும்பைப் பார்க்கும்போதெல்லாம எனக்கு உன் நினைவு வரும்.

வச: எனக்கு ஒரு தழும்பும் இல்லாமலேயே அடிக்கடி உங்கள் நினைப்பு வரும்!

சுந்: வருமா?

வச: என் வராது? என் உயிரையே காப்பாற்றின உங்கள் நினைப்பு வராமற் போகுமா? பத்து நாளைக்கு முன்னால் கூட என் அம்மாவும் நானும் அதைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். நேற்றுகூட ... நீங்கள் எனக்குப் பரிசாகத் தந்த

'ஷேக்ஸ்பியர்' 'திருக்குறள்' 'கம்ப ராமாயணம்' இந்த மூன்று புத்தகங்களையும் எடுத்துப் பார்க்க நேர்ந்தது. அப்போது உங்கள் நினைவும் மோகனரங்கர் நினைவும் வந்தது. இந்த மூன்று புத்தகங்களையும் நீங்கள் மோகனரங்கர் மூல மாகத்தானே எனக்குப் 'பரிசு' என்று அனுப்பினீர்கள்— நினைவிருக்கிறதா?

சுந்: ஆஹா! நினைவிருக்கிறது.

வச: சரி நான் கேட்டதற்கு பதில் சொல்லவில்லையே? ஏன் இப்படி இளைத்து வெளுத்து என்னமோ போல இருக் கிறீர்கள்? அதைச் சொல்லுங்கள் முதலில்.

சுந்: அதைக்... கேட்பானேன்? தரித்திரம்தான்.

வச: தரித்திரமா! ஐயோ! நீங்கள் நல்ல உத்யோகத்தில் இருக்கிறதாகக் கேள்விப் பட்டேனே!

சுந்: நல்ல உத்யோகம் ஒன்று மில்லை. ஒரு உத்யோகத்தில் தான் இருந்தேன். இப்போது அந்த உத்யோகமும் இல்லை.

வச: ஏன்?

சுந்: என்னை 'டிஸ்மிஸ்' செய்து விட்டார் முதலாளி.

வச: எதற்காக?

சுந்: முதலாளிகள் தொழிலாளிகளிடத்தில் கருணையோடு நடந்துகொள்வதில்லை; அதனால் நாட்டில் புரட்சி உண்டாகும் என்று நான் ஒரு சபையில் பிரசங்கம் செய்தேன். அது அவருக்குப் பிடிக்கவில்லை.

வச: அதற்காகவா? அதிலென்ன தப்பு?

சுந்: உனக்கும் எனக்கும் அதில் தப்பில்லை. முதலாளிகளுக்கு இது பெரிய தப்புதான்.

வச: சரி, இப்போது என்ன செய்கிறீர்கள்?

சுந்: என்ன செய்வது? வேலையில்லாமல் திண்டாடுகிறேன்.

வச: எவ்வளவு நாளாக?

சுந்: ஆறுமாதமாக. நானும் எங்கெங்கேயோ வேலைக்காக அலைந் தலைந்து பார்த்து விட்டேன்... என் தகப்பனார் இறந்த போது கடன்தான் மிச்சம். உள்ளதையெல்லாம் விற்றுக் கடன்களைத் தீர்த்துவிட்டு என்னுடைய சம்பளம் இருநூறு ரூபாயில்தான் குடும்பம் நடந்து வந்தது. என் தாயார் ஒரு வருஷமாக மிகவும் அசௌக்யமாகப் படுத்துவிட்டார்கள்.

வச : உங்கள் தாயாரா ?

சுந் : ஆம். அவருக்கு வைத்தியம் செய்யக்கூட ரொம்ப கஷ்டப் பட்டுப் போனேன். அம்மா இனி பிழைக்கமாட்டாள் என்ற நிலைமை வந்து.....

வச : அப்பறம் ?

சுந் : எப்படியோ தப்பிப் பிழைத்தார்கள்.

வச : இப்போ சௌக்கியந்தானே ?

சுந் : சௌக்யம் என்ன ? படுக்கையாக இல்லை ; அவ்வளவுதான். கொஞ்ச காலத்துக்கு நல்ல ஆகாரமும் புஷ்டிதரக்கூடிய 'டானிக்'கும் தந்தால் பூரா சௌக்யம் அடைவார்கள்.

வச : ஏன் ? நல்ல 'டானிக்' வாங்கித் தருகிறதுதானே ?

சுந் : சோற்றுக்கே எங்கப்பாவுடைய சட்ட புத்தகங்களை விற்க வேண்டியிருந்தது. டானிக் வாங்கப் பணமேது ?

வச : ஐயையோ ! அப்படியா !

சுந் : ஆம், அதுதான் இப்போதுள்ள நிலைமை. நீ என்னை வரவேற்ற மாதிரியில் நாம் பள்ளிக்கூடத்தில் படிக்கிற காலத்தில் நீ என்னிடம் வைத்திருந்த பிரியம் கொஞ்சம் கூடக் குறையாமல் இருப்பதைக் கண்டு கூசாமல் என்னுடைய தரித்திர நிலைமையைச் சொல்லுகிறேன்.

வச : ஒரு வார்த்தை... யார் மூலமாகவாவது... எனக்காவது... என் தாயாருக்காவது நீங்கள் சொல்லியனுப்பியிருந்தால் உங்களுக்கு வேண்டிய உதவி அனுப்பியிருப்பேனே ! என் நான் இருப்பதை நீங்கள் நினைக்கவேயில்லை ?

சுந் : உன்னை நான் நினைக்காமலில்லை. உன்னுடைய நல்ல குணத்தையும், நீ என்னோடும் மோகனரங்களோடும் வெகு இனிமையாகப் பேசி, சிரித்து விளையாடிக்கொண்டிருந்த காலத்தையும் நான் அடிக்கடி எண்ணி யெண்ணி ஆனந்தப் படுவதுண்டு. ஆனால் உன் தந்தைக்கும் என் தந்தைக்கும் கடைசி காலத்தில் உறவு முறிந்துபோய்விட்டதல்லவா ?

வச : ஆமாம்; அதனாலென்ன ?

சுந் : உங்கப்பா எங்கப்பாவை ஒரு விரோதியாகவே நினைக்க ஆரம்பித்தார். அது உனக்குத் தெரியுமோ என்னமோ ?

வச : நன்றாகத் தெரியும். நானும் உங்களோடு படித்தவள் தானே! நானென்ன, ஒன்றும் தெரியாத குழந்தையா ?

சுந்: (கொஞ்சம் உத்ஸாகமாக) இல்லே; நீ குழந்தையல்ல; என்னோடு படித்த பெண்தான். எனக்கும் மேலான அறிவாளிதான்... உன் தகப்பனார் என் தகப்பனாரை விரோதியாகப் பாவித்துவிட்டதால்...ஒருக்கால்... நீயும்...

(என் நிறுத்தி புன்சிரிப்பு செய்கிறான்.)

வச: நானும் உங்களை எங்களுக்கு விரோதி என்று எண்ணி விடுவேனுக்கும்?

சுந்: நீ அப்படி எண்ணவில்லை என்பது இப்போதுதானே எனக்கு விளங்குகிறது? நாம் சந்தித்துப் பல வருஷமாச்சே, இடையில் நீ எப்படி மாறியிருக்கிறாயோ என்றுதானே நான் நினைக்க முடியும்? உங்கப்பா எங்கப்பாவை ஏதாவது நிந்தித்துப் பேச நேரிட்டு அதைக் கேட்டு நீயும் உங்கப்பாவுக்காக எங்களை நிந்தனையாக நினைத்துவிடக்கூடுமல்லவா?

வச: அதென்னமோ வாஸ்தவந்தான். நேற்றுக்கூட ஏதோ ஒரு வியாஜ்யம் விஷயமாக எங்கப்பா உங்கப்பாவை வெகு கோபத்தோடு திட்டிக்கொண்டிருந்தார்... ஆனால் பணத்தைப் பற்றிய விஷயம் வருகிறபோது எங்கப்பா மற்ற நியாயங்களை மறந்துவிடுவார் என்பது எனக்குத் தெரியும். அதனாலே...

(இந்தச் சமயத்தில் வேலைக்காரி செல்லம்மாள் ஒரு தட்டு நிறைய இட்லி தோசை முதலானவற்றையும், கூஜாவில் காப்பியும் கொண்டு வருகிறாள். அதை வசந்தா வாங்கி மேஜையின் மேல் பரிமாறி, பக்கத்தில் ஒரு நாற்காலியைத் தானே எடுத்துப் போட்டு,)

வச: வாங்கோ. கொஞ்சம் ஆகாரம் செய்யுங்கள்... எங்கள் வீட்டில் நீங்கள் சாப்பிட்டு வெகு நாளேச்சே.

சுந்: ஆம்... அதுவும் நீ பரிமாறி நான் சாப்பிட்டு ரொம்ப நாளாச்சு. நீ பெண்கள் காலேஜில் சேர்ந்த பிறகு ஒரு சமயத்தில் வந்திருந்தாயே, அப்போது நானும் மோகனரங்கனும் உன்னைப் பார்க்க வந்தபோது நீயே எங்களுக்குப் பரிமாறினாய்! ஞாபகமிருக்கிறதா?

வச: ஞாபகமிருக்கிறது. இன்றைக்கும் அதே மாதிரிதான் என்று நினைத்துக் கொள்ளுங்கள்.

(சுந்தரம் மேஜைக்கருகில் வசந்தா போட்ட நாற்காலிக்கு வந்து உட்காருகிறான். உட்காரும்போது)

சுந்: ரொம்ப சந்தோஷம். வசந்தா! இன்று காலையில் நான் வீட்டைவிட்டுப் புறப்படும்போது உன்னைப் பார்க்க முடியுமோ என்னவோ என்று வெகு விசாரத்தோடு வந்தேன். உன்னுடைய அன்பு என் மனதிலிருந்த கவலைகளையெல்லாம் மாற்றிவிட்டது.

வச : எனக்கும் உங்களைப் பார்த்த உடனே மனதிலிருந்த ஒரு பெருங் கவலை மறைந்துவிட்டது.

சுந் : உனக்குக் கூடவா கவலை? உனக்கென்ன விசாரம்?

வச : உங்கள் கவலை... உங்கள் தகப்பனார் பணத்தை லக்ஷியம் செய்யாமல் வாழ்ந்துவிட்டதால் வந்தது. என்னுடைய விசாரம்... என்னுடைய தகப்பனார் பணம் ஒன்றையே வாழ்க்கையின் லக்ஷியமாக நினைப்பதால் வந்தது.

(என்று சொல்லிக்கொண்டே வசந்தா அருகிலுள்ள 'ரிஃப்ரிஜி ரேட்டரை' (Refrigerater) திறந்து அதிலிருந்து ஆரஞ்சு, கொடிமுந்திரி, வாழை முதலான பழங்களிற் சிலவற்றை எடுத்து, உரித்து சுந்தரம் உண்ண மேஜையின் மீது வைக்கிறாள்.)

சுந் : என்ன வசந்தா! நீ சொல்லுவது விளங்கவில்லையே. உன் தகப்பனார் பணத்தை லக்ஷியம் செய்வதனால் உனக்கென்ன கவலை?

வச : எனக்கா? அதனால் என்னுடைய வாழ்க்கையின் லக்ஷியமே கெட்டுப்போய்விடும் போலிருக்கிறது.

சுந் : உன்னுடைய வாழ்க்கையின் லக்ஷியம் என்ன?

வச : என்னுடைய லக்ஷியமா... அதைச் சொல்ல எனக்கு வெட்கமாக இருக்கிறது!

(என்று நாணித் தலை குனிந்து சற்று நேரம் மௌனமாக இருந்தவிட்டுப் புன்சிரிப்போடு நிமிர்ந்து சுந்தரத்தைப் பார்க்கிறாள்.)

சுந் : உன் லக்ஷியத்தைச் சொல்லுவதில் என்ன வெட்கம்?

வச : சரி... உங்களிடத்தில் சொல்ல எனக்கென்ன வெட்கம்?... எனக்குக் கல்யாணப் பேச்சுகள் நடக்கிறது.

சுந் : ஓ! உன் கல்யாணப் பேச்சா! அப்படிச் சொல்லு. வெட்கப் படுவது சகஜந்தான். ஆனால் அதிலென்ன உனக்குக் கவலை?

வச : யாரோ **கணேசராம்.** கோடீச்வரனும். வயசு மூப்பதுக்கு மேலிருக்கும்..... அவருக்கு என்னை இரண்டாந்தாரமாகக் கொடுத்துவிட அப்பா விரும்புகிறார். அந்த கணேசரை உங்களுக்குத் தெரியுமா?

சுந் : அவரை எனக்குத் தெரியாது. ஆனால் கணேசர் என்ற பேருள்ள ஒரு பெரிய பணக்காரர் இருக்கிறதாகக் கேள்விப் பட்டிருக்கிறேன்.

வச : பணம் ஒன்றுதான் அவருக்குள்ள சிறப்பு. அப்பாவுக்குப் பணம் ஒன்றுதான் லக்ஷியம். நாலைந்து மாசமாக தினந் தினம் அப்பா என்னை இதற்குச் சம்மதிக்கச் சொல்லி கட்டாயப்படுத்துகிறார்.

சுந் : உங்களம்மா என்ன சொல்லுகிறார்கள் ?

வச : அம்மா என்ன செய்வாள் பாவம்! இத்தனை நாளும் அம்மாளுக்கும் அது பிடிக்காமலிருந்தது. இப்போ அப்பா வுடைய முயற்சியால் அம்மாளுக்கும் அது இஷ்டம் என்று கேள்வி.

சுந் : கேள்வியா ! அம்மா உன்னிடம் சொல்லவில்லையா ?

வச : அம்மா ஊரில் இல்லையே? பத்துப் பதினைந்து நாளைக்கு முன்னால் அப்பா அம்மாவைக் கட்டாயப்படுத்திக் கூட்டிக் கொண்டு இருவருமாக அந்த கணேசர் ஊருக்குப் போனார்கள். அம்மாவை அங்கேயே விட்டுவிட்டு ஐயா மட்டும் ஏதோ ஒரு கேஸ் விஷயமாக மூன்தாள் இங்கு வந்தார். அம்மாவுக்கும் அந்த கணேசருக்கு என்னைக் கொடுத்துவிடப் பிரியம் வந்திருப்பதாக அப்பாதான் சொல்லுகிறார்.

சுந் : உனக்கு அந்த மாப்பிள்ளை பிரியமில்லையா ?

வச : எனக்கா ! துளிகூடப் பிரியமில்லை. என்னுடைய லக்ஷியத் துக்கும் இவருக்கும் ஏரோப்பிளேனில் பறந்தால்கூட எட்டாது.

சுந் : அப்படியானால் நீ வேறு யாரையாவது விரும்பி நிச்சயித் திருக்கிறாயா ?

வச : இதென்ன கேள்வி ! எனக்கு இந்த கணேசர் பிடிக்கவில்லை என்றால் – நான் வேறு யாரை விரும்புகிறேன் என்பதை இப் போதே சொல்லிவிட வேணுமா ?

சுந் : இல்லை..... முடியுமானால் உன் கருத்தை அறிய வேணும் என்ற ஆசையால் கேட்டேன்..... சரி..... உனக்கு அந்த கணேசர் பிடிக்கவில்லை என்றால் கண்டிப்பாகச் சொல்லிவிடு... மனசுக்குப் பிடிக்காதவரை மணந்துகொண்டால் வாழ்க் கையின் லக்ஷியம் கெட்டுத்தான் போகும். உன் அபிப் பிராயத்தை நான் முற்றிலும் ஆதரிக்கிறேன்.

வச : ஆ ! அப்படிச் சொல்லுங்கள். நல்ல சமயத்தில் நீங்கள் வந்தீர்கள். இன்றைக்குக் காலையில் தான்..... என் தந்தை நான் அந்த கணேசரைத்தான் கலியாணம் செய்துகொள்ள வேணும் என்று ஒரு பிரசங்கமே செய்தார்..... அதைக் கேட்ட நிமிஷம் முதல் மனசு ஒரே சங்கடமாக இருந்தது.

மனம் விட்டுப் பேசி அந்தத் துன்பத்தை மாற்றிக்கொள்ளக் கூட ஒரு துணை யாருமில்லை. அம்மா ஊரிலிருந்தாலாவது அவளோடு வாதாடுவேன்..... நீங்கள் வந்தது பாலைவனத்தில் நீரோடையைக் கண்டது போல் இருக்கிறது.

சுந்: அப்படியானால் நான் பாக்யசாலிதான். உனக்கு இவ்வளவாவது உதவினேனே.

வச: இவ்வளவுதானா!..... இன்னும் எவ்வளவோ நீங்கள் உதவ முடியும்.

சுந்: என் மீது உனக்கு அவ்வளவு நம்பிக்கையிருந்தால் அதுவே போதும்.

வச: அந்த நம்பிக்கை என் மனசில் இருந்துகொண்டுதான் இருந்தது. ஆனால் அது பிரயோசனப்படக்கூடிய சந்தர்ப்பம் இப்படி வந்து சேரும் என்று நான் எதிர் பார்க்கவேயில்லை..... சரி அதைப்பற்றிப் பின்னால் பேசிக் கொள்வோம்..... நீங்கள் இப்போது இங்கே வர நேர்ந்ததற்கு ஏதேனும் காரியம் உண்டோ?

சுந்: உண்டு. உங்கள் அப்பாவிடத்தில் ஒரு உத்யோகம் கேட்கலாமென்று எண்ணித்தான் வந்தேன்.

வச: அப்படியா! ரொம்ப நல்ல யோசனை. நீங்கள் இங்கே வேலையில் அமர்ந்தால் நான் மிகவும் சந்தோஷப்படுவேன். நாம் அடிக்கடி சந்திக்க முடியும் - என்ற ஒன்றே எனக்கு அளவற்ற இன்பம்.

சுந்: உடனே எனக்குத் தரக்கூடிய உத்யோகம் உங்கப்பாவிடம் இருக்கிறதாகக் கேள்விப்பட்டேன்.

வச: அப்பாவின் காரியாலயங்களில் வேலைக்குத்தானே பஞ்சம்? எத்தனையோ உத்யோகம் காலியாக இருக்கிறது. மோகன ரங்கன் விட்டுவிட்ட 'காரியதரிசி' வேலைகூட இன்னும் காலியாகத்தான் இருக்கிறது.

சுந்: ஒரு வேலைக்காக உன் தகப்பனுரை நான் பார்க்கட்டுமா? அவரைச் சந்திக்க நல்ல சமயம் எது?

வச: அதற்கென்ன, எப்போ வேணுமானாலும் பார்க்கலாம்..... இன்று மாலை..... அல்லது..... (சற்று யோசனை செய்து) உடனே இப்போது அவரை நீங்கள் வேலைக்காகப் பார்க்க வேண்டாம். இப்போது அந்தக் 'கேஸைப்' பற்றி உங்கள் தகப்பனுர் மேல் வெகு கோபமாக இருக்கிற சமயம். இன்னும் இரண்டொரு நாள் போகட்டுமே..... அதற்குள்ளாக நானே அப்பாவுடைய மனசைச் அறிந்து உங்களுக்குத் தகவல்

கொடுக்கிறேன். பிறகு வேணுமானால் நீங்கள் அவரைச் சந்திக்கலாம்.

சுந்: ரொம்ப நல்லது. பழம் நழுவிப் பாலில் விழுந்த மாதிரி யாச்சு..... ஆனால் அவரோடு நீ உன் கலியாணப் பேச்சைப் பற்றி வேறே விவாதிக்கவேண்டியிருக்கிறது..... என்னைப் பற்றி நீ அவருடன் பேச..... இப்போ சௌகரியப்படுமா?

வச: அதனாலென்ன? கல்யாணப் பேச்சிலுள்ள அபிப்பிராய பேதத்துக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? அது ஒரு புறம் இருந்தாலும் எங்கப்பா என்னிடத்தில் எப்பவும் பிரியமாகத் தான் இருப்பார்..... சமய சந்தர்ப்பம் பார்த்து நான் உங்களைப் பற்றி பேசுகிறேன்..... அந்த விசாரம் உங்களுக்கு வேண்டாம்.

சுந்: ரொம்ப சந்தோஷம். வசந்தா! அளவற்ற உன் அன்புக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்?

வச: உங்கள் சந்தோஷமே எனக்குக் கைம்மாறு. வெகு சீக்கிரத்தில் உங்கள் வீட்டிலுள்ள கஷ்டங்கள் நீங்கி, பழைய தேஜஸோடு உங்களை நான் பார்த்தால் அதுவே போதும்.

(வேலைக்காரி செல்லம்மாள் அவசரமாக வருகிறாள்.)

செல்: அம்மா! எஜமான் வக்கீல் வீட்டிலே இருக்குறுங்களாம். நேத்து என்னமோ ஒரு பத்திரக் கட்டு உங்களிடம் குடுத்தாங்களாம். அதை உடனே கொடுத்தனுப்பச் சொல்லி அவசரமா ஆள் அனுப்பியிருக்கிறுங்க.

வச: இதோ வந்துவிட்டேன்.

சுந்: (நாற்காலியை விட்டு எழுந்து) நான் போய்வரட்டுமா? அப்பாவிடம் கேட்டு நீ தகவல் அனுப்பின பிறகு வருகிறேன்.

வச: கொஞ்சம் இருங்கள் போகலாம். அந்தப் பத்திரக்கட்டை எடுத்துக் கொடுத்தனுப்பிவிட்டு ஒரு நிமிஷத்தில் வந்து விடுகிறேன். உங்களிடத்தில் சொல்ல வேண்டிய ஒரு வார்த்தை..... பாக்கியிருக்கிறது.

[வசந்தா போகிறாள். சுந்தரம் மீண்டும் நாற்காலியில் உட்காருகிறான். சிறிதும் எதிர்பாராத விதத்தில் வசந்தா வழங்கிய உபசரிப்புகளால் சுந்தரத்துக்கு உண்டான சந்தோஷம் நிலைகொள்ளவில்லை. அதனால் சுந்தரம் அங்கும் இங்கும் வெகு உத்ஸாகத்தோடு பார்ப்பதும், மேஜையிலே மீன் இன்னும் உரிக்காமலிருந்த ஆரஞ்சு பழங்களில் ஒன்றை எடுத்து உரித்துத் தின்பதும் கூஜாவிலிருந்து மறுபடியும்

கொஞ்சம் காப்பியைத் தானே ஊற்றிக் குடிப்பதுமாகக் குதூகலப்படுகிறான்.....

சிறிது நேரத்தில் வசந்தா கையில் ஏதோ ஒரு கடிதத்துடன் திரும்பி வருகிறாள்.]

வச: நீங்கள் உடனே போக வேண்டுமா? இன்னும் கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு இங்கேயே சாப்பிட்டு விட்டுப் போகலாமே.

சுந்: உடனே போக வேண்டிய அவச்ர காரியம் எனக்கு ஒன்றும் இல்லை. உன்னோடு எவ்வளவு நேரம் பேசிக்கொண்டிருந்தாலும் எனக்கு சலிக்காது. இருந்தாலும் என் தாயார் நான் இங்கே வந்த காரியம் என்னவாயிற்று என்பதை அறிய வெகு ஆவலோடு என்னை எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள்.....

வச: நீங்கள் எங்கப்பாவிடம் வேலை கேட்க வந்தது உங்கள் அம்மாவுக்குத் தெரியுமா?

சுந்: தெரியும். எனக்கு வேலைபோன இந்த ஆறு மாதமாக அம்மாதான் உங்களப்பாவைப் பார்த்து ஒரு வேலை கேட்கச் சொல்லி என்னைத் தூண்டிக் கொண்டே யிருந்தது. நான் இங்கே வரக் கூச்சப்பட்டுக்கொண்டே இருந்துவிட்டேன்.

வச: அப்படியா? உங்கள் தாயார் மிகவும் பெருந்தன்மையுள்ள புண்யவதி என்பது எனக்கும் தெரியும். எங்கம்மா அடிக்கடி சொல்வதுண்டு..... சரி..... நீங்கள் போய் உங்கள் அம்மாவிடம் வேலை நிச்சயமாகக் கிடைக்கும் என்று சொல்லி அவர்கள் கவலையை மாற்றுங்கள்.....

சுந்: சரி..... அப்படியே அம்மாவிடம் சொல்லுகிறேன். நீ என்னை உபசரித்த விவரங்களைச் சொன்னாலே போதும்; என் தாயார் ஆனந்த பரவசமடைவார்கள். உடம்புகூடத் தேறி விடும்..... சரி, நான் போய் வருகிறேன்.

சுந்: சந்தோஷமாகப் போய்வாருங்கள்..... (கையிலிருந்த ஒரு 'கவரை' நீட்டி) இதோ உங்களுக்கு இதில் ஒரு கடிதம் இருக்கிறது. வீட்டிற்குப்போய் கவரை உடைத்துப் படித்துப் பாருங்கள். இங்கேயோ... வழியிலேயோ அதைப் பிரித்துப் பார்க்கக்கூடாது (என்று சிரித்துக் கொண்டே கொடுக்கிறாள்.)

சுந்: அப்படியே - வீட்டுக்குப் போகுமுன் அதைப் பிரிப்பதில்லை என்று வாக்குறுதி செய்கிறேன். (என்று கவரை வாங்கிக் கொள்ளுகிறான்.)

(சுந்தரம் போகிறான். கூலிவாசல் வரையிலும் வசந்தா அவனுடன் வந்து வழியனுப்புகிறாள்.)

காட்சி IX

இடம் : மல்லபாளையத்துக் கருகிலுள்ள ஒரு மாந் தோப்பின் மத்தியிலுள்ள ஒரு வீடு

காலம் : முற்பகல்

[புரட்சிக் கட்சியின் முக்கியஸ்தர்களும் அவர்களுடைய கையாட்களும் ரகசியமாகக் கூடுவதற்கென்றே உபயோகப்படுகிற அந்த மாந்தோப்பு வீட்டில், ரகசியமான ஒரு அறையில் மூத்து வீரப்பன்—கருப்பண்ணன்—வீராசாமி முதலான முக்யமான புரட்சித் தலைவர்களும் அவர்களுடைய கட்சியைச் சேர்ந்த இன்னும் சிலரும் கூடியிருக்கிறார்கள். அந்த அறைக்கு வெளியிலும் மாந்தோப்பைச் சுற்றிலும் பல இடங்களிலும் புரட்சி ஒற்றர்கள் காவலிருக்கிறார்கள்.]

கருப்பண்ணன் : என்ன முத்து வீரப்பா? நீ இந்த சுந்தரத்தை நம்புறியே, அவன் நமக்கு உதவுவானு?

முத்து : சுந்தரம் மிகவும் நம்பத் தகுந்தவன். காலேஜில் நாலு வருஷம் என்னோடு படித்தவன். அவன் நமக்கு நிச்சயமாக உதவுவான்.

வீராசாமி : நான் நம்பவில்லே. அவன் தான் நமக்கு எப்போதும் எதிர்கட்சிப் பேசினவனுச்சே?

முத்து : அது வாஸ்தவந்தான். ஆனால், இப்போது அவன் முற்றிலும் மாறிவிட்டான். 'தலைவலியும் காய்ச்சலும் தனக்கு வந்தால் தெரியும்' என்கிற மாதிரி இந்தப் பணக்கார முதலாளிகளுடைய கொடுமைகளை நன்றாக அனுபவித்து விட்டான். இப்போது அவன் உண்மையாகவே புரட்சியை விரும்புகிறான். புரட்சி வராமல் இந்தப் பணக்காரர்களுடைய திமிர் குறையாது என்பதைச் சுந்தரம் பரிபூரணமாக நம்புகிறான் என்பது எனக்குத் தெரியும்.

கருப் : சுந்தரம் சொன்னானென்று நீ சொன்னதைப் பார்த்தால் அவன் சொல்ற வழியிலே இந்த ஜென்மத்துக்கு நாம்ப புரட்சி காண முடியாது. 'மயிலே! மயிலே! தோகையிலே கொஞ்சம் இறகு கொடுங்கிற' மாதிரிதான். அப்படியெல்லாம் பார்த்தால் இந்த மொதலாளிகள் வழிக்கு வருவாங்களா?

முத்து : ஓ ! அதுவா ? அதைப்பற்றி நமக்கென்ன ? அது ஒரு அபிப்பிராய பேதம். அவனுடைய வழி அவனேடிருக்கட்டுமே. நம்முடைய திட்டங்களுக்கு வேண்டிய நிலைமையை அவன் உண்டாக்க முடியும். அதை நாம் பயன்படுத்திக் கொள்வோமே. சுந்தரம் இயற்கையாகவேகொஞ்சம்பயஸ்தன். அவன் நம்மைப் போல் எல்லா காரியங்களுக்கும் துணியக் கூடியவன் அல்ல. இருந்தாலும் இப்போதைக்கு நமக்கு வேண்டிய சில காரியங்களை அவன் தான் செய்ய முடியும்.

கருப் : சுந்தரம் இப்போ நமக்கு என்ன செய்ய முடியும் ?

முத்து : முதலில் நல்லப்பருடைய எல்லைக்குள் நம்ம ஆட்கள் யாவரும் இப்போ தலைகாட்ட முடியவில்லை அல்லவா?

வீரா : ஆமாம். நல்லப்பன் சி. ஐ. டி. போல சொந்தப் போலீஸ் வைத்திருக்கிறானும். அவர்களுக்கு நாம் யாராவது அவனுடைய தொழிலாளிகளிடத்தில் ஊடாடுகிறோமா என்று கவனிக்க வேண்டியது தான் வேலையாம்.

முத்து : அதனலே நல்லப்பனுடைய வீட்டிலும் மில்களிலும் நம்முடைய திட்டப்படி காரியங்களை நடத்த வேணுமானல் அங்கே உள்ள சில உளவுகளை அறிய வேண்டும்.

கருப் : என்ன உளவுகள் ?

முத்து : நல்லப்பருடைய சொந்த வீட்டின் அமைப்பு, அவர் தூங்குகிற அறை எது, அவருடைய பொக்கிஷ அறை எது, எங்கெங்கே எத்தனை பேர் ஆயுதபாணிகளாகக் காவல் செய்கிறார்கள்——அந்தக் காவலாளிகளுக்குத் தலைவன் யார், அவன் நமக்கு வசப்படுவானு——என்ற இத்தனை விவரங்களும் இன்னும் பல விஷயங்களும் நன்றாகத் தெரிந்து முடிவு செய்ய வேண்டும்.

கருப் : இந்த விவரங்களை யெல்லாம் சுந்தரம் நமக்குச் சொல்லுவானென்று நீ நம்புறை ?

முத்து : அது தெரியும் எனக்கு. 'ரிவால்வரை' கையில் வைத்திருப்பதே ஆபத்தென்று சொல்லுகிறவன் சுந்தரம். இதையெல்லாம் சுந்தரம் சொல்ல மாட்டான். அவனை சொல்லவே வேண்டாம்——அவன் நல்லப்பரிடம் வேலைக்கு அமர்ந்தால் அது போதும். அதைக் கொண்டு நான் இதையெல்லாம் வெகு சுலபமாக அறிந்து விடுவேன்.

வீரா., கருப் : எப்படி ?

முத்து : எப்படியென்றால், புரட்சி உண்டாக்க வேண்டும் என் பதை சுந்தரம் நிச்சயமாக நம்புகிறான். அதில் என்னோடு ஒத் துழைக்க அவன் உறுதி கொடுத்திருக்கிறான். ஆனால் ஒரு நிபந்தனை. ரகளையில்லாமல் ரத்தக் களறியில்லாமல் வெறும் வேலை நிறுத்தம் மூலமாகவே புரட்சி செய்யலாம் என்பது அவனுடைய நம்பிக்கை——ரகளையில்லாமல். முதலாளிகள் விட்டுக் கொடுப்பதானால் நமக்கும் சந்தோஷம் தான்..... நல்லப்பருடைய மில்களிலும் விவசாயப் பண்ணைகளிலும் புரட்சி மனப்பான்மையை உண்டாக்க வேலை செய்யப் போவதாகச் சுந்தரத்தின் திட்டம்.

கருப் : அதனால் நமக்கென்ன பிரயோஜனம்?

முத்து : கேள், சொல்லுகிறேன். எல்லா முதலாளிகளிடத்திலும் வயிறெரிந்த தொழிலாளிகள் தான் இப்போது வேலை செய் கிறார்கள். அதுவும் நல்லப்பரிடத்தில் வேலை செய்கிறவர்கள் மிகவும் நொந்து போயிருப்பவர்கள். சுந்தரம் தொழிலா ளர் தலைவர்களிடத்தில் ஓசையில்லாமல் புரட்சி எண்ணம் உண்டாக்க முடியும். அப்போதைக்கப்போது நமக்கு விவரம் வரும்.....நான் அங்குள்ள தொழிலாளர் தலைவர்களை இங்கே ரகசியமாக வந்து போக ஏற்பாடு செய்யும்படி சுந்தரத்தைக் கேட்டால் அதை அவன் நிச்சயமாகச் செ வான். நல்லப்பரிடத்தில் வேலை செய்கிறவர்கள் சில பேரேய் டாவது நமக்குத் தொடர்பு கிடைத்துவிட்டால் மற்றெல்லாக் காரியமும் வெகு சுலபம்.

வீரா : ஆமாம் அது நல்ல யோசனைதான். ஆனால் நல்லப்ப ரிடத்தில் சுந்தரத்துக்கு வேலை கிடைக்க வேணுமே.

முத்து : நிச்சயமாகக் கிடைக்கு மென்று தான் நம்புகிறேன். ஏன் என்றால் நல்லப்பருடைய ஒரே மகள்—வெகு கெட்டிக் காரியாம். நல்ல அழகான பெண்——நானும் பார்த்திருக் கிறேன். அவள் சுந்தரத்தோடு சொம்ப நாள் படித்தவளாம். சுந்தரத்திடத்தில் சொம்ப பிரியமுள்ளவளாம்——அவள் அங்கே இருக்கிறதனாலே——

வீரா : அப்பனுக்கும் மகளுக்கும் நேர் விரோதமாமே. அப்பன் செய்கிறது எதுவும் அந்தப் பெண்ணுக்குப் பிடிக்காதாம். வேலைக்காரர்களிடத்தில் அந்தப் பெண் சொம்ப புச்சாதாப முள்ளவளாம். அது அப்பனுக்குப் பிடிக்காதாம்.

முத்து : அப்படியா! அது எனக்குத் தெரியாது. நீ உள்ளூர்க் காரன்; உனக்குத் தெரிந்திருக்கலாம்——அப்படியானால் சொம்ப நல்லதாச்சு. நல்லப்பர் சுந்தரத்துக்கு அனுகூலமாக இருப்பாள்.

வீரா : அந்தப் பெண் சொல்வதை அப்பன் ஒத்துக்கொள்ளா விட்டால்?

கருப் : மகளிடத்திலே அப்பன் பிரியமுண்ணுதான் சொல்ருங்க. யாரோ கோடீஸ்வரனுக்கு அந்தப் பெண்ணைக் கொடுக்க ஏற்பாடு நடக்கிறதாகக் கேள்வி. கலியாண சமயம் பெண் சொல்றதை அப்பன் கேக்காமே போகமாட்டாரு——சரி——சுந்தரத்துக்கு வேலே கிடைக்குதுண்ணு வச்சிக்குவோம். அப்புறம் ... நம்ம பிளானைப் பேசி முடிங்க.

முத்து : மற்ற திட்டமெல்லாம் அதற்கு மேல் தான் நிச்சயிக்க வேணும்—— கருப்பண்ணு! அவசரப்பட்டு சுந்தரத்திடம் ஒன்றும் 'பிளான்' 'கிளான்' எனறு சொல்லி விடாதே.

கருப் : அவசரம் என்னப்பா? எதானலும் மொதல்லே அந்த நல்லப்பருடைய இரும்புப் பெட்டியில் இருக்கிற பணம் நம்ப கைக்கு வராப்பிலே பாருங்க.

வீரா : அதற்குத்தான். அந்த இரும்புப் பெட்டி எங்கிருக்குது? என்ன! அதுகிட்ட நாம எப்படிப் போக முடியும? இதை யெல்லாம் யோசிக்க வேண்டாமா?

கருப் : சரி——அந்த யோசனையைப் பண்ணுங்க——அதோட இப்ப இருந்தே நம்ப ஆள்களையும் வேண்டிய ஆயுதங்களையும் கூட யோசனை செய்ய வாணுமா.

வீரா : ஆள்கள் வேண்டிய பேர்கள் இருக்கிறார்கள். ஆயுதங்கள் தான் போதாது. நம்மிடம் இப்போ 17 ரிவால்வரும் 9 துப்பாக்கியுந்தான் இருக்குது. இன்னும் குறைந்தது 25 ரிவால் வரும் இருபது துப்பாக்கியுமாவது வேணும்.

முத்து : வீராசாமி! கருப்பண்ணு! அதைப்பற்றி யெல்லாம் இப்போ ஒன்றும் அவசரப்பட வேண்டாம். அவசரப்பட்டால் எல்லாம் கெட்டுப் போய்விடும். நல்லப்பருடைய வீட்டைச் சுற்றிலும் உள்ள காவலாளிகளிடத்திலும் மில்களிலுள்ள தொழிலாளிகளிடத்திலும் கொஞ்சம் பிரசாரம் செய்து அவர்களை முதலில் தயார் செய்துகொண்டுதான் இதை யெல்லாம் நிறைக்க வேணும்.

கருப் : அது எப்படி முடியும்?——நம்ம ஆட்கள் துடிக்கிறுங்களே.

முத்து : சுந்தரம் இன்று வேலைக்காக நல்லப்பரைப் பார்க்கப் போயிருக்கிறான். அது என்ன ஆச்சு என்று விசாரித்து வரும்படி சொக்கனை அனுப்பியிருக்கிறேன். அவன் ஹோட்டலுக்கு வந்து சொல்லுவான்——நாம் மறுபடியும் இங்கே இன்றிரவு கூடுவோம்.

கருப் :
வீரா : } சரி.

(ஒவ்வொருவராக எல்லாரும் போகிறார்கள்)

காட்சி X

இடம் : சுந்தரத்தின் வீட்டு வாசல்
காலம் : நண்பகல்

[வசந்தாவிடம் விடை பெற்று வந்த சுந்தரம் தன்னுடைய வீட்டுக்குப் பக்கமாக வருகின்றான். சுந்தரத்தின் வீட்டு வாசல் கதவண்டை ஒரு புது மனிதன் நின்றுகொண்டிருக்கிறான்.]

யாரப்பா நீ? ஏன் கதவண்டை நிற்கிறாய்?

பு. ம : முத்து வீரப்பர் நீங்கள் நல்லப்பர் வீட்டிலிருந்து வந்துட்டீங்களான்னு பார்த்து வரச் சொன்னாருங்க. ரொம்ப நேரமா கதவைத் தட்டுறனுங்கோ; பதிலே இல்லே.

சுந் : உன் பேரென்ன?

பு. சொக்கனுங்க.

சுந் : முத்து வீரப்பன் என்ன சொல்லியனுப்பினார்?

சொக் : நீங்க நல்லப்ப முதலாளியிடம் போனது என்ன ஆச்சு துண்ணு கேட்டுவரச் சொன்னாருங்க.

சுந் : நான் அங்கிருந்துதான் வருகிறேன். நல்லப்பர் வீட்டில் இல்லே. நான் அவரைச் சந்திக்க முடியவில்லே. மறுபடியும் நாளை மறுதினம் போவேன். அதன் பிறகு முத்து வீரப்பனுக்குத் தகவல் அனுப்புகிறேன். போய்ச் சொல்லு.

சொக் : சரிங்கோ. (என்று போய் விடுகிறான்.)

[சுந்தரம் தாழிடப்பட்டிருந்த தன் வீட்டுக் கதவைத் தட்டுகிறான். பதில் இல்லை. மீண்டும் மீண்டும் "அம்மா! அம்மா!" என்று தட்டுகிறான். உடனே வந்து கதவை திறக்கிற வழக்கமுள்ள தாயார் வராததைக் கண்டு ஏங்குகிறான். தவிக்கிறான். தலை குனிந்த நின்று ஆலோசிக்கிறான்.....யாரோ மெள்ள மெள்ள உள்ளே வருகிற சத்தம் கேட்டு கவனிக்கிறான்..... பிறகு கொஞ்சம் நேரம் கழித்துக் கதவில் கை பட்ட சத்தம் கேட்கிறது. சுந்தரம் திகைத்துவிழிக்கிறான். உள்ளே கதவுத் தாழ் நீக்க முயலும் எத்தனமும் தாழ் நீங்காமலிருப்பதும் உணர்கிறான்.]

சுந் : அம்மா !

(என்று உரக்கக் கத்துகிறான். கதவின் தாழ் நீக்கப்பட்டு சுந்தரம் உள்ளே நுழைய எத்தனிக்கிறான். கதவின் ஓரமாக சுந்தரத்தின் தாயார் நிற்க சக்தியில்லாமல் சுவரின் மீது சாய்ந்து கிடக்கிறாள். சுந்தரம் திடுக்கிட்டுத் தாயாரைத் தொட்டுப் பார்க்கிறான். தாயாருக்கு ஜ்வரம் நெருப்பாக அடிக்கிறது.)

சுந் : அம்மா ! நான் பயந்து கொண்டிருந்தது போலவே போன ஜ்வரம் வந்து விட்டதே ! அம்மா நான் போகும் போது ஜ்வரம் இல்லையே?

(என்று தாயாரை அணைத்து மெதுவாகத் தூக்கி நிறுத்துகிறான். வாய் பேசாமல் மீனாட்சியம்மாள் மகனைப்பிடித்துக் கொண்டே நடக்க முயலுகிறாள். சுந்தரம் தாயாரைத் தாங்கிப் பிடித்துக் கொண்டு மெதுவாக நடத்திப் படுக்க வைக்கிறான்.)

சுந் : அம்மா ! என்னம்மா ? எப்படியிருக்கிறது : எத்தனை நேரமாக ஜ்வரம் ? மயக்க மிருக்கிறதா ?

மீனு : (மிகவும் சிரமத்துடன்) ஆமாப்பா.....மயக்கமாத்தானிருக்குது. யாரோ.....ரொம்ப...நேரமாக்...கதவைத் தட்டினார்கள். கடைசியில் உன்...குரல்...மாதிரி...தெரிஞ்சுது. எழுந்திருக்க...முடியலே.

சுந் : அம்மா ஜாஸ்தி பேசவேண்டாம். அப்புறம் பேசலாம்..... கொஞ்சம் காப்பி வாங்கி வரட்டுமா ?

மீனு : (கையை ஆட்டி வேண்டாம் என்கிறாள்.)

சுந் : வெந்நீர் தரட்டுமா !

மீனு : (தலையை அசைத்து 'வேண்டும்' என்கிறாள்.)

[இந்தச் சமயத்தில் பள்ளிக்கூடம் போயிருந்த சுந்தரத்தின் தங்கைமார்கள் நால்வரும் வருகிறார்கள். மூத்த தங்கையான பங்கஜத்தைக் கூப்பிட்டு]

சுந் : பங்கஜம் ! ஓட்டமா ஓடிப் போய் நம்ம டாக்டரைக் கூட்டி வாம்மா.

[பங்கஜம் புத்தகங்களை அங்கேயே போட்டு விட்டு ஓடுகிறாள். மற்றக் குழந்தைகள் தாயாரைச் சுற்றி நிற்கின்றனர். சுந்தரம் அடுப்பு மூட்ட விறகு, விரட்டி, நெருப்புப் பெட்டி, சிமை எண்ணெய் இதுகளைத் தேடி அங்கு மிங்கும் பரபரப் போடு அலைகிறான். இதனிடையில் ஜேப்பிலிருந்த வசந்தா கொடுத்த கடிதத்தைத் தொட்டுத் தொட்டுப் பார்த்துக் கொள்ளுகிறான். சுந்தரம் அடுப்பு மூட்டத் தடுமாறுவதைக்

கண்டு அடுத்த தங்கை விமலா வந்து ஒத்தாசை செய்கிறாள். தண்ணீர் காய்வதற்குள், அதே தெருவில் பத்து வீட்டுக்கு அப்பாலுள்ள டாக்டர் சேகரன் வந்து விடுகிறார். சுந்தரம் அவரை வரவேற்று அம்மாவைக் காட்டி விசனப் படுகிறான். டாக்டர் மீனாட்சியம்மாளைப் பரிசோதிக் கிறார்.]

சுந்: போன நோய் திரும்பி வந்து விடுமோ என்ன டாக்டர்?

டாக்டர்-சே (மலையாளம்): ஓ! இது ஒன்னும் பழைய 'கம்ப்ளெயின்டோடே' சேர்ந்ததல்லா. இது வெறும் 'மலேரியா'. இப் போ ஊருக்குள்ளே இது ஜாஸ்தி. பலஹீனம் உள்ளவாளை உடனே பீடிக்கிறது. அம்மாவுக்கு சொம்ப பலஹீனம். அதனு லேயாக்கும் ஞான் 'டானிக்' எழுதித் தந்தது. அது கொடுக்க இல்லேயோ!

சுந்: இல்லே! (என்று விசனிக்கிறான்.)

சேக: பரவாயில்லே—பின்னே—டானிக் கொடுக்கலாம். இப்போ 'மிக்ஸ்சர்' அனுப்பரேன். அது மூன்று 'டோஸ்' கொடுத் தால்——சரியாப் போகும். பயமில்லே. கவலைப்படாண் டாம். பின்னே வேகமே 'டானிக்' வாங்கிக் கொடுக் கணும்.

[என்று டாக்டர் விடை பெற்றுக்கொள்கிறார். பங்கஜம் மிக்ஸ்சர் வாங்கிவர—ஒரு பாட்டலுடன் டாக்டர் பின்னல்போகிறாள். சுந்தரம் தாயாரைத் தொட்டுப் பார்த்துக் கொண்டு பக்கத் தில் உட்கார்ந்து மருந்து வரக் காத்திருக்கிறான்.....மருந் துடன் பங்கஜம் வருகிறாள். மருந்தை மீனாட்சியம்மாளே கை நீட்டி வாங்கிக் குடித்து விடுகிறாள்.....சற்று நேரம் சென்று]

மீனு: சுந்தரம்—நீ——வெளியேபோன——கொஞ்ச நேரத்துக் கெல்லாம்—என்னமோ—குளிரும் மயக்கமுமா—வந்து படுத் துட்டேன்...சமைக்க முடியலே...குழந்தைகள்...நீ

சுந்: அம்மா! அதை நான் கவனிக்கிறேன். நீங்கள் நிம்மதியா கக் கொஞ்சம் தூங்குங்கள். (என்று கம்பளியைப் போர்த்து விட்டுப் போகிறான்.)

[வசந்தா கொடுத்த கடிதத்தைத் தொட்டுப்பார்த்துக் கொண்டே தன் அறைக்குட் சென்று தன்னிடத்தில் கடைசியாக இருந்த ஐந்து ரூபாய் நோட்டை எடுத்துக் கொண்டு பக்கத் திலுள்ள ஒரு ஹோட்டலில் சாப்பாடு வாங்கிவர பாத்திரத் துடன் புறப்படுகிறான்.....ஓட்டல் சாப்பாடு கொண்டு வந்து, தங்கைகளிடம் தந்து அவர்களைச் சாப்பிட விட்டு பள்ளிக்கூடம் போகச் சொல்லிவிட்டு, தான் தாயாருக்குப்

பக்கத்தில் சற்று தூரத்தில் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறான். தூங்கிக் கொண்டிருந்த மீனாட்சியம்மாள் விழித்து போர்வையை நீக்கி]

மீனு : சுந்தரம் ஒரு துண்டு கொண்டாப்பா. ரொம்ப வேர்க்கிறது.

(சுந்தரம் ஒரு 'டவல்' கொண்டு வந்து தாயாரின் முகத்தைத் துடைக்கிறான். மீனாட்சியம்மாள் 'டவலை' வாங்கித் தானே உடம்பைத் துடைத்துக் கொண்டு தெளிந்த முகத்துடன்)

மீனு : மப்பு மயக்கமெல்லாம் போய் விட்டது.....நாற்காலியைப் பக்கத்தில் இழுத்துப் போட்டு உட்காரு.....

(சுந்தரம் அப்படியே உட்காருகிறான்.)

மீனு : நல்லப்பரை பார்த்தாயா ? என்ன சொன்னார் ?

சுந் : நல்லப்பரைப் பார்க்கவில்லை. நான் போன உடன் அவர் வெளியில் போய் விட்டார். வசந்தாவைப் பார்த்தேன்.

மீனு : வசந்தாவைப் பார்த்தாயா ? வெகு நல்ல பெண்—சௌகர்யமாக இருக்கிறாளா ?——உன்னோடு பிரியமாகப் பேசினாளா ?

சுந் : அம்மா ! அந்த வசந்தாவின் பிரியத்தை என்னென்று வர்ணிப்பேன். பளளிக்கூடத்தில் என்னோடு படிக்கிற போது இருந்தாளே, அதே பிரியந்தான். துளிகூட மாறவேயில்லை. சொல்லப் போனால் இப்போ முன்னிலும் அதிகப் பிரியம். (என்று சொல்லிக் கொண்டே தன் ஜேபிலிருந்த வசந்தா கடிதத்தை எடுக்கிறான்.) வெகு அன்போடு வரவேற்று, மேல் மாடியில் தன்னுடைய சூழுக்குக் கூட்டிக்கொண்டு போய் இட்லி தோசை காப்பி எல்லாம் அங்கே கொண்டுவரச் சொல்லி சாப்பிடச் சொன்னாள். எனக்கும் பசி——

மீனு : ஆமாம் வெறும் காப்பி மட்டுந்தானே குளி குடித்து விட்டுப் போனாய்.

சுந் : வயிறார சாப்பிட்டேன். பழைய நினைவுகளையெல்லாம் பேசி மகிழ்ந்தாள்——பிறகு நான் போன காரியம் என்ன வென்று கேட்டாள். நான் நம்ம வீட்டு நிலைமையெல்லாம் கூசாமல் சொன்னேன். நல்லப்பரிடம் அவளே பேசி எனக்கு ஒரு நல்ல வேலை போட்டுத்தர ஏற்பாடு செய்வதாக வாக்களித்தாள். மத்யானம் வரையிலும் இருந்து சாப்பிட்டுப் போகலாம் என்றாள். நான் நீங்கள் எனக்காகக் காத்திருப்பீர்கள் என்று சொல்லி விடைபெற்று வந்தேன். வரும போது இந்தக்

கடிதத்தை 'வீட்டுக்குப் போய் உடைத்துப் பாருங்கள்' என்று கொடுத்தாள்.

(என்று கடிதத்தை மீனாட்சியிடம் காட்டுகிறான். மீனாட்சியம்மாள் வாங்கிப் பார்த்து விட்டு)

மீனா : கடிதமா இது? ரொம்பகனமாக இருக்கிறதே, உடைத்துப் படி. என்ன எழுதியிருக்கிறாள் பார்ப்போம்!

[சுந்தரம் கவரைக் கிழித்து உள்ளிருந்த காகிதங்களை இழுக்கிறான். அந்தக் கவரிலிருந்து ஒரு கத்தை நூறு ரூபாய் நோட்டுகளும் ஒரு சிறு கடிதமும்...வருகின்றன.]

சுந்: அம்மா! பார்த்தீர்களா - 'வீட்டுக்குப் போய் உடைத்துப் பாருங்கள்' என்று வசந்தா சொன்ன போதே சந்தேகித்தேன்.

[என்று அந்த நோட்டுக் கத்தையைத் தாயாரிடம் தருகிறான். படுத்திருந்த மீனாட்சியம்மாள் விறுக்கென்று எழுந்து உட்கார்ந்து அதை வாங்கி நோட்டுகளை எண்ணிப் பார்க்கிறாள். இரண்டாயிரம் ரூபாய் இருக்கிறது]

மீனா : நேரில் பணம் தந்தால் நீ வாங்கிக் கொள்ள மறுப்பாயோ என்று இப்படிச் செய்திருக்கிறாள்——கடிதத்தில் என்ன எழுதியிருக்கிறாள் படி.

[சுந்தரம் கடிதத்தை வாசிக்கிறான். அதில்:

அன்பரே,

என்னை ஒரு உண்மையுள்ள நட்பாக நீங்கள் நம்பினால் இத்துடன் இருக்கும் சிறு உதவியைக் கூசாமல் ஏற்றுக் கொள்ளவேண்டும். உங்கள் குடும்பத்தின் நிலைமையும் உங்கள் தாயாரவர்களின் அசௌக்யமும் என் மனதில் மிகவும் சங்கடம் உண்டாக்குகின்றன. அப்பாவிடம் பேசி நீங்கள் இங்கேயே வேலையில் அமரும்படிச் செய்வேன். அப்பா அதற்குச் சம்மதிக்காவிட்டாலும் உங்களுக்கு ஒரு உத்யோகம் கிடைத்து எல்லா வசதிகளும் ஏற்படுகிற வரையிலும் என்னுடைய உதவி உங்களுக்கு இருந்து கொண்டிருக்க நீங்கள் சம்மதிக்க வேணும். உங்கள் நலம் என்னுடைய நலம் போல் நான் நினைப்பது மிகையல்ல. இந்தப் பணம் என் சொந்தச் செலவுக் கென்று அடிக்கடி அப்பா எனக்குத் தருவதிலிருந்து வருவது. உங்களுக்கு நான் உதவி செய்ய வேறு யாரையும் கேட்கத் தேவையில்லை. உங்கள் தாயாரின் உடம்பைத் தக்க வைத்தியம் செய்து கவனித்துக் கொள்ளுங்கள்.

அன்புள்ள,

வசந்தா.

சுந்தரம் கடிதத்தைப் படிக்கப் படிக்க மீனுட்சிபம்மாளுக்கு ஆனந்தம் உண்டாகி, கொஞ்ச நஞ்சம் இருந்த ஜுரமும் நீங்கி விட்டது.]

மீனு : சுந்தரம்! இனி நம் கஷ்டகாலம் நீங்கிவிட்டது. எனக்கு உடம்பு தேறிவிடும்——அப்பா! நீ அந்த—புரட்சி—கிரட்சி—என்று ஊரைப் புரளி செய்கிற கூட்டத்தோடு இனி——ஒன்றும்—உறவு வைத்துக் கொள்ளாதே.

சுந்: அம்மா! நான் நினைக்கிற புரட்சி ஊரைப் புரளி செய்கிற வேலையா? நியாயமான முறையில் முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் ஒரு சமரசம் உண்டாக்கக்கூட முயற்சி செய்ய வேண்டாமா?——நமக்குத்தான் ஒரு வசந்தா இந்த உதவி செய்கிறாள். நம் குடும்பத்தைப் போல் தவிக்கிற ஆயிரக் கணக்கான குடும்பங்களுக்கு ஒரு விமோசனம் விடிய வேண்டாமா?

மீனு : அது வேண்டியது தான்.....ஆனால் தொழிலாளிகளுக்கு உதவி செய்வதாகச் சொல்லிக் கொண்டு கொள்ளை, கொலை, முதலிய பாதகங்களைச் செய்கிறார்களாமே அந்தப் புரட்சி தான் வேண்டா மென்கிறேன்.

சுந்: நான் அதையெல்லாம் செய்வேனுமமா?

மீனு : நீ செய்ய மாட்டாய்.....சரி.....அதைக் கவனித்துக் கொண்டால் போதும்.

காட்சி XI

இடம் : நல்லப்பருடைய அந்தரங்க அறை
காலம் : மாலை

[நல்லப்பர் தன்னுடைய மேஜைக்கருகில் உட்கார்ந்து கொண்டு வெகு கவலையோடு சில தஸ்தாவேஜுகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். வசந்தா வருகிறாள். நல்லப்பர் கவனம் முழுவதும் ஒரு பத்திரத்தைப் படிப்பதில் இருந்ததால் வசந்தா வந்ததை அவர் கவனிக்கவில்லை. அவர் கவனத்தைக் கவரும்படி வசந்தா அவருக்கருகில் வருகிறாள்.]

நல்லப்பர் : ஏம்மா ? என்ன ? ... காப்பி டிபன் எனக்கு ஒன்றும் வேண்டாம்.

வச : வெறும் காப்பி மட்டும் கொஞ்சம் கொண்டு வருகிறேன். மத்யானம்கூட நீங்கள் சரியாகச் சாப்பிடவில்லையே அப்பா !

நல் : சாப்பாடே செல்ல மாட்டேங்குதம்மா. சரி, கொஞ்சம் காப்பி மட்டும் கொண்டுவா. வேறென்றும் வேண்டாம்.

(வசந்தா காப்பி கொண்டுவரப் போகிறாள். நல்லப்பர் மீண்டும் பத்திரத்தில் கவனம் செலுத்துகிறார். வசந்தா காப்பியுடன் வருகிறாள். டம்ளரில் ஊற்றிக்கொடுக்கிறாள். நல்லப்பர் காப்பியைக் குடித்துவிட்டு டம்ளரை வசந்தாவிடம் தருகிறார்.)

வச : அப்பா !

நல் : என்னம்மா ?

வச : காலையில் நீங்கள் வெளியே போயிருந்தபோது சுந்தரம் வந்திருந்தார்.

நல் : சுந்தரமா ? எந்த சுந்தரம் ?

வச : பாரிஸ்டர் ஸ்ரீனிவாசருடைய மகன். என்னோடு படித்தாரே அவர்.

நல் : ஸ்ரீனிவாசன் மகனா ! போதும்; அந்த ஸ்ரீனிவாசன் பண்ணி வைத்த பழிதான் ஒரு மாசமாக என்பிராணனை வாங்குதே. ஸ்ரீனிவாசன் வந்து வந்து எனக்குச் சாதித்ததெல்லாம் போதாதென்று இன்னும் இவன் வேறே வந்துட்டானா ? அவர்கள் மூஞ்சிலேயே முழிக்கப்படாது.

வச: ஸ்ரீனிவாசன் ஏதாவது நமக்குக் கெடுதல் செய்திருந்தால் அதற்காகச் சுந்தரம் என்ன செய்வாரப்பா?

நல்: சுந்தரம் இப்போ ஒன்றும் செய்யவில்லேயானாலும் அவன் மகன்தானே இவன். இன்றைக் கில்லாவிட்டால் நாளேக்கு இவனும் அப்படித்தான் ஏதாவது செய்வான். குட்டித் தேள் ஆனாலும் கொடுக்கிலே விஷமில்லாமல் போகாது. அவங்கப்பனுக்கும் நமக்கும் உள்ள விரோதத்தை மனசில் வைத்துக் கொண்டேயிருந்து சமயத்தில் கழுத்தை அறுத்து விடுவான். அந்த வம்சத்தையே நம்பக்கூடாது.

வச: சுந்தரம் அப்படிப்பட்டவர் அல்லவே யல்ல அப்பா.

நல்: வசந்தா உனக்கு ஒன்றும் தெரியாது. அந்த ஸ்ரீனிவாசன் சொம்பகாள் நமக்கு வேண்டியவனாக இருந்து கடைசியிலே நம்ம விரோதிகளுடன் சேர்ந்துகொண்டு முன்னே ஒரு பத்து லட்சம் ரூபாய் நமக்குத் தெண்டம் வைத்தான். அது போதாதென்று அந்த ஸ்ரீனிவாசன் செத்துப்போன பிறகும் அவன் பண்ணிவைத்திருக்கிற பழியினாலே இப்போ வேறே ஐம்பது லட்சம் அழுதுத் தொலைக்க வேண்டும் போலிருக்கிறது. வேண்டாமம்மா அந்தப் பயல்கள் பேச்சே பேசாதே.

வச: ஒரு பாவமும் அறியாத சுந்தரத்தை அப்படி வெறுக்க லாமாப்பா? நாங்கள் படிக்கிறபோது நீங்கள் சுந்தரத்திடம் எவ்வளவு பிரியமாக இருந்தீர்களே அப்பா!

நல்: ஆமாம், பிரியமாகத்தானிருந்தேன். அப்ப அவங்கப்பனும் யோக்யமாகத்தானிருந்தான். அதைப் பற்றி இப்பென்ன?

வச: உங்களுடைய பழைய பிரியத்தை எண்ணித்தான் இப்போது உங்களைப் பார்க்க வந்தார். அதிலென்ன தப்பு?

நல்: எதுக்காக என்னைப் பார்க்கணுமாம்? இத்தனை நாளுமில்லாமல் இப்போ?

வச: ஏதோ அவருடைய கஷ்டங்களை உங்களிடத்தில் சொல்லிக் கொண்டு ...

நல்: என்ன கஷ்டம் அவனுக்கு?

வச: அவருக்கு இப்போது வேலை இல்லையாம். உங்களிடத்தில் ஏதாவது உத்யோகம் கேட்கலாமென்று வந்தாராம்.

நல்: ஏன், அவன்தான் அந்தப் பொன்னுசாமியிடம் நல்ல சம்பளத்தில் இருந்தானே?

வச: பொன்னுசாமி சுந்தரத்தை 'டிஸ்மிஸ்' செய்து விட்டாராம்.

நல் : வேணும் ... வேணும் ... நல்லர் வேணும்—இந்தப் பயல் களுக்கு. அந்தப் பொன்னுச்சாமிக்குத்தானே என்னிடமிருந்து இந்த சுந்தரத்தின் அப்பன் பத்து லட்சம் ரூபாய் பிடுங்கித் தந்தான், அதெல்லாம் விட்டுப் போகுமா ? நல்லாப் படட்டும். அதற்கு நாமென்ன செய்யலாம்? அவனவன் செய்ததை அவனில்லாவிட்டாலும் அவன் பிள்ளைகுட்டியாவது பட்டுத் தானே ஆகவேணும்! படட்டும்.

வச : அப்பா ! அப்படி நீங்கள் சொல்லலாமா ?

நல் : வசந்தா ! இதிலெல்லாம் நீ தலையிடாதே. அந்த ஸ்ரீனி வாசனை நினைத்தாலே என் வயிறெரியுது. அவன் சம்பந்தப் பட்ட எதுவும் எனக்குப் பிடிக்காது.

(என்று சொல்லிவிட்டு மறுபடியும் தஸ்தாவேஜுகளைப் புரட்டு கிறார். வசந்தா நின்றுகொண்டேயிருக்கிறாள்.)

நல் : ஏம்மா நிற்கிறே ? ... போ ... போய் உன் வேலைகளைப் பார்.

(என்று வசந்தா பக்கம் திரும்பாமலேயே சொல்லுகிறார். வசந்தா நின்ற இடத்தைவிட்டு துளிகூட நகராமல், கற்சிலை போல் தலைகுனிந்து நிற்கிறாள். அவள் அப்படி நிற்பதை அறிந்து நல்லப்பர் அவள் பக்கம் திரும்பி.)

நல் : வசந்தா ! ஏம்மா இப்படிப் பிடிவாதம் செய்கிறாய் ? எனக்கு இஷ்டமில்லாத காரியத்தில் நீ ஏன் பிரவேசிக்கிறாய் ?

(வசந்தா தலை குனிந்தபடியே நிற்கிறாள்)

நல் : அம்மா ! நான் சொல்றதைக் கேள். நீ இப்படி என்னைப் பார்.

(வசந்தா தலை நிமிர்கிறாள். அவளுடைய கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் வடிகிறதை நல்லப்பர் பார்த்து)

நல் : அட வம்பே ! நீ ஏன் அழுகிறாய் ?

வச : அப்பா ! சுந்தரம் என்னோடு படித்தவர். என்னை மாடு முட்டத் துரத்திக் கொண்டு வந்தபோது என்னைக் காப்பாற்றித் தான் படுகாயமடைந்தவர். நான் அந்த நன்றி மறக்க முடியாது. அவர் வேலையில்லாமல் ஆறு மாதமாகத் திண்டாடி நல்ல சோறில்லாமல், மிகவும் இளைத்து அழுக்கடைந்த உடைகளுடன் க்ஷவரம் செய்து கொள்ளக்கூட காசில்லாமல் மிகவும் பரிதபிக்கவேண்டிய நிலைமையில் நம்மை நாடி வந்தார். உங்களிடத்தில் எப்படியாவது கெஞ்சி ஒரு வேலை வாங்கித் தருவதாக நான் வாக்களித்து விட்டேன். நீங்களோ ஒரு குற்றமும் செய்யாத அவரை இப்படி வெறுக்கிறீர்கள். அத்

னால் நான்தான் என் வாக்கை நிறைவேற்றாமல் நன்றி கெட்ட வளாக வேண்டியிருக்கிறது. எனக்கு அழுகை வராமல் வேறு என்ன வரும்?

நல் : (கொஞ்சம் இளகின குரலில்) ஆமாம், வாஸ்வந்தான். சுந்தரம் உன்னோடு படித்தவன்தான். உன் உயிரைக் காப்பாற்றியவன்தான். அதற்காக வேணுமானால் ஐந்நூறு ஆயிரம் இனாமாகத் தந்துவிடு. அவனை இங்கே வேலைக்கு வைத்துக் கொள்வதென்றால் நெருப்பை மடியில் கட்டிக் கொள்ளுகிற மாதிரிதான்.

வச : அப்பா! சுந்தரம் என்னோடு பத்து வருஷத்துக்கு மேல் தொடர்ச்சியாகப் படித்தவர். அவர் மிகவும் உயர்ந்த குண முடையவர். அவரைச் சேர்த்துக் கொள்வது நெருப்பை மடியில் கட்டுவது போல என்பது தர்மமல்ல.

நல் : ஆமாம். உன்னோடு படித்தவன் என்று சொல்லித்தான் அந்த மோகனரங்கனுக்கு எடுத்த எடுப்பில் ஐந்நூறு ரூபாய் சம்பளம் போட்டு உத்யோகம் கொடுத்தேன். அது என்ன ஆச்சு? அந்த நன்றி கெட்ட பயல் சொல்லாமல் நின்று விட்டான். அவுங்கப்பன் சொல்லியும் கூட கேட்கவில்லை. அப்படித்தான் இருப்பான் இவனும்.

வச : மோகனரங்கன் என்னோடு படித்தவர் என்பதற்காகவா நீங்கள் உத்யோகம் தந்தீர்கள்? அவருடைய தந்தை ராஜப்பா உங்களுக்கு மிகவும் வேண்டியவர் என்பதற்காக அல்லவா உடனே ஐந்நூறு ரூபாய் சம்பளம் போட்டு வேலை தந்தீர்கள்? எனக்காகவா?

நல் : அவனும் உன்னோடு படித்தவனுச்சே என்றுதான் நான் அவனுக்கு உத்யோகம் தந்தேன். அவன் அமெரிக்காவுக்குப் போகும்போதாவது ஒரு வார்த்தை சொன்னானா?

வச : அதற்கும் இதற்கும் என்னப்பா சம்பந்தம்? என் உயிரைக் காப்பாற்றியவர் சுந்தரம். அவருக்கு நான் என் நன்றியைச் செலுத்த ஒரு சந்தர்ப்பம் தரக்கூடாதா, அப்பா! யாருக்கோ என்னென்னமோ உதவியெல்லாம் செய்கிறீர்களே அப்பா! இதைச் செய்யக் கூடாதா, எனக்காக?

நல் : உனக்காக செய்யலாம்தான். இந்தப் பசங்கள் கொஞ்சங் கூட வணக்க—ஒடுக்கம், மட்டு—மரியாதை தெரியாத பசங்களம்மா ... இவனையெல்லாம் ...

வச : சுந்தரம் வெகு நல்லவரப்பா! ரொம்ப மரியாதையறிந்தவர். அப்படி ஏதாவது தவறி நடந்தால் உடனே நீக்கிவிடுங்கள்.

நல் : சுந்தரத்துக்கு வேலை கொடுக்காமல் விடமாட்டாய் போலிருக்கிறதே !

வச : அவர் குடும்பம் ரொம்ப கஷடப்படுகிறதப்பா. அவருடைய தாயார் ஒரு வருஷமாக ரொம்ப அசௌகர்யமாம். மருந்துக்குக்கூட காசில்லையாம். நாலு தங்கைமார்கள் வேறே ... சிறு குழந்தைகள்.

நல் : சரி, போ ... ஏதாவது வேலை கொடுப்போம் ... ஆனல் நானூறு, ஐந்நூறு தர முடியாது. இரு நூறு, இரு நூற்றைம்பது ரூபாய்க்கு மேல் இப்போ தர முடியாது.

வச : பரவாயில்லை. அதையாவது கொடுங்கள்.

நல் : சரி ... ஆகட்டும் போ.

வச : நாளைக்கு சுந்தரத்தை வரச்சொல்லி ஆள் அனுப்பட்டுமா ?

நல் : நீ அனுப்ப வேண்டாம்; நானே அவனை வரச் செய்கிறேன்.

வச : ஆமாம் அப்பா ! நீங்களே வரச் சொல்லி வேலை கொடுங்கள்.

(என்று சந்தோஷம் காட்டுகிறாள்.)

நல் : நீ சொல்வதெல்லாம் நான் கேட்க வேணும். ஆனல் நான் சொல்றது மட்டும் நீ கேட்கப்படாது.

வச : என்னப்பா நீங்கள் சொன்னது நான் கேட்கவில்லை ?

நல் : கணேசர் விஷயம் சொன்னேனே. யோசனை செய்தாயா ?

வச : அதுவா ! அதற்கென்னப்பா அவசரம் ? அது இவ்வளவு அவசரமாகத் தீர்மானிக்கக்கூடியதா ? அம்மாவும் வரட்டும். நிதானமாக யோசிப்போமே. ஏன் அவசரப் படவேணும்.

நல் : அவசரம் ஒன்றுமில்லை ... நிதானமாகவே யோசனைபண்ணு. நல்லா யோசனை செய்து சொல்லு.

வச : ஆகட்டும். (என்று போகிறாள்.)

காட்சி XII

இடம் : நல்லப்பர் வீட்டில் அவருடைய அறை
காலம் : காலை

[நல்லப்பர் ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருக்கிறார்.]

நல் : டேய்! நஞ்சப்பா!

நஞ் : (நஞ்சப்பன் ஓடிவந்து வணங்கி வாய் பொத்தி நின்று) எஜமானே!

நல் : மானேஜர் ஆபீசில் சுந்தரம் என்ற பேருள்ள ஒரு பையன் வந்திருப்பான். அவனை இங்கே வரச் சொல்லு.

(நஞ்சப்பன் போகிறான் ... சற்று நேரத்தில் சுந்தரம் வருகிறான். புன்சிரிப்போடு நல்லப்பரைப் பார்த்து வணங்குகிறான்.)

நல் : வாப்பா சுந்தரம். இப்போதுதான் வழி தெரிந்ததா?

சுந் : நேற்றே வந்திருந்தேன்.

நல் நேற்று வந்தது தெரியும். அதற்கு முன்னால்?

சுந் : அதற்கு முன்னாலும் உங்கள் நினைவு எனக்கு உண்டு. ஆனால் வரவேண்டிய சந்தர்ப்பம் நேரவில்லை.

நல் : பொன்னுசாமி உன்னை 'டிஸ்மிஸ்' செய்து எத்தனை நாளாச்சு?

சுந் : ஆறு மாதங்களுக்கு மேலாச்சு.

நல் : இந்த ஆறு மாசமாக ஏன் வரக்கூடாது?

சுந் : என்னைத் தாங்கள் ஏற்றுக் கொள்வீர்களோ மாட்டீர்களோ என்று தயங்கினேன்.

நல் : என்ன தயக்கம்?

சுந் : என் தந்தையிடத்தில் தங்களுக்கு வருத்தம் என்று.

நல் : உன் தந்தையிடத்தில் எனக்கு வருத்தம்தான். அதனால் உனக்கும் எனக்கும் என்ன?

சுந் : ஒன்றுமில்லை.

நல் : நீ உடனே வருவதற்கென்ன ?

சுந் : வராதது தவறுதான்.

நல் : சந்தோஷம் ... பார்த்தாயா, அந்தப் பொன்னுசாமியின் அயோக்யத்தனத்தை ! உங்கப்பாவுக்கு அப்போதே சொன்னேன். அவனை நம்ப வேண்டாம் என்று ... அவர் என்னை நம்பாமல் அந்த அயோக்யப் பயலை நம்பினார். அதன் பலன் உங்கள் குடும்பம் இப்போ தவிக்கிறது.

சுந் : (மௌனம்)

நல் : ஆறு மாசமாக உங்கள் குடும்பம் ரொம்ப கஷ்டப்படுகிறதாமே ?

சுந் : ஆம்.

நல் : பார்த்துக்கொள். பணக்காரனைத் திட்டுகிறார்களே, கடைசியில் பணக்காரன் தயவுதானே வேண்டியிருக்கிறது!

சுந் : பணமில்லாமல் என்ன முடியும் ?

நல் : உங்கப்பாவுக்கு நான் எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். அவர் பணத்தை ரொம்ப அவசரித்தார். கண்ணை மூடிக் கொண்டு செலவு செய்தார். உங்களையெல்லாம் திண்டாட விட்டுப் போனார்.

சுந் : கடன் வேறு இருந்தது. அம்மா நகைகளையெல்லாம் விற்றுக் கடனைக் கட்டினோம்.

நல் : அது வேறையா ! பார்த்துக்கோ, உங்களப்பா மாதிரி நீ இருந்துவிடாதே !

சுந் : பணக் கஷ்டத்தை நான் ரொம்ப அனுபவித்து விட்டேன். நா அப்பா மாதிரி செலவு செய்ய முடியுமா ?

நல் : பொன்னுசாமியிடம் என்ன சம்பளம் வாங்கிக் கொண்டிருந்தாய் ?

சுந் : இருநூறு ரூபாய்.

நல் : உனக்கு நான் இருநூற்றைம்பது தருகிறேன் உங்கப்பா எனக்கு எவ்வளவோ நஷ்டமுண்டாக்கிவிட்டார். இருந்தாலும நான் உனக்கு உதவி செய்ய வேணும். நீ வசந்தாவுடன் படித்தவன். அவளுக்கும் இதில் சந்தோஷம்.

சுந் : ஆம், வசந்தாவின் அன்பு வெகு அபூர்வமானது.

நல் : உனக்கு வேலை தரவேணும் என்று வசந்தா தான் ரொம்பச் சொன்னாள் ... சரி உனக்கு என்னென்ன வேலை தெரியும்?

சுந்: எனக்குப் பல வேலை தெரியும். 'டைப் ரைட்டிங்' 'புக் கீப் பிங்' 'அகவுண்டிங்' 'கரஸ்பாண்டென்ஸ்' 'சுறுக்கெழுத்து' முதலிய பல வேலைகள் தெரியும்.

நல்: இப்போதைக்கு ... அந்த மோகனரங்கன் விட்டுப்போன வேலை ... காரியதரிசி வேலையில் இரு. பின்னால் வேண்டு மானால் மாற்றிக் கொள்ளலாம். ஆனால் அந்தப்பயல் மோகனரங்கன் செய்த மாதிரி செய்து விடாதே.

சுந்: இல்லை அப்படி ஒன்றும் செய்ய மாட்டேன்.

நல்: சரி அடுத்த அறை உன்னுடைய ஆபீஸ் ரூம். மற்ற விவ ரங்களை அப்போதைக்கப்போது சொல்லுகிறேன். நீ இப் போதே வேலை பார்க்க ஆரம்பிக்கிறாயா, அல்லது இரண் டொரு நாள் போகட்டுமா?

சுந்: நான் இப்போதே தயார். வேலையை ஒப்புக் கொள்ளு கிறேன் ... ஒப்புக் கொண்டபின் கொஞ்ச நேரம் எங்கள் வீட் டுக்குப் போய் தாங்கள் எனக்குச் செய்த உதவியை என் தாயாரிடம் சொல்லிவிட்டுவர அனுமதி கொடுங்கள். எனக்கு வேலை கிடைத்ததா என்று அறிய மிகவும் ஆவலாக இருப் பார்கள் என் தாயார்.

நல்: ஆமாம் ... உங்கள் தாயார் சௌக்யமா?

சுந்: சௌக்யம். அவர்கள்தான் உங்களிடம் வேலை கேட்கும் படி என்னைத் தூண்டினவர்கள்.

நல் சந்தோஷம். ஆபீஸ் ரூமை ஒப்புக் கொள். பிறகு வீட்டுக் குப்போய் தாயாரிடம் நான் வேலை கொடுத்ததைச் சொல்லி விட்டு சாவகாசமாக வா ... டேய்! நஞ்சப்பா!

(நஞ்சப்பன் வருகிறான்.)

நல்: மானேஜரிடம் சொல்லி அடுத்த ஆபீஸ் ரூம் சாவியைச் சுந்தரத்திடம் கொடுக்கச் சொல்.

(நல்லப்பர் போய்விடுகிறார். மானேஜர் சாவியைக் கொண்டு வந்து ரூமைத் திறந்து விட்டு சுந்தரத்திடம் ஒப்படைக்கிறார். சுந்தரம் தன் உத்யோக நாற்காலியில் உட்கார்ந்து அங் குள்ள எல்லாவற்றையும் கண்காணிக்கிறான்.

சுந்தரத்துக்கு ஆள் அனுப்பி வரவழைக்கும்படி நல்லப்பருக்கு அன்று காலையில் கிணைப்பூட்டினவள் வசந்தா. ஆதலால் சுந்தரம் வந்ததையும் நல்லப்பருடன் வெயிட்டிங் ஹாலில் இருந்ததையும் வசந்தா அறிவாள். அதனால் நல்லப்பர் மேல் மாடிக்குப் போன உடன் வசந்தா வெளியே வந்து சுந்தரத்தை நாடி அவன் இருந்த அறைக்கு வருகிறாள்.)

சுந்: வசந்தா! இவ்வளவு சீக்கிரம் எனக்கு நீ இந்த உபகாரம் செய்ததை நான் என்னவென்று புகழ்வேன்!

வச: அதெல்லாம் அப்புறம் சாவகாசமாகப் புகழ்ந்து கொள்ளலாம் ... இப்போ அப்பா என்ன வேலை கொடுத்திருக்கிறார்? அதைச் சொல்லுங்கள்.

சுந்: மோகனரங்கன் விட்டுப்போன வேலை.

வச: பேஷ். என்னுடைய கோரிக்கை பலித்தது. அந்த வேலையில் இருந்தால்தான் நீங்கள் இங்கேயே இருக்கலாம். நாமும் அடிக்கடி சந்திக்கலாம். சரி ... அப்பா முகம் கோணமல் நடந்து கொள்ளுங்கள். நீங்கள் இங்கே வேலைக்கமர்ந்ததை என்னுடைய நல்லகாலமென்று எண்ணிக் கொண்டிருக்கிறேன். ஏதாவது நேரிட்டு நீங்கள் இங்கே இல்லாமற் போக நேர்ந்துவிட்டால் என் வாழ்க்கையின் இன்பமே போய்விடும். ... எங்கப்பா கோபக்காரர் ... உங்களைச் சேர்த்துக் கொள்ளவே மாட்டேன் என்றார். பிறகு நான் அழுது கெஞ்சினேன். அப்புறம் மனசு இளகினார் ... ஆமாம் ஜாக்ரதை ... உங்களுக்கு வேலை போனால் அது எனக்குத்தான் கேடாக முடியும். ... பார்த்துக் கொள்ளுங்கள்.

சுந்: வசந்தா! நான் வெகு ஜாக்ரதையாக நடந்து கொள்ளுவேன். உங்களப்பா எவ்வளவு கோபித்து என்னை என்ன சொல்லிவிட்டாலும் உனக்காக நான் எதையும் சகித்துக் கொள்வேன். சந்தேகப்பட வேண்டாம்.

வச: அது போதும். பார்த்துக் கொள்ளுங்கள் ... இன்னொன்று. அப்பா ஊரில் இருக்கிற போதெல்லாம் நாம் சந்திக்க முடியாது. அதனால் நான் உங்களைக் கவனிப்பதில்லை என்று நினைத்துவிடக் கூடாது.

சுந்: நான் அப்படியெல்லாம் நினைத்துவிடமாட்டேன். வசந்தா ... நீ எனக்கு நேற்று தந்த கடிதத்தோடு வைத்திருந்த .....

வச: வேண்டாம் ... அதைப் பற்றி நீங்கள் ஒன்றுமே சொல்லக் கூடாது.

(என்று சொல்லிக்கொண்டே வசந்தா போகிறாள்.)

காட்சி XIII

இடம் : சுந்தரத்தின் வீட்டில் ஒரு அறை

காலம் : காலை.

[முத்து வீரப்பனும் சுந்தரமும் ரகசியமாகப் பேசிக் கொண்டிருக் கிறார்கள்.]

முத்து : என்ன சுந்தரம்! நீ நல்லப்பரிடம் வேலைக்கமர்ந்து ஒன் றரை மாதத்துக்கு மேல் ஆய் விட்டதே. ஒரு மாதம்பொறுக் கும்படி சொல்லியனுப்பினாய். ஒன்றரை மாதத்துக்கு மேல் ஆகி விட்டது——ஒரு சமாசாரமும சொல்லியனுப்ப வில்லையே! என் வேலை கிடைத்த உடன் நாம் பேசிக் கொண் டதை யெல்லாம் மறந்து விட்டாயா?

சுந்: என்னத்தை நான் மறந்து விட்டேன்?

முத்து : புரட்சி உண்டாக்க வேண்டும் என்று நீ துடித்த துடிப்பை.

சுந்: அதை நான் ஒருக்காலும் மறக்க மாட்டேன். இன்னும் என் உள்ளம் அதைப்பற்றித் துடித்துக் கொண்டுதானிருக்கிறது. பணக்காரன் - ஏழை, முதலாளி - தொழிலாளி என்ற வேறு பாடுகளால் விளைகின்ற தீமைகள் குறைந்து இந்த நாட்டு ஏழை மக்களுக்கு ஒரு விமோசனம் வருகிறவரை என் மனம் நிம்மதியடையாது. அதற்கான புரட்சியை உண்டாக்க என்னு லான எல்லா முயற்சிகளையும் செய்வேன். ஏன் உனக்குச் சந்தேகம்?

முத்து : உன் மேல் எனக்குச் சந்தேகமே இல்லை. அதனால்தான் நான் உன்னையே நம்பி இங்கே கர்த்துக் கொண்டிருக் கிறேன்.

சுந்: முத்து? நாம் பொருள் சேதமோ ஆள் சேதமோ இல்லாத வழியில் புரட்சி உண்டாக்க வேணும். அதற்கு அவசரப்படக் கூடாது. மிகவும் நிதானமாகப் பொறுமையோடு உழைக்க வேண்டும். ஆத்திரப்பட்டு கொஞ்சம் பதட்டம் காட்டிவிட் டாலும் எல்லாம் கெட்டுப் போகும்.

முத்து : சரி.....அப்படியே செய்வோம். அதற்கும் ஒரு திட்டம் வேண்டாமா? அதைப்பற்றி நீ ஒன்றும் சேதி அனுப்ப வில்லையே என்று தான் உன்னைப் பார்த்துப் போக வந்தேன்.

சுந் : ஒரு திட்டம் வேண்டியது தான். அதை நானும் யோசனை செய்து கொண்டு தான் வருகிறேன். அந்தத் திட்டம் உருப்படியாவதற்குப் பூர்வாங்கமான சில காரியங் களைச் செய்து முடிக்க வேணும். அதைத்தான் இப்போது கவனித்து வருகிறேன்.

முத்து : என்ன ?

சுந் : நல்லப்பருடைய ஆஸ்தி வெகு விஸ்தாரமானது. அவருக்கு ஐந்து தொழிற்சாலைகள் ஏகபோக சொந்தம். ஏராளமான நிலபுலங்கள் வேறே. இவைகளில் வேலை செய்யும் தொழிலா ளிகளும் உழவாளிகளும் பத்தாயிரத்துக்கும் அதிகம். இவர்களையெல்லாம் புரட்சிக்கு வசப்படுத்த யாரைக்கொண்டு எப்படி எப்படி முயற்சி செய்ய வேணும் என்பதை இப்போது ஆராய்ந்து வருகிறேன்.

முத்து : ஆராய்ந்த வரைக்கும் எப்படியிருக்கிறது ?

சுந் : நான் அங்கங்கே உள்ள சில முக்கியஸ்தர்களோடு பேசிப் பார்த்தேன். நல்லப்பரிடம் வேலை செய்கிற எல்லோரும் - பெரிய சம்பளம் வாங்குகிறவர்களும் சின்ன சம்பளம் வாங்கு கிறவர்களும் - எல்லோரும் மிகவும் அதிருப்தியடைந்து தான் இருக்கிறார்கள்.

முத்து : ஏன் ?

சுந் : ஏன் என்றால் மற்ற இடங்களில் இருப்பதைக் காட்டிலும் சம்பளம், போனஸ், விடுமுறை—முதலான எல்லாம் இங்கே குறைச்சல்.....ஆனால் வேலை வாங்குவதில் மட்டும் வெகு கண்டிப்பு.

முத்து : பின்னெப்படி மற்ற இடங்களைக் காட்டிலும் இங்கே மட்டும் ஓசையில்லாமல் வேலை நடந்துவருகிறது?

சுந் : வெறும பயத்தினால் தான்.

முத்து : யாருக்குப் பயப்படுகிறார்கள் ?

சுந் : சர்க்கார் பயம். சர்க்காரிடத்தில் நல்லப்பருக்கு ரொம்ப செல்வாக்குண்டு. டெலிபோனில் ஒரு வார்த்தை சொன்னால் உடனே ஏராளமான போலீசும் பட்டாளமும் வந்து விடும். அது மட்டுமல்ல. நல்லப்பர் சொந்த போலீசு மாதிரி சுமார் ஐந்நூறு முரட்டுப் பேர்வழிகளை மிக நல்ல சம்பளம்கொடுத்து அங்கேயே காவல் வைத்திருக்கிறார்.

முத்து : ஆம்—அது எனக்குத் தெரியும். முதலில் இந்தக் குண் டர்களை நாம் வசப்படுத்த வேண்டும். இவர்கள்தான் நம்மைச்

சேர்ந்த புரட்சித் தொண்டர்கள் யாரும் அங்கே நுழைய முடியாதபடி பாரா செய்து வருகிறார்கள்.

சுந்: அதனால்தான் நாம் வெகு நிதானமாக வேலை செய்ய வேண்டும் என்று நான் சொல்லுவது——நான்கூலிக்கிறபடி தொழிலாளிகளை வசப்படுத்தி விட்டால் இந்த குண்டர்களைப் பற்றி நாம் கவலைப்பட தேவையில்லை.

முத்து: அதெப்படி முடியும்? இந்தக் குண்டர்களை வசப்படுத்தா மல் நாம் அங்கே பிரசாரம் செய்யவே முடியாதே?

சுந்: நீ நினைக்கிற முறையில் அங்கே பிரசாரம் செய்ய முடியாது. செய்யவும் கூடாது.

முத்து: பின்னெப்படித் தொழிலாளிகளையும் உழவாளிகளையும் நாம் வசப்படுத்த முடியும்?

சுந்: முடியும். எப்படியென்றால் இந்தத் தொழிலாளிகளையும் உழவாளிகளையும் மிரட்டி வேலை வாங்குகிற அதிகாரிகள் அங்கங்கே இருக்கிறார்கள். அவர்கள் எல்லாரும் சேர்ந்தால் ஒரு ஐம்பது பேருக்கு மேல் இல்லை. இந்த ஐம்பது பேரையும் ஆட்டிவைக்கக் கூடியவர்கள் பத்துப் பன்னிரண்டு பேர்கள் தான் உண்டு. இந்தப் பன்னிரண்டு பேரையும் வசப்படுத்தி விட்டால் குறிப்பிட்ட நாளில் ஏககாலத்தில் எல்லா தொழி லாளிகளும் வேலை நிறுத்தத்தில் இறங்கும்படி செய்து விடலாம்.

முத்து: அப்படியா! அப்படியானால் இவ்வளவு சீக்கிரம் நீ இதை யெல்லாம் கண்டறிந்தது மெச்சத்தக்கதுதான்.

சுந்: நானாகக் கண்டு விட்டதல்ல; தானாக வந்தது. இந்தவிவரங் களையெல்லாம் நன்றாக அறிந்திருக்கிற ராமநாதன் என்கிற ஒரு 'டிராவ்ட்ஸ்மன்'—அங்கே வெகு நாளாக வேலையில் இருக்கிறவன்—சொன்னது. உண்மையாகவும் யோக்யமாக வும் உழைக்கிறவர்களுக்கு நல்லப்பர் உதவி செய்வதில்லை என்று அவர் மேல் சொம்ப எரிச்சல் கொண்டிருப்பவன் ராமநாதன். புரட்சி உண்டாக்க வேண்டிய ஒத்தாசை செய்யக் கூடியவன்.

முத்து: அப்படியானால் அவனை ஒரு நாள் என்னிடம் அனுப்பு - சுந்தரம்! நானும் அவனோடு பேசி நமக்கு வேண்டிய சில விஷயங்களைக் கிரகிக்கிறேன்.

சுந்: அனுப்புகிறேன், கொஞ்சம் பொறு. என்னுடைய திட்டப் படி ராமநாதனையும் தயார் செய்து உன்னிடம் அனுப்பு கிறேன்.

முத்து : உன்னுடைய திட்டம் என்ன ?

சுந் : என்னுடைய திட்டம் என்ன வென்றால், நான் முன் சொன்ன அந்த பத்துப் பன்னிரண்டு முக்யஸ்தர்களுடன் நானே பேசி அவர்களை வசப்படுத்திக் கொண்டு, அவர்கள் மூலமாக அந்த ஐம்பது அதிகாரிகளையும் தயார் செய்து, குறிப்பிட்ட நாளில் எல்லா இடங்களிலும் வேலை நிறுத்தம் உண்டாக்கி, நல்லப்பரைத் திடீரென்று திகைக்க வைக்க வேண்டும். எதிர்ப்பே இல்லாமல் இதுவரையிலும் எதேச்சாதிகாரம் நடத்திய நல்லப்பர் திணறிப் போய் ராஜி பேச முயற்சிப்பார். அந்த சமயத்தில் நீ தொழிலாளர் கட்சியைப் பேச அதிகாரமுள்ளவனாகவும் நான் உனக்கும் நல்லப்பருக்கும் மத்தியில் சமரச முயற்சி செய்கிறவனாகவும் வேலை செய்து இப்போதுள்ள அநீதிகளுக்குப் பரிகாரம் உண்டாக்க வேண்டும்.

முத்து : சரி, அப்படியே செய்வோம். அதற்கு ஒத்தாசையாகவே நானும் அந்த ராமநாதனுடன் பேசுகிறேன். நானும் அங்குள்ள நிலைமைகளை நன்றாக அறிந்து கொள்வது நல்லது தானே ? ராமநாதனை என்னிடம் அனுப்பேன் ?

சுந் : அனுப்புகிறேன்——இன்னும் ஒரு வாரம் பொறு.

முத்து : சரி——ஒருவாரம் கழித்தாவது மறக்காமல் அனுப்பு.

சுந் : அந்த ராமநாதன் இப்போது நீ இருக்கிற இடத்துக்கு வந்து போவதை யாராவது அறிந்து விட்டால் எல்லாம் கெட்டுப் போகுமே ?

முத்து : அவன் வருவது யாருக்கும் தெரியாமல் நான் பார்த்துக் கொள்ளுகிறேன்——ஆனால் அவனை இந்த விலாசத்துக்கு அனுப்பு.

(என்று ஒரு துண்டுக் கடிதத்தில் விலாசம் எழுதித் தருகிறான்.)

சுந் : சரி, இன்னும் இரண்டு மூன்று நாளைக்குள் அனுப்புகிறேன்——ஆனால் முத்து ! என் திட்டத்துக்கு விரோதமாக நீ வேறு எந்த முயற்சியும் செய்யக்கூடாது. அந்த வாக்குறுதியை மறந்து விடாதே. அதை நம்பித்தான் நான் உன்னோடு சேர்ந்து வேலை செய்யத் தீர்மானித்திருக்கிறேன்.

முத்து : உனக்கு விரோதமாக நான் ஒன்றும் செய்ய மாட்டேன்.

(முத்து போகிறான்.)

காட்சி XIV

இடம் : நல்லப்பருடைய சொந்த 'ஆபீஸ் ரூம்'
காலம் : முற்பகல்

[நல்லப்பர் தம்முடைய பாதுகாப்புக்காகவும், தொழிலாளிகளிடத்தில் பிரசாரம் செய்து வேலை நிறுத்தம் முதலிய கிளர்ச்சிகளைத் தூண்டக்கூடியவர்கள் யாரும் அவருடைய எல்லைக்குள் வராமல் பார்த்துக் கொள்ளவு மென்றே சொந்த போலீஸ் மாதிரி ஐந்தாறு பேர்களை ராணுவ உடை கொடுத்து நல்ல சம்பளத்தில் வைத்திருக்கிறார். இந்த ஐந்தாறு பேர்களில் நானூற்றைம்பது பேர்கள் தினக்காலுக்கு ஒன்றாக இருக்கும் அவருடைய ஐந்து (மில்கள்) தொழிற் சாலைகளிலும் தோட்டங்களிலும் காவல் காக்கிறவர்கள். மீதி ஐம்பது பேரும் இளமையிலும் வலிமையிலும் மற்றவர்களைக் காட்டிலும் சிறந்தவர்கள என்று கருதப்பட்டவர்கள் இவர்கள் நல்லப்பருக்கும் அவர் வீட்டுக்கும் காவல். இந்த 500 பேருக்கும் தலைவன வீரபத்ரன். அந்த வீரபத்ரன் நல்லப்பரைப் பார்க்க வருகிறான்.

நல்லப்பர் தனியாக தம்முடைய நாற்காலியில் உட்கார்ந்திருக்கிறார். பணியாள் **நஞ்சப்பன்** அறைக்குள் வந்து வணங்கி வாய்பொத்தி நின்று நல்லப்பரைப் பார்க்கிறான்.]

நல் ; ஏண்டா ! என்ன ?

நஞ் : பெரிய சிப்பாய் வந்திருக்காருங்க எஜமானே.

நல் : யார் வீரபத்ரனா ?

நஞ் : ஆமாங்க எஜமானே.

நல் : வரச் சொல்லு.

[நஞ்சப்பன் போகிறான். வீரபத்ரன் ஒரு ராணுவ அதிகாரி போன்ற உடையுடன் வந்து 'சல்யூட்' செய்துவிட்டு 'அட்டென்ஷன்' (ராணுவ வீரன் மாதிரி) நிற்கிறான்.]

நல் : என்ன வீரபத்ரா, ஏதாவது விசேஷம் உண்டா ?

வீர : விசேஷம் ஒன்றுமில்லிங்க. எஜமானிடத்தில் ஒரு விண்ணப்பம் செய்து கொள்ள வேணும் ?

நல் : என்ன விண்ணப்பம் ?

வீர : ஒன்றுமில்லீங்க. நம்ம சிப்பாய்கள் கொஞ்சம் சம்பளம் கூட்டித்தர வேணுமுன்னு கேக்கிறாங்க.

நல் : என்ன! இப்பத்தானே ... இன்னும் மூன்று மாசங்கூட ஆகவில்லையே. ... சம்பளம் கூட்டவேணும் என்று கேட்டாய்; நான் ஆளுக்கு நூறில் இருந்து நூற்றுப் பத்தாக உயர்த்தினேனே! சர்க்கார் போலீசுக்குக்கூட நூற்றுப் பத்து ரூபாய் சம்பளம் இல்லையே! என்ன வீரபத்ரா?

வீர : ஆமாங்க எஜமானே. கூட்டித்தான் தந்திருக்கிறிங்கோ. அதை இல்லேம்பேனுங்களா? ..... இருந்தாலும் ..... என்னமோ நாங்களும் .....ராப்பகலா கண் கொட்டாமல் காவல் செய்யிறோம் ..... எஜமானப்பத்தி.....யாராவது கொஞ்சம் குறைவாகப் பேசினாக்கூட விடமாட்டோம். நெத்துக்கூட கூட பாருங்க.....நம்ம.....நம்ம .....

நல் : நேற்று என்ன? என்ன நடந்தது? கூச்சமல் சொல்லு.

வீர : ஒண்ணுமில்லிங்கோ ...

நல் : ஒளிக்காதே வீரபத்ரா! சொல்ல வந்ததைச் சொல்லு.

வீர : நம்ம ராமநாதன் இருக்கிறாங்களே .....

நல் : யாரு? 'டிராவ்ட்ஸ்மன்' ராமநாதனா?

வீர : ஆமாங்க.

நல் : அவன் என்ன செய்தான்?

வீர : அவரு நாலஞ்சு மில் வேலைக்காரரோட பேசிக்கிட்டிருந்தாருங்க. அப்போ. எஜமான் நீங்க ... என்னமோ அவர் கல்யாணத்துக்காகக் கேட்ட பணம் தரலேங்களாம் ... அதைப் பற்றி, எஜமான், உங்களைக் குறையாப் பேசினாருங்கோ...நான் உடனே ரொம்ப கண்டிச்சிப் பிட்டேனுங்க.

நல் : என்ன குறைவாகப் பேசினான்?

வீர : "உண்மையா ஒழைக்கிறவங்களுக்கு... எஜமான் ஒண்ணும் ஒதவி செய்யறதில்லே. அதனாலேதான் 'ஸ்ட்ரைக்' செய்யணும் இங்கிற நெனைப்பு வருது" ண்ணு பேசிக்கிட்டிருந்தாங்க. ... நான் அதை ரொம்ப கண்டிச்சிப்பிட்டேனுங்க ... இப்படிப் பட்ட பேச்சுக்கள் துளிகூட வராமலிருக்க ரொம்ப ஜாக்ரதையாக இருக்க வேணுங்க, எஜமானே. எங்கே பார்த்தாலும் இப்ப இந்த 'ஸ்ட்ரைக்' பேச்சுத்தானுங்க. நம்ம எல்லையிலே தான் அது இல்லிங்கோ. அதுக்கு கொஞ்சம் சம்பளம் ...

நல் : அந்த ராமநாதன் அப்படியா செய்தான்? ... டேய் நஞ்சப்பா?

(நஞ்சப்பன் வருகிறான்.)

நல் : அந்த டைப்பிஸ்ட் ராமநாதனைக் கூட்டிவா.

(நஞ்சப்பன் போகிறான்.)

நல் : சரி ... வீரபத்ரா! நீ நல்ல வேலை செய்தாய். இந்த 'ஸ்ட்ரைக்' பேச்சுக்களை உடனுக்குடன் அடக்கவேணும். அது விஷயத்தில் நீயும் உன்னுடைய ஜவான்களும் ரொம்ப உஷாராக இருக்க வேணும்.

வீர : தடை யென்னுங்க. அதுக்குத்தானே, எஜமானே, காத்திருக்கிறேன். அதைவிட எங்களுக்கு வேறே என்ன வேலைங்க.

நல் : சரி ... இப்போதைக்கு நம்ம ஜவான்களுக்கு மாதம் ஐந்து ரூபாய் அதிகமாகத் தரச் செய்கிறேன். பிறகு பார்த்துக் கொள்வோம்.

வீர : எஜமான் பிரியம் எப்படியோ அப்படி நடக்கிறேனுங்க... எனக்கும் கொஞ்சம் ...

நல் : உனக்கா? ... சரி உனக்கும் இருபத்தைந்து ரூபாய் அதிகப்படுத்தி எழுநூற்று இருபத்தைந்தாகத் தர உத்தரவிடுகிறேன்.

(ராமநாதனைக் கூட்டிக்கொண்டு நஞ்சப்பன் வருகிறான். ராமநாதனைப் பார்த்தவுடன் நல்லப்பர் வெகு கோபாவேசத்துடன் அவனைப் பார்த்து :-)

நல் : டேய்! ராதமநாதா! நேற்று என்னமோ மில் வேலைக்காரருடன் 'ஸ்ட்ரைக்' செய்ய வேணும் என்று தூண்டினாயாமே? ஏண்டா 'பிளாகாட்'?

ராம : நான் ஒன்றும் 'ஸடிரைக்' செய்ய வேணும் என்று யாரையும் தூண்டவில்லைங்களே.

நல் : கேட்டாயா வீரபத்ரா! நீயே விசாரி.

வீர : என்னமோ தெரியாமே சொல்லிவிட்டாருங்கோ, எஜமான்; கோவிச்சுக்கக் கூடாதுங்க.

நல் : இவன் 'ஸடிரைக்'கைப் பற்றிப் பேசினனை, இல்லையா? அதைக் கேள்.

ராம : நான் 'ஸ்ட்ரைக்' செய்ய வேணும் என்று பேசவேயில்லை சார்.

நல் : 'ஸ்ட்ரைக்' பேச்சு வந்துதா, இல்லையா, அதைச் சொல்?

ராம : 'ஸ்ட்ரைக்' என்கிற வார்த்தை வந்தது வாஸ்தவம்தான். ஆனால் ...

நல் : 'ஆனால்' என்ன ? ... ஆனால் ... 'ஸ்ட்ரைக்' என்று நீ சொன்னதே போதாதா ? ... ஏண்டாலே! கல்யாணத்துக்கு நீ கேட்ட பணம் உடனே தரவில்லை என்று 'ஸ்ட்ரைக்' பேச்சுத் துணிந்து விட்டாயா? கல்யாணத்துக்குப் பணம் தரலாமென்றுதான் நானும் இருந்தேன். நீயே அதில் மண்ணைப் போட்டுக் கொண்டாய் ... சரி ... போ ... ஒரு மாசத்துக்கு உன்னை 'சஸ்பெண்ட்' செய்திருக்கிறேன். போ .....

(ராமநாதன் தலை குனிந்து நிற்கிறான்.)

நல் : வீரபத்ரா ! அவனைப் போகச் சொல்லு.

(வீரபத்ரன் ராமநாதன் தோளைத் தொட்டு மெதுவாகத் திருப்பி விட்டு)

வீர : போங்க ... இப்ப உடனே போயிடுங்க ... எஜமான் கோபம் தணிஞ்சப் பிற்பாடு வரலாம் ...

(என்று கையைப் பிடித்துக் கடத்துகிறான். ராமநாதன் போய் விடுகிறான்.)

நல் : உடனுக்குடன் சூடு கொடுத்தால்தான் இந்த ஸ்ட்ரைக் பேச்சு வளராது.

வீர : ஆமாங்க எஜமான்.

நல் : சரி ... நீ போகலாம் ... நான் கொஞ்சம் வெளியே போய்வர வேணும்.

வீர : இன்னொரு சின்ன விண்ணப்பம் எஜமானே.

நல் : என்ன ?

வீர : கொம்ப அவசரமாக ஒரு மூவாயிரம் ரூபாய் அட்வான்சாகத் தர எஜமான் உத்தரவாக வேணும். மாசாமாசம் சம்பளத்தில் பிடித்துக் கொள்ளுங்கள் எஜமான்.

நல் : சரி — தரச் சொல்றேன் — நீ மட்டும் — ஜவான்களிடத்திலும் சொல்லி — கொம்ப ஜாக்ரதையாக இருக்கவேணும்.

வீர : எஜமானே! அதிலே நான் தவறுவேனுங்களா ?

இருவரும் போகிறார்கள்.)

காட்சி XV

இடம் : நல்லப்பருடைய அந்தரங்க அறை

காலம் : நடுப்பகல்

[நல்லப்பர் ஆழ்ந்த சிந்தனையோடு தம்முடைய நாற்காலியில் சாய்ந்துகொண்டு இருக்கிறார் வசந்தா வருகிறாள்.]

வச : அப்பா ! மணி ஒன்றுகப் போகுதே ! சாப்பிட வேண்டாமா? சாப்பாட்டுக்குமேல் எங்கோ அவசரமாகப் போகவேணும் என்று சொன்னீர்களே?

(நல்லப்பா திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்து)

நல் : ஆமாம். சாப்பாட்டுக்குமேல் கொஞ்சம் அவசரமாகப் போகத்தான் வேணும்.....நான் சாப்பிடவில்லையே என்கிற ஒன்றுதான் உன் விசாரம்.

வச : பின்னே, வேறென்ன விசாரம்?

நல் : என் விசாரத்தை நீ எங்கே கவனிக்கிறாய்?

வச : அப்படி என்னப்பா—உங்களுக்கு விசாரம் வந்தது?

நல் : என் விசாரமெல்லாம் உன்னைப் பற்றித்தான்.

வச : என்னைப் பற்றி உங்களுக்கு என்ன விசாரம்?

நல் : அம்மா ! நீ குழந்தை. என் விசாரம் உனக்குத் தெரியாது. உனக்கு முன்னால் இரண்டு பெண் குழந்தைகளும், இரண்டு ஆண் குழந்தைகளும் பிறந்து அந்த நாலு பேரும் சிசுக்களாகவே செத்துப் போனார்கள். எனக்கும் உங்கம்மாளுக்கும் உள்ளதெல்லாம் நீ ஒரே குழந்தைதான்.....உனக்குப் பருவம் வந்துவிட்டது. நீ நல்ல இடத்தில் வாழ்க்கைப்பட்டு செளக்யமாக இருக்க வேணும் என்பதுதான் எனக்கு விசாரம்.

வச : நான் நல்ல இடத்தில் வாழ்க்கைப்பட்டு நீங்களும் அம்மாளும் சந்தோஷப்படும்படியாக செளக்யமாக இருப்பேன், அப்பா ! நீங்கள் விசாரப்பட வேண்டாம்...சாப்பிட வாங்கோ.

நல் : சரி.....அப்படியானால் ரொம்ப சந்தோஷம். என் விசாரம் விட்டது.....அந்த நகைகளை யெல்லாம் பார்த்தாயா?

வச : எந்த நகைகளை?

நல் : உங்கம்மா உன்னிடம் காட்டவில்லையா ? கணேசருடைய தாயார் உங்கம்மாளிடம் உனக்கென்று கொடுத்தனுப்பி யிருக்கிறார்களே.....அந்த..... வைர நகைகளை ... நீ பார்க்க வில்லையா ?

வச : ஓ ! அதையா ! ... பார்த்தேனே!

நல் : எப்படியிருக்கின்றன பார் ! ... மிக உயர்ந்த வைரங்கள். அந்த நவரத்ன மாலை மட்டும் மூன்று லக்ஷம் ரூபாய் ... அந்த வைர வளையல்கள் எப்படியிருக்கின்றன பார்த்தாயா? அப்படி வைரங்கள் வேறெங்கும் கிடைக்காது.

வச : ஆமாம், எல்லாம் நன்றாகத்தான் இருக்கின்றன.

நல் : சரி ... உனக்குப் பிடித்தால் சரி.

வச : எனக்குத்தான் ஏராளமான நகைகள் இருக்கிறதே, அப்பா. நீங்கள் வாங்கித் தந்திருக்கிற நகைகளையே போட்டுக்கொள்ள முடியாமல் எல்லாம் பெட்டியிலே சும்மா கிடக்குது. இன்னும் இது வேறே என்னத்துக்கு ?

நல் : என்னுமோ ரொம்பப் பிரியமாக அனுப்பியிருக்கிறதை ஏன் வேண்டாமென்று சொல்ல வேணும். நீ போட்டால் போட்டுக் கொள் ; இல்லாவிட்டால் இதுவும்தான் சும்மா பெட்டியிலே கிடக்கட்டுமே!

வச : எனக்கு வேண்டாம்; திருப்பி அனுப்பிவிடுங்கள்.

நல் : ஐயோ ! அதென்ன அப்படிச் சொல்லுகிறாய் ? அவர்கள் ஒரு நல்ல நாள் பார்த்து நிச்சயம் செய்ய வருவதாக உங்கம் மாளிடம் சொல்லி நகைகளைக் கொடுத்தனுப்பி யிருக்கிறார்கள். உங்கம்மாளும் சம்மதிச்சு வாங்கிக் கொண்டு வந்திருக்கிறாள். நானும் நீ என் பேச்சைத் தட்டமாட்டாயென்று 'ஆகட்டும்' என்று சொல்லிவிட்டேன்.

வச : அப்பா ! நீங்களும் அம்மாளும் ஏன் இவ்வளவு அவசரப் படுகிறீர்கள் ? எனக்கு இவ்வளவு சீக்கிரமாக கல்யாணம் செய்து கொள்ள ஆசையில்லை.

நல் : கல்யாணம் வேணுமானால் உன் இஷ்டம்போல மெதுவாகச் செய்யலாம். இப்போ வெறும் நிச்சயதார்த்தச் சடங்குகள் மட்டும்தானே.

வச : வேண்டாமப்பா, இப்போ அதுகூட வேண்டாம். உங்களை யும் அம்மாளையும் நான் ரொம்ப கேட்டுக் கொள்ளுகிறேன், வேண்டாம்.

நல்: வந்துவிட்டாயே மறுபடியும் உன் பழைய வழிக்கு! அன்றைக்கு உன் பள்ளித் தோழன், அந்தச் சுந்தரத்துக்கு வேஷம் போட்டுத்தரச் சொன்னபோது 'பின்னல் யோசிப்போம்' என்று கொஞ்சம் இடங்கொடுத்து எழுதச் சொன்னாய். நானும் கொஞ்சம் பொறுக்கச் சொல்லி அவர்களுக்கு எழுதினேன். இப்போ ... இரண்டு மாசத்துக்கு மேலே ஆச்சு. மறுபடியும் அவர்கள் எனக்கு எழுதியிருக்கிறார்கள். நான் அவர்களுக்கு என் வாக்கைக் காப்பாற்ற வேண்டாமா!

வச: (மௌனம்)

நல்: இதற்குத்தானா உன்னைப் பெற்று வளர்த்து ... உன்னால் சந்தோஷம் அடையலாம் என்று காத்துக் கொண்டிருந்தோம் .....

வச: நீங்கள் சந்தோஷமடைய இது ஒன்றுதானா வழி?

நல்: நானும் உன் தாயாரும் சந்தோஷம் அடைய இலதவிட வேறு என்ன இருக்கிறது? நாங்கள் இஷ்டப்படுகிற இடத்தில் உன்னைக் கட்டிக் கொடுக்க முடியவில்லையென்றால் எங்களுக்குச் சந்தோஷம் ஏது?

வச: உங்கள் சந்தோஷத்தை நான் கவனிக்க வேண்டியவள் தான். நீங்களும் என் சந்தோஷத்தைக் கருத வேண்டாமா, அப்பா?

நல்: உன் சந்தோஷத்தைக் கருதித்தான் சொல்லுகிறோம். நீ சிறு பெண். உலக அநுபவம் போதாது. அதனால் இப்படிப் பேசுகிறாய். பின்னால் உனக்கு சௌக்யமும் சந்தோஷமும் உண்டாக்கக் கூடியது இதுதான். அதை நீ நன்றாக உணர வேண்டும்.

வச: (மௌனம்)

நல்: வசந்தா! தடை சொல்லாமல் நானும் உங்கம்மாளும் சொல்லுகிறபடி கேள். அதனால் உனக்கு நன்மையுண்டு. இல்லாவிட்டால் .....

(வசந்தாவுக்கு அழுகை வருகிறது. முன்றானையால் கண்ணைக் கசக்கிக்கொண்டு தலைகுனிந்து நிற்கிறாள்.)

நல்: சரி ஆரம்பித்து விட்டாயா? ... இனிமேல் இப்படி அழுது அழுது நீ தட்டிக் கழித்துவிட முடியாது ... கணேசர் ஒரு பெரியமனிதர். ரொம்ப நல்லவர். உனக்குத் தகுந்த வரன் அவர்தான்; நானும் வாக்குறுதி கொடுத்து விட்டேன். உங்கமமாளுக்கும் அதுதான் பிரியம். எங்களைத் திருப்தி செய்யவேண்டியது உன் கடமை. எங்கள் மனசு நோகப்பண்ணாதே.

வச: (அழுதுகொண்டே) அப்பா ... நானு ... உங்கள் மனசை நோகப் பண்ணுகிறேன்?

நல்: இல்லே யில்லே, நானும் உங்கம்மாவுந்தான் உன் மனசை நோகப் பண்ணுகிறோம் ... அல்லவா? அதுதானே நீ சொல்ல வருகிறாய்? ஆமாம் உன் மனசைத் நோகடிக்கத்தான் நாங்கள் உன்னைப் பெற்று வளர்த்தோம் ...இல்லேயா? வசந்தா ...

வச: (தேம்பித் தேம்பி அழுகிறாள்.)

நல்: சரி ... நீ அழாதே ... நல்லா யோசனை பண்ணிப்பார் ... இன்னும் கொஞ்சம் சாவகாசம் தருகிறேன் ..... எப்படியாவது மனசைச் சரிப்படுத்திக் கொண்டு நாங்கள் சொல்லுகிறபடி கேட்டு, நம்முடைய கௌரவத்தைக் காப்பாற்று ... யோசனை செய் ... சரி சாப்பிடப் போவோம்.

(நல்லப்பர் முன்னால் போகிறார். வசந்தா கண்ணைக் கசக்கிக் கொண்டே பின்னால் போகிறாள்.)

காட்சி 16

இடம்: புரட்சிக்காரர்கள் ரகசியமாகக் கூடுகிற மாந்தோப்பு வீடு

காலம்: மாலை இருட்டும் சமயம்

[முத்துவீரப்பன், கருப்பண்ணன், வீராசாமி முதலானவர்களும் இன்னும் சில புரட்சிக்காரர்களும் கூடி ஆலோசனை நடத்துகிறார்கள்.]

கருப்: அந்த சுந்தரம் என்ன சொன்னான்?

முத்து: சுந்தரம் நமக்கு அனுகூலமான பல வேலைகளை ஆரம்பித்து விட்டார். சீக்கிரம் நல்ல பலன் கிடைக்கும்.

வீரா: அந்த பல வேலைகள் என்ன?

முத்து: நல்லப்பருடைய மில்களிலும் வயல்களிலும் வேலை செய்கிற எல்லாரும் ஒரே சமயத்தில் 'ஸ்ட்ரைக்' செய்யும்படியான ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறார். . ...

கருப்: அடே! 'ஸ்ட்ரைக்கு'—கெடக்கட்டுமையா 'ஸ்ட்ரைக்கு'... அதைப்பத்தி இப்பென்ன அவசரம்? முதல்லே நல்லப்பனுடைய இரும்புப் பெட்டியிலிருக்கிற நகைகளைப் பத்தியும் சொக்கம்.....என்னமோ இருவது முப்பது லச்சம் இருக்கு முன்னுங்களே, அதைப் பாருங்க.....

முத்து: கருப்பண்ணு, அவசரப்படாதே. முதலில் நாம் அங்கே சுலபமாகப் போகக்கூடிய ஏற்பாடுகளைச் செய்துகொள்வோம். அதற்குப் பிறகு.....

கருப்: இந்தா...முத்து! இந்த 'கொக்குத் தலையிலே வெண்ணெய் வைக்கிற வேலை'யெல்லாம் ஒதவாது. மொதல்லே நமக்குப் பணந்தான் வேணும்.

வீரா: கருப்பண்ணு! நீதான் கொஞ்சம் பொறேன். விவரம் சொல்றத்துக்குள்ள அவசரப் படுகிறியே.

கருப்: சரி.....சொல்லுங்கையா, சொல்லுங்க. வெவரம் சொல்லுங்க.

முத்து : எல்லா இடங்களிலும் ஏககாலத்தில் வேலை நிறுத்தம் செய்தால்.....

(ரகசிய அறைக்குள் ஒரு புரட்சிக் காவலாளி அவசரமாக வருகிறான்.)

காவ : யாரோ ராமநாதனுங்களாம். நீங்கள் வரச்சொன்னீர்களாம். அவரும், இன்னொரு ஆள் கோவிந்தனும், ரெண்டு பேரும் வந்திருக்கிறார்கள்.

(என்று முத்துவீரப்பனிடம் சொல்லுகிறான்.)

முத்து : யார் ?...ராமநாதனா !...அவரை இன்னும் சில நாளைக்கு அப்புறம் அனுப்புவதாக அல்லவா சுந்தரம் சொன்னான் !... சரி, அந்த ராமநாதன் எங்கே ?

காவ : அந்த ஆசாமியைத் தோப்புக்கு வெளியிலேயே நிறுத்தி விட்டேன்...போலீசு உளவாக இருந்தாலும் இருக்குமென்று.

வீரா : ஆமாம். நேற்றுக்கூட இங்கே யாரோ ஒருபோலீஸ்காரன். வந்ததாகச சொன்னார்கள்.

முத்து : அப்படியானால் நானே போய் அந்த ராமநாதனைப் பார்த்து வருகிறேன்.....

(என்று முத்துவீரப்பன் அறையை விட்டு வெளியே போய் மாந்தோப்பின் வேலிக் கதவண்டை ராமநாதன் இருந்த இடத்துக்கு வருகிறான். ராமநாதனோடு, புரட்சிக் கூட்டத்துக்குப் போனதற்காக மூன்று மாதம் 'சஸ்பெண்ட்' செய்யப்பட்ட கோவிந்தன் என்ற சுந்தரத்தின் நண்பனும் இருக்கிறான்.)

முத்து : (முன்னாலிருந்த ராமநாதனைப் பார்த்து) யார் ராமநாதன் ?

ராம: நான்தான்.

முத்து : நீங்கள்தானா ! நான் பார்த்ததில்லை.....இங்கே யாரைப் பார்க்க வந்தீர்கள் ?

ராம : சுந்தரத்தின் பள்ளித் தோழர் முத்துவீரப்பனைப் பார்க்க வந்தேன்.

முத்து : எதற்காக முத்து வீரப்பனைப் பார்க்க வேணும் ?

ராம : அதைப் பற்றி அவரோடுதான் பேசவேண்டும்.

முத்து : சரி.....முத்துவீரப்பன் இங்கே இருக்கிறான் என்று உங்களுக்கு எப்படித் தெரியும் ?

ராம : இதோ பாருங்கள், அந்த முத்துவீரப்பனே என்னே இங்கே அனுப்பும்படி சுந்தரத்திடம் எழுதிக்கொடுத்த விலாசம்.

(என்று மூன் முத்துவீரப்பன் சுந்தரத்திடம் எழுதிக்கொடுத்த துண்டுக் கடுதாசியைத் தருகிறான். அதை முத்துவீரப்பன் வாங்கிப் பார்த்து, அது தான் கொடுத்த சிட்டுதான் என்று கண்டபின்)

முத்து : ரொம்ப சந்தோஷம்.....நான்தான் முத்து வீரப்பன். உங்களே இங்கே அனுப்பும்படி எழுதிக் கொடுத்தது நான் தான்... ஆனால், சுந்தரம் உங்களே இன்னும் ஒரு வாரத்துக்குப் பிறகு தான் அனுப்புவதாகச் சொன்னார்; நீங்கள் இன்று வந்தது எதிர்பார்க்காத விஷயம். அதனால் சந்தேகம் வந்து இவ்வளவு கேள்விகள் போட்டேன்.

ராம : சுந்தரம் என்னே இன்னும் ஐந்தாறு நாட்களுக்குப் பிறகு தான் உங்களிடம் போகச் சொல்லி இந்த விலாசம் தந்தார். ஆனால் அந்தப் புண்ணியவான் நல்லப்பர் இன்றைக்கே இங்கே நான் வரும்படிச் செய்துவிட்டார்!

முத்து : அப்படியா ! என்ன செய்தார் அந்த நல்லப்பர் ?

ராம : நேற்று நான் சில தொழிலாளிகளுடன் என்னமோ பேசிக் கொண்டிருந்தபோது, "நல்லப்பர் உண்மையாக உழைக்கிறவர்களுக்கு உதவி செய்வதில்லே அதனால் 'ஸ்ட்ரைக்' வரும்" என்று சொன்னேனும். அதை இந்த நல்லப்பரைப் பிடுங்கித் தின்று கொண்டிருக்கிற அவருடைய சிப்பாய்கள் தலேவன் அவரிடம் போய்ப் பணம் பறிக்கச் சாடி சொல்லியிருக்கிறான். அதைக் கேட்டு அவர் உடனே என்னைக் கூப்பிட்டு, சரியாக விசாரிக்காமல் கூட 'ஒரு மாதம் சஸ்பெண்ட்' செய்து விட்டார்.....நான் அங்கே உழைத்து உழைத்து ஓடாகப் போவதைக் காட்டிலும் உங்களோடு சேர்ந்து தொழிலாளிகளுக்காகவாவது உழைக்கலாம் என்று உடனே வந்து விட்டேன்.

முத்து : பேஷ் ! ரொம்ப சந்தோஷம். உங்களே நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். வாருங்கள் உள்ளே போவோம்..... இவர் யார் ?

(என்று கோவிந்தனைக் காட்டுகிறான்.)

ராம : இவர் சுந்தரத்தின் நண்பர்.....நான் ஒரு மாசத்துக்கு 'சஸ்பெண்ட்' ஆனவன். இவர் சுந்தரம் உங்களோடு சேர்ந்து 'புரட்சி' பேசின கூட்டத்துக்கு வந்ததற்காக மூன்று மாசத்துக்கு 'சஸ்பெண்ட்' ஆனவர்.

முத்து : நல்லப்பரிடத்திலா ?

ராம : இல்லே. வேறொரு மில் முதலாளியிடம். எல்லா முதலாளி களும் இதில் ஒரேமாதிரிதானே!

முத்து : ஆ! அப்படிச் சொல்லுங்கள். என்னடாப்பா என்று பார்த்தேன்! அந்தக் கூட்டத்தில் சுந்தரம் பேசினதை அறிந்திருந்தால் சுந்தரத்தை வேலைக்குச் சேர்த்திருக்கவே மாட்டாரே நல்லப்பர்?

ராம : வாஸ்தவம்தான்; சேர்த்தே இருக்கமாட்டார்தான். ஆனால் அப்போது நல்லப்பர் ஊரில் இல்லே. நல்லவேளையாக சுந்தரம் உங்களோடு சேர்ந்து பிரசங்கம் செய்தது அவருக்குத் தெரியாது.....

முத்து : உள்ளே போவோம்.

(மூவரும் கருப்பண்ணன் முதலானவர்கள் இருக்கிற அறைக் குள் வருகிறார்கள்.)

முத்து : இவர்தான் அந்த ராமநாதன். நல்லப்பருடைய அந்தரங் கங்களெல்லாம் நன்ருக அறிந்தவர். (என்று ராமநாதனை அறிமுகப்படுத்திவிட்டு) இவர் கோவிந்தனை காட்டிவிட்டு) இந்த இரண்டு பேரும் நமக்கு ரொம்ப உதவக் கூடியவர்கள்.

(மூவரும் உட்காருகிறார்கள்.)

முத்து : (ராமநாதனைப் பார்த்து) சுந்தரம் என்ன சொல்லியனுப்பி னர்?

ராம : நான் இங்கே வந்தது சுந்தரத்துக்குத் தெரியாது.

முத்து : ஓ! அப்படியா. (மற்றவர்களைப் பார்த்து) கேட்டீர்களா, இந்த ராமநாதன் நல்லப்பருக்கு வெகு விசுவாசமாக உழைத் தவர். இவரைத் தீடீரென்று நல்லப்பர் விசாரிக்காமல் கூட சஸ்பெண்ட் செய்து விட்டாராம்.

கருப் : அவன் சஸ்பெண்டுதானு செய்வான்? என்ன வேணுமானு லும் செய்வானே, அயோக்யப் பயல். எங்க அண்ணனைப் பொய்க் கேசிலே மாட்ட வச்சி மூணு வருஷம் தண்டிக்கப் பண்ணினவல்ல? அவனே நடுத் தெருவிலே கட்டிவச்சித் தோலே உறிக்கணும். அவனுக்கு மட்டும் ஐயோண்ணு எரக்கப்படக் கூடாது.

வீரா : இரு கருப்பண்ணு. அதெல்லாம் அப்புறம் பேசலாம... இப்போ நம்முடைய திட்டம் என்ன?

(என்று மற்றவர்களைப் பார்த்து கேட்கிறன்.)

முத்து : சுந்தரம் என்ன திட்டம்சொல்லுகிறான் என்பது இன்னும் நாலைந்து நாளில் தெரிந்து விடும். அதற்கப்புறம் தீர்மானிப் போம்.

ராம : சுந்தரம் ரொம்ப யோசனைக்காரர்தான். அவருடைய திட்டம் வெகு நல்ல திட்டம். என்னோடு கலந்து ஆலோசித் துத்தான் திட்டமெல்லாம் போட்டிருக்கிறார். ஆனால் அது கொஞ்சம் நிதானமாகத்தான் ஆகும்.

கருப் : ஆ ! அப்படிச் சொல்லுங்க. இவங்கென்னமோ அந்தத் தூங்கு மூஞ்சி சுந்தரத்தையே நம்பியிருக்கிறாங்க. அவன் நேத்து வரையிலும் நமக்கு எதிரியாயிருந்தவன் தானே !

முத்து : கருப்பண்ணு, சுந்தரத்தைப்பற்றி நீ இப்படிப் பேசுவது சரியல்ல.

ராம : ஆமாம், சுந்தரம் மிகவும் நம்பத்தகுந்தவர்.

வீரா : சுந்தரம் நல்லவன்தான். நம்பத் தகுந்தவன்தான். கருப் பண்ணன் சொல்லுவது என்னவென்றால், சுந்தரத்தின் திட்டம் ரொம்ப நிதானமாய்த்தானிருக்கும். உடனே இந்த நல்லப்பனுக்கு ஒரு சூடு கொடுக்கிறப்பலே இருக்காது என்பதுதான்.

கருப் : ஆமா..... ஆமா..... அதுதான் நாஞ் சொல்றது. சுந்தரத்தெப்பத்தி வேறென்ன சொல்லிவிட்டேன்?

ராம : அதுவும் உண்மைதான். நல்லப்பருக்கு புத்திவரும்படியாக ஏதாவது உடனே செய்தால்தான் நல்லது.

கருப் : ஊ.....ம். அப்படிச் சொல்லுங்க. அதைத்தான் நாஞ் சொல்றேன்.

முத்து : அதற்காக என்ன செய்யச் சொல்கிறாய், கருப்பண்ணு?

கருப் : என்ன செய்யறது ! உடனே ஊடுபூந்து அவனை ஒதைச்சி அவன் தண்டவாளப் பெட்டியிலிருக்கிறதை யெல்லாம் கக்கவைக்கணும். வேறென்ன ?

வீரா : அதை இப்பவே நாம் செய்ய முடியுமா ?

கருப் : ஏன் முடியாது ? நம்மகிட்டே இப்போ இருபத்தஞ்சி ரிவால்வாரு, பதினஞ்சு துப்பாக்கி இருக்குது. கத்தி, ஈட்டி வேறே இருக்குது. நம்ம மலைக் கொகையிலே.....

முத்து : இப்படியெல்லாம் அவசரப்பட்டால் நாம் ஒன்றுமே சாதிக்க முடியாது. நாம் இவ்வளவு பதட்டமாகத் துப்பாக்கி, ரிவால்வர் என்றெல்லாம் இப்போதே பேசினால் சுந்தரம் நமக்கு இன்னும் சேகரித்துத் தரக்கூடிய யோசனைகள்

கிடைக்காது. அவன் இதையெல்லாம் கேட்டாலே நம்மை விட்டு நீங்கிவிடுவான்.

கருப்: அதுதான் நான் அப்போ இருந்து சொல்றேன், அவனுக்கும் நமக்கும் சரிப்படாதுண்ணு. தெரிஞ்சுதா? அந்த சுந்தரத்துத் திட்டப்படி ஒண்ணும் செய்ய முடியாது. அவன் நம்மை உட்டுப் போயிட்றதே நல்லது.

வீரா: கருப்பண்ணு! கொஞ்சம் பொறு. நீ சொல்லுகிற திட்டப்படி செய்யக்கூட கொஞ்சம் நிதானமாக ஆலோசனை பண்ணி, இப்ப நாம் அப்படி ஏதாவது செய்தால் அது வெற்றி பெறுமா, அல்லது நமக்கே ஆபத்து வந்துடுமா... என்று எல்லாம் யோசனை பண்ண வேண்டாமா?

கருப்: பண்ணுங்க, யாரு வாண்டாங்கிறுங்க. நல்லா யோசனை பண்ணுங்க. அதைப் பத்தி யோசனை பண்ணுமே..... என்னுமோ..... வேலை நிறுத்தம்..... பண்றதாம்..... அப்பறம்..... என்னுமோ திட்டம் போட்றதாம். ஒரே ராத்திரியில் இந்த மொதலாளிப் பசங்களையெல்லாம் ஒழிக்கவேணுமா!

(முத்துவீரப்பனைத் தவிர மற்றவர்கள் சிரிக்கிறார்கள்.)

வீரா: சரி. நீ சும்மா இரு (என்று கருப்பண்ணனுக்குச் சொல்லி விட்டு) நான் அவரைக் கேட்கிறேன். (என்று ராமநாதனிடம் திரும்பி) ஏனையா உங்க நல்லப்பரிடம் எத்தனை ரிவால்வர், எத்தனை துப்பாக்கிகள் இருக்கின்றன?

ராம: ரிவால்வர் எத்தனை இருக்கிறதோ தெரியாது. எப்போதும் அவர் கையோடு ஒரு ரிவால்வர் இருப்பதுதான் தெரியும். ஆனால் அவருடைய மானேஜர் - ஆபீசுக்கருகில் ஒரு அறையில் இருபத்தைந்து துப்பாக்கிகள் இருக்கின்றன.

வீரா: அந்தத் துப்பாக்கிகளை உபயோகப்படுத்துகிறவர்கள் யார்?

ராம்: அவைகளை உபயோகப்படுத்தினதை நான் பார்த்ததே யில்லை. சும்மா பயப்படுத்தத்தான் அவைகள் இருக்கின்றன. நித்தம் இரண்டு ஜவான்கள் இரண்டு துப்பாக்கிகளைப் பிடித்துக்கொண்டு வாசலுக்கு முன்னால் நிற்பார்கள். மற்ற துப்பாக்கிகளெல்லாம் அந்த அறையில் வரிசையாகத் துடைத்து வைக்கப்பட்டிருக்கும்.

வீரா: இருபத்தைந்து துப்பாக்கிகள்தானே?

ராம: ஆம் அவ்வளவேதான். அதற்கு மேல் அதிகமாக மிரட்ட வேணுமானால் சர்க்கார் போலீஸ்காரர்கள் சில சமயங்களில் துப்பாக்கிகளோடு வந்து போவார்கள்.

வீரா : நல்லப்பர் சொந்தமாக போலீஸ்காரர்களோ - பட்டாளக் காரர்களோ ஐந்நூறு பேர்களை வைத்திருக்கிறாரே, அவர்கள் எப்படி?

ராம : அவர்களா? அவர்கள் போலீசும் அல்ல, பட்டாளமும் அல்ல, அவர்களுக்கு ஒரு பயிற்சியும் இல்லை. சும்மா வீதியில் அலைகிற காலிகளையெல்லாம் பட்டாள உடை கொடுத்து பார்க்கிறவர்களைப் பயப்படுத்த வைத்திருக்கிற தண்டம்அது. துப்பாக்கியைச் சரியாகப் பிடிக்கக்கூட அவர்களுக்குப் பழக்கமில்லை. வெறும் முரட்டுப் பசங்கள், அவ்வளவுதான்.

வீரா : நல்லப்பருடைய வீட்டுக்கு எத்தனை பேர் காவல்?

ராம : காவலென்ன..... காவல்? இவர்கள் கிழிக்கிற காவல்! ஆளுக்கு நூறு ரூபாய்க்கு மேல் சம்பளம் வாங்கிக்கொண்டு சும்மா அந்த வீட்டைச் சுற்றிச் சுற்றி வரவேண்டியதுதான் இவர்களுடைய காவல்..... அவர்கள் ஐம்பது பேர். அவர்களுக்கெல்லாம் தலைவன் என்று ஒரு பெரிய குண்டன்; வீரபத்ரன் அவன் பேர். பணங் கொடுத்தால் எதை வேணுமானாலும் செய்வான். பட்டாளத்தை அவன் பார்த்துக்கூட இருக்கமாட்டான். அவனுக்குப் பேர் - கமாண்டர்.

வீரா : அவ்வளவுதானா அந்த வீரபத்ரன்! இவன் பட்டாளத்தில் பெரிய உத்யோகத்தில் இருந்தானென்றல்லவா கேள்விப் பட்டேன்.

ராம : அது வெறும் பொய்.

வீரா : நல்லப்பர் வீட்டில் ரொக்கப் பணம் எவ்வளவு இருக்கும்?

ராம : அது எனக்குத் தெரியாது.

வீரா : நகைகள்?

ராம : அதுவும் எனக்குத் தெரியாது. ஆனால் அவர் வீட்டு நகைகள் ஐம்பது லட்சத்துக்கு மேல் இருக்கும் என்று சொன்னதைக் கேட்டிருக்கிறேன்.

வீரா : வீட்டின் எந்த இடத்தில் அவருடைய பொக்கிஷம் வைக்கிற தண்டவாளப் பெட்டி இருக்கிறது?

ராம : அவர் வீட்டில் அநேக இரும்புப் பெட்டிகள் இருக்கின்றன. அவற்றுள் எது பொக்கிஷப் பெட்டி என்பது எனக்குத் தெரியாது.

வீரா : அவர் தூங்குவது எங்கே?

ராம : மேல்மாடியில் அவருடைய சொந்த அறையில்.

வீரா : அவருடைய பெண் ?

ராம : அதே மேல்மாடியில் நல்லப்பருடைய அறைக்குப் பக்கத்தில் வேறொரு அறையில்.

(மறுபடியும் காவலாளி உள்ளே வேகமாக வருகிறான். பேச்சு தடைபடுகிறது. சுவாரஸ்யம் . கெட்டுப்போன ஆத்திரத்துடன்)

கருப் : டேய் சனியனே ! என்ன குறுக்கக் குறுக்கே ஓடியாந்து.

காவல் : இல்லிங்க, நேத்து வந்த போலீசுக்காரரும் இன்னும் ரெண்டு மூணு பேரும் வாராங்க.

(உடனே ஆலோசனைக் கூட்டம் கலைகிறது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு திக்காக இருட்டில் மறைந்துவிடுகிறார்கள்.)

காட்சி 17

இடம் : வசந்தாவின் பிரத்யேக அறை
காலம் : மாலை

[வசந்தா தான் வழக்கம்போல் மாலையில் வெளியே போய் உலாவி வர வாரி முடித்து, திலகம் இட்டு ஆடம்பர மின்றி அலங்கரித்துக் கொள்ளுகிறாள். அலங்காரம் முடிந்த பின் கண்ணாடியில் முகத்தைப் பார்த்துக் கொண்டே சந்தோஷம் மேலிட்டு தனக்குத்தானே பாடு கிறாள்.]

அன்பு என்ற ஒன்றைநாம் அறிந்துகொள்ளக் கூடுமேல்
துன்பமென்ற யாவையும் தூரமாக ஓடுமே
வம்பு வாது பேச்செலாம் வாயடங்கி வீழுமே
இன்பமாக நாமெலாம் இங்கிருந்து வாழலாம்.

(பாடிக்கொண்டே மாடியை விட்டு இறங்குகிறாள். கூடத்தில் நஞ்சப்பனைக் கண்டு)

வச : நஞ்சப்பா, அப்பா ஊருக்குப் போய்விட்டார்களா?

நஞ் : எஜமான் மூணு மணிக்கே பொயிட்டாருங்கம்மா.

[அதைக் கேட்டுக்கொண்டே வீட்டை விட்டு வெளியே வருகிறாள். நேரே சுந்தரம் வேலை பார்த்துக் கொண்டிருக்கிற 'ஆபிஸ் ரூமு'க்குப் போகிறாள். சுந்தரம் ஏதோ முக்யமான அலுவ லாக மேஜையின் மீதுள்ள கணக்குப் பேரேடுகளைக் கவ னித்துக் கொண்டிருக்கிறான்.]

வச : ரொம்ப அவசரமான வேலையா?

(என்று இனிமையான தொனியில் குரலைக் கேட்ட சுந்தரம் திரும்பிப் பார்த்து வசந்தாவைக் கண்டு மட்டிலாத மகிழ்ச்சி பொங்க முகம் மலர்ந்து கையிலிருந்த பேனாவை மேஜையின் மீது வைத்துவிட்டு கணக்குப் புத்தகத்தை மூடி விட்டு எழுந்து வசந்தாவின் அருகில் வந்து)

சுந் : அவசரமான வேலை ஒன்றுமில்லை ; வழக்கமாக உள்ள தின சரி வேலைதான்.

வச : உடனே கவனிக்க வேண்டிய அவசரம் ஒன்றுமில்லையே?

சுந்: இல்லை; ஏன்?

வச: வேறென்றுமில்லை. அப்பா ஊருக்குப் போயிருக்கிறார்கள். வர இரண்டு மூன்று நாளாகும் ... தெரியுமோ உங்களுக்கு?

சுந்: தெரியும். என்னிடத்தில் சொல்லிவிட்டுத்தான் போனார். போகும்போது இந்தக் கணக்குகளைப் பார்த்து வைக்கச் சொல்லி உத்தரவிட்டார். அதைத்தான் பார்த்துக் கொண்டிருந்தேன்.

வச: கொஞ்ச நேரம் காற்றூட நந்தவனத்துக்குப் போய் வரலாமா?

சுந்: ஆஹா போவோம். எனக்கும் உன்னோடு சல்லாபித்து நாளாச்சே என்ற ஏக்கம் இருந்தது.

வச: ஏக்கம் இருந்ததா! எங்கே உத்யோகம் கிடைத்ததே போதும் என்று என்னை மறந்துவிட்டீர்களோ என்று நினைத்தேன். 'ஏக்கம் இருந்தது' என்பதைக் கேட்க வெகு இனிமையாக இருக்கிறது. அறையைப் பூட்டுங்கள், போவோம்.

[உடனே சுந்தரம் எல்லாவற்றையும் இருந்தபடியே விட்டுவிட்டு சட்டையை மாட்டிக்கொண்டு அறையைப் பூட்டினான். வசந்தா முன்னும், சுந்தரம் பின்னுமாக அந்த வீட்டுக்குப் பின்புறத்திலுள்ள நந்தவனத்தை நோக்கிப் போகிறார்கள். இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த நஞ்சப்பன் என்ற வீட்டு வேலைக்காரன் சுந்தரத்துக்குப் பின்னால் பரிகசிப்பது போல கண் சிமிட்டி கேலிச் சிரிப்பு சிரித்து விட்டு]

நஞ்: சரியான்ன ஜோடிதான் ... ஆனா ... நம்ப எஜமான்கிட்டே இதெல்லாம் செல்லுபடியாகாது ... அந்த மோகனரங்கன் இப்படித்தான் வசந்தம்மாகிட்டே கொஞ்சிப் பார்த்தான். அது ஒண்ணும் பலிக்கிலே...அவன் போய்த் தொலஞ்சான். இப்ப இவன் வந்திருக்கிறான் ... உம் ... இது ஒரு எட்டுக்கு... நடக்கட்டும். எங்க எஜமான் ... தம் மகளை இவுங்களுக்கெல்லாமா குடுத்துடுவாரு? அது அந்த கணேசருக்குத்தான்!

(என்று தனக்குத்தானே பேசிக் கொள்ளுகிறான்.)

[வசந்தாவும் சுந்தரமும் நந்தவனத்துக்குள் வந்து, அங்குள்ள ஒரு செயற்கையான தாமரைக் குளக் கரையிலுள்ள மேடையின் மீது உட்காருகிறார்கள்.]

சுந்: வசந்தா! இந்த நந்தவனம் வெகு அழகாக அமைக்கப்பட்டிருக்கிறது. முன்னே இந்த இடம் வெறும் காடாக அல்லவா இருந்தது?

வச : ஆமாம், நாம் படித்துக் கொண்டிருந்தபோது இது வெறும் காடுதான். நானும், நீங்களும், மோகனரங்கனும் ஒரு நாள் இந்தக் காட்டுக்குள் அலைந்து திரிந்து ஓடியாடி ஒரு புளிய மரத்தின்கீழ் உட்கார்ந்து ஆளுக்கு ஒரு பாட்டுப் பாடினோமே, நினைவில்லையா ?

சுந் : ஆம். அந்த நினைவில்தான் இது காடாக இருந்ததைச் சொன்னேன்.

வச : இது வெறும் கல்லும் முள்ளும் நிறைந்த காடாக இருந்த போதே நாம் இதில் எவ்வளவு சந்தோஷமாக விளையாடினோம். இப்போது இவ்வளவு ரம்மியமான நந்தவனமாக மாறிவிட்ட இதில் நாமிருவரும் இப்போது இருப்பது எவ்வளவு சந்தோஷ மாக இருக்கிறது, பார்த்தீர்களா ?

சுந் : ஆமாம். எனக்கும் அப்படித்தான் பூரிப்புப் பொங்கி வரு கின்றது.

வச : இந்த இடத்துக்கு வந்தாலே எனக்கு ஒரு நிம்மதி உண்டா கிறது. என் மனசுக்கு ஆயாசம் வருகிற போதெல்லாம் இங்கே வந்துதான் ஆறுதல் அடைவேன். இன்றைக்கு நீங்களும் என்னோடு இங்கே இருக்கக்கூடிய பாக்கியம் கிடைத் திருப்பதில் நான் அடைகிற ஆனந்தத்தை அளவிடவே முடியாது.

சுந் : எனக்கும் அது ஆனந்தம்தான்.

வச : உங்களுக்கு இது வெறும் ஆனந்தம். ஆனால் எனக்கு?... இன்றைக்கு என் விசாரமெல்லாம் விட்டு, வேதனை நீங்கி விட்ட இன்பத்தோடு கூடிய ஆனந்தம்.

சுந் : உனக்கு என்ன வேதனை ?

வச : சொல்லுகிறேன்? அதைச் சொல்லத்தான் எனக்கு இன்று நல்ல காலம் கிடைத்தது. நீங்கள் இங்கே வந்த நாளாக என் மனசிலுள்ளதை யெல்லாம் உங்களிடத்தில் ஏகாந்தமாகச் சொல்லிவிட வேணும் என்ற ஆசை. முதலில் உங்களுக்கு இங்கே வேலை கிடைக்கட்டும், பிறகு சமயம் பார்த்துச் சொல்லிக் கொள்ளலாம் என்று காத்திருந்தேன். இன்றைக்குத்தான் அந்த ஏகாந்த சமயம் வாய்த்தது. ...

சுந் : வசந்தா ! நீ என்னிடத்தில் இவ்வளவு நம்பிக்கையும் அந்த ரங்கப் பிரியமும் வைத்திருப்பது என்னைப் பரவசம் அடையச் செய்கிறது. நான் வெகு பாக்யசாலி. உன் மனசிலுள்ளது எதுவானாலும் சரி, நான் அதற்கு அனுகூலமாகவே இருப் பேன்...என் உயிரைக்கூட உனக்காக விட்டுவிடத் தயங்க மாட்டேன்.

வச : அது தெரியும் எனக்கு என்னை மாடு முட்டிக் கொல்ல வந்தபோதே நீங்கள் எனக்காக உங்கள் உயிரையும் மதிக்காமல்தானே என்னைக் காப்பாற்றினீர்கள் ... இப்போது நான் உங்களிடம் சொல்லப் போவது அப்படிப்பட்ட ஆபத்தான காரியமல்ல. அதற்கு நேர்மாறான ஒரு சந்தோஷமான சமாசாரம்.

சுந் : எதானாலும் சரி, எனக்குச் சம்மதம்.

வச : சம்மதிப்பீர்களா? அப்படியானால் என் சங்கடங்களெல்லாம் இப்போதே ஒழிந்தன.

சுந் : உன் சங்கடங்களை ஒழிக்கிறேன். உனக்கு என்ன சங்கடம்?

வச : என் சங்கடமா?..... (வசந்தா சிரிக்கிறாள்.)

சுந் : என்ன சிரிக்கிறாய்?

வச : (மறுபடியும் கலகலவென்று சிரிக்கிறாள்.)

சுந் : என்ன வசந்தா, என்னமோ சங்கடத்தைச் சொல்ல வந்தாய்! சந்தோஷப்படுகிறாயே! வெறும் சிரிப்பிலிருந்து நான் என்ன அனுமானித்துக் கொள்ள முடியும்? எதுவானாலும் கூச்சப்படாமல் சொல்லு.

வச : கொஞ்சம் கூச்சமாகத்தான் ... இல்லை அதைச் சொல்ல ... கொஞ்சம் வெட்கமாகத்தான் இருக்கிறது.

சுந் : (அவனும் சிரித்து) என்ன சங்கடத்தைச் சொல்ல என்ன வெட்கம்?

வச : எனக்கு சங்கடமும் அதுதான், சந்தோஷமும் அதுதான். சங்கடமாக நினைக்கிறபோது கூச்சமில்லை. அதைச் சந்தோஷமாக நினைக்கிறபோது கூச்சம் வருகிறது.

சுந் : பேஷ்! விஷயம் எதுவானாலும் உன் பேச்சுத்திறமை வெகு புத்திசாலித்தனமாக இருக்கிறது. நாம் பள்ளிக்கூடத்தில் படிக்கிறபோது இருந்ததைவிட உன் பேச்சு சாதுர்யம் இப்போது அதிகப்பட்டிருக்கிறது ... அதிருக்கட்டும் ... உன் சங்கடமோ, சந்தோஷமோ ... அது என்ன? என்னைத் தினற வைக்காமல் தெளிவாகச் சொல்லிவிடு.

வச : சரி ... என் சங்கட - சந்தோஷ சமாச்சாரம் - என் கலியாணத்தைப் பற்றித்தான். அப்பாவும் அம்மாவும் எப்படியாவது என்னை அந்தப் பணக்கார கணேசருக்குத்தான் கொடுப்பது என்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

சுந்: சரி ... அதுதான் உனக்கு இஷ்டமில்லை. இது முன்னாலேயே தெரிந்த விஷயம்தான். அதற்கு மேல் சொல்லு.

வச: அதற்கு மேலா —
(மறுபடியும் வெட்கப்பட்டவள் போல் சிரிக்கிறாள்.)

சுந்: உனக்கு யாரை மணந்துகொள்ளப் பிரியம்? அதைச் சொல்லு.

வச: (சிரித்துவிட்டு) ஆண்பிள்ளைகளென்றால் உடனே சொல்லி விடுவார்கள். பெண் பிள்ளைகள் அப்படி உடனே கூசாமல் சொல்லிவிட முடியுமா?

சுந்: சரி. உன் சங்கோஜத்தை இப்போது கசக்க வேண்டாம். அதைப் பற்றி உனக்கு கூச்சம் விடுகிறபோது சொல்லலாம் — கூச்சம் நீங்குகிற வரைக்கும் வேறு ஏதாவது பேசுவோம்.

வச: ஏன், நான் உடனே சொல்லவில்லை யென்று உங்களுக்கு வருத்தமா?

சுந்: வசந்தா! நான் உன்னிடத்தில் அப்படி வருத்தம் கொள்ளக்கூடியவனா? உனக்குக் கூச்சம் விடுகிறவரைக்கும் வேறு ஏதாவது பேசலாம் என்றது, நான் உண்மையாகவே சொன்னது. வருத்தமே யில்லை.

வச: சரி — வேறு என்ன பேசலாம்?

சுந்: பேச்சு வேண்டாம், ஒரு பாட்டுப் பாடு; உத்ஸாகம் உண்டாகும்.

வச: எந்தப் பாட்டு?

சுந்: நீ பள்ளிக்கூடத்தில் பாடிப் — பரிசு வாங்கினாயே, அந்தத் தாயுமானவர் பாட்டு. அதைப் பாடு.

வச: சரி. (என்று வசந்தா பாடுகிறாள்)

அன்பின்வழி அறியாத என்னைத் தொடர்ந்தென்னை
அறியாத பக்குவத்தே
ஆசைப் பெருக்கைப் பெருக்கிக் கொடுத்து நான்
அற்றேன் அலந்தேன் என
என் புலம் மயங்கவே பித்தேற்றி விட்டாய்
இறங்கி ஒருவழி யாகிலும்
இன்பவெள மாக வந்து உள்ளங் களிக்கவே
எனை நீ மணந்த துண்டோ?

தன்பருவ மலருக்கு மணமுண்டு, வண்டுண்டு
தண்முகை தனக்கும் உண்டோ?
தமியனேற் கிவ்வணம் திருவுளம் இரங்காத
தன்மையால் தனி யிருந்து
துன்பமுறின் எங்களே கின் அன்பர் பேரின்ப
சுகம் வந்து வாய்க்கு முறையால்
சுத்தநிற் குணமான பரதெய்வமே பரஞ்
சோதியே சுக வாரியே.

சுந்: பேஷ்! வசந்தா முன்னிலும் இப்போது உன் சரீரம் வெகு இனிமையாக இருக்கிறது.

வச: எங்கே, நீங்கள் அடிக்கடி பாடுகிற அந்த ராமலிங்க சுவாமிகள் பாடலைப் பாடுங்கள்.

சுந்: என் சரீரம் கெட்டுப் போய்விட்டது. இருந்தாலும் நீ கேட்டதற்காகப் பாடுகிறன்.

[சுத்தரம் பாடுகிறான்]

உன்னை மறந்திடுவேனே? மறப்பறியேன்; மறந்தால்
உயிர் விடுவேன்; கணம் தரியேன் உன்னை இது நீ
என்னை மறந்திடுவாயோ? மறந்திடுவாயெனில் நான்
என்செய்வேன்? எங்குறுவேன்? எவர்க்குரைப்பேன்? எந்தாய்
அன்னையினும் தயவுடையாய் நிறைந்த ஒளிர்வே
அகில மெலாம் அளித்திடும்நின் அருள் மரவா தென்றே
இன்றுமிகக் களித்திங்கே இருக்கின்றேன் மறவேல்;
இது தருணம் அருட்சோதி எனக்கு விரைந்தருளே.

காட்சி 18

இடம் : நல்லப்பருடைய வீடு
காலம் : மாலை

[இப்படியாக வசந்தாவும் சுந்தரமும் நந்தவனத்தில் சல்லாபித்துக் கொண்டிருக்கும் பொழுது, இரண்டு மூன்று நாள் கழித்து திரும்பி வரவேண்டிய பயணத்தோடு மோட்டாரில் போன நல்லப்பர், சில தஸ்தாவேஜுகளை எடுத்துப் போக மறந்துவிட்டுப் போய் விட்டதனால் அதை எடுத்துக் கொண்டு போகத் திரும்பி வந்து விடுகிறார். மோட்டாரில் இருந்த படியே]

நல் : டேய் நஞ்சப்பா.

(நஞ்சப்பன் ஓடி வருகிறான்.)

நல் : சில தஸ்தாவேஜிகளை மறந்து விட்டுப் போய்விட்டேன், வசந்தாவைக் கூப்பிடு!

நஞ்சப் : வசந்தா உள்ளே இல்லிங்கோ.

நல் : பின்னெங்கே போயிருக்கிறாள் ?

நஞ்சப் : வசந்தா அம்மாளும்.....அந்த மோகனரங்கருக்குப் பதிலாக வந்திருக்கிறாங்களே...அந்த சுந்தரமும் நந்தவனத்துக்கு போயிருக்கிறாங்க.

நல் : வசந்தாவும் !.....அந்த சுந்தரமுமா ! சரி, சரி.....

(என்று உடனே மோட்டாரை விட்டு இறங்கி நல்லப்பர் நந்தவனத்துக்கு விரைந்து போகிறார். வசந்தாவும் சுந்தரமும் ஒருவருக்கொருவர் வெகு சமீபத்தில் உட்கார்ந்து கொண்டிருப்பதை நல்லப்பர் தூரத்திலிருந்து பார்க்கிறார். அந்த சமயத்தில் சுந்தரம் அருட்பாவின் பின்னிரண்டு அடிகளைப் பாடிக் கொண்டிருக்கிறான். நல்லப்பர் பாட்டைக் கேட்கிறார். பாட்டு முடிந்தும் முடியாமலும் இருக்கும் போதே)

நல் : வசந்தா ! (என்று உரக்கக் கூப்பிடுகிறார்.)

(வசந்தாவும் சுந்தரமும் திடுக்கிட்டு எழுந்து வருகிறார்கள். நல்லப்பர் அவர்களுக்கு முன்னால் வந்து வெகு கோபத்தோடு)

நல் : (வசந்தாவிடம்) இன்னேரத்தில் இவனோடு தனியே இங்கென்ன செய்கிறாய்? என்னுடைய இரும்புப் பெட்டியின் சாவிகளை எடுத்துவா, போ.

(வசந்தா போகிறாள்; சுந்தரம் பயந்து நிற்கிறான்; சுந்தரத்தைப் பார்த்து)

நல் : டேய் சுந்தரம், இதுக்குத்தான் உனக்கு வேலை கொடுத்தேனா? நீ வேலை பார்க்கிற லட்சணம் ரொம்ப நன்றாக இருக்கிறது!

(என்று சுந்தரத்தை ஏற இறங்கப் பார்த்துவிட்டுத் திரும்பிப் போகிறார். சுந்தரமும் பின்னாலேயே சென்று தன் ஆபீசுக்குப் போகிறான். நல்லப்பர் மேல்மாடிக்குப் போய் சாவிகளுக்காகக் காத்திருக்கிறார்.)

நல் : (தனக்குத்தானே) நான் அப்போதே நினைத்தேன். இவனும் அந்த மோகனரங்களைப் போலத்தான் இருப்பானென்று. அது சரியாகப் போச்சு. இப்படிப் பசங்களை மனசிலே வைத்துக் கொண்டுதான் இவள் நான் சொல்லுகிற மாப்பிள்ளையை வேண்டாமென்கிறாள் போலத் தெரிகிறது. சரி, பார்க்கிறேன்.

(இரும்புப் பெட்டிச் சாவிகளை எடுத்துக் கொண்டு நஞ்சப்பன் வருகிறான். அவனைப் பார்த்து)

நல் : நீ எங்கேடா வந்தாய் இங்கே? எங்கே வச்சே?

நஞ் : (வணங்கி) வசந்தம்மா இந்த சாவிகளை உங்ககிட்டே குடுக்கச் சொன்னாங்க.

நல் : ஏன் அவள் கொண்டு வருவதற்கு என்னவாம்? குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்குதாமோ? போய் அவளை வரச் சொல்லு.

(என்று சாவிகளை மட்டும் வாங்கி இரும்புப் பெட்டியைத் திறந்து தமக்கு வேண்டிய தஸ்தாவேஜுக் கட்டுகளை எடுத்துக் கொண்டு பெட்டியைப் பூட்டுகிறார்; வசந்தா வருகிறாள்.)

நல் : ஏம்மா——இங்கே வா. (வசந்தா அருகில் வருகிறாள்.) ஏம்மா, நம்பிக்கிட்டா——வேலைக்கு இருக்கிற——அவனோடு தனியா——நந்தவனத்திலே——உனக்கு என்ன பேச்சு?

வச : என்னப்பா? நாங்கள் இரண்டு பேரும் சிறு பிராயத்திலிருந்து ஒன்றாகப் படித்து வளர்ந்து பழகினவர்கள் தானே. நாங்கள் கொஞ்ச நேரம் பொழுது போக்காக நந்தவனத்தில் உட்கார்ந்து பேசினால் அதில் என்ன குற்றம்?

நல்: பள்ளிக்கூடத்தில் படிக்கும் போது நீயும் சிறு பெண், அவனும் சிறு பயல். இப்போது நீங்கள் வயது வந்தவர்கள். இப்படி அவனும் நீயும் தனியே பேசுவதைப் —பார்க்கிறவர்கள் என்ன நினைப்பார்கள்?

வச: அப்பா, நான் உண்மையாகச் சொல்லுகிறேன்; நாங்கள் தப்பான பேச்சு ஒன்றும் பேசவேயில்லை. எங்கள் பள்ளிக்கூட நினைவுகளைத் தான் பேசிக் கொண்டிருந்தோம்.

நல்: எந்தப் பேச்சாக இருந்தாலும்—— இருட்டும் சமயத்தில்—நீங்கள் இரண்டு பேரும் மட்டும் ஏகாந்தமாகப் பேசிக் கொண்டிருந்தது தப்பு. உங்கம்மாளாவது வேலைக்காரியாவது கூட இருந்தால் யாரும் சந்தேகிக்க மாட்டார்கள். இனிமேல் அவனோடு அப்படிப் பேச்சு ஒன்றும் வைத்துக் கொள்ளக் கூடாது, தெரியுமா?

வச: (பதில் சொல்லாமல் தலைகுனிந்து நிற்கிறாள்.)

நல்: என்ன? வசந்தா பதில் சொல்லு. இனிமேல் சுந்தரத்தோடு நீ தனியாக அப்படி எங்கும் பேசக்கூடாது. என்ன?

வச: (பதில் இல்லை.)

நல்: சரி. அப்படியானால் நான் அவனை 'டிஸ்மிஸ்' செய்து போகச் சொல்ல வேண்டியதுதான். வேறு வழியில்லை.

வச: (திடுக்கிட்டு) அப்பா, அப்படி ஒன்றும் செய்துவிட வேண்டாம். பாவம். சரி, நான் அவரோடு இனி இப்படிப் பேசுவதில்லை. சரிதானே? அவர் வெகு நாளாகக் கஷ்டப்பட்டு இப்போதான் வேலை தேடினார்கள். அதனால் அவருடைய தாயாரும் கொஞ்சம் உடம்பு சௌக்யமடைந்திருக்கிறார்களாம். 'டிஸ்மிஸ்' செய்து அந்தக் குடும்பத்தைத் திண்டாடச் செய்துவிடவேண்டாம், அப்பா!

நல்: சரி. அது போதும். நான் சுந்தரத்தை ஒன்றும் செய்வதில்லை, போ. போயி..... நானும் உங்கம்மாளும் சொன்ன அந்தக் கணேசர் விஷயத்தை கொஞ்சம் கவனி. போ.

வச: இதுக்கும் அதுக்கும் என்னப்பா சம்பந்தம்?

(என்று சொல்லிக் கொண்டே வசந்தா போய் விடுகிறாள். நல்லப்பர் கீழே இறங்கி வந்து மீண்டும் மோட்டாரில் ஏறப் போனவர் திடீரென்று திரும்பி சுந்தரத்தின் 'ஆபீஸ் ரூம்'க்குப் போகிறார். சுந்தரம் தன் மேஜையண்டை உட்கார்ந்திருந்தவன் நல்லப்பரைக் கண்டு எழுந்திருக்கிறான்.)

நல்: (நின்றபடியே) ஏண்டா சுந்தரம்! கிடக்கிற தென்று நான் உனக்கு உத்யோகம் கொடுத்தால் நீ சொன்ன வேலையை

விட்டுவிட்டு—வசந்தாவைக்கூட்டிக் கொண்டு—நந்தவனத்தில் .....இருட்டுகிற வேளையிலே—உங்களுக்கு அங்கென்ன ஜோலி ?

சுந் : நான் எனக்குச் சொன்ன வேலையைத்தான் பார்த்துக் கொண்டிருந்தேன். வசந்தா என்னைப் பார்க்க வந்தது. காற்றுட கொஞ்சம் நந்தவனத்துக்குப் போகலாம் என்று வசந்தா விரும்பினது. அங்கே போய் பழைய பள்ளிக்கூட நினைப்புகளை.....

நல் : பள்ளிக்கூட நினைவா ! பாட்டுப் பாடிக் கொண்டிருந்தாயே?

சுந் : ஆமாம் பாடினேன். அருட்பாதான் பாடிக்கொண்டிருந்தேன். தப்பான பாட்டு ஒன்றும் பாடவில்லை.

நல் : ஆமாண்டா. இன்றைக்கு அருட்பா...நாளைக்குப் பொருட்பால்.....அப்புறம் காமத்துப்பால்—அதுக்கப்புறம் 'ஒடப்' பாட்டு ..... தெரியும்டா, இந்தக் காலத்துப் பசங்களை எனக்கு.

சுந் : அப்படி ஒன்றும் நான் செய்யமாட்டேன்.

நல் : சரி.....நீ செய்வாயோ, செய்யமாட்டாயோ.....இனிமேலே நீயும் வசந்தாவும் எங்களுக்குத் தெரியாமல் தனியாகப் பேசுகிற வேலை வைத்துக்கொள்ளக் கூடாது. பேச்சிருந்தால் எனக்கு முன்னால் எவ்வளவு வேணுமானாலும் பேசுங்கள்..... இந்த மாதிரி இன்னொரு தரம் செய்தால்.....பார்த்துக்கொள் ..... அப்புறம் உனக்கு இங்கே ஜோலியில்லை. போய்விட வேண்டியதுதான்.....என்ன ?

சுந் : சரி. இனிமேல் இப்படிச் செய்யமாட்டேன்.

நல் : ஆ ! அப்படிச் சொல்லு. அது தான் நல்ல பிள்ளைக்கு அடையாளம்.

(நல்லப்பர் போகிறார்)

[நல்லப்பர் வெளியில் போய மோட்டாரில் ஏறுவதற்கு முன் நஞ்சப்பனைக் கூப்பிட்டு அவனிடம் வெகு ரகசியமாக,]

நல் : டேய், நஞ்சப்பா இந்த சுந்தரம் இன்னொருதரம் நம்ப வசந்தாவுடன் தனியா எங்காவது பேசிக் கொண்டிருந்தால் என்னிடம் உடனே சொல்லு.

நஞ் : ஆகட்டும் எஜமானே, நான் கவனிச்சிக்கிறேனுங்க, எஜமானே.

(நல்லப்பர் மோட்டாரில் போய் விடுகிறார்.)

காட்சி 19

இடம் : வசந்தாவின் அந்தரங்க அறை

காலம் : பிற்பகல்

[நல்லப்பர் ஊருக்குப்போன மறுநாள் வசந்தா தன்னுடைய அறையில் ஒரு சோபாவில் வெகு விசனத்தோடு உட்கார்ந் திருக்கிறாள். திடீரென்று எழுந்து மேஜைக்கு அருகில் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து காகிதம், பேனா முதலியவற்றைத் தேடி எடுத்து ஒரு சுடிதம் எழுதுகிறாள். கடிதத்தை முடித்து ஒரு கவரில் போட்டு 'கவரை' ஒட்டுகிறாள். மேல் விலாசம் எழுதப் பேனாவை எடுத்தவள் சற்று யோசனை செய்து மேல் விலாசம் எழுதாமல் பேனாவை வைத்து விட்டு,]

வச : செல்லம்மா!

(என்று தன் பணிப்பெண்ணை அழைக்கிறாள். செல்லம்மாள் வருகிறாள்.)

செல் : என்னம்மா ?

வச : செல்லம், இந்தக் கடிதத்தை யாருக்கும் காட்டாமல் கொண்டு போய்...தெரியுமா.....ஒருத்தருக்கும் தெரியாமல் .....சுந்தரம் இருக்கிறார் பாரு...அவரிடம் நான் கொடுத்ததாகச் சொல்லிக் கொடு...யார் தெரியுதா ?...சுந்தரம்...எங்கே யிருக்கிறார் ?... இடம் தெரியுமா ?

செல் : தெரியுமம்மா...நம்ம மோகனரங்கர் இருந்தாரே அந்த எடத்துலே இப்ப வேலே பார்க்கிறாரே அவர்தானே? அவர் முதல் முதல் வந்தபோது இந்த இடத்திலேதானம்மா நான் கொண்டுவந்த காப்பி இட்லி எல்லாம் சாப்பிட்டாரு. உங்க கூடப் படிச்சவர். அவர்தானே ?

வச : ஆமாம் அவர்தான்...அவர் அந்த ரூமில் இருப்பார். அவர் கையிலேயே கொடுக்கவேணும். அவர் மட்டும் தனியாக இருக்கிறதைப் பார்த்து கொடுக்கவேணும்...தெரியுமா ? கூட வேறு யாராவது இருந்தால் கடிதத்தைக் கொண்டுவந்து என்னிடமே கொடுத்து விடு. ஜாக்ரதை. அம்மா-அப்பா-யாருக்கும் இதைப்பற்றி ஒன்றும் நீ சொல்லிவிடக்கூடாது... தெரியுதா, ஜாக்ரதை.

செல்: தெரியுதம்மா. நீங்கள் யாருக்கும் சொல்லக்கூடாது என்று சென்னால் நான் சொல்லுவேனும்மா? இதுவரைக்கும் நான் ஏதாவது அப்படிச் செய்ததுண்டுங்களாம்மா?

வச: இல்லை. நீ எனக்கு மிகவும் நம்பத்தகுந்தவள்-என்றுதான் இந்த வேலையை உன்னிடம் தருகிறேன். ஜாக்ரதையாக இருக்கவேணும் என்பதற்காக எச்சரித்தேன். சரி, போ. அவர் ஏதாவது பதில் சொன்னால் விவரமாகக் கேட்டுக் கொண்டு வந்து சொல்லு. பதில் கடிதம் தந்தாலும் யாருக்கும் தெரியாமல் கொடுக்கச்சொல்லி வாங்கிவா. தெரியுதா? போய் வா.

[கடிதத்தை மடியில் வைத்து மறைத்துக்கொண்டு செல்லம்மாள் மாடியை விட்டிறங்கி, வீட்டுக்கு வெளியில்வந்து, நாலா பக்கமும் திரும்பிப் பார்த்து, தன்னைக் கவனிக்கக் கூடியவர்கள யாரும் இல்லாதது கண்டு, சுந்தரம் இருக்கிற அறைக்குப் போகிறாள். அறைக்குள் நுழையும்போது எங்கிருந்தோ நஞ்சப்பன் வந்துவிடுகிறான். அவனைக்கண்டு திடுக்கிட்டுச் செல்லம்மாள் நின்றுவிடுகிறாள். நஞ்சப்பன் செல்லம்மாளைக் கவனிக்காதவன் போல் அவளைக்கடந்து போய்விடுகிறான். நஞ்சப்பன் போனபின் செல்லம்மாள் சுந்தரம் இருந்த அறைக்குள் நுழைகிறாள். நஞ்சப்பன் தூரத்திலிருந்து திரும்பிப்பார்த்து செல்லம்மாள் சுந்தரம் ஆபீஸ் அறைக்குள் நுழைவதைக் கவனித்துக்கொண்டு நிற்கிறான். செல்லம்மாள உள்ளே போனபின் நஞ்சப்பன் மெதுவாகத் திரும்பிவந்து ஜன்னல் பக்கத்தில் மறைந்து நின்றுகொண்டு செல்லம்மாள் எதற்காக வந்தாள் என்பதைக் கவனிக்கிறான்.

உள்ளே சென்ற செல்லம்மாள் சுந்தரம் தனியாக இருப்பதைக் கண்டு அவன் நாற்காலிக்கு அருகிற் சென்று]

செல்: அம்மா இதை உங்களிடம் ரகசியமாகத் தரச்சொன்னாங்க.

(என்று கடிதத்தைக் கொடுக்கிறாள்.)

சுந்: யார்...வசந்தாவா?

[என்று கேட்டுக்கொண்டே கடிதத்தை வாங்கி ஆவலாகப் பிரித்துப் படிக்கிறான்.]

கடிதம்

"நாம் இருவரும் நந்தவனத்தில் ஏகாந்தமாகப் பேசிக் கொண்டிருந்ததை என் தந்தை மிகவும் கண்டித்து, இனிமேல் அப்படி உங்களுடன் ஏகாந்தமாகப்பழகுவதில்லை யென்று வாக்குறுதிதரும்படி என்னை கேட்டார். நான் சம்மதிக்கவில்லை. உடனே அவர் உங்களை வேலையிலிருந்து நீக்கி விடப் போவதாகச் சொன்னார். அதற்குப் பயந்து நான் அவர் கேட்டபடி வாக்குறுதி தந்துவிட்டேன்.

ஏகாந்தமாக நாம் இப்பொழுது பேசிக்கொள்ள முடியாதென்ருலும் உடனே உங்களிடத்தில் சொல்லிவிடவேண்டிய சில அந்தரங்க விஷயங்கள் இருக்கின்றன. அதைச் சொல்லத்தான் நந்தவனத் துக்கு அழைத்துச் சென்றேன். எதிர்பாராமல் என் தந்தை வந்து விட்டதால் அது முடியாமற் போய்விட்டது. அவற்றை உங்களுக்கு அறிவித்து அதற்கான ஏற்பாடுகளைத் தாங்கள் செய்யாவிட்டால் நான் கொஞ்சங்கூட விரும்ப முடியாத ஒருவருக்கு என்னைக் கல்யாணம் செய்து கொடுக்க பலவந்தம் ஏற்பட்டாலும் ஏற்படலாம். அது ஏற் பட்டால் அதைவிட நான் இறந்து போவது மேல்.

ஆகையினல் நான் நாளை அல்லது மறுதினம் இதே செல்லம் மாள் மூலம் அனுப்பப் போகிற நீண்ட கடிதத்தை நிதானமாகப் படித்து அதில் நான் கேட்டுக்கொள்ளுகிறபடி செய்ய தயவு செய்து தாங்கள் சம்மதிக்க வேண்டும் என் வேண்டுகோளுக்கு இசை வீர்களா? சுருக்கமாகப் பதில் அனுப்புங்கள். செல்லம்மாள மிகவும் நம்பத் தகுந்தவள். அவளைத் தவிர வேறு யாரிடத்திலும் பதில் கொடுத்துவிட வேண்டாம்.

வசந்தா"

கடிதத்தைப் படித்து முடித்த உடன் சுந்தரம் அடியிற் கண்ட பதிலை எழுதிச் செல்லம்மாளிடம் கொடுக்கிருன்.

பதில்

"வசந்தா! உன் நற்குணத்தையும் அன்பையும் நன்ருக அறி வேன். உன் சங்கடங்களைத் தீர்த்துக்கொள்ள நீ விரும்புகிற எதை யும் செய்யக் காத்திருக்கிறேன். சந்தேகமே வேண்டாம். உன் விருப்பத்தை விவரமாக எழுதியனுப்பு. உன் தந்தை எந்த நிமிஷ மும் வந்துவிடக்கூடும். ஆகையினல் தாமதமில்லாமல் தெரியப் படுத்து.

சுந்தரம்"

கடிதத்தை வாங்கி, செல்லம்மாள் உடனே மடியில் வைத்து மறைத்துக் கொண்டு அறையை விட்டு வெளியே வருகிருள். அந்த அறைக்குப் பக்கத்திலேயே உழன்று கொண்டிருந்த நஞ்சப்பன் செல்லம்மாள் பதில் வாங்கிக் கொண்டதையும் பார்த்துக் கொண்டு ஒன்றும் அறியாதவன் போல் செல்லம் மாளைப் பின் தொடர்கிருன். வீட்டுக்குள் நுழைந்த உடன் செல்லம்மாள் மேல் மாடிக்குப் போகும் முன்னல்]

நஞ்சப்பன்: *ஏம்மா, செல்லம்மா, எங்கே போயிருந்தீங்க?*

செல்: *ஏன், எங்கே போனல் உனக்கென்ன?*

நஞ்: *கோவிச்சிக்காதிங்க. சும்மா கேட்டேன். மோகனரங்க ருக்கு பதிலாக வந்திருக்கிற...சுந்தரம் இருக்கிற ரூம்புக்குள்ள போனிங்களே, என்ன விசேசமுண்ணு கேட்டேன்.*

செல் : ஆமாம், சுந்திரத்திடம் ஒரு சங்கதி கேட்கப் போனேன்.

நஞ் : என்ன சங்கதி? முன்னே மோகனரங்கரிடம் இப்படி சங்கதி கேட்கப் போனதுக்குத்தானே எஜமான் சொம்ப கோவிச்சிக் கிட்டாங்கோ. அதனுலே தானே மோகனரங்கரும் இங்கே இருக்க முடியாமெ போச்சு. அவரை ஓட்டிவிட்ட மாதிரி சுந்தரத்தையும் தொறத்திவிடப் பாக்கிறிங்களாக்கும்.

செல் : என்ன நஞ்சப்பா? ஏது!.....வாய்க்கு வந்ததெல்லாம் பேசுகிறுயே? சொம்பத்தான் அதிகாரம் செய்கிறுயே? யார் கொடுத்தது இந்த அதிகாரம்?

நஞ் : அதிகாரம் ஒண்ணுமில்லே, சும்மாச் சொன்னேன். நீங்க இப்படி யெல்லாம் அங்கே போறதைக் கேட்டா எஜமான் கோவிச்சுக்குவாங்க. அதுக்காகச் சொன்னேன்.

செல் : நீயே எஜமானிடம் சாடி சொல்லுவாய் போலிருக்கிறதே! சரி, இதை நான் வசந்தா அம்மாளிடம் சொல்லுகிறேன்.

நஞ் : ஐயையோ! வாண்டாம்மா, செல்லம்மா, வசந்தம்மாளிடம் சொல்லிடாதே.....நான் சும்மா உங்களோடு விளையாட்டாக் கேட்டேன். பெரிய எடத்து சங்கதி நமக்கெனனத்துக்கு? தெரியாமெ கேலியாக் கேட்டுப்பிட்டேன். அம்மா, செல்லம்மா, மன்னிச்சிக்கிங்கோ. வசந்தம்மாளிடம் சொல்லிப்பிடாதிங்க.

செல் : சரி போ. இதிலெல்லாம் நீ தலையிடாதே.

நஞ் : சரி, தலையிடமாட்டேன்.

(என்று குழந்தை கெஞ்சுவது போல் புன்சிரிப்பு காட்டுகிறுன். செல்லம்மாள் மாடிக்குச் செல்லுகிறுள்.)

காட்சி 20

இடம்: செங்கோடன் வீடு

காலம்: நண்பகல்

[செங்கோடன், வெளியூருக்குப் போய் வந்த அலுப்போடும் பசியோடும் வீட்டுக்குள் நுழைகிறான். நுழையும் போதே]

செங்: காளியம்மா! இண்ணைக்கு என்னமோ ரொம்ப களைப்பா இருக்குதுடி! பசிக்குது; சோறு போடு, சடுதியா.

[என்று தன் மனைவியைக் கூப்பிடுகிறான். பதிலில்லை. வீட்டில் அங்கு மிங்கும் எல்லா இடத்திலும் காளியம்மாளைத் தேடு கிறான். காளியம்மாளைக் காணவில்லை. தண்ணீர்ப் பானை யில் கொஞ்சம் தண்ணீர் மொண்டு தாகத்தைத் தணித்துக் கொண்டு அடுப்பண்டை போகிறான். அடுப்பு எரிந்து கொண்டிருக்கிறது. அடுப்பின் மேல் சாதம் வெந்து கொண்டிருக்கிறது. கொதி வருகிற சமயம். பொங்கி வழிந்து அடுப்பை அணைத்து விடும் போல் இருப்பதைப் பார்த்து]

செங்: அட சனியனே! ஒலையிலே அரிசியைப் போட்டுட்டு எங் கெடா போய்த் தொலைஞ்சா இவ?

[என்று சொல்லிக் கொண்டே அடுப்பில் தணலை மட்டுப்படுத்தி, உலையில் தண்ணீர் தெளித்து சாதத்தை அகப்பையில் எடுத்துப் பதம் பார்க்கிறான். சோறு வெந்து விட்டது. குழைந்து போகிற தருணமாக இருப்பதுகண்டு வடிதட்டை எடுத்து வைத்துச் சோற்றை வடிக்கிறான். கஞ்சி வடிய சோற்றுப் பானையைச் சாய்த்து வைத்துவிட்டு அங்கேயே உட்கார்ந்து கொண்டு]

செங்: பொட்டச்சிக்குக்... கொஞ்சம் எடங் குடுத்தா தலைமேலே ஏறிக்குவாங்கிறது செரியாத் தாம் போச்சு! என்ன திமிரு பாரு; அடுப்பிலே அரிசியைப் போட்டுட்டு, கொஞ்சங்கூட பயமில்லாமே எங்கியோ பொயிட்டாளே. சரித்தான்... இனிமே நாஞ் சோறு வடிச்சி இவளுக்கும போடணும் போலே இருக் குது! அவளெச் சொல்லி என்ன பண்றது. என்னே அடிக் கணும்.....கெடக்குது போ...ரொம்பப் பிரியமா இருக்கிறே ளேண்ணு.....நானும் ரொம்ப ஆசையா.....அடிக்கிறதில்லே

திட்றதில்லே, அதட்டிக் கூடப் பேசறதில்லே. அதனாலே அவளுக்கு ரொம்ப பயமத்துப் போச்சு. அப்பா!...எனக்கு இப்ப இருக்கிற பசிக்கி...வரட்டும் அவள் ... சொல்றேன்.....

[என்று தனக்குத்தானே பேசிக்கொண்டிருக்கிறான். அந்த சமயத்தில் யாரோ ஒரு புது மனிதன் பெரிய தலைப்பாகையுடனும் முறுக்கி விட்ட மீசையுடன், உடம்பு முழுதையும் ஒரு கம்பளியால் மூடிக் கொண்டு வலது கையில் ஒரு தடியும் இடது கையில் ஒரு புடவையும் பிடித்துக்கொண்டு செங்கோடனுக்குப் பின்னால் வந்து நிற்கிறான். காலடி ஓசையைக் கேட்டு செங்கோடன் திடுக்கிட்டு எழுந்திருந்து, வந்த மனிதனை]

செங் : யாரையா? எங்கே வந்திங்கோ?

(என்று முகத்தை உற்றுப் பார்க்கிறான். சமையல் வீடு வெளிச்சமில்லாத இடமானதால் செங்கோடன் வந்த மனிதனுடைய அடையாளத்தை அறிய முடியவில்லை.)

செங் : யாருண்ணு தெரியிலியே, வெளியே கொஞ்சம் வெளிச்சத்துக்கு வாங்க.

(என்று அழைக்கிறான். வந்த மனிதன் நின்ற இடத்தை விட்டு அசையாமல் செங்கோடனை முறுத்துவது போல் முறைத்துப் பார்க்கிறான். செங்கோடன் திகைக்கிறான். புது மனிதன் இடது கையில் வைத்திருந்த புடவையைச் செங்கோடனிடம் நீட்டி வலது கையிலுள்ள தடியை உயர்த்தி புடவையை வாங்கிக் கொள்ளச் சொல்லி ஜாடை காட்டுகிறான்.)

செங் : இதென்னய்யா இது, வம்பாருக்குது. யாரோ வந்து என் ஊட்டுக் குள்ள பூந்துகிட்டு என்னை மெரட்றே. பொடவையை என்னத்துக்கு எங்கிட்டெ நீட்டுறே? நானென்ன பொம்பிளையா? எம் பொண்டாட்டி வருவா...அவகிட்டெ இந்தப் பொடவையை நீட்டு. ஒனக்குச் சரியான பதில் அவ கொடுப்பா. நீ யாரு நீ.....எனக்கு மாமனு மச்சானு, கேலி பண்ண... சரிதான், வெளியே வந்து வெவரமாகச் சொல்லு...எனக்குப் பசி கீசிப்பா இருக்குது. வெளையாட நேரமில்லே, வெளியே வாங்க.

(என்று தான் வெளியே போய் உள்ளே இருக்கிற புது மனிதனை மறுபடியும் வெளியில் வர அழைக்கிறான்)

[புது மனிதன் வெளியே வராமல் மறுபடியும் புடவையை நீட்டி தடியை ஓங்கிவிட்டு உள்ளேயே உட்கார்ந்துகொள்ளுகிறான். செங்கோடனுக்குக் கடுங்கோபம் வந்து விடுகிறது.]

செங் : அட சே! நீ கெட்டே, ஒரு மனுசனுட்டம். மரியாதையோட வெளியிலே வந்துடு. இல்லாட்டி நான்.....அப்பறம் பொல்லாதவனாயிடுவேன்.

(புது மனிதன் கொஞ்சங்கூட அசையவில்லை. தடியைக் காட்டி புடவையை கீழே போடுகிறான்.)

செங்: (உள்ளே நுழைந்து) போடா வெளியிலே. போறியா, ஒதை வேணுமா?

(எதிரே, சட்டென்று பாய்ந்து அந்தப் புது மனிதன் வலது கையிலிருந்த தடியைப் பிடுங்கிக்கொண்டு தலைப்பாகையைத் தட்டிவிடுகிறான். தலைப்பாகை தூரப் போய் விழுந்து விடுகிறது. தலைப்பாகை போன பிறகு அந்தத் தலை, மயிர் பார்க்க ஒரு பெண்ணின் தலையென்று தெரிகிறது. செங்கோடன் திடுக்கிட்டு சற்று நிதானித்துக் கீழே உட்கார்ந்து முகத்தை உற்றுப் பார்த்து, அந்தப் புது உருவத்தின் கையைப் பிடிக்கிறான். அது வலையினும் துப்பட்டியில் மறைந்திருந்த கையில் வளையல்கள் இருந்தது தட்டுப்படுகிறது. செங்கோடன் கையைப் பிடித்தவுடன் அது)

புது உருவம்: என்னைத் தொடக்கூடாது (என்று முனகுகிறது).

செங்: அடி ஆத்தே! நீயா இந்த வேசம் போட்டுக்கிட்டு இந்த மெரட்டு மெரட்டிப்புட்டே?

(என்று பிடித்த கையை விடாமல் வெளிச்சத்துக்கு இழுத்துக் கொண்டு வந்து, முகத்தைப் பார்த்து ஒட்டவைத்திருந்த பொய் மீசையை வெடுக்கென்று இழுத்து எடுக்கிறான். காளியம்மாள் கலகலக்கென்று சிரிக்கிறாள். அவள் சிரித்த முகத்தைப் பார்த்த உடன் செங்கோடனுக்கிருந்த கோபமும் பயமும் குறைந்து அவனும் சிரித்துவிட்டு)

செங்: ஏண்டி, எங்கெடி கத்துகிட்டே இந்த வித்தையெல்லாம்? நாங்கூட ஏமாந்து போனேனே! நெசம்மாவே யாரோ புது மனுசன் வந்து ஊட்டுக்குள்ள பூந்துகிட்டானுண்ணே நெனச்சிட்டேன்!.....ஆமாம்.....சோறுக்கிறதை உட்டுட்டு எதுக்காக இந்த வேசமெல்லாம்.

காளி: சோறு? சோறுதான் நீ வடிச்சிப்பிட்டியே.

செங்: நீ ஒலையிலே போட்டுட்டுப்போனது கொழைஞ்சி வீணாப் போவுதேன்னு..... கெடக்குது போண்ணு - நான் வடிச்சேன். அது தப்பா?

காளி: அது ஒண்ணும் தப்பில்லே. சரிதான். இனிமே நீதான் மச்சான் சோறுக்குணும். நான் ஆக்கமாட்டேன். (என்று சிரிக்கிறாள்)

செங்: ஏண்டி ஆத்தா, சோறுக்க, நான் நானென்ன பொட்டச்சியா?

காளி : என்ன மச்சான் நீ தானே சொன்னே. ' இன்னும் மூணு மாசத்துலே பொரட்சி வந்துடப் போவுது, அபபறம் எல்லாம் தலீலே மாறிப்போகும். பொம்பிளீங்கல்லாம் இனிமே ஆம்புளீங்க பாதிரி சரி நெகரா இருக்கலாம், எல்லாத்துக்கும் ஒலம், ஊடு எல்லாம் வரப்போவுது'ண்ணு? சொல்லி நாலு மாசமாச்சு. ஊடும் நெலமும் கெடைக்கிற பொரட்சியெத் தான் காணேம். இந்தப் பொரட்சியாச்சும் வந்திடிச்சீண்ணு வச்சிக்கிலாமே!

செங் : தேவலீடி நீ. எதுக்கு எதைப்போட்டு பொணீக்கிறே. சரி, சரி, பசிக்குது, ரெம்ப களீப்பா இருக்குது. சோத்தை எடுத்துப் போடு.

காளி : அடேயப்பா இதைச் சொன்னமட்டும் பசியும் களீப்பும் வந்துடும். என்ன களீப்பு? ரொம்ப பாடுபட்டுபுட்டே! பொரச்சி பொரச்சிண்ணு ஊருராப் பெரசங்கம் கேக்கப் போயிடுறே. பண்ணே வேலீயெல்லாம் பாளாப் போச்சின்னு பண்ணே பார்க்கிற ஐயா கோவிச்சுக்கறாரு. இண்ணைக்கு நாம் போயி, பக்கத்திலிருந்து வயலுக்குத் தண்ணி பாச்சச் சொன்னேன்.....

செங் : போதண்டி..... சும்மா..... ஒரேடியா என்னுமோ... பசிகுது சோறு போடுடீண்ணு..... அதை உட்டுட்டு.

காளி : எங்கேயிருந்து சோறு போட்றது? பொரச்சி பொரச்சிண்ணு நீ ஊரைச் சுத்திப்புட்டு வரணும். நான் பாடுபட்டு, நானே குத்தி, நானே பொடச்சி, நானே ஆக்கி வச்சா நேரத்துக்கு நேரம் வந்து தின்னுபுட்டு போவே.

செங் : அடி சும்மா கத்தாதே. பொரட்சி வரத்தாம் போவ்து. அதுக்கு வேண்டிய ஏற்பாடெல்லாம் நடந்துகிட்டுத்தான் இருக்குது. இப்பக்கூட அதெப்பத்தித்தான் கேக்கப் போயிருந்தேன்.

காளி : ஆமாம் போ... நல்லா வந்துது பொளப்பெக் கெடுத்த பொரச்சி... அந்தப் பொரச்சிக்காரனுங்க எங்கியோ என்னென்னமோ கொடுமையெல்லாம் செஞ்சிட்டாங்களாம். யாரோ பெரிய மனுசரை கொண்ணுபுட்டாங்களாம்; அவரூட்டைக் கொள்ளீ யடிச்சி... வெளஞ்சிருந்த நெல் வயலுக்கு... நெருப்பு வச்சி வேகடிச்சிட்டாங்களாம்... இப்பத்தான் தபால்கார ஐயா, ராசப்பனுக்கு கடுதாசு குடுக்க வந்தவரு, கதையாச் சொன்னாரு. அந்தப் பொரச்சிக்கா நீ அலீயிறே... பொளப்பத்த ஆம்பளே!

செங் : அதெல்லாம் இங்கே இல்லேடி.... எங்கியோ யாரோ பேரக்கிரிப் பசங்க அப்படிச் செஞ்சாங்கண்ணு, இங்கெயும்

அதெல்லாம் நடக்குமுண்ணு பயப்படுறே? நம்ப ஊர் பொரட்சி அப்படி இருக்காதுடி.

காளி : ஆமாமா... நம்ப ஊரு பொரச்சி அப்படி இருக்காது... நம்ப ஊட்டு நெருப்புண்ணு நம்மெ சுடாது. போ மச்சாம, போ. பொளப்பெத்தவங்க பேச்செக் கேட்டுக்குட்டு அலையிறே. இந்தாப் பாரு... நானு இப்பவே செல்லிப் பிட்டேன். இனிமே நீ இந்தப் பொரச்சிக்குப் போனு... நானு தலையிலே துணியெப் போட்டுக்குட்டு எங்காச்சும் போயி கொளத்துலே குட்டையிலே உளுந்துடுவேன்.

செங் : ஐயையோ! அடியம்மா அப்படி ஒண்ணும் செஞ்சிடாதேடி, தாயே. ஒன்னெக் கும்புடுறேன்.

காளி : அப்பிடிண்ணு இனிமே நீ இந்தப் பொரச்சிக்குப் போகக் கூடாது.

செங் : நானென்னு கொலெ பண்ணவும நெருப்பு வைக்கவுமா பொரச்சிக்குப் போரேண்ணு நெனெக்கிறே. என்னுமோ பொரச்சி வந்தா அல்லாருக்கும் நல்ல சோறு, நல்ல துணி, நெலபுலம் கிடைக்குமுண்ணு சொல்ருங்களேண்ணு தானே போனேன். அப்படி வந்தா நமக்கும் நல்லதுதானே...

காளி : வாண்டாம் வாண்டாம். அந்த நல்ல சோறு நமக்கு வாண்டாம். நமக்கு இருக்கிற சோறு இருந்தாப் போதும்.

செங் : சரி... வாண்டாமுண்ணு வாண்டாம்... அதுக்கேன் இப்படிக் கோவிச்சிக்கிறே?

காளி : அப்படிச் சொல்லு மச்சான்... அப்படிச் சொல்லு... இனிமே நம்ப பொளப்பே உட்டுட்டு இந்தப் பொரச்சிக்கிப் போவாதே. இல்லாட்டி இனிமேலே நீ சீலையைக் கட்டிக்கிட்டு சோருக்கு. நாம்போய் பாடுபட்டு சோத்துக்குக் கொண் டார்ரேன். (என்று சிரிக்கிறாள்.)

செங் : ஆவுட்டும் போ... சரி, ரொம்பப் பசிக்குது, சோறு போடு.

(உடனே காளியம்மாள், துப்பட்டியைத் தூரப்போட்டுவிட்டுத் தன் உடையைச் சரிப்படுத்திக்கொண்டு தலை முடியை ரீவி வழக்கம்போல் முடிந்து கொண்டை போட்டுக்கொண்டு பறக்கப் பறக்க வட்டியை எடுத்துவைத்து, கணவனுக்குச் சாதம் பரிமாறுகிறாள். செங்கோடன் சோற்று வட்டிக்கு முன் உட்கார்ந்துகொண்டு வெகு இனிய முகத்துடன்)

செங் : ஆமாம்... இந்த மீசை, தலைப்பா, துப்பட்டி எல்லாம் எங்கெடி சம்பாதிச்சே? அசல் ஆம்பளையாட்டமா... வேசம் ரொம்ப நல்லாருந்துதடி.

காளி : அதெல்லாம் அந்த பகல் வேச்க்காரன் ரெங்கன் இருக்கிறான் பாரு, அவன் பொஞ்சாதி எனக்கு ரொம்ப பளக்கமானவ. அவகேக் கேட்டு இதுக்கூண்ணு சொல்லி வாங்கி வச்சிருந்தேன். நீ தூரத்திலே வரதைப் பாத்து ஒடனே வேசம் போட்டுக்குட்டு இந்தக் குதுருக்குப் பின்னலெ தான் ஒளிஞ்சிருந்தேன். (என்று சிரிக்கிறாள்.)

செங் : பலே கெட்டிக்காரிடி நீ.

காளி : வேசம் நல்லாருந்துதா மச்சான் ?

செங் : வேசமா ? பேஷ் ! பேஷ் ! பலே பேஷ், ஒன்னே சினிமாவுக்குக்கூடச் சேத்துக்குவாங்கடி. ஐயாயிரம் பத்தாயிரம் கெடைக்கும்.

(இருவரும் சிரிக்கிறார்கள்.)

காட்சி 21

இடம் : புரட்சிக்காரர்கள் ரகசியமாகக் கூடுகின்ற மாந்தோப்பு விடு

காலம் : மாலை

[புரட்சி கட்சியில் அதி தீவிர வாதிகளான கருப்பண்ணனும் வீராசாமியும் மட்டும் ஏகாந்தமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். முத்து வீரப்பனுடைய தாயாருக்கு மிகவும் அபாயகரமான அசௌகரியம் என்று தந்தி வந்ததால் அவன் சொந்த ஊருக்குப் போயிருக்கிறான்.]

கருப் : வீராசாமி நான் சொன்னது சரியாப் போச்சு பார்த்தியா ?

வீரா : என்ன நீ சொன்னது ?

கருப் : ஆதியிலேருந்து நான் இந்த சுந்தரத்தை நம்பிப் பிரயோசனமில்லை, அவன் சொல்ற வழியிலே நாம் ஒரு காரியமும் செய்ய முடியாதுண்ணு சொன்னது சரியாப் போச்சா, இல்லையா ?

வீரா : நானும் அதைத்தானே சொன்னேன். நம்ம முத்து வீரப்பர் தான் அந்த சுந்தரத்தை கட்டிக்கொண்டு அழுகிறார்....என்னு இருந்தாலும் முத்து வீரப்பர் நமக்குத் தலைவர். அவர் சுந்தரத்தை நம்பி அவன் திட்டத்துக்காகக் காத்திருக்கிறபோது நாம் அதற்கு விரோதமாகக் காட்டிக் கொள்ளக் கூடாது என்பதற்காகத்தான் நானும் உன்னுடைய அவசரத்தை அடக்கினேன்.

கருப் : போதும் அந்த சுந்தரத்தின் திட்டத்துக்குக் காத்திருந்தது போதும். இன்னும் காத்திருந்தா நம்ப ரகசியமெல்லாம் அம்பலமாகி போலீஸ்காரன் கிட்டே ஆப்புட்டுக்க வேண்டியது தான்.

வீரா : நீ சொல்லுவது உண்மைதான். ஏற்கனவே இந்த இடத்தின் மேல் போலீஸ்காரருடைய கவனம் விழுந்திருக்கிறதாகத் தெரியுது.

கருப் : பின்னே !...அண்ணைக்கே யாரோ போலீஸ்காரன் இங்கே வந்தானென்று நாமெல்லாம் திக்காலுக்கு ஒருத்தராய் ஓடலையா ?...இதோ பார் வீராசாமி ! அந்த சுந்தரம்

நல்லப்பர் வீட்டுக்கு வேலைக்குப் போய் கிட்டத்தட்ட நாலு மாச மாச்சு. அவன் சாதிச்ச காரியம் என்ன?

வீரா : சுந்தரம் ரொம்ப காரியம் சாதித்துக் கொண்டுதான் இருக்கிறான். அவன் நல்லப்பர் வீட்டில் சும்மா இருக்கிறானென்று நீ நினைக்கிறாய்?

(என்று வீராசாமி சிரிக்கிறான்.)

கருப் : என்ன காரியம்? ரொம்பக் காரியம்!...அவன் பொளக்குறது?

வீரா : அது உனக்குத் தெரியாதா? (மறுபடியும் சிரிக்கிறான்.)

கருப் : தெரியாதே. என்ன? ஏன் சிரிக்கிறே?...

வீரா : நல்ல காரியத்துக்குச் சிரிக்காமல் அழுவா சொல்லுகிறாய்?

கருப் : என்ன நல்ல காரியம்?

வீரா : நல்லப்பருக்கு ஒரே ஒரு மகள் இருக்கிறாள்...பார்த்தால் சும்மா.....ரதிகூட அவளுக்கு ஈடாகமாட்டாள். நான் அவளைப் பலமுறை பார்த்திருக்கிறேன்...பார்க்கிற போதெல்லாம் அப்படியே கடிச்சு தின்னுடலாம் என்று ஆசைவரும்.... அவ்வளவு அழகு.

கருப் : தெரியுஞ் சொல்லு. என்னைவிடவா நீ அவளைப் பார்த்துட்டே....ஆமாம் அவளுக்கென்ன?

வீரா : அவள்...இந்த சுந்தரத்தோடு படித்தவளாம்.

கருப் : ஆமாம், அது தெரிஞ்ச விஷயந்தான்.

வீரா : அவளுக்கும் சுந்தரத்துக்கும் ரொம்ப சினேகமாம்.

கருப் : ஆமாம்.

வீரா : அவளுக்கு அவுங்கப்பனும் அம்மாளும் நிச்சயம் பண்ணியிருக்கிற மாப்பிள்ளை பிடிக்கவில்லையாம்.

கருப் : சரி.

வீரா : அவளை சுந்தரம்—தான் அடித்துக்கொண்டு போகத் திட்டம் போட்டுக் கொண்டிருக்கிறானும்.

கருப் : அப்படியா! உனக்கெப்படித் தெரியும்?

வீரா : இதையெல்லாம் மூடிவைக்கவே முடியாது. அது தானாக வெளியாகிவிடும்...நல்லப்பர் வீட்டைச் சுற்றிலும் உள்ள எல்லாரும் இதைப் பற்றிப் பேசுவதாக இன்று காலையில் ராமநாதன் சொன்னான்.

கருப் : ராமநாதனு !.....ஒஹோ !.....நல்லப்பன் வேலையிலிருந்து தள்ளிவிட்ட...அந்த ராமநாதனு ? அப்படிண்ணு அது நிச்சமாகத் தானிருக்கும். நல்லப்பன் வீட்டு ரகசியமெல்லாம் ராமநாதனுக்குத்தான் தெரியும்...சரி, சரி...இந்த வேலையிலே இருக்கிறவனு அந்த நல்லப்பனுக்கு விரோதமா நமக்கு ஒதவப் போருன் ?...வீராசாமி ! இன்னும் இவனே நம்பிக்கிட்டு நாம்ப சும்மா இருக்கலாமா ?.....வீராசாமி ! முத்து வீரப்பன் சம்மதிச்சாலும் சரி ; சம்மதிக்காவிட்டாலும் சரி... ஆள்கள் எல்லாரும் நாம் இரண்டு பேரும் சொன்னபடி எதையும் செய்யக் காத்திருக்கிருங்க. துப்பாக்கிகள், ரிவால்வர்கள், வெடிகுண்டுகள் இன்னும் மற்ற ஆயுதங்களும் போதுமானது நம்மகிட்ட இருக்குது. நீயும் நானும் போட்டபடி திட்டத்தை முடிச்சி நல்லப்பனுடைய கொட்டத்தை அடக்கணும். என்ன சொல்றே ?

வீரா : நானும் அதைப் பற்றித்தான் யோசனை செய்து கொண்டிருக்கிறேன்.

கருப் : யோசனை என்ன ? வருகிற ஞாயிற்றுக்கிழமை ராத்திரி நல்லப்பன் வீட்டைக் கொள்ளையடித்துவிடவேண்டியதுதான். இப்ப நம்பகிட்டே மூன்நூறு நானூறு ஆட்களுக்குக் குறையாமல் இருக்கிறார்கள். அவர்கள் இப்போ சொம்பத் தூடியா இருக்கிருங்க. நாள் போகப் போக அவர்களுடைய ஆத்திரமும் குறைந்து போகும். உடனே காரியத்தை முத்து வீரப்பன் வருவதற்குள் முடித்துவிடவேணும்.....முத்து வீரப்பன் எப்போ வருவதாகச் சொல்லிவிட்டுப் போனார் ?

வீரா : அது ஒன்றும் நிச்சயமாகச் சொல்ல முடியாது. அவருடைய தாயார் சொம்பப் படுத்திருக்கிறார்களாம். சௌக்யமாகவோ அல்லது சாகவோ எத்தனை நாள் ஆகும் என்று யார் சொல்லமுடியும் ?

கருப் : அதுவும் நல்லது தான். அவர் வருவதற்குள் நாம் முடித்து விட வேணும். அவர் வந்தால் சுந்தரத்தைக் கேட்க வேணும் என்று இன்னும் காத்திருக்கச் சொல்லுவார்.

வீரா : முத்து வீரப்பன் வந்தாலும் நாம் அவரைச் சரிப்படுத்தி விடலாம். அவர் கூட சுந்தரத்தையே நம்பியிருக்கிறவர் அல்ல. கூடுமானவரையிலும் சுந்தரத்தையும் பயன்படுத்திக் கொண்டு வேண்டிய எச்சரிக்கையோடு வேலையை ஆரம்பிக்க வேணும் என்பதுதான் அவருடைய எண்ணம்.

கருப் : சுந்தரம்தான் வசந்தாவை அடிச்சிக்கிட்டுப் போக வசம பார்த்துக்கிட்டிருக்கிருனே. அவன் எங்கே நமக்கு உதவப் போகிருன் ?

வீரா : அது சரி. அது இப்பத்தானே தெரிஞ்சுது.

கருப் : வீராசாமி...நான் சொல்றதைக் கேளு...அந்த வசந்தாவை யும் இந்த சுந்தரம் கொண்டு போய்விட நாம் விட்டு விடக் கூடாது. முதல்லே அவளைப் பிடித்து நம்முடைய மலைக் காட்டிலேஉள்ள குகைவீட்டுக்குக்கொண்டுபோய்விடவேணும். பணத்தை மட்டும் வேண்டிய மட்டும் கறந்துகிட்டு நல்லப் பணை விட்டுவிட்டாலும் கூட பாதகமில்லே. வசந்தாவை மட்டும் நாம் எப்படியாவது தட்டிக் கொண்டு போய்விட வேணும். அப்பறம் சமயம்போலப் பார்த்துக் கொள்ளலாம். என்ன சொல்றே!

வீரா : எனக்கும் அது ரொம்ப ஆசையாகத்தான் இருக்கிறது. ஆனால் எல்லாம் நம் திட்டப்படி முடியணுமே. முதலில் அந்த வீரபத்ரனையும் அவனுடைய ஜவான்களையும் அப்புறப் படுத்த வேணும். அதற்கப்புறம்தான் நல்லப்பர் வீட்டுக்குள் நாம் நுழைய முடியும். அந்த ஜவான்களில் ஒருத்தன் அங்கே இருந்தாலும் நமக்கு ஆபத்துதான்.

கருப் : சரி அதற்கென்ன, செய்யலாம் ?

வீரா : அதற்குத்தான் நான் ஒரு யோசனை? செய்திருக்கிறேன். ஒரு ஐந்நூறு ஆயிரம் செலவு செய்தால் அந்த வீரபத்ரனை ஏமாற்றிவிடலாம.

கருப் : அதென்ன யோசனை? சொல்லு ... போனப் போவுது ஒரு ஆயிரம் ரூபாய். அதை நான் தர்றேன் ... நல்லப்பன் ஊட்லே பூந்துட்டா தான் நமக்கு லச்சு லச்சமா கெடைக்குமே ... என்ன யோசனை, சொல்லு.

வீரா : நல்லப்பன் வீடு ஒரு கோட்டை மாதிரி. அதைச் சுற்றி லும் வீரபத்ரனுடைய சிப்பாய்கள் இராப்பகலாகக் காவல் செய்கிறார்கள். பகல் வேளையைக் காட்டிலும் ராக்காலத்தில் தான் காவல் வெகு ஜாக்கிரதையாக இருக்க வேணும் என் பது நல்லப்பனுடைய கண்டிப்பான ஏற்பாடு. நாம் அந்த வீட்டுக்குள் நுழைந்து நல்லப்பனைப் பிடித்து அவனுடைய இரும்புப் பெட்டிகளை அவனே திறந்துவிடும்படி கத்தி முனை யில் கட்டாயப்படுத்தி ஒவ்வொரு பெட்டியாகச் சோதனை போட்டு, கூடியமட்டும் அங்குள்ள சொக்கத்தையும் தங்க - வைர நகைகளையும் கைப்பற்ற வேணும். அதற்கு நாம் சந் தடி யில்லாமல் திடீரென்று வீட்டுக்குள் புகுந்து நல்லப்பனை அவன் இருக்கிற இடத்தைவிட்டு நகர முடியாதபடி நிறுத்திக் கொள்ள வேண்டும்.

கருப் : வசந்தாவையும் பிடித்துக் கொள்ள வேணும் ... அதை மறந்துடாதே.

(இருவரும் போகிறார்கள்.)

வீரா : ஆமாம் அது வேறே இருக்கிறது. வசந்தாவை ரொம்ப நாளுக்காகப் பிடிக்க வேணும். அவளை யாராவது முரட்டுப் பசங்க தொடவிடாமல் நாமே கவனித்து ரோஜாப் பூவை பறிக்கிற மாதிரி கைப்பற்ற வேண்டும். சில பேர் நல்லப்பர் இருக்கிற அறைக்குள்ளும் சிலபேர் அதே சமயத்தில் வசந்தா இருக்கிற அறைக்குள்ளும் ஏக காலத்தில் குபீலென்று புகுந்து வசப்படுத்த வேண்டும். இதெல்லாம் சந்தடி இல்லாமல் நடக்கவேண்டிய காரியங்கள். துப்பாக்கி, ரிவால்வர், வெடிகுண்டு முதலான ஒன்றுக்கும் அப்போது வேலையில்லை. வீட்டுக்குள்ளே நுழைவதற்கு வாசலில் காவல் காக்கிற சிப்பாய்களோடு சண்டை செய்துவிட்டு அப்புறம் நுழைவது என்பதே இருக்கக்கூடாது. வெளி வாசலில் ஏதாவது ரகளை - சத்தம் உண்டானாலே உடனே உள்ளே இருக்கிறவர்கள் ஜாக்ரதையடைந்து .பந்தோபஸ்து செய்து கொள்வார்கள் - ஆகையினால் நாம் வீட்டுக்குள்ளே நுழையும்போது யாருக்கும் தெரியப்படாது.

கருப் : அதெப்படி முடியும் ?

வீரா : அதற்குத்தான் ... வீரபத்ரன் பண ஆசை உள்ளவனும். கொஞ்சம் பணம் கொடுத்து ஒரு தந்திரம் செய்து, அவனை முதலில் வசப்படுத்த வேண்டும்.

கருப் : பணம் கொடுத்தா நம்ப கட்சியிலே வீரபத்ரன் சேர்ந்துடுவானுண்ணு நீ நெனைக்கிறே ? ஐயோ ! அவன் பொல்லாதவன். பணத்தையும் வாங்கிக்கிட்டு நம்மையும் புடிச்சிக் குடுத்துடுவான். ஊஹும் அது வேண்டாம். அவன் சாடி சொல்லித்தானே அந்த ராமநாதனை நல்லப்பன் 'டிஷ்மிஷ்' செஞ்சானும்.

வீரா : வீரபத்ரன் நம்ப கட்சியில் சேரமாட்டான். அது எனக்குத் தெரியும். அவனுக்கு அவன் கேட்கிறபோதெல்லாம் நல்லப்பன் இரண்டாயிரம் நாலாயிரம் கொடுத்து அவனை முகங்கோணமல் வைத்திருக்கிறான். அதனால் வீரபத்ரன் நம்முடைய கட்சியில் சேரமாட்டான்.

கருப் : பின்னென்னத்துக்குப் பணம் தர்றது?

வீரா : பணம் கொடுத்தால்தான் அவன் நம்மோடு முகங்கொடுத்துப் பேசுவானும்—ராமநாதன் இதெல்லாம் எனக்குச் சொன்னது. பணம் கொடுத்து கொஞ்சம் அவனைத் தூக்கி வைத்துப் பேசி ரொம்ப தந்திரமாக அவனை ஏமாற்ற ஒரு யோசனை செய்திருக்கிறோம்.

கருப் : அதனாலே என்ன லாபம் ?

வீரா : லாபமா ? நாம் நல்லப்பனுடைய வீட்டுக்குள் நுழையும் போது - ராத்திரி பனிரண்டு மணிக்குமேல்—அந்த வீட்டை வழக்கமாகக் காவல் காக்கிற எல்லா சிப்பாய்களையும் கூட்டிக் கொண்டு வீரபத்ரனும் சேர்ந்து எல்லாரும் நாலு மைல் தூரத்திலுள்ள வேறெருரு இடத்துக்குப் போய்விடும்படியாக ஒரு தந்திரம் செய்யப் போகிறேன்.

கருப் : அப்படியா ! அது வெகு நல்ல யோசனைதான். ஆமாம் அதுக்கு என்ன தந்தரம் பண்ணப் போறே ?

வீரா : பண்ணுகிறேன் பார். நீ கொஞ்சம் அவசரப்படாமல் இரு. அதைப் பண்ணி முடித்துவிட்டு விவரமாக உன்னிடம் சொல்லுகிறேன்

கருப் : சரி. அப்படியே செய் ... பணம் வேணுமா ?

வீரா : ஆமாம் வேணும்.

கருப் : ஆமாம், முன்னே ஒரு ஆயிரம் ரூபாய் வாங்கி ஆருக்கோ கூடுத்தியே, அதாருக்கு ?

வீரா : ஓ அதுவா. அது இந்த மாந்தோப்பின்மேல் கவனம் செலுத்தின போலீஸ்காரர்களைச் சரிப்படுத்த. அந்த வீரபத்ரன் 'மாந்தோப்பில் புரட்சிக்காரர்கள் கூடுகிறார்களாம், அதை கவனிக்கவேணும்' என்று போலீஸ்காரரிடம் சொல்லியிருந்தானும். அதனாலேதான் இரண்டுதரம் போலீஸ்காரர் மாந்தோப்புக்கு வந்தது. அவர்களைச் சரிப்படுத்தி மாந்தோப்பில் அப்படி ஒன்றும் இல்லை என்று மேலதிகாரிகளுக்குச் சொல்லிவிட்டார்கள்.

கருப் : ஓஹோ, அப்படியா ! சரி, பணம் ஊட்லெ இருக்குது. வா போகலாம். எடுத்துத் தர்றேன்.

(இருவரும் போகிறார்கள்.)

காட்சி 22

இடம் : நல்லப்பருடைய காவலாளிகளின் தலைவனான வீரபத்ரனுடைய வீடு

காலம் : மாலை

[வீராசாமி ஒரு உயர்தர உத்யோகஸ்தனைப்போல மிகவும் நாகரிகமான உடைகளை அணிந்துகொண்டு வீரபத்ரனுடைய வீட்டுக்குப் போகிறான். வீட்டு வாசலில் ஒரு சிப்பாய் இருக்கிறான். அவனைப் பார்த்து]

வீரா : பெரிய சிப்பாய் ஐயா இருக்கிறாரா ?

சிப்: இருக்கிறார். நீங்கள் யார் ?

வீரா : நம்ப முதலாளி நல்லப்ப எஜமானுடைய பெரிய மில்லில் நான் பெரிய குமாஸ்தா. ஒரு அவசர காரியமாக ஐயாவை உடனே பாக்க வேணும். போய்ச் சொல்லுங்கள்.

(சிப்பாய் உள்ளே போய், சிறிது நேரத்தில் திரும்பிவந்து)

சிப் : வரச் சொல்லுகிறார்.

[வீராசாமி உள்ளே போகிறான். வீரபத்ரன் ஒரு சாய்வு நாற்காலியில் படுத்துக்கொண்டு சுருட்டு பிடித்துக்கொண்டிருக்கிறான். வீராசாமி பட்டாளக்காரன் முறையில் வீரபத்ரனுக்கு 'சல்யூட்' செய்கிறான்.)

வீரபத் : நீங்கள் பெரிய மில்லிலா இருக்கிறீர்கள் ?

வீரா : ஆமாம்.

வீரபத் : நீங்களா அங்கே பெரிய குமாஸ்தா ?

வீரா : ஆமாங்க. தாங்கள் கூட அங்கே போன வருஷம் வந்திருந்தபோது என்னைப் பார்த்திருக்கிறீர்களே!

வீரபத் : எனக்கு நினைவில்லை. உங்களுக்கு என்ன சம்பளம் ?

வீரா : எனக்கு இப்ப ஐநூறு ரூபாய். அடுத்த சித்திரை மாதத்திலிருந்து இன்னும் ஐம்பது ரூபாய் அதிகமாக வரும்.

வீரபத்: சரி, என்னமோ அவசரமாக என்னைப் பார்க்கவேணும் என்று சொன்னீர்களாமே, என்ன அவசரம்?.... உட்காருங்கள்.

[என்று வீரபத்ரன் பக்கத்திலிருந்த நாற்காலியில் வீராசாமியை உட்காரச் சொல்லுகிறான். வீராசாமி, உட்காருமுன்— தன் சட்டை ஜேப்பில் இருந்து ஒரு 'கவரை' எடுத்து வீரபத்ரனிடம் கொடுத்துவிட்டு நாற்காலியில் உட்காருகிறான். காகிதக் கவரை வாங்கின வீரபத்ரன் 'அந்தக் கவரில் இருப்பது என்னவென்று பார்க்கிறான். அதில் ரூபாய் நோட்டுகள் இருப்பதைக் கண்டு வியப்பும் விருப்புமாகப் புருவத்தை உயர்த்தி, வாயைப் புன்சிரிப்பாகத் திறந்து கொண்டு, கண்களை விரித்துக்கொண்டு, பணத்தை எண்ணிப் பார்த்துவிட்டு]

வீர: ஆயிரம் ரூபாய் இருக்கிறது. இது எது?

வீரா: அது தங்களுக்கு எங்களுடைய அன்பளிப்புக் காணிக்கை.

வீரபத்: எனக்கா! அன்பளிப்பா! எதற்காக?

வீரா: எங்கள் மில்லில் வேலை செய்கிற குமாஸ்தாக்கள் எல்லாரும் தங்களை ரொம்ப மெச்சிக் கொண்டாடுகிறார்கள். அதற்கு அடையாளமாக இந்த அன்பளிப்பைத் தங்களிடம் கொடுக்கும்படி என்னை அனுப்பினார்கள்.

வீரபத்: உங்கள் மில்லிலுள்ள குமாஸ்தாக்கள் என்னை எதற்காக மெச்சிக் கொண்டாடுகிறார்கள்?

வீரா: தாங்கள் இங்கே இருப்பதனால்தான் இந்த வட்டாரத்தில் இந்தப் புரட்சிக் கட்சிக்காரர்களுடைய தொந்தரவுகள் ரொம்பக் குறைவாக இருக்கிறது. அதற்காகத்தான் தங்கள் மீது எங்களுக்கு அவ்வளவு பிரியம்.

வீரபத்: அதென்ன அப்படி இந்த வட்டத்தில் புரட்சிக் கட்சியின் தொந்தரவுகள் 'குறைவாக' இருக்கிறது என்று சொல்லுகிறீர்களே! இந்த வட்டத்தில் அது கொஞ்சங்கூட இல்லவே இல்லையே! அந்தக் கட்சி, இங்கே நான் இருக்கிற வரைக்கும் தலை நீட்டவே முடியாதே. யாராவது 'புரட்சி', 'ஸ்டிரைக்' என்ற வார்த்தை சொன்னால்கூட அவனைச் சும்மா விடமாட்டேன். அப்படித்தான் ராமநாதன் என்ற ஒரு குமாஸ்தா "இங்கே 'ஸ்ட்ரைக்' வந்தாலும் வரும்" என்று பேசிக்கொண்டிருந்ததற்காக உடனே அவனை 'டிஸ்மிஸ்' செய்யச் சொன்னேன். என்னுடைய எல்லைக்குள் அந்தப் புரட்சிக்காரர்கள் தொல்லை கொஞ்சங்கூட இல்லவே இல்லை.

வீரா: இது வரையிலும் தங்களுடைய சாமர்த்தியத்தாலும் தைரியத்தினாலும் இங்கே அந்தத் தொல்லை இல்லாமல்தான்

இருந்து வந்தது. ஆனால் இப்போ கொஞ்சம் தலையெடுக்க ஆரம்பித்திருக்கிறது. அதை உடனே தங்களுக்குத் தெரியப் படுத்தி ஒடுக்காவிட்டால் ரொம்ப ரொம்பக் கஷ்டங்கள் இங்கே வந்துவிடும். தங்களுடைய கீர்த்திக்கும் அது கெடுதலுண்டாக்கும். அதைச் சொல்லத்தான் அவசரமாக வந்தேன்.

வீரபத்: இல்லையே. நீங்கள் சொல்லுவதுபோல் இங்கே அந்தப் புரட்சிக் கட்சி தலையெடுத்திருப்பதாக நினைக்க இடமே இல்லையே.

வீரா: அப்படித் தாங்கள் எண்ணி ஏமாந்து போய்விடக் கூடாது. அந்தக் கட்சிக்காரர்கள் வெகு ரகசியமாக ஊருக்கு வெளியிலுள்ள காடுகளிலும் தோப்புகளிலும் தங்கள் கட்சிக் கூட்டங்களை நடத்தி சிறுகச் சிறுகத் தொழிலாளிகளுக்கும் விவசாயிகளுக்கும் ஆசைகாட்டி, இப்போது அதிக ஆள்பலம் சேர்த்து விட்டார்கள்.

வீரபத்: நீங்கள் சொல்கிறபடி அந்தப் புரட்சிக்காரர்கள் இங்கே ஆள் பலம் சேர்த்துவிட்டதாக நான் நம்ப முடியவில்லை. யாரோ ஒரு முத்து வீரப்பனும், அவனும் வீரசாமி, கருப் பண்ணன் என்கிற இன்னும் சிலபேரும் அந்த மாந்தோப்பில் புரட்சிக்கட்சி நடத்தப்போவதாகச் சேதிவந்து அதைப்பற்றிக் கவனம் செலுத்தும்படி சர்க்கார் போலீசுக்குச் சொல்லி யனுப்பினேன். அவர்கள் போய்ப் பார்த்து அந்த மாந்தோப் பில் அப்படி ஒன்றும் கூட்டம் நடக்கவில்லை என்று சொல்லி விட்டார்கள். அந்த முத்துவீரப்பனும் கூட ஊரைவிட்டுப் போய்விட்டதாக இன்று காலையில்தான் தகவல் வந்தது. நீங்கள் அந்த மாந்தோப்பு விஷயத்தைக்கேள்விப்பட்டுத்தான் இப்படிச் சொல்லுகிறீர்கள் போலத் தெரிகிறது.

வீரா: இல்லையில்லை. நான் சொல்லுவது முழுக்க வேறு. மாந்தோப்பு விஷயமாக நீங்கள் சொல்லுவது மிகவும் சரிதான். அங்கே புரட்சிக்காரர் யாரும் இல்லை. அந்த முத்துவீரப்பன் ஊரைவிட்டுப் போய்விட்டதும் உண்மை தான். அது எனக்கே தெரியும். அந்த முத்துவீரப்பன் இப்போதைக்கு இங்கு திரும்பி வருவான் என்று நினைக்கவும் முடியாது. அவன் இல்லாமல் மற்றவர்களுக்கு ஒன்றும் தெரியாது. ஆகையினால் மாந்தோப்பைப் பற்றியும் முத்து வீரப்பன் முதலானவர்களைப் பற்றியும் நாம் கவலைப்பட வேண்டியதில்லை. நான் சொல்லுகிற புரட்சிக்காரர்கள் பெரிய மில்லுக்கு அடுத்தாப்போலிருக்கிற மலைக் காட்டில் இருக்கிறார்கள்.

வீரபத்: அங்கே புரட்சிக்காரர்கள் இருக்கிறார்களா என்ன?

வீரா : ஆமாம் சார் ஆமாம். அவர்கள் எங்களுக்குச் செய்யப் போவதாகத் தெரியவருகிற அபாயத்திலிருந்து எங்களைத் தாங்கள் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்ளத் தான் இவ்வளவு அவசரமாக ஓடி வந்தேன்.

வீரபத்: உங்களுக்கு என்ன அபாயம்? அதைக் கொஞ்சம் விவரமாகச் சொல்லுங்கள்.

வீரா : ஆஹா சொல்லுகிறேன். அதை விவரமாகத் தங்களிடம சொல்லி, தங்களுடைய உதவியைப் பெறவேண்டும் என்று தானே வந்திருக்கிறேன்.....ஆனால்.....அதைப் பற்றிய விவரங்களை,

(வீட்டின் நாலாபக்கத்தையும் திரும்பித் திரும்பிப் பார்த்துவிட்டு)

தங்களுக்கு மட்டும் கொம்ப ரகசியமாகச் சொல்ல வேணும். இங்கே வேறே யாரும் இல்லையே? சொல்லட்டுமா?

(என்று தணிவான குரலில்)

வீரபத்: ஆஹா அப்படியே சொல்லுங்கள். மேலே போகலாம்; வாங்க.

(என்று வீராசாமியைக் கூட்டிக்கொண்டு மாடிக்குச் சென்று ஒரு அறைக்குள் புகுந்து கதவைத் தாழிட்டுக்கொண்டு, தான் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து, வீராசாமியை வேறொரு நாற்காலியில் உட்காரச் சொல்லிவிட்டு)

இப்போது சொல்லுங்கள், எவ்வளவு வேணுமானாலும் ரகசியம். இங்கே யாரும வரவும் முடியாது; நாம் பேசுவதைக் கேட்கவும் முடியாது.

வீரா : வருகிற ஞாயிற்றுக்கிழமை ராத்திரி பனிரெண்டு மணிக்கு மேல் எங்களுடைய வீடுகளை யெல்லாம் நெருப்பு வைத்துக் கொளுத்திவிட்டுப் பெரிய மில்லுக்கும் சேதம் உண்டாக்கத் திட்டம் போட்டு அதற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளும் செய்திருக்கிறார்கள்.

வீரபத்: அப்படியா! அது யார் எனக்குத் தெரியாமல் இந்த வட்டாரத்தில் வீடுகளுக்கு நெருப்பு வைக்கத் திட்டம் போடத் துணிச்சலுள்ளவன்?...ஆமாம், உங்கள் வீடுகளுக்கு ஏன் நெருப்பு வைக்க வேணும்?

வீரா : அதுவா? அதுவா விவரமாகச் சொல்லுகிறேன், கேளுங்கள்...போன ஏழெட்டு மாசமாக இந்தப் புரட்சிக்கார ஆள்கள் பெரிய மில்லைச் சேர்ந்த தொழிலாளிகளை வேலை நிறுத்தம்

செய்யச் சொல்லித் தூண்டுகிறார்கள். சில தொழிலாளிகள் அதற்கு ஒத்தாசையாக இருக்கிறார்கள். அந்த மில்லில் குமாஸ்தாக்களும், மேஸ்திரிகளும், மற்ற உத்தியோகஸ்தருமாக மாதச் சம்பளம் வாங்குகிறவர்கள் சுமார் ஐந்நூறு பேர்கள் இருக்கிறோம். நாங்கள் தொழிலாளிகளிடத்தில் சொல்ல வேண்டியதைச் சொல்லி இந்தப் புரட்சிப் பிரசாரக்காரர்கள் அங்கே வரமுடியாமல் தடுத்து விட்டோம. அதற்காக எங்கள் மேல்தான் அவர்களுக்கு அதிக கோபம். அதனால் முதலில் எங்கள் வீடுகளுக்கு நெருப்பு வைக்கத் திட்டம்.

வீரபத் : அந்தத் திட்டம் நடக்கப் போகிறதென்று உங்களுக்கு எப்படித் தெரியும்? அது வெறும் புரளியாக இருந்தாலும் இருக்கும்.

வீரா : புரளியல்ல இதோ பாருங்கள்.....

(என்று வீராசாமி தன் சட்டைப் பையிலிருந்து ஒரு பிளான் போட்ட காகிதத்தை எடுத்து விரித்துக் காட்டி)

வீரா : இதுதான் அவர்களுடைய 'பிளான்'. ஞாயிற்றுக் கிழமை ராத்திரி 12 மணிக்கு மேல் அவர்கள் எந்த இடத்தில் வந்து சேரவேண்டும் என்ற விவரங்கள் எல்லாம் இதில் தெளிவாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கட்சியின் முக்யஸ்தர்கள் ஒவ்வொருவருக்கும் இந்தப் 'பிளான்' பிரதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

(அந்தக் காகிதத்தை வீரபத்ரன் வாங்கி மிகவும் கவனமாகப் பரிசீலனை செய்துவிட்டு)

வீரபத் : ஆம், இது அந்தப் புரட்சிக்காரர்கள் வழக்கமாகச் செய்கிற முறைப்படி தான் 'பிளான்' போடப்பட்டிருக்கிறது. இது உங்களுக்கெப்படிக் கிடைத்தது?

வீரா : அது ஒரு பெரிய அதிருஷ்டம்தான். எங்கள் தொழிலாளரில் சிலரை இந்தக் காரியத்துக்குத் துணை சேர்க்க வந்த ஒரு 'புரட்சி'த் தலைவன் இதை வெகு ரகசியமாகச் சிலருக்குக் காட்டிவிட்டு, மறுபடியும் மடித்து வைக்கிறபோது அஜாக்ரதையால் இதை நழுவ விட்டுவிட்டான். அதைக் கவனித்துக் கொண்டிருந்த - எங்களுக்கு மிகவும் வேண்டியவனை - ஒரு தொழிலாளி யாருக்கும் தெரியாமல் இதை எடுத்து மறைத்துக் கொண்டுவந்து, எங்களிடம் கொடுத்தான். நேற்றிரவுதான் இது எனக்குக் கிடைத்தது. இது கிடைத்திராவிட்டால் எங்களுடைய ஐந்நூறு வீடுகளும் இன்னும் அக்ரஹாரம் பக்கமாக இருக்கும் பல ஏழைகள் வீடுகளும் வெந்து

சாம்பலாகி ஏறத்தாழ ஒரு இரண்டாயிரம் ஜனங்கள் ஆணும் பெண்ணும், குஞ்சும் குழந்தையுமாக வேகிற வீடுகளிற் சிக்கித் தவிக்கவேண்டி நேர்ந்திருக்கும்.

வீரபத்: ஆமாமாம். இது சிக்கினது ஒரு அதிருஷ்டந்தான். இது வெறும் நெருப்பு வைக்கப் போகிற சேதிமட்டும் அல்ல. அவர்கள் ஆரம்பத்திலிருந்து கடைசிவரையிலும் வரிசையாகச் செய்யப் போகிற எல்லாக் காரியங்களும் அடங்கிய ஒரு தஸ்தாவேஜ். இதை வைத்துக்கொண்டு அந்தப் புரட்சித் தலைவர்கள் அத்தனை பேரையும் அவர்கள் நெருப்பு வைப்பதற்கு முன்னாலேயே ஒரே இடத்தில் மடக்கிவிட முடியும்.

வீரா ஆ! பார்த்தீர்களா, நான் எதிர்பார்த்தபடியே நீங்கள் உடனே சொல்லிவிட்டீர்கள். இந்த...உங்களுடைய...புத்திசாலித்தனத்துக்காகத்தான்...எங்கள் குமாஸ்தா சங்கத்தார் என்னை உங்களிடம் அனுப்பினார்கள். அந்தப் புரட்சித் தலைவர்கள் அத்தனை பேரையும் ஒரே இடத்தில் அமுக்கிக் கொள்ள முடியுமானால் அது உங்களால்தான் முடியும்.

வீரபத்: உங்களை அனுப்பினது உங்கள் குமாஸ்தா சங்கமா?

வீரா: ஆமாமாம். நேற்று இந்தத் திட்டம் கிடைத்த உடனேயே எங்களுடைய 'கமிட்டி' அங்கத்தினர்களைக் கூட்டி நடுஜாமத்தில் இதைப் பற்றி ஆலோசனை நடத்தினோம். அந்த ஆலோசனையில் இந்த விஷயத்தை வெகு ரகசியமாகத் தங்களிடத்தில் மட்டும் ஒப்பித்தால்தான் அந்தப் புரட்சிக்காரக் கும்பலை ஒரே இடத்தில் நறுக்கென்று அழுத்திக்கொள்ள முடியும் என்று எல்லாரும் ஏகமனதாகத் தீர்மானித்து, அதற்கு ஆகவேண்டிய செலவுகளுக்காக சங்கத்தின் அங்கத்தினர்கள் ஐநூறு பேர்களிடத்திலிருந்தும் தலைக்குப் பத்து ரூபாய்க்குக் குறையாமல் வசூலிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

வீரபத்: இந்த ஆயிரம் ரூபாய் அதைச் சேர்ந்ததா?

வீரா: ஆமாம். சங்கத்தின் இருப்புத் தொகையிலிருந்து உடனே இந்த ஆயிரம் ரூபாயை எங்களுடைய வீடு வாசல்களையும் பிள்ளை குட்டிகளையும் தாங்கள்தான் இந்த அபாயத்திலிருந்து காப்பாற்ற முடியும் என்று நாங்கள் வைத்திருக்கிற நம்பிக்கைக்கு முன் பணமாகத் தரவேணும் என்றும், இந்தக் காரியத்தைத் தாங்கள்

வெற்றிகரமாக முடித்தபின் இன்னும் ஒரு ஐயாயிரம் ரூபாய் நம்ம முதலாளி நல்லப்பருடைய தலைமையிலேயே ஒரு கூட்டம் கூட்டி, அதில் பகிரங்கமாகத் தங்களுக்குத் தந்து நன்றி செலுத்த வேணும் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

வீரபத்: அப்படியா ... அது! ... ரொம்ப சந்தோஷம். நீங்களும் உங்கள் சங்கமும் என்னிடத்தில் வைத்திருக்கிற நம்பிக்கைக்கு நான் ரொம்ப வந்தனம் செலுத்த வேண்டும். நீங்கள் எதிர் பார்க்கிறபடி அந்தப் 'புரட்சி'க் கும்பல் முழுவதையும் அவர்கள் உங்கள் வீடுகளுக்கு நெருப்பு வைக்க வருவதற்கு முன்னால் அவர்கள் கூடப் போகிற முனியப்பன் கோயிலுக்குள்ளேயே அசைய முடியாதபடி விலங்கு போட்டுவிட என்னால் முடியும். மீறினாலும் அத்தனை பேரையும் அந்த முனியப்பனுக்கே பலியாக்கிவிடவும் என்னால் முடியும் ... ஆனால் இதில் ஒரு விஷயம் கவனிக்க வேணும்...

வீரா: என்ன?

வீரபத்: அந்தப் பெரிய மில் இருக்கிற ஆலம்பாடிக் கிராமம் பெரிய ஊர். இங்கிருந்து நாலு மைல் தூரத்தில் இருக்கிறது. அந்தக் கிராமத்தில் ஒரு சர்க்கார் போலீஸ் கச்சேரியும் ஐவான்களும் ஒரு சப்இன்ஸ்பெக்டரும் அங்கே இருக்கிறார்கள். அவர்களுக்குத் தெரியாமல் நான் இங்கிருந்து என்னுடைய சிப்பாய்களைக் கொண்டுவந்து அந்தக் காரியத்தைச் செய்வதென்றால் .....

வீரா: அதுதானே இதிலுள்ள ரகசியம். அதற்காகத்தானே நாங்களும் எங்கள் மனைவி மக்களும் உங்களைத் தஞ்சமாக எண்ணுகிறோம். அதனால்தானே எங்கள் 'குமாஸ்தாக்கள் சங்க'கமிட்டியார் இந்த ரகசியத்தைத் தங்களிடத்தில் மட்டும் சொல்லச் சொல்லி என்னை அனுப்பினார்கள்.

வீரபத்: என்ன ரகசியம்?

வீரா: பெரிய மில் இருக்கிற ஆலம்பாடிக் கிராமத்திலுள்ள சர்க்கார் போலீசு கச்சேரியைச் சேர்ந்த ஐவான்கள், ஹெட்கான்ஸ்டபிள், சப்இன்ஸ்பெக்டர் எல்லாரும் அந்தப் 'புரட்சிக்' கூட்டத்தாருக்கு மிகவும் உளவு. ஏராளமான லஞ்சம் வாங்கியிருக்கிறார்கள். நான் தங்களிடம் இது விஷயமாக வந்த சங்கதி அந்தப் போலீஸ் கச்சேரிக்குத் தெரிந்தாலே போதும். உடனே புரட்சிக்காரரை எச்சரிக்கையாக இருக்கும்படி இந்தப் போலீஸ் காரரே அவர்களுக்குத் தகவல் கொடுத்துவிடுவார்கள். அப்படி நடந்துவிட்டால் அடுத்த ஞாயிற்றுக்கிழமைக்கு அவர்கள் போட்டிருக்கிற திட்டத்தை விட்டுவிடுவார்கள்.

ஆனால் இன்னொரு நாள் – எங்களுக்கு எச்சரிக்கை கிடைக்காத ஒரு நாள் - எங்கள் வீடு வாசலும் குஞ்சு குழந்தைகளும் வெந்து சாம்பலாக வேண்டியதுதான்.

வீரபத்: அப்படியா ! அங்குள்ள சர்க்கார் போலீஸ் அவ்வளவு மோசமா ?

வீரா: அதைவிட மோசமான போலீஸ் வேறெங்கும் இல்லே. அந்த கச்சேரியில் இப்போ சப் இன்ஸ்பெக்டர் யார் தெரியுமா உங்களுக்கு ?

வீரபத்: யாரு ?

வீரா: போன வருஷம் உங்களைப்பற்றி சர்க்காருக்கு ரிப்போர்ட்டுகள் எழுதி உங்களுக்குத் தொல்லை கொடுத்தானே, அந்த ரங்கராஜுதான் இப்போ அங்கே சப்இன்ஸ்பெக்டர்.

வீரபத்: அவனா ! அந்த அயோக்யப் பயலா, அங்கே சப்இன்ஸ்பெக்டர் ? அவன் ஹெட்கான்ஸ்டேபிளாகத்தானே இருந்தான்?

வீரா: ஆமாம் பாருங்கள். அவன் யாருக்கோ லெஞ்சம் கிஞ்சம் கொடுத்து எப்படியோ இங்கேயே சப்இன்ஸ்பெக்டராக வந்து விட்டான். அவன் இந்தப் புரட்சிக் கட்சிக்காரரோட ரொம்ப உறவு. அதற்காகத்தான் தாங்கள் யாருக்கும் தெரியாமல் தங்களுடைய சிப்பாய்களுடன் முனியப்பன் கோவிலுக்குப் பக்கத்தில் மறைந்திருந்து திடீரென்று அவர்களை அமுக்கிக் கொள்ள வேணும்.

வீரபத்: ஆமாம். அப்படி அவன் எல்லைக்குள் நான் வந்து இந்தப் புரட்சிக்காரக் கும்பலைப் பிடித்துவிட்டால் தான் அவன் இவர்களுக்கு உளவாக இருப்பவன் என்று சர்க்காருக்கு ரிப்போர்ட் அனுப்பி, இவனை 'டிஸ்மிஸ்' செய்து, ஜெயிலுக்குக் கூட அனுப்பலாம்.

வீரா: ஆமாங்க, அதுதான் எனக்கும் ஆசை.

வீரபத்: சரி அப்படியானால் நான் எத்தனை ஜவான்களுடன் வர வேண்டியிருக்கும் ? அந்தப் புரட்சிக்காரர்கள் எத்தனை பேர் ?

வீரா: மலைக்காட்டிலிருந்து முனியப்பன் கோவிலுக்குள் வந்து கூடப் போகிற புரட்சிக்காரர்கள் இருபத்தைந்து பேர்கள் தான் இருப்பார்கள். அவர்கள் ஊருக்குள் வந்த பிற்பாடு தான் மற்றவர்கள் சேருவார்கள்.

வீரபத்: அவர்களிடத்தில் துப்பாக்கி, ரிவால்வர், முதலான ஆயுதங்கள் எவ்வளவு இருக்கும் ?

வீரா : துப்பாக்கிகள் அல்லது ரிவால்வர்கள் இருக்கிறதாகத் தெரியவில்லை. இல்லை என்றுதான் நினைக்க வேண்டியிருக்கிறது. அப்படி இருந்தாலும் ஒன்றிரண்டுதான் இருக்கும். அது உங்களை ஒன்றும் செய்துவிட முடியாது. ஆனால் அவர்களிடத்தில் பலவிதமான நாட்டு வெடி குண்டுகள் இருக்கின்றன.

வீரபத்: வெடி குண்டுகளைப் பற்றி பயப்பட வேண்டியதில்லை. ஆள்கள் எண்ணிக்கை மட்டும் நிச்சயமாகத் தெரிந்தால் அவர்கள் வெடிகுண்டையோ வேறு ஆயுதங்களையோ உபயோகிக்க முடியாமலேயே ஒடுக்கி விடுவேன்.

வீரா : முனியப்பன் கோவிலுக்குள் நாம் எதிர்க்க வேண்டியவர்கள் முப்பது பேர்களுக்குமேல் இருக்காதென்று நிச்சயமாகச் சொல்லலாம்.

வீரபத்: அது நிச்சயம்தானே ?

வீரா : நிச்சயம்தான்.

வீரபத்: ஊருக்குள் அவர்களோடு சேரக்கூடியவர்கள் எத்தனை பேர்கள் இருப்பார்கள் ?

வீரா : அது நிச்சயமாகத் தெரியவில்லை.

வீரபத்: சரி. இந்த விஷயத்தை முனியப்பன் கோவிலுக்குள்ளேயே முடித்துவிட வேண்டியதுதான் ... அந்த முனியப்பன் கோவிலை நான் பார்த்திருக்கிறேன். விஸ்தாரமான இடமுள்ளதுதான் ... ஆனால் அதில் யாரும் மறைந்திருக்க இடமில்லை. அந்தக் கோவிலுக்குப் பக்கத்தில் நானும் என்னுடைய ஐவான்களும் ஆயுதங்களோடு மறைந்திருக்கக்கூடிய இடம் ஏதாவது இருக்கிறதா ?

வீரா : இருநூறு முன்நூறு சிப்பாய்கள் ஆயுதங்களோடு ஒருவருக்கும் தெரியாதபடி ஒளிந்திருக்கக் கூடிய ஒரு மிக நல்ல கட்டிடம் முனியப்பன் கோவிலுக்கு வெகு சமீபத்தில் இருக்கிறது. அது நமக்கு ஒரு பெரிய அதிருஷ்டம். அந்தக் கட்டிடம் எங்கள் குமாஸ்தாக்கள் சங்கத்தைச் சேர்ந்த ஒருவருக்குச் சொந்தமானது. அதை நாம் எப்படி வேணுமானாலும் உபயோகப்படுத்திக் கொள்ளலாம்.

வீரபத்: பேஷ்! அது போதும். நாங்கள் எழுபது - எழுபத்தைந்து பேர்கள் எங்கள் ஆயுதங்களோடு ஞாயிற்றுக்கிழமை மாலையில் இருட்டினபின் கொஞ்சங் கொஞ்சம் பேர்களாக யாருக்கும் தெரியாமல் அந்தக் கட்டிடத்துக்குள் போய் மறைந்து கொள்ள வேண்டும். ஆனால் இருட்டின பிறகும் கூட, ஆலம்பாடி ஜமீன் வீதிகளின் வழியாகப் பிரங்கமாக-

என்னுடைய சிப்பாய்கள் வந்தால் எல்லாரும் ஜாக்ரதையாகி விடுவார்கள். ஆகையினால் யாருக்கும் தெரியாதபடி அந்த கட்டிடத்துக்குள் நாங்கள் இருட்டினபின் பத்து மணிக்கு முன் புகுந்து மறைந்து கொள்ள வழி தேட வேண்டும்.

வீரா : நல்ல வேளையாக அதற்கும் ஒரு நல்ல வழி யிருக்கிறது.

வீரபத் : எப்படி ?

வீரா : ஆலம்பாடி ஊருக்குள் போகாமல் இங்கிருந்து நம்ம முதலாளி நல்லப்பருடைய நந்தவனத்துக்குப் பின்னால் ஒரு காடு இருக்கிறது. நந்தவனமும் முன் காட்டோடு சேர்ந்திருந்தது தான். அந்தக் காட்டில் ஒரு கொடித்தடம் இருக்கிறது. அதில் வடக்கே போனால் அது அந்த ஆலம்பாடி முனியப்பன் கோயிலுக்குப் பக்கத்திலிருக்கிற அந்த கட்டிடத்துக்கே கொண்டுபோய் விடும்.

வீரபத் : அப்படியானால் ரொம்ப நல்லதாச்சு. எல்லாம் நமக்கு அநுகூலமாகத்தான் இருக்கிறது. சரி, ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணிக்குமேல் பத்து மணிக்குள் என்னுடைய சிப்பாய்கள் எழுபது பேருக்குக் குறையாமல் அந்தக் கட்டிடத்துக்கு வந்து சேர்ந்து விடுவார்கள்.

வீரா : தாங்கள் ?

வீரபத் : நானில்லாமலா ! நான் இவர்களையெல்லாம் அனுப்பி விட்டுக் கடைசியில் வருகிறேன். நீங்களும் என்னுடன் இருக்க வேணும்.

வீரா : ஆஹா. நான் ஞாயிற்றுக்கிழமை மாலை ஏழு மணிக்கே தங்களிடம் வந்து விடுகிறேன். நான் வந்த பிறகே தாங்கள் தங்களுடைய சிப்பாய்களை அந்தக் கொடித்தடத்தின் வழியாக அனுப்பலாம் ... ஆனால் ஒரு விஷயம் ...

வீரபத் : என்ன ?

வீரா : தங்களுக்கும் தங்கள் சிப்பாய்களுக்கும் அங்கே முனியப்பன் கோவிலுக்குப் பக்கத்திலுள்ள அந்தக் கட்டிடத்தில் ஒரு மகத்தான விருந்து ஏற்பாடு செய்யப்போகிறோம். அதனால் தாங்களும் தங்கள் சிப்பாய்களும் இங்கே சாப்பிட்டுவிடாமல் அங்கே வந்து விருந்துண்ண வேண்டும்.

வீரபத் : விருந்தென்றால் எனக்குப் பிரியம்தான். ஆனால் அன்றைக்கு அங்கே நீங்கள் விருந்து நடத்தக்கூடாது. அந்தக் கட்டிடத்தில் ஆள்கள் இருக்கிறதே யாருக்கும் தெரியக்கூடாதே. விருந்து நடத்தினால் ...

வீரா : ஆமாம் சார். நாங்கள் ரொம்ப முட்டாள்தனமாக விருந்து வைக்க நினைத்து விட்டோம். தாங்கள் சொல்லுவதுதான் சரி ... அதலைத்தான் ... தாங்கள் பட்டாளத்... தளபதியாக விளங்குகிறீர்கள்.

வீரபத் : (மிகுந்த சந்தோஷத்துடன்) இதிதெல்லாம் எனக்கு ரொம்ப அனுபவம் சார்...சரி நானும் என்னுடைய ஆள்களும் வருகிற ஞாயிற்றுக்கிழமை ... இன்றைக்கு என்ன கிழமை?...

வீரா : வியாழக்கிழமை.

வீரபத் : ஆமாம். வியாழக்கிழமை ... வியாழன் ... வெள்ளி ... சனி ... ஞாயிறு ... மூன்று நாள் கழித்து ... வருகிற ஞாயிற்றுக்கிழமை ராத்திரி 10 மணிக்குள் அந்தக் கட்டிடத்துக்குள் வந்து பதுங்கிக் காத்திருந்து 12 மணிக்கு மேல் அந்த முனியப்பன் கோயிலில் கூடப்போகிற 'புரட்சிக்'காரர்களைப் பிடித்துக் கைது செய்துவிடவேண்டியது; என்ன இதுதானே நான் செய்ய வேண்டியது?

வீரா : போதும். அவ்வளவு செய்தால். போதும். அதற்கப் புறம் எங்கள் வீடுகளுக்கு நெருப்பு வைக்கக் கூடியவர்கள் யாருமில்லை.

வீரபத் : சரி, அவ்வளவுதானே? வேறென்றும் இல்லையே?

வீரா : அவ்வளவுதான். எங்கள் வயிற்றில் பால் வார்த்தீர்கள். நீங்கள் ஏற்றுக்கொண்ட இந்தப் பெரிய கைங்கரியத்தை எவ்வளவோ குடும்பங்கள் தப்பிப் பிழைத்தது. தங்களுக்கு அதற்காக எவ்வளவு நன்றி சொன்னாலும் போதாது ... சரி... நான் போய் வரட்டுமா ... ஞாயிற்றுக்கிழமை ... தயாராக இருக்கும்படி ... உங்கள் சிப்பாய்களுக்கு.....

வீரபத் : அதெல்லாம் என் வேலை ... நீங்கள் மட்டும் மறக்காமல் ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்கே வந்துவிட வேண்டும்.

வீரா : ஆஹா. ஐந்து மணிக்கே வேண்டுமானாலும் வருகிறேன்... போய் வரட்டுமா ... உத்தரவு கொடுங்கள்.

வீரபத் : ரொம்ப சந்தோஷம். போய் வாருங்கள் ... ஆமாம் அடுத்த ஞாயிற்றுக்கிழமைக்குள்ளாக நீங்கள் சொன்ன அந்த ஐயாயிரம் ரூபாய் வசூலாகி விடுமா?

வீரா : ஓ! எங்கள் சங்கத்தில் சொன்னால் போதும். உடனே வசூலாகிவிடும்.

வீரபத் : ஆமாம். அதையும் ஆறிப்போக விடாமல் கையோடு கையாக வசூல் செய்து விடுவது நல்லது.

வீரா : ஆஹா—அதற்கு நானுச்சு. தாங்கள் சங்கோசிக்க வேண்டாம். ஞாயிற்றுக்கிழமை அங்கே தாங்கள் வருகிற போது வேணுமானாலும் அந்த ஐயாயிரம் தயார் செய்து வைக்கிறேன்.

வீரபத் : ஆமாம், அதுதான் நல்லது. பின்னல் பகிரங்கமாகத் தருவதென்பதும் அவ்வளவு நல்லதல்ல. நல்லப்பருக்கே அது பிடிக்குமோ என்னமோ?

வீரா : சரி. உங்களிஷ்டப்படியே செய்துவிடுவோம்.

(போகிறான்.)

காட்சி 23

இடம் : மாந்தோப்பு
காலம் : இரவு

[வீராசாமி வெகு சாமர்த்தியமான முறையில் வீரபத்ரனை வசப்படுத்தி விட்ட விவரங்களைக் கருப்பண்ணன் முதலானவர்களிடத்தில் சொல்லி, குறித்த ஞாயிற்றுக்கிழமை இரவு 12 மணிக்கு மேல் கல்லப்பருடைய வீட்டில் புகுந்து அவரைப் பயமுறுத்தி அவருடைய இரும்புப் பெட்டிகளிலுள்ள ரொக்கப் பணங்களையும் விலையுயர்ந்த நகைகளையும் கவர்ந்து கொண்டு வசந்தாவையும் கடத்திக் கொண்டு போய்விடுவது என்று தீர்மானம் செய்யப்பட்டது. அதற்காகத் திட்டம் போட்டு, அந்தத் திட்டப்படி யார் யார் எங்கெங்கே இருந்து என்னென்ன வேலைகளை எப்படிச் செய்ய வேண்டும் என்பதை அவரவர்களுக்குச் சொல்லி ஒப்படைக்க வெள்ளிக்கிழமை இரவு 12 மணிக்கு புரட்சிக் கட்சியின் ரகசிய இடமாகிய மாந்தோப்பு வீட்டில் கட்சித் தொண்டர்கள் எல்லாரும் வந்து சேரவேண்டுமென்று ரகசிய அழைப்புகள் அனுப்பப்பட்டிருந்தது. அதற்காகச் சுற்றுப்புறங்களிலுள்ள பல ஊர்களிலிருந்து ஏராளமான புரட்சித் தொண்டர்கள் அவரவர்களுடைய தலைவர்களுடன் மாந்தோப்பு வீட்டுக்கு வந்து சேருகிறார்கள். மாந்தோப்புக்கு வெளியிலும் மாந்தோப்புக்குள் வீட்டைச் சுற்றிலும் அங்கங்கே காவல் காக்கத் தொண்டர்கள் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். வீட்டுக்குள் ஒரு பெரிய கூடத்தில் வீராசாமி, கருப்பண்ணன், ராமநாதன், கோவிந்தன் முதலானவர்கள் உட்பட சுமார் ஐம்பது முக்யஸ்தர்கள் மட்டும் கூடியிருக்கிறார்கள். கூடத்தின் ஒருபுறத்தில் ஒரு பெரிய மேஜையும் சில நாற்காலிகளும் இருக்கின்றன. தலைவர்களில் சிலர் நாற்காலிகளிலும் சிலர் பெஞ்சிகளிலும் மற்றவர்கள் கீழேயும் உட்கார்ந்திருக்கிறார்கள். வீராசாமியும் கருப்பண்ணனும் மேஜைக்கு இரு புறத்திலும் நிற்கிறார்கள். மேஜையின் மீது ரிவால்வர்களும் துப்பாக்கிகளும், வெடிகுண்டுகளும் வேறு சில ஆயுதங்களும் காணப்படுகின்றன.

பட்டணக்கரைப் பழக்கமும் கனிவுப் படிப்பும் பத்திரிகைகளைப் படித்து அரசியல் பேச்சுகளில் அனுபவம் உள்ளவர்கள் என்று கருதப்பட்டவர்களும் ஆகிய இவர்கள் மட்டும்தான் திட்டம் வகுக்கும் ஆலோசனைக்கு அந்தக் கூடத்துக்குள் அனுமதிக்கப் பட்டவர்கள். வீட்டிற்கு வெளியிலும் மாந்

தோப்பைச் சுற்றிலும் இருந்தவர்கள் வெறும் கிராமத்துப் பாமர ஏழைகள். புரட்சிக் கட்சியில் சேர்ந்தால் தங்களுக்கு உடனே பணமும், நிலமும் மற்ற வாழ்க்கை வசதிகளும் கிடைத்து விடும் என்ற ஆசையைத் தவிர வெறு ஒன்றும் அறியாதவர்கள்.

காளியம்மாள் கணவன் செங்கோடனுக்கும் இந்த மாந்தோப்புக் கூட்டத்துக்கு வரும்படி தகவல் போனதால் செங்கோடனும் வருகிறான். செங்கோடன் வெறும் உழவாளி. படிப்போ பட்டணப் பழக்கமோ இல்லாதவன். அவன் புரட்சிக் கட்சியைச் சேர்ந்த எல்லாரும் 'சரிநெகர் சமானம்' என்று சொன்னதைக் கேட்டு அதையே பாடமாகப் பாடிக்கொண்டிருக்கிறவன் அவனும் உள்ளே போக விரும்பி, தனக்குத் தகவல் அனுப்பிய கோவிந்தனைப் பார்க்கவேண்டுமென்று, மாந்தோப்பு வீட்டின் வெளி வாசலில் காவலாக நின்ற வனைப் பார்த்து:]

செங்: கோவிந்த ஐயா எங்கே?

காவல்: அவர் உள்ளே இருப்பார்.

செங்: நானும் உள்ளே போகவேணும்.

காவல்: நீ உள்ளே போக முடியாது. அங்கே படிச்சவர்கள் மட்டுந்தான் போலாம்.

செங்: அடே! நம்ப கச்சியிலே படிச்சவன்— படிக்காதவன் ஏளா— பணக்காரன் இங்கிற வித்தியாசந்தான் கூடாதே— எல்லாரும் 'சரிநெகர்' அல்லவா?

காவல்: அடேயப்பா! ரொம்ப சரிநெகரைக் கண்டவன்தான் நீ! போ தூர. உள்ள இப்ப ஆரும் போக முடியாது.

செங்: செங்கோடன் வந்திருக்கானுண்ணு அந்த கோயிந்தையாக்கிட்டே சொல்லப்பா!

காவல்: அடே! செர்த்தாம் போடா... வளியெ உட்டு.

(என்று அந்தக் காவற்காரன் செங்கோடனைப் பிடித்துத்தள்ளி விடுகிறான். செங்கோடனுக்குக் கோபம் வந்துவிடுகிறது. செங்கோடன் இயல்பாகவே நல்ல பலசாலி. உடனே செங்கோடன் அந்தக் காவலாளியைப் பிடித்து வெளியே இழுத்து விட்டுவிட்டு மளமளவென்று உள்ளேபோய், கூடத்தின் கதவைத் தட்டுகிறான்.]

கருப்: (உள்ளேயிருந்து) யார்ரு அது?

செங்: (வெளியிலிருந்து) நான்தான் செங்கோடன்.

கருப்: அதாருடா செங்கோடன்! இப்ப இங்கே யாரும் வரக் கூடாது.

கோவிந்: அவன் நம்ம ஆசாமிங்க... அவனும் இங்கிருந்தால் ஒரு காரியத்துக்கு சொம்ப நல்லதுங்க. அவனை மட்டும் விடச் சொல்லுங்க.

(கருப்பண்ணன் தானே போய்க் கதவைத் திறந்து செங்கோடனை உள்ளே அனுமதிக்கிறான். செங்கோடன் உள்ளே வந்து கோவிந்தனுடன் உட்காருகிறான்.)

வீரா: சகோதரர்களே! நான் சொல்லப்போவதை வெகு கவனத்தோடு கேட்டு அவரவர்கள் பொறுப்பை அவரவர்கள் உணர்ந்து நடக்க இப்போது சபதம் செய்துகொள்ள வேண்டும்.

பலபேர்: அப்படியே சபதம் செய்கிறோம்.

வீரா: நம்முடைய கட்சி ஜயமடைந்து நம்முடைய நாட்டில் சமதர்மம் ஏற்பட்டு ஏழை உழைப்பாளிகளுக்கு நல்ல காலம் வரவேண்டுமானால் கிராமங்களில் நாம் தீவிரமான பிரசாரம் செய்து கட்சி பலத்தை அதிகமாக்க வேண்டும் அல்லவா?

பலபேர்: ஆமாம். ஆமாம்.

வீரா: அதற்கு நமக்கு ஏராளமான பணம் வேண்டும். முதலில் இப்போது நம் கட்சியைச் சேர்ந்த உங்களுக்கெல்லாம் சோற்றுக் கவலை வராமல் உங்கள் ஒவ்வொருத்தர் கையிலும் எப்போதும் பணம் இருக்கும்படிச் செய்ய வேண்டும் அல்லவா?

பலபேர்: ஆமாம், அதிலென்ன சந்தேகம்? அதுதான் சரியான யோசனை.

வீரா: அதற்காகச் சில பெரும் பணக்காரர்கள் வீட்டில் புகுந்து பலவந்தப்படுத்தியாவது அவர்களுடைய இரும்புப் பெட்டிகளில் சும்மா கிடக்கிற பணங்களை நாம் கைப்பற்றத்தான் வேண்டும். இதில் ஒன்றும் தவறில்லை.

ஒரு குரல்: மயிலே மயிலே என்றால் இறகு கொடுக்குமா? அழுத்திப் பிடிச்சிக்கிட்டு வெடுக்கு வெடுக்குண்ணு புடுங்கினுத்தான் கெடைக்கும்.

வீரா: ஆம். அதற்காக ஞாயிற்றுக்கிழமை ராத்திரி பனிரண்டு மணிக்கு மேல் பெரிய மில் முதலாளி நல்லப்பருடைய வீட்டில் புகுந்து அவரைக் கட்டாயப்படுத்தி அவருடைய இரும்புப் பெட்டிகளில் வேலையற்றுக் கிடக்கிற சொக்கத் தையும் நகைகளையும் கைப்பற்ற வேண்டும். என்ன சொல்லுகிறீர்கள்?

பலபேர் : ஆமாம். ரொம்ப நல்ல யோசனை.

வீரா : அப்படிக் கிடைக்கிற பணத்தில் உங்கள் எல்லாருக்கும் உங்களைச் சேர்ந்த தொண்டர்களுக்கும் நியாயமான பங்குண்டு. அது மட்டுமல்ல, ரொம்ப தைரியமாகவும் கெட்டிக்காரத்தனமாகவும் வேலை செய்கிறவர்களுக்குத் தனியான சன்மானமும் கிடைக்கும்.

வெகு பேர் : சரி... சரி... நியாயந்தான்.

வீரா : நாம் கட்டுப்பாடாக... நான் சொல்லப்போகிற திட்டப் படி மட்டும் வேலை செய்தால் நமக்கு ஆளுக்குப் பத்தாயிரம் இருபதாயிரம் கூட உடனே கிடைக்கும்.

பல பேர் : நீங்கள் சொல்லுகிறபடி கொஞ்சங்கூடப் பிசகில்லாமல் செய்வோம்.

வீரா : சரி... ஞாயிற்றுக்கிழமை ராத்திரி... நினைவிருக்கட்டும்... இன்றைக்கு என்ன கிழமை?

எல்லாரும் : வெள்ளிக்கிழமை.

வீரா : ஆம். நாளைவிட்டு... மறுதினம்... ஞாயிற்றுக்கிழமை... ராத்திரி மறந்துவிடாதீர்கள்.

ஒரு குரல் : தலைவர் முத்துவீரப்பன் வரவேண்டாமா ?

ரா : அவர் நாளைக்கு வந்தாலும் வந்துவிடுவார். அவர் இல்லா விட்டாலும் பாதகமில்லை. ஞாயிற்றுக்கிழமை நல்லப்பர் வீட்டில் புகுந்தே ஆகவேண்டும். ஞாயிற்றுக்கிழமை தவறி னால் பிறகு நாம் என்றென்றைக்கும் அதை நடத்த முடியாது.

இன்னொரு குரல் } நல்லப்பர் வீட்டைச் சுற்றிலும் சிப்பாய்களின் } பாரா பலமாக இருக்குமே?

வீரா : அதையெல்லாம் நான் சமாளித்துக்கொள்ளுகிறேன். நீங்கள் மட்டும் நான் சொல்லப்போகிறபடி செய்தால் போதும். கஷ்டமில்லாமல் நல்லப்பன் வீட்டிலிருக்கிற சொக்கத்தையும் ஏராளமான வைர நகைகளையும் கறந்து விடலாம்.

இ. கு : சரி... நீங்கள் சொல்லுகிறபடி செய்கிறோம், சொல் லுங்கள்.

வீரா : சரி... கவனமாகக் கேளுங்கள்... நான் யாரார் பேரைச் சொல்லி அவர்களுக்கு என்ன வேலை என்று சொல்லு கிறேனோ அதை அவரவர்கள் நினைப்பில் வைத்துக்கொண்டு அதன்படியே செய்ய வேண்டும்.

எல்லோரும் : சரி...சரி...சரி.

வீரா : [தன் கையிலிருந்த ஒரு காகிதத்தை விரித்துப்படிக்கிறான்:

1. வேலப்பனும் அவருடைய தொண்டர்களும் நல்லப்பர் வீட்டின் வீதி கேட்டுக்குப் பக்கத்தில் வீதியின் இருட்டில் அங்கங்கே பதுங்கி இருக்க வேண்டும். விசில் கொடுத்தால் மட்டும் உள்ளே வரவேண்டும்.

2. சோலைமலையும் அவருடைய தொண்டர்களும் அந்த வெளி கேட்டுக்கு உள்ளே போய் வீட்டுக் கட்டிடத்தின் முதல் வாசலுக்குப் பக்கத்தில் இருண்ட இடங்களில் பதுங்கி இருக்க வேண்டும். விசில் ஓசையால் குறிக்கிறபடி நடந்துகொள்ள வேண்டும்.

3. மாரிசாமியும் அவருடைய தொண்டர்களும், நல்லப்பர் வீட்டுக்கு வடபுறத்தில் வீதியிலுள்ள ஆலமரத்தடியில் பதுங்கியிருக்க வேண்டும். விசில் சொல்லுகிறபடி செய்ய வேண்டும்.

4. குப்பையாண்டியும் அவருடைய தொண்டர்களும் நல்லப்பர் வீட்டுக்குத் தென்புறத்திலுள்ள மாரியம்மன் கோவிலில் மறைந்திருக்க வேண்டும். விசில் சத்தம் கேட்டு அதன்படி நடக்க வேண்டும்... விசில் சத்தம் எப்படி எப்படி வந்தால் எப்படி எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பது எல்லோருக்கும் தெரியுமல்லவா?]

பல பேர் : ஓ தெரியும். அது எங்களுக்கு மனப்பாடம்.

வீரா : சந்தோஷம்... இனி நானும் கருப்பண்ணனும் ராமநாதனும் கோவிந்தனும் 25 தொண்டர்களுடன் நல்லப்பருடைய வீட்டுக் கட்டிடத்தில் நுழைந்து...

ஒரு குரல் : கதவு உள்ளே தாழிட்டிருக்குமே?

வீரா : தாழ்ப்பாளை உள்ளிருக்கிறவர்களே திறக்கும்படிச் செய்ய வேண்டிய தந்திரம் எனக்குத் தெரியும். நீங்கள் அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்.

பலபேர் : சரி... சரி..... அப்பறஞ் சொல்லுங்கள்.

வீரா : வீட்டுக்குள் நுழைந்து எல்லாரும் சந்தடி செய்யாமல் நல்லப்பனும் அவனுடைய மகள்..... அந்த..... அந்த..... வசந்தாவும் தூங்குகிற மேல்மாடிக்குப் போய், நாங்கள் இரண்டு பாகமாகப் பிரிந்து ஒரு பாகம் நல்லப்பன் படுக்கையறைக்கும் இன்னொரு பாகம் வசந்தா படுக்கையறைக்கும் போவோம்..... நல்லப்பருடைய அறைக்குக் கருப்பண்ணனும் அவருடன் பனிரண்டு பேரும்.....

கருப்: இல்லே..... நான் வசந்தா ரூம்புக்குப் போறேன்.

வீரா: நீ அங்கே போவதில் ஆட்சேபணையில்லே. ஆனல் நல்லப்பன் வெகு முரட்டு மனிதன். அவனைப் பிடிக்க உனக்குத்தான் வீர தீர பராக்ரமம் உண்டு. மற்ற யாருக்கும் இல்லே. அவனே நீ அழுத்திக்கொண்டால்தான் மற்றதெல் லாம் முடியும். முதலில் நமக்குப் பணந்தான் வெகு முக்கியம். நல்லப்பனே நடுங்கவைத்து அவன் தண்டவாளப் பெட்டிகளே அவனே திறந்துவிடும்படிச் செய்ய உன்னல்தான் முடியும்; வேறு யாராலும் முடியாது. வசந்தாளே யார் வேணுமானலும் கட்டிச் சுருட்டிக்கொண்டு போய்விடலாம். பணமும் நகையும் கிடைக்காமல், மற்றது என்ன கிடைத்து என்ன..... நீயே சொல்லு.

கருப்: சரி..... நல்லப்பனே நானே மட்க்குகிறேன்.

வீரா: தந்திரமாகக் கதவைத் தட்டித் திறக்கும்படி செய்து, ரிவால்வர் முனையில் பயப்படுத்தி, பெட்டிகளேத் திறக்கச் செய்து எல்லா சொக்கத்தையும் நகைகளேயும் பற்றிக் கொண்டு, நல்லப்பனே அந்த அறைக்குள்ளேயே கட்டிப் போட்டு, நாம் கொண்டுபோகிற பூட்டைப் போட்டு பூட்டி விட்டு..... வசந்தாளே மட்டும் தூக்கிக்கொண்டு வீட்டுக்குப் பின்புறமாக காட்டில் புகுந்து நம்முடைய மலேவீட்டுக்குப் போய்விட வேண்டும். நான் இதுவரைக்கும் சொன்னவர் களேத் தவிர மற்ற ஆறுமுகம், ஏழுமலே, சிங்காரம், குள்ளச் சாமி, முருகப்பன் முதலானவர்களும் மற்றவர்களும் அவர்க ளுடைய தொண்டர்களோடு நல்லப்பர் வீட்டுப் பின்புறத்தில் காட்டுக்குப் போகிற பாதையில் நமக்காகக் காத்திருக்க வேணும். மற்றதெல்லாம் பிகில் ஓசைப்படி.

ஒரு குரல்: நல்லப்பர் வீட்டிலே அந்த சுந்தரம் இருந்தாலும் இருப்பானே?

கருப்: சுந்தரமா? அவன் அங்கே குறுக்கிட்டால் உடனே அவனேத் தொலேச்சிப்புட்டுத்தான் மறுவேலே பார்ப்பேன். அவனுலேதான் இவ்வளவு தாமுசம். அவன் அந்த நல்லப்பன் மகளோடு கொஞ்சப் போனுனு— நமக்கு ஒதவப் போனுனு? அவன் எங்கிட்டே சிக்கினுப் போதும். பிச்சி..... பிச்சிபிடப் போறேன்.

(இதைக் கேட்டு செங்கோடன் திடுக்கிட்டு முகத்தைச் சுருக்கி பயக்குறி காட்டுகிறன்.)

வீரா: கருப்பண்ணு பொறு. (என்று கையமர்த்திவிட்டு) கடைசி யாக நான் சொல்லப்போவதை எல்லாரும் கவனத்தில் வைக்க வேணும்.

பலபேர் : சொல்லுங்க.....

வீரா : நாம் நல்லப்பர் வீட்டுக்குப் போகும் சமயத்தில் அங்கே காவல் சிப்பாய்கள் யாரும் இருக்கமாட்டார்கள். ஆகையினால் நாம் யாரோடும் சண்டைகிண்டை போடத் தேவையிருக்காது. ஓசையில்லாமல் உள்ளே புகுந்து காரியங்களை முடித்துக் கொண்டு போய்விடவேணும். அதனால் யாரும்..... தெரியுமா..... கவனியுங்கள்..... யாரும் துப்பாக்கி ரிவால்வர் வெடிகுண்டு முதலானதை அவசரப்பட்டு உபயோகித்துக் காரியத்தைக் கெடுத்துவிடக்கூடாது. வேலைகளை முடித்துக் கொண்டு மலைக்குப்போகும்போதுதான் யாராவது கண்டு கொண்டால் அப்போது வேணுமானால் அவர்களைப் பயமுறுத்த வெடிகுண்டோ துப்பாக்கி வேட்டோ போடலாம்..... தெரியுதா..... நமக்கு ஏதாவது அபாயம் வரும் என்று தெரிந்தால் நான் பிகில் கொடுக்கிறேன்; அப்போது கூச்சாமல் யாரை வேணுமானாலும் சுட்டுத்தள்ளிவிடுங்கள். தெரியுதா ?

வீரா : சரி..... அவரவர்கள் வேலையை அவரவர்களுக்கு எழுதித் தரப்படும். ஆயுதங்களையும் யாராருக்கு எது என்று குறிப்பிட்ட நபர்களிடம் கொடுக்கப்படும்..... இப்போது எல்லாரும் சந்தடி செய்யாமல் கலைந்துபோய் ஞாயிற்றுக்கிழமை..... நாளை மறுதினம்..... இரவு 9 மணிக்கே எல்லாரும் வந்து சேரவேண்டும்.

ஒரு குரல் : ஆமாம்..... நல்லப்பர் ஊரில் இல்லையாமே ?

வீரா : அது எனக்குத் தெரியும். அவர் நாளை இங்கே வருகிறார். அவர் வராவிட்டால் திட்டத்தை மாற்றிக்கொள்ள எனக்கு வழி தெரியும். அதைப்பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். ஞாயிற்றுக்கிழமை ராத்திரி 9-மணிக்கே எல்லாரும் அவரவர்களுடைய தொண்டர்களுடன் இங்கே வந்துவிட வேண்டும்... இந்தத் திட்டத்தின் ரகசியத்தை யாராவது வெளிப்படுத்தினால் அவர்களைச் சுட்டுக்கொன்றுவிடுவோம் என்பதை உங்கள் தொண்டர்களுக்கு அறிவிக்க வேண்டும்.

எல்லாரும் : சரி.....சரி.....சரி.....

(கூட்டம் கலைகிறது.)

காட்சி 24

இடம் : செங்கோடன் குடிசை
காலம் : அதி காலை

[மாந்தோப்புக் கூட்டம் இரவு பனிரண்டு மணிக்குமேல் கூடினது. கலையும் போது இரண்டு மணிக்குப் பக்கமாகி விட்டது. அந்த நேரத்துக்கு மேல் போய்க் கதவைத் தட்டினால் காளியம்மாள் கோபித்துக் கொள்ளுவாள் என்று அஞ்சி, செங்கோடன் தன் பண்ணையின் சாளையிலேயே படுத்திருந்து விட்டு, காலையில் பல் துலக்கி முகம் கழுவிக் கொண்டு பழைய சோறு தின்னத் தன் வீட்டுக்குப் போகிறான். அவன் வீட்டுக்குள் நுழைந்தவுடன், அப்போதுதான் பழைய சோற்றுப்பானையிலிருந்து குழந்தைகளுக்குச் சோறு போடப்போன காளியம்மாள் சோற்றுப் பானையைக் கீழே வைத்துவிட்டு வேகமாகச் செங்கோடனுக்கு எதிரில் வந்து]

காளி : வாங்க மச்சான், வாங்க. சொரியா சோத்து நேரத்துக்குத் தப்பாமே வந்துட்டிங்களே! வாங்க மச்சான், வாங்க - வாங்க வட்டியிலே போடுறேன். தின்னுப்புட்டுத் தின்னுப்புட்டு பொரச்சி செய்யப் போங்க.

செங் : ஏண்டி காலங்காத்தாலே மூஞ்சைக் காட்டே ?..... எனக்குச் சோறு வாண்டாம்; நீயே தின்னு.

காளி : சோறு வாண்டாட்டிப் போவுது. ராத்திரியெல்லாம் எங்கெ மச்சான் போயிருந்திங்கோ ?

செங் : சாளையிலே படுத்திருந்தேன்.

காளி : சாளையிலா படுத்திருந்தே? சத்தியமாச் சொல்லு.

செங் : சத்தியமா...சாமி சாக்கியா—சாளையிலெதாம் படுத்திருந்தேன்.

காளி : சாளைக்கு என்னேரத்துக்கு வந்து படுத்தே ?

செங் : (பதில் சொல்லாமல் சிரிக்கிறான்.)

காளி : என்னேயா ஏமாத்தப் பாக்கிறே ! நான்தான் சாமத்துக்கு மேலே—நெலா வெளிச்சத்துலே—சாலேக்கு வந்து பார்த்தேனே—ஒன்னேக் காணமே சாலேயிலே—எங்கெ போயிருந்தே?—உள்ளதைச் சொல்லு—பொரச்சிக்குத்தானே?

செங் : (சிரிக்கிறான்.)

காளி : (கோபத்துடன்) சிரிக்கிறியா...வெக்கங்கெட்ட சிரிப்பு ! ஆமாம் நம்ம பொளப்பு சிரிச்சித்தாம் போச்சு. இதென்ன—குடித்தனமா. குட்டிச்செவுரா ? நான் அண்ணேக்கே சொன்னேன்—இனிமே அந்தப் பொரட்டுக்காரக் கூட்டத்துக்குப் போகப்படாதுண்ணு——நீயும் இனிமேலெ போரதில்லேண்ணு சொன்னே—இந்தக் குடித்தனம்பண்ண என்னுலெ முடியாது——நீயே பண்ணிக்கோ. நான் எங்காச்சிம் போறேன்.

செங் : ஏண்டி இப்பிடி கோவிச்சிக்கிறே? இனிமேலே போரதில்லே——சரிதானே.

காளி : அண்ணேக்கும் இப்படித்தான் போரதில்லேண்ணு சொன்னே, இப்பப் போயிட்டுத்தான் வந்திருக்கிறே.

செங் : இல்லேயில்லே. இனிமே போகவே மாட்டேன். அதைத்தான் உங்கிட்டே சொல்ல வந்தேன்.

காளி : எதைத்தான் எங்கிட்டெச் சொல்ல வந்தே?

செங் : நீ சொன்னதெல்லாம் சரியாப் போச்சுண்ணு சொல்ல வந்தேன்.

காளி : என்ன நாஞ்சொன்னதெல்லாம் சரியாப்போச்சு?

செங் : அந்தப் பொரட்சிக்காரரெல்லாம் பளிகாரப் பசங்களுண்ணு நீ சொன்ன பாரு; அது சரியாப் போச்சு.

காளி : ஆ ! பாத்தியா மச்சான். நாஞ்சொன்னது சரியாப் போச்சா ? ஆமாம், அதெ எப்படி மச்சாங் கண்டுகிட்டே ?

செங் : சொல்றேன் கேஞ். நேத்து அந்தக் கோவிந்த ஐயர் ரொம்ப ரகசியமா எனக்கு ஒரு சேதி சொன்னாரு...

காளி : என்ன சேதி ?

செங் : பொரட்சியிலே சேந்தவுங்க அல்லாத்துக்கும் ஆளுக்கு ஆயிரம் ரெண்டாயிரம் இண்ணேக்கி பணம் தரப் போருங்க. கட்டாயமா வரவேணுமுண்ணு சொன்னாரு. நாம் போனேன் ...பணம் வருமாக்குமுண்ணுதாம் போனேன்.

காளி : அப்பறம்?

செங் : இங்கேயிருந்து மேக்கே நாலுகல்லு தூரத்திலே இருக்குதுபாரு-கரட்டுரு, அந்தக் கரட்டுருக்கும் பக்கத்திலே ஒரு மாந்தோப்புலே நூறு எரனூறு பேருக்கு மேலே கூடியிருந்தாங்க. தோப்புக்குள்ள போரத்துக்கு இந்தச் சீட்டை காட்டினுத்தான் உடுவாங்க (என்று ஒரு கட்சி. அடையாளச்சீட்டை காட்டுகிறான்) தோப்புக்குள்ளே போனேன். அந்தத் தோப்புலே ஒரு பெரிய ஊடு. அதுக்குள்ள போறத்துக்கு முடியிலே. வெளியே இருந்தவங்களோடு கொஞ்ச நேரம் பேசிக்கிட்டிருந்தேன்.

காளி : என்னப் பேச்சு?

செங் : கேளு——அவங்க பேச்செல்லாம் அடிக்கிறது, ஒதைக்கிறது, குத்துறது, வெட்டுறது, கொலே, கொள்ளெதான்.

காளி : பாத்தியா மச்சான், நாஞ் சொன்னது சரியாப் போச்சா?

செங் : சரியாத்தாம் போச்சே. அதெத்தானெ சொல்றேன்—இன்னும் கேளு——

காளி : ஊம்— சொல்லு, மச்சான் சொல்லு, நல்லாச் சொல்லு. முளுக்கச் சொல்லு.

செங் : அங்கே ஒருத்தன் கேட்டான் என்னே: 'ஒனக்குத் துப்பாக்கி போடத் தெரியுமா - வெடி குண்டு சுடத்தெரியு' மாண்ணு கேட்டான்.

காளி : (சிரித்து) துப்பாக்கி போட்றதா? - வெடிகுண்டு சுட்றதா? என்ன மச்சான் ஒனக்கு இதுகூடத் தெரியிலியே. துப்பாக்கி சுட்றது - வெடிகுண்டு போட்றது.

செங் : ஆமாமா...ஆமா...'துப்பாக்கி சுடத்தெரியுமா, வெடி குண்டு போடத்தெரியுமா'ண்ணுதான் கேட்டான். அதைக் கேட்டதும் எனக்கு நீ சொன்னதெல்லாம் நெனப்புக்கு வந்தது. நாங் கேட்டேன் 'இண்ணக்கி என்னுமோ அல்லாத்துக்கும் ஆயிரம் ரெண்டாயிரம் பணம் தாரதாகச் சொன்னுங்களேண்ணு' - கேட்டேன். அதுக்கு அவன் - 'நாளேக்கு வெடிகுண்டு போட்டு கொள்ளேயடிக்கப் போருங்க; அப்பறந்தான் பணம் கெடைக்குமுண்ணு' சொன்னான். அப்பத்தான், காளியம்மா, எனக்கு இவுங்க பொரட்சி என்னண்ணு புரிஞ்சுது.

காளி : பாத்தியா மச்சான், பாரு நான் சொன்னது சரியாப் போச்சா?

செங்: செரியாப் போச்சிண்ணுதானே சொல்றேன். இன்னுங் கேளு——என்னே வரச்சொன்ன கோவிந்தய்யா எங்கேண்ணு கேட்டேன். அவர் ஊட்டுக்குள்ளே துப்பாக்கி வெடிகுண்டு வாங்கப் போயிருக்கிறுண்ணு சொன்னுங்க. எனக்கு வந்த ஆத்திரத்திலே——நானும் அந்த ஊட்டுக்குள்ள போகணு முண்ணு முண்டியடிச்சுக்கிட்டுப் போனேன். காவக்காரன் உடமாட்டேன்னுன். நான் அவனே இளுத் தெரிஞ்சுப்புட்டு உள்ளே போய்ச் சேர்ந்தேன். கோவிந்த ஐயா அங்கே இருந்தாரு. அடி ஆத்தா! அங்கெ நடந்த பேச்சைத்தான் நான் என்னுண்ணு சொல்லுவேன்!

காளி: என்ன மச்சான்? என்ன பேச்சு? முளுக்கச் சொல்லு.

செங்: ஐயோ, அதெ நெனைச்சாலும் பாவம்டி. எனக்கு என்னுக் கோவம் வந்தது தெரியுமா. தூ! இந்தக் கொலகாரப் பசங்க மூஞ்சிலேகூட இனிமே முளிக்கக் கூடாதூண்ணு வந்திட்டேன். இனிமேலே அந்தப் பக்கம் திரும்பிக்கூடப் பாக்க மாட்டேன்.

காளி: அங்கே என்ன பேசினுங்க? வெவரமாச் சொல்லு, மச்சான்.

செங்: வெவரம் என்ன - வெவரம். நாளைக்கு ராத்திரி நம்ப நல்லப்பர் இருக்காரு பாரு——பெரிய மொதலாளி - அவர் ஊட்டுக்குள்ளப் பூந்து அவரைக் கட்டிப் போட்டு அவர் பெட்டியிலே இருக்கிற பணம் நகை நப்பு எல்லாத்தையும் கொள்ளே யடிக்கப் போருங்க.

காளி: ஐயோ! நெசமாவா?

செங்: நெசமில்லாமெ பொய்யா ஒங்கிட்டெ சொல்லுவேன்?

காளி: ஐயையோ! அந்த நல்லப்பரைக் கொண்ணுலும் கொண்ணு புடுவாங்களே.

செங்: யார் கண்டா! நடந்தாலும் நடக்கும். நல்லப்பரை மட்டுமா. அந்த சுந்தரம் இருக்கிறாரு பாரு, அவரைக்கூட——

காளி: சுந்தரமா! எந்த சுந்தரம்?

செங்: அவர்தான், நம்ம சினிவாச வக்கீலையா மகன்!

காளி: ஐயையோ! அவரையா! அவரை என்ன பண்ணு வாங்க?

செங்: அவரையும் அடிச்சி——கொண்ணுலும் கொண்ணுபுடு வாங்க போல இருக்குதுடி.

காளி : அடச்சண்டாளப் பாவிகளா! அவரை என்னத்துக்கு அடிக்கிறதாம். அவரு தருமராசா வாச்சே. அவர் என்ன பண்ணினாரு—இவங்களா.

செங் : அவர் என்னமோ இவங்க வேலைகளையெல்லாம் தாமு சம் பண்ணிப்புட்டாராம். அதுமட்டுமல்ல - காளியம்மா! இன் னொன்று கேட்டியா.

காளி : என்ன.

செ : அந்த நல்லப்பருடைய பொண்ணு இருக்குது பாரு...

காளி : ஆமாம், வசந்தம்மா.

செங் : அந்தப் பொண்ணுக்கும் சுந்தரத்துக்கும் ரொம்ப நேசமாம்.

காளி : ஆமா, ரெண்டு பேரும் ஒண்ணுப் படிச்சவங்க.

செங் : அந்தப் பெண்ணை சுந்தரம் கல்யாணம் பண்ணிக்கப் போராராம்.

காளி : பண்ணிக்கிட்டாத்தான்...சொல்றியா மச்சான்...சரியான சோடுதான். ரதியும் மம்முதனு மாட்டம்தானிருக்கும்..... ஆமா...அவுங்க கலியாணம் பண்ணிக்கிட்டா இந்தப் பொரச் சிக் காரருக்கு என்ன போச்சு?

செங் : அந்தப் பொண்ணை நாளைக்கு இவுங்க தூக்கிக்கிட்டுப் போகப் போராங்களாம். அதுக்கு சுந்தரத்தைத் தொலைச்சுப் புடுணுமாம். அந்தக் கருப்பண்ணன் இருக்கிறான் பாரு;அவன் சொன்னான் — சுந்தரத்தைத் தொலைச்சு புடணுமுண்ணு.

காளி : ஐயோ! தொலைச்சாலும் தொலைச்சுப்புடுவாங்களே... மச்சான், அந்தக் கருப்பண்ணன் கொலைகாரப் பாவியாச்சே! எண்ணைக்கு மொதலாளி ஊட்டிலே கொள்ளையடிக்கப் போராங்களாம்?

செங் : நாளைக்கு ராத்திரி சாமத்துக்கு மேலே. எல்லா ஏற்பாடும் பண்ணுப்பிட்டாங்க.

காளி : நல்லவேளை...நாளைக்கித்தானே? மச்சான் நீ சோத்தத்தக் குடிச்சுப்புட்டு கையோடு கையா ஓடிப்போயி அந்த சுந்தரத் துக்கிட்டேயாச்சியும் இல்லாட்டி வேறே யார் கிட்டவாச்சியும் காதோடு காதாச் சொல்லி உசார் பண்ணிப்பிட்டு வந்துடு. சுந்தரத்தோட அப்பாரு வக்கீலையா நமக்குச் செஞ்ச ஒப காரத்தை மறந்துடக் கூடாது நாம்ப.

செங் : மறப்பமா? நாம்ப என்ன அவ்வளவு நன்னிகெட்டவங் களா? நான் நெனைச்ச மாதிரியே நீயும் சொன்னது எனக்கு

ரொம்ப சந்தோசம். உங்கிட்ட சொல்லிப்புட்டு சோறு குடிச்சிபுட்டு கையோடு அங்கே போகணுமுண்ணுதான் வந்தேன். சரி சோறு போடு; உடனே போயி சொல்லிப் புட்டுத்தான் மறு சோலி பாக்கப் போறேன். காளியம்மா! யார் கிட்டியும் இதைச் சொல்லிப்பிடாதே. நாம்ப சொன்ன முண்ணு தெரிஞ்சா அந்தப் பசங்க நம்மெப் சுட்டுப்புடுவாங்க.

காளி: ஐயோ! அது தெரியாதா எனக்கு. நாஞ் சொல்லுவனு? பாத்தியா மச்சான், அந்தப் பொரச்சிக்காரரைப்பத்தி நான் சொன்னதெல்லாம் சரியாப் போச்சா?

செங்: செரியாத்தாம் போச்சே. இல்லேண்ணு சொல்றேன்.

(காளியம்மாள் வெகு அவசரமாக வட்டியில் சோறு போடு கிறாள். செங்கோடன் அரையும குறையுமாக சாப்பிட்டு விட்டு உடனே வெளியில் போகிறான்.)

காட்சி 25

இடம் : வீரபத்ரன் மாளிகை
காலம் : முற்பகல்

[வீட்டை விட்ட செங்கோடன் சுந்தரத்தைக் கண்டு ரகசியமாக எச்சரிக்கவேணும் என்று நல்லப்பர் வீட்டுக்குச் சென்றான். அங்குள்ள காவலாளிகளிடம் சுந்தரத்தை அவசரமாகப் பார்க்க வேணும் என்று கேட்டான். காவலாளி உள்ளே போய்ப் பார்த்துவிட்டு வெளியில் வந்து, சுந்தரம் இன்னும் அவனுடைய வீட்டிலிருந்து ஆபீசுக்கு வரவில்லை என்று சொன்னான்.

சுந்தரம் தினந்தினம் காலை ஒன்பது மணிக்கு மேல்தான் தன்னுடைய வீட்டிலிருந்து நல்லப்பர் மாளிகைக்கு வேலை பார்க்க வருவது வழக்கம். சிறு வயதிலிருந்து அந்த வீட்டில் பழகினவன் ஆனதால் வசந்தாவின் தாயாருடைய அன்பினாலும், வசந்தா சுந்தரத்திடம் வைத்திருந்த ஒப்பரிய பிரியத்தினாலும் அநேகமாக மத்யான சாப்பாட்டை நல்லப்பருடைய மடப்பள்ளியிலேயே சுந்தரம் சாப்பிட்டு விட்டு மாலைவரையிலும் வேலை பார்த்துவிட்டு இரவில் தன் வீட்டுக்குப் போய் அங்கேயே தங்கிவிடுவான். அவசர காரியம் இருந்தால் சில நாட்களில் இரவில் நல்லப்பர் வீட்டிலேயே உணவருந்திவிட்டு அவன் வேலை செய்யும் அறையிலேயே படுத்துக் கொள்வான். நல்லப்பரும் கூட சுந்தரம் அங்கே சாப்பிடுவதை ஆட்சேபிக்கக் கூடியவர் அல்ல; ஆனாலும் சுந்தரம் அந்த வீட்டில் சகல சௌகரியங்களையும் நல்லப்பருடைய தயவில்லாமலேயே அடைவதற்கு வசந்தாவும் அவளுடைய தாயாருமே போதும்.

செங்கோடன் சுந்தரத்தைப் பார்க்க வந்த போது உண்மையாகவே சுந்தரம் அவனுடைய வீட்டிலிருந்து நல்லப்பருடைய வீட்டுக்கு வரவில்லை.

உடனே செங்கோடன் சுந்தரத்தின் வீட்டுக்குப் போனான். சுந்தரம் அங்கேயும் இல்லை. சற்று நேரத்துக்கு முன்னால் தான் சுந்தரம் வேலை பார்க்க நல்லப்பர் வீட்டுக்குப் போய் விட்டதாக சுந்தரத்தின் தாயார் சொன்னார்.

மறுபடியும் செங்கோடன் நல்லப்பருடைய வீட்டுக்கு வந்து விசாரித்தான். சுந்தரம் இன்னும் அங்கே வரவில்லை என்று தெரிந்தது. சுந்தரத்தின் வரவை எதிர்பார்த்துக் கொண்டு செங்கோடன் நல்லப்பருடைய வீட்டு மூதல் வாசலுக்கு

எதிரில் ஒதுக்காக இருந்த ஒரு வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து வெகுநேரம் காத்திருந்தான். சுந்தரம் வர வில்லை. நல்லப்பருக்கும் அவருடைய மகளுக்கும் சுந்தரத் துக்கும் வரப்போகிற அபாயத்தை உடனே யாரிடமாவது சொல்லி உஷாராக்கி விடவேண்டும் என்று செங்கோட னுடைய உள்ளம் துடியாகத் துடித்துக் கொண்டிருந்தது. அவனுக்கு உட்கார்ந்திருக்க நிலை கொள்ளவில்லை. அடிக்கடி எழுந்து அங்கும் இங்கும் போய் சுந்தரம் வருகிறானா என்று வீதியில் நாலாபக்கமும் பார்த்துக் கொண்டிருந் தான். அப்படி ஒரு தடவை நடுவீதியில் நின்று சுந்தரத் துக்காகப் பார்த்துக் கொண்டிருந்த போது அந்த வழியாக மூக்காடு போட்டுக்கொண்டு வந்த ஒரு மனிதன் நின்று நின்று செங்கோடனைத் திரும்பித் திரும்பி உற்று உற்றுப் பார்த்துக்கொண்டே போனான். அந்த மனிதன் மாந்தோப்பு வீட்டில் மூன்றாம் இரவு கூடியிருந்த புரட்சித் தலைவர்களில் ஒருவன் என்பதைச் செங்கோடன் அறிந்து கொண்டான். தன்னைத் தான் உளவு பார்த்துக்கொண்டு போவதாக செங்கோடன் நினைத்தான். உடனே மாந்தோப்பு வீட்டில் வீராசாமி "இந்த ரகசியத்தை யாராவது வெளியாக்கி விட்டால் அவர்களைச் சுட்டுக் கொன்றுவிடுவோம்" என்று சொன்னது ஞாபகத்துக்கு வந்தது. அந்த நினைவு வந்த உடன் செங்கோடனுக்குக் கொஞ்சம் பயம் வந்துவிட்டது. திரும்பிப் போய் விடலாமா என்று எண்ணினான். சுந்தரத் துக்கும் வசந்தாவுக்கும் வரப்போகிற அபாயத்தை யாரிடத் திலாவது சொல்லி எச்சரிக்கை செய்யாமல் வீட்டுக்குப் போனால் காளியம்மாள் சும்மா விடமாட்டாளே என்ற பயம் அந்த முக்காடு மனிதனைப் பார்த்த பயத்தை விட அதிகமாக இருந்தது. அல்லாமலும் தன் கல்யாணத் துக்குப் பணம் கொடுத்துதவிய சீனிவாசருடைய மகன் சுந்தரத்துக்கு இந்த சமயத்தில் உதவாமற் போனால் அது துரோகமான காரியமாகும் என்று தானும் நினைத்தான். என்ன வந்தாலும் சரி யாரிடத்திலாவது சொல்லிவிடுவது என்ற முடிவுக்கு வந்தான். யாரிடம் சொல்லலாம் என்று வெகுநேரம் ஆலோசித்தான்.

கடைசியாகப் புரட்சிக் கூட்டத்தாருக்கு எமன் என்று சொல்லிக் கொண்டு நல்லப்பருடைய வீட்டையும் அவருக்குச் சொந்த மான மற்ற இடங்களையும் இரவு பகலாகக் காவல் காக்கிற சிப்பாய்களின் தலைவனை வீரபத்திரனிடத்திலேயே இதைச் சொல்லிவிடுவது என்று தீர்மானித்தான். அதற் காக வீரபத்திரனுடைய வீட்டுக்குச் செங்கோடன் போனான்.

செங்கோடன் வீரபத்திரனுடைய வீட்டுக்குப் போன சமயத்தில் வீரபத்திரன் வீராசாமியிடம் செய்துகொண்ட ஒப்பந்தப்படி அன்றைக்கு அடுத்த நாளாகிய ஞாயிற்றுக்கிழமை இரவு பனிரண்டு மணிக்கு முன்னாலேயே தன்னுடைய சிப்பாய் களை வீராசாமி சொல்லியிருக்கிற முனியப்பன் கோவி லுக்கு அருகிலுள்ள கட்டிடத்துக்குக் கொண்டுபோய்

சேர்த்துவிட வேண்டியதற்கான ஏற்பாடுகளைப் பற்றி தன் னுடைய அந்தரங்கக் காரியதரிசி போன்ற உதவி உத்யோ கஸ்தரிடம் பேசிக் கொண்டிருக்கிறான்.

வீர : என்ன ராமானுஜம்! நான் சொன்ன பிரகாரம் எல்லா ருக்கும் தகவல் கொடுத்து விட்டீரா?

ராமா : ஆம் கொடுத்துவிட்டேன்.

வீர : ஒன்பது மணிக்கே முதல் இருபது பேர் போய்விட வேண்டும். அவர்கள் எல்லாரும் ஒரே கும்பலாகப் பட்டாளம் போவதுபோல் போகக்கூடாது. மூன்று மூன்று அல்லது நான்கு நான்கு பேர்களாக அந்தக் காட்டுப் பாதையில் போக வேண்டும். கூட்டமாகப் போனால் யாராவது சந்தேகித்து விடக் கூடும்.

ராமா : ஆம் அப்படித்தான் ஏற்பாடு செய்திருக்கிறேன்.

வீர : சரி, ஆனால்எங்கே போகிறோம் எதற்காகப் போகிறோம் என்பது நம்ம சிப்பாய்களுக்குக் கூடத் தெரியக் கூடாது. அந்தக் கட்டிடத்துக்குள் எல்லாரும் வந்து சேர்ந்த பிற்பாடு விவரம் சொல்லிக் கொள்ளலாம். அதுவரையிலும் நம்ம முத லாளி வீட்டில் கூட யாருக்கும் தெரியக் கூடாது. தெரியுமா?

ராமா : தெரியும். அப்படியே கவனித்துக் கொள்கிறேன்.

வீர : மொத்தம் எத்தனை பேர்?

ராமா : இங்கே உள்ளவர்கள் ஐம்பது பேரில் இருபத்தைந்து பேரும் மற்ற இடங்களிலிருந்து இருபத்தைந்து பேரும் ஆக ஐம்பது பேருக்கு ஏற்பாடு செய்திருக்கிறேன்.

வீர : போதுமா?..... போதாது. நல்ல ஆட்களாக இன்னும் இருபத்தைந்து பேர்கள் இருப்பது நல்லது.

ராமா : நல்ல ஆட்களாக இன்னும் இருபத்தைந்து பேர் வேண் டும் என்றால் இங்கே இருக்கச் சொன்ன இருபத்தைந்து பேரையும் தான் கூட்டிக் கொள்ள வேண்டும். மற்ற இடங் களில் இருக்கிறவர்கள் அவ்வளவு சுகமில்லை.

வீர : சரி இங்குள்ள எல்லாரையும் கூட்டிக் கொண்டு போனால் போச்சு.

ராமா : இங்கே கொஞ்சம் பேராவது காவலுக்கு வேண்டாமா?

வீர : நாளை ஒரு நாள் இங்கே காவல் இல்லா விட்டாலும் பாதக மில்லை. அந்தப் புரட்சிக்காரர்கள் எல்லாரும் நாளைக்கு அங்கே தான் இருப்பார்கள். நம்மிடம் பழகிய கெட்டிக்காரர்க ளாக அதிகம் பேர் நம்முடன் இருந்தால்தான் அந்தப் புரட்சித் தலைவர்கள் அத்தனை பேரையும் அங்கேயே அமுக்கிவிடலாம்.

ராமா : வாசலைக் காக்கக்கூட இங்கே இரண்டு பேரோ நாலு பேரோ இருக்கவேண்டாமா?

வீர : வேண்டியதில்லை. ஒரு நாளைக்குதானே. பத்து மணியி லிருந்து இரண்டு மணிவரைக்கும் தான். அதற்குள் நம் வேலையை முடித்துக் கொண்டு. அந்தப் புரட்சிக்காரப் பயல் களையும் கைதிகளாக இங்கே கொண்டு வந்து விடலாம்.

ராமா : வெளிவாசலில் காவல் இல்லாவிட்டால் எஜமான் நல்லப் பர் கோவித்துக் கொள்வாரே.

வீர : கேட்டில் நிற்கிற சிப்பாய்களைக் கடைசியாக நாம் ரெண்டு பேரும் போகும் போது தான் கூட்டிக் கொண்டு போகப் போகிறோம். அந்தச் சமயத்தில் முதலாளி தூங்கி விடுவார்.

ராமா : ஆமாம். அதுவும் நல்ல யோசனை தான். அப்படியே செய்து விடுவோம். .....முதலாளி இன்னும் வரவில்லையே.

வீர : இன்று சாயங்காலம் அல்லது நாளைக் காலையில் கண்டிப்பாக வந்து விடுவதாக நேற்று இரவே தகவல் வந்து விட்டது. அதற்காகத்தான் அவருடைய காரியதரிசி சுந்தரம் அவர் வருவதற்குள் ஏதோ ஒரு காரியத்தை முடித்து வைக்க வேணும் என்று.....

(இந்தச்சமயத்தில் செங்கோடன் வீரபத்ரர் வீட்டுக்குள் நுழைந்து, இவர்கள் பேசிக் கொண்டிருக்கிற அறைக்குள் எட்டிப்பார்க் கிறான். யாரோ ஒரு குடியானவன் அவ்வளவு துணிச்ச லாக உள்ளே வந்து விட்டதில் கோபம் வந்து)

வீர : யாரடாவன் மடப்பயல்? அனுமதியில்லாமல் உன்னை இங்கே உள்ளே யார் வரச் சொன்னது.

செங் : சொம்ப அவசரமான சேதி ஒண்ணுங்க.

வீர : என்ன அவச்சரம் தலை போகிற அவசரம்?

செங் : ஆமாங்க பெரிய 'மில்லு' இருக்குது பாருங்க அந்தப் பெரிய மில்லு...அவுரு தலைங்கோ.

வீர : (வீரபத்திரனுக்கு அவனை யறியாமல் சிரிப்பு வந்து விடு கிறது. சிரித்துக் கொண்டே) பெரிய மில் தலையா போவுது?

செங் : இன்னும் போவிலிங்கோ...போருப்பிலே இருக்குதுங்க

வீர : (மறுபடியும் சிரித்து) பட்டிக்காட்டான் என்கிறது சரியாத் தான் இருக்கிறது. அட மடையா! பெரிய மில்லுக்குத் தலை ஏதடா?

செங் : பெரிய மில்லுக்குத் தலையில்லிங்கோ.....அது தெரியு மூங்கோ அந்தப் பெரிய மில்லுக்கு ஆபத்து. மொதலாளிக் குத் தலை போயிடும் போல் இருக்குதுங்க.

வீர : அந்தப் பெரிய மில்லுக்கு என்ன ஆபத்து. நிதானமா விவரமாகச் சொல்லு.

செங் : அது சொம்ப ரகசியமுங்கோ. ஒங்ககிட்ட மட்டும் கா தோடு காதா சொல்ல வேணுமுங்க.

வீர : அவ்வளவு ரகசியம் பேச வந்திருக்கிறாயா! சரி வா. ரகசிய மாகச் சொல்லு (என்று செங்கோடனை ஒரு தனியான இடத் துக்குக் கூட்டிக் கொண்டுபோய்) சரி இங்கே யாருமில்லை சொல்லு.

செங் : (சொம்ப ரகசியமாக) நாளைக்கு.....இண்ணைக்கு சனிக் கெளமைங்க.....சனிக்கெளமை யாச்சுங்களா இண்ணைக்கு

வீர : ஆமாஞ் சொல்லு

செங்: நாளைக்கு நாயித்துக் கெளமை ஆச்சுங்களா?

வீர: (ஆமோதித்து தலையை அசைக்கிறான்)

செங்: நாயித்துக் கெளமை ராத்திரி...நாளைக்கி ராத்திரிங்க. நாளை ராத்திரி பன்னண்டு மணிக்கு மேலே ரெண்டு மணிக்குள்ள...இந்தப் பொரட்சிக் கட்சிக் காரனுங்க இருக்கிறாங்க, பாருங்க, அவுங்க...நாளை ராத்திரி பன்னண்டு மணிக்கு மேலே ரெண்டு மணிக்குள்ள...பெரிய மில்காரர் இருக்கிறாங்க பாருங்க, அவுங்க ஊட்டுக்குள்ள பூந்து கொள்ளை யடிக்கப் போறாங்க தெரியுதுங்களா?...

வீர: அடடா! அதைத்தான் நீயும் சொல்லவந்தாயா?.....சரி சரி.....ரொம்ப சந்தோஷம்.....நாளை ராத்திரி பன்னிரண்டு மணிக்குமேல் இரண்டு மணிக்குள்ளாக இந்தப் புரட்சிக் கட்சிக்காரர்கள் பெரிய மில்காரர்கள் வீடுகளில் புகுந்து கொள்ளை, கொலை, நெருப்பு...இதெல்லாம் நடத்தத் திட்டம் போட்டிருக்கிறார்களே, அதைத்தானே நீ சொல்ல வந்திருக்கிறாய்?

செங்: ஆமாங்க, ஆமாங்க. ஆமாங்க சாமி. அதேதான்.

வீர: சரி உன் பேரென்ன?

செங்: செங்கோடனுங்க.

வீர: செங்கோடா.....பெரிய மில்காரர்கள் தலைகள் போய்விடும் என்று நீ பயப்படாதே. இந்தப் புரட்சிக்காரப் பசங்கள் போட்டிருக்கிற திட்டத்தின் விவரம் முழுக்க எனக்குத் தெரியும். அந்தப் புரட்சிக்காரப் பசங்க அத்தனை பேரையும் ஒரே இடத்தில் அமுக்கிவிடுகிறேன் பார். அவர்கள் பெரிய மில்காரர் வீடுகளுக்குப் பக்கத்தில் வருவதற்கு முன்னால் அவர்கள் எல்லாரையும் ஒட்டுக்க மடக்கிவிடுகிறேன். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் செய்துவிட்டேன். நாளை ராத்திரி நீயே நம்ம முதலாளி நல்லப்பர் வீட்டுக்கு வந்து பார். அந்தப் பயல்கள் அத்தனை பேரையும் கைகட்டு கால் கட்டு போட்டு உருட்டுகிறேன் பார்.

செங்: ஆமாஞ் சாமி, அப்படிச் செய்யுங்க. ஒங்களுக்கு ரொம்பப் புண்ணியமுண்டு.

வீர: நீ ஒன்றுக்கும் கவலைப்படாதே. நாளைக்கு நீயே வந்துபார்; சரி. எனக்கு இதுவிஷயமாகச் செய்யவேண்டிய வேலைகள் ரொம்ப இருக்கிறது. நீ போ, நான் பார்த்துக்கொள்ளுகிறேன். நான் இங்கே இருக்கிறவரையிலும், இந்தப் புரட்சிக் காரர் ஜம்பம் ஒன்றும் சாயாது. போ. பயப்படாதே.

செங்: நீங்க மவராசரா இருப்பிங்கோ. என் வவுத்திலேயும் என் பொஞ்சாதி வவுத்திலியும் பால் வாத்திங்க. நான் வரட்டுங்களா?

[என்று செங்கோடன் மிகவும் வணங்கி வீரபத்ரனுக்குப் பல முறை கும்பிடு போட்டுவிட்டு, வெகு சந்தோஷத்தோடு போய்விடுகிறான். வீரபத்ரனையும் அவனுடைய ஐவான்களையும் ஞாயிற்றுக்கிழமை இரவு வேறு இடத்துக்குக் கொண்டுபோய்விட வீராசாமி சொன்ன காரணத்தையே தான் செங்கோடனும சொன்னதாக நினைத்துக்கொண்டு வீரபத்ரன் பதில் சொன்னான். நல்லப்பருடைய வீட்டுக்குள் புகுந்து கொள்ளையடித்து வசந்தாவையும் கடத்திக் கொண்டு, சுந்தரத்துக்கும் தீங்கிழைக்க மாந்தோப்பில் பேசப்பட்ட தீர்மானத்தை முறியடிக்கத்தான் வீரபத்ரன் திட்டம் போட்டிருப்பதாக செங்கோடன் எண்ணிக்கொண்டு போகிறான்.]

காட்சி 25

இடம்: நல்லப்பர் மாளிகை

காலம்: பிற்பகல்

[வசந்தா செல்லம்மாள் மூலமாக சுந்தரத்துக்கு அனுப்பிய முதல் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தபடி வெகு நீண்டதான வேறொரு கடிதத்தை அதே செல்லம்மாள் மூலம் சுந்தரத்துக்கு மறு நாள் அனுப்பியிருந்தாள். அதைத் தன் வீட்டுக்கு பத்திர மாகக்கொண்டுபோய் வெகு சாவதானமாக சுந்தரம் படித் துப் பார்த்து அதிலிருந்த விஷயங்களையெல்லாம் வெகு ஆர்வத்தோடு ஏற்றுக்கொண்டு அதற்கு வெகு சுருக்கமான பதில் ஒன்றை எழுதி வைத்துக்கொண்டு அதை வாங்கிக் கொண்டுபோக செல்லம்மாளுடைய வரவை எதிர்பார்த்து, தன்னுடைய ஆபீஸ் அறையில் வழக்கம்போல் அலுவல் களைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

சனிக்கிழமை சாயுங்காலத்துக்குள் நல்லப்பர் வந்துவிடுவதாகச் சேதி வந்திருந்ததால், அதற்குள்ளாக சுந்தரத்தின் பதில் தனக்குக் கிடைத்துவிடவேணுமே என்று துடிதுடிப்பட்ட வசந்தா செல்லம்மாளைக் கூப்பிட்டு சுந்தரத்தின் பதிலை வாங்கிக் கொண்டு வரும்படி அனுப்புகிறாள்.]

வசந்: செல்லம்மா!

(செல்லம்மாள் வருகிறாள்.)

செல்: ஏம்மா?

வசந்: செல்லம், நீ சுந்தரத்திடம் கடிதம் கொடுத்தபோது அவர் என்ன சொன்னார்?

செல்: ஒன்றும் சொல்லவில்லையே. கடிதத்தை விரித்துப் பார்த்தார். கடிதம் நீண்டதாக இருப்பதைக் கண்டு படிக்கா மல் பக்கங்களைமட்டும் ஒவ்வொன்றாகத் தள்ளிவிட்டு உடனே மடித்து தன் சட்டைப் பைக்குள் வைத்துக்கொண்டார்.

வசந்: பதில் வாங்கிக்கொள்ள எப்போது வரவேணும் என்று ஏதாவது சொன்னாரா?

செல்: இல்லையம்மா. நானும் அதைக் கேட்க மறந்துவிட்டேன்

வசந்: சரி.....இன்று சாயங்காலத்துக்குள் அப்பா வந்துவிடுவார்கள். நீ போய் அப்பா வந்துவிடுவதற்குள் பதில் வேண்டும் என்று யாருக்கும் தெரியாதபடி கேட்டுவா. எழுதி வைத்திருந்தால் உடனே வாங்கிக்கொண்டு வந்துவிடு. இன்னும் எழுதாமலிருந்தால் சிக்கிரம் எழுதச் சொல்லிவிட்டு பதிலுக்காக எந்நேரத்துக்கு வருவது என்று அறிந்துகொண்டு வா. யாருக்கும் தெரியாமல் போ.

செல்: சரி.....

(போகிறாள்.)

வசந்தா பாடுகிறாள்:—

களக்கமறப் பொதுநடம் நான் கண்டுகொண்ட தருணம்
கடைச்சிறியேன் உளம்பூத்துக் காய்த்த ஒருகாய்தான்
விளக்கமுறப் பழுத்திடுமோ வெம்பி உதிர்ந்திடுமோ
வெம்பாது பழுக்கினும் என் கரத்தில் அகப்படுமோ
கொளக்கருதும் மலமாயைக் குரங்கு கவர்ந்திடுமோ
குரங்கு கவராமல் என்றன் குறிப்பில் அகப்படினும்
துளக்கமற உண்ணுவனே தொண்டை விக்கிக்கொள்ளுமோ
ஜோதிரு உளம் எதுவோ ஏதும் அறிந்திலேனே.

(யாருக்கும் தெரியாமல் சுந்தரம் இருக்கிற அறைக்குப் போக வேண்டுமென்று செல்லம்மாள் மாடியிலிருந்து ஓசையுண்டாகாமல் ஒவ்வொரு படியாக நிதானமாக இறங்கிக் கூடத்துக்கு வருகிறாள். கூடத்தைக் கடந்து தாழ்வாசலின் நிலையின்மேல் நின்றுகொண்டு சுற்றுமுற்றும் வெளியே பார்க்கிறாள். அந்தச் சமயத்தில் கூடத்தின் ஒரு மூலையில் மெத்தைப் படிகளுக்குப் பின்னால் ஏதோ காரியம் பார்த்துக் கொண்டிருந்த நஞ்சப்பன் மாடியிலிருந்து யாரோ அடிமேல் அடிவைத்து இறங்கி வந்ததைக் கவனித்துச் செல்லம்மாள் வந்ததையும் அவள் வாசலில் நின்றுகொண்டு அங்குமிங்கும் பார்ப்பதையும் கண்டு சமுசயித்து படிகளுக்குப் பின்னால் பதுங்கிப் பார்த்துக்கொண்டே இருக்கிறான். வாசலில் நின்று நாலா பக்கமும் பார்த்துவிட்டு, செல்லம்மாள் வெளியே போனவுடன் நஞ்சப்பன் மெதுவாக வந்து எட்டிப் பார்க்கிறான். செல்லம்மாள் சுந்தரத்தின் 'ஆபிஸ்' அறைக்குப் போவதைப் பார்த்துக் கொண்டான்.

கல்லப்பர் ஊருக்குப்போகுமுன் நஞ்சப்பனைத் தனியாகக் கூப்பிட்டு வசந்தாவுக்கும் சுந்தரத்துக்கும் சந்திப்பு ஏதாவது இருந்தால் கவனித்துவைக்கும்படி சொல்லிவிட்டுப் போயிருந்தார். அதனால் நஞ்சப்பன் செல்லம்மாளை வெகு ஜாக்கிரதையாகக் கவனித்து வந்ததுடன் சுந்தரத்தின் மேலும் கண்ணைப் பிருந்தான். முன் ஒரு தரம் செல்லம்மாள் சுந்தரத்தின் அறைக்குள் போய்வந்ததைப்பற்றி நஞ்சப்பன் செல்லம்மாளைக் கேட்டபோது அவள் அவனைக் கண்டித்து

வசந்தாவிடம் சொல்லிவிடுவதாகப் பயமுறுத்தினதில் நஞ்சப்பனுக்கு வெகு கோபம். அந்தக் கோபத்தை அப்போது அடக்கிக்கொண்டான். ஆனாலும் இப்போது நல்லப்பர் கொடுத்த சலுகை தனக்கிருந்ததனால், செல்லம் மாள் சுந்தரம் அறைக்குள் இப்போது போனது எதற்காக என்பதை அறிந்து நல்லப்பர் வந்த உடன் சொல்லி, செல்லம்மாளிடம் தனக்கிருந்த வஞ்சம் தீர்த்துக்கொள்ள விரும்பி, சுந்தரம் இருக்கிற அறைக்கு அருகிற் சென்று, ஜன்னல் வழியாக விஷயத்தை அறிந்து கொள்ளவேணும் என்று வாசலைத்தாண்டி வெளியே வந்தான். அந்தச் சமயத்தில் நல்லப்பருடைய மோட்டார் வண்டி வெகு வேகமாகச் சுற்றுச் சுவர்களுக்கு உள்ளே வருகிறது. அவரைக் கண்டு நஞ்சப்பன் திடுக்கிட்டு நின்றுவிடுகிறான்.

அறைக்கு வந்த செல்லம்மாளைக் கண்ட உடன் சுந்தரம் தான் தயாராக வைத்திருந்த பதில் கடிதத்தை எடுத்து அவளிடம் கொடுக்கிறான். செல்லம்மாள அதை வாங்கி படியில் பத்திரம் செய்துகொண்டு வெளியே போகக் கதவண்டை வரும்போது மோட்டார் வண்டி வருவதைக் கண்டு மீண்டும் அறைக்குள் மறைந்துவிடுகிறாள்.

நல்லப்பர் வண்டியிலிருந்து இறங்கி வீட்டுக்குள் நுழையும்போது வாசலுக்கருகில் நின்ற நஞ்சப்பன் குழைந்து வணங்கிக் கும்பிடுபோட்டு வரவேற்புக் காட்டுகிறான்.]

நல்: ஏண்டா நஞ்சப்பா! என்ன சமாச்சாரம்?

நஞ்: எல்லாம் நல்ல சமாச்சாரம்தான், எஜமானே.

நல்: ஒன்றும் விசேஷ மில்லையே.

நஞ்: ஒண்ணு மில்லிங்கோ. ஆனா...

நல்: ஆனால், என்ன?

நஞ்: ஒண்ணு மில்லிங்கோ ...(என்று கீட்டி நெளித்து கையைப் பிசைந்து கொண்டு மேலும் கீழும் பார்த்து) அப்புறம் ..... சொல்றேனுங்க.

நல்: (ஏதோ விசேஷம் இருக்கிற தென்றும் அதை ரகசியமாகச் சொல்ல நஞ்சப்பன விரும்புகிறான் என்றும ஊகித்து) என்னடா மழுப்புறே? இங்கேவா. (என்றுதான் முன்னால் வீட்டுக்குள் நுழைகிறார். நஞ்சப்பன் பின்னால் போகிறான். உள்ளே சென்று கூடத்தில் ஒரு மூலைக்குச் சென்று அங்கே நஞ்சப்பனை அழைத்து) என்ன சங்கதி? அப்பறம் சொல்கிறேன் என்றாயே அது என்ன?

நஞ்: ஒண்ணு மில்லிங்கோ... நம்ம அம்மாவும ...வசந்தம்மாவும் அந்தச் சுந்தரமும்...

நல் : என்ன செய்தார்கள்? மறுபடியும் நந்தவனத்துக்குப்போனார்களா, என்ன?

நஞ் : இல்லிங்க...இப்ப நந்தவனத்துக்குப்போறதில்லிங்க...ஆனா

நல்: ஆனால் இங்கேயே சந்திக்கிறார்களா ரகசியமாக?

நஞ் : நேரா சந்திக்கிறதில்லிங்க.

நல் : பின்னே?

நஞ் : செல்லம்மா இருக்கிறா பாருங்க...

நல் : ஆமாம், வேலைக்காரி செல்லம்மாதானே. அவளுக்கென்ன?

நஞ்: அவமூலமா...நம்ம வசந்தம்மாவுக்கும் அந்தச் சுந்தரத்துக்கும் கடுதாசு நடக்குதுங்க.

நல் : அப்படியா? உண்மைதானா? உனக்கு நிச்சயமாகத் தெரியுமா?

நஞ் : ஆமாங்க...இப்பக்கூட செல்லம்மா சுந்தரம் ரூம்புக்குதான் போயிருக்குதுங்க. கடுதாசு கொடுத்து பதில் வாங்கியாரப் போயிருக்கிறப்பிலே தோணுதுங்க.

நல் : இப்ப செல்லம்மா சுந்தரம் ரூமிலா இருக்கிறாள்?

நஞ் : ஆமாங்க...எஜமான் வந்துட்டதைக் கண்டு உள்ளவே இருக்குதுங்க.

நல் : அப்படியா!—நீ போய் அவளை குடுமியை பிடித்து நான் சொன்னதாக இழுத்துக் கொண்டு வா இங்கே.

நஞ் : ஐயையோ! எஜமானே, அதுவாணுங்க. இப்பக் கூப்பிட்டா பதில் கடுதாசு சிக்காதுங்க. நாம்ப பேசாமெ இருந்தா அது பதில் கடுதாசு வாங்கிக்கிட்டு வருமுங்க. அப்பப் புடிச்சி சோதனை போட்டா கடுதாசு கெடைக்குங்க.

நல் : ஆம், அது நல்ல யோசனைதான். நீ அப்படி வாசலுக்கு ஒதுக்காக மறைந்திரு. நானும் இங்கிருக்கிறேன். வரட்டும் அவள்!

(என்று நல்லப்பர் கூடத்திலிருந்த ஒரு நாற்காலியை ஓரமாகப் போடச் சொல்லி உட்காராந்து கொள்ளுகிறார். நஞ்சப்பன் வாசலுக்கருகில் நிற்கிறான்..... இதற்குள் மோட்டாரில் இருந்த நல்லப்பருடைய கைப்பெட்டி படுக்கை முதலான சாமான்களையெல்லாம் 'டிரைவர்' எடுத்து வீட்டுக்குள் கொண்டுபோய் வைத்துவிட்டு மோட்டாரை அதன் 'ஷெட்டு'க்குக் கொண்டு போகிறான். மோட்டாரை அதன் தகுமிடத்துக்கு ஓட்டிக்கொண்டு போய்விட்டதை ஜன்னல் வழியாகப் பார்த்துக்கொண்டிருந்த சுந்தரம் செல்லம்மா

(வீட்டிற்குள் சமிக்ஞையில் தெரியப்படுத்தி அவளைப் போகும்படி ஜாடை காட்டுகிறான். செல்லம்மாள் மெதுவாக வெளியே எட்டிப் பார்த்து ஒருவரும் இல்லாதிருப்பதைக் கண்டு வேகமாக நடந்து வீட்டிற்குள் நுழைகிறாள். ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு காத்திருந்த நல்லப்பர் செல்லம்மாள் உள்ளே நுழைந்த உடனே குறிலென்று அவள் மாடிப் படிக்குப் போகுமுன்)

நல்: செல்லம்மா நில்லு. (என்று சொல்லிக்கொண்டு குறுக்கிட்டு வழிமறித்து நிற்கிறார். செல்லம்மாள் திடுக்கிட்டுப் பயந்து நடுங்கிவிடுகிறாள்) எங்கேயிருந்து வருகிறாய்?

செல்: (பதில் பேசாமல் நல்லப்பர் முகத்தைப் பார்த்துப் பார்த்து திகைக்கிறாள்.)

நல்: எங்கிருந்து வருகிறாய்? உள்ளதைச் சொல்லு.

செல்: (நடுக்கத்துடன்) அங்கே போயிருந்தேன்.

நல்: எங்கே?

செல்: (பதில் பேசவில்லை. விழிக்கிறாள்.)

நல்: சுந்தரம் இருக்கிற அறைக்குப் போயிருந்தாயா?

செல்: (வாய்திறக்காமல். 'ஆம்' என்று சொல்லுவது போல் தலையை அசைக்கிறாள்.)

நல்: அங்கே எதற்காகப் போனாய்?

செல்: (பதிலில்லை.)

நல்: கடிதம் கொடுக்கப் போனாயா?

செல்: (ஆம் என்று ஒத்துக்கொள்வதுபோல் தலையைக் குனிந்து கொள்ளுகிறாள்.)

நல்: சுந்தரம் பதில் கடிதம் கொடுத்தானா?

செல்: (பதில் இல்லை)

நல்: அவன் கொடுத்த பதில் கடிதத்தைக் கொடு இப்படி.

(என்று கையை நீட்டுகிறார்.)

செல்: (கடிதத்தைக் கொடுக்க மறுப்பவள்போல் மெய்மறந்து கடிதம் இருக்கிற தன் மடியைத் தன் இடது கையால் அழுத்திக்கொண்டு வலது கையால் முன்னுடையை இழுத்து மூடுகிறாள்.)

நல்: மரியாதையாகக் கடிதத்தைக் கொடுத்துவிடு.

(என்று மறுபடியும் கையை நீட்டுகிறார்.)

செல்: (மறுப்பே காட்டி மௌனமாகத் தலைகுனிந்து நிற்கிறாள்.)

நல்: (கோபத்துடன்) டேய்! நஞ்சப்பா இவள் மடியைச் சோதனை போடு.

செல்: ஐயையோ!

(என்று இடது கையால் மடியை அழுத்திக்கொண்டு வலது கையால் முன்னுனையை இழுத்து முகத்தை மூடிக்கொண்டு ஆரம்பித்துத் தேம்புகிறாள். அவள் அப்படி முகத்தை மூடிக்கொண்டு தலைகுனிந்து அழும்போது)

நல்: இந்த நீலி அழுகாச்சியெல்லாம்... யாரை ஏமாத்த?

[என்று சொல்லிக்கொண்டே மடியை அழுத்திக்கொண்டிருந்த செல்லம்மாளின் இடது கையை வெடுக்கென்று பிடித்து இழுத்து விட்டுவிட்டு, நல்லப்பர் அவளுடைய மடியைப் பிடித்துக் கடிதத்தை எடுக்க முயன்றார். உடனே செல்லம்மாள் பெண்களுக்கு இயல்பாக உள்ள கூச்சத்தால் பின்னுக்கு இழுத்துக்கொண்டு இரண்டெட்டு பின்னால் போய்த் தானே தன் மடியிலிருந்த கடிதத்தை எடுத்து வெட்கத்தோடு கீழே எறிந்துவிடுகிறாள். எட்ட விழுந்த அக் கடிதத்தை நல்லப்பர் தாவிக் குனிந்து எடுக்கிறார். அவர் கடிதத்தை எடுக்கக் குனிவதற்குள் செல்லம்மாள் அழுது கொண்டே மாடிக்கு ஓடிவிடுகிறாள்.

கடிதத்தை எடுத்து நல்லப்பர் அதைத் திருப்பித் திருப்பிப் பார்க்கிறார். அது விலாசம் இல்லாமல் ஒட்டப்பட்டு இருந்த ஒரு 'கவர்'. அதைக் கையில் வைத்துக்கொண்டு]

நல்: நஞ்சப்பா! நீ போய் உன் வேலைகளைப் பார். பிறகு பேசிக் கொள்வோம்.

[நஞ்சப்பன் அதிக சந்தோஷத்துடன் அதைக் காட்டிக் கொள்ளாமல் போய்விடுகிறான். நல்லப்பர் வெகு வேகமாக மாடியிலுள்ள தன்னுடைய அந்தரங்க அறைக்குப் போகிறார். கடிதத்தைக் கீழே வைக்காமலேயே தன்னுடைய 'கோட்' சட்டையைக் கழற்றி மூலையில் மாட்டி விட்டு, தலைப்பாகையை எடுத்து வைத்துவிட்டு, முகத்தைத் துடைத்துக்கொண்டு, எழக்கமாக அங்கே வைக்கப் பட்டிருக்கும் குடிதண்ணீர் வடிசட்டியிலிருந்து கொஞ்சம் தண்ணீரை ஒரு கண்ணாடி டம்ளரில் பிடித்துக் குடித்து தாகந் தீர்த்துகொண்டு, மின்சார விசிறியை முடுக்கி விட்டுக்கொண்டு ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கடிதத்தை வெகு ஜாக்கிரதையாகப் பிரித்தெடுத்துப் பார்க்கிறார். மௌனமாகப் படிக்கத்துப் பார்க்கும்போதே அவருடைய புருவங்கள் நெற்றிக்கு ஏறுகின்றன. கண்கள் விரிகின்றன. கீழுதட்டைக் கடிக்கிறார். மீசை துடிக்கிறது. அடிக்கடி பெருமூச்சு வருகிறது. கையை உதறுகிறார். காலைத்

தூக்கித் தரையை உதைக்கிறார். இப்படிச் சேஷ்டை களுடன் கொஞ்ச நேரம் மௌனமாகப் பலமுறை கடிதத்தைப் படித்துவிட்டுப் பிறகு தனக்குத்தானே வாய் விட்டுப்படிக்கிறார்.

கடிதம்

"வசந்தா, உன்னுடைய நீண்ட கடிதம் என் மனதை உருக்கு கின்றது. உன்னுடைய காதலின் வலிமையை நன்றாக அறிந்து கொண்டேன். உன்னுடைய விருப்பத்தை என் மனப்பூர்வமாக ஆமோதிக்கின்றேன். நீ கடிதத்தில் குறித்திருக்கிற எல்லா காரியங்களையும் ஒன்றுவிடாமல் செய்து முடிப்பேன். இது சத்தியம்"

கடிதத்தைப் படித்துவிட்டு, நல்லப்பர் எகிரிக் குதித்து எழுந்திருக் தார். கடிதத்தை அவர் இன்னும் அணிந்துகொண்டிருந்த 'ஷர்ட்' சட்டையின் ஜேப்பில் பத்திரப்படுத்திக் கொண் டார். வெகு வேகமாக மாடியையிட்டுக் கீழே இறங்கினர். 'டேய் நஞ்சப்பா' என்று நஞ்சப்பனுக்காக நிற்காமல் மளமளவென்று சுந்தரம் இருக்கிற அறைக்கு வருகிறார். அறைக்குள் நுழையும்போதே]

நல் : டேய் சுந்தரம்!

(என்று சுந்தரம் உட்கார்ந்திருக்கும் நாற்காலிக்கு வெகு சமீபத்தில் வந்து நிற்கிறார். தலையைக் குனிந்துகொண்டு ஏதோ கணக்கெழுதிக்கொண்டிருந்த சுந்தரம் திடுக்கிட்டு பயபக்தியுடன் எழுந்து நிற்கிறான்.)

நல் : ஏண்டா அயோக்யப் பயலே! நான் ஊருக்குப் போகும் போது உனக்கு என்ன சொல்லிவிட்டுப் போனேன்?

சுந் : தாங்கள் சொன்னதை யெல்லாம் முடித்துவைத்திருக் கிறேன்.

நல் : முடிச்சு வச்சிருக்கிறயா? முடிச்சித்தான் வச்சிருக்கிறய்... வசந்தாளோடு ஒன்றும் ரகசியப் பேச்சுக்கள் வைத்துக் கொள்ளக்கூடாதென்று சொன்னேனே இல்லையா?

சுந் : ஆம்.

நல் : (ஜோப்பிலிருந்த சுந்தரம் எழுதிய கடிதத்தை எடுத்து விரித்து அதை அவன் முகத்துக்கு நேராக நீட்டிக் காட்டி) இது யார் எழுதினது?

சுந் : (பயந்த குரலில்) நான்—தான்.

நல் : நன்றி கெட்ட நாயே, சோற்றுக்கில்லாமல் திண்டாடிச் சாக வேண்டிய உனக்கு வேலை கொடுத்ததற்கு என் வீட்டில் இருந்துகொண்டு எனக்குத் தெரியாமல் என பெண்ணைக்

கெடுக்கத் துணிந்துவிட்டாய்... ராஸ்கல்... உங்கப்பனுக்கிருந்த புத்திதானே உனக்கும் இருக்கும்... போதும் உனக்கு உதவி செய்த புண்ணியம்... எடு உன் சட்டையை... நட வெளியில்... இனிமேல் இந்த வீட்டுப் பக்கம் உன்னைப் பார்த்தாலும்... அல்லது வச்சுதாவோடு மறுபடியும்... ஏதாவது... ரகசியம் வைத்துக்கொள்ள முயன்றாலும்... இதோ பார்த்தாயா (என்று தன் இடுப்பிலிருந்த ரிவால்வரை எடுத்துக் காட்டி)... நானே உன்னைச் சுட்டுத் தீர்த்து விடுவேன்... உம்... போ வெளியில். கெதி கெட்ட பயல்... என் மகளோடு காதல் பேச் வந்துவிட்டான்!

(சுந்தரம் ஒன்றும் பதில் பேச முடியாதவனாய் கதிகலங்கி விழித்துக்கொண்டு நிற்கிறான். நல்லப்பருக்குப் பின்னால் நஞ்சப்பன் வந்து நிற்கிறான். நல்லப்பர் உறக்கப் பேசின கோபப் பேச்சின் சத்தத்தைக் கேட்டு நல்லப்பருடைய மானேஜரும் குமாஸ்தாக்களும் மற்றும் முள்ள பல வேலையாட்களும் அறைக்கு வெளியில் வந்து சேர்ந்து அறைக்குள் எட்டிப் பார்க்கிறார்கள். நஞ்சப்பனைத் தவிர மற்றவர்கள் முகத்தில் அச்சமும் சுந்தரத்திடம் அனுதாபமும் கூடிய குறிகள் காணப்படுகின்றன. ரிவால்வரை நீட்டிய வண்ணமாக நல்லப்பர் சுந்தரத்தை உற்றுப் பார்த்துக்கொண்டு நிற்கிறார்.)

நல்லப்: ஏண்டா நிற்கிறாய்? மோசக்கார 'ப்ளாக்கார்ட்'. மரியாதையோடு நீயாகப் போறையா அல்லது... டேய் நஞ்சப்பா (நஞ்சப்பன் பக்கம் திரும்பி) இவனை இழுத்துக் கொண்டு போய் கேட்டுக்கு வெளியில் கல்தா கொடுத்துத் தள்ளிவிட்டு வா... உண்ட வீட்டுக்கு ரெண்டகம் நினைத்த இந்த கழுதைக்கு மரியாதை என்ன?

(இதைக் கேட்ட உடன் சுந்தரம் சரேலென்று போய்த் தன் சட்டையை எடுத்து உணிந்துகொண்டு, வெளியே போகுமுன் நல்லப்பருக்கு குப்பிடு போடுகிறான்.)

நல்: போடா சர்த்தான். மோசக்கார நாயே... இந்தக் கூளக் கும்பிடு போட்டு யாரை ஏமாத்தப் பார்க்கிறாய்? உன்னை எனக்குத் தெரியும் போடா.

(சுந்தரம் துக்கத்தோடு திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டு போய்விடுகிறான். நல்லப்பர் அதே வேகத்தில் மாடிக்குச் சென்று வசந்தாவின் அறைக்குப் போகிறார்.)

காட்சி 26

இடம் : நல்லப்பர் மாளிகை
காலம் : மாலை

(சுந்தரம் வசந்தாவுக்குக் கொடுத்த பதில் கடிதத்தை நல்லப்பர் வழிமறித்து பலாத்காரம் பேசினதால்—மடியிலிருந்து எடுத்துக் கீழே போட்டுவிட்டு—மாடிக்குப் போன செல்லம் மாள் முன்னூறு பாலை முகத்தை மூடிக்கொண்டு தேம்பித் தேம்பி அழுதுகொண்டு வசந்தாவின் அறைக்குள் வருகிறாள். செல்லம்மாளின் வரவுக்காகக் காத்துக் கொண்டிருந்த வசந்தா திடுக்கிட்டு எழுந்து வந்து)

வச : என்ன செல்லம்மா ! ஏன் அழுகிறாய் ?

செல் : (பலமாகத் தேம்பியழுகிறாள்)

வச : ஐயையோ ! இதென்ன இப்படி அழுகிறாய் ஏன்.....எங்கே யாவது விழுந்துவிட்டாயா ? எதிலாவது இடித்துக் கொண் டாயா ?

செல் : (தேம்பிக் கொண்டே) இல்...ல்...ல்...ல்...லே...ஏ...ஏ... ஏம்மா அ ...அ...அ

வச : பின்னேன் அழுகிறாய் ?

செல் : கடு... (தேம்பல்) தாசி... (தேம்பல்) ...கடுதாசியை... (தேம்பல்) மடி...யிலே... மடியிலேயிருந்து... (தேம்பல்) பிடுங் கி...க்... (தேம்பல்) பிடுங்கிக்கிட்டாங்கம்மா... (தேம்பல்)

வச : நான் கொடுத்த கடிதத்தையா ! யார் அப்படி பிடுங்கிக் கொண்டது ?

செல் : இல்லேம்மா... அவர் ... அவர் ..... (தேம்பல்)... அவர் குடுத்த பதிலே.....(தேம்பல்)...பிடுங்கிக்கிட்டாங்கம்மா.

வச : யார் சுந்தரம் கொடுத்த பதிலேயா !

செல் : ஆமாம்மா.....
(தேம்பல்)

வச : ஐயையோ ! யார் பிடுங்கிக் கொண்டார்கள் ?

செல் : எஜமான்.....

வச : யாரு.....எஜமானு !...யார் அப்பாவா ?

செல் : ஆமாம்மா...

(தேம்பல் நிற்கிறது)

வச : ஐயையோ ! அப்பா வந்துவிட்டாரா என்ன ?

செல் : வந்துட்டாரம்மா.

வச : அடிபாவி ! அப்பாவுக்குத் தெரியும்படியாகவா பதில் வாங்கிக்கொண்டு வந்தாய் ? அடி பழிகாரீ ! இப்படி என் தலையில் கல்லைப் போட்டு விட்டாயே !

செல் : இல்லிங்கம்மா யாருக்கும் தெரியாமல்தான் பதில் வாங்கினேன். வாங்கிக்கொண்டு வெளியில் வரும்போது எஜமானுடைய 'கார்' வந்திடிச்சி அதைப் பார்த்து நான் அங்கேயே...

[இந்த சமயத்தில், சுந்தரத்தை வீட்டைவிட்டுத் துரத்திவிட்டு அதே வேகத்துடன் மாடிக்கு வந்த நல்லப்பர் வெகு கோபாவேசத்துடன் வசந்தாவின் அறைக்குள் வருகிறார். அவரைக் கண்டதும் செல்லம்மாள் நடுங்குகிறாள். வசந்தா வெகு வாட்டத்துடனும் சிறிது அச்சத்துடனும் வழிவிட்டு தலைகுனிந்து நிற்கிறாள்.]

நல் : (செல்லம்மாவைப் பார்த்து) ஏய், கழுதே ! பிச்சைக்கார நாயே ! என் குடியைக் கெடுக்கவா இங்கே தின்று கொழுத்தாய் ?.....காதலுக்குத் தூது நடக்கிறுயா ? தெருத் தெருவா சோறில்லாமல் சீப்பட வேண்டிய உன்னைக் கொண்டு வந்து மாடி வீட்டில் வைத்து மூன்று வேளைக்கு முப்பது தடவையாக நெய்யும் சோறும் காப்பியும் டீயும் பலகாரமும் பக்ஷணமுமாகக் கொடுத்தால் நீ என்ன செய்வாய். நிலை கொள்ளுமா ?

வச : அப்பா, அவளை ஏன் கோபித்துக் கொள்ளுகிறீர்கள்? அவள் என்ன செய்வாள் ?

நல் : போதும் நிறுத்து உன் சிபார்சை... (என்று வசந்தாவிடம் சொல்லி விட்டு செல்லம்மாவைப் பார்த்து தன் கையிலிருந்த தடியை செல்லம்மாள் பக்கம் நீட்டி) போ வெளியே.....இனி மேல் இந்த வீட்டுப் பக்கம் வந்தால் உன் இடுப்பை முறித்து விடுவேன்.

[என்று செல்லம்மாள் பக்கமாகத் தாவுகிறார். செல்லம்மாள் பயந்து நடுங்கி வசந்தாவிற்குப் பின்னால் பதுங்குகிறாள்]

வச : (செல்லம்மாளுக்குப் பாதுகாப்பாக நின்று கொண்டு) அப்பா! அவள் நிரபராதி. அவளை ஒன்றும் செய்ய வேண்டாமப்பா.

நல் : அவளும் நிரபராதிதான்..... நீயும் நிரபராதிதான்!

(என்று சொல்லிக்கொண்டே வேகமாகப் பாய்ந்து செல்லம்மாள் கையைப் பிடித்து இழுத்து பிடரியில் கைகொடுத்து வாசற் படிபக்கமாக கல்தா கொடுத்துத் தள்ளுகிறார். செல்லம் மாள் கதவில் மோதி கீழே விழுகிறாள். வசந்தா உடனே பாய்ந்து செல்லம்மாளைத் தூக்கிவிடுகிறாள். செல்லம்மாள் அழுதுகொண்டே போய்விடுகிறாள். வசந்தா வருத்தத் தோடு தகப்பனாரைப் பார்த்துக்கொண்டே நிற்கிறாள். நல்லப்பர் கண்களில் கனல் பறக்கப் புகைந்து புகைந்து பெருமூச்சு விட்டுக்கொண்டு, உதடுகள் படபடக்க, பல்லை மென்றுகொண்டு, மகளை ஏற இறங்கப் பார்க்கிறார். கண்ணைக்கூட சிமிட்டாமல் வசந்தா கற்சிலைபோல் நிற்கிறாள். உயிருக்குயிராக வளர்த்த தன் ஒரே குழந்தை யாகிய வசந்தாவை என்ன வார்த்தையால் திட்டுவது என்று தெரியாமல் நல்லப்பர் திணறுகிறார். கோபம் கொதிக்கிறது. மகள் மேல் உள்ள பாசம் மலைக்கிறது. சற்று நேரம் அப்படிப் பேச்சு வராமல் பார்த்துவிட்டு)

நல் : நீ இவ்வளவு பெரிய துரோகம் செய்வாயென்று நான் கனவிலும் நினைக்கவில்லை.

வச : அப்பா நான் உங்களுக்கு என்ன துரோகம் செய்து விட்டேன்?

நல் : இதைவிட என்ன துரோகம் செய்ய வேண்டும்? நானும் உன் தாயாரும் நீ நல்ல இடத்தில் வாழ்க்கைப்படவேணும் என்று ஒரு பெரிய மனிதனுக்கு வாக்குறுதி கொடுத்து விட்டது உனக்குத் தெரியும். அப்படியிருந்தும் எங்களுக்கு அவமானம் வரும்படியாக எங்கள் விருப்பத்துக்கு முற்றிலும் விரோதமாக நீ கள்ளக் காதல் நடத்தத் துணிந்துவிட்டாயே. இன்னும் இதைவிட என்ன துரோகம் வேண்டும்?

வச : நீங்கள் வாக்குறுதி தந்தீர்கள் என்பது உண்மைதான். ஆனால் என்னுடைய விருப்பத்தையும் நீங்கள் கவனிக்க வேண்டாமா?

நல் : நாங்கள் செய்த ஏற்பாட்டில் உனக்கு விருப்பம் இல்லை யென்றாலும் நாங்கள் கணேசருக்குச் சொன்னது சரி— அல்லது தப்பு; வேணும் அல்லது வேண்டாம்; முடியும் அல்லது முடியாது என்று நிச்சயமான முடிவு சொல்லுகிற வரைக்கும் நீ எப்படி எங்களுக்குத் தெரியாமல் வேறொரு பையனுக்குக் காதல் கடிதம் எழுதலாம். இதற்குத்தான்

உன்னைப் பெற்று வளர்த்துச் சோட்டிப் பாராட்டிக்கொண்டிருந்தோமா ?

வச : நீங்கள் செய்திருக்கிற கலியாண ஒப்பந்தம் எனக்குப் பிடிக்கவில்லை யென்பதை உங்களுக்குப் பலவிதத்திலும் தெரியப்படுத்தியிருக்கிறேனே, அப்பா ?

நல் : அதைப்பற்றி நீ அதிருப்தி காட்டிமுணுமுணுத்தது உண்டு. ஆனால் அதைப்பற்றிநீ தீர்மானமான பதில் சொல்லவேயில்லை. நான கேட்கும்போதெல்லாம் ' இப்போது என்ன அவசரம் ' அப்புறம் பார்த்துக்கொள்வோம் ! ஆலோசனை செய்வோம் ', என்ற மாதிரிதான் சொல்லி வந்தாய். கொஞ்சங் கொஞ்சமாக உன்னைச் சம்மதிக்கச் செய்துவிடலாம் என்றுதான் நானும் நம்பியிருந்தேன்.

வச : ஆமாம்பா, அது என் குற்றம்தான். ஆனால் நானும் உடனே ' முடியாது ' என்று கண்டிப்பாக முறித்துப் பேசிவிட்டால் உங்களுக்கு வருத்தம் வரும் என்று எண்ணிக் கொஞ்சங் கொஞ்சமாக சொல்லி உங்கள் மனசை மாற்றிவிடலாம் என்பதற்காக அப்படிச் சொல்லி வந்தேன்.

நல் : அதற்காக அல்ல. அந்தப் பிச்சைக்காரப் பயலுக்கு இங்கே உத்யோகம் வாங்கித் தரவும், அவனும் நீயும் நந்தவனத்தில் தனியாகக் கொஞ்சிக் குலவிக் கொண்டிருந்ததற்காக நான் அவனை உடனே ' டிஸ்மிஸ் ' செய்துவிடாமலிருக்கவும்தான் நீ அப்படியெல்லாம் என்னை ஏமாற்றி வந்திருக்கிறாய் என்று நன்றாகத் தெரிகிறது. இது எங்களுக்குத் துரோகமல்லவா?

வச : (மௌனமாகத் தலைகுனிந்து நிற்கிறாள்)

நல் : உயிருக்குயிராக நாங்கள் எண்ணியிருந்த நீ இப்படியா எங்களை மோசம் செய்யத் துணிந்துவிட்டாய் ?

(என்று உரக்கக் கூவிப் பல்லைக் கடித்துப் பரக்க முழிக்கிறார்)

வச : நான் ஒரு நாளும் உங்களுக்கு மோசம் செய்யமாட்டேன். அப்பா— நான் என்ன செய்தாலும் எவரைக் கல்யாணம் செய்துகொள்வதானாலும் உங்கள் சம்மதம் இல்லாமல் செய்யமாட்டேன்.

நல் : என்னுடைய சம்மதத்தைக் கேட்டுத்தான் காதல் கடிதம் எழுதினாயோ ?

வச : (மௌனம்)

நல் : ம்ம்ம்ம்..... சரி, என்றைக்கு நீயும் அவனும் சேர்ந்து ஓடிப்போக ஏற்பாடு செய்திருக்கிறீர்கள் ?

வச : அப்படி ஒரு ஏற்பாடும் இல்லேயப்பா.

நல் : இதோ எழுதியிருக்கிறனே... "நீ கடிதத்தில் குறித்திருக்கிற எல்லாக் காரியங்களேயும் ஒன்றுவிடாமல் செய்து முடிப்பேன்" என்று. அந்த "எல்லாக் காரியங்களும்" என்னென்ன? சேர்ந்து ஓடிப்போறது அதில் ஒரு காரியம் இல்லேயா?

வச : இல்லே.

நல் : அப்படியானால் அந்த 'எல்லாக் காரியங்கள்' என்னென்ன காரியம்?

வச : (மௌனம்)

நல் : பின்னென்னமோ என் சம்மதம் இல்லாமல் எதையும் செய்யமாட்டேன் என்று இப்பத்தான் சொன்னயே?

வச : சொல்ல வேண்டிய சமயத்தில் சொல்லி உங்கள் சம்மதத்தைப் பெற முயல்வேன்.

நல் : ஏன் அதை இப்போதே சொல்லி என் சம்மதத்தைப்பெற முயலேன் பார்க்கலாம்.

வச : (மௌனம்)

நல் : நீ என்னதான் சொன்னலும்..... எப்படித்தான் கெஞ்சினலும் இந்தப் பயலே நீ கல்யாணம் செய்துகொள்ள நான் சம்மதம் கொடுப்பேனென்று எண்ணிக்கொண்டிருக்கிறாய்? அது முடியாத காரியம். அந்த ஆசையை இந்த நிமிஷம் முதல் விட்டுவிடு..... அந்தக் கணேசரைத்தான் நீ கட்டிக் கொள்ள வேணும். நான் சொன்னபடியா—நீ நினேக்கிறபடியா பார்க்கலாம்.

(என்று கத்தி வசந்தாவைப் பயமுறுத்திவிட்டு வெகு வேகமாக அறையைவிட்டுப் போகிறார்.

வசந்தா விசனத்தோடு அருகிலிருந்த சோபாவில் சாய்கிறாள்.]

காட்சி 27

இடம் : சுந்தரத்தின் வீடு

காலம் : மாலை

[தான் வசந்தாவுக்கு அனுப்பிய ரகசியக் கடிதம் நல்லப்பர் கையில் சிக்கிவிட்ட பொல்லாத காலத்தை நினைத்து மனதுக் குள்ளேயே புலம்பிக் கொண்டு சுந்தரம் தன்னுடைய வீட்டுக் குப் போகிறான். பெண்குழந்தைகள் பள்ளிக்கூடத்திலி ருந்து இன்னும் வராத நேரம். வீட்டில் சுந்தரத்தின் தாயார் மட்டும்தான் இருக்கிறாள். சமையல் அறையில் காப்பி போட் டுக் கொண்டிருந்த மீனாட்சியம்மாள் உள்ளே இருந்தபடியே சுந்தரம் வந்ததைக் கவனிக்கிறாள். அவ்வளவு சீக்கிரம் சுந்தரம் வீட்டுக்கு வருவது வழக்கமில்லை. ஆனால் நல்லப்ப ருடைய வேலையாக ஊருக்குள் யாரிடமாவது போவதற்கு, இரண்டொருதரம் இப்படி சுந்தரம் முன்னே வந்ததுண்டு. அதேமாதிரிதான் இன்றைக்கும் வந்திருக்கிறானென்று என்று மீனாட்சியம்மாள் சுந்தரத்துக்குக் கொடுக்க 'காப்பி' தயார் செய்வதில் முனைந்து உள்ளேயே இருந்தாள். வீட்டுக்குள் நுழைந்த சுந்தரம், வழக்கம் போல் தாயா ரைத் தேடிவராமல் தான் படுக்கும் அறைக்குள் சென்றான். ஒரு நாற்காலியின் மீது உட்கார்ந்து, எதிரில் இருந்த மேஜையின் மீது இரண்டு முழங்கைகளையும் ஊன்றி, உள்ளங்கைகளைக் காதுகளுக்கு நேராக வைத்து, கவிழ்ந்த தலையைத் தாங்கிக் கொண்டு தனக்கு நேர்ந்துவிட்ட கதியை நினைத்துக் கலங்கிக் கொண்டிருந்தான்.

தனக்கென்று காப்பியைத் தயார் செய்த மீனாட்சியம்மாள் முதலில் மகனுக்குக் கொடுக்கவேணுமென்று 'காப்பி' யுடன் மகனை நாடிவருகிறாள். சுந்தரம் அவனுடைய படுக் கையறையில் அப்படி உட்கார்ந்திருந்ததைப் பார்த்துத் திணுக்குற்று நிற்கிறாள். ஆச்சரியமும் அச்சமும் நெஞ்சைக் குழப்ப அப்படியே அசைவற்று சற்று நேரம் நின்றுவிட்டு, அடிமேல் அடிவைத்து மகனை அணுகி நின்றாள். அன்னை வந்ததை அறியாமல் சுந்தரம் ஆழ்ந்த துயரத்தில் மெய்மறந்திருக்கிறான். மீனாட்சியம்மாள் 'காப்பி' யை மேஜையின் மீது ஓசையோடு வைக்கிறாள். அப்போதும் சுந்தரம் அசையவில்லை.]

மீனு : ஏண்டா குழந்தை? ஏன் இப்படி உட்கார்ந்திருக்கிறாய்? உடம்புக்கு என்ன?

[கனவு கண்டு விழித்தவன் போல சுந்தரம் திடுக்கிட்டு நிமிர்ந்து தாயாரைப் பார்க்கிறான்.]

மீனு : ஏண்டா குழந்தை? உடம்புக்கு என்ன?

(என்று மகனுடைய முதுகின் மீது கையை வைக்கிறாள்.)

சுந்: ஒன்று மில்லேயம்மா.

மீனு : உடம்புக்கு ஒன்றுமில்லேயென்றால் இப்படி ஏன் உட்கார்ந் திருக்கிறாய்? இப்படி ஒருநாளும் நீ சோர்ந்துபோய் உட்கார்ந் ததில்லேயே! என்னப்பா? ஏன்?

சுந் : ஒன்றுமில்லேயம்மா..... மனசுக்குக் கொஞ்சம் சங்கடமாக இருந்தது.....

மீனு : என்ன சங்கடம் சொல்லு. எவ்வளவோ சங்கடங்கள் நமக்கு இருந்த போதெல்லாம் கூட நீ இப்படி விசனத்தோடு உட்கார்ந்திருந்ததில்லேயே. நான் இப்படிச் சங்கடப்படும் போதெல்லாம் நீயல்லவா எனக்குச் சமாதானம் சொல்லுவாய். அப்போதெல்லாம் இல்லாத சங்கடம் இப்போதென்ன நமக்கு வந்துவிட்டது?

சுந்: (மௌனம்)

மீனு : என்னிடத்தில் சொல்லக்கூடாத சங்கடமா அது?

சுந் : ஒன்றுமில்லேயம்மா..... நல்லப்பர் இன்றைக்கு என்னிடம் ரொம்பக் கோபமாகப் பேசிவிட்டார். அதுதான் சங்கடம்.

மீனு : அதனாலென்னப்பா? எஜமானன் என்றிருந்தால் வேலேக் காரர்களிடத்தில் கோபிக்கிறது சகஜம்தான். நாம் பொறுத்துக் கொள்ளத்தான் வேணும்..... எதற்காகக் கோபித்துக் கொண்டார்? அவர் கோபித்துக் கொள்ளும்படி நீ ஒன்றும் செய்யமாட்டாயே! என்ன எதற்காகக் கோபித்தார்?

சுந் : அம்மா! அதையெல்லாம் இப்போது சொல்லி உங்களுக்கு ஆயாசம் உண்டாக்குவது நல்லதல்ல. பின்னால் சொல்லுகிறேன்

மீனு : சரி, அப்படியே செய். காரணங்களோ அறியவேணும் என்பது என் ஆசையல்ல. நீ சங்கடப்படாமல் இருந்தால் அதுவே போதும்.

[தாயார் மேலேயின் மீது வைத்த காப்பியைத் தானே எடுத்துச் சுந்தரம் அதை ஆற்றிக் குடிக்கிறான். மகனுடைய மனச் சோர்வு மாறியிருப்பதில் மகிழ்ச்சியடைந்து மீனுட்சியம் மாள் அருகிலிருந்த ஒரு ஆசனத்தில் அமர்கிறாள். காப்பியைக் குடித்துவிட்டுச் சுந்தரம் சுமுகமாகத் தாயாரைப் பார்க்கிறான். நல்லப்பருடைய கோபத்துக்கு என்ன காரணம் என்பதைப் பற்றி மறுபடியும் தன் தாயார் எண்ணுதிருக்க வேணும் என்பதற்காகத் தன் மனதில் நிறைந்திருந்த துக்கத்

தையெல்லாம் அடக்கிக் கொண்டு சுந்தரம் வழக்கம் போல் சிரித்த முகத்துடன்]

சுந்: ஆமாம்மா. எஜமான் என்றிருக்கிறவர் சில சமயங்களில் கோபித்துக் கொள்வது சகஜம்தான். அதை நாம் பொறுத்துக் கொள்ள வேண்டியதுதான்.

மீனு: ஆமாஞ்சாமி அதுதான் நல்ல பிள்ளைக்கு அடையாளம். சில சமயங்களில் ஒரு காரணமும் இல்லாமல், வேறே யார் மேலாவது விடவேண்டிய கோபத்தை நம்மீது விடுவார்கள். அதைக்கண்டு நாம் ஆத்திரப்பட்டு விடக்கூடாது.

சுந்: நான் ஒன்றும் ஆத்திரப்படவில்லையம்மா. அவர் கடுங் கோபமாகப் பேசினதையெல்லாம் பொறுத்துக் கொண்டு பதிலே பேசாமல் வந்துவிட்டேன்.

மீனு: அதுதான் சரி.

சுந்: சரி, அம்மா நான் ஒரு சினேகிதருக்கு, வேறு விஷயமாகத் தந்தி ஒன்று அனுப்பவேணும். அதற்குப் பணம் எடுக்க வேணும். சாவி எங்கேம்மா?

[மீனுட்சி அம்மாள் விரைந்து சென்று பணம் இருக்கிறபெட்டியின்சாவியைக் கொண்டு வந்து சுந்தரத்திடம் கொடுக்கிறாள். சுந்தரம் பெட்டியைத் திறக்கிறான். மீனுட்சியம்மாள் வீட்டுக்காரியங்களைப் பார்க்கவும் தான் காப்பி குடிக்கவும் போய் விடுகிறாள். சுந்தரம் வேண்டிய பணத்தை எடுத்துக் கொண்டு பெட்டியைப் பூட்டிச் சாவியைக் கொடுக்கத் தாயாரிடம் வருகிறான். சாவியை வாங்கிக் கொண்டு]

மீனு: தந்தி என்றாலே கொஞ்சம் மனசு தவிக்கிறது. யாருக்கப்பா தந்தி? என்ன அவசர காரியம்?

சுந்: அப்படி ஒன்றும் அவசரமோ ஆதங்கமோ அடைய வேண்டிய தந்தியல்லம்மா. இந்தத் தந்தி ஒரு சினேகிதரைப் பற்றிய கொஞ்சம் ரகசியமான சமாசாரம். இப்போது நான் அதைப் பற்றி ஒருவருக்கும் சொல்லக் கூடாது.

மீனு: அப்படியானால் சொல்ல வேண்டாம். அது ஆதங்கப் பட வேண்டிய விஷயம் அல்ல என்பதே போதும். சரி போ, தந்தியைக் கொடுத்து விட்டு வா.

(சுந்தரம் போகிறான். அவன் வீதிக்குப் போகுமுன் மீனுட்சியம்மாளுக்குச் சட்டென்று நினைப்பு ஒன்று வந்து)

சுந்தரம்! இங்கேவா.....நான் மறந்தே போனேன். இப்பத்தான் நினைவுக்கு வந்தது.

(அதைக் கேட்டுச் சுந்தரம் திரும்பி வருகிறான்.)

சுந் : என்னம்மா, எதை மறந்து போனீர்கள் ?

மீனு : தந்தி ஆபீசுக்குத்தானே போகிறாய். அப்படியே உன் மாமாவுக்கும் ஒரு தந்தி கொடுத்து விடேன். கொஞ்ச நேரத்துக்கு முன்னால்தான ஒரு கடிதம் வந்தது. அது மாமா எழுதின கடிதம். நீ விசனமாக உட்கார்ந்திருந்ததைப் பார்த்து அதைச் சொல்ல மறந்தே போனேன். தன் கடிதத்துக்குப் பதில், தந்தியிலே சொல்ல வேணும் என்று மாமா எழுதியிருக்கிறார்.

சுந் : தந்தியிலே மாமாவுக்கு பதில் சொல்ல வேண்டிய அவ்வளவு அவசரமான காரியம் என்ன ?

மீனு : அதென்னவோ உடனே பதில் தெரிய வேணுமாம். தந்தியிலேயே பதில் சொல்லச் சொல்லி எழுதியிருக்கிறார்.

சுந் : எதைப்பற்றி ?

மீனு : எதைப்பற்றி உன் மாமா அடிக்கடி எழுதுகிறாரோ அதைப் பற்றித்தான். (சிரிக்கிறாள்)

சுந் : என்னத்தைப் பற்றி ?

மீனு : எல்லாம் உன் கல்யாணத்தைப் பற்றித்தான்.

சுந் : என் கல்யாணத்துக்கு இப்போதென்ன அவசரம் ?

மீனு : உனக்கு அவசரமில்லாவிட்டாலும் அவருக்கு அவசரம் இருக்கிறது. ராஜேஸ்வரிக்கும் வயதாகிவிட்டது. இது வரைக்கும் நீ அவளையேதான் கட்டிக்கொள்வாயென்று நம்பியிருந்தாராம். இப்போது நீ வேறு யாரையோ விவாகம் செய்து கொள்ள முயற்சி செய்துகொண்டிருப்பதாக அவருக்கு யாரோ சொன்னார்களாம். அதனால் ராஜேஸ்வரியைக் கட்டிக் கொள்ள உனக்கு இஷ்டமா இல்லையா என்பதையும் இஷ்டமானால் உடனே விவாகத்தை நிச்சயம் செய்து முகூர்த்தம் வைத்துவிடவேணும் என்பதையும் தந்தியில் தெரியப்படுத்தி விடும்படி எழுதியிருக்கிறார்..... பாரேன் இதோ கடிதத்தைக் கொண்டு வருகிறேன் ; நீயே படித்துப்பார். [என்று வேகமாகச் சென்று கடிதத்தை எடுத்து வந்து சுந்தரத்திடம் நீட்டுகின்றாள். சுந்தரம் கடிதத்தை வாங்கிக்கொண்டு, அதை வாசிக்காமல்]

சுந் : அம்மா மாமாவின் அவசரத்தை நான் அறிவேன். அதைப் பற்றி ராஜேஸ்வரியே எனக்கு எழுதியிருந்தாள். நான் அவளுக்குச் சரியான பதில் நல்லப்பர் ஆபீசிலிருந்தே எழுதி விட்டேன். இந்நேரம் அந்தக் கடிதம் அங்கே போயிருக்கும்.

இப்போது கல்யாணத்தைப் பற்றிய சிந்தனையே எனக்குத் துளி கூட இல்லை. அதைப்பற்றி நம்முடைய சௌகரியம் போல் செய்து கொள்ளலாம். நீங்கள் கவலைப்படாமல் இருங்கள். என் கல்யாணத்துக்கு இப்போது அவசரமில்லை.

மீனு : இப்படிச் சொல்வது நன்றாயிருக்கிறதா ?

சுந் : அம்மா. என் மனம் மிகவும் சங்கடமான நிலைமையில் இருக்கிற இந்த சமயத்தில்.....

மீனு : சரி, நீ மறுபடியும் சங்கடப்பட ஆரம்பிக்காதே. நீ போய் உன் சிநேகிதருடைய தந்தியை அனுப்பிவிட்டு வா. மாமாவுக்குச் சாவதானமாகப் பிறகு பதில் அனுப்பலாம்.

(பதில் பேசாமல் சுந்தரம் போகிறான். வீதிவாசலைக் கடந்ததும் நல்லப்பர் வீட்டுக்குப் பின்னாலுள்ள நந்தவனத்தைக் கவனித்துக் கொள்ளுகிற தோட்டக்காரன் முத்தான் என்பவன் எதிரில் வருகிறான்)

சுந் : முத்தான் ! இங்கெங்கே வந்தாய் ?

முத் : அம்மா ஒங்ககிட்ட போகச் சொல்லி அனுப்பினாங்க.

சுந் : யார் வச்சாளா ?

முத் : ஆமாங்க.

சுந் : என்ன சொல்லி அனுப்பினார்கள் ?

முத் : (தன் மடியில் பத்தோபஸ்து செய்திருந்த ஒரு சுமாரான கடிதத்தை எடுத்து நீட்டி) இதை ஒங்க கிட்டெ யாருக்கும் தெரியாமல் குடுத்துட்டு வரச் சொன்னாங்க.

சுந் : (கடிதத்தை வாங்கிக் கொண்டு) அவ்வளவுதானா வேறென்றும் சொல்லவில்லையா ?

முத் : இல்லிங்கோ.

சுந் : சரி போ. (முத்தான் போகிறான்)

[முத்தானை அனுப்பி விட்டு மறுபடியும் வீட்டுக்குள் நுழைந்து தன் அறைக்குட் சென்று கடிதத்தைப் பிரித்துப் பார்க்கிறான். அதில் ஒரு பெரிய கத்தை நூபாய் நோட்டுகளும் ஒரு கடிதமும் இருக்கிறது.]

கடிதம்

''வணக்கம் இப்படி நேர்ந்து விட்டது என் தூர் அதிருஷ்டம். தங்களை என் தந்தை வசைபேசித் துரத்தி விட்டதை அறிந்து வருந்துகிறேன் செல்லம்மாளையும் வீட்டை விட்டுத் தூரத்தி விட்டார். என்னை அந்தக் கணேசருக்கே பலவந்தமாகக் கல்யாணம் செய்யப் போவதாக சபதம் கூறுகிறார். என் கதி எப்படியாகுமோ தெரியவில்லை. மறுபடியும் தாங்கள் இங்கே வேலைக்கு வருவது முடியாத காரியம். ஆனாலும் நம்முடைய அன்பு துளி கூட மாறாது. தாங்கள் சிறிதும் தயங்காமல் நான் குறித்திருந்த காரியங்களைச் செய்து வைக்க வேணடும் மற்றது பின்னால். செலவுகளுக்குப் போதுமான பணம் உங்கள் கையில் இருக்க வேணும் என்பதற்காக இத்துடன் ஐயாயிரம் ரூபாய் அனுப்பியிருக்கிறேன். இன்னும் அப்போதைக்கப்போது அனுப்புகிறேன். முத்தான் அடிக்கடி தங்களைச் சந்திக்கச் செய்கிறேன். வேண்டிய காரியங்களுக்கு அவனிடம் வாய் மொழியாகச் சொல்லியனுப்புங்கள். கடிதம் வேண்டாம்.

வசந்தா.''

காட்சி 28

இடம்: செங்கோடன் குடிசை

காலம்: காலை

[உண்மையாகவே ஏழைகளுக்கெல்லாம் நிலமும் வீடும் மற்ற வசதிகளும் புரட்சிக்காரர்களால் வரப்போகிறதாக்கும் என்று நம்பி, செங்கோடன் தன்னுடைய விவசாயத் தொழிலைச் சரியாகக் கவனிக்காமல் புரட்சிக்காரர்களை நாடி அலைந்து கொண்டிருந்தான். வெள்ளிக்கிழமை நடந்த மாந்தோப்புக் கூட்டத்தில் பேசப்பட்ட விஷயங்களைக் காதாரக் கேட்ட பின் புரட்சிக் கூட்டத்தின் மேல் வெறுப்பு வந்து விட்டது. அதனால் சனிக்கிழமை முதல் தன்னுடைய பண்ணை வேலைகளைக் கவனிக்கலானான்.

ஞாயிற்றுக் கிழமை அதிகாலையில் வயல்களுக்குத் தண்ணீர் பாய்ச்சிவிட்டு, மாடுகளுக்குத் தீனி வைத்து விட்டு பசியோடு பழைய சோறு தின்ன குடிசைக்குள் வருகிறான். வரும் போதே உழைப்பின் பெருமையைப் பற்றி உற்சாகம் மேலிட்டு பாடிக் கொண்டே வருகிறான்.]

கிராமிய மெட்டு

செங்:

பாடு பட்டுப் பசியெடுத்துப் பழைய சோறு தின்னுலும்
பாலுந் தேனும் பழமும் போலப் பலமுண்டாக்கும் பாரடி!
ஓடியாடி வேலை செய்தால் உப்பில்லாத உணவிலும்
உண்மையான ருசி இருக்கும் பெண்மணியே கேளடி!

(பழைய சோறு தின்னக் கணவனை எதிர் பார்த்துக் கொண்டிருந்த காளியம்மாள் செங்கோடன் பாடுவதைக் கேட்டு அவளுக்கும் உற்சாகம் வந்து கணவனுக்கு எதிரில் வந்து பதில பாட்டுப் பாடுகிறாள்.)

காளி: (அதே மெட்டில்)

பாடிப் பாடிச் சொன்னேன் அப்போ பழிச்சிக் காட்டி ஏசினுய்
போடிப் போடி என்று விட்டுப் 'பொரட்சி' செய்யப் பேசினுய்
கூடிக்கூடி மறைஞ்சுபேசும் கொடுமைக்காரக் கும்பலை
தேடித்தேடி அலைஞ்சதெல்லாம் தெரிஞ்சிப் போச்சா மச்சானே!

செங் :

தெரிஞ்சிப் போச்சி மறைஞ்ச பேச்சு திருட்டுவேலை தானடி
தில்லுமுல்லு கொள்ளையென்று தெரிஞ்சிக்கிட்டேன் நானடி !
பரிஞ்சி நின்று உழவு செய்து பயிரைக்காக்கும் வேலைதான்
பழிவராத சோறு போடும் ; பார்த்துவிட்டேன் கேளடி!

காளி :

கொடுமை செஞ்சி வந்தகாசு கோடி கோடி ஆயினும்
குடிகெடுக்கும் அந்தக்காசை குப்பையோடு சேர்த்திடு
கடுமையான பாடுபட்டு கஞ்சி உண்ட போதிலும்
கவலையில்லை பாவிஎன்ற கதியுமில்லை கணவனே !

செங் : ஆமாம்—காளியம்மா, நீ சொல்றது தான் சரியான பேச்சு. நாலஞ்சு மாசமா நம்ப பொளப்பெ கவனிக்காமெ அலைஞ்சது மனசுக்கு எப்படியோ இருந்திச்சி. நேத்தும் இண்ணைக்கும் வேலை செஞ்சது நிம்மதியா... மனசுக்கு... சந்தோச்மா இருக்குது.

காளி : பின்னே...கஞ்சியோ...கூளோ—நம்ப ஒளச்ச சோறு தான் நம்ப ஒடல்லே ஒட்டும். அதை உட்டுட்டு எவனே நெலம் குடுப்பான், வீடு குடுப்பானுண்ணு அந்தக் கொலைகாரக் கூட்டத்தை நம்பிக் கிட்டு அலைஞ்சியே! (சிரிக்கிறாள்)

செங் : அதைத்தான் உட்டுத் தொலைச்சிப்பிட்டேனே. மறுக்கா மறுக்கா ஏண்டி கேலி பண்றே...சரி சொம்பப் பசிக்குது, சோறுபோடு.

(காளியம்மாள் முன்னாலேயே கழுவி வைத்திருந்த வட்டியை எடுத்து வைத்துப் பழைய சோற்றைப் போடுகிறாள். செங் கோடன் சாப்பிடுகிறான்.)

காளி : ஆமாம் இண்ணைக்கு நாயித்துக் கெளமையாச்சே ! இண்ணைக்கு ராத்திரிதானே அந்தப் பொரச்சிக்காரனுங்க வசந்தம்மா ஊட்லே பூந்து சுந்தரம் ஐயாவையும் அடிக்கணும் புடிக்கணும்முண்ணு ஏற்பாடு செஞ்சிருக்கிறாங்க ?

செங் : ஆமாம் இண்ணைக்கித்தான்...ஆனை...அந்தப் பொரட்சிக் காரப் பசங்க செபம் ஒண்ணும் சாயாது. அவுங்க பெரியமில்லு மொதலாளி ஊட்டுக்கிட்டே வாரத்துக்கு முன்னியே அத்தினிப் பேத்தையும் புடிச்சி வெலங்கு போட்டுப்புடப் போறாங்க. அதுக்கெல்லாம் வேண்டிய சாக்ரதை செஞ்சிப் பிட்டேன்.

காளி : செஞ்சிப்பிட்டியல்லோ ..... நமக்கு ரொம்பப் புண்ணியம். சுந்தரமையாவுக்கும் வசந்தம்மாவுக்கும் ஒரு கொறைச்சலும்

வரப்படாது .....ஆமாம்... நீ சொன்னத்துக்குச் சுந்தரம் என்ன சொன்னாரு?

செங்: சுந்தரம் ஐயாகிட்டையா? இல்லியே. அவரை எங்கே நான் பார்த்தேன்?

காளி: ஐயோ! அவர்கிட்டே சொல்லலியா! பின்னே யார் கிட்டே சொன்னே?

செங்: அதெல்லாம் சரியான இடத்திலே சொல்லியிருக்கி றேண்டி. நீ கவலைப் படாதே.

காளி: ஏன்? சுந்தரம் ஐயாக்கிட்டே சொல்றத்துக்கென்ன?

செங்: அவரைத்தான் நான் பார்க்கப் போனேன். அவரு கெடைக்கிலே. அவருக்காகக் காத்துக் காத்துப் பாத்தேன். அந்தச் சமயத்திலே அந்தக் கொல்லைகாரப் பசங்களிலே ஒருத்தன் என்னே உத்து உத்துப் பாத்துக்கிட்டே போனான். இனிமேலே அங்கே காத்திருக்கப்படாதுண்ணு நான் நேரா அந்தப் பெரிய சிப்பாய் கிட்டேயே போய்ச் சொல்லிப் பிட்டேன்.

காளி: அது சுந்தரம் ஐயாவுக்கும் வசந்தம்மாவுக்கும் தெரியுமா?

செங்: அவுங்களுக்குத் தெரியாட்டி என்னடி? பெரிய சிப்பாய் தான் ஊட்டுக்கிட்டே வாசத்துக்கு முன்னாலேயே அந்த பொ ரட்சிக் காரனுங்களைப் புடிச்சி வெலங்கு போட்டுடப் போருரே!

காளி: எதுக்கும் சுந்தரத்துக்கிட்டே ஒரு பேச்சு சொல்லாமெ வந்திட்டியே மச்சான். அவரும் வசந்தம்மாளும் இண்ணைக்கு ராத்திரி முழுக்க அந்த ஊட்லியே இருக்கப்படாது.

செங்: காளியம்மா! நீ ஒண்ணும் பயப்படாதே. அந்த வீரபத்ர ஐயா பெரிய சிப்பாயே எங்கிட்டே சொல்லியிருக்கிறாரு-இண் ணைக்கு ராத்திரி அவரு பொரட்சிக்காரன்களுக்கு வெலங்கு போட்டு நிறுத்தப் போறதை வந்து பாக்கச் சொல்லி எங் கிட்டவே சொன்னாரு. நான் ராத்திரிக்கு நேரத்தோடவே போய்அங்கே என்னென்ன நடக்குதுண்ணு பாக்கப்போறேன்.

காளி: கொஞ்சம் முன்னாலேயே போயி ... ஒரு பேச்சு சுந்தரம் ஐயாக் கிட்டவே சொல்லி வசந்தமாளுக்கும் சொல்லச் சொல்லிப்பிடு.

செங்: சரி, ஒனக்குத்தான் என்னத்துக்கு மனக்கொறை. அப்படியே செஞ்சிப்பிடுறேன்...இன்னும் கொஞ்சம் சோறு போடு...இண்ணைக்குச் சாயந்தரம் நான் நேரத்தோட போய் அந்தச் சுந்தரம் ஐயாகிட்டியே சொல்லி, வசந்தம்மாவுக்கும் சொல்லிப்பிடச் சொல்லிப் பிட்டு, அப்பறம் அந்தப் பெரிய

சிப்பாய் அந்தப் பொரட்சிக் காரனுங்களைப் புடிச்சி வெலங்கு போடுற வேடிக்கையும் பாத்துப்புட்டு ஜாமத்துக்கு மேலே தான் வருவேன்.

காளி : சரீ.....மச்சான்...நீ இண்ணைக்கு அங்கே சொம்ப சாக்ரதையாப் போவணும். ஏதாச்சியும் தப்பித் தவறி அந்தப் பசங்களைப் பத்தி யார் கிட்டெயும் ஒண்ணும் கோவமாப் பேசிப்பிடாதே. சுட்டாலும் சுட்டுப் புடுவாங்க! இண்ணைக்கு அவனுங்க கொம்பேறி மூக்கன் மாதிரி யாரையிண்ணாலும் கொத்திப் புடுவாங்க. சாக்ரதை.

செங் : அதெல்லாம் எனக்குத் தெரியுமடி. நானென்ன அப்படி ஏமாளியா?

காளி : இல்லேயில்லே. நீ சொம்ப சமுத்துதான்.....என்னைப் பொரட்டிக் குப்புற.....கட்டிலுலே.....போட்டுப்புட்டு..... நெலம் வரும, மச்சு ஊடு வருமுண்ணே பாரு! .....உப்பு வாங்கக் குடுத்த ரூவாயைக் குடுத்துப்பிட்டு வந்தேபாரு— சோத்துக்கு கமபு வாங்கக் கொண்டு போன பணத்தை லாட்டிரி போட்டே பாரு...ஐயோ...ஒஞ் சமுத்தே சொல்ல வா வேணும்!

செங் : செர்த்தாண்டி, ஒரேடியா கீட்டாதே...அதெல்லாம் அப்போ...அப்போடி..... இனிமேலுமா நானு ஏமாறுவேன். போடீ, போ.

காளி : இனிமே நீ ஏமாறமாட்டே. புத்தி வந்திடிச்சு.....இருந்தாலும் சொல்லி வச்சேன். சாக்ரதையா போயி யாரோட வும் வாய் குடுத்து சிக்கிக்காமெ.....அந்த சீனிவாசர் மகன் சுந்தரத்தையாகிட்டே ஒரு பேச்சு சொல்லிப்பிடு.....அவரும் வசந்தம்மாவும் இண்ணைக்கி ராத்திரி வேறெங்காச்சியும் போயிடணும். வெலங்கு போட்றதைப் பாக்கப் போறேனுண்ணு ஏமாந்து போவாதே. எட்டத்தானே இரு.

செங் : சரி. அப்படியே பண்ணிப்பிடுறேன்...சோத்தைப் போடு சொம்ப சாக்ரதையா குள்ள நரியாட்டமா வேலே செய்யறேன் பாரு. வெலங்கு போடறப்போ கிட்டப் போயி நானு சிக்கிக்கி வேனுண்ணு நெனைக்கிறியா? அதெல்லாம் எங்கெங்கே எப்படி. இருக்கணுமுண்ணு எனக்குத் தெரியும்டீ.

காளி : தெரிஞ்சா சரித்தான்.

(என்று சோறு போடுகிறாள்.)

காட்சி 29

இடம்: நல்லப்பர் வீட்டின் முன் வாசலும் பிறகு வீரபத்ரன் வீடும்

காலம்: மாலை இருட்டிய பின்

[இருட்டின உடன் வெகு சிக்கிரமே சாப்பிட்டுவிட்டு காளியம்மாள் சொன்னபடி சுந்தரத்தையும் சுந்தித்து நேரில் 'ஒரு பேச்சு' அவனிடத்திலும் சொல்லிவிடவேணும் என்று செங்கோடன் நல்லப்பருடைய மாளிகையை நாடி வருகிறான். வரும் வழியில் தன்னைப் புரட்சிக்காரர்கள் யாரும் கண்டு கொள்ளக் கூடாதென்று உடையையும் நடையையும் மாற்றிக்கொண்டு அங்கு மிங்கும் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டு நடக்கிறான். நல்லப்பருடைய வீட்டின் வெளி 'கேட்டில்' வழக்கம் போல் இரண்டு சிப்பாய்கள் துப்பாக்கியுடன் பாராக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களில் ஒருவன் அருகில் சென்று செங்கோடன் நின்று கும்பிடு போடுகிறான்.]

சிப: யார் நீ?

செங்: ஒண்ணுமில்லுங்க, ரொம்ப அவச்ர சோலியா நம்ப சுந்தரம் ஐயாவை கொஞ்சம் பாக்குணும். அவரு உள்ள இருந்தா கொஞ்சம் வரச் சொல்லுங்க.

சிப: சுந்தரம் ஐயாவைப் பார்க்கணுமா! என்ன அவசரம்?

செங்: அது அவர்கிட்டெ தனிக்கச் சொல்ல வேண்டிய சேதிங்க. கொஞ்சம் பாருங்க.....உள்ளே இருக்கிறாண்ணு.

சிப: (சிரித்து) சுந்தரம் உள்ள இருக்கிறாரா இல்லையாண்ணு எஜமான் நல்லப்பரைத்தான் கேக்குணும்.

செங்: கொஞ்சம்.....நீங்கள்...எஜமானைக் கேட்டுச்சொல்லுங்க.

சிப: ஏன்?..... நீயே நேராப் போய் எஜமானைக் கேளேன்?

செங்: போவுட்டுங்களா...சரி.....நானே கேக்கிறேனுங்க.

(என்று சொல்லிக் கொண்டே செங்கோடன் கேட்டுக்குள் நுழையப்போகிறான். அது வரையிலும் சும்மாயிருந்த இன்னொரு சிப்பாய் உடனே செங்கோடனைக் குறுக்கிட்டு)

சிப். 2 : ஏய்! ஆரப்பாரீ. சுத்தப் பைத்தியக் காரனுயிருக்கிறே. எஜமானைக் கேக்கப் போற மூஞ்சியைப் பாரு!

(என்று முறைக்கிறான்.)

செங் : கொஞ்சம் ...சுந்தரம் ஐயாவைப் பாக்குணுங்களே. முக்ய மான சேதிங்க.....ரொம்ப அவசரமானதுங்க.

சிப். 2 : சுந்தரத்தைப் பாக்கனுமுண்ணு அவுங்க ஊட்லே போய் பாரு, போ.

(என்று துப்பாக்கிக் கட்டையால் செங்கோடனைத் தள்ளுகிறான். செங்கோடனுக்கு இயல்பாக உள்ள கோபம் வந்து சிப்பா யை முறைத்துப் பார்க்கிறான்)

சிப். 2 : என்னடா மொறைக்கிறே? இந்த மொறைப்பு இங்கே செல்லாது. ஒம் பெண்டாட்டி இருந்தால் அவகிட்டே போய் மொறே. கையிலே என்ன இருக்குது பார்த்தியா?

(என்று துப்பாக்கியைக் காட்டுகிறான். உடனே செங்கோடனுக்கு காளியம்மாளும் அவள் சொன்ன எச்சரிக்கைகளும் நினை வுக்கு வந்து தன் கோபத்தை அடக்கிக் கொண்டு பின் வாங்குகிறான்.)

சிப் : அந்த சுந்தரத்தை மத்யானம் நாலு மணிக்கே ஊட்டுக்கு அனுப்பியாச்சு. அங்கே...போயி—அவரைப் பாரு...போ.

(செங்கோடன் பதில் பேசாமல் அந்த இடத்தை விட்டுப் போய் விடுகிறான். கொஞ்ச தூரம் சென்று சிப்பாய்கள் நிற்கும் இடம் கண்ணுக்கு மறைந்த உடன் பாதையின் ஓரமாக ஒரு ஒதுக்கிடத்தில் நின்று ஆலோசிக்கிறான்.)

செங் : சுந்தரம் ஐயா நாலு மணிக்கே ஊட்டுக்குப் போயிட்டா ருண்ணு சிப்பாய் சொல்றான். அவன் சொல்றது மெய்யோ பொய்யோ: எதுக்கும் சுந்தரமையா ஊட்டுக்கே போய் பாத் துட்டு.....அப்பறம் வந்து பெரிய சிப்பாய் பொரட்சிக்காரரைப் புடிச்சி வெலங்கு போட்ற வேடிக்கையைப் பார்ப்போம்.

(என்று சுந்தரத்தின் வீட்டை நோக்கிப் போகிறான். சுந்தரம் வசிக்கிற இடத்துக்குப் போக வீரபத்ரன் வீட்டைக் கடந்து தான் போகவேண்டும். செங்கோடன் வீரபத்ர னுடைய வீட்டுக்கு அருகில் வரும்போது எதிரில் சற்று தூரத்தில் ஒரு மோட்டார் வண்டி வருகிறது. அந்த வண்டி யின் முன் விளக்குகளின் வெளிச்சத்தைக் கண்டதும் அது யாருடைய 'காரோ', அதில் யார் இருப்பார்களோ, அவர்கள தன்னைக் கண்டு கொண்டால் என்ன கெடுதி வருமோ, என்று அஞ்சி உடனே செங்கோடன் வீரபத்ர னுடைய வீட்டுக்கு எதிரிலிருந்த ஒரு காலியான தண்ணீர்ப் பந்தலுக்குள் புகுந்து அதன் தட்டிகளின் மறைவில் பதுங் கிக் கொண்டு அந்தத் தட்டிகளிலுள்ள துவாரங்களின்

வழியாகப் பார்த்துக்கொண்டு நிற்கிறான். வந்த மோட்டார் வண்டி வீரபத்திரனுடைய வீட்டுக்கு நேராக, செங்கோடன் பதுங்கியிருந்த தட்டிக்கு வெகு சமீபமாக நிற்கிறது. வண்டியின் 'டிரைவர்' இருக்கும் இடம் செங்கோடன் பார்த்துக் கொண்டிருந்த துவாரத்துக்கு நேராக இருந்தது. வண்டியின் பின் சீட்டிலிருந்து வெகு நாகரிகமான உடைதரித்த ஒரு மனிதன் இறங்குகிறான். அவன் யாரென்பது செங்கோடனுக்குத் தெரியவில்லை. அந்த மனிதன் டிரைவருக்குப் பக்கத்தில் வந்து ரகசியமாக)

மணி : சிங்காரம் ..... நீ நேராக காரை மாந்தோப்புக்கு ஓட்டி, அங்கே கருப்பண்ணனிடம் சொல்லி எல்லாரையும் தயார் செய்து வைக்கச் சொல்லு. நான் பதினைந்து மணிக்குள் மாந்தோப்புக்கு வந்துவிடுவேன். சரியாகப் பன்னிரண்டு மணிக்கு மாந்தோப்பிலிருந்து எல்லாரும் புறப்பட்டு விட வேண்டும். கருப்பண்ணனிடம் மட்டும் சொல்லு. சொல்லி விட்டு உடனே வந்து விடு.

('கார்' புறப்படுகிறது. 'கார்' போனபின் அதிலிருந்து இறங்கிய மனிதன் வீரபத்திரன் வீட்டுக்குள் நுழைகிறான். அதைத் தட்டியின் சந்தின் வழியாக செங்கோடன் பார்க்கிறான். அந்த மனிதன் 'டிரைவரிடம்' ரகசியமாகச் சொன்னது முழுதும் செங்கோடன் காதில் விழுந்தது. உடனே செங்கோடனுக்கு பல ஊகங்கள் உதிக்கின்றன.)

செங் : (தனக்குத் தானே) மாந்தோப்பா !..... கருப்பண்ணனு ! கருப்பண்ணன மாந்தோப்பில் இருந்தால் அந்த வீராசாமி ... எங்கே !... பேசின கொரலெப் பாத்தா நாம்ப முன்னாலே கேட்டதாட்டமா இருக்குதே ! மாந்தோப்புக் காரனுக்கு வீரபத்திரன் கிட்டே என்ன சோலி..... இண்ணைக்கு !..... இந்நேரத்தில் !

(என்னெல்லாம் முணு முணுத்துக் கொண்டு வீதியை எட்டிப் பார்க்கிறான். எட்டியவரைக்கும் தெருவின் இரு புறத்திலும் எவரும் வருவதாகத் தெரியவில்லை. மௌன வெளியில் வந்து போகிறான். வீரபத்திரன் வீட்டு வாசலில் இருக்கிற சிப்பாய் அங்கில்லை. அதனால் கொஞ்சம் தைரியம் வந்து செங்கோடன் படியேறி முன் வீரபத்திரன் அவனுடைய உதவி உத்யோகஸ்தன் ராமாநுஜத்தோடு பேசிக் கொண்டிருந்த அறைக்குள் ஜன்னல் வழியாக மெதுவாகப் பார்க்கிறான். அங்கே பிரகாசமான விளக்கு வெளிச்சத்தில் மாந்தோப்பில் திட்டம் சொன்ன வீராசாமி ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருப்பதைச் செங்கோடன் பார்த்துக் நிகைப்படைகிறான். எதிரில் இன்னொரு நாற்காலியில் இருந்த வீரபத்திரன்]

வீரபத்: என்ன, நீங்கள் முன்னே சொன்னபடி உங்கள் சுமாஸ்தா சங்கத்தில் திட்டம் போட்டிருந்த தொகை வசூலாகி விட்டதா ?

வீரா: ஆஹா ! நாங்கள் போட்ட திட்டத்துக்கு மேலேயே வசூலாகி விட்டது.

வீரபத்: எவ்வளவு ?

வீரா: இது வரையில் கைக்கு வந்திருக்கிறது ஆறுயிரத்து ஐநூற்று ஐம்பது ரூபாய்.

வீரபத்: அடேயப்பா! அவ்வளவு வசூலாகி விட்டதா என்ன ?

வீரா: நாம் அங்கே போய்ச் சேருவதற்குள் ஏழாயிரம் ஆனாலும் ஆகிவிடும். உங்களிடத்தில் எங்கள் சங்கத்தின் அங்கத்தினர்களுக்கு அவ்வளவு பிரியம். இன்றைக்குத் தாங்கள் அங்கே வருவதனால்தானே அவர்களுடைய வீடுவாசல் பிள்ளைகுட்டியெல்லாம் தப்பிப் பிழைக்கப் போகிறது.

வீரபத்: ரொம்ப சந்தோஷம்.

வீரா: இன்று இரவே அந்தத் தொகையைத் தங்களிடம் தந்து விடுவதாகத் தீர்மானம் ..... நம்ம ஆட்கள் எல்லாம் அங்கே நான் சென்னபடி.....

வீரா: அதிலென்ன சந்தேகம்; முதல் 'பாட்ச்' இருபத்தைந்து பேர் போயாச்சு. இன்னேரம் முக்கால் வாசி தூரம் போயிருப்பார்கள். இரண்டாவது இருபத்தைந்து பேரை அனுப்பச் சொல்லி இப்பத்தான் ராமானுஜத்தை அனுப்பினேன் ..... என் வீட்டுக் காவல்நிப்பாய்களோக்கூட அனுப்பிவிட்டேன்.

வீரா: நல்லப்பர் வீட்டில் காவலிருக்கிறவர்களோக்கூட அனுப்பினால் தேவலை.

வீரபத்: ஆமாம், அவர்களையும் கூடத்தான். இன்றைக்கு ஒரு நாளைக்கு இங்கே காவல் இல்லாவிட்டால் என்ன ?

வீரா: இந்த உபகாரத்தை நாங்கள் என்றென்றைக்கும் மறக்கவே மாட்டோம்..... தாங்கள்..... கார் வந்திருக்கிறது ..... தாங்களும் நானும் நல்லப்பர் வாசலில் இருக்கிறவர்களும்.....

வீரபத்: ஆமாம், நாமெல்லாரும் அந்தக் 'காரில்' போகலாம்... நல்லப்பர் வீட்டுக்கு முன்னால் இப்போது காவலிருக்கிறவர்களைப் பத்து மணிக்கு அப்புறந்தான் அனுப்பவேணும். அதுவரையிலும் எஜமான் முழிச்சிருப்பார்; வெளியில் வந்து பார்த்தாலும் பார்ப்பார்.

வீரா: ஆமாமா, அதுதான் நல்ல யோசனை.

வீரபத்: முனியப்பன் கோயிலுக்குப் பக்கத்திலிருக்கிற அந்தக் கட்டிடத்தில் இங்கிருந்து போனவர்களோ வரவேற்று இடம் காட்ட யாரையாவது நேமித்து விட்டு வந்திருக்கிறீர்களா?

(முனியப்பன் கோயில் என்றதைக் கேட்டு செங்கோடன் ஆச்சரியப்பட்டு முகத்தைச் சுளிக்கிறான்.)

வீரா: ஆஹா. அதெல்லாம் செய்துவிட்டு, தங்களுக்குத் தர வேண்டிய காணிக்கையையும், தாம்பூலத்துடன் தயாராக வைத்திருக்கச் சொல்லி ஏற்பாடு பண்ணி விட்டுத்தான் வந்தேன்.

(இந்தச் சமயத்தில் தூரத்தில் மோட்டார் வருகிற ஓசை கேட்கிறது. உடனே செங்கோடன் ஓடிப்போய் தண்ணீர்ப் பந்தலுக்குள் பதுங்கிக் கொள்ளுகிறான். மோட்டார் வந்து வீரபத்ரன் வீட்டு வாசலில் நிற்கிறது.)

வீரா: எத்தனை சிப்பாய்களோ அனுப்பப் போகிறீர்கள்?

வீரபத்: கிட்டத்தட்ட நூறு பேர் இருக்கும். போதாதா?

வீரா: போதும், போதும், அவர்கள் என்ன இருபது முப்பது பேர்கள் தானே!

வீரபத்: அந்தப் புரட்சிக்காரர்கள் போட்ட திட்டப்படி இன்றைக்கு முனியப்பன் கோயிலில் கூடுவார்களல்லவா?

வீரா: ஓ! அது நிச்சயம். அதற்கு வேண்டிய மட்டும் தகவல்கள் நமக்கு வந்திருக்கின்றன.

வீரபத்: சரி இன்றோடு அந்தப் 'புரட்சி' கட்சி இந்த வட்டாரத்தில் ஒழிந்து போச்சு என்று தீர்மானம் செய்து கொள்ளுங்கள்.

வீரா: அதற்கென்ன தடை? தாங்கள் இங்கிருக்கிறபோது எங்களுக்கென்ன பயம்?..... போகலாமா?

வீரபத்: மணியென்ன?

வீரா: (கைக்கடிகாரத்தைப் பார்த்து) ஒன்பதரை ஆகப் போகிறது.

வீரபத்: சரியாகப் பத்து மணிக்கு ராமானுஜம் வருவான். அதன் பிறகு போவோம்.

(என்று சொல்லிவிட்டு, வீரபத்ரன் எழுந்து போய்த் தன்னுடைய ரானுவ உடையைத் தரித்துக்கொண்டு ரிவால்வரைத் தொட்டுப் பார்த்துக்கொண்டு கெம்பீரமாக வருகிறான்.)

வீரா: அடேயப்பா! உங்களைப் பார்த்தாலே போதுமே, அந்தப் பயல்கள் பயந்து நடுங்கி விடுவார்களே

வீரபத்: ஆமாம். நான் யூனிபாரத்தோட போனுலே எல்லாருக்கும் கொஞ்சம் கிலிதான்.

(இந்தச் சமயத்தில் உதவி அதிகாரி ராமானுஜம் வந்து சல்யூட் செய்கிறார்.)

வீரபத்: என்ன ராமானுஜம், எல்லாரும் போயாச்சா?

ராமா: ஆச்சு; கடைசி 'பாட்ச்' போய் பதினேந்து நிமிஷமாச்சு.

வீர: எஜமான் வெளியில் வந்தாரா?

ராமா: இல்லிங்க; அவர் கொம்ப நேரத்துக்கு முன்னேயே படுத்துத் தூங்கி விட்டராராம் .....

வீரபத்: சரி, நாம் புறப்படலாமா ..... 'கேட்டில்' இருந்த அந்த இரண்டு பேரும் வந்து விட்டார்களா?

ராமா: வந்துவிட்டார்கள். வெளியே இருக்கிறார்கள்.

வீரபத்: சரி போவோம். (வீராசாமியைப் பார்த்து) ஏன் சார் 'கார்லே' எல்லாருக்கும் இடமிருக்குமா?

வீரா: கார் பெரிய காருங்க—எட்டுபேர் போகலாம். நாம் ஐந்து பேர் தானே? தாராளமாய்ப் போகலாம்.

(எல்லாரும் வெளியில் வருகிறார்கள்; காரில் ஏறுகிறார்கள்.)

வீரா: (காரில் உட்கார்ந்தபின் டிரைவரிடம்) ஆலம்பாடியில் ஊருக்குள் எங்கும் நிறுத்தாமல் பெரிய மில்லுக்குப் போவது போல ஓட்டி, காரை நேராக முனியப்பன் கோயில் வீட்டுக்கு விடு.

(கார் போகிறது. பார்த்துக் கொண்டேயிருந்த செங்கோடன் பெருமூச்சு விட்டுக்கொண்டு வெளியில் வருகிறான்.)

செங்: (தனக்குத் தானே) ஆலம்பாடி முனியப்பன் கோயிலுக்கு சிப்பாய்களெல்லாம் போயிட்டா இங்கே யாரு அந்தப் பொரட்சிக்காரன்களைப் புடிச்சி வெலங்கு போட்றது! எங்கிட்டே இந்த பெரிய சிப்பாய் சொன்னதென்ன! இப்ப இவன் செய்யிற தென்ன! நல்லவேளை; காளியம்மா இப்ப போகச் சொல்லாட்டி இந்தப் பெரட்டுகார வீரபத்ரனை நம்பி நான் ஏமாந்துதாம் போயிருப்பேன். சரி சரி இனி நாம்ப சும்மாயிருந்தா போச்சி. ஒடனே மாந்தோப்புக்குப் போயி எட்டிப் பாத்துப்புட்டு சுந்தரம் ஐயா ஊட்டுக்குப் போய் உசார் பண்ணிப்பிடணும்.

(என்று வெகு வேகமாக மாந்தோப்புக்குப் போகிறான். மாந்தோப்பில் வீரப்பன் இரண்டு நாளைக்கு முன்னால் உத்தரவு

செய்த பிரகாரம் பல ஊர்களிலிருந்து சுமார் இருநூறு புரட்சித் தொண்டர்கள் அவரவர்கள் தலைவர்களுடன் வந்திருக்கிறார்கள். மாந்தோப்பில் மிகவும் பரபரப்பாக இருக்கிறது. கொள்ளையடிக்கப் போகிற பணத்தில், உடனே தங்களுக்குப் பங்கு கிடைக்கப் போகிறது என்ற ஒரே ஒரு ஆசையினால் வந்திருக்கிறவர்கள்தான் அங்கிருந்த பெரும் பாலோரும். அவர்கள் சிறு சிறு கூட்டங்களாக நின்றுகொண்டு அவர்கள் செய்ய வேண்டிய வேலையைப் பற்றியும் கிடைக்கப் போகிற செல்வத்தைப் பற்றியும் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

தலைவர்கள் என்று கருதப்பட்டவர்களெல்லாம் அங்குள்ள வீட்டுக்குள் கருப்பண்ணனுடன் வீராசாமியின் வரவுக்கு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். துப்பாக்கி, ரிவால்வர், வெடிகுண்டு முதலியவற்றைத் திட்டப்படி அவரவர்களிடம் கருப்பண்ணன் கொடுத்தாகிவிட்டது. வீராசாமி வந்து உத்தரவு கொடுக்க வேண்டியதுதான் பாக்கி. நல்லப்பர் வீட்டுக்குள் நுழைவதற்கு வேண்டிய மற்றெல்லா ஏற்பாடுகளும் தயாராகி விட்டன.

சேங்கோடன் தானும் அந்தத் தொண்டர்களில் சேர்ந்தவன் போல ஆட்களோடு ஆளாக அங்குமிங்கும் போய் நிலைமையை நன்றாக அறிந்து கொண்டான். நல்லப்பர் வீட்டுக்குள் புகுந்து கொள்ளையடிக்கும் போது சிப்பாய்கள் யாரும் அங்கே இல்லாதபடி செய்வதற்கு வீரபத்ரனுக்குச் சொல்லி அனுப்பி வைத்திருக்கிறான். இந்த ஏற்பாடுகளையெல்லாம் செய்வதற்கு வீராசாமி போயிருக்கிறான் என்பதைக் கண்டு கொண்டான். பதினைந்து மணிக்கு மாந்தோப்புக்கு வருவதற்குள் சுந்தரத்திடம் சொல்லிவிட வேண்டுமென்று செங்கோடன் மாந்தோப்பை விட்டுச் சுந்தரம் வீட்டுக்குப் போகிறான். வழியில்)

செங்: (தனக்குத் தானே) என்ன இருந்தாலும் காளியம்மா கெட்டிக்காரிதான். அவளுக்கு இருக்கிற யோசனை எனக்கில்லாதபோச்சே!

காட்சி 30

இடம் : சுந்தரத்தின் வீடு
காலம் : இரவு பத்தரை மணி

[சுந்தரம் தன் தாயாரிடம் சுமுகமாகப் பேசினாலும் மனதில் மிக்க வேதனையுள்ளவனாக அன்றிரவு வெகு நேரம் வரைக்கும் உணவருந்தாமல் உட்கார்ந்து கொண்டே யிருந்தான். தினந்தினம் சுந்தரம் மாலையில் வீட்டுக்கு வந்தபின் தன்னுடைய தங்கைமார்களுடன் சிரித்து விளையாடி அவர்களுடைய படிப்பு விஷயமாகச் சொல்லித்தரக் கூடியதை சொல்லிக்கொடுத்து அவர்களுடன் உட்கார்ந்து இரவு எட்டு மணிக்குள் சாப்பிடுவது வழக்கம். அன்றைக்கு மட்டும் அவர்களையெல்லாம் முன்னால் சாப்பிடச் சொல்லிவிட்டு ஒரு புத்தகத்தை விரித்து வைத்துக் கொண்டு படிப்பதுபோல ஏடுகளைப் புரட்டிக் கொண்டு வசந்தாவைப் பற்றியும், அவளை நல்லப்பர் பலாத்காரமாக கணேசருக்கே கல்யாணம் செய்துவைக்க சபதம் கூறியிருப்பதாக வசந்தா எழுதியிருந்ததைப் பற்றியும், தான் இனி நல்லப்பர் வீட்டுக்குப் போக முடியாமல் நேர்ந்து விட்டதைப் பற்றியுமே நினைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான். குழந்தைகளெல்லாம் சாப்பிட்டுவிட்டுப் படுத்துக் கொண்டார்கள். மீனாட்சியம்மாள் வெகுநேரம் பொறுத்திருந்தும் சுந்தரம் சீரப்பாட்டின்மேல் நினைவே இல்லாமல் இருந்தான். பிறகு மீனாட்சியம்மாள் வருந்தி வருந்திக் கேட்டுக்கொண்டதின்மேல் சாப்பிடப் போனான். உணவு செல்லாமல் ஒப்புக்குச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு மீண்டும் முன்னிருந்த இடத்துக்கே வந்து உட்கார்ந்தான். மீனாட்சியம்மாளும் அரைகுறையாகத் தன் ஆகாரத்தை முடித்துக் கொண்டு வந்து மகனுக்கு எதிரில் ஒரு ஆசனத்தில் அமர்ந்து]

சுந் : (மௌனம்)

மீனு : போனால், அவர் கோபித்துக் கொண்டதற்கு நீ வருத்தப்படுவதுபோல் காட்டிக் கொள்ளாதேயப்பா.

சுந் : போனால்தானே ?

மீனு : ஏன் போகமாட்டாயா ?

சுந் : அவராக ஆள்விட்டு அழைத்தால் தான் போவேன்.

மீனு : அவராக அழைக்காவிட்டாலென்ன ? என்னமோ— நியாயமில்லாமல்தான் எஜமான் கோபித்துக் கொண்டிருந்தாலும்

அதைப் பொறுத்துக் கொண்டு நாமாகப் போனால் நமக்குத் தானே பெருமை.

சுந்: சாதாரணமாக இருந்தால் நானும் அப்படித்தான் செய்வேனம்மா. ஆனால் இன்றைக்கு அவர் கோபித்துக் கொண்டமாதிரி அப்படி சாதாரண விஷயமல்ல.

மீனு: அதென்ன அப்படிப்பட்ட விஷயம்?

சுந்: அதைச் சொல்ல ஆரம்பித்தால் இப்போது வெளியிடக் கூடாத அநேக விஷயங்களைச் சொல்ல வேண்டியிருக்கும். அப்படிச்செய்வது நம்பிக்கை மோசமாகும். அம்மா, சமயம் வரும்போது பின்னால் எல்லாம சொல்லுகிறேன். இப்போது அதைப் பற்றி நான் பேசக்கூடாது.

மீனு: சரி. அப்படியானால் நான் அதைப்பற்றி கேட்கவில்லை... அதுபோனால் போகட்டும் ... மாமாவுக்கு ஒரு பதில் சொல்லி விடவேண்டாமா?

சுந்: (தாயாரைப் பார்த்துப் புன்சிரிப்புடன்) அம்மா! என்ன இருந்தாலும் உங்கள் தம்பியின் வருத்தத்தைப் பற்றித் தானே நீங்கள் கவலைப் படுகிறீர்கள்! என் விசாரத்தை எண்ணிப் பார்க்கவில்லையே! (என்று கொஞ்சம் சிரிக்கிறான்.)

மீனு: உன் விசாரத்தைப் பற்றி நான் எண்ணுமலா இருக்கிறேன்? இதையும் எண்ணத்தான் வேணும், அதையும் கவனிக்கத் தானேவேணும்(என்று சிரிக்கிறாள்).

சுந்: இருந்தாலும் பெண்களுக்கே...புகுந்த வீட்டைக் காட்டிலும் பிறந்த வீட்டின்மேல்தான் பிரியம் அதிகம் என்று சொல்லுவது சரியாகத்தானிருக்கிறது.

(இருவரும் சிரிக்கிறார்கள்)

மீனு: ராஜேஸ்வரி உன்னைத் தவிர வேறு யாரையும் கட்டிக் கொள்ளமாட்டேன் என்கிறாளாம். நீயும் இதுவரையிலும் 'அவளையேதான் கட்டிக் கொள்வேன்' என்று சொல்லிக் கொண்டிருந்தாய்... இப்ப.....

(இந்தச் சமயத்தில் வீதிக் கதவை யாரோ படபட வென்று வெகு அவசரமாகத் தட்டுகிறார்கள். மீனாட்சியம்மாள் வேகமாகப் போய்க் கதவைத் திறக்கிறாள்)

மீனு: யாரப்பா! என்ன?

செங்: அம்மா ரொம்ப அவசரமுங்க, சுந்தரமையா இருக்கிறாரா?

மீனு: நீ யார்?

செங்: நான்தாம்மா செங்கோடன், தெரியிலிங்களா?

மீனு: செங்கோடனா? எந்தச் செங்கோடன்?... தெரியிலியே.....

செங்: நான்தாம்மா ..... காளியம்மா புருசன்— செங்கோடன்' நீங்கதானே பணங்குடுத்துக் கண்ணாலம் செஞ்சிவச்சிங்க..... மறந்திட்டிங்களா.

மீனு : ஓ ! காளியம்மாள் புருஷனு ? பார்த்து ரொம்ப நாளாச்சு. என்ன இந்நேரத்திலே ? உள்ளே வெளிச்சத்துக்கு வா.

செங் : (உள்ளே போய்க் கொண்டே) தாமுசம் பண்ண நேரமில்லிங்க. ரொம்ப அவசரம்..... பெரிய ஆபத்துங்க. சுந்தரம் ஐயாவைக் கொஞ்சம் கூப்பிடுங்க.

(இந்த அரவத்தைக் கேட்டுச் சுந்தரமே வருகிறான். சுந்தரத்தைக் கண்டதும்)

செங் : ஐயா ! சுந்தரம்ஐயா ! ஒங்களுக்கு ஆயுசு நூறு. ஊட்லே இருப்பிங்களோ மாட்டிங்களோண்ணு சாமியெல்லாம் வேண்டிக்கிட்டே வந்தேனுங்க. ரொம்ப ஆபத்தான சேதி... உங்ககிட்டே தனிக்கச் சொல்லனும். கொஞ்சம் வாங்க.....

சுந் : இங்கே யாரும் இல்லை, சொல்லு.

செங் : ஊஹூம் ..... ஒங்ககிட்ட மட்டும் தனிக்க வெவ்ரம்மா ரொம்பப் பேச்சுப் பேச்சுனும். தாமுசிக்க நேரமில்லே..... தாமுசிச்சா போச்சு...வச்சுதம்மாளை அப்பறம் நீங்க பாக்கமுடியாது.

சுந் : வசந்தாவையா ! ஐயோ அவளுக்கென்ன ?

செங் : சொல்றேன். கொஞ்சம் என்கூட வாங்களேன். ஒடனே வந்தா வசந்தம்மாளுக்கு ஆபத்தில்லே ... தப்பிச்சிக்கலாம்... வாங்க சாமி, கொஞ்சம் வாங்க—காட்டுறேன். நீங்களே பாப்பிங்க.

சுந் : (தாயாரிடம்) அம்மா! வசந்தாவுக்கு என்னமோ ஆபத்தாமே, நான் போய்ப் பார்த்து வருகிறேன். நீங்கள் தாழிட்டுக் கொண்டு படுத்திருங்கள்.

மீனு : போய்ப் பார்த்து வேண்டிய உதவி செய். உடனே எனக்கு வந்து விவரம் சொல்லு. நீ வரும்வரைக்கும் எனக்குத் தூக்கம் வராது.

சுந் : இதோ வந்து விடுகிறேன் (என்று சொல்லிக்கொண்டே வீட்டைவிட்டு வீதிக்கு வருகிறான். செங்கோடன் முன்னால் நடக்க சுந்தரம் பின் தொடர்கிறான். நல்லப்பருடைய பங்களாவுக்குப் போக வேண்டிய திசையில் சுமார் அரை மைல் தூரம் சென்று ஊரைக் கடந்து ஜனப் பழக்கமில்லாத இடத்தில் செங்கோடன் நிற்கிறான். நல்லப்பருடைய வீடு ஊருக்கு வெளியில் சுமார் இரண்டு மைல் தூரத்திலுள்ளது. செங்கோடன் நின்ற உடன்)

சுந் : வசந்தாவுக்கு என்ன ஆபத்து?

செங் : வசந்தம்மாளை ஊடுபூந்து தூக்கிக்கிட்டுப் போகப் போறாங்க.

சுந் : யார்?

செங் : எல்லாம் அந்த மாந்தோப்புப் புரட்சிக்காரர்தான்.

சுந் : முத்து வீரப்பனா?

செங் : முத்து வீரப்பன் ஊர்லே இல்லிங்க. அவுங்க அம்மாளுக்கு சொம்ப காயலாண்ணு தந்தி வந்து அவர் போயி அஞ்சாறு நாளாக்கு மேலாச்சுங்க. இண்ணைக்கு ..... இப்போ — சரியாப் பன்னெண்டு மணிக்கு வீராசாமியும் கருப்பண்ணனும் மத்தவங்களும் நல்லப்பர் ஊட்டுக்குள்ள பூந்து அவரைக் கட்டிப் போட்டுப் பணங் காசு, நகை நப்பு, எல்லாத்தையும் எடுத்துக்கிட்டு வசந்தம்மாளை தூக்கிக்கிட்டு மலைக்கு ஓடிப்போக ஏற்பாடு செஞ்சி மாங்தோப்பிலே எல்லாரும் தயாரா இருக்குறுங்க. இன்னுங் கொஞ்ச நேரத்திலே நல்லப்பர் ஊட்டுக்குள்ளே பூதப் போறுங்க ..... நீங்க ஓட்டமா ஓடி வசந்தம்மாவை மட்டுமாச்சும் வேறெ எடத்துக்கு கூட்டிப் போயிடுங்க. நல்லப்பரையும் போயிடச் சொல்லுங்க ..... நீங்களும் அங்கே இருக்கப்படாது. ஒங்களையும் தொலைச்சிப் புடறமுண்ணு கருப்பண்ணன் சொன்னானுங்க.

சுந் : என்ன செங்கோடா, நீ சொல்லுவது ஒன்றும் எனக்குப் புரியவில்லையே. நல்லப்பர் வீட்டுக்குள் இவர்கள் நுழைவது அவ்வளவு லேசான காரியமா ?

செங் : ஐயையோ அப்படி நெனைச்சி ஏமாந்து போயிடாதிங்க நல்லப்பர் ஊட்டைக் கொள்ளையடிக்க..... ஐயோ தாமுசிக்க நேரமில்லிங்க. இன்னும் ஒரு மணி நேரத்துக்குள்ள பூந்துடப் போறுங்க ..... உடனே போங்க ..... வசந்தம்மாளைத் தாட்டுங்க.

சுந் : நல்லப்பர் வீட்டில் கொள்ளையடிக்க வேண்டுமென்று வீரா சாமியும் கருபண்ணனும் துடித்துச் கொண்டிருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும் ..... ஆனால் வீரபத்ரனும் அவனுடைய சிப்பாய்களும் இருக்கிறார்கள். நீ நினைக்கிற மாதிரி அவ்வளவு சுலபமாக நல்லப்பர் வீட்டுக்குள்.....

செங் : ஐயையோ ! அந்தக் கதையெ அறியாமெப் பேசுறிங்களே! அந்த வீரபத்ரனும் அவன் சிப்பாய்களும் வீராசாமிகிட்டே லெஞ்சம் வாங்கிக்கிட்டு அவளெ சேந்து ஆலம்பாடிக்குப் போயிட்டாங்க. இங்கே பேருக்குக்கூட ஒரு சிப்பாய் இல்லே இப்ப நல்லப்பர் ஊட்டுக்குள்ளே யார் பூந்தாலும் கேள்வி யில்லே.

சுந் : அப்படியா இப்போது நல்லப்பர் பங்களாவுக்குக் காவல் இல்லையா ?

செங் : ஐயோ !! இல்லியே ! நீங்களே போய்ப் பாருங்களேன் அதுக்குத்தானே நானு இவ்வளவு அவசரப்படுத்துறேன். தாமுசிக்க நேரமில்லே. வாங்க - உடனே போயி வசந்தம்மாளையும் நல்லப்பரையும் வேறெங்காச்சியும் கூட்டிக்கிட்டு ..... நீங்களும் போயிடுங்க.....நானும் போயிட்றேன்.

[இதைக் கேட்ட உடன் சுந்தரம் ஓட்டமும் நடையுமாக நல்லப்பர் பங்களாவுக்கு போகிறான். செங்கோடன் பின்பற்றுகிறான். இருவரும் பங்களாவின் முதல் கேட்டுக்கு வருகிறார்கள். விடிய, விடிய எரியவேண்டிய வெகு பிரகாசமான மின் சார விளக்குகள் முதல் கேட்டிலும் பங்களாவைச் சுற்றிலும் எப்போதும் போலவே எரிந்து கொண்டிருக்கின்றன. பங்களாவின் உட்புறத்து விளக்குகள் மட்டும் அணைக்கப் பட்டு ஜன்னல்களெல்லாம் இருண்டு கிடக்கின்றன. சுந்தரம் பங்களாவைச் சுற்றிலும் அங்குமிங்கும் ஓடி ஓடிப் பார்க்கிறான். ஒரு சிப்பாய் கூட காவலுக்கு இல்லை. வெளியே இருக்கிற விளக்குகளுக்கும் விசை முடுக்கிகள் பங்களாவின் உட்புறத்தில் இருந்ததால் அவற்றை வெளியிலுள்ள யாரும் விரும்பினாலும் அணைக்க முடியாது.

இரவுமுழுதும் ஐம்பது அறுபது சிப்பாய்கள் சுற்றிச் சுற்றிக் காவல் செய்கிற இடத்தில் ஒருவன்கூட காவலுக்கில்லை என்பதைக் கண்ட உடன், செங்கோடன் சொல்லுவது முற்றிலும் உண்மையாகத்தான் இருக்க வேணுமென்று சுந்தரம் உணர்ந்தான். வசந்தாவைத் தூக்கிக் கொண்டு போய்விட ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்ற காரணம் மட்டு மல்லாமல் நல்லப்பருக்கும் ஆபத்தில் உதவவேணும் என்ற ஆசையினால் நல்லப்பர் அன்று மத்தியானம் தன்னைக் கடிந்து பேசினதைச் சிறிதும் கருதாமல் உடனே உள்ளே சென்று உஷார் படுத்திவிட வேணுமென்று சுந்தரம் துடித்தான். ஆனால் உடனே உள்ளே போக வழியில்லை; வழக்கமாக இரவிலும் பகலிலும் எப்போதும் வெளிக் கதவு பூட்டப்பட்டு அதன் சாவி பாராக் காரர்களிடம் இருக்கும். வேண்டும் போதெல்லாம் திறந்து விட்டு உடனே பூட்டிக் கொள்வார்கள். அதனால் அந்த வெளிக் கதவின் சாவி அறைக்குக் கடைசியாகக் காவலிருந்த பாராக்காரர்களிடம் இருந்தது. கதவுகள் மிக உயரமானவை. காலூன்றி ஏறித் தாண்ட முடியாது. பங்களாவின் சுற்றுச் சுவர்களும் கோட்டைச் சுவர்கள் போன்றன. வெளியிலிருந்து சப்தம் கேட்டாலும் அபாயம். புரட்சிக்காரர்களைச் சேர்ந்த ஒற்றர்கள் யாராவது இவர்களுடைய நோக்கத்தைக்கண்டு கொண்டால் எல்லாம் கெட்டுப் போய் விடும் என்பது இவர்கள் இருவருக்கும் தெரியும்.

பங்களாவின் பின் புறத்திலுள்ள நந்தவனத்தைச் சுற்றியுமுள்ள சுவர் இதைவிடக் குட்டையானது. அதில் ஏறி நந்தவனத்துக்குள் இறங்கி விட்டால் நந்தவனத்தின் உட்புறத்தில் பங்களாச் சுவருக்கு ஓரத்திலிருக்கிற அநேக மரங்களில் எதிலிருந்தாவது பங்களாவின் உட்புறத்தில் இறங்கி விடலாம் என்ற யோசனை சுந்தரத்துக்குத் தோன்றியது. உடனே செங்கோடனும் சுந்தரமும் பங்களாவின் பின்புறத்துக்குப் போனார்கள். வெகு நேரம் சுற்றிச் சுற்றிப் பார்த்து சுவரில்

கால் ஊன்ற சந்திருந்த ஒரு இடத்தைக் கண்டு அதனருகில் செங்கோடன் உதைந்து நின்று கொள்ள அவன் தோளின் மீது சுந்தரம் ஏறி, அந்தக் கல் இடுக்கில் காலை ஊன்றிச் சுவரின் மீது ஏறிக் கொண்டான். சுந்தரம் சுவரின் மீது குதிரைச் சவாரி போல் உட்கார்ந்து கொண்டு தன்னுடைய மேல் வேஷ்டியை முறுக்கி அதன் ஒரு தலைப்பைத் தான் பிடித்துக் கொண்டு மற்ற தலைப்பை செங்கோடனிடம் வீசினான். அதன் உதவியால் வெகு பாடுபட்டு செங்கோடனும் சுவரின் உச்சிக்கு வந்தான். செங்கோடன் வேஷ்டி முறுக்கைப் பிடித்துக் கொள்ள, சுந்தரம் நந்தவனத்துக்குள் இறங்கினான். சுந்தரம் சுவர் ஓரமாக நின்று கொள்ள செங்கோடன் சுவரின் உச்சியை பிடித்துத் தாங்கிச் சுந்தரத்தின் தோளின் மீது காலூன்றி அவனும் நந்தவனத்துக்குள இறங்கினான். நந்தவனத்தின் அமைப்பு சுந்தரத்துக்குத் தெரியும். அதனால் வெளிச்சமில்லாத செடி கொடிகளின் இடையிலும் தத்தித் தத்தி பங்களாவின் சுற்றுச் சுவருக்கு வந்தாகள். அதன் ஓரத்திலிருந்த பல மரங்களில் ஒரு மகிழமரம் பங்களாவின் உட்புறத்தில் வாதோடியிருந்தது சுந்தரத்துக்கு நினைவிலிருந்தது. அனால் இருட்டில் அதை உடனே கண்டு பிடிப்பது கஷ்டமாக இருந்தது. கஷ்டப்பட்டு அதைக் கண்டு பிடித்து இருவரும் அதில் ஏறி, பங்களாவுக்குள் நீண்டிருந்த கிளைக்கு வந்து சுந்தரத்தின் மேல் வேஷ்டியையும் செங்கோடனுடைய இடுப்பு வேஷ்டியையும் ஒன்றோடொன்று முடிந்து ஒரு முனையை அந்தக் கிளையில் கட்டி, மற்ற முனையைக் கீழே தொங்க விட்டு, அதன் வழியாக இருவரும் தனித் தனியே பங்களாவுக்குள் குதித்தார்கள். சுந்தரத்துக்கு மேல் வேஷ்டி யில்லை; செங்கோடன் தன் தலையில் கட்டியிருந்த ஒரு கிழிந்த துண்டை இடுப்பில் கட்டிக் கொண்டு அரை நிர்வாணமாக நின்றான்.

இவர்கள் குதித்த இடத்திலிருந்து வீட்டின் தலைவாசலுக்குப் போவது சுலபம். இருவரும் அங்கே போனார்கள். தலைவாசலுக்குப் பக்கத்தில் நஞ்சப்பன் தான் படுத்திருப்பது வழக்கம். கதவைத் தட்டினால் தட்டினவர்கள் யாரென்பதைத்தெரிந்து கொண்டுதான் நஞ்சப்பன் திறப்பான். அந்த நேரத்தில் தான் வந்திருப்பதாகக் குரல் கொடுத்தால் தன்னை நல்லப்பர் தூரத்தினதைப் பார்த்துக் கொண்டிருந்த நஞ்சப்பன், உடனே கதவைத் திறக்க மறுத்தாலும் மறுப்பான் என்று சுந்தரம் சந்தேகித்தான். அதனால் செங்கோடனிடத்தில் ரகசியமாக]

சுந்: செங்கோடா, கதவுப் பக்கத்தில் நஞ்சப்பன்தான் இருப்பான். அவன் கொஞ்சத்தில் கதவைத் திறக்க மாட்டான். அதற்கு ஒரு தந்திரம் செய்ய வேண்டும். அதை நீதான் செய்ய வேணும்.

செங்: ஓ! எதுவானாலும் நான் செய்றேன். என்னத் தந்திரம் செய்யவேணும்?

சுந்: நீ கதவைத் தட்டு. யார் என்று கேட்பான் அதற்கு 'நஞ்சப்பன் வீட்டில் யாரையோ பாம்பு கடித்துவிட்டது உடனே நஞ்சப்பனை வரச் சொன்னார்கள்' என்று சொல்லு. நான் இப்படி மறைந்திருக்கிறேன்.

(என்று சுந்தரம் மறைந்து கொள்ளுகிறான். வெகுஅவசரம் காட்டி செங்கோடன் கதவைத் தட்டுகிறான்.)

நஞ்: (உள்ளிருந்து படுக்கையில் புரண்டு) யாரது?

செங்: நஞ்சப்பன் ஊட்லே யாருக்கோ பாம்பு கடிச்சிடிச்சு உடனே நஞ்ச்ப்பனை வரச் சொன்னுங்க.

(அலறிப்புடைத்துக் கொண்டு விளக்கைப் போட்டுக் கதவைக் கொண்டு வெளியில தாவி வந்து செங்கோடனைப் பார்த்து)

நஞ்: எங்க ஊட்லியா? யாரைப் பாம்பு கடிச்சுடிச்சி?
(என்று பதைக்கிறான்)

செங்: ஆமாங்க, ஒங்க ஊட்லே தானுங்க. ஒங்க ஊட்லெ தானுங்க. ஒங்க பொஞ்சாதியைப் பாம்பு கடிச்சுடிச்சிகளாம். ஒடனே ஓட்டமா ஓடி உங்ககிட்ட சொல்லச் சொன்னுங்க. நான் திரும்பிக்கூட பார்க்காமெ ஓடியாந்தேன், போங்க, ஒடனே போவுணும்.

(கொஞ்சங்கூட யோசிக்காமல் நஞ்சப்பன் தன் வீட்டுக்குப் போக வெளிக் கேட் பக்கம் ஓடுகிறான். அவன் மறைந்த உடன் சுந்தரம் செங்கோடனையும் அழைத்துக் கொண்டு வீட்டுக்குள் நுழைந்து விளக்கை அணைத்து விட்டு நஞ்சப் பன் சீக்கிரமாகத் திரும்பி வந்து விட்டால் உள்ளே வந்து கலவரம் செய்து விடாதபடி கதவின் உட்புறத்தில் தாழிட் டுக் கொண்டு மாடிக்குச் சென்று வசந்தாவின் படுக்கை யறையின் பக்கமாக வந்து வெகு லேசாகக் கதவைத் தட்டுகிறான்.)

காட்சி 31

இடம் : ஆலம்பாடி முனியப்பன் கோவிலுக்கருகி லுள்ள வீடு

காலம் : இரவு பதினேரு மணி

[ஆலம்பாடிக்கு மோட்டார் வண்டியில் சென்ற வீரபத்ரன், வீரா சாமி, ராமானுஜம், இரண்டு சிப்பாய்கள் ஆகிய எல்லாரும் குறிப்பிட்ட முனியப்பன் சோயிலண்டை வண்டியை விட்டு இறங்குகிறார்கள்.]

வீரா : (வீரபத்ரனிடம்) இதுதான் முனியப்பன் கோயில் (என்று கோயிலைக் கை நீட்டிக் காட்டுகிறான்) தோ அதுதான் சிப்பாய் களும் தாங்களும் மறைந்திருக்க வேண்டிய வீடு. (என்று அருகிலிருந்த ஒரு வீட்டைக் காட்டுகிறான்.)

வீரபத்: முதலில் கோயிலைப் பார்வையிடுவோம். (என்று எல்லோரும் கோயிலுக்குட் சென்று சுற்றிப் பார்க்கிறார்கள்.)

வீரா : (கோயிலில் ஒரு இடத்தைக் காட்டி) இங்கேதான் அவர்கள் பன்னிரண்டு மணிக்குமேல் கூடப் போகிறார்கள்.

வீரபத்: நல்ல வசமான இடம்தான். சரி இடத்தின் 'பிளான்' தெரிந்துவிட்டது. யாரும் நம்மைக் கவனிக்குமுன் அந்தக் கட்டிடத்தில் சென்று மறைந்து கொள்வோம்.

(எல்லாரும் அருகிலிருந்த வீட்டுக்குள் போகிறார்கள். அது வீரபத் ரனை வரவேற்க மாலை, சந்தனம், தாம்பூலம் பழவகைகள் முதலியவற்றுடன் அலங்காரமாகத் தயார் செய்யப்பட்ட இடம். வீரபத்ரன் உள்ளே வந்த உடன் வீராசாமி வீரபத் னுக்கு மாலை சூட்டிக் கையில் எலுமிச்சம் பழம் தருகிறான்.)

வீரபத்: (வெகு சந்தோஷத்துடன் மாலையை ஏற்றுக் கொண்டு) இப்ப என்னத்துக்கு மாலை. அந்தப் பயல்களையெல்லாம் கைது செய்த பிறகு கடைசியில் அல்லவா மாலை சூட்ட வேண்டும்?

வீரா : அவர்களை யெல்லாம் கைது செய்து காவலோடு கொண்டு போக வேண்டிய கடுபிடியில் இவ்வளவு சந்தோஷமாக மாலை சூட்ட நேரம் இருக்காது.

வீரபத்: ஓ! ஆமாம், அதென்னவோ வாஸ்தவம்தான்...சரி... சந்தோஷமாகச் செய்ய வேண்டியதை யெல்லாம் இப்போதே

செய்து விடுங்கள். இன்னும் கொஞ்ச நேரத்தில் இந்த விளக்கைக்கூட அவித்து விட்டு இங்கே ஆள்கள் இருப்பதே தெரியாமல் இருட்டில் சந்தடியில்லாமல் இருக்க வேணும்.

வீரா : ஆஹா ! அப்படியே செய்கிறேன். (வீரபத்ரன் காதோடு) நான் தங்களிடம் சொன்ன.....அதுகூட இப்ப வந்துவிடும், இப்பவே அதையும் சந்தோஷமாக தந்துவிடுகிறேன்.

வீரபத் : (ரகசியமாக) அப்படியே செய்யுங்கள். ஆனால் இவர்களுக்குத் தெரியப்படாது. (ராமானுஜத்தைப் பார்த்து) எல்லாரும் வந்து விட்டார்களா ?

ராமா : இன்னும் இரண்டொரு நிமிஷத்தில் கடைசி பாட்ச் வந்துவிடும். மணி பத்தே முக்கால்தான்.

வீரபத் : சரி.....எஜமான் வீட்டு வெளிக் 'கேட்டை' பூட்டிவிட்டு வந்தார்களா ?

ராமா : ஆஹா நானே பூட்டினேன். இதோ சாவி (என்று சாவியை எடுத்து நீட்டுகிறான். அதைக் கவனித்த வீராசாமி)

வீரா : நல்லப்பர் பங்களாவின் வெளிகேட் சாவியா அது? அதை இங்கே கொடுங்கள். நீங்கள விலங்கிடப்போகிற கைதிகளை உள்ளே கொண்டுபோய் நல்லப்பரிடம் காட்ட நானே முன்னால் சென்று கதவைத் திறக்க எனக்கு ஆலசியாக இருக்கிறது.

வீரபத் : சரி,அப்படியே செய்யுங்கள் (ராமானுஜத்தைப் பார்த்து) அந்த ஆசையைத்தான் அவர் தீர்த்துக் கொள்ளட்டுமே ; சாவியை அவரிடம் கொடுங்கள்.

(ராமானுஜம் சாவியை வீராசாமியிடம் தருகிறான். வீராசாமி அதைத் தன் சட்டைப் பையில் பந்தோபஸ்து செய்து கொள்ளுகிறான்.)

வீரா : (வீரபத்ரனிடம் ரகசியம்போல்) நான் போய் அதைக் கொண்டு வருகிறேன்.

(வீரபத்ரன் பதில் சொல்லுவதற்குள் கடைசித் தொகுதி இருபத்தைந்து சிப்பாய்களில் நால்வர் வருகிறார்கள். சிறிது நேரத்திற்குள் மற்றவர்களும் வந்து சேர்ந்து விடுகிறார்கள்.)

வீரா : (ரகசியமாக) நான் போய் அதைக் கொண்டு வந்துவிடுகிறேன். எங்கள் சங்கத் தலைவரிடம் அந்தத் தொகை இருக்கிறது. அதை எடுத்துக்கொண்டு அவரையும் வரச் செய்கிறேன். அவரே தங்களிடம் தரட்டும்.

வீரபத் : (ரகசியமாக) அவர் வரவேண்டாம். நீங்கள் வாங்கிக் கொண்டு வந்தால் போதும். இங்கே வேறு யாரும் வரவேண்

டாம். பலபேர் இப்போது வந்தால் அந்தப் பயல்கள் உஷாராகி விடுவார்கள்.

வீரா : சரி, நானே வாங்கிக் கொண்டு வந்து விடுகிறேன்.

வீரபத் : அப்படிச் செய்யுங்கள். சீக்கிரமாக வந்து விடுங்கள்.

வீரா : காரிலேயே போய் ஒரு நிமிஷத்தில் வந்து விடுகிறேன்.

வீரபத் : சரி, சந்தோஷம். (ரகசியமாக) அது இவர்கள் யாருக்கும் தெரிய வேண்டாம்.

வீரா : அதைத் தாங்கள் சொல்ல வேணுமா எனக்கு? (காதோடு) அதை வாங்கி வந்து இப்போதே உங்களிடம் தந்து விடட்டுமா, அல்லது நானே வைத்திருந்து பிறகு தனியாக உங்களிடம் முன்மாதிரி தரட்டுமா?

வீரபத் : இப்போதே வாங்கி வந்து நீங்களே வைத்திருந்து தனியே முன்மாதிரியே தருவதுதான் நல்லது.

வீரா : நான் போய் வாங்கிக் கொண்டு வந்து வெளியிலேயே மறைந்திருக்கிறேன். அந்தப் புரட்சிக்காரர்கள் கோயிலுக்குள் வந்து கூடிய உடன் வந்து தாங்கள் என்னிடம் சொல்லியிருக்கிறபடி தகவல் தெரிவிக்கிறேன்.

வீரபத் : சரி.

வீரா : நீங்கள் கதவைத் தாழிட்டுக் கொள்ளுங்கள்.

[வீராசாமி வெளியில் போகிறான். கதவு உள்ளே தாழிடப்படுகிறது. வீராசாமி சற்று நேரம் கதவுக்கு வெளியில் நிற்கிறான். ஓசையில்லாமல் வெளியில் கதவிலுள்ள சங்கிலியைக் கொண்டியில் மாட்டிவிட்டு தான் மடியில் மறைத்து வைத்திருந்த ஒரு கெட்டியான பூட்டைப் போட்டுப் பூட்டி விட்டு மோட்டாரில் வந்து ஏறிக் கொள்ளுகிறான். டிரைவருக்கு ஜாடை காட்டுகிறான். கார் புறப்படுகிறது. கார் கொஞ்ச தூரம் வந்த உடன் டிரைவரிடம் "விடு நேராக மாந்தோப்புக்கு" என்கிறான்.]

காட்சி 32

இடம் : நல்லப்பர் மாளிகை

காலம் : இரவு மணி 12

[மணி பதினொன்றரைக்கு மேல் ஆகிவிட்டது. ஆனலும் வசந்தாவுக்குப் படுக்கக்கூடத் தோன்றவில்லே. தன் தந்தை சுந்தரத்தை வீட்டை விட்டுத் துரத்தி விட்டதையும், செல்லம்மாளைப் பிடித்துத் தளளினதையும் தன்னை அந்தக் கணேசருக்கே கலியாணம் செய்து கொடுக்கப் போவதாகச் சபதம் கூறியதையும் நினைத்து நினைத்துப் புகைந்து புகைந்து பொருமிக்கொண்டு, தன்னுடைய பிரகாசமான அறைக்குள் அமைதியில்லாமல் இருக்கிருள். சிறிது நேரம் கலேயைத் தாங்கவிட்டுக் கொண்டு நாற்காலியில் உட்கார்ந்திருப்பதும் உடனே எழுந்து சாளரத்தண்டை போவதும், சுற்றிச் சுற்றி அறைக்குள் நடப்பதும், மீண்டும் உட்காருவதும், இப்படியாக இருந்து கொண்டிருக்கிருள். அந்தச் சமயத்தில் சுந்தரம் மெதுவாகக் கதவைத் தட்டுகிருன். அந்த நேரத்தில் அங்கே தன்னுடைய தந்தையைத் தவிர வேறு யாரும் வரமுடியாது என்ற நினைப்பில் வசந்தா மிக்க விசனக் குரலில்]

வச : என்ன அப்பா இன்னேரத்திலும் ?

சுந் : அப்பா அல்ல. நான் வந்திருக்கிறேன். ரொம்ப அவசரம் கதவைத் திற.

(அப்பா அல்ல என்ற உடன் வசந்தா கதவைத் திறக்கிருள். சுந்தரத்தைக் கண்டதும்)

வச : ஆ ! நீங்களா ! இன்னேரத்தில் இங்கே எப்படி வரமுடிந்தது !

(தன்னையே மறந்து உரக்கப் பேசுகிருள்.)

சுந் : சத்தம் போடாதே. மிகவும் ஆபத்தான சமயம்.

வச : என்ன ஆபத்து ?

சுந் : சொல்லுகிறேன்.....உன் தந்தை எங்கே? முதலில் அதைச் சொல்லு.

வச : அவர் அவருடைய அறையில் தூங்கிக் கொண்டிருப்பார்.

சுந்: உன் தாயார்?

வச: என் தாயாரை எங்கப்பா மாலை நாலு மணிக்கே என் கல்யாண முகூர்த்த நாளை நிச்சயித்துவிடச் சொல்லி கணேசர் ஊருக்கு அனுப்பியிருக்கிறார்.

சுந்: சரி, அம்மா இப்போது இந்த வீட்டில் இல்லையே?

வச: இல்லை. ஏன்?

சுந்: அவர் இல்லாதது நல்லதுதான். உடனே உன் தந்தையும் நீயும்—இந்த க்ஷணமே—இந்த வீட்டை விட்டு வேறு எங்கேயாவது ஓடி ஒளிந்து கொள்ளவேண்டும். இன்னும் கொஞ்ச நேரத்தில் கொள்ளைக்காரர்கள் இந்த வீட்டுக்குள் நுழைந்து உன் தகப்பனாரைக் கட்டிப் போட்டு அவருடைய இரும்புப் பெட்டிகளிலுள்ள ஆஸ்திகளை யெல்லாம் எடுத்துக் கொண்டு உன்னையும் தூக்கிக்கொண்டு போய்விட ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இதோ அவர்கள் வந்துவிடப் போகிறார்கள்.

வச: ஐயோ அப்படியா! நம்ம சிப்பாய்கள் அவர்களைத் தடுக்க முடியாதா?

சுந்: நம்ம சிப்பாய்களும் கொள்ளைக்காரர்களுடன் சேர்ந்து கொண்டார்கள் போல் இருக்கிறது. இந்தச் சமயத்தில் ஒரு சிப்பாய்கூட இங்கே காவல் இல்லை. ஊம்.....வசந்தா நீட்டிக் கொண்டிருக்க நேரமில்லை. உடனே உன் தந்தையை எழுப்பி விஷயத்தைச் சொல்லிப் புறப்படச் செய். இல்லாவிட்டால் அவருடைய உயிருக்கே மோசம் வந்தாலும் வரும். ஓடு..... சீக்கிரம்.

(சுந்தரத்திடத்தில் பரிபூரண நம்பிக்கையுள்ளவள் ஆனதால் மறு பேச்சில்லாமல் வசந்தா தன் தந்தை தூங்கிக் கொண்டிருந்த அறைக்கு ஓடுகிறாள். சுந்தரமும் பின்னால் போகிறான். செங்கோடன் சற்று எட்டவே போகிறான்.)

வச: அப்பா! அப்பா! கதவைத் திறங்கள்.....கதவைத் திறங்கள்.

(என்று கதவைப் படபடவென்று தட்டுகிறாள். நல்லப்பர் உள்ளே படுக்கையில் திடுக்கிட்டு விழித்தபடியே)

நல்: யார்ரா அது? என்ன அவஸ்தி! இப்படி வந்து தூக்கத்தைக் கெடுக்கிறீர்கள்.

வச: அப்பா! அப்பா! ரொம்ப அவசரம், கதவைத் திறங்கள்.

நல்: (வசந்தாவின் குரலை அறிந்து) யார் வசந்தாவா! என்ன

அவசரம்? உன் காதலனுக்கு சிபார்சு பேச்ணுமா?
(என்று சொல்லிக்கொண்டே விளக்குகளை முடுக்கி வெளிச்ச மூண்டாக்கிக் கொண்டு கதவைத் திறக்கிறார்.)

வச: அப்பா! நமக்கு சொம்ப அபாயம் வந்துவிட்டது.

நல்: என்ன அபாயம்? (என்று வாசலுக்குள் தலையை நீட்டியவசந்தாவின் முகத்தைப் பார்க்கிறார். வசந்தாவுக்குப் பின்னல் வெளிச்சமில்லாத இடத்தில் யாரோ ஒருவன் நிற்பதை அறிந்து, அவன் நஞ்சப்பனுகத்தான் இருக்குமென்று எண்ணிக் கொண்டு) பின்னல் யார் நஞ்சப்பனு? டேய் நஞ்சப்பா, என்னுடா என்னுமோ அபாயமாமே, என்ன?

வச: அது நஞ்சப்பனல்ல.

நல்: நஞ்சப்பனல்லவா! பின் யாரது?.....இப்படி வரச் சொல்லு.

(சுந்தரம் வெளிச்சத்துக்கு வந்து வணங்குகிறான்.)

நல்: டேய் ராஸ்கல்! உன்னை யார் இங்கே வரச்சொன்னது? எப்படி இன்னேரத்தில் என் வீட்டுக்குள் நுழைந்தாய்? போடா கழுதை. போ வெளியில். போறியா உன்னை இப்போதே இங்கேயே சுட்டுத் தள்ளணுமா
(என்று முன்னல் தாவுகிறார்.)

வச: (குறுக்கிட்டு தந்தையின் முழங்கால்களை கட்டிக் கொண்டு) அப்பா! நமக்கு வந்திருக்கிற அபாயத்தைச் சொல்லத்தான் அவர் வந்திருக்கிறார். விஷயத்தை விசாரிக்காமல் கோபிக்கிறீர்களே.

நல்: விஷயமா! விஷயம் புரிஞ்சு போச்சு...கதவைத் தட்டினது நீ என்று தெரிந்த போதே...இதற்குத்தான்...இந்த அயோக்யப் பயலுக்கு சிபார்சு பேசத்தான்...வந்திருப்பாய் என்று நான் எண்ணினது சரியாய்ப் போச்சு. சரி, சரி...

வச: அப்பா இவருக்கு சிபார்சு பேச—இன்னேரத்திலா இப்படித்தானு—இவரையும் கூட்டிக் கொண்டா நான் வருவேன்? சொல்லுவதைக் கொஞ்சம் கேளுங்கள், கோபிக்க வேண்டாம். தாமசமானால் நீங்களும் நானும் உயிரிழக்க நேரும்.

நல்: நானு உயிரிழப்பேன்? எதற்காக? இவன் அதற்குத்தான் வந்திருக்கிறானு?

வச: அப்பா கொஞ்சம் கிருபை செய்து அவர் சொல்லுவதைக் கேளுங்கள்.

நல்: என்னத்தைக் கேட்கிறது?
(இதுவரை பேசாமலிருந்த சுந்தரம் முன்னல் வந்து)

சுந் : இன்னும் அரை மணி நேரத்துக்குள் கொள்ளைக் கூட்டத் தார் இந்த வீட்டுக்குள் புகுந்து தங்களைக் கட்டிப்போட்டு தண்டவாளப் பெட்டிகளிலுள்ள ஆஸ்திகளை யெல்லாம் அபகரித்துக் கொண்டு வசந்தாவையும் தூக்கிக் கொண்டு போகப் போகிறார்கள்.

நல் : டேய்! யார்கிட்டே இந்தக் கதையளக்கிறாய்? கொள்ளைக் கூட்டத்தாரா! என் வீட்டுக்குள்ளேயா!.....நீதான் அந்தக் கொள்ளைக்காரன். இவனை கைக்குள்ளே போட்டுக்கொண்டு எப்படியோ இந்நேரத்தில் என் வீட்டுக்குள் புகுந்துவிட முடிந்தது; உன்னைத் தவிர வேறு எந்தக் கொள்ளைக்காரன் என் சிப்பாய்களின் காவலைக் கடந்து உள்ளே வந்துவிட முடியும்?

சுந் : ஐயோ உங்கள் சிப்பாய்கள் எல்லாரும் கொள்ளைக்காரருடன் சேர்ந்து கொண்டார்களே! அதைத்தானே தங்களிடம் சொல்ல வந்தேன். கொஞ்சம் வெளியில் எட்டிப் பாருங்களேன். ஒரு சிப்பாய்கூடக் காவல் இல்லையே.

நல் : இல்லையா! டேய்! யாரை ஏமாற்றப் பார்க்கிறாய்?

சுந் : வீரபத்ரனும் இங்குள்ள எல்லா சிப்பாய்களும் கொள்ளைக் காரர்களுடன் சேர்ந்து எங்கேயோ போய்விட்டார்கள்.

நல் : நிஜமாகவா?

சுந் : சத்தியமாகச் சொல்லுகிறேன். தாங்களே வெளியிற் போய்ப் பாருங்கள். நான் சொல்லுவது பொய்யாக இருந்தால் தாங்கள் சொன்னது போலவே என்னைச் சுட்டுக் கொன்று விடுங்கள்.

நல் : (திடுக்கிட்டு) அப்படியா!.....வசந்தா! காலைவிடு. போய்த் தான் பார்க்கிறேன்.

(அதுவரை நல்லப்பருடைய முழங்கால்களைக் கட்டிக் கொண் டிருந்த வசந்தா கால்களை விட்டு எழுந்திருக்கிறாள். நல்லப்பர் மாடியை விட்டு கீழே வேகமாகப் போகிறார். நஞ்சப்பனைக் கூவி கதவைத் திறக்கச் சொல்லுகிறார். நஞ்சப்பன் அங்கில்லை. நல்லப்பர் தாமே கதவைத் திறந்து கொண்டு வெளியே வருகிறார். விடி விளக்குகள் மட்டும் எப் போதும்போல் எரிந்து கொண்டிருக்கின்றன. வழக்கமாக விடிகிற வரைக்கும் தலைவாசலுக்கருகில் இரண்டு சிப்பாய் கள் உலாவிக்கொண்டே பாரா கொடுப்பார்கள். அவர்கள் அங்கில்லை யென்பதை நல்லப்பர் அறிந்தார். அந்த உள் பிராகாரத்தில் பல இடங்களிலும் அங்கங்கே இருக்கவேண்டிய சிப்பாய்கள் இருக்கவேண்டிய இடத்தையும் பார்க்கிறார். காவலே இல்லை. வெளியே கேட் பக்கமாகப் போகிறார்.

இந்தச் சமயத்தில் நஞ்சப்பன் எதிரில் வருகிறான். அவன் தன் மனைவியைப் பாம்பு கடித்துவிட்டதென்று வீட்டுக்குப் போக வெளிக் கேட்டுக்குப் போனான். வழக்கமாக வெளியில் பாரா இருப்பவர்கள் அப்படி யாராவது உள்ளேயிருந்து வெளியே போகவேண்டுமென்று சொன்னால் உடனே கதவைத் திறந்து விடுவார்கள். அப்படிக் கூப்பிட்டுப் பேசுவதற்கென்று அந்த பெரிய வெளிக் கதவில் ஒரு சிறு துவாரம் உண்டு. அந்தத் துவாரத்தை உள்ளேயிருந்துதான் திறக்கவும் மூடவும் முடியும். அதன் வழியாக வெளியில் இருப்பது யார் என்றும் பார்க்கலாம். நஞ்சப்பன் காவலாளிகளைக் கூப்பிட்டுக் கூப்பிட்டுப் பார்த்தான்; பதிவில்லை. துவாரத்தில் கண்ணைவைத்துப் பார்த்தான். பாராக்கார சிப்பாய்கள் இல்லை. கதவு மட்டும் வெளியில் பூட்டப்பட்டிருக்கிறது. நாலா பக்கமும் ஓடிக் கத்திக் கத்திப் பார்த்தான், பதிலில்லை. பல இடங்களிலும் இருக்கவேண்டிய காவற்காரர்களில் ஒருவனுவது காணப்படவில்லை. பாம்பு கடித்துவிட்ட மனைவிக்கு உதவி செய்யப் போகமுடியவில்லையே என்ற வேதனையுடன், எஜமானிடத்தில் சொல்லலாமென்று வருகிறான். அவனை நல்லப்பர் கண்டார்.)

நல்: ஏண்டா, நஞ்சப்பா எங்கே போயிருந்தாய்?

நஞ்: எம் பெண்டாட்டியைப் பாம்பு கடிச்சிடிச்சிங்களாம், எஜமானே. ஊட்டுக்குப் போய்ப் பார்த்துட்டு வரலாமென்று போனேன். கேட் பூட்டியிருக்குது திறந்துவிடச் சிப்பாய்களைக் காணமே!

நல்: சிப்பாய்கள் இல்லையா?

நஞ்: ஒருத்தன்கூட இல்லிங்களே. இங்கே உள்ளே இருக்க வேண்டிய சிப்பாய்களைக்கூட ஒரு எடத்திலும் காணுங்களே. ஐயோ! எம் பொண்டாட்டிக்கு என்னமா இருக்குதோ, இன்னேரம் செத்துபோயிட்டாளோ என்னுமோ—தெரியிலிங்களே.

(என்று தேம்புகிறான். நல்லப்பருக்குப் பின்னல் வந்த சுந்தரமும் செங்கோடனும் தமக்குள் சிரித்து)

சுந்: நஞ்சப்பா உன் பெண்சாதியைப் பாம்பு கடிக்கவில்லை. பயப் படாதே. நீ உடனே கதவைத் திறக்க வேணும் என்று நான்தான் அப்படிச் சொல்லச் சொன்னேன்.

(என்றான். அதைக்கேட்டுக் கொண்டே நல்லப்பர் வெளி கேட்டுக்குப் போய் அதில் அமைக்கப்பட்டிருக்கிற சிறு துவாரத்தின் மூடியை அகற்றி துவாரத்தின் வழியாகப் பாராக்கார சிப்பாய்கள் வழக்கமாக இருக்க வேண்டிய இடத்தைப் பார்க்கிறார். அங்கே தன்னுடைய சிப்பாய்கள் இல்லை. அதற்குப் பதிலாக அங்கே யாரோ புது மனிதர்கள் அநேகம் பேர் பலவித ஆயுதபாணிகளாகப் பதுங்கி நிற்கிறார்கள்.

அதைக் கண்டதும் நல்லப்பர் தன்னையறியாமல் 'ஐயோ' என்று நடுங்கி உடனே துவாரத்தை மூடிவிட்டு சுந்தரத்தினிடம் ஓடிவந்து சுந்தரத்தின் கையைப் பிடித்துக் கொண்டு கிலியினால் பேச வாய் வராமல் நடுங்குகிறார். செல்வச் செருக்கினாலும், தன்னுடைய சிப்பாய்களின் காவலை யாரும் கடக்க முடியாதென்ற களிப்பினாலும் சர்க்கார் அதிகாரிகளிடத்தில் தனக்கிருந்த செல்வாக்கினாலும் யாருக்கும் எதற்கும் அஞ்சாதவர் போல வீராப்புகள் பேசுவாரென்றாலும் நல்லப்பர் ஒரு கோழை.)

நல்: ஐயோ! சுந்தரம் அவர்கள் வந்து விட்டார்கள். யாரோ கேட்டுக்குப் பக்கத்தில் வந்து நிற்கிறார்கள்.

(என்று சுந்தரத்தின் கையைப் பிடித்த நல்லப்பர், ஒரு கையை நீட்டி வெளிக் கேட்டைக் காட்டி முகத்தில் அச்சம் தேங்க இன்னொரு கையினால் சுந்தரத்தை வீட்டுப் பக்கம் இழுக்கிறார். குறிப்பை அறிந்து கொண்ட சுந்தரம் செங்கேடனுக்கும் நஞ்சப்பனுக்கும் வாய் பேசாமல் வரும்படி ஜாடை காட்டிவிட்டு நல்லப்பரைக் கூட்டிக் கொண்டு வெகு வேகமாக வீட்டுக்குள் நுழைகிறான். வாசலில் வசந்தா இவர்களை எதிர்பார்த்து நின்று கொண்டிருக்கிறாள். உடனே சுந்தரம் வசந்தாவைப் பார்த்து)

சுந்: வசந்தா, நிற்க நேரமில்லை. உடனே ஓடி உனக்கு வேண்டிய சில துணிமணிகளையும் உன் நகைகளையும் ஒரு மூட்டை கட்டு. இதோ நாங்கள் வந்துவிட்டோம்.

(வசந்தா மாடிக்கு ஓடுகிறாள்.)

(சுந்தரம் அடுத்த வேலையாகத் தலைவாசலின் கதவை மூடி தாழ்ப்பாக்களை வெகு அழுத்தமாகத் தள்ளிவிட்டு அருகிலிருந்த ஒரு கனமான பெரிய சலவைக்கல் மேஜையை நான்கு பேருமாகப் பிடித்து கதவுக்குச் சேர்ந்தாற்போல் வாசலின் குறுக்கே வைக்கச் செய்கிறான். அந்த மேஜையின்மீது இரண்டு கனமான காற்காலிகளையும் தூக்கி வைத்துவிட்டு எல்லாருமாக மாடிக்குப் போகிறார்கள். மாடிக்குப் போனதும் நல்லப்பர் சுந்தரத்தின் இரண்டு கரங்களையும் பிடித்துக் கொண்டு)

நல்: அப்பா சுந்தரம், இந்தச் சமயத்தில் நீதான் எங்களுக்குத் தெய்வம். அவர்கள் வந்து விட்டார்களே, என்ன பண்ணலாம் சொல்லு. எப்படியாவது காப்பாற்று. வசந்தாவை உனக்கே கன்னிகாதானமாகத் தந்துவிடுகிறேன்.....நீயே அவளைக் கல்யாணம் செய்துகொள்.

சுந்: (வணக்கத்துடன்) அதெல்லாம் பேச நேரமில்லை. தாங்கள் தயவு செய்து உடனே தங்கள் ரிவால்வரையும் வேண்டிய மட்டும் பணமும் எடுத்துக் கொண்டு புறப்படுங்கள். நான்

வழி சொல்லுகிறேன். உம். சீக்கிரம் அவர்கள் கதவை உடைத்துக் கொண்டுதான் உள்ளே வரவேண்டும். அதற்குள் நாம் எங்கேயாவது போய்விட வேண்டும். ஊம் தாமதிக்க நேரமில்லை.

(நல்லப்பர் வெகு வேகமாக அங்குமிங்கும் ஓடி பல வேலைகளை விரைவாகச் செய்கிறார். முதலில் தன் ரிவால்வரை எடுத்து இடுப்பில் சொருகிக் கொள்ளுகிறார். தண்டவாளப் பெட்டிகளின் சாவிக் கொத்தை எடுத்து ஒரு பெட்டியைத் திறந்து ஏராளமான பணம் நோட்டுகளாக எடுத்து கச்சைப் பையில் வைத்து இடுப்பில் கட்டிக் கொள்ளுகிறார். சட்டையை மாட்டுகிறார். இன்னும் பணத்தை எடுத்து சட்டைப் பைக்குள் நிணித்துக் கொள்ளுகிறார். ஒவ்வொரு தண்டவாளப் பெட்டியும் சரியாகப் பூட்டப்பட்டிருக்கிறதா என்று இழுத்துப் பார்க்கிறார். சாவிகளைச் சட்டையின் உள்ஜேப்பில் போட்டுக் கொள்ளுகிறார். கடைசியாக மேல் வேஷ்டி, கைத்தடி, மேஜையின் மீதிருந்த மூக்குக் கண்ணாடி முதலிய வற்றை எடுத்துக் கொண்டு காவில் செருப்பை மாட்டிக் கொண்டு தயார் ஆகிவிட்டார். நல்லப்பர் இந்த வேலையில் இருக்கும்போது சுந்தரம் சும்மா இருக்கவில்லை. நல்லப்பருடைய மேஜை மேல் இருக்கிற டெலிபோனை எடுத்து நம்பரைத் திருப்பிவிட்டு, ஏழு மைல் தூரத்திலிருக்கிற பெரிய போலீஸ் கச்சேரியைக் கூப்பிடுகிறான்.)

சுந்: ஹல்லோ!.....யார்.....சப் இன்ஸ்பெக்டரா?.....
.....

சுந்: ஹெட்கான்ஸ்டெபிளா, சொம்ப சரி...நான் நல்லப்பருடைய வீட்டிலிருந்து பேசுகிறேன்.....சுந்தரம் பேசுகிறேன்..... ஆமாம். ஆமாம்.....நல்லப்பருடைய காரியதரிசி சுந்தரம் தான்.....நல்லப்பருடைய வீட்டுக்குள் கொள்ளைக்காரர்கள் புகுந்து விட்டார்கள்.....ஆமாம் புகுந்த மாதிரிதான்..... முதல் கேட்டண்டை வந்து விட்டார்கள். உடைத்துக் கொண்டு உள்ளே நுழைகிற சமயம்.....ஆமாம்.....உடனே .....ஆமாம்.....ஆயுதம் தாங்கிய போலீசை.....ஆமாம் ஆமாம.....மோட்டாரில் அனுப்புங்கள். க்ஷணம்கூட தாமதம் கூடாது. வெகு ஆபத்தான நிலைமையில் இருக்கிறோம்.....சரி .....சரி.....சொம்ப வந்தனம். உடனே அனுப்புங்கள்.

(தன் பயணத்தைத் தயார் செய்து கொண்டு சுந்தரத்தை ஏசி வந்த நல்லப்பர் சுந்தரம் போலீசுக்கு டெலிபோன் பேசுவதைக் கேட்டு)

நல்: ஆயுதம் தாங்கிய போலீஸ் படை வந்து விடுமல்லவா?

சுந்: அது வந்தாலும் சரி, வராவிட்டாலும் சரி. நாம் அதைப் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. போவோம். வேண்டிய தெல்லாம் எடுத்துக் கொண்டீர்களா?

நல் : இவ்வளவு போதும். பணம் வேண்டிய மட்டும் கையிலிருக்கிறது.

(இந்தச் சமயத்தில் தன் அறைக்குப் போன வசந்தா தன்னிடம் இருந்த நகைகளையும் ரொக்கப் பணத்தையும் ஒரு பைக்குள் போட்டு இடுப்பில் சொருகிக் கொண்டாள். இரண்டொரு புடவைகளையும் ரவிக்கைகளையும் சிறு மூட்டையாகக் கட்டிக் கையில் பிடித்துக் கொண்டு சுந்தரமும் நல்லப்பரும் இருந்த இடத்துக்கு வருகிறாள். அறைக்கு வெளியே நஞ்சப்பனும், செங்கோடனும் காத்திருக்கிறார்கள். நஞ்சப்பன் விவரம் தெரியாமல் விழிக்கிறான். செங்கோடன் விரைவாக வீட்டை விட்டுப் போய்விட வேணும் என்று துடிக்கிறான். நல்லப்பர் தன் அறையைப் பூட்டுகிறார்.)

நல் : சரி. எங்கே போகலாம்? வீட்டைவிட்டு எப்படி வெளியில் போவது?

நஞ்ச : நந்தவனத்துப் பின் கதவைத் திறந்து காட்டுக்குள் போய் ஆலம்பாடிக்கு போலாங்க.

செங் : ஐயோ! சிப்பாய்களும் அந்தக் கொள்ளைக்கார வீராசாமியும் ஆலம்பாடிக்குத்தான் போயிருக்கிறாங்க. அதோட நந்தவனத்துக்குப் பின்னால் மலைக்குப் போகிற பாதையில் கொள்ளைகாரப் பசங்க ரொம்பப் பேரு இருப்பாங்க.

சுந் : நான் வழி சொல்லுகிறேன். என் பின்னால் வாங்க. இருட்டில் ஜாக்ரதையாகப் போக வேண்டும்.

நல் : மின்சாரக் கைவிளக்கை எடுத்துக் கொள்ளலாமே?

சுந் : ஐயோ, அது வேண்டாம். அது நாம் இருக்கும் இடத்தைக் காட்டிக் கொடுத்து விடும். மெதுவாக எல்லாரும் என்பின் வாருங்கள்.

(எல்லாரும் சுந்தரத்தைப் பின்பற்றி மாடியிலிருந்து பின் கட்டுக்குப் பெண்கள் இறங்குகிற படிக்கட்டுகளின் வழியாக சமையல் கட்டுக்குப் போகிறார்கள்.

இந்தச் சமயத்தில் கொள்ளைக்காரர்கள் வெளி கேட்டைத் திறந்து கொண்டு, வீட்டின் தலைவாசலுக்கு வந்து, அதனுள் புக வழியில்லாமல் அதை உடைக்கிறார்கள். அந்தச் சத்தம் இவர்கள் காதில் விழுகிறது.)

சுந் : வாசற் கதவை உடைக்கிறார்கள். அது உடைபட்டு இவர்கள் உள்ளே நுழைவதற்குள் நாம் போய்விட முடியும்.

(சிறு வயது முதல் நல்லப்பருடைய வீட்டில் பழகினவனதால் சுந்தரம் அந்த வீட்டின் அமைப்பையும் அதன் ஒவ்வொரு பாகத்தையும் நன்றாக அறிவான்.

சமையல் கட்டின் கோடியில் ஒரு கதவு உண்டு. அந்தக் கதவை அநேமாகத் திறப்பதில்லை. உட்பக்கத்தில் தாழிட்டே இருக்கும். அந்த கதவுக்கடுத்தாற்போல் வீட்டின் குப்பை களையும் பசுக்களின் சாணத்தையும் கொட்டுகின்ற ஒரு பெரிய குழி. வருஷத்துக்கு ஒரு தரம் குப்பைகளை வாரி வயலுக்குக் கொண்டு போவதற்காக அதைத் திறந்து விடுவ துண்டு. மற்ற நாளெல்லாம் மூடியே கிடக்கும். வீட்டுப் பக்கத்திலிருந்து அந்தக் குழிக்குள் இறங்கப் படிகளுண்டு. ஆனல் அதிலிருந்து மற்ற பக்கங்களில் ஏற வழியில்லை. குழி ஒரு ஆள் ஆழத்துக்குமேல் இருக்கும். அந்தக் குழிக் கப் பால் எதிர்ப்புறத்தில் ஒரு தென்னந் தோப்பு, அதற்கப்பால் வயல்கள். மற்ற இரண்டு பக்கங்களில் ஒரு பக்கம் மாட்டுக் கொட்டத்தின் உயரமான சுவர். இன்னொரு பக்கம் உபயோகத்திலில்லாத பழைய குதிரை வண்டிகள் இருக்கிற காடிகானுவின் சுவர்.

சுந்தரம் அந்தக் குப்பைக் குழியின் கதவைத் திறக்கச் செய்தான். எல்லாரும் குப்பைக் குழிக்குள் இறங்கினர்கள். செங் கோடனை ஒரு மூலையில் நிற்கச் சொல்லி அவன் தோளின் மீது ஏறி சுந்தரம் முதலில் எதிரிலுள்ள மேட்டில் ஏறிக் கொண்டான். நல்லப்பரிடம் சொல்லி வசந்தாவைத் தூக்கி விடச் சொல்லுகிறான். வசந்தா தன்னிடமிருந்த புடவை மூட்டையை நஞ்சப்பனிடம் கொடுத்துவிட்டு தந்தையின் உதவியால் ஏறுகிறாள். சுந்தரம் மாட்டுக் கொட்டத்தின் சுவரில் மார்பை அழுத்திச் சாய்ந்து கொண்டு வசந்தாவின் கையைப் பிடித்து மேலே இழுத்து விட்டான். நல்லப்பர் செங்கோடன் மேல் ஏறி மேலே போவதற்கு முயன்று பார்த்தார். அவரால் முடியவில்லை. பிறகு செங்கோடன் நல்லப்பருடைய இரண்டு துடைகளுக்கும் மத்தியில் கழுத் தைக் கொடுத்து அவரைத் தூக்கினான். அவர் சாய்ந்து விழுந்து விடாதபடி நஞ்சப்பன் பிடித்துக் கொண்டான். பிறகு அவர் சுவரில் கையை ஊன்றிக் கொண்டு மெதுவாக செங்கோடன் தோளில் நின்றார். சுந்தரம் அவருடைய கையைப் பிடித்து வெகு பாடுபட்டு மேலே இழுத்துவிடு கிறான். அதன் பிறகு நஞ்சப்பனைத் தன்மீது ஏறி மேலே போகும்படி செங்கோடன் ஏவுகிறான். நஞ்சப்பனும் மேலே வந்தபின் அவனுடைய மேல் வேஷ்டியை மூறுக்கி ஒரு தலைப்பைச் சுந்தரமும் நஞ்சப்பனும் சேர்ந்து பிடித்துக் கொண்டு மற்ற தலைப்பை குழிக்குள்விட அதைப் பிடித்துக் கொண்டு செங்கோடன் வெகு சுலபமாக மேலே வந்து விடுகிறான்.

எல்லாரும் தென்னந் தோப்புக்குள் போகிறார்கள். மற்ற விடங் களில் நல்லப்பர் வீட்டைச் சுற்றிலும் காவலுக்கு உதவி யாகவே இரவு முழுதும் எரிந்து கொண்டிருக்கிற வெகு பிரகாசமான மின்சார விளக்குகளின் வெளிச்சம் வீசிக் கொண்டிருக்கும். ஆனல் தென்னந்தோப்பில் அது இல்லை.

அதனால் மறைந்திருக்கத் தகுதியான இடம். அந்தத் தோப்பின் நடுவில் ஒரு சிறிய சாலை. அந்தச் சாலையில் தங்கி அதற்கப்புறம் போகவேண்டிய இடத்தை ஆலோசிக்கலாம் என்று எல்லாரையும் சுந்தரம் சாலைக்கு அழைத்துப் போகிறான்.

வீட்டின் முன்புறத்தில் கதவுகளையோ மற்ற எவைகளையே உடைக்கிறது போலப் பலவிதமான சத்தங்கள் இவர்களுக்குக் கேட்கின்றன. இடையிடையே வெடிகுண்டோ துப்பாக்கியோ வெடிக்கிறது போன்ற ஓசைகளும் வருகின்றன)

நல் : . (சுந்தரத்தின் காதோடு) போலீஸ்காரர்கள் வந்து விட்டார்கள் போல் இருக்கிறது. துப்பாக்கிச் சத்தம் அதாகத் தானிருக்கும்.

சுந் : அது எதுவாயிருந்தாலும் நாம் இன்னும் அபாயத்தில் தான் இருக்கிறோம். நாம் பேசக்கூடாது. இங்கேயும் கோள்காக்காரர்களுக்கு உளவு சொல்லக்கூடியவர்கள் இருக்கலாம். இன்னும் கொஞ்ச் நேரத்தில் குப்பைத் தொட்டிக் கதவு திறந்திருப்பதைக் கண்டு நாம் தப்பி வந்த வழியை அநுமானித்து இங்கேயே வந்தாலும் வந்து விடுவார்கள். நாம் இங்கே இருக்கக் கூடாது.

செங் : இந்த வயலுக்குள்ள எறங்கி நேராப் போனா எங்க ஊட்டுக்குப் போயிடலாங்க. வாங்க.....

காட்சி 33

இடம்: மாந்தோப்பு; நல்லப்பர் வீடு

காலம்: இரவு 12 மணி

[ஆலம்பாடி முனியப்பன் கோவிலுக்கு அருகிலுள்ள கட்டிடத்துக்குள் வீரபத்ரனையும் மற்ற சிப்பாய்களையும் போட்டு பூட்டி விட்டு மோட்டாரில் வந்த வீராசாமி மாந்தோப்புக்கு வந்து வீட்டுக்குள் நுழைகிறான். அவனுடைய வருகைக்காக காத்திருக்கும் கருப்பண்ணன் முதலானவர்கள் வெகு ஆவலோடு வரவேற்கிறார்கள்.]

வீரா: எல்லாரும் வந்து விட்டார்களா?

கருப்: எல்லாம் தயார். போன காரியம் பழந்தானே!

வீரா: பழமில்லாமல் காயாக விட்டிடுவேனே?.....விடிகிற வரைக்கும் நல்லப்பர் வீட்டில் நாம் என்ன செய்தாலும் ஏனென்று கேட்க எவனுமில்லை.....

கருப்: பலே!.....அப்படிண்ணு தண்டவாளப் பொட்டி ஒண்ணு கூட பாக்கியில்லாமெ முறிந்து விடச்சொல்லி சப்ஜாடா கறந்துடலாம்.....புறப்படலாமா?

வீரா: முதலில் நல்லப்பர் வீட்டு வெளிகேட்டுக்குள் போக வேண்டியவர்கள் புறப்படுங்கள். அங்கே இப்போது யாரும் இல்லை. பயமில்லாமல் போகலாம். போய் கேட்டுக்குப் பக்கமாக இருங்கள். கேட்சாவி என்னிடம் இருக்கிறது...விட்டேனே? அதையும் மெள்ள வாங்கிக் கொண்டு வந்துட்டேன் பாரு...கருப்பண்ணு!

கருப்: ஓங் கெட்டிக்காரத்தனத்தைச் சொல்லவா வேணும்! இண்ணைக்கி நம்ம மனசார வேலை செய்யலாம். இப்படிச் சமயம் எப்பவும் கிடைக்காது...ஊம் போவோம்.

வீரா: முதலில் அவர்கள் போகட்டும். வீட்டுக்குள் நுழைய வேண்டியவர்களெல்லாம் அவரவர்கள் இருக்கவேண்டிய இடத்துக்குப் போகச் சொல்லி விடு.

(முதல் தொகுதி கொள்ளைக்காரர்கள் 50 பேர் போகிறார்கள். அவர்களைத்தான் நஞ்சப்பர் கேட் துவாரத்தில் பார்த்தது.)

கருப்: நல்லப்பன் வீட்டில் தானே இருக்கிறான்?

வீரா: வீட்டில் தான்...மாடியில் அவருடைய அறையில் சுகம்மா தூங்கிக் கொண்டிருக்கிறார்...

கருப்: கேட் சாவி தான் ஒங்கிட்டே இருக்குது. வீட்டுக்குள்ளே போக...கதவெத் திறப்பாங்களா?

வீரா: அதற்கெல்லாம் நானஞ்சு, நீ வா. அந்த நஞ்சப்பன் தான் முன்னால் படுத்திருப்பான். அவன் உடனே கதவைத் திறக்கும்படியான தந்தரம் நான் பண்றேன், நீ பயப்படாதே.

(உடனே கருப்பண்ணன் அங்குமிங்கும் திரும்பி அவனையும் இவனையும் கூப்பிட்டு உத்தரவுகள் செய்கிறான். உடனே அங்கே கூடியிருந்தவர்களுக்குள் பரபரப்பு உண்டாகிறது. எல்லாரும் வெளியில் வந்து அந்தந்தத் தலைவர்கள் அவரவர்கள் தொண்டர்களைக் கூட்டிக்கொண்டு போகவேண்டிய இடங்களுக்குப் போகிறார்கள்.

வீட்டுக்குள் நுழைந்து நல்லப்பரைப் பயமுறுத்திப் பெட்டிகளைத் திறக்கச் செய்யவும் வசந்தாவைத் தூக்கிச் செல்லவும் குறிப்பாகப் பொறுக்கியெடுக்கப்பட்டவர்களை சரிபார்த்துக் கொண்டு வீராசாமியும் கருப்பண்ணனும் புறப்படுகிறார்கள்.....நல்லப்பருடைய வீட்டின் வெளிக் கேட்டுக்கு வருகிறார்கள். முன்னால் வந்த தொண்டர்கள் ஏற்கனவே அங்கே நிற்கிறார்கள்.

வீராசாமி தன் சட்டைப் பையிலிருந்த சாவியை எடுத்து வெளிக் கேட்டைத் திறந்து விடுகிறான். முன்னால் வந்த தொண்டர்கள் உள்ளே புகுந்து வீட்டின் தலைவாசலுக்கு இருபுறத்திலும் சொல்லித் தந்தபடி. வெளிச்சமில்லாத இடங்களில் பதுங்கிக் கொள்ளுகிறார்கள். கருப்பண்ணனும் வீராசாமியும் தங்களுடைய ஸ்பெஷல் தொண்டர்களுடன் வீட்டின் தலைவாசலுக்கு வருகிறார்கள். வீராசாமி வெகு வேகமாகக் கதவண்டை சென்று அதைப் படபடவென்று தட்டி)

வீரா: நஞ்சப்பா! நஞ்சப்பா! உன் வீட்டுக்கு யாரோ நெருப்பு வைத்து விட்டார்கள். ஓடியா! ஓடியா! கதவைத்திற.....உன் வீடு வேகுது.....வா.....வா.....வா.

(என்று கத்துகிறான். கத்திவிட்டுக் கதவைத் திறப்பார்களென்று நிற்கிறான். திறக்கவில்லை. மறுபடியும் தட்டுகிறான். மின்னும் பலமாகக் கத்துகிறான்; பயனில்லை. உடனே தங்களுடைய ஏற்பாட்டின்படி பிகில் ஊதுகிறான். வெளியே அங்கங்கே இருந்த தொண்டர்களெல்லாம் ஓடிவந்து கூடுகிறார்கள். எல்லாரும் சேர்ந்து கதவை உடைக்கிறார்கள்.

கதவு மிகவும் பலமானது. வெகு பாடுபட்டு உடைக்கிறார்கள். கதவு உடைந்தும் உள்ளே நுழைய முடியவில்லை. உடைபட்ட சந்து வழியாக மின்சாரக் கை விளக்கின் வெளிச்சத்தால் மின்னல் மேஜை இருப்பதைக் கண்டு அதைக் கொஞ்சம் கொஞ்சமாக நகர்த்தி ஒரு ஆள் முதலில் உள்ளே போய் வழியைச் சரிப்படுத்துகிறான். பிறகு எல்லாருமாக நுழைந்து ராமநாதன் வழிகாட்ட மாடிக்கு ஓடுகிறார்கள். வீராசாமியும் கருப்பண்ணனும் முதலில் வசந்தா அறைக்குப் போகிறார்கள். அறை திறந்து கிடக்கிறது. உள்ளே நுழைந்து சந்து பொந்து, மூலைமுடுக்கு, மேஜை நாற்காலிகளின் அடியில் எல்லாம் தேடுகிறார்கள். வசந்தா இல்லை. பிறகு நல்லப்பருடைய அறைக்கு ஓடுகிறார்கள். அது பூட்டப்பட்டிருக்கிறது. பூட்டை உடைக்கிறார்கள். உள்ளே போய் வெளிச்சம் போட்டுத் தேடுகிறார்கள். நல்லப்பர் இல்லை.)

கருப்: என்ன வீராசாமி, அவர் இங்கே தூங்கிக்கிட்டு இருக்கிறாருண்ணு சொன்னியே. ஐயோ! இப்பிடியா நாம்ப ஏமாந்து போவோம்!

வீரா: அவர் பத்து மணி வரைக்கும் இங்கேதான் இருந்தார். அது நிச்சயம். யாரோ நம்முடைய ரகசியங்களை உளவறிந்து சொல்லியிருக்க வேணும். நாம் வருவதற்குள் எங்கேயோ போய் விட்டார்கள்.....வெளிகேட் பூட்டியிருப்பதால் இங்கேதான் வீட்டுக்குள் எங்காவது இருப்பார்கள்.

கருப்: சரி ஊட்டுக்குள்ளே தேடுவோம்.....வாங்க.

(எல்லாரும் அறையை விட்டு வெளியில் வருகிறார்கள்.)

கருப்: கொஞ்சம் இருங்க,வந்தது வந்தோம். கெடைக்கிற மட்டும் எடுத்துக்குவோம்.

(என்று மறுபடியும் உள்ளே போய் மேஜை மேலிருந்த கைக் கெடிகாரம்—பவுண்டன் பேனா முதலானவற்றைக் கருப்பண்ணன் எடுத்துக் கொண்டு அந்த மேஜையின் டிராயர்களை இழுக்கிறான். அவற்றை அவசரத்தில் நல்லப்பர் பூட்ட மறந்துவிட்டார். அதில் ரூபாய் நோட்டுகளும் வெள்ளி நாணயங்களும் சில்லறைகளும் இருந்தன. எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு அந்த ஆசையால் அங்குள்ள இரும்புப் பெட்டிகளையும் இழுத்துப் பார்க்கிறான். மிகவும் விலையுயர்ந்த இரும்புப் பெட்டிகளின் கைப்பிடிகளைக்கூட அசைக்க முடியவில்லை. உடைக்க முயலுகிறார்கள், முடியவில்லை. பிறகு அங்குள்ள துணிகள் சட்டைகள் குடை முதலிய பல பொருள்களையும் எட்டினமட்டும் அவனவன் இஷ்டப்படி எடுத்துக் கொண்டு, நாற்காலி, மேஜை, சோபாக்கள் இவற்றுக்கு நெருப்பு வைத்து விட்டு பின்கட்டில் இறங்கி ஒவ்வொரு அறையாகத் தேடு

கிறார்கள். சமையல் கட்டுக்குப் போகிறார்கள். அங்குள்ள அண்டா குண்டா கொப்பரை தவலை இவற்றிற்குள்ளும் கருப்பண்ணனே கையை விட்டுவிட்டுத் தேடுகிறான். சமையற்கட்டின் கோடியில் திறந்து கிடந்த கதவைப் பார்க்கிறார்கள். படிக்கட்டில் இறங்குகிறார்கள். குப்பைக் குழியில் வெளிச்சம் போட்டுப் பார்க்கிறார்கள். நல்லப்பர் செங்கோடன் தோளின் மீது ஏற முயன்றபோது அவர் காலிலிருந்த செருப்புகளைக் கழட்டிவிட்டு ஏறிப்பார்த்தார். ஏறமுடியாமல் தவித்துக் கொண்டிருந்த போது செங்கோடன் அவருடைய துடைகளுக்கு மத்தியில் தன்னுடைய கழுத்தைக் கொடுத்து தூக்கிவிட்டதால் செருப்புகள் அங்கேயே கிடந்தன. அதைப் பார்த்ததும் வீராசாமி)

வீரா : சரி பார்த்தாயா கருப்பண்ணு, இப்பத்தான் இந்த வழியில் தான் அவர்கள் போயிருக்க வேணும். ஏறுங்கள் எல்லாரும் அந்த மேட்டின் மேல். உடனே பிடித்து விடலாம்.

கருப் : புடிச்சாக்கா வசந்தாவைப் பத்தரப்படுத்திப்புட்டு அந்த நல்லப்பனை இழுத்துக்கிட்டு வந்து இரும்புப் பொட்டிகளைத் தொறந்து உடச் சொல்லி, பணம் காசு, நகை, நப்பு எல்லாத்தியும் ஒண்ணு கூடஉடாமல் கறந்துப்புடணும், என்ன ? மொதல்லே பணந்தான் முக்கியம். அதுக்கப்பறந்தான் மத்தப் பொறட்சி யெல்லாம்.

வீரா : சரி ஏறுங்கள்.

(மூலைக்கு மூலை ஏறுகிறார்கள்.)

காட்சி 34

இடம் : நல்லப்பர் வீடு, செங்கோடன் வீடு

காலம் : நள்ளிரவு

[தென்னந்தோப்புச் சாலைக்குள் சென்று சுந்தரம், நல்லப்பர், வசந்தா, நஞ்சப்பன், செங்கோடன் ஆகிய ஐவரும் பதுங்கினபின் நல்லப்பர் வீட்டில் கொள்ளைக்காரர்களின் ஆரவாரம் அதிகமாகின்றது. நல்லப்பரைக் கட்டிப்போட்டு இரும்புப் பெட்டிகளைத் திறந்துவிடச் சொல்லி ஆஸ்திகளையெல்லாம் அபகரித்துக் கொண்டு ஓசை செய்யாமல் வசந்தாவையும் கடத்திக் கொண்டு போய்விடலாம் என்று பூரண நம்பிக்கையுடன் வந்தார்கள். கருப்பண்ணனும் வீராசாமியும் தலை வாசற் கதவு தாழிடப்பட்டு குறுக்கே மேஜையும் தடையாக இருக்கும் என்பதை அவர்கள் எதிர் பார்க்கவில்லை. கதவை உடைத்துக் கொண்டு உள்ளே புகவேண்டி இருந்ததாலும் அப்படிப் புகுந்தும் நல்லப்பரும் வசந்தாவும் அங்கே இல்லாது போனதனால் தங்கள் ரகசியத் திட்டம் வெளியாகி விட்டதனால் கருப்பண்ணனுக்கு வந்த கோபத்துக்கும் வீராசாமிக்கு வந்த விசனத்துக்கும் கணக்கே யில்லை. அதனால் இனிமேல் சத்தம் செய்யாமல் ரகசியமாகச் செய்ய வேண்டியது ஒன்றும் இல்லாததால் கோபமும் கொதிப்புமாக கூச்சலிட்டு நல்லப்பர் வீட்டில் கண்ணுக்குப் பட்டதை யெல்லாம் உடைத்தும் கொளுத்தியும் நாசப்படுத்தினார்கள். சிலர் உத்தரவில்லாமலும் தங்கள் கையிலிருந்த வெடிகுண்டை வீசி வேட்டுக் கிளப்பினர்கள்.

வீட்டுக்குள் நல்லப்பரும் வசந்தாவும் .இல்லையென்பதையும் குப்பைக் குழியில் நல்லப்பருடைய வேலையுயர்ந்த பட்டுச் சொருப்புகள் இருந்ததனால் அவர் அந்த வழியாகத்தான் தப்பியோடியிருக்கிறார் என்பதையும் அறிந்த பின் அவர்களுக்குக் கொஞ்சநஞ்சமிருந்த அச்சம் அடக்கம் கூட அற்றுப் போய்விட்டது. மேலும் நல்லப்பருடைய இரும்புப் பெட்டியிலிருக்கிற ஏராளமான ரொக்கப் பணத்தைக் கைப்பற்றிய உடனே ஆளுக்கு ஆயிரக்கணக்கில் பணம் பங்கு கிடைக்கும் என்ற ஆசைக்காகவே அக்கூட்டத்தில் சேர்ந்த ஏழைப் பாமர மக்கள் ஏமாற்றத்தால் உண்டான ஆத்திரத்தில் கட்டுக் கடங்காத காலிகளாகிவிட்டனர். அதனால் குப்பைக் குழிக்கு வரும் போதே குழப்பமும் கூச்சலும் அதிகப்பட்டு விட்டது. அத்துடன் அவனவன்

கையில் வைத்திருந்த மின்சாரக் கை விளக்கை நினைத்த பக்க மெல்லாம் திருப்பி நல்லப்பரைத் தேடுவது போல வெளிச்சம் போட ஆரம்பித்தார்கள். அதனல் தென்னந் தோப்புச் சாளையிலிருந்த சுந்தரம் வரக்கூடிய அபாயத்தை உடனே உணர்ந்து)

சுந் : (செங்கோடன் தோளைத் தொட்டு காதோடு வாயாக) செங் கோடா, நீ உங்கள் வீட்டுக்குப் போகலாம் என்று சொன்ன வழியில் எங்களைக் கூட்டிக்கொண்டு போ. இதோ அவர்கள் இங்கேதான் வருவார்கள்...சீக்கிரம் போய்விட வேணும்...வா.

(என்ன, செங்கோடன் உடனே அந்தச் சாளையிலிருந்த ஒரு கனத்த மூங்கிற் கழியை உருவி இழுத்துக்கொண்டு)

செங் : என் பின்னலியே வாங்க.

(என்று காதோடு சொன்னன். மூங்கில் தடியுடன் செங்கோ டன் முதலிலும், அவனையடுத்து நல்லப்பரும், அவருக்குப் பின் வசந்தாவும் ஒருவரையொருவர் பிடித்துக்கொண்டு கொஞ்சதூரம் போனர்கள். அங்கே ஒரு முள்வேலி இருந்தது. செங்கோடன் அங்கே நின்று நஞ்சப்பன் கையை விட்டு விட்டு, மூங்கில் தடியினல் முள்வேலிக்கு மத்தியில் ஒரு வழி உண்டாக்குகிறன். முன் போலவே ஒருவரை யொருவர் பிடித்துக் கொண்டு முள்வேலியைக் கடந்து அங்கே நீரும் சேறுமாக இருந்த வயலில் இறங்கு கிறார்கள். அப்படி ஏழு எட்டு வயல்களைக் கடந்து ஒரு கருவேலங் காட்டில நுழைகிறார்கள். அதில் ஒரு கொடித் தடம். அது செங்கோடனுக்கு மிகவும் பழக்கமானது. கூடுமான வேகத்துடன் காலில் கல்லும் முள்ளும் உறுத்து வதையும் கவனிக்காமல் நடக்கிறார்கள். அப்படிச் சுமார் முக்கால் மைல் நடந்து ஒரு மேட்டில் ஏறுகிறார்கள். அங்கே செங்கோடன் வீடும் இன்னும் சுமார் நூறு வீடுகளும் உள்ள கிராமத்தில் இரண்டொரு வீடுகளில் மினுக்கிக் கொண்டிருக்கிற மங்கலான விளக்குகள் கண்ணுக்குப் படுகின்றன.

கொள்ளைக்காரர்கள் பின் தொடர்கிறது போன்ற ஓசைகளும் தூரத்திலிருந்து காதில் விழுகின்றன.)

நல் : ஐயோ சுந்தரம், அவர்கள் நம் பின்னல் வந்து பிடித்துக் கொள்வார்கள் போல இருக்கிறதே.

(என்று திரும்பித் திரும்பிப் பார்த்து நடுங்கிக் கொண்டு கால் இடறி விழுந்து விடுகிறர். சுந்தரம் அவரைக் கையைப் பிடித்துத் தூக்கி விடுகிறன். வசந்தா தந்தையின் காலைத் தடவிக் கொடுத்துத் தோளைப் பிடித்து நடக்க ஒத்தாசை செய்கிறள்.)

செங் : அதோ, எங்கள் வீடு வந்துட்டுது. அங்கே காளியம்மா வேண்டிய ஒச்சே சொல்லுவா. அங்கே போயி மத்தது பேசிக்கலாம். இங்கே தங்காதிங்க.

(என்று நஞ்சப்பன் கையை இழுக்கிறான். நல்லப்பர் தட்டுக் கெட்டு நடக்கிறார்.

கிராமத்தார் அயர்ந்து தூங்குகிறார்கள். செங்கோடன் வீட்டில் காளியம்மாள் மட்டும் கதவைத் தாழிட்டுக் கொண்டு கட்டிலின் மீது விழித்துக் கொண்டே உட்கார்ந்திருக்கிறாள். நல்லப்பருக்கும் வசந்தாவுக்கும் வரப்போகிற அபாயத்தைச் சுந்தரத்திடம் சொல்லிவிடச் சொல்லி செங்கோடனே அனுப்பினவள் அவளானதால் அதே விசாரமாக அவளுக்குத் தூக்கம் வராமல் கணவனுடைய வருகைக்காகக் காத்துக் கொண்டிருக்கிறாள். செங்கோடன் சுந்தரம் முதலானவர்களைக் கூட்டிக் கொண்டு தன்னுடைய வீட்டுக்கு வருவதற்குள் கொள்ளைக்காரர்கள் சமீபத்தில் வந்துவிட்ட சத்தம் கேட்கிறது. செங்கோடன் வெகு வேகமாகத் தன் குடிசைக் கதவண்டை வந்து தட்டுகிறான். தட்டின கையை எடுக்குமுன் காளியம்மாள் பாய்ந்து ஓடி கை விளக்கை எடுத்துக் கதவுக்குப் பக்கத்தில் வைத்துவிட்டுக் கதவைத் திறக்கிறாள். குபீரென்று செங்கோடன் உள்ளே புகுந்து)

செங் : காளியம்மா, வசந்தம்மாவும் சுந்தரமும் நல்லப்பரும் வந்திருக்கிறாங்க. அவுங்களே நீதான் எங்காச்சியும் மறைச்சி வச்சி காப்பாத்துணும். தோ புரச்சிக்காரனுங்க பின்னாலே தொரத்திக்கிட்டு வராங்க...சல்தி...சல்தி...கொஞ்சம் தாமுசமானு வந்து புடிச்சிக்குவாங்க...கொண்ணாலும் கொண்ணுப்புடுவாங்க...அவ்வளவு ஆத்தரமா வாராங்க.

(இதற்குள் நல்லப்பர் எல்லாருக்கும் முன்னால் குடிசைக்குள் வருகிறார். பிறகு மற்ற மூவரும் வசந்தா கடைசியாகவும் உள்ளே வருகிறார்கள். அபாய நிலைமையை நன்றாக அறிந்து கொண்ட காளியம்மாள்)

காளி : மூணு பேருதான் இந்த ஊட்டுக்குள்ளே ஒளிஞ்சிக்கலாம். வச்சந்தம்மா, சுந்தரம், பெரிய மொதலாளி மூணு பேரும் போக மத்தவங்களெல்லாம் வெளியே ஓடி வேறெ எங்காச்சியும் ஒளிஞ்சிக்கிங்கோ. (செங்கோடனைப் பார்த்து) நீயும் மச்சான்! வெளியே எங்காச்சியும் நம்ம தோட்டத்து சாலைக்காச்சிம் போயிடு.

(என்று எல்லாரையும் வெளியேற்றிக் குடிசைக் கதவைத் தாழிட்டுக் கொள்ளுகிறாள்.)

கல்: அம்மா, காளியம்மா! அவன்கள் கிட்டெ வந்துட்டாங்க. நீதான் காப்பாத்த வேணும்.

(என்று கைகால் நடுங்குகிறார்)

(சுந்தரம் ஒளிந்துகொள்ள அந்தச் சிறு வீட்டில் இடம் எங்கே இருக்கிறது என்று நாலாபக்கமும் பார்க்கிறான். வசந்தா பேசாமல் நிற்கிறாள்)

காளி: மொதல்லே வசந்தம்மா நீ வா.

(என்று வசந்தாவின் கையைப் பிடித்துக் கூட்டிக்கொண்டு சமைக்கிற வீட்டுக்கு விளக்கோடு போய் அங்கு வீட்டின் கதவுக்கு மேல் இருக்கிற அட்டாணியைக் காட்டி)

நான் கதவை அஞ்சுத்திப் புடிச்சிக்கிறேன்; நீ கம்பையிலே காலே வச்சி மேலே ஏறி உள்ளபோய் படுத்துக்க. நீ இருக்கிறது ஆருக்கும் கண்ணுக்குப் படாது.

(வசந்தா சிறிதும் அட்டியின்றி உடனே கதவின் மேல் ஏறி அட்டாணி மூலையில் பதுங்கிக் கொள்ளுகிறாள். காளியம்மாள் சமையல் வீட்டை விட்டு வெளியில் வந்து விளக்கை எடுத்து ஒரு மூலையில் இருந்த தானியம் கொட்டுகிற தொம்பையைக் காட்டி கல்லப்பரிடம்)

காளி: இது காலியா இருக்குது. உள்ள விசாலமாகவும் இருக்குது. எசமான் இந்தப் பொட்டிமேலே ஏறி தொம்பைக்குள் எறங்கி ஒளிஞ்சிகுங்கோ. கொஞ்ச நேரத்துக்குத்தானே சாமி...நேரமாச்சி—(என்கிறாள்.)

(எங்கேயாவது மறைந்து கொண்டாற் போதும் என்று தவித்துக் கொண்டிருந்த கல்லப்பர் உடனே முக்கி முரண்டிக் கொண்டு பெட்டியின் மீது ஏறி தொம்பைக்குள் இறங்குகிறார். சுந்தரமும் காளியம்மாளும் அவருக்குக் கை கொடுத்து ஒத்தாசை செய்கிறார்கள். தொம்பை அகலமான தொம்பை. வசமாக நல்லப்பர் உள்ளே இறங்கிய பின் அதைக் காளியம்மாள் மூடிவிடுகிறாள்...அந்தத் தொம்பைக்கு அருகில் அதற்கும் சுவருக்கும் மத்தியில் ஒரு சிறு சந்து. அதற்கு மூன்னாலிருந்த பெரிய பெரிய தவிட்டுப் பானைகளின் அடுக்கை இறக்கி அந்தச் சந்துக்குள் சுந்தரத்தை நுழையச் செய்து மூன் இருந்தது போலவே அந்தச் சந்தைப் பானைகளே அடுக்கி மூடி விடுகிறாள். அதன் பிறகு காளியம்மாள் தான் மூன் உட்கார்ந்திருந்த கட்டிலின் மீது அமர்ந்து காது கொடுத்துக் கவனிக்கிறாள். கொள்ளைக்காரர்கள் கிராமத்துக்குச் சமீபத்தில் வந்துவிட்ட கூச்சல் கேட்கிறது. கட்டுக்கு உட்படாத கூட்டமாகிவிட்டதால் அவனவன் நினைத்தபடி யெல்லாம் "உடாதே அந்தப் பணமூட்டை நல்லப்பனே" 'புரட்சி ஓங்குக' 'பணக்கார ஆதிக்கம் ஒழிக' என்றெல்லாம் கத்திக்கொண்டு வருகிறார்கள்.

கிராமத்துக்குச் சமீபத்தில் நல்லப்பர் கால் இடறி விழுந்த போது அவர் கையில் இருந்த கைத்தடி அவருடைய கையைவிட்டு அப்பால் விழுந்து விட்டது. பிறகு செங் கோடன் அவசரப் படுத்தியதாலும் கொள்ளைக்காரர்கள் சமீபத்தில் வந்துவிட்டார்கள் என்ற பயத்தினாலும் நல்லப்பர் அதை எடுத்துக்கொள்ள மறந்துவிட்டார்.

பின்னால் வந்த கூட்டத்தில் முன்னால் வந்த கருப்பண்ணன் வழி நெடுகத் தன் மின்சாரக் கைவிளக்கின் வெளிச்சம் காட்டிப் பார்த்துக் கொண்டே நடந்து வந்தான். அதனால் தங்கத்தி னால் பூண் கட்டி அலங்கரிக்கப்பட்டிருந்த நல்லப்பரின் கைத்தடி பள பளவென்று அவன் கண்ணிற்பட்டது. அதைக் கண்டு எடுத்துப் பார்த்ததும் அது நல்லப்பர் கைத் தடிதான் என்பதை அறிந்து கொண்டான். உடனே)

கருப்: வீராசாமி! அந்தப் பணமூட்டை நல்லப்பன் சிக்கிக்கிட் டான். இந்த ஊருக்குள்ளேதான் போயிருக்கிறான். இதோ பார் அவன் கைத்தடி.

(என்று கத்துகிறான். இந்தப் பேச்சு காளியம்மாள் காதில் விழுகிறது. அவள் துணுக்குற்று எழுந்திருக்கிறாள். கட்டிலில் தூங்கிக் கொண்டிருந்த தன் கடைசி மகள் மூன்று வயசுக் குழந்தையைத் தேள் கடித்தது போல நறுக் கென்று கிள்ளி விடுகிறாள்; அது வீறிட்டுக் கத்திக் கொண்டு விழித்து அழுகிறது. அந்தக் குழந்தையை இடுப்பில் தூக்கிக் கொண்டு வாசல் கதவைத் திறந்து கதவோரமாக உள்ளே உட்கார்ந்து கொண்டு விளக்கையும் எதிரே வைத் துக் கொண்டு கிள்ளின இடத்தைத் தடவிக் கொடுத்து குழந்தையைத் தேற்றிக் கொண்டிருக்கிறாள். குழந்தை ஓயாமல் பலமாக அழுகிறது.

நல்லப்பருடைய கைத்தடியைக் கண்டெடுத்த உடன் அவர் அந் தக் கிராமத்துக்குத்தான் வந்திருக்கிறார் என்றும் உடனே அவரைப் பிடித்துவிட வேணும் என்றும் எல்லாருக்கும் முன்னால் கிராமத்துக்குள் புகுந்த கருப்பண்ணன் குழந்தை யின் அழுகுரலைக் கேட்டுக் காளியம்மாள் வீட்டுப் பக்கம் வருகிறான். விளக்கு வெளிச்சத்துடன் கதவு திறந்திருப் பதைக் கண்டு வாசலுக்கருகில் வந்து காளியம்மாளைப் பார்க்கிறான். கருப்பண்ணன் வாய்திறக்குமுன்)

காளி: வாங்கையா...ஒண்ணுமில்லிங்க...கொளந்தையைத் தேளு கடிச்சிப் புடிச்சிங்கோ...காத்தோட்டமா கதவெத் தொறந்து புள்ளையைத் தேத்திகிட்டிருக்கிறனுங்க...சாமி! நீங்க யாரு?... தேளுகடிக்கு ஏதாச்சியும் பாடம் போடுவிங்களா? தெரிஞ்சா கொஞ்சம் போடுங்களேன், சாமி...(குழந்தையைத் தட்டிக் கொடுத்து) அளுவாதெடி என் கண்ணூ, இந்த ஐயா வந்தி ருக்கிறாரு...பாடம் போடுவாரு...நல்லாப் போயிடும். அளுவாதே.

கருப்: சரி...பாடம் போட்றேன்...மொதல்லே நாங்கேக்கிறத் துக்குச் சொல்லு...நல்லப்ப மொதலாளியும் அவன் மகளும் இப்ப இங்கே வந்தாங்களே...அவங்க எங்கே? அதைச் சொல்லு...பாடம் போட்றேன்.

காளி: ஆமாஞ்சாமி இப்பத்தான் கொஞ்சம் நேரத்துக்கு முன்னே...யாரோ ஒரு தடிச்ச மனுசரும்...ஒரு சிறு வயசுப் பொம்பளேயும்...இன்னும் ரெண்டு மூணு பேரும் இந்தப் பக்கமா போனுங்க...பெரிய மொதலாளி நல்லப்பரா அவுரு... இருட்லே தெரியிலிங்கோ...இப்பத்தான் தோ! அந்தப் பக்கம் போராங்க. போய்ப் பாருங்க.....

கருப்: எந்தப் பக்கம்?

காளி: இப்பிடியே நேராப் போங்க...அந்தக் கடைசி ஊட்டு பக்கம் போற வரைக்கும் கண்ணுக்குத் தெரிஞ்சுது. அப்புறம் தெரியி லிங்கோ. போங்க, அங்கெதான் இருப்பாங்க. இப்பத்தாம் போருங்க, சுருக்காப் போனிங்கன்னு புடிச்சிடுவிங்கோ.

(உடனே கருப்பண்ணனும் மற்றவர்களும் காளியம்மாள் கை நீட்டிக் காட்டின பக்கம் திபு திபு என்று போகிறார்கள்.

இதைச் செங்கோடனும் நஞ்சப்பனும் அந்தக் கோடி வீட்டுத் திண்ணைமேலிருந்து கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இரண்டு பேரும், நல்லப்பர் முதலானவர்களைக் காளியம்மாளிடம் விட்டு விட்டு வந்ததின் தாங்களும் எங்கே யாவது மறைந்து கொள்ள வேணும் என்று எண்ணமல் வருகிற கொள்ளைக்காரர்கள் ஒருக்கால் காளியம்மாள் வீட்டுக்குள் புகுந்து நல்லப்பர் முதலானவர்களைக் கண்டு பிடித்து விடுவார்களோ என்னவோ, அப்படி நேர்ந்து விட்டால் தங்களாலான உதவிகள் ஏதாவது முடிந்தால் செய்வதற்கு அங்கே இருக்க வேணும் என்று செங்கோடன் சொன்ன யோசனையின் மேல் தூரமாக மறைந்திருந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள். கொள்ளைக் கூட்டத்தார் காளியம்மாள் வீட்டுக்கு முன்னால் நிற்பதும் உள்ளே யிருந்த விளக்கின் வெளிச்சம் அவர்கள் மேல் படுவதும் தெரிந்தது. குழந்தையின் அழுகுரல் மட்டும் கொஞ்சம் கேட்டது. மற்றப் பேச்சுக்கள் கேட்கவில்லை.

இவர்கள் அப்படி பார்த்துக் கொண்டே இருந்தபோது அந்தக் கூட்டம் காளியம்மாள் வீட்டை விட்டு இவர்கள் இருந்த பக்கமாக வருவதைக் கண்டு உடனே செங்கோடனும் நஞ்சப்பனும் மறைந்து கொள்ள ஓடுகிறார்கள்.

ஓடும்போது நஞ்சப்பன் அதுவரையிலும் தானே வைத்துக் கொண்டிருந்த வசந்தாவின் புடவை மூட்டையை அந்த வீட்டுத் திண்ணையில் விட்டுவிட்டு ஓடிவிடுகிறான். குப்பைக்

குழியிலிருந்து மேட்டுக்கு வசந்தா ஏறும்போது வசந்தா வீடமிருந்து அதை நஞ்சப்பன் வாங்கிக் கொண்டான். அதன் பிறகு அதை அவனே கொண்டு வந்தான். இங்கே அந்த வீட்டுத் திண்ணை மேல் அதை வைத்து விட்டு எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தவன், ஓடும்போது அதை எடுக்க மறந்து விட்டான்.

கருப்பண்ணனும் வீராசாமி முதலானவர்களும் காளியம்மாள் குறித்த கடைசி வீட்டுக்கு வருகிறார்கள். அந்த வீடு அவ்வூர் கிராமமுன்சீப்பின் வீடு. பலமான வில்லைக் கட்டிடம். கல்லப்பரைப் போன்ற பணக்காரர் தங்குவ தற்கு அந்த ஊரில் அதுதான் சரியான இடம் என்று கருப்பண்ணனும் வீராசாமியும் நினைக்கும்படியான தோற்ற மூடையது. காளியம்மாளின் வீட்டைக் கடந்து அந்த வரிசையிலிருந்த சுமார் இருபது வீடுகளையும் எதிர் வரிசை யிலிருந்த வீடுகளையும் வெளிச்சம் போட்டுப் பார்த்துக் கொண்டே வந்த கருப்பண்ணனும் வீராசாமியும் கடைசி வீட்டண்டை நின்று வெளிச்சம் அடிக்கிறார்கள்.

திண்ணையில் ஒரு மூட்டை கிடந்தது தெரிகிறது. ஓடிப்போய் அதை வீராசாமி எடுக்கிறான். விலையுயர்ந்த புடவைகளைக் கண்டதும் அது வசந்தாவினுடைய மூட்டை என்பது நிச்சயமாச்சு. அதனால் வசந்தாவும் நல்லப்பரும் அந்த வீட்டுக்குள்ளேதான் இருக்கவேணும் என்று தீர்மானிக் கிறார்கள். அந்த மூட்டையைக் கருப்பண்ணன் வாங்கிப் பார்த்துத் தன்னிடமே வைத்துக்கொள்ளுகிறான்.)

வீரா : இது அந்த வசந்தாவின் புடவைகள்தான். ஆசாமிகள் இந்த வீட்டுக்குள்தான் இருக்கிறார்கள்.

கருப்: அதுக்கென்ன சந்தேகம்?...இந்தக் கைத்தடியைக் கண் டெடுத்தப்பவே அந்தப் பணமூட்டை சிக்கிக்கிட்டானுண்ணு தீர்மானமாத் தெரிஞ்சி போச்சே. சரி—கதவைத் தட்டு... இளுத்தாவெளியிலே—அவனை—கல்த்தாகுடுத்துக்கொண்டு போயி...அவன் தண்டவாளப் பொட்டிகளைத் தொறந்து உடைச் செய்யணும்.

(என்று கருப்பண்ணனே போய்க் கதவைத் தட்டுகிறான். முன்சீப்பு வீட்டில் அன்றைக்கு யாரும் இல்லை. குடும்பம் முழுதும் ஒரு கல்யாணத்துக்காக வேறு ஊருக்குப் போயி ருந்தார்கள். வெளியிலிருந்து பூட்டப்படுகிற உள் பூட்டால் கதவு தாழிடப் பட்டிருந்தது. வெளியில் வேறு பூட்டு இல்லை. அதனால் உள்ளே ஜனங்கள் இருந்து தாழிட்டது போலவே இருந்தது.)

கருப்பண்ணன் பலமுறை தட்டியும் உள்ளேயிருந்து பதிலும் வரவில்லை. கதவும் திறக்கப்படவில்லை. கருப்பண்ண னுக்கு எரிச்சலுண்டாகிறது.)

கருப்: யார்ராவன் ஊட்டுக்காரன்? மரியாதையாக் கதவெத் தொறக்கிறியா இல்லாட்டி ஊட்டுக்கு நெருப்பு வச்சியடிக்கு ணுமா? அப்பறம் அந்த நல்லப்பனோட ஊட்டுக்காரரும் சேர்ந்து வெந்து சாம்பலாக வேண்டியதுதான்.

(மறுபடியும் தட்டுகிறான். பதிலில்லை.)

வீரா: கதவை உடையுங்கள்.

யாரோ ஒரு குரல்: ஒடச்சிக்கிட்டு இருக்காட்டி என்னுங்க. அது நேரமாவும்...நெருப்பு வச்சா உள்ளே இருக்கிறவங்க எல்லாரும் தானு வெளியே ஓடியாராங்க.

கருப்: ஆமாம் அதுதான் சரி...கொளுத்து ஊட்டை. உருண்டடிச்சிக்கிட்டு ஓடியாராம் பாரு அப்பறம் அந்த நல்லப்பன்.

வீரா: கருப்பண்ணு! வசந்தா உள்ளே இருப்பதை கவனிக்காமல் நெருப்பு வைக்கச் சொல்லுகிறாயே?

ஒரு குரல்: ஏன்...நெருப்பு வச்சா அந்தம்மாளும்தானே ஓடியாரணும்...அவுங்க என்னு தூங்கிக்கிட்டா இருக்குறாங்க? இப்பத்தானெ உள்ளப் போனவங்க.

(இப்படிப் பேசிக் கொண்டிருக்கும் போதே கட்டுப்பாடில்லாத அந்தக் காலிக் கூட்டத்திலிருந்த சிலர் கேட்காமலேயே அந்த வீட்டுக்கு அடுத்த வீட்டுக்கு நெருப்பு வைத்து விட்டார்கள். இந்த வீடு வில்லைக் கட்டிடம் உடனே நெருப்பு வைப்பது முடியாது. பக்கத்து வீடு கூரை வீடு. உடனே நெருப்புப் பற்றிக் கொண்டது. நெருப்பு வைத்தது வைத்தாகி விட்டதென்று கருப்பண்ணனும் அதை ஒத்துக் கொண்டு சும்மா இருந்து விடுகிறான். வீராசாமி கதவண்டை ஓடி பலமாகத் தட்டி)

வீரா: அடே யாரப்பா வீட்டுக்காரன்...வீட்டுக்கு நெருப்பு வைத்துவிட்டார்கள். உடனே கவைத்திற.

(என்று கத்துகிறான். பலனில்லை.
நெருப்பு வைக்கப்பட்ட பக்கத்து வீட்டில் தூங்கிக் கொண்டிருந்தவர்கள் விழித்து வீடு வேகிறதை யறிந்து குழந்தை குட்டிகளுடன் வெளியில் வந்து தவிக்கிறார்கள். நெருப்பை அவிக்க முயல்கிறார்கள். இதற்குள் கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்த காலிகள் இன்னும் இரண்டு மூன்று வீடுகளுக்கும் நெருப்பு வைத்து விட்டார்கள். அந்த வீட்டிலிருந்தவர்களும் அப்படி அடித்து மோதிக்கொண்டு வெளியில் ஓடி வருகிறார்கள். எங்கும் ஒரே குழப்பமாகி விடுகிறது.

இவற்றை யெல்லாம் கவனிக்காமல் கருப்பண்ணனும் வீராசாமியும், நல்லப்பரும் வசந்தாவும் உள்ளே இருக்கிறதாகக் கருதப்பட்ட அந்தக் கடைசி வீட்டின் வில்லியில் கொஞ்சம் கொஞ்சமாக நெருப்புப் பிடிப்பதைப் பார்த்துக்கொண்டு அதில் நன்றாக நெருப்புப் பற்றின பின் நல்லப்பரும் வசந்தாவும் வெளியில் வரப் போகிறார்கள் என்று அதிலேயே கண்ணும் கருத்துமாக, காத்துக் கொண்டிருக்கிறார்கள். பலமான காற்று வீசுகிறது. அந்தக் காற்று காளியம்மாள் வீட்டின் மேல் நெருப்புத் துணுக்குகளை அள்ளிக்கொண்டு போய்ப் போடுகிறது. அதனால் காளியம்மாள் வீடும் பற்றிக் கொண்டது.

காளியம்மாள் குழந்தையோடு முன்சிப்பு வீட்டண்டை என்ன நடக்கப் போகிறது என்பதை அறிய வந்தவள் அங்கேயே நின்று கொண்டு, தன் வீட்டில் வசந்தா முதலானவர்கள் இருப்பதைக் கொள்ளைக்காரர்கள் சந்தேகிக்க முடியாமல் செய்துவிட்ட தன்னுடைய சாமர்த்தியத்தில் சந்தோஷப் பட்டுக் கொண்டு கொஞ்சம் ஏமாந்து இருந்துவிட்டாள். அகஸ்மாத்தாகத் திரும்பிப் பார்த்தாள். தன்னுடைய வீட்டுக் கூரையின் மேல் வெளிச்சம் தெரிவதைக் கண்டு ஓடி வருகிறாள். முதலில் வீட்டுக்குள் தூங்கிக் கொண்டிருந்த தன் மற்ற இரண்டு குழந்தைகளையும் வெளியே கொண்டு போகிறாள்.)

காட்சி 35

இடம் : செங்கோடன் வீடு

காலம் : நள்ளிரவு

[இந்தச் சமயத்தில் வசந்தா மிகவும் உடலைக் குறுக்கிக்கொண்டு பதுங்கிக் கிடந்த அட்டாணிக்குள் புகை சூழுகின்றது. வசந்தா கெளித்து கெளித்து, இடம் மாறி மாறிப் பதுங்குகின்றாள். வீட்டில் நெருப்புப் பற்றிக்கொண்டது அவளுக்குத் தெரியாது. ஆதலால் வீட்டு அடுப்புப் புகைதானே என்று அசட்டை செய்து சகித்துக் கொண்டிருக்க முயல்கிறாள். புகை அதிகமாகிறது. கீழே இறங்கலாம் என்று பார்க்கிறாள். கால் வைத்து இறங்க முடியாமல் கதவு மூடப்பட்டு வெளியே சங்கிலி மாட்டப்பட்டிருக்கிறது.

தொம்பைக்குள்ளிருந்த கல்லப்பர் கொள்ளைக்காரர்கள் கண்டு பிடித்துக் கொள்ளப் போகிறார்களோ என்ற ஒரே பயத்திலில் நடுங்கிக் கொண்டு சிந்தனையும் செயலும் அற்று தொம்பைக்குள்ளே நிணறிக் கொண்டிருக்கிறார்.

சுந்தரம் வெளியில் நடக்கிற விஷயங்களை ஊகிக்கக் காது கொடுத்து ஓசைகளை யெல்லாம் கவனித்துக் கொண்டிருக்கிறான். அவனுக்கு உட்காரவோ படுக்கவோ இடமில்லை... தொம்பைக்கும் சுவருக்கும் மத்திலிலிருந்த சந்து வெகு குறுகியது. ஆனதால் சுவரில் சாய்ந்து நின்று கொண்டே இருக்கிறான்.

குழந்தைகளை வீட்டுக்கு தூரத்தில் கொண்டுபோய் ஒரு கட்டிலில் படுக்கப் போட்டு விட்டு காளியம்மாள் வீட்டுக்குள் ஓடி முதலில் தவிட்டுப் பானை அடுக்குகளை இறக்கி]

காளி : சுந்தரமையா ! ஓடியாங்க... ஊட்டுக்கு நெருப்பு வச்சிட்டாங்க...

(என்று பதறுகிறாள்)

[சுந்தரம் பானைகளைத் தாண்டிக் குதித்து முதலில் வசந்தா இருந்த சமையல் வீட்டுக்கு ஓடுகிறான். கூடவே காளியம்மாளும் ஓடிக் கதவைத் திறக்கிறாள்.]

காளி : வசந்தம்மா ! ஈலே எறங்குங்கோ.

(அதற்குள் அட்டாணியில் புகை அதிகப்பட்டு வசந்தாவின் கண்ணைப் பாதிக்கிறது. வசந்தா கண்ணைக் கசக்கிக்

கொண்டு கதவைப் பார்க்க முடியாமல் தவிக்கிறாள். சுந்தரம் கதவின் மேல் ஏறி வசந்தாவின் காலைத் தொடுகிறான். வசந்தா சுந்தரத்தின் கையைப் பற்றுகிறாள். சுந்தரம் வசந்தாவை மெதுவாகத் தன் பக்கம் இழுத்து அவளுடைய கைக்குத் தன்னுடைய தோளைக் கொடுத்து, தன்னுடைய வலது கையால் அவளுடைய இடுப்பைக் கெட்டியாகப் பிடித்து இறக்கி விடுகிறான். கீழே வந்தும் கண் திறக்க முடியாமல் தடுமாறிய வசந்தாவைக் காளியம்மாள் கையைப் பிடித்து அந்த அறையை விட்டு கூட்டிக் கொண்டு போகிறாள்.

சுந்தரம் கதவிலிருந்து குதித்து புகை வராமலிருக்கக் கதவை மூடி சங்கிலி மாட்டுகிறான்.]

வசந்: அப்பா எங்கே?

சுந்; இதோ அவரைக் கூட்டி வருகிறேன்.

(என்று தொம்பையின் மேல் மூடியை எடுத்துவிட்டு, உள்ளே எட்டிப் பார்த்து)

சுந்: ஐயா, வீட்டுக்கு நெருப்பு வைத்துவிட்டார்கள். மேலே ஏறி வெளியே வாங்க. சீக்கிரம்.

[அதைக் கேட்ட நல்லப்பர் "ஐயோ" என்று அலறிக்கொண்டே மேலே ஏறிவர முயல்கிறார். அவரால் ஏறமுடியவில்லை. சுந்தரம் பக்கத்திலிருந்த பழைய பெட்டியின் மேல் காலை ஊன்றி நின்று கொண்டு நல்லப்பருக்குத் தன் கையைக் கொடுத்து அவரைத் தூக்கிவிட முயல்கிறான். சுந்தரத்தின் கையைப் பிடித்துக் கொண்டு முக்கி முரண்டி நல்லப்பர் கொஞ்சம் மேலே வருகிற சமயத்தில் சுந்தரம் நின்று கொண்டிருந்த பழைய இற்றுப் போன ஜாதிக்கா பெட்டியின் மேற்பலகை உடைந்து விடுகிறது. சுந்தரம் கீழே விழுகிறான். நல்லப்பரும் மீண்டும் தொம்பைக்குள் விழுந்து விடுகிறார்.

இதைப் பார்த்துக் கொண்டு பக்கத்தில் நின்ற காளியம்மாள் சரேலென்று பாய்ந்து, பக்கத்திலிருந்த உலக்கை ஒன்றை எடுத்து வந்து ஓங்கியடித்து அந்த மண் தொம்பையை உடைக்கிறாள். உடைந்த தொம்பையின் மேல் பகுதியைக் காளியம்மாள் கீழே தள்ளுகிறாள். அதன் பிறகு நல்லப்பர் சுலபமாக வெளியே வருகிறார். எல்லாரும் வீட்டை விட்டு ஓடுகிறார்கள். இந்தச் சமயத்தில் கூரை முழுதும் தீப்பிடித்துக் கொண்டு சுடர்விட்டு எரிகின்றது.

அந்த வெளிச்சத்தில் கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்த ஒருவன் நல்லப்பரையும் வசந்தாவையும் அடையாளம் கண்டு கொண்டு]

ஒருவன் : இதோ போறார் நல்லப்ப மொதலாளி! அவர்தான்! அவர்தான்! ஐயா! கருப்பண்ணு! வீராசாமி! ஓடியாங்க நல்லப்பர் இங்கே இருக்குறாரு

[என்று கத்திவிட்டு கருப்பண்ணனும் வீராசாமியும் இருக்கிற பக்கத்துக்கு ஓடி கருப்பண்ணனிடம் தான் நல்லப்பரைக் கண்டதைச் சொல்லுகிறான். அதைக் கேட்ட சுந்தரம் வெகு வேகமாக வசந்தாவின் கையையும் நல்லப்பருடைய கையையும் பிடித்து இழுத்து துரிதப்படுத்திக் கொண்டு தானும் ஓடுகிறான். நல்லப்பரால் வேகமாக ஓடமுடியவில்லை. அவரை விட்டு விட்டுப் போய்விட வசந்தாவுக்கு மனம் வரவில்லை. அவர்களுக்காகச் சுந்தரமும் நிதானிக்க வேண்டியிருந்தது. கூடுமான வரையிலும் மூச்சைப் பிடித்துக் கொண்டு நல்லப்பர் வேகமாகத்தான் போகிறார். இருந்தாலும் தப்பித்துக் கொள்ள முடியவில்லை.

கருப்பண்ணனும் வீராசாமியும் பாணம் போலப் பாய்ந்தோடி வந்து விட்டார்கள், வீடுகள் எரிகிற வெளிச்சத்தால் நல்லப்பரும் வசந்தாவும் சுந்தரமும் ஓடுவதை அவர்கள் சுலபமாகப் பார்க்க முடிந்தது.

கருப்பண்ணன் வீராசாமிக்கு முன்னால் ஓடி அவர்களைத் துரத்தும் போதே தன் இடுப்பிலிருந்த ரிவால்வரை எடுத்து சுந்தரத்துக்குக் குறி வைத்துச் சுட்டான். சுந்தரத்தின் வலது தோள் பட்டையில் குண்டு பட்டு சுந்தரம் கீழே விழுந்து விடுகிறான். அவன் கையைப் பிடித்துக் கொண்டு போன வசந்தா, சுந்தரம் விழுந்ததைக் கண்டு தானும் அவனுடன் கீழே சாய்கிறாள். அவன் மீது குண்டு பாய்ந்து விட்டதை உணர்ந்து எந்த இடத்தில் அடிபட்டதென்று பார்க்க அவனைத் தன் மடி மீது சாய்த்துக் கொள்ளுகிறாள். நல்லப்பர் சுந்தரத்தின் கையை விட்டு விட்டுத் திரும்பிக் கூடப் பார்க்காமல் ஓடுகிறார்.

பின்னால் ஓடி வந்த கருப்பண்ணன் வசந்தாவைப் பிடித்துக் கொள்ளுகிறான். வீராசாமி ஓடிப்போய் நல்லப்பரைப் பிடிக்கிறான். நல்லப்பர் தன் இடுப்பில் கை வைத்து ரிவால்வரை எடுக்க முயன்றார். அதை அறிந்த வீராசாமி நல்லப்பருடைய வலது கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு அவருடைய கன்னத்தில் பளீர் என்று ஒரு அறை கொடுத்து அவருடைய இடுப்பிலிருந்த ரிவால்வரைப் பிடுங்கிக் கொள்ளுகிறான்.

இதே சமயத்தில் சுந்தரம் நல்லப்பருடைய அறையிலிருந்து டெலிபோன் பேசினதின் பயனை அனுப்பப்பட்ட ஆயுதந் தாங்கிய இருபத்தைந்து போலீசாரை ஏற்றிக் கொண்டு ஒரு மோட்டார் பஸ் வண்டியும் அதற்குப் பின் போலீஸ் அதிகாரிகள் இருந்த ஒரு சின்ன மோட்டாரும் வருகின்றன. மோட்டார்களின் விளக்கு வெளிச்சத்தைக் கண்டு

அஞ்சி கருப்பண்ணன் வெகு அவசரமாக வசந்தாவின் கையைப் பலமாகப் பிடித்து இழுக்கிறான். வசந்தா தன் மடி மீது சாய்ந்திருந்த சுந்தரத்தை விட்டு எழுந்திருக்க மறுக்கிறாள்.

கருப்பண்ணன் சுந்தரத்தை வசந்தாவின் மடியிலிருந்து உதைத்துக் கீழே தள்ளிவிட்டு வசந்தாவை வெகு பலமாக இழுக்கிறான். வசந்தா தூண்டிலில் சிக்கிய மீன் போல் இவனிடம் வந்து விழுகிறாள். அவளைத் தூக்கிக் கொண்டு போய்விட எண்ணி கருப்பண்ணன் அவளைத் தூக்கப் போகிறான். அவன் கருத்தை அனுமானித்த வசந்தா அவனுடைய பிடிக்குத் தப்பிக் கொண்டு தானே தன்னுடைய தந்தை போல திசையில் வேகமாக நடக்கிறாள். கருப்பண்ணன் வசந்தாவை இழுத்த போது அவன் வைத்திருந்த புடவை மூட்டை கீழே விழுந்து விட்டது. அதைத் தேடி எடுத்துக் கொண்டு அவன் வசந்தாவின் பின்னால் போகிறான்.

இருவரும் நல்லப்பரும் வீராசாமியும் நின்ற இடத்துக்கு வருகிறார்கள்.]

கருப்: (நல்லப்பரைப் பார்த்து) டேய் பணமூட்டே! பேசாமெ ரெண்டு பேரும் எங்களோடு வந்திடுங்க. இல்லாட்டி ஒங் தோலை உரிச்சிப்புடுவேன்.

(என்று நல்லப்பரைத் தள்ளுகிறான்: நல்லப்பர் வேறு கதியில்லாமல் சொன்னபடி போகிறார். வசந்தாவும் தந்தையைப் பின்பற்றுகிறாள். வீராசாமி முன்னாலும் கருப்பண்ணன் பின்னாலுமாக மலைக்குப் போகிற காட்டுக்குள் நுழைந்து மறைந்து விடுகிறார்கள்.)

காட்சி 36

இடம் : செங்கோடன் வீடு, தெருவு
காலம்: நள்ளிரவு

[போலீஸ் மோட்டார் கொள்ளைக் கூட்டத்தாரை வழி மறித்து மடக்குகிறது. அந்தக் கூட்டம் மோட்டார் வண்டியின் மீது வெகுண்டு, கல், மண், முதலியவற்றை வீசி எறிகிறது. மோட்டாரிலிருந்தபடியே போலீசார் வெகு வேகமாக நாலா பக்கத்திலும் துப்பாக்கிகளால் சுடுகிறார்கள். கொள்ளைக் காரர்களில் பலபேர் குண்டடிபட்டு விழுகிறார்கள். மற்ற வர்கள் நாலாபக்கமும் சிதறி ஓட்டம் எடுக்கிறார்கள். ஓடும் போதே தங்கள் கையிலிருந்த துப்பாக்கிகளால் கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்த சிலர் சுட்டுக் கொண்டே ஓடுகிறார்கள்.

கொஞ்ச நேரத்தில் கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்தவர்களில் குண்டடிபட்டு விழுந்து கிடப்பவர்களைத் தவிர மற்ற எல் லாரும் ஓடிவிட்டார்கள்.

அதன்பின் சின்ன மோட்டார் வண்டி கருப்பண்ணன் சுட்ட ரிவால்வர் வெடி கேட்ட இடத்துக்கு ஓட்டப்படுகிறது. தூரத் தில் தரையில் கிடக்கிற ஒரு மனிதனுடைய உருவத்தின் மீது மோட்டாரின் விளக்கு வெளிச்சம் படுகிறது. மோட் டாரிலிருந்த போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் இறங்கிப் போய் அந்த மனிதன் யாரென்று புரட்டிப் பார்க்கிறார். அங்கே கிடந்த மனிதன் நல்லப்பருடைய காரியதரிசி சுந்தரம் என்று தெரிகிறது. சப்-இன்ஸ்பெக்டர் சுந்தரத்தை மெது வாகப் பரிசோதிக்கிறார். வலது தோள் பட்டைக்கு அருகில் குண்டு பாய்ந்து ஏராளமான ரத்தம் சிந்தியிருக்கிறதைக் கண்டார்.

சுந்தரத்தோடு பேச முயன்று சப்-இன்ஸ்பெக்டர் "சுந்தரம் உங் களைச் சுட்டது யார்?" என்கிறார். ஆனால் சுந்தரத்துக்குப் பிரக்ஞை இல்லை. சுந்தரத்தை அலுங்காமல் தூக்கச்செய்து தான் வந்த சின்ன மோட்டாரில் படுக்க வைத்து உடனே அவரை ஆஸ்பத்திரியில் கொண்டு போய்ச் சேர்த்துவிட்டு வரும்படி வண்டியை அனுப்புகிறார். சின்ன மோட்டார் போனபின் குண்டு பாய்ந்து குற்றுயிராய்க் கிடக்கும் கொள் ளைக் கூட்டத்தைச் சேர்ந்தவர்களையும் பெரிய மோட்டாரில் தூக்கி போடச் செய்து ஒரு ஹெட்கான்ஸ்டெபிளுடன் அவர் களையும் ஆஸ்பத்திரிக்கு அனுப்புகிறார். அதற்குப் பிறகு சப் இன்ஸ்பெக்டர் வெந்து கொண்டிருக்கிற வீடுகளைப் பார்வை யிடப் போகிறார்.

கொள்ளைக் கூட்டத்தாருக்கும் போலீசாருக்கும் நடந்த துப் பாக்கிச் சண்டையைத் தூரத்திலிருந்து பார்த்துக் கொண் டிருந்த கிராமத்து ஜனங்கள் சப்இன்ஸ்பெக்டரை வணங்கி வரவேற்கிறார்கள். அந்த ஜனக் கூட்டத்திலிருந்த காளியம் மாள் முன்னால் வந்து அழு குரலாக - சப்இன்ஸ்பெக்டரிடம்]

காளி : ஐயா ! ஊடெல்லாம் வெந்து சாம்பலாயிடுச்சே ! நாங்க கொளந்தை குட்டிகளே வச்சிக்கிட்டு எங்கே போயி ஒண்டு வோம் ... படுபாவிங்க ... அவங்க நாசமாப் போக ... பொரச்சி பண்ணி எல்லாத்துக்கும் 'நெலந் தர்ரோம்', 'ஊடு தர்ரோம்' இன்னு சொல்லி ... (அழுகையும் அங்கலாய்ப்புமாக) ஐயோ! எங்க குடிசைகளுக்கும் நெருப்பு வைச்சிக் கொளுத்தி பிட்டாங் களே ... சாமி ... அவனுங்க எல்லாத்தையும் சுட்டுக் கொல் லாமெ உட்டுட்டிங்களே. சொம்பப் பேரு தப்பிச்சி ஓடிட்டாங் களே.

(என்று அழுகிறாள்)

(இந்த சமயத்தில் அதுவரையிலும் அங்கே இல்லாத செங்கோட னும் நஞ்சப்பனும் காளியம்மாள் அருகில் வந்து நிற் கிறார்கள்.)

காளி : அடபாவிங்களா, இன்னேரம் எங்கே போயித் தொலஞ் சிங்கோ .:. கூரைமேலெ கொஞ்சம் தண்ணியைக் கொட்டக் கூட இல்லாதெ போனீங்களே [என்று துக்கிக்கிறாள்]

சப்-இன் : அது கிடக்கட்டும். இங்கே வந்த கொள்ளைக்காரர் களில் யாரையாவது உங்களுக்கு அடையாளம் தெரியுமா ?

காளி : நல்லாத் தெரியும். அந்தக் கொலைகாரக் கருப்பண்ண னும் அந்தப் பளிகாரப் பாவி வீராசாமியுந்தான் முக்கியம்.

சப்-இன் : ஒ ! அவர்கள்தானு ! சரி, சரி, நான் நினைத்தபடியே இருக்கிறது ... ஏம்மா, அந்த இரண்டு பேரையும் நீ இங்கே பாத்தாயா ?

காளி : ஐயோ சாமி ... இந்தக் கண்ணாலெ நானே பாத்தே னுங்களே ... அந்த மண்ணுப்போவான் கருப்பண்ணனே என் னோட பேசினனுங்களே, அப்ப வீராசாமி பக்கத்திலே இருந் தானுங்களே.

சப்-இன் : அவர்கள் எந்த பக்கம் போனார்கள் என்பது இங்கிருக் கிற யாருக்காவது தெரியுமா ?

காளி : ஐயோ! அந்த கருப்பண்ணன் தானே சுந்தரம் ஐயாவைச் சுட்டான். வசந்தம்மாவை அவன்தானே புடிச்சி ... இளுத் துக்கிட்டுப் போனு...நீங்க வாரத்துக்கு செத்தெ முன்னாலெ.

சப்-இன் : வசந்தம்மாவா ! ... நல்லப்பர் வரவில்லையா ?

காளி : அவருந்தான் ... வசந்தம்மா — சுந்தரமையா, நல்லப்பரு ... மூணு பேரும் சேந்தாப்பிலே தானே ஓடுனுங்க ... நானும் கொஞ்ச தூரம் அவுங்க பின்னுலெ போனேன் ... அப்பத் தான் அந்தக் கொலைக்காரக் கருப்பண்ணன் எனக்கு முன் னுலே ஓடி அவுங்களைத் தொரத்துனான் ... அப்பத்தான் சுந்தரமையாவை ... அவன்தான் சுட்டான் ... சுந்தரமையா பொளச்சிக்கிட்டாரா ...

சப்-இன் : சொல்ல முடியாது ... காயம் பலமான காயம். ஆஸ் பத்திரிக்கு அனுப்பியிருக்கிறேன் ... சரி ... வசந்தம்மா—நல் லப்பர் ... அவர்கள் எந்தப் பக்கம் போனார்கள்?

காளி : அவுங்களைத்தான் அந்த மலைக்குக் கொண்டு போயிடனு முண்ணு கருப்பண்ணனும் வீராசாமியும் இளுத்துக்கிட்டு அந்தக் காட்டுக்குள்ள போனுங்களே ... நீங்க அங்கே போயிப் பாக்காமெ வந்திட்டிங்களே ... உடனே போனுப் பிடிச்சிக்க லாங்க ... கொஞ்சம் போய்ப் பாருங்க.

சப்-இன் : மோட்டார் வரட்டும் போகிறேன் ... சுந்தரத்தை உடனே ஆஸ்பத்திரிக்கு அனுப்பவேண்டியிருந்ததனால் ...

காளி : ஆமாங்க ... சுந்தரமையா பொளச்சிக்கிருப்பிலே பாருங்க சாமி ... புண்ணியம் ... ரொம்ப நல்லவரு ... அவுரோட அப் பாரும் அம்மாவும் எங்களுக்கு ரொம்ப ஒதவி செஞ்சவங்க சாமி...

காட்சி 37

இடம் : கொளத்தூர்சாலை, நாச்சிமுத்து தோட்ட வீடு
காலம்: நள்ளிரவு

[கருப்பண்ணனும் வீராசாமியும் வெகு துரிதப்படுத்தி நல்லப் பரையும் வசந்தாவையும் காட்டுக்குள் கடத்திக் கொண்டு போகிறார்கள். இடையிடையே முள்புதர்கள். அவற்றைச் சுற்றிக் கொண்டு கொடித்தடத்தில் போகிறார்கள். அத்யாவசியமான இடங்களில் வெளிச்சம் காட்டி கல்லையும் கரட்டையும் தாண்டச்செய்கிறார்கள். அந்தக் காட்டில் சுமார் முக்கால் மைல் போனால் மலைக்குகைக்குப் போகிற பாதை. அது நல்லப்பர் வீட்டுப் பின்புறத்திலுள்ள நந்தவனத்துக்கு நேராக உள்ள இடம். கருப்பண்ணனும் வீராசாமியும் போட்டிருந்த திட்டப்படி வசந்தாவை அந்தப் பாதை வழியாகத்தான் மலைவீட்டுக்குக் கொண்டுபோக ஏற்பாடாகியிருந்தது. அந்த ஏற்பாட்டின்படி வசந்தாவை ஏற்றிக் கொண்டு போக அந்தப் பாதையின் ஆரம்பத்தில் உள்ள ஆலமரத்தடியில் ஒரு நல்ல இரட்டை மாட்டு வில் வண்டி அங்கே காத்திருக்கச் செய்யப்பட்டிருந்தது ..... அந்த ஆலமரத்தின் அடிக்கு வந்ததும் வீராசாமி வெளிச்சம் அடித்துப் பார்க்கிறான். வண்டி இருக்கிறது.]

கருப்: யார்ரா வண்டியிலே, நோஞ்சானா ?

நோஞ்: ஆமாங்க.

கருப்: முனுசாமி வந்திருக்கிறானா ?

நோஞ்: ஆமாங்க ... இருக்கிறாருங்க.

(முனுசாமி மரத்தடியிலிருந்து கருப்பண்ணனிடம் வந்து கும்பிடுகிறான்.)

கருப்: வண்டியைத் திருப்பு.

(என்று வெளிச்சம் காட்டி. கருப்பண்ணன் நல்லப்பரையும் வசந்தாவையும் வண்டியில் ஏறச் சொல்லுகிறான். வெகு தூரம் நடந்ததினால் உண்டான கால்வலியினால் வருந்திக் கொண்டிருந்த நல்லப்பர் சொன்ன உடனே வண்டியில் ஏறிக் கொள்ளுகிறார். பிறகு வசந்தாவும் ஏறுகிறாள்.)

கருப் : வீராசாமி ! நீ போய் முன்னாலே ஏறு. நானு பின்னாலே ஒக்காந்துக்கிறேன்.

(வீராசாமி வண்டியில் முன்புறம் ஏறப்போகாமல் கருப்பண்ணனுடைய தோளின் மீது கையை வைத்து தன் பக்கம் இழுத்து தனியே கொஞ்ச தூரம் கூட்டிக்கொண்டு போய் மற்றவர்கள் காதில் விழாதபடி)

வீரா : நாம் இப்போது நம்முடைய மலை வீட்டுக்குப் போனால் அபாயம். போலீஸ்காரர்கள் நேராக அங்கேதான் இப்போது வருவார்கள். நம்முடைய ரகசியங்கள் வெளியாகி விட்டதால் தான் நல்லப்பரும் வசந்தாவும் நாம் வருவதற்குள் வீட்டை விட்டு வந்து விட்டார்கள். அவர்கள் அறியப்படுத்திதான் போலீசாரும் வந்திருக்கிறார்கள். அதனால் நாம் இவர்களை மலை வீட்டுக்குத்தான் கொண்டு போயிருக்கிறோம் என்பதைப் போலீசுக்கு சொல்லியிருப்பார்கள். அதனால் இப்ப நாம் அங்கே போகக்கூடாது.

கருப் : அது நெசந்தான் ... பின்னை எங்கே போகலாம் ? சொல்லு.

வீரா : கொளத்தூரில் நம்ம நாச்சிமுத்துவின் தோட்ட வீட்டுக்குப் போய்விடலாம். அதை இவர்கள் கண்டுபிடிக்க முடியாது.

கருப் : ஆமாமா ... செரியான எடந்தான் ... நல்ல ஒசனை சொன்னே ... சரி ... அங்கே உடச் சொல்லு வண்டியை. போய் முன்னாலே ஒக்காந்து வளி காட்டு.

(என்று திரும்புகிறான். அவனை மறுபடியும் வீராசாமி இழுத்து காதோடு)

வீரா : சரி நான் முன்னால் ஏறுகிறேன். நீயே பின்னால் இரு. ஆனால் கொளத்தூருக்குப் போன பிறகு ... நல்லப்பர்கிட்ட தான் ... மடியிலே ... பணம் இருக்கும ... அதை நீதான் ... வாங்கணும்

கருப் : ஓ ! அதெ நாம் பார்த்துக்கிறேன் ... நீ பயப்படாதே ...

(இருவரும் வண்டியில் ஏறுகிறார்கள். கருப்பண்ணன் வசந்தாவின் மேல் மோதும்படி உட்காருகிறான். வசந்தா நகர்ந்து கொள்கிறாள்.)

கருப் : வசந்தா பயப்படாதேம்மா. நாங்க ஒன்னை ஒண்ணும் பண்ண மாட்டோம். நல்லா தாராளமா ஒக்காந்துக்கோ ... வண்டி பெரிய வண்டி ...

(என்று வசந்தாவின் கையைத் தொட்டு மெதுவாக இழுத்துச் சொல்லுகிறான். வசந்தா வெடுக்கென்று கையை இழுத்துக் கொள்ளுகிறாள். வண்டி போகிறது.)

வீரா : (வண்டிக்காரனிடம்) நோஞ்சா! மலைப் பாதைக்குப் போகாதே. நேரா கிழக்கே திருப்பி கொளத்தூருக்குப் போ.

(வண்டி புறப்படுகிறது. கருப்பண்ணன் வண்டியைக் கொஞ்சம் நிறுத்தச் சொல்லி கீழே இறங்கி முனுசாமியைத் தனியே கூட்டிக் கொண்டுபோய்)

கருப் : முனிசாமி! நீ இங்கியே இரு ... போலீசாரு மலைக்குப் போய்த் தேட வருவாங்க. நீ மறைஞ்சிருந்து என்ன நடக்குதுண்ணு கவனிச்சிக்கிட்டு ஏதாச்சியும் விசேச்மிருந்தா கொளத்தூர்லே ... நம்ம ... நாச்சிமுத்து—ஊட்டுக்கு வந்து எங்கிட்டே செல்லணும். நாங்க கொளத்தூருக்குப் போன முன்னு யாருக்கும் தெரியப்படாது ... சாக்ரதை ... தெரிஞ் சுதா? ...

முனு : தெரிஞ்சுதுங்க.

(கருப்பண்ணன் மீண்டும் வந்து வண்டியில் ஏறுகிறான். வண்டி போகிறது. சுமார் ஏழு மைல் தூரம் சென்று கொளத்தூரில் வீராசாமிக்கும் அவன் மூலமாக கருப்பண்ணனுக்கும் நெருங்கிய நண்பனான நாச்சிமுத்துவின் தோட்ட வீட்டின் வெளிக் கதவண்டை வண்டி நிறுத்தப்படுகிறது. நாச்சிமுத்து ஒரு பெரிய மிராசுதார். அந்த வட்டாரத்திலுள்ள சுமார் பத்து கிராமங்களில் மிகவும் செல்வாக்குடையவன். பொல்லாத போக்கிரி. கருப்பண்ணன், வீராசாமி முதலானவர்களைப் போன்ற முரடர்கள் பலபேர் அவனுடைய கையாட்கள். அந்தப் பக்கத்தில் அவன் சொன்னதுதான் சட்டம். பல ஊர்களில் கொள்ளையடிக்கப்பட்ட சொத்துகளெல்லாம் இவனிடத்தில்தான் விலைக்கு வரும். திருட்டு நகைகளை உடனுக்குடன் உருக்கிப் பணமாக்கி விடுவதில் கெட்டிக்காரன். சர்க்கார் அதிகாரிகளுக்கு ஏராளமான லஞ்சம் அப்போதைக்கப்போது மாமூலாகக் கொடுத்து தன் மீது புகார் வராமல் பார்த்துக் கொள்வதில் கைதேர்ந்தவன். வீராசாமியும் கருப்பண்ணனும் நல்லப்பர் வீட்டில் கொள்ளையடிக்கப் போகிற செல்வத்தை யெல்லாம் வாங்கி மறைத்து வைப்பதற்கு முன்னாலேயே நாச்சிமுத்து ஒத்துக் கொண்டிருக்கிறவன்; போட்டிருந்த திட்டப்படி நல்லப்பருடைய இரும்புப் பெட்டியிலுள்ள ஏராளமான செல்வத்தைக் கொள்ளையடித்துக் கொண்டு வர முடியாமற் போனாலும் நல்லப்பரையும் அவருடைய மகளையும் சிறை செய்து கொண்டு வந்துவிட்டதில் நாச்சிமுத்து சந்தோஷப்பட்டு தங்களுக்கு வேண்டிய பாதுகாப்புகளைச் செய்வான் என்றே அங்கே வந்தார்கள்.

நாச்சிமுத்துவின் தோட்ட வீடு சுற்றுச் சுவர்கள் உள்ளது. குற்றமுள்ள இடமானதால் குறையாத காவலும் உண்டு. உள்ளே தூங்கிக் கொண்டிருந்த நாச்சிமுத்துவின் உத்தரவுக்காக வெகு நேரம் வண்டி வாசலில் காத்திருக்க வேண்டி

யிருந்தது. கடைசியாக கதவு திறக்கப்படுகிறது. நாச்சி முத்து சொல்லியபடி வீராசாமி மட்டும் முதலில் உள்ளே போகிறான். சுமார் பதது நிமிஷம் கழிதது வீராசாமி நாலைந்து ஆட்களுடன் வருகிறான். அந்த ஆட்கள் கையில் மின்சார விளக்குகளுடன் இருக்கிறார்கள். வீராசாமியின் வண்டி அந்த வீட்டின் பின் புறத்துக்கு ஓட்டப்படுகிறது. அங்கிருந்த ஒரு பலமான கதவு திறக்கப்படுகிறது. வண்டி உள்ளே ஓட்டப்படுகிறது. கதவு மீண்டும் மூடப்பட்டு பல தாழ்ப்பாள்களும் பூட்டுகளும் போடப்படுகின்றன.

வண்டியிலிருந்து நல்லப்பரும் வசந்தாவும் இறக்கிவர உத்தர விடப்படுகிறது. வெளிச்சம் காட்டப்படுகிறது. அவர்கள் இறங்குகிறார்கள்.

கோட்டையின் உட்புறம் போலிருந்த அந்த இடத்தில் சிறிது தூரம் நடந்த பின் இன்னொரு சிறு கதவு திறக்கப்படுகிறது. அங்கே ஒரு அறை. அந்த அறையில் சுவரோடு சுவராக இருந்த ஒரு கதவு திறக்கப்படுகிறது. அது ஒரு கள்ள வழி. அதில் முன்னால் இரண்டு ஆட்கள் வெளிச்சம் காட்டப் பின்னால் மூன்று பேர் தொடர எல்லாரும் போகிறார்கள். சுமார் பத்து நிமிஷம் அப்படி நடந்தபின் அந்தக் கள்ள வழியின் கோடியிலுள்ள இன்னொரு கதவு திறக்கப்படுகிறது. அதைக் கடந்ததும் மிகவும் நெருக்கமாக மரங்கள் அடர்ந்த ஒரு சிறு வனம். அதன் மத்தியில் ஒரு கெட்டியான கட்டடம். அது ஒரு மாடி வீடு. கீழே பெரிய கூடமும் பல அறைகளும் மேல் மாடியிலும் அப்படியே ஒரு கூடமும் பல அறைகளும் உடையது. வீடு முழுவதும் அவசியமான எல்லாப் பொருள்களும் உள்ளதாக குடியிருக்கத்தக்கதாக இருக்கிறது. ஆனால் அதில் வசிப்பவர்கள் யாரும் இல்லை.

கீழே இருந்த ஒரு அலங்காரமான அறையில் வசந்தாவைத் தங்கச் செய்கிறார்கள். மேல் மாடியில் ஒரு அறைக்கு நல்லப்பரைக் கூட்டிக்கொண்டு போய் அதில் அவரைத் தங்கச் செய்துவிட்டு இரண்டு அறைகளுக்கும் இரண்டிரண்டு ஆட்களைக் காவல் வைத்துவிட்டு மிச்சமிருந்த இன்னொரு ஆளுடன் வீராசாமியும் கருப்பண்ணனும் நாச்சிமுத்துவிடம் விவரமாகப் பேசப் போய்விடுகிறார்கள்.]

காட்சி 38

இடம் : மலைவிடு

காலம் : பின்னிரவு

[சப்இன்ஸ்பெக்டர், எரிந்துபோன வீடுகளையெல்லாம் பார்த்து வேண்டிய குறிப்பெடுத்துக் கொள்ளுகிறார். குடிசைகளான வீடுகளையும் சொத்துக்களையும் இழந்துவிட்ட ஏழைக்குடியானவர்கள் கஞ்சியின்றி வாடி வதங்கி குழந்தைகளோடும், சந்தை சுற்றிய பெண்களோடும் சப்இன்ஸ்பெக்டரைச் சுற்றிக் கொண்டு கதறிக் கண்ணீர் வடிக்கிற காட்சி மிகவும் பரிதாபமாக இருக்கிறது. அந்த ஏழை ஜனங்களுக்கு ஆறுதல்களைச் சொல்லி, குடிசைகளை மறுபடியும்கட்டிக்கொள்ள சர்க்காரிடமிருந்து வேண்டிய ஒத்தாசை வாங்கித்தருவதாக வாக்களித்துவிட்டு சப்இன்ஸ்பெக்டர் தன் னுடைய ஜவான்களை அணிவகுக்கிறார். நல்லப்பரையும் வசந்தாவையும் கொண்டு போயிருப்பதாக எல்லாரும் நம்புகிற அந்த மலைக்குப் படையெடுக்க ஆயத்தமாகிறார். இதற்குள் சுந்தரத்தை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போன சின்ன மோட்டாரும் இன்னொரு பெரிய மோட்டார் நிறைய துப்பாக்கி சகிதம் இன்னும் முப்பது போலீஸ் ஜவான்களும் வந்து சேருகிறார்கள். அவர்களையும் சேர்த்துக கொண்டு அணிவகுப்பாக மலைக்குப் போகும் பாதையில் காட்டுக்குள் போகிறார்கள் சின்ன மோட்டாரில் வந்த பெரிய இன்ஸ்பெக்டரே அந்தப் படையை நடத்துகிறார்.

(இரண்டு மோட்டார்களும் ஜவான்களும் மலைக்குப் போகிற பாதைக்கு அருகிலுள்ள ஆலமரத்தண்டை வருகிறார்கள். மலைக்குப் போகிற பாதையில் ஒரு மரத்துக்குப் பின்னல் கருப்பண்ணன் ஏவலிட்டுப் போன முனுசாமி பதுங்கிக் கொண்டு போலீசார் என்ன செய்யப் போகிறார்கள் என்பதைப் பார்ப்பதற்காக இருக்கிறான். மோட்டார் வண்டியின் வெளிச்சம் அவன் பதுங்கியிருந்த பக்கத்தில் எதிர்பாராத படி வீசுகிறது. தான் அங்கே இருப்பது தெரியப்படாது என்பதற்காக முனுசாமி வெளிச்சத்தை விட்டு இருண்ட பக்கத்துக்குப் போகிறான். அந்த அசைவை–ஒரு ஜவான் பார்த்துக்கொண்டு)

ஜவான் : அதோ அங்கே ஒரு ஆள் பதுங்குகிறான்.

(என்று கத்துகிறான். அதைக்கேட்டு முனிசாமிஓடுகிறான். உடனே இன்ஸ்பெக்டர் முனுசாமியைக் குறிவைத்துத் தன் ரிவால்

வரால் சுடுகிறார். துப்பாக்கியின் குறிதவறி விடுகிறது. ஆனால் முனுசாமி ஓடின வேகத்தில் ஒரு பள்ளத்தில் கால் தவறி எதிரிலிருந்த சிறு பாறையின் மீது விழுகிறான். விழும் போது 'ஐயோ' என்று அலறிக்கொண்டு விழுகிறான். வேக மாக ஓடி விழுந்ததனால் நெற்றி மண்டை பாறையில் அடி பட்டு தோல் கிழிந்து மண்டையோட்டில் பெரிய காயமுண் டாகிறது. அத்துடன் மூக்கும் உடைந்து விடுகிறது. ஜவான்கள் ஓடி அவனைப் பிடித்துதூக்குகிறார்கள். மண்டை யிலிருந்தும் மூக்கிலிருந்தும் ரத்தம் கொட்டுகிறது. உடனே அவனுடைய துணியையே கிழித்து தலையில் பலமான கட்டுப் போடுகிறார்கள். மூக்கில் வடிந்த ரத்தத்தைத் தடைத்து மற்றும் அப்போது கூடுமான சிகிச்சைகளை செய்கிறார்கள். அவன் பயந்து நடுங்கிக் கொண்டே இன்ஸ் பெக்டரைக் கும்பிட்டு]

முனு : சாமீ! நான் ஒண்ணும் பண்ணிலிங்கோ...சாமி.

இன் : நீ ஒன்றும் பண்ணவில்லை...அவர்கள் எங்கே?

முனு : யாருங்கோ?

இன் : கருப்பண்ணன், வீராசாமி, நல்லப்பர், அவருடைய பெண் ...அவர்கள் எங்கே? அதைமட்டும் சொல்லிவிடு, உன்னை விட்டு விடுகிறோம்.

முனு : அவுங்களா? ஆமாங்க...அவுங்களெல்லாம் இப்படித்தாம் போனுங்க.

இன் : எங்கே மலைக்கா?

முனு : இல்லிங்கோ...அவுங்க...ஊஹூம்...அவுங்க மலைக்குப் போவிலிங்க.

இன் : டேய்! உள்ளதைச் சொல்லிவிடு...உன்னைவிட்டு விடு கிறோம்...இல்லாவிட்டால்...

முனு : ஆமாங்க...ஆமாங்க...மலைக்குத்தாம் போனுங்க.

இன் : ஹும்...அப்படிச் சொல்லு...உன் பேரென்ன?

முனு : எம் பேரு முனுசாமிங்கோ.

இன் : (ஒரு ஜவானைப் பார்த்து) ஏய் நூத்தி நாலு! இந்த முனு சாமியை வண்டியிலே உட்காரவை. ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய் கட்டு கட்டச் செய்வோம்.

(என்று முனுசாமியை பெரிய மோட்டாரில் ஏறச் செய்கிறார்கள். எல்லாருமாக மீண்டும் மலைக்குப் போகிற பாதையில் ஒரு மைல் மோட்டாருடன் போய் நிற்கிறார்கள். அதற்குப்பின் மலையின் ஏற்றம் வெறும் நடைபாதைதான். வண்டி

போகாது. அந்த கொள்ளைக்கூட்டத்தாரின் மறைவிடமாகிய மலை வீட்டுக்கு எந்தப் பக்கமாகப் போகவேண்டும் என்று அறிய இன்ஸ்பெக்டர் முனுசாமியைக் கேட்கச் சொல்லுகிறார். முனுசாமியின் மண்டையிலிருந்து ஏராளமான ரத்தம் பெருகி விரயமானதால் அவனுக்கு மயக்கம் வந்து மோட்டாரில் படுத்துக்கிடக்கிறான். ஜவான்கள் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லக்கூடிய நிலையில் இல்லை. பிறகு போலீஸ்காரர்களுக்குள்ளேயே ஒருவனுக்கு அந்த மலை வீட்டுக்குப் போகும் வழி தெரியுமென்று சொல்ல, முனுசாமியும் மோட்டார் டிரைவர்களும் இரண்டு ஜவான்களும் தவிர மற்றெல்லாரும் மலைக்கு ஏறுகிறார்கள்.

சுமார் இரண்டு மைல் தூரம் ஏற்றப் பாதையில் நடந்துவந்து பல மரச்செறிவுகளைக் கடந்து இரண்டு பாறைகளுக்கு மத்தியிலிருந்த ஒரு கதவண்டை வருகிறார்கள். அது உட்புறத்தில் தாழிடப்பட்டிருக்கிறது. கதவை இன்ஸ்பெக்டர் தட்டுகிறார். உடனே உள்ளேயிருந்து]

ஒருகுரல்: யாரது?

இன்: முனிசாமி

குரல்: முனிசாமியா? ஏண்டா? ஏன் இன்னேரம்? எவ்வளவு நேரமாக் காத்திருக்கிறோம்!

(என்று சொல்லிக் கொண்டே உள்ளேயிருந்த ஒருவன் கதவைத் திறந்து தன் கையிலிருந்த தூக்கு விளக்கை உயர்த்தி 'முனுசாமி' என்று அவன் எதிர்பார்த்த முகத்தைப் பார்க்கிறான். இன்ஸ்பெக்டர் தம்முடைய ரிவால்வரை அந்த மனிதனுடைய முகத்துக்கு நேராக நீட்டிக்கொண்டு)

இன்: முன்னூத்தி ஏழு! 'ஹாண்ட் கப்'

[உடனே இரண்டு ஜவான்கள் கதவைத் திறந்தவனைப் பிடித்து அவன் கைகளுக்கு விலங்கிடுகிறார்கள். அவன் ஒன்றும் புரியாமல் விழிக்கிறான். இதைப் பார்த்துக்கொண்டிருந்த இன்னும் அங்கிருந்த ஐந்காறு ஆட்கள் அந்த வீட்டின் பின் புறத்திற்கு ஓடி அங்கிருக்கும் மலை இடுக்குகளின் வழியாக பள்ளத்தில் இறங்கி மலைக்காட்டில் மறைந்து விடுகிறார்கள்.)

அந்த வீடு எல்லா வசதிகளும் நிரம்பிய ஒரு சிறு மாளிகை போன்றது. அதுவீராசாமிக்குச் சொந்தமானது. கருப்பண்ணன் முதலான நாலைந்து பேர்களைத் தவிர மற்றவர்களுக்கு அதன் ரகசியங்கள் தெரியாது.

நல்லப்பருடைய இரும்புப் பெட்டிகளிலுள்ள ஆஸ்திகளை மட்டும் அபகரித்துக் கொண்டு, அவரை அவருடைய அறையிலேயே போட்டுப் பூட்டிவிட்டு வசந்தாவை இந்த இடத்துக்குக்கொண்டு வந்து விடுவது என்று இந்த வீட்டை சுத்தம் செய்து அலங்கரித்து ஐந்தாறு வேலைக்காரர்களை மட்டும் இங்கிருக்க ஏற்பாடு செய்திருந்தார்கள். அவர்களுள் முனுசாமி ஒருவன்.

இன்ஸ்பெக்டரும், மற்றவர்களும் வீட்டுக்குள் நுழைந்து எல்லா இட்த்தையும் சோதனை செய்கிறார்கள். வீடு மிகவும் சுத்தமாக இருந்தது. ஒவ்வொரு அறையும் நல்ல மண்ணெண்ணெய் விளக்குகளுடன் பிரகாசமாக அலங்கரிக்கப் பட்டதாக இருந்தது. மேஜை, நாற்காலி, கட்டில், மெத்தை, பெரிய கெடிகார்கள் முதலிய நவீனப் பொருள்கள் எல்லாம் இருந்தன. ஆனால் நல்லப்பரோ, வசந்தாவோ, கருப்பண்ணனோ, வீராசாமியோ காணப்படவில்லை.

வீட்டின் இரண்டு அள்ளைகளிலும் இரண்டு செங்குத்தான பாறைகள், பின்புறத்தில் ஒரு பெரிய கெபியான பள்ளத்தாக்கு. மிகவும் பழக்கமுள்ளவர்கள் மட்டும் வெகு சாமர்த்தியத்துடன் இறங்கிப் போய் விடலாம். நல்லப்பரோ வசந்தாவோ அந்தப் பக்கம் இறங்கிப்போயிருக்க முடியாது——வெகு நேரம் வரை சுற்றிச் சுற்றித் திரும்பத் திரும்ப சோதனை போட்டு விட்டுப் போலீசார் மிகவும் ஏமாற்றம் அடைந்து விலங்கிட்ட அந்த ஒரு ஆசாமியை மட்டும் கூட்டிக்கொண்டு வந்த வழியே திரும்பிவிட வேண்டியதாயிற்று——அந்த வீட்டின் எந்தப் பாகத்திலும் கள்ள வழி இருக்கும் என்றும் அதை விடிந்த பிறகு பகலில் பரிசோதிக்க வேண்டும் என்றும் இன்ஸ்பெக்டர் தீர்மானித்து, சப்இன்ஸ்பெக்டரையும் அவருடன் வந்த ஜவான்களையும் அங்கே காவலில் வைத்து விட்டு இன்ஸ்பெக்டரும் மற்றவர்களும் மலையை விட்டிறங்கிப் போய் விடுகிறார்கள்.

காட்சி 39

இடம்: குளத்தூரில் நாச்சிமுத்துவின் ரகசிய வீடு

காலம்: பின்னிரவு

[நாச்சிமுத்துவின் ரகசிய வீட்டில் கீழ்வீட்டில் வசந்தாவையும் மேல்வீட்டில் நல்லப்பரையும் சிறை வைத்துவிட்டு நாச்சிமுத்துவுடன் பேசப்போன கருப்பண்ணனும் வீராசாமியும் அவனுடன் பேச வேண்டியவற்றைப் பேசிவிட்டு வசந்தாவும் நல்லப்பரும் அங்கே இருப்பதற்கு வேண்டிய சௌகரியங்களையும் பந்தோபஸ்துகளையும் ஏற்பாடு செய்துகொண்டு மறுபடியும் அங்கே வருகிறார்கள். வரும்போதே கருப்பண்ணன் போய் மேல்வீட்டிலுள்ள நல்லப்பரிடம் இருக்கக் கூடிய பணம் மோதிரம் கடுக்கன் முதலானவற்றை கைப் பற்றிக் கொள்ள வேணும் என்று வீராசாமி கருப்பண்ணனிடம் சொல்லுகிறான். அதன்படி கருப்பண்ணன் மேல் மாடிக்குப் போகிறான். கருப்பண்ணன் மேல்மாடிக்குப் போனபின் வீராசாமி மெதுவாக வசந்தா இருந்த பக்கத்துக்குப் போகிறான்.

வசந்தா ஒரு பெஞ்சியின் மேல் உட்கார்ந்து கொண்டு தானும் தந்தையும் சிறைப்பட்டிருப்பதையெல்லாம் மறந்து சுந்தரத்தை நினைத்துப் புலம்பிக் கொண்டிருக்கிறாள். கதவுக்கு வெளியில் நின்று வீராசாமி காது கொடுத்துப் புலம்பலைக் கேட்கிறான்.]

வசந்: (தனக்குத்தானே) ஐயோ! தெய்வமே! எங்களை இந்த கதிக்கு ஆளாக்கி விட்டாயே! (தேம்புகிறாள்)...என் உயிரைக் காட்டிலும் உயர்ந்த அந்த சுந்தரத்தை சுட்டுத் தள்ளும்படிச் செய்து விட்டாயே! ஐயோ! அப்பா!...அப்பா! அதை நினைக்க நினைக்க நெஞ்சம் வெடித்துவிடும் போலிருக்கிறதே... (தேம்புகிறாள்) உயிர் இருக்கிறதோ போய்விட்டதோ! ஆ! ஐயோ! ஐயோ! (முகத்திலும் தலையிலும் தன் இரண்டு கைகளாலும் அப்பி அடித்துக்கொள்ளுகிறாள்)...மாடு முட்டிச் செத்துப் போயிருக்க வேண்டிய எனக்காக அவர், மாட்டின் கொம்புகளுக்குத் தன் மார்பைக்கொடுத்து பலமான காயமடைந்து வெகு பாடுபட்டார். (அழுகிறாள்)...எனக்கு விருப்பமில்லாத ஒருவருக்கு என்னை பலாத்காரமாகக் கலியாணம் செய்து விடுவார்களோ என்று நான் தவித்துக்கொண்டிருந்த காலத்தில் எனக்கு சமய சஞ்சீவியாக வந்துதவி என் கவலை

கூர் யெல்லாம் மாற்றினர்...(தேம்புகிறாள்)...எங்கள் வீட்டுக் குள் கொள்ளைக்காரர்கள் நுழையப்போவதை என் தந்தை, அவரை அவமதித்துத் துரத்தி விட்டதையும் மறந்துவிட்டு எங்களுக்கு உதவிசெய்ய ஓடிவந்தார்...ஐயோ! (தேம்புகிறாள்) அவரைச் சுட்ட அந்தப் பாதகன் என்னையும் சுட்டுத்தள்ளி யிருந்தால் வெகு சந்தோஷமாக அவரோடு நானும் சாவேனே.

(புடவை முந்தானையால் முகத்தை மூடிக்கொண்டு குமுறுகிறாள்)

[இந்த சமயத்தில் அதுவரை வெளியே நின்று வசந்தாவின் புலம் பலைக் கேட்டுக் கொண்டிருந்த வீராசாமி ஓசையின்றி உள்ளே வருகிறான். முகத்தை மூடிக்கொண்டு தலையைக் கவிழ்த்து அழுது கொண்டிருந்த வசந்தா வீராசாமி உள்ளே வந்ததைக் கவனிக்கவில்லை. மெதுவாக நடந்து வீராசாமி அழுதுகொண்டிருந்த வசந்தாவின் தோளின் மீது தன் கையை வைக்கிறான். வசந்தா திடுக்கிட்டு நிமிர்ந்து பார்க்கிறாள் வீராசாமி நிற்பதைக் கண்டு துள்ளியெழுந்து தூரம் சென்று வெகு கோபத்தோடு, வீராசாமியை விழித்துப் பார்த்து]

வச : ஐயா! இது ஒரு ஆண்மையா?

வீரா : கோபித்துக் கொள்ளாதே வசந்தா. நீ அழுதுகொண்டி ருப்பது எனக்கு ரொம்ப வருத்தமாக இருக்கிறது...கருப்பண் ணன் ஒரு முரட்டுப் பேர்வழி. முட்டாள்தனமாக அவசரப் பட்டு சுந்தரத்தைச் சுட்டுவிட்டான். போனதைப்பற்றி இனி வருத்தப்பட வேண்டாம். உனக்கு ஒரு குறைச்சலும் இல் லாமல் நான் பார்த்துக்கொள்ளுகிறேன். நீ கவலைப்படாதே.

வச : போதும் உங்களுடைய அனுதாபம். இந்த மூடுமந்திரப் பேச்செல்லாம் எனக்கு வேண்டாம். என்னை என்ன செய்யப் போகிறீர்கள்? அதைச் சொல்லிவிடுங்கள்.

வீரா : என்ன செய்யப்போகிறேன்! உன்னை என் குலதெய்வ மாக வைத்துக் கும்பிட்டுக் கொண்டிருக்கப் போகிறேன். அவ் வளவுதான்.

வச : ஐயா! என்னிடத்தில் இப்படிப்பட்ட கேலிப்பேச்சுகள் ஒன் றும் வைத்துக்கொள்ள வேண்டாம். இந்த இடத்தில் நீங் கள் என்ன வேணுமானாலும் செய்யமுடியும் என்பது எனக்குத் தெரியும். என்னைத் துண்டு துண்டாக வெட்டி விடுவதானா லும் வெட்டிவிடுங்கள். ஆனால் கண்ணியக் குறைவான பேச்சு களுக்கு நான் இடங்கொடுக்க மாட்டேன். நிர்க்கதியாக சிக் கிக்கொண்ட ஒரு பெண் பிள்ளையிடம்...

வீரா : நீ என்னத்திற்கு நிர்க்கதியாகி விட்டதாகப் பயப்படுகிறாய்? உன்னைப் பாதுகாக்க நான் இருக்கிறேன். (தணிந்த குரலில்) நான் கருப்பண்ணன் மாதிரி படிக்காதவனல்ல.

வச : சீச்சி! இதெல்லாம் என்னிடம் பேசவேண்டாம் வெளியே போங்கள்.

(என்று கையை நீட்டிக் கதவைக் காட்டிப் போகச் சொல்லுகிறாள். வீராசாமி பல்லைக் காட்டிக் கொண்டு நிற்கிறான். அந்த சமயத்தில் யாரோ 'வீராசாமி' என்று கூப்பிடுகிறார்கள். அந்த ஓசையைக் கேட்டு வீராசாமி அவ்விடத்தை விட்டுப் போகிறான்.)

காட்சி 40

இடம் : நாச்சிமுத்து ரகசியவீட்டின் மேல்மாடி அறை
காலம் : பின்னிரவு

[இதுவரையிலும் கஷ்டம் என்பதே இன்னதென்று அறியாமல், நாக்கசைத்தால் நாடசையும்படியான செல்வாக்குடன் வாழ்ந்த நல்லப்பர் சுமார் நான்கு மணி நேரத்துக்குள் தமக்கிருந்த சகல சக்திகளையும் இழந்தவராக எங்கோ யார் வீட்டிலோ கைதியாக இருப்பதை நினைத்து நினைத்து பைத்தியம் பிடித்ததுபோல் மாறிவிட்டார். அவர் சிறை வைக்கப்பட்டிருந்த விசாலமான அறையில் ஒரு நாற்காலியின் மீது உட்கார்ந்துகொண்டு நாலா பக்கமும் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டு இருக்கிறார். வீராசாமி சொன்னபடி நல்லப்பரிடத்தில் இருக்கக்கூடிய பணத்தையும் பணமாகக்கூடிய பொருள்களையும் பற்றிக்கொள்ள வேண்டுமென்று மேல் மாடிக்கு வந்த கருப்பண்ணன் வெகு தடபுடலாக நல்லப்பர் இருந்த அறைக்குள் வருகிறான். பெரிய பெரிய சர்க்கார் உத்யோகஸ்தர்கள் வந்தாலும் எழுந்திருக்கும் பழக்கமில்லாத நல்லப்பர் கருப்பண்ணன் உள்ளே வந்ததும் தம்மை மறந்து எஜமானைக் கண்ட ஏவலாளைப் போல் எழுந்து ஒதுங்கி கையைப் பிசைந்துகொண்டு பரிதபிக்கத் தகுந்த காட்சியாக நிற்கிறார்.]

கருப் : என்னய்யா, பெரிய மொதலாளி! சொகமா? ஏன் தூக்கம் வல்லியா?

நல் : எப்படித் தூக்கம் வரும்?

கருப் : ஏன்? மெத்தை, திண்டு, திம்மாசு இல்லியாக்கும்? ஏளை ஜனங்களைப் போட்டுக் கசக்கிச் சாருப்.புளிஞ்சியே, இப்பத் தெரியுதா அந்த சொகம்?

நல் அப்பா? என்னை ஒன்றும் தொந்தரவு செய்யாதே. நீ என்ன கேட்டாலும் தந்து விடுகிறேன்.

கருப் : என்ன கோட்டாலும் தாரியா! அடேயப்பா! தரமாட்டே பின்னெ! நீயாதர்றே? ஒன்னைப் புடிச்ச பிசாசு தருது..... சரி, என்னதர்றே சொல்லு.

நல் : என்னிடத்திலிருக்கிற எல்லாவற்றையும் தந்து விடுகிறேன். என்னையும் வசந்தாவையும் ஒன்றும் தொந்தரவு செய்யாதே.

கருப் : ஒஞ் ச்மாச்சாரத்தைப் பேசு, வசந்தா ச்மாசாரம் அப்பறம். பாக்கலாம்.....எடு. ஒங்கிட்டெ இருக்கிறதை எல்லாம். கக்கு

(உடனே வெகு அவசரமாகத் தன் ஜேப்பில் இருந்த சுமார் மூவாயிரம் ரூபாய் நோட்டுகளையும் எடுத்துக் கொடுக்கிறார். அதை வாங்கிக்கொண்டு, அதை எண்ணுவது போல் அவசரமாகப் புரட்டிப் பார்த்துவிட்டு)

கருப் : இவ்வளவுதானே ?

நல் : இன்னும் தருகிறேன்.....எங்களை ஒன்றும் செய்துவிடாதே அப்பா.

(என்று பல்லைக் கெஞ்சிக் கொண்டு கருப்பண்ணன் முகத்தைப் பார்க்கிறார்.)

கருப் : சரி.....எடு.....ஒன்னை என்ன பண்ணப்போறாங்க?..... நீ ஏளகளைப் படுத்தியிருக்கிற பாட்டுக்கு ஒன்னை என்ன பண்ணினாலும் பாவமில்லை. எங்க அண்ணனைப் பொய்க் கேசிலே சிக்கவச்சி மூணு வருஷம் தண்டனை பண்ணி வச்சேப் பாரு. ஒனக்கு ஐயோண்ணு பாக்கப்படாது. போனப் போவுதுண்ணு இப்ப அதெல்லாம் நாங்கவுனிக்கிலே.....சரி ...சரி...சரி...எடு...இருக்கிற தெல்லாம் நீயே குடுத்துடு.

(நல்லப்பர் தன் இடுப்பில் கட்டியிருந்த 'பெல்ட்டை' அவிழ்க் கிறார். அதன் இரண்டு பக்கத்திலும் உள்ள பைகளில் திணிக்கப்பட்டிருந்த இரண்டு கற்றை நோட்டுகளையும் எடுத்து)

நல் : இந்தாப்பா...இதை எடுத்துக்கோ...எங்களை ஒன்றும் செய் யாமல் விட்டுவிடு.

கருப் : இதுலே எவ்வளவு இருக்குது ?

நல் : ஒவ்வொரு கத்தையிலும் பத்தாயிரம். ஆக இருபது ஆயி ரம் ரூபாய் இருக்கிறது. எடுத்துக் கொள்ளுங்கள் எங்களை ஒன்றும் செய்யாதே.

கருப் : சரி, அந்த மோதரங்களைக் களட்டு.

(இடது கை விரல்களிலிருந்து இரண்டு வைர மோதிரங்களையும் வலது கை விரலில் இருந்த ஒரு வைரத்தன மோதிரத்தையும் கழற்றித் தருகிறார். அவற்றை வாங்கிக்கொண்டு)

கருப் : காதுலே இருக்கிற கடுக்கனை மறந்துட்டியா ? களட்டு.

(காதிலிருந்த வைரக் கடுக்கன்களையும் கழற்றிக்கொடுக்கிறார். அவற்றையும் வாங்கிக்கொண்டு)

கருப்: இவ்வளவுதானே, இன்னும் ஏதாச்சியும் ஒளிச்சி வச்சிருக்கிறையா?

(என்று நல்லப்பருடைய மடியையும் சட்டைப் பைகளையும் கருப்பண்ணன் தொட்டுத் தொட்டுப் பார்க்கிறான். நல்லப்பருடைய சட்டையின் உள் ஜேப்பில் என்னமோ கலகலத்த ஓசை கேட்கிறது.

கருப்: அதென்ன கலகலாங்குது? ஏங்கிட்டையா மறைக்கிறே? எடு அதை.

நல்: அது பணமல்ல சாவிக்கொத்து.

கருப்: ஓ! எடு, எடு...தண்டவாளப் பொட்டிச் சாவியா? அது தானே வேணும்...அதை அங்கியே வச்சிட்டு வந்திருந்தா ஒனக்கு இந்தச் சங்கடமெல்லாம் வந்திருக்காதே, கொண்டா அந்தச் சாவிக் கொத்தை.

(சாவிக் கொத்தையும் நல்லப்பர் கொடுக்கிறார் வாங்கி கொண்டு)

கருப்: இன்னம் ஏதாச்சிம் இருக்குதா?

நல்: இருந்ததல்லாம் கொடுத்து விட்டேனே. இருந்தால் தருவேன். எங்களை ஒன்றும் செய்யாமல் விட்டு விட்டால்...

கருப்: இன்னொண்ணு கேக்கிறேன் தாரியா? அதைத் தந்தா ஒன்னை இப்பவே உட்டுட்றேன்.

நல்: என்ன சொல்லப்பா...தருகிறேன்.

கருப்: ஒம் மவளை எனக்குக் கண்ணாலம் பண்ணிக் குடுத்துடு.

நல்: ஐயோ! (என்று முகத்தைக் கைகளால் மூடிக்கொள்கிறார்)

கருப்: ஏன்...எனக்குக் குடுத்தா என்ன?...அந்தச் சுந்தரம் மட்டும் ஒனக்கு மாமனா மச்சானா? அவனைத்தாங் தொலைச்சிப் புட்டேனே.

நல்: ஐயோ! சுந்தரம் செத்துப்போனானா?

கருப்: சாகாமெ? இன்னுமா இருக்கப்போறான்? இன்னேரம் போயிருக்கும்...உசுரு. அவன் தொலைஞ்சான். ஒம் மவ இனி மேலே சுந்தரதோட கொஞ்ச முடியாது.

[நல்லப்பர் நடுங்கிக்கொண்டு அப்படியே தலையில் கையை வைத்துக்கொண்டு 'ஐயோ' என்று முனகிக்கொண்டு தரையில் உட்காருகிறார். அதை லட்சியம் செய்யாமல் கருப்பண்ணன் அந்த அறையை விட்டு வெளியே போகிறான். படிக்கட்டுகளில் இறங்கப் போனவன்

கொஞ்சம் நின்று யோசனை செய்கிறான். உடனே திரும்பி மேல் வீட்டிலுள்ள வேறொரு அறைக்குப் போகிறான். அங்கிருந்த ஒரு மேஜையின் மீது நல்லப்பரிடமிருந்து தான் வாங்கி வந்த எல்லாவற்றையும் வைக்கிறான். அவற்றிலிருந்து ஒரு பத்தாயிரம் ரூபாய் நோட்டுக் கற்றையையும் இரண்டு வைர மோதிரங்களையும் தன் மடியில் பத்தோபஸ்து செய்து மறைத்துக்கொள்கிறான். மற்றவைகளை எடுத்துக்கொண்டு கீழே வருகிறான். கீழே வந்து 'வீராசாமி' என்று கூப்பிடுகிறான். இந்த சத்தத்தைக் கேட்டுத்தான் வசந்தாவுடன் வாதாடிக்கொண்டிருந்த வீராசாமி அங்கிருந்து வெளியே வந்தது. கருப்பண்ணன் கூப்பிட்ட சிறிது நேரத்துக்கெல்லாம் வீராசாமி அவனிடம் வந்துவிடுகிறான். அந்த வீட்டின் அறைகளில் மட்டும்தான் விளக்குகள் கைக்கப்பட்டன. மற்ற இடங்களில் வெளிச்சமில்லை. அதனால் வசந்தா இருந்த பக்கத்திலிருந்து வீராசாமி வந்தது கருப்பண்ணனுக்குத் தெரியாது. வீராசாமி தன் பக்கத்தில் வந்து சேர்ந்ததும் அவனுடைய கையைக் கருப்பண்ணன் பிடித்து அவ்வீட்டின் மூலையிலிருந்த வேறு ஒரு சிறு அறைக்குக் கூட்டிக்கொண்டு போகிறான். அங்கே சென்றதும் அதுவரையிலும் வீராசாமியின் கையிலிருந்த மின்சாரக் கொள்ளி விளக்கை கருப்பண்ணன் வாங்கிக்கொண்டு அறையின் கதவைத் தாழிட்டு இருவரும் தரையில் உட்காருகிறார்கள்.

வெளிச்சம் காட்டி காட்டி கருப்பண்ணன் தான் வைத்திருந்த பத்தாயிரம் ரூபாய் நோட்டுக் கற்றையையும், மூவாயிரம் ரூபாய் விடுதி நோட்டுகளையும், வைரக் கடுக்கன்களையும், நவரத்ன மோதிரத்தையும், சாவிக் கொத்தையும் வீராசாமிக்குக் காட்டுகிறான்.]

வீரா: இவ்வளவுதானா இருந்தது?

கருப்: ஆமாம், மீதியெல்லாம் தண்டவாளப் பொட்டியிலே தானே இருக்கும். அவசரத்துலே இதுக்குமேலே எடுத்தாரே மிருந்திருக்காது.

வீரா: நல்லப்பர் கையில் என்னேரமும் வைர மோதிரங்கள் டால் வீசிக்கொண்டிருக்குமே. இந்த மோதிரம் ஒன்றுதானா?...வைர மோதிரங்களைக் கழற்றி எங்கேயாவது மறைத்து வைத்திருப்பான் நல்லப்பன். மடி, ஜேப்பு எல்லாம் சோதித்துப் பார்த்தாயா?

கருப்: சோதிச்சிப் பாத்தேன். இதுக்குமேலே ஒண்ணும் இல்லே. வைர மோதிரத்தை யெல்லாம் ஊட்லியே தண்டவாளப் பொட்டிக்குள்ளே வச்சிட்டான் போலத் தோணுது.

வீரா: சரி அந்தப் பெண் வசந்தா போட்டிருக்கிற நகைகளையும் வாங்கலாமா?

கருப்: வாண்டம், வாண்டாம். அந்த நகையெல்லாம் அந்தப் பொண் மேலேயே இருந்தாத்தான் நமக்குக் கண்ணுக்கு அளகு. வாண்டாம் அதெ வாங்கவாண்டாம். அதெக்கேட்டா அந்தப் புள்ளே கண்கலங்கும். அது நமக்கே நல்லாருக்காது.

வீரா: ஆமாம் நானும் அப்படித்தான் நினைக்கிறேன். சரி, இப்போ நல்லப்பரிடத்திலிருக்கிறதில் எதாவது நாச்சி முத்துக்குக் கொடுத்தால்தான் அவன் நமக்கு வேண்டியதையெல்லாம் செய்வான்.

கருப்: ஆமாம், பின்னே? அதென்னமோ நெசந்தான். நாச்சி முத்துக்கு இப்பவே எதாச்சியும் குடுக்குணும். அப்பத்தான் நாம்ப இங்கே பயமில்லாமெ இருக்கலாம்.

வீரா : சரி நாச்சிமுத்துக்கு என்ன தரலாம்?

கருப்: நாஞ் சொல்றதைக்கேளு. இந்த பத்தாயிரத்துலே நீபாதி நாம் பாதி எடுத்துக்கலாம். வைரக் கடுக்கன்லே நீஒண்ணு நாஞ்ஞண்ணு எடுத்துக்கலாம். இந்த மூவாயிரம் ரூவாயும், இந்த மோதரத்தையும் நாச்சி முத்துக்குத் தந்திடலாம்.

வீரா: அது போதாது. நாச்சி முத்துக்கு இன்னும் அதிகமாகக் கொடுக்கவேணும். ஏனென்னல் நீயும் நானும் இப்போ இதை விட்டு வெளியில் எங்கும் போகக்கூடாது. போலீசார் நம்மைத் தேடிக் கொண்டிருப்பார்கள். நாம் எத்தனே நாள் இங்கே இருக்கவேணுமோ. நல்லப்பனும் அவனுடைய மகளும் இங்கே எத்தனே நாளிருப்பது என்பதெல்லாம இப்போது ஒன்றும் சொல்லமுடியாது. இதற்கெல்லாம் தக்க யோசனே சொல்லிப் பெரிய இடங்களில் நமக்கு சிபார்சுதேடி உபகாரம் செய்யக்கூடியவன் நாச்சிமுத்துதான். அவனுக்கு நிறையக் கொடுத்தால்தான் நாம் பயமில்லாமல் இருக்கலாம்.

கருப்: ஆமாம் அதுவும் நெசந்தான். பின்னெ நீ சொல்லு. நாச்சி முத்துக்கு என்ன குடுக்கலாம்?

வீரா: ஆளுக்கு நாலாயிரம் எடுத்துக் கொள்வோம். நாச்சிமுத்துக்கு ஐயாயிரம் ரூபாயும், இந்த மோதிரமும் சாவிக்கொத்தையும் தந்திடுவோம்.

கருப்: சரி அப்படித்தான் செஞ்சாப் பேச்சு. இப்பவே கொண்டு போய் நீயே குடுத்து வேண்டியதெல்லாம் பேசிக்கிட்டுவா. நான் வாண்டாமுண்ணு சொல்றேன்.

(என்று நோட்டுகளைப் பிரித்து பங்கு போட்டுக் கொண்டு அதிலிருந்து ஆளுக்கு ஆயிரம் தந்து மூவாயிரத்தை ஐயாயிரமாக்கி அதையும் நவரத்ன மோதிரத்தையும் கருப்பண்ணன் வீராசாமியிடம் கொடுத்து உடனே கொண்டுபோய் நாச்சிமுத்துவிடம் தந்துவிட்டுப் பேச வேண்டியதைப் பேசிவிட்டு வரச் சொல்லுகிறான்.)

வீரா: அந்தச் சாவிக் கொத்தையும் கொடு.

கருப்: அதென்னத்துக்கு? அது நம்ம கிட்டேயே இருக்கட்டும்.

வீரா: நம்மகிட்ட என்னத்திற்கு? நாமென்ன மறுபடியும் நல்லப்பர் வீட்டுக்குப் போய் இரும்புப் பெட்டிகளைத் திறக்கவா போறோம்?

கருப்: நாச்சிமுத்து மட்டும் அதை வச்சிக்கிட்டு என்ன பண்ணப் போறான்?

வீரா: நாச்சிமுத்து பெரிய பெரிய வியாபாரங்கள் செய்கிறவன். பஞ்சு வியாபாரம் பண்ண அடிக்கடி நல்லப்பர் வீட்டுக்குப் போயிருக்கிறான். பெரிய உத்யோகஸ்தர்கள் எல்லாரும் அவனுக்குச் சிநேகம். அவர்களோடு இப்பக்கூட அவன் நல்லப்பர் வீட்டுக்குப் போகலாம். சமயம்போலப் பார்த்துக் கொள்ளுவான். அதற்கும் இந்தச் சாவிக்கொத்து அவனிடம் இருப்பதுதான் நல்லது. பின்னாலே இந்தச் சாவியைக் கொடுக்க, நல்லப்பனிடம் லக்ஷம் இரண்டு லக்ஷம் வாங்கினாலும் வாங்குவான்.

கருப்: வாங்குவானா? நமக்கும் எதாச்சியும் தருவானா?

வீரா: ஓ! நமக்கும் கேட்டால் இல்லையென்று சொல்லமாட்டான். இதை நாம் இப்போது அவனிடம் கொடுப்பதும் ஒரு நம்பிக்கைக்கு அடையாளம்.

கருப்: அப்படிண்ணா சரி. இந்தா இதையும் குடு.

(என்று சாவிக் கொத்தையும் தருகிறான். அதையும் வாங்கிக் கொண்டு, விளக்கையும் வாங்கிக்கொண்டு கதவைத் திறந்து வீராசாமி நாச்சிமுத்துவிடம் போக மறைந்து விடுகிறான். வீராசாமி போய்விட்டான் என்பதை அறிந்து கொண்டு கருப்பண்ணன் அடிமேல் அடிவைத்து நடந்து, வசந்தா இருந்த பக்கத்துக்கு வருகிறான். வசந்தா இன்னும் சுந்தரத்தை நினைத்து புலம்பிக்கொண்டிருக்கிறாள்.)

வசந்: ஐயோ! குண்டுபட்டு விழுந்துவிட்ட அவருக்குக் கொஞ்சம் தண்ணீர் கொடுக்கக்கூட உதவாதவளாகிவிட்டேனே! அவர் அங்கே விழுந்து கிடப்பதை யாராவது பார்த்து ஆஸ்பத்திரிக்குக் கொண்டு (தேம்புகிறாள்)..... போனார்களோ, இல்லையோ! (குமுறுகிறாள்)

(வசந்தாவின் புலம்பலைக் கேட்டுக்கொண்டே கருப்பண்ணன் அவளிருக்கும் அறைக்குள் வந்து)

கருப்: ஏம்மா ராசாத்தி, ஏன் அழுவுறே?

வச: ஐயா! என் விதியை நினைத்து நான் அழுகிறேன்.

கருப்: ஒனக்கென்னம்மா விதி வந்துடிச்சி, இப்படி அளுவ? நீ ராசாத்தியாச்சே. நீ சொகமம்மா இருப்பே அளுவாதே. ஒன்னைத் தங்கமாவச்சி நாம் பாத்துக்கிறேன். பயப்படாதே.

வச : ஐயா ! எங்கூ என்ன செய்யப் போகிறீர்கள் ?
(என்று ஆத்திரமும் அழுகையுமாகக் கேட்கிறாள்.)

கருப் : கவலைப்படாதே ராசாத்தி. ஒங்களுக்கு நாங்க ஒண்ணும் கெடுதல் பண்ணிப்பிட மாட்டோம்.

வச : என் தங்தை எங்கே? ஏன் அவரை என்னை விட்டுப் பிரித்து வைத்திருக்கிறீர்கள் ? எங்களைக் கொன்று விடுவதானாலும் உடனே செய்துவிடுங்கள். ஏன் இப்படிச் சித்ரவதை செய்கிறீர்கள் ?

கருப் : ஐயையோ ! அப்படிச் சொல்லாதே ராசாத்தி. ஒன்னையா கொல்றது ? ஒன்னைக் கொண்ணு என் உசுரு போயிடுமே. அப்படியெல்லாம் சொல்லாதே. வாண்டாம். கோவிச்சிக் காதே.

வச : பின் என் தங்தையை என்னோடு இருக்கச் செய்யுங்கள்... முதலில். அதற்காக என் மேலிருக்கிற நகைகளை யெல்லாம் தருகிறேன்.

கருப் : ஐயோ ! வாண்டாம் ராசாத்தி, வாண்டாம். ஒம்மேலே இருக்கிற நகையெத்தானை நான் எடுத்துக்குவேன். ஒனக்கல்ல நான் இன்னம் புதுப்புது நகை பண்ணிப்போடணும். இந்தா, பாரு ஒம் பொடவை மூட்டையைக்கூட பத்தரம்மா எடுத்தாந்திருக்கிறேன். ஒங் நகையெல்லாம் ஒம்மேலே இருந்தாத்தான்...

வச : அப்படியானால் என் தகப்பனாரை என்னோடு இருக்கச் செய்யுங்கள் அல்லது என்னை அவர் இருக்கிற இடத்துக்குக் கொண்டு போய் அவரோடு நான் இருக்கச் செய்யுங்கள்.

கருப் : ஒன்னோட கொஞ்சம் தனிக்கப் பேசலாமுண்ணுதான் ஒங்க ஐயாவை மேல் மாடியிலே வச்சது. அவரு சொகம்மா இருக்காரு...ராசாத்தி...கவலைப்படாதே.

வச : என்னோடு தனிக்க என்ன பேச்சு?

கருப் : சொல்றேன். நாளை மறுநாள் ஒங்க அப்பனை ஊட்டுக்கு அனுப்பிடலாம்...

வச : என்ன !

கருப் : ஒன்னை...ஒன்னை...ஒன்னை ஏம் பக்கத்திலியே வச்சிக்கிட்டு ஒம் பால்வடியிற மொகத்தைப் பாத்துகிட்டே இருக்கணுமுண்ணு எனக்கு சொம்ப ஆசை...ராசாத்தி.

வச : சரி, சரி, இன்னேரம் அவர் வந்து சிங்காரம் பேசினுர். இப் போது நீர் வந்து விட்டீராக்கும்

(என்று பதறுகிருள்.)

கருப் : யாரு வந்து சிங்காரம் பேசினது ?

வச : அவர்தான் உங்கள் சேத்தாளி.

கருப் : யாரு...வீராசாமியா ?

வச : ஆ ஆ ஆ ஆ...மாம்.

கருப் : அட அயோக்கியப் பயலே ! இங்கியா வந்திருந்தான் ? கேலியா பேசினன் ? அவன் கெடக்கிறன் 'ராஸ்கோல்' இனிமே அவன் இங்கே வராதபடி நாம் பாத்துக்கிறேன். நீ கவலைப் படாதே ராசாத்தி.

வச : அவரும் வரவேண்டாம். நீங்களும் வரவேண்டாம். போங்கள் வெளியே.

கருப் : அப்படிச் சொல்லாதே ராசாத்தி, ஒனக்கு எல்லா சொக மும் இங்கே நான்தான் கெவனிச்சிக்கப் போறேன். ஒனக்கு ஒரு வேலைக்காரி...சமையக்காரி...கட்டுலு மெத்தை எல்லாம் வரப்போவுது. கவலைப்படாதே ராசாத்தி.

வச : போதும் போதும், வெளியே போங்கள்.

(என்று எரிச்சலோடு கத்துகிருள்.)

கருப் : இந்தா...நானு அந்த வீராசாமியல்ல...ஒன்னே நானு தங்கமா வச்சிருப்பேன்...

வச : தூ !...போ வெளியே.

கருப் : தா...பாரு இந்தக் கருப்பண்ணங்கிட்டே இந்தக் கைவ ரிசை யெல்லாம் காட்டாதே...வாண்டாம்...ராசாத்தி... வாண் டாம்.

வச : கருப்பண்ணனுல் என்ன-வெளுப்பண்ணனுல் என்ன ? என்னைச் சுட்டுக்கொல்ல வேணுமானுல் உன்னுல் முடியும். வேறென்ன செய்துவிடுவாய் ? சுடு...சுந்தரத்துக்கு வந்தது எனக்கும் வரட்டும்.

(என்று வீராவேசத்துடன் கத்துகிருள்.)

கருப் : கோவிச்சிக்காதே ராசாத்தி...நாந் தெரியாமெ சொல்லிப் பிட்டேன். ஒன்னேயா சுடுவேன் என் ராசாத்தியை...கோவிச் சிக்காதே.

(என்று வசந்தாவின் கிட்டே நெருங்குகிருன். உடனே வசந்தா துப்பாக்கியை எட்டி நின்று)

வச : நான் கோபிக்காமல் இருக்கவேணும் என்பது உம்முடைய விருப்பமானால் இப்போது உடனே போய்விடுங்கள், விடிந்த பின் பேசிக்கொள்ளலாம். இப்படியெல்லாம் என்னைத் தொந்தரவு செய்தால் இங்கே என்பிணத்தைத்தான் நீங்கள் பார்க்க முடியும்.

கருப் : ஐயோ ! அப்பிடி ஒண்ணும் செஞ்சிப்பிடாதே ராசாத்தி. நீ செத்தா ஏம் உசுரு போயிடும். வாண்டாம் ராசாத்தி-வாண்டாம். நாம் போயிட்றேன். வெடிஞ்சி பேசிக்கலாம். போவுட்டுமா ?

வச : ஆம், உடனே போய்விடுங்கள்.

(கருப்பண்ணன் வெளியே போகத் திரும்புகிறான். அந்தச் சமயத்தில் நாச்சிமுத்துவிடம் போயிருந்த வீராசாமி உள்ளே நுழைகிறான்)

வீரா : கருப்பண்ணா என்ன சத்தம்? இங்கென்ன செய்கிறாய் நீ?

கருப் : ஒண்ணுமில்லே...சொல்றேன் வா.

(என்று கருப்பண்ணன் வெளியே போகிறான். அவனைத் தொடர்ந்து வீராசாமியும் போகிறான். இருவரும் வெளியிற் போனதும் வசந்தா ஓடிவந்து கதவைப் படாரென்று மூடி தாழிட்டுக்கொள்ளுகிறாள். கருப்பண்ணன் காவலாளிகளைக் கூப்பிட்டு சரியாகக் காவல் செய்யும்படிச் சொல்லுகிறான். வீராசாமியும் கருப்பண்ணனும் வீட்டைவிட்டு வெளியில் போய் தூரமாகச் சென்று ஒரு மரத்தடியில் உட்காருகிறார்கள்.)

கருப் : நாச்சி முத்துக்கிட்டே பணந்தந்துட்டியா?...என்ன சொன்னாரு நாச்சிமுத்து !

வீரா : பணத்தையும் மோதிரத்தையும் சாவிக் கொத்தையும் கொடுத்தேன். நாச்சிமுத்து ரொம்ப சந்தோஷப் பட்டார். இன்னும் பத்துப் பதினைந்து நாளுக்காகிலும் நாம் ரொம்ப ஜாக்ரதையாக இருக்கவேணு மென்று சொன்னார். இந்த இடம் நாச்சிமுத்துக்குச் சொந்தமானது என்று நல்லப்பருக்குத் தெரியப்படாதாம். நாச்சிமுத்துக்கு நல்லப்பர் பழக்கமானவராம். நாளைக்குப் போலீஸ் கச்சேரிக்குப் போய் உளவறிந்து வருவதாகச் சொன்னார். நாம் இரண்டுபேரும் வெளியே தலைகாட்டப்படாது. நல்லப்பரையும் அவருடைய மகளையும் மிகவும் மரியாதையாக நடத்தவேணு மென்றும் அவர்கள் வருத்தப்படும் படியான காரியம் ஒன்றும் செய்துவிடக் கூடாது என்றும் கண்டிப்பாகச் சொன்னார்.

கருப்: அது சரி. அவங்க வருத்தப் பட்ராப்பிலே நாம் என்ன பண்ணப் போறோம் ?

வீரா: பின்னே ! நீ என்னத்துக்கு அந்தப் பெண்ணோடு போய்ப் பேசி தகராறு பண்ணிக்கொண்டாய் ?

கருப்: நானு தகராரு பண்ணினேன் ? இதைக்கேளு வீராச்சாமி... நாஞ்சும்மா வெசாரிக்கலா முண்ணு போனேன். அந்த பொண்ணு நீ என்னுமோ அங்கே போயி அவளோட சிங்காரம் பேசினேண்ணு சொல்லிச்சி...அதுக்குத்தாங் தகராறு என்னையும் வெளியே போண்ணு கத்திச்சி, வேறென்ன ? நீ என்னத்துக்கு அங்கே போனே ?

வீரா: நானும் உன்னுட்டம் விசாரிக்கத்தான் போனேன்...சரி... கருப்பண்ணு ! இப்ப அந்தப்பெண் வருத்தமா இருக்கிற சமயம். நாம் அவளுடன் இப்ப ஒன்றும் பேச்சி வைத்துக் கொள்ளப்படாது. நீயும் போகவாண்டாம், நானும் போகவாண்டாம். கொஞ்சநாள் போகட்டும்.

கருப்: சரி, நானென்ன மாட்டேண்ணு சொல்றேன்...நீயும் அதுகிட்டே போயி ஒண்ணும் சிங்காரம் பேசாதே.

வீரா: இல்லே...வா கொஞ்சம் போய் தலை சாய்ப்போம்.

கருப்: ஆமாம்...கெளக்கே வெளுக்கிற நேரமாயிடிச்சு.

(இருவரும் போகிறார்கள்.)

காட்சி 41

இடம் : பாண்டிநத்தம் ஆஸ்பத்திரி

காலம் : பின்னிரவு

[பாண்டிநத்தம் என்ற ஊர் நல்லப்பர் வீட்டுக்கு ஏழுமைல் தூரத்திலுள்ள ஒரு சிறு பட்டணம். பெரிய போலீஸ் காரியாலயமும், நல்ல ஆஸ்பத்திரியும் ரிவின்யூ டிவிஷனல் ஆபீசும் மற்ற சர்க்கார் காரியலயங்களும் இருக்குமிடம். நல்லப்பர் வீட்டில் அவருடைய அறையிலுள்ள 'டெலிபோன்' மூலமாக சுந்தரம் பேசினது பாண்டி நத்தம் போலீஸ் கச்சேரியுடன்தான். பாண்டி நத்தத்திலுள்ள சர்க்கார் உத்தியோகஸ்தர்களிடம் நல்லப்பர் மிக்க செல்வாக்குடையவர். அவ்வூர் ஆஸ்பத்திரியைப் பெரிதாக்க நல்லப்பர் மிகப் பெருந்தொகை கொடுத்தவர்.

மேலிவிட்டை, விடிந்தபின் பரிசோதிப்பதற்காக சப்இன்ஸ்பெக்டரையும் ஜவான்களையும் காவல் வைத்துவிட்டு மேலையை விட்டு இறங்கிய பெரிய இன்ஸ்பெக்டர் கீழே விழுந்த மண்டை உடைந்த முனுசாமியுடன் நேராக ஆஸ்பத்திரிக்கு வருகிறார். ஆஸ்பத்திரியில் பெரிய டாக்டரும் உதவி டாக்டர்களும் மற்றவர்களும் வெகு பரபரப்பாக வேலை பார்க்கிறார்கள்.

கொள்ளைக்காரர்களைப் போலீசார் சுட்டதில் மூன்றுபேர் உடனே இறந்துவிட்டார்கள். மூப்பத்தேழு பேருக்கு பலத்த காயங்கள். அதில் பதின்மூன்றுபேர் அபாய நிலையில் உள்ளவர்கள். கொள்ளைக் கூட்டத்தார் வீசின வெடிகுண்டு முதலானவற்றால் ஏழு போலீஸ் ஜவான்களுக்கு காயங்கள். அதில் இரண்டு பேருக்கு பலமான காயங்கள்.

ஆஸ்பத்திரியிலுள்ள எல்லாப் படுக்கைகளிலும் அடிபட்டவர்களைப் படுக்க வைத்தாகிவிட்டது. கடைசியாகக் கொண்டு வரப்பட்ட முனுசாமியைப் படுக்கவைக்க இடமில்லை. முதலில் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்ட சுந்தரத்தைப் படுக்க வைத்திருந்த தனியறையில் ஒரு படுக்கைதான் காலியாக இருந்தது. அந்தப் படுக்கையில் முனுசாமியைக் கொண்டு வந்து படுக்க வைக்கிறார்கள்.

முனுசாமியை ஆஸ்பத்திரியின் சிப்பந்திகளிடத்தில் ஒப்படைத்துவிட்டு பெரிய இன்ஸ்பெக்டர், சுந்தரத்தின் நிலைமையைப் பற்றி விசாரிக்கப் பெரிய டாக்டருடன் பேசுவதற்காக டாக்டருடைய அறையில் காத்துக் கொண்டிருக்கிறார். வெகு நேரம் கழித்துப் பெரிய டாக்டர் வருகிறார்.]

பெ. டாக்டர்: ஹல்லோ! வாங்க. ரொம்ப நேரமாகக் காத்திருக்கிறீர்களா?

இன்: ஆமாம். அதனலென்ன உங்களுக்கு 'ஹெவி வொர்க்' ரொம்ப சிரமம்.

டாக்: சிரமம் என்ன! இது என் 'டியூட்டி'...ஆனல் ரொம்ப 'டர்ட்டி ஜாப்'...என்ன பாருங்கோ அந்த சுந்தரம்...ரொம்ப நல்ல பையன். அவனுடைய தகப்பனுர் எனக்கு ரொம்ப ஸ்நேகமாயிருந்தவர். அவருடைய தாய் மாமன் நடராஜன் எனக்கு ரொம்ப வேண்டியவர். கொஞ்ச நேரத்துக்குமுன் வந்திருந்தார். ஒரே பெண்ணை வைத்துக்கொண்டு அவர் இவனுக்கே கொடுக்க வேணுமென்று காத்திருக்கிறர். அந்தப் பையனைச் சுட்டு விட்டார்கள் பாருங்கோ.

இன்: சுந்தரத்தின் 'கண்டிஷன்' எப்படியிருக்கிறது? பிழைத்துக் கொள்ளுவானு?

டாக்: அவன் பிழைத்துக்கொள்ள வேணுமென்றுதான் நினைக்கிறேன். இருந்தாலும் மூன்று நாள் போனல்தான் நிச்சயமாகச் சொல்லலாம். அவனுக்கு உடனடியான அபாயம் ஒன்றும் இல்லை. நல்ல வேளையாகக் குண்டு நெஞ்சுக்குள் போகவில்லை. வலது தோள்பட்டைக்குக் கொஞ்சம் கீழே புகுந்து விலா எலும்பை உராய்ந்து கொண்டுதான் போயிருக்கிறது. ஒரு எலும்பு கொஞ்சம் செதுக்கப்பட்டிருக்கிறது. அந்த எலும்பு உடைந்திருக்கிறதா என்று தெரியவில்லை. 'எக்ஸ்ரே' எடுத்தால்தான் தெரியும். ஏராளமான ரத்தம் சிந்திவிட்டதாலும் கீழே விழுந்தபோது நெஞ்சில் அடிப்பட்டதோ என்னமோ, கொஞ்சம் 'ஹார்ட்' 'அவெக்ட்'டாகியிருக்கிறது. அதனல் பிரக்ஞையில்லை. இன்னும் கொஞ்ச நேரம் போனல் தெளியும் என்று எதிர் பார்க்கிறேன்.

இன்: போகட்டும், இப்போதைக்கு ஒன்றும் 'டேஞ்சர்' இல்லையே? சுந்தரம் நல்ல பையன், எனக்குத் தெரியும்' இரண்டு தடவை நல்லப்பர் வீட்டிலேயே சந்தித்திருக்கிறேன். ரொம்ப மரியாதையாக நடந்து கொண்டான்.

டாக்: இப்போதைக்கு 'டேஞ்சர்' இல்லை. ஆனல் 'ஹார்ட்' பல ஹீனமாக இருப்பதனலே கொஞ்சம் பயப்படவேண்டியிருக்கிறது. பார்ப்போம்.

இன்: மற்றவர்கள்?

டாக்: போலீஸ் குண்டு பட்டவர்களில் இன்னும் ஐந்தாறு பேர்கள் பிழைக்கமாட்டார்கள் என்று தோன்றுகிறது. எல்லாம் நாளைக்குத்தான் நன்ருகத் தெரியும்...அது போகட்டும்...நல்லப்பருக்கும் அவருடைய பெண்ணுக்கும் ஒன்றும் அபாயமில்லையே?

இன் : அவர்கள் கிடைக்கவில்லையே !

டாக் : கிடைக்கவில்லையா ! அப்புறம் ?

இன் : நாங்களும் அந்தக் கொள்ளைக்காரர்களின் ரகசிய இடமான மலை வீட்டைக்கூட சோதனை போட்டு விட்டோம். நல்லப்பரையும் அவருடைய மகளையும் அங்கே கொண்டுபோயிருப்பதாகத்தான் எல்லாரும் சொன்னார்கள். அங்கே ஏதாவது கள்ள அறையோ கள்ள வழியோ இருக்க வேணும் என்று அதை விடிந்த உடன் சோதனை செய்யப் போகிறோம். காவல் வைத்துவிட்டு வந்திருக்கிறேன். இங்குளள நிலைமைகளைப் பார்த்துவிட்டுப் போக வந்தேன். மறுபடியும் இதோ மலைக்குப் போகிறேன்.

டாக் : என்ன சார், இந்தக் கொள்ளைக் கூட்டத்தையெல்லாம் அப்போதைக்கப்போது அடக்காமல் இப்படி வளரவிட்டு விட்டீர்களே ?

இன் நானென்ன டாக்டர் பண்ணட்டும். அங்கேயிருந்தவர்கள் அப்படி கவனக் குறைவாக இருந்துவிட்டார்கள். ஒரு மாதத்துக்கு முன்னாலேயே அங்கே ஒரு மாந்தோப்பில் இந்தக் கொள்ளைக் கூட்டத்தார் கூடுவதாக வதந்தி வந்தது. நான் அதை உடனே கவனிக்கச் சொல்லி ஒரு 'ஹெட்கான்ஸ்டபிளையும் சில ஜவான்களையும் அனுப்பினேன். அவர்கள் அங்கே ஒன்றும் இல்லை யென்று 'ரிபோர்ட்' அனுப்பிவிட்டார்கள்.

(இந்தச் சமயத்தில் ஒரு அஸிஸ்டன்ட் டாக்டர் வந்து பெரிய டாக்டரிடம்)

அஸிஸ் : சுந்தரம் கண்ணைத் திறந்து பார்த்து குடிக்கத் தண்ணீர் வேண்டுமென்று ஜாடை காட்டுகிறார்.

டாக் : அப்படியா...இதோ நான் வருகிறேன். வெறும் 'வாட்டர்' கொடுக்க வேண்டாம்.

(என்று பெரிய டாக்டர் எழுந்து போகிறார். கூடவே இன்ஸ்பெக்டரும் போகிறார். சுந்தரம் டாக்டரையும் இன்ஸ்பெக்டரையும் அடையாளம் அறிந்தவன்போல் குட்டிடுகிறான். பேச சக்தியில்லாமல் தண்ணீர் வேணும் என்று இடதுகைப் பெருவிரலை வாயில் வைத்துக் காட்டுகிறான். பெரிய டாக்டர் 'மிக்ஸ்சர்' தருகிறார். சுந்தரம் அதை ஆவலோடு குடிக்கிறான்.)

காட்சி 42

இடம்: சுந்தரத்தின் தாயார் மீனாட்சியம்மாள் வீடு

காலம்: அதிகாலை

[சுந்தரத்தின் தாய்மாமன் நடராஜன் வசிக்குமிடம், பாண்டி நகரம் ஊருக்கு ஒரு மைல் தூரத்தில் உள்ளது. நடராஜன் பெரிய மிராசுகார். அவருடைய பண்ணை மிகவும் பிரசித்தி பெற்றது. பாண்டி நகரத்திலும் அதைச் சுற்றியுமுள்ள இடங்களிலும் நடராஜன் மிகவும் மதிப்புள்ளவர். அவருடைய ஒரே குழந்தையான ராஜேஸ்வரியைத் தன் தமக்கை மகன் சுந்தரத்துக்கே விவாகம் செய்து கொடுக்க வேணும் என்று காத்திருக்கிறார் என்றும், ஆனால் சுந்தரம் அதை லக்ஷியம் செய்யாமல் வேறொரு பணக்காரர் வீட்டுப் பெண்ணின்மேல் ஆசையாக இருக்கிறானென்றும் அவ்வூர் ஜனங்கள் அடிக்கடி பேசிக்கொள்வதுண்டு. அதனால் சுந்தரத்தைப் பற்றி அங்கே எல்லாருக்கும் நன்றாகத் தெரியும். நடராஜருடைய மகள் ராஜேஸ்வரி வெகு நல்ல அழகும் குணமும் உள்ளவள் ஆயிற்றே, அவளை மணந்து கொள்ளாமல் சுந்தரம் வேறு ஒரு பெண்ணை நாடுகிறானே என்பதில் அந்த ஊராருக்குச் சுந்தரத்தின்மேல் கொஞ்சம் வருத்தம்தான். ஆனாலும் சுந்தரம் மிகவும் நல்லவன் என்பதற்காகவும் அவனுடைய தாய் தந்தையரின் தயாள குணத்திற்காகவும் அவன்மேல் ஜனங்களுக்கு அநுதாபம். அப்படிப்பட்ட சுந்தரம் துப்பாக்கியால் சுடப்பட்டு அபாய நிலைமையில் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டதை ஆஸ்பத்திரி வேலைக்காரர்களில் ஒருவன் உடனே ஓடி நடராஜனுக்குத் தெரியப்படுத்தினான். நடராஜன் தன்னுடைய வீட்டின் மூன் கட்டில் படுத்திருந்தார். மகளும் மனைவியும் வேலைக்காரியும் மேல் மாடியில் தூங்கிக் கொண்டிருந்தார்கள். மகளுக்கு அந்தச் சங்கதி தெரிந்தால் அவளும் ஆஸ்பத்திரிக்கு வந்து துக்கப்படுவாள் என்று வீட்டில் மற்றவர்களுக்குத் தெரிவிக்காதிருக்கும்படி நிட்டம் செய்து விட்டு தன்னுடைய 'மோட்டார் டிரைவரை' மட்டும் எழுப்பி 'காரில்' ஆஸ்பத்திரிக்குப் போனார். பெரிய டாக்டரைச் சந்தித்து சுந்தரத்தின் நிலைமையைப் பற்றி விசாரித்தார். சுந்தரத்துக்கு உடனடியாக அபாயம் ஒன்றுமில்லை என்று தெரிந்து கொண்டு, அவன் படுக்கையில் கிடந்ததையும் பார்த்துவிட்டு உடனே தன் தமக்கை மீனாட்சியம்மாள் வீட்டுக்கு வருகிறார். விடிந்த சமயம்.

செங்கோடன் வந்து வசந்தாவுக்கு என்னமோ அபாயம் என்று சொன்னதைக் கேட்டு அவனுடன் சுந்தரம் போனபின் மீனாட்சியம்மாளுக்குத் தூக்கம் வரவில்லை. வசந்தாவுக்கு நேர்ந்த அபாயத்தைப் பற்றித் தன்னிடம் சொல்ல சுந்தரம் சிக்கிரமாக வருவான் என்ற ஏக்கத்தோடு விடிய விடிய மீனாட்சியம்மாள் தலைசாய்க்கவில்லை. விடிகிற சமயத்தில் மிகவும் அயர்ச்சி வந்து ஒரு சாய்வு நாற்காலியில் படுத்துக் கொஞ்சம் கண்ணயர்ந்து இருக்கிறாள். நடராஜன் மெதுவாகக் கதவைத் தட்டினார். சுந்தரம்தான் வந்து விட்டானுக்குமென்று மீனாட்சியம்மாள் வெகு அவசரமாகப் போய்)

மீனா : ஏம்ப்பா இவ்வளவு நேரம் ? வசந்தா சௌக்யந்தானே ?

(என்று சொல்லிக்கொண்டே கதவைத் திறக்கிறாள். சுந்தரம் அல்லாமல் வேறு யாரோ நிற்பதைப் பார்த்து)

மீனா : யாரது ?...சுந்தரம் அல்லவா ?

நட : சுந்தரமல்ல, நான்.

மீனா : யார் நடராஜனா ! ஏதப்பா இன்னேரத்திலே, இப்படி வந்தது ? ஏதாவது விசேஷம் உண்டா ?

நட : ஆமாம் விசேஷம்தான்; அதை அப்புறம் சொல்லுகிறேன். குழந்தைகளெல்லாம் தூங்குகிறார்களா ?

மீனா : ஆமாம்.

நட : சரி. அவர்களை எழுப்பவேண்டாம்; நீமட்டும் என்னோடு வா.

மீனா : எங்கே ? என்ன சங்கதி, சொல்லேன்.....

நட : சொல்றேன். நீ புறப்படு.

மீனா : வீட்டில் யாருமில்லையே. குழந்தைகள் முழிச்ச உடன் என்னைக் காணுமல் தேடுவார்களே ! கொஞ்சம் பொறு, வேலைக்காரி வந்துவிடுவாள். அவளிடம் சொல்லி ஏற்பாடு செய்துவிட்டுப் போவோம்...அதிருக்கட்டும்; என்ன அவசரம்...எனக்கு என்னமோபோலிருக்கிறது. விஷயத்தைச் சொல்லு.

நட : விஷயமா ? இங்கே வா. (என்று ஒரு ஏகாந்த இடத்துக்குக் கூட்டிக்கொண்டு போய்) நல்லப்பர் வீட்டில் நேற்று ஜாமத்தில் கொள்ளைக்காரர்கள் புகுந்து விட்டார்களாம். சுந்தரம் அப்போ நல்லப்பர் வீட்டில் இருந்திருக்கிறான். நல்லப்பரும் சுந்தரமும் வசந்தாவும் வீட்டுக்குப் பின்பக்கமாகத் தப்பி ஓடினார்களாம். சுந்தரம் வசந்தா கையைப் பிடித்துக் கொண்டு ஓடினானும். அப்போ...ஆபத்து

ஒன்றுமில்லை...நீ நான் சொல்லப் போகிறதைக் கேட்டு அழ ஆரம்பிச்சிடப்படாது...சுந்தரமும் வசந்தாளும் ஓடுவதைப் பார்த்து கொள்ளைக்காரர்களில் யாரோ சுந்தரத்தின் மேல் துப்பாக்கியால் சுட்டானும். சுந்தரத்துக்குக் குண்டுபட்டு ஆஸ்பத்திரிக்கு...

மீனு : ஐயோ! குண்டா! சுந்தரத்தின் மேலா...ஐயோ மகனே... சரி போவோம் வா ஆஸ்பத்திரிக்கு. ஐயோ...என் தலையில் இடி விழுந்துவிட்டதே.

நட : அக்கா...பதறுதே...காயம் லேசான காயந்தான். டாக்டர் பயமில்லை என்று சொல்லிவிட்டார்.

மீனு : சுந்தரத்தை நீ பார்த்தாயா ?

நட : நானே பார்த்தேன். டாக்டரோடு நானே பேசினேன். நே... ரா...ஆஸ்பத்திரியிலிருந்து வந்தேன்...உனக்குச் சொல்லி பயமில்லாமல் இருக்கச் செய்யத்தான் வந்தேன்.

மீனு : போகலாம் வா...ஆஸ்பத்திரிக்கு...வேலைக்காரி வந்துடு வாள்...அவளே குழந்தைகளைப் பார்த்துக்கொள்வாள்...வா.

நட : வேணுமானால் என் டிரைவரை இங்கே இருக்கச் சொல்லி விட்டு நாம் போவோம்.

மீனு : ஆமாம். அப்படிச் செய்யடாப்பா-வா-போவோம்.

(மீனுட்சியம்மாள் முன்னாலும் நடராஜன் பின்னாலுமாக இருவரும் வெளியே வேகமாக வருகிறார்கள். அதே சமயத்தில் வேலைக் காரியும் வந்து விடுகிறாள். மீனுட்சியம்மாள் வேலைக்காரி யிடம் வீட்டையும் குழந்தைகளையும் பார்த்துக் கொள்ளத் திட்டப் படுத்துகிறாள். இருவரும் மோட்டாரில் ஏறுகிறார் கள். கார் போகிறது.)

காட்சி 43

இடம்: பாண்டிநத்தம் ஆஸ்பத்திரி

காலம்: காலை

[நடராஜனும் மீனாட்சியம்மாளும் ஆஸ்பத்திரிக்கு வருகிறார்கள். பெரிய டாக்டர் வீட்டுக்குப் போயிருக்க, உதவி டாக்டர் நடராஜனை வரவேற்கிறார். நடராஜன் தமக்கையை அறிமுகப்படுத்த]

நட : இவர்கள்தான் என் தமக்கை. சுந்தரத்தின் தாயார். சுந்தரத்தைப் பார்க்க விரும்புகிறார். பார்க்கலாமா ?

டாக் : பெற்ற தாயார் மகனைப் பார்ப்பதற்குத் தடையும் உண்டா? ஆனால் சுந்தரம் மப்பு மயக்கமெல்லாம் நீங்கி ஆகாரமும் மருந்தும் சாப்பிட்டார். இப்போது அயர்ந்து தூங்குகிறார். அப்படித் தூங்குவது மிகவும் நல்லது. இப்போது தூக்கத்தைக் கெடுக்கக் கூடாது. அவராக விழிக்கட்டும். கொஞ்சம் பொறுங்கள்.

நட : சுந்தரத்தின் நிலைமை எப்படியிருக்கிறதென்பதை அக்காளுக்குக் கொஞ்சம் சொல்லுங்கள். ரொம்ப பயப்படுகிறார்கள்.

டாக் : ஓ! அவருடைய 'கண்டிஷன்' மிகவும் திருப்தியாக இருக்கிறது. கொஞ்சம்கூட பயப்பட வேண்டியதில்லை. ஒரே வாரத்தில் குணமடைந்துவிடுவார்.

மீனு : என் வயிற்றில் பால் வார்த்தீர்கள். நீங்கள் மகராஜராக இருக்கவேணும்...அவன் தூங்கட்டும், இப்போ எழுப்ப வேண்டாம். முழிக்கிறவரை நான் காத்திருக்கிறேன்.

நட : இங்கே காத்திருப்பானேன் அக்கா ? வீட்டுக்குப் போய் ஆகாரம் பார்த்துக்கொண்டு வரலாமே.

மீனு : சுந்தரத்தைப் பார்த்து அவனோடு ரெண்டு வார்த்தை பேசாமல் எனக்கு ஆகாரம் செல்லுமா அப்பா?...அவனைப் பார்த்துவிட்டு அப்புறம் வீட்டுக்குப் போவோம்.

நட : சரி, அப்படியே செய்வோம்.

(உதவி டாக்டர் நடராஜனையும் மீனாட்சியம்மாளையும் பெரிய டாக்டருடைய 'ஆபீஸ்' அறைக்கு அழைத்துக் கொண்டு போய் அங்கே இருக்கச் செய்கிறார். இருவரும் இரண்டு நாற்காலிகளில் உட்கார்ந்து கொண்டு)

மீனு : ராஜேஸ்வரி சௌக்யமாக இருக்கிறாளா?

நட : ராஜேஸ்வரியின் சௌக்யத்தைப் பற்றி உன் மகனுக்கும் உனக்கும் என்ன அக்கறை?

மீனு : என்ன நடராஜா திடீரென்று இப்படிச் சொல்லிவிட்டாய்? சுந்தரத்துக்கும் எனக்கும் ராஜேஸ்வரியின் சௌக்யத்தைப் பற்றிய அக்கறை இல்லாமலென்ன?

நட : உனக்கு இருக்குமக்கா! ராஜேஸ்வரியைப் பற்றிய அக்கறை கொஞ்சமாவது உனக்கு இருக்கும்...ஆனால் இந்தப் பயல் சுந்தரம் இப்படி மோசக்காரன் ஆவானென்று நான் கனவிலும்கூட நினைக்கவில்லை.

மீனு : சுந்தரம் என்ன மோசம் செய்துவிட்டான்?

நட : என்ன மோசமா! ராஜேஸ்வரி பிறந்த நாளாக அவனே சுந்தரத்துக்கே கொடுக்க வேணும் என்று நீ கேட்டுக்கொண்டிருந்தாய். நானும் சம்மதித்துக் காத்துக்கொண்டிருந்தேன். ராஜேஸ்வரியும் 'கட்டிக்கொண்டால் சுந்தரத்தையேதான் கட்டிக்கொள்வேன்' என்று சொல்லிக்கொண்டிருந்தாள்.

நட : அவன் முன்னே எப்போதோ அப்படிச் சொன்னதைக்கும். இவள் இரண்டு நாளைக்கு முன்னால்கூட சுந்தரத்துக்குக் காதல் கடிதம் எழுதிக்கொண்டிருந்தாள். அதை நான் அகஸ்மாத்தாகப் பார்க்க நேர்ந்தது. உடனே அந்தக் கடிதத்தைக் கிழித்தெறிந்துவிட்டு இனிமேல் அவனுக்குக் கடிதம் எழுதக் கூடாதென்று கண்டித்துவிட்டேன்.

மீனு : அதேன் அப்படிச் செய்தாய்?

நட : அவன்தான் நல்லப்பருடைய பெண் வசந்தாவைக் கல்யாணம் செய்துகொள்ளப் போகிறானே! அந்த மோசக்காரப் பயலுக்கு இவள் ஏன் இன்னும் ஆசைக் கடிதம் எழுதிக் கொண்டிருக்க வேணும்?

மீனு : சுந்தரம் வசந்தாவைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளப் போவதாக யார் சொன்னது?

நட : யார் சொன்னதா! ஊரே சொல்லுது. சுந்தரமும் வசந்தாவும் கொஞ்சிக் குலவிக்கொண்டிருக்கிறதைப் பற்றி எத்தனையோ பேர் அடிக்கடி என்னிடமே சொல்லியிருக்கிறார்கள். அதனால்தான் ராஜேஸ்வரியின் கலியாணத்தைப் பற்றி நான் எழுதின கடிதங்களுக்கெல்லாம் பதில் சொல்லாமல் தட்டிக் கழித்துக்கொண்டே வந்திருக்கிறான்.

மீனு : ஊரார் எதை வேணுமானாலும் சொல்லிவிடுவார்கள். அதையெல்லாம் நம்பாதே. சுந்தரமும் வசந்தாவும் சிறு வயசு முதல் ஒன்றுபட படித்தவர்கள். வசந்தா நமக்கு எவ்வளவோ உபகாரம் செய்திருக்கிறாள். அதனால் சுந்தரம் அவளிடத்தில் ரொம்ப நன்றி விசுவாசத்தோடு நடந்து கொண்டு வருகிறான். அவர்கள் ரொம்ப நெருங்கிப் பழகுவதைப் பார்த்து இப்படியெல்லாம் ஊரில் கட்டுக்கதை பேசலாம். அதைக் கேட்டு நீ...

நட : கட்டுக் கதையா! சுந்தரம் வசந்தாவுக்கு எழுதின காதல் கடிதத்தை நல்லப்பரே கையும் மெய்யுமாகப் பிடித்துக் கொண்டு அவனை வேலையிலிருந்து நீக்கி, இனிமேல் அவருடைய வீட்டுப் பக்கம் வந்தால் 'சுட்டுவிடுவேன்' என்று சொல்லித் துரத்திவிட்டாராமே, தெரியாதா உனக்கு?

மீனு : ஐயோ! அப்படியா? அது தெரியாதே எனக்கு. என்னமோ நல்லப்பர் அவனைக் கோபித்துக் கொண்டதாக ரொம்ப விசனத்தோடு சொன்னான். அதுதான் தெரியும்.

நட : அதற்குமேல் தன்னுடைய காதல் கடிதத்தை நல்லப்பர் கண்டு பிடித்து விட்டாரென்பதை உன்னிடத்தில் அவன் சொல்லுவானா!... நேற்று அவனை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்த பிறகுதான இதெல்லாம் என காதில் விழுந்தது. நல்லப்பர் சுந்தரத்தை அவருடைய வீட்டிலிருந்து துரத்தினபோது பக்கத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்த ஒருத்தனே என்னிடம் சொன்னான் அக்கா இதை.

மீனு : அதென்னமோப்பா இதெல்லாம நான் நம்பவே முடியலே

நட : நீ நம்புவாயா. உனக்கு இதெல்லாம் என்ன தெரியும். இதுமட்டுமல்ல...நல்லப்பர் வீட்டுக்குள்ளே கொள்ளைக் காரர்கள் புகுந்ததே இதனால்தானும்.

மீனு : கொள்ளையடிக்கப் புகுந்ததற்கும் இதற்கும் என்னப்பர் சம்பந்தம்?

நட : சம்பந்தமா? சொல்லுகிறேன் கேளு. சுந்தரத்துக்கும் இந்தப் புரட்சிக்காரருக்கும் சிநேகமாம். புரட்சிக்காரருக்குள் சில பேருக்கு சுந்தரத்தின மேல் கோபமாம். சுந்தரமும் வசந்

தாவும் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறார்கள் என்பதில் அவர்களுக்குப் பொருமையாம். அதனால் சுந்தரம் கல்யாணம் செய்து கொள்ளுவதற்கு முன்னால் வசந்தாவைத் தூக்கிக்கொண்டு போய் விடவேண்டும் என்றுதான் திட்டம் போட்டு கல்லப்பர் வீட்டுக்குள் புகுந்தார்களாம்.

மீனு: நடராஜா, இதையெல்லாம் நீ நம்பாதே. ஒன்றுக்கு ஒன்பதாகத்தான் கட்டிவிடுவார்கள். சுந்தரம் ஏதாவது வசந்தாவுடன் கேலி விளையாட்டு பேசியிருக்கலாம். சிறு வயசுகளுக்கு அது சகஜந்தானே?

நட: ஆமாமாம். அது அவனுக்கு சகஜம்தான்...கடைசியில் என் பெண்தானே அவனை நம்பியிருந்து மோசம் போனாள்? அவனுக்கென்ன?...மற்றவர்களுக்குத்தான் என்ன?

மீனு: தம்பீ! இப்படியெல்லாம் வருத்தப்படாதே! சுந்தரத்துக்கு நான் சொல்லி எல்லாம் சரிப்படுத்தி விடுகிறேன். அதுவும் இப்படியெல்லாம் அவனுக்கு அபாயம் வந்த பிற்பாடு இனி மேல் நாம் விரும்புகிறபடி நடந்து கொள்வான்.

நட: அந்த நம்பிக்கை எனக்குத் துளிகூட இல்லை. 'காதல்' 'காதல்' என்று சொல்லிக்கொண்டு இந்தக் காலத்துப் பசங்கள் கஷ்டங்களையே கட்டிக்கொண்டு அழுவார்களே ஒழிய நீயும் நானும் சொல்லுவதைக் கேட்கமாட்டார்கள். இனிமேல் சுந்தரத்துக்கு ராஜேஸ்வரியின்மேல் மனம் திரும்பாது. நானும் ராஜேஸ்வரியை வேறு ஒருவருக்கு விவாகம் செய்து கொடுத்து விட நிச்சயம் செய்துவிட்டேன்.

மீனு: ஐயோ! இதற்கா இவ்வளவும் பேசினாய்?

நட: பின்னெதற்கு? 'சுந்தரத்தை யாரோ சுட்டுவிட்டார்களாம். அவனை ஆஸ்பத்திரிக்குத் தூக்கிக்கொண்டு வந்திருக்கிறார்கள்' என்றதைக் கேட்டு என் மனசு பொறுக்காமல் உனக்காக ஓடிப்போய் அவனைப் பார்த்துவிட்டு உன்னைக் கூட்டிவர வந்தேன். அவன் என் மருமகன் ஆகப்போகிறான் என்ற ஆசையினால் அல்ல.

(இந்தச் சமயத்தில் உதவி டாக்டர் வருகிறார். நடராஜனையும் மீனாட்சியம்மாளையும் பார்த்து)

டாக்: சுந்தரம் விழித்துக்கொண்டார். நீங்கள் வந்திருப்பதாகச் சொன்னேன். உங்களைப் பார்க்க விரும்புகிறார்.

(மீனாட்சியம்மாளும் நடராஜனும் உடனே எழுந்து டாக்டர் பின்னால் சுந்தரம் படுத்திருந்த அறைக்குப் போகிறார்கள். சுந்தரம் நடராஜனுக்கு வணக்கம் காட்டக் கையெடுக்கிறான். மீனாட்சியம்மாள் தாவிக்கொண்டு மகனிடத்தில் ஓடி சுந்தரத்தின் முகத்தைத் தன் கைகளால் தடவி அழுகுரலாக)

மீனு: வசந்தாவுக்கு என்னுமோ அபாயம் என்று ஓடினயே, உனக்கே அபாயம் வந்துவிட்டதேடா அப்பா, என் கும்பி குழம்புகிறதே.

சுந்: அம்மா எனக்கு ஒரு அபாயமும் இல்லே. நீங்கள் கவலேப்பட வேண்டாம். இரண்டு மூன்று நாளில் நான் சுகமடைந்து விடுவேன். சும்மா சொற்பம் காயந்தான்.

மீனு: வசந்தாவுக்கு ஒன்றும் அபாயமில்லேயே?

சுந்: அதுதானே அம்மா எனக்குக் கவலேயாக இருக்கிறது. வசந்தா என்ன கதியானுளோ தெரியவில்லேயே. என்னேச் சுட்டுவிட்டு அந்தக் கொள்ளேக்காரர்கள் வசந்தாவையும் நல்ல்ப்பரையும் எங்கேயோ கொண்டுபோய் விட்டார்களாம். மலேயிலுள்ள அவர்களுடைய ரகசிய இடங்களேயெல்லாம்கூட போலீசார் சோதனே செய்துவிட்டார்களாம். வசந்தா அகப் படவில்லேயாம். இன்ஸபெக்டர் மறுபடியும் போயிருக்கிருராம். சற்று நேரத்துக்கு முன்னல்தான் எனக்கு டாக்டர் சொன்னர்.

மீனு: சரி, நீ அதற்காக ஒன்றும் மனசை அலட்டிக்கொள்ளாதே. உடம்புக்குக் கெடுதலாகும்...நான் ஆரம்பத்திலேயே சொன் னேன்—இந்தப் புரட்சிக்காரர்கள் பேச்செல்லாம் கொள்ளேயி லும் கொலேயிலும்தான் முடியும் என்று—அது சரியாப் போச்சு...போனது போகட்டும், நீ சும்மா வசந்தாவையே நினேத்துக்கொண்டு சங்கடப்படாதே.

சுந்: அம்மா, எப்படியம்மா வசந்தாவைப் பற்றிக் கவலேப்படாமல் என்னல் இருக்க முடியும்? அடுத்த வேளே ஆகாரத்துக்கு என்ன செய்வது என்று தெரியாமல் மனம் உடைந்து தவித்துக் கொண்டிருந்த சமயத்தில் நமமுடைய துன்பத்தை யெல்லாம் நீக்கி வைத்தவள் அவளல்லவா? அது மட்டுமா! எனக்கு அளவில்லாத அன்புகள் செய்து தன்னுடைய சுக துக்கங்கள் எல்லாவற்றிற்கும் என்னேயே நம்பியிருக்கிற வசந்தாவுக்கு நேர்ந்த கதியைப் பற்றி நினேக்காமலிருக்க என்னல் முடியுமா?

மீனு: நமக்கு வசந்தா செய்திருக்கிற உதவிகளுக்காக நாம் நன்றி யுள்ளவர்களாக இருக்க வேண்டுமென்பதை நான் இல்லே யென்பேனு? இருந்தாலும் உன் உடம்பு இருக்கிற நிலேமை யில்...

சுந்: என் உடம்பைப் பற்றிப் பயமில்லே. அதைப் பற்றி எனக்கு விசாரமும் இல்லே. வசந்தாவின் மானத்துக்கு என்ன குறைவு செய்துவிடுவார்களோ என்ற கவலேதான் எனனே வாட்டு

கிறது. அவளுக்கு ஏதாவது கெடுதி நேர்ந்தால் என் வாழ்விற்கே கெடுதி நேர்ந்துவிட்டதாகத்தான் நினைக்கவேண்டும். வசந்தாவை மறுபடியும் பார்க்கிறவரை என் உள்ளம் பதைத்துக்கொண்டுதான் இருக்கும்.

(இதைக் கேட்டு நடராஜன் அந்தப் பேச்சில் சுந்தரம் வசந்தாவின்மேல் கொண்டுள்ள காதலின் பலம் காணப்படுவதாக அறிந்து கொண்டவர்போல் முகத்தைச் சுருக்கித் தலையை அசைக்கிறார். பக்கத்திலிருந்த டாக்டர் சுந்தரத்திடம்)

டாக்: நீங்கள் இப்படியெல்லாம் கவலைப்பட்டு உடம்பைக் கெடுத்துக்கொள்ளக் கூடாது. அதிகமாகப் பேசுவதே கூடாது. வசந்தாவைப் போலீசார் கண்டுபிடித்து மீட்டுவிடுவார்கள். நீங்கள் நிம்மதியாகத் தூங்குங்கள். (மற்றவர்களைப் பார்த்து) நீங்களும் அவரோடு பேச்சு கொடுக்காமல் விலகிப் போய் விடுவது நல்லது. பெரிய டாக்டர் வந்தால் என்னைக் கோபித்துக் கொள்வார்...தயவு செய்து அவரைத் தனியே இருக்க விட்டுவிடுங்கள். மற்றதெல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன்.

(எல்லாரும் போகிறார்கள்.)

காட்சி 44

இடம் : நாச்சிமுத்துவின் ரகசிய வீடு

காலம் : காலை

[முந்தின இரவு விடியற் காலையில் கருப்பண்ணன் வசந்தா சிறை வைக்கப்பட்ட அறைக்குட் சென்று அவளோடு ஆசை வார்த்தைகள் பேச, அவள் அதற்காக அவனைக் கடிந்து வெளியே போகச் சொன்னாள். அந்தச் சமயத்தில் நாச்சி முத்துக்குப் பணம் கொடுக்கப் போயிருந்த வீராசாமி அங்கே வந்துவிட, கருப்பண்ணன் அறையைவிட்டு வெளியே போனான். அவர்கள் இருவரும் வெளியே போனவுடன் வசந்தா அந்த அறையின் கதவைச் சாத்தித் தாழிட்டுக் கொண்டாளல்லவா ?

விடிந்து வெகு நேரம்வரைக்கும் கதவு திறக்கப்படவில்லை. நாச்சிமுத்து நல்லப்பரையும் வசந்தாவையும் மிக்க மரியாதையுடன் நடத்த வேணுமென்பதற்காக அவர்களுக்கு ஸ்னானம் ஆகாரம் முதலிய சௌகரியங்களைக் குறைவறச் செய்ய ஏற்பாடு செய்திருந்தான். அந்த ஏற்பாட்டின் பிரகாரம் நல்லப்பருக்கு ஒரு வேலைக்காரனையும், வசந்தாவுக்கு ஒரு வேலைக்காரியையும் நியமித்து நல்லப்பருக்கும் வசந்தாவுக்கும் வேண்டிய பணிவிடைகளைச் செய்து அவர்களுக்கு ஆகாரம் கொண்டுபோய் கொடுக்கவும் பணித்திருந்தான். அந்த வீட்டிலேயே உள்ள சமையற் கட்டில் நல்லப்பர், வசந்தா, வீராசாமி, கருப்பண்ணன் முதலான எல்லாருக்கும் வேண்டிய ஆகாரங்கள் தயாராக்கப்பட்டன.

வசந்தாவின் அறைக்கு ஆகாரம் கொண்டுபோக அந்த வேலைக்காரி கதவைத் தட்டித் தட்டிப் பார்க்கிறாள். கதவு திறக்கவில்லை. உள்ளேயிருந்து பதிலோ அல்லது வேறு ஓசையோ ஒன்றும் வரவில்லை. கதவைத் தட்டித் தட்டி அலுத்துப் போன அந்த வேலைக்காரி, கருப்பண்ணன் இருந்த இடத்துக்கு வருகிறாள்.]

வேலை : ஐயா ! நானும் ஆனமட்டும் கதவைத் தட்டித் தட்டிக் கூப்பிட்டுப் பாத்தேன். அந்தக் கதவு தொறக்கிலியே.

கருப் : கதவு தொறக்கிலியா ! நாங்க யாராவது உள்ளுக்கு வருவோமுண்ணு அந்த அம்மா கதவைத் தொறக்க மாட்டேங்கிறுப்பிலே இருக்குது. நீபோய் ஒங் கொரலைக் காட்டிக் கூப்புடு. பொம்பளைக் கொரலுண்ணு தெரிஞ்சா கதவு தொறப்பாங்க, போ. போய் பெலம்மா கத்தி கொரலைக் காட்டு.

வேலை: தொண்டெ கிளியக் கத்து கத்தூண்ணு கத்திக் கொர லெக் காட்டி யாச்சி; பேச்சுமில்லே, மூச்சுமில்லியே.

கருப்: ஐயோ! அப்பிடியா?...வா பாக்கலாம்.

(வேலைக்காரியுடன் கருப்பண்ணன் வசந்தா இருந்த அறையின் கதவண்டை வந்து நின்றுகொண்டு குரல் காட்டிக் கூப்பி டும்படி வாய் பேசாமல் வேலைக்காரிக்கு ஜாடை காட்டு கிறான்.)

வேலை: அம்மா! ஆரம்மா உள்ளே, நான் வேலைக்காரி. ஒங்களுக் குத் தொணையாயிருக்க வந்திருக்கிறேன். ஆம்பளெங்க ஆரும் உள்ளுக்கு வரமாட்டாங்க; கதவெத் தொறங்க.

(என்று வேலைக்காரி பலமுறை வெகு பலமாகக் கத்திக் கதவை யும் தடதட வென்று தட்டுகிறாள். கதவும் திறக்கவில்லை. பகிலும் உரைக்கவில்லை. கருப்பண்ணன் கதவோடு தன் காதைவைத்துக் கவனிக்கிறான். உள்ளேயிருந்து ஒருவித ஓசையும் கேட்கவில்லை. கருப்பண்ணன் கண்கள் அகல விழித்துப் புருவங்களை நெற்றிக்கு ஏற்றிக்கொண்டு உதட் டைப் பிதுக்கிவிட்டு)

கருப்: நேத்து—ராத்திரி—என்னுமோ—என்னெ பொணமாத் தாம் பாப்பிங்கோண்ணு சொல்லிச்சே! அப்புடி எதாச்சியும் பண்ணிப் புட்டுதோ என்னுமோ. கதவை ஒடச்சித்தாம் பாக் குணும்.

(என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டு வெகு வேகமாக வீராசாமி இருந்த இடத்தைத் தேடிப்போய் அவனிடம்)

கருப்: வீராசாமி! கேட்டியா சேதியை...அந்தப் பொண்ணு வசந்தா நம்ப தலையிலே கல்லெப் போட்டுட்டாப்பிலே இருக் குதே!

வீரா: என்ன? என்ன?

கருப்: நேத்து நாம்ப வெளியிலே வந்ததும் அந்தப் பொண்ணு கதவைச் சாத்தி தாப்பாப் போட்டுக்கிச்சல்ல?

வீரா: ஆமாம்.

கருப்: உள்ளுக்குள்ளே தூக்குப் போட்டுக்கிட்டு செத்துப்போ ஒப்பிலே இருக்குது. இன்னேரவரைக்கும் கதவை இடிச்சிடிச்சி கத்திக் கத்திப் பாத்தாச்சி. பேச்சு மூச்சு ஒண்ணுமில்லே. கதவை ஒடச்சித்தாம் பாக்கணும. நேத்து அவள் கோவத் திலே நான் பொணமாப் போயிடுவேன் இண்ணு சொன்னு. அதை நெசமாப் பண்ணி பிட்டாப்பிலே இருக்குது.

வீரா. ஐயையோ! நேற்று நீ அவளிடத்தில் போய் காம்ப் பேச்சுகள் பேசினதின் விளைதான் இப்படியாச்சு...சரி, நாம் ஒன்றும் கதவை—உடைக்கக்கூடாது. நான்போய் நாச்சிமுத்துவைக் கூட்டிக்கொண்டு வருகிறேன். நல்ல்ப்பருக்கு ஆகாரம்கொடுக்கச்சொல்லி தவனித்துக்கொள்ளு. நல்லப்பர்கிட்டே நீபோய் ஒன்றும் போசாதே ; வேலைக்காரனை அனுப்பு.

(என்று சொல்லிவிட்டு வீராசாமி ரகசிய வழியில் நாச்சிமுத்து விடம் போகிறான். நாச்சிமுத்து ஒரு பெஞ்சியின்மீது உட்கார்ந்து காப்பி குடித்துக்கொண்டிருக்கிறான. வேகமாக வந்த வீராசாமியைப் பார்த்து)

நாச்: என்ன வீராச்சாமி, அவர்களுக்கு ஆகாரம் முதலானதெல்லாம் ஆச்சா?

வீரா: அந்தப்பெண் அவளிருந்த அறையை நேற்றிரவு உள்ளே தாழிட்டுக்கொண்டது—திறக்கவேயில்லை. இன்னேர வரைக்கும் கதவை இடியிடி என்று இடித்துப் பார்த்தாச்சு. பதிலே இல்லை. உள்ளே தூக்கு கிக்குப் போட்டுக்கொண்டு செத்துப் போச்சோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது. கதவை உடைத்துதான் ஆகவேணும்போல் இருக்கிறது.

நாச்: ஏன்? அந்தப்பெண் தூக்குப் போட்டுக்கொள்ள நினைக்கும்படி என்ன நடந்தது? நீங்கள் யாராவது அவளை ஏதாவது தொந்தரவு செய்தீர்களா?

வீரா: நான் ஒன்றும் செய்யவில்லை...இந்தக் கருப்பண்ணன்—நான் உங்களிடம் பணம் கொடுக்க வந்திருந்தேன் பாருங்க—அந்தச் சமயத்தில் அவளிடத்தில் போய் காதல் பேச்சுப் பேசினான். அந்தப்பெண் கோவித்துக்கொண்டு "இப்படியெல்லாம் தொந்தரவு செய்தால் நான் பிணமாகிவிடுவேன்" என்று சொல்லிக்கொண்டிருந்த சமயத்தில் நான்போய் கருப்பண்ணனை அந்த அறையைவிட்டு வெளியில் கூட்டிக்கொண்டு போனேன். நாங்கள் வெளியே வந்தவுடன் அவள் கதவை மூடித் தாழிட்டுக் கொண்டாள்.

நாச்: சரி, சரி...பேஷ்...பேஷ்...நல்லாயிருக்குது. அந்தப் பெண்ணோடு காதல் பேசத் தகுந்தவனா இந்தக் கருப்பண்ணன்? இந்தத் தடியன் வெறியனை யெல்லாம் சேர்த்துக்கொண்டு நீயும் புரட்சி பண்ணப் போயிட்டியே!...சரி, வா உடனே பார்க்கவேணும். நான் காப்பி சாப்பிட்டுவிட்டு நல்லப்பரைப் பார்த்து ஒரு காரியம் முடிக்கவேணும் என்று எண்ணியிருந்தேன். இந்தச் சமயத்தில் இதுவேறே சங்கடத்தை உண்டாக்கி விட்டீர்கள்...நல்லப்பர் மகளோடு காதல் பேசுகிற ஆளைப்

பாரு...இடத்தைப் பாரு, சமயத்தைப் பாரு. சரி நான் நல்லப் பரிடம் போகிறன். நீ அந்தக் கருப்பண்ணனைக் கூட்டிக் கொண்டு அங்கே கண்ணுக்குப் படாமல் போய் இரு.

(என்று சொல்லிவிட்டு நாச்சிமுத்து அருகிலிருந்த ஒரு அலமாரியைத்திறத்து முன் வீராசாமி கொடுத்த நல்லப்பர் இரும்புப் பெட்டிகளின் சாவிக் கொத்தையும் சில காகிதக் கத்தையையும் எடுத்துக்கொள்ளுகிறான். இருவரும் கள்ளவழியில் மகசிய வீட்டுக்குப் போகிறார்கள். நாச்சிமுத்து நேராக நல்லப்பர் இருக்கிற மாடி அறைக்கு வருகிறான். நல்லப்பர் காப்பி குடித்துக்கொண்டு வேலைக்காரனிடம்)

நல்: ஏனப்பா, என் மகள் எங்கே இருக்கிறாள் ?

வேலை: கீளே ஒரு ரூம்புலே இருக்குதுங்களாம்.

நல்: அவளுக்கு ஆகாரம் காப்பி எல்லாம் கொடுத்தாச்சா ?

வேலை: குடுக்கத்தான் கதவெத்தட்டிக் கிட்டிருக்குறுங்க. குடுப்பாங்க.

(இந்தச் சமயத்தில் நாச்சிமுத்து நல்லப்பர் இருக்கிற அறைக்குள் வருகிறான். கருப்பண்ணன்தான் வந்து விட்டானே என்று நிடுக்கிட்டு பயந்து நல்லப்பர் எழுந்திருக்கிறார்.)

நாச்: வேறு யாருமில்லேங்கோ நாந்தானுங்க...என்னைத் தெரியுதுங்களா ?

நல்: (நாச்சிமுத்துவை உற்றுப் பார்த்துவிட்டு) முகம் ரொம்பப் பழகின முகமாகத்தான் தெரியுது. சட்டென்று நினைவுக்கு வரவில்லையே—

நாச்: நான் நாச்சிமுத்துங்க, பஞ்சு வியாபாரி.

நல்: அடடா ! பஞ்சு வியாபாரி நாச்சிமுத்தா ! எனக்குப் பற்று வரவுக் காரரல்லவா நீங்கள் ! கடவுளே வந்தாற்போல தாங்கள் எப்படி இங்கே வந்தீர்கள் ?

நாச்: நான் இருக்கிறது இங்கே பக்கத்திலேதான். உங்களையும் உங்கள் மகளையும் இந்தப் புரட்சிக்காரப் போக்கிரிப் பசங்கள் அநியாயமாக இப்படிக் கொண்டுவந்து அடைத்து வைத்திருக்கிறார்கள் என்பதைக் கேள்விப்பட்டேன். அந்தப் பசங்களையெல்லாம் எனக்குத் தெரியும். அவர்களைப் பிடித்து மிரட்டி உங்களுக்கு உதவி செய்யவந்தேன். நீங்கள் கொஞ்சம் கூட பயப்படவேண்டாம். நானுச்சு.

நல்: தாங்கள் மகராஜராக இருப்பீர்கள். ஆபத்தில் உதவ வந்த தாங்கள் தான் எனக்கு ஆண்டவன். எப்படியாவது அவர்

களிடத்தில் சொல்லி எங்களை ஒன்றும் செய்யாமல் விட்டு விடச் செய்யுங்கள். இந்த உபகாரத்துக்கு நான் தங்களுக்கு என்ன வேணுமானாலும் தருகிறேன்.

நாச்: உங்களை விடுவிக்கத்தானே நான் வந்திருக்கிறேன். நானே உங்களை உங்கள் வீட்டுக்குக் கொண்டுவந்து விடுகிறேன். கவலைப்படவேண்டாம்...அதைப்பற்றி அப்புறம் பேசுவோம். ...இப்போ உங்கள் பெண் கீழே ஒரு அறையில் இருக்குது. கதவைத் தாழிட்டுக்கொண்டு ஆகாரம் சாப்பிடத் திறக்க மாட்டேன் என்கிறது. முதலில் கொஞ்சம் தயவுசெய்து நீங்கள் கீழே வந்து கதவைத் திறக்கச் சொல்லுங்கள்.

நல்: அப்படியா? இதோ வருகிறேன். வாங்கோ போகலாம்.

(இருவரும் மாடியை விட்டிறங்கி வசந்தா இருக்கிற அறையின் கதவண்டை வருகிறார்கள்.)

நாச்: நீங்கள் வந்திருப்பதாகச் சொல்லிக் கூப்பிட்டுக் கதவைத் திறக்கச் சொல்லுங்கள்.

நல்: (கதவைத் தட்டிவிட்டு) அம்மா, வசந்தா. இதோ நான் வந்திருக்கிறேன் உங்கப்பா. நம்மை விடுவித்து வீட்டுக்குக் கொண்டு போய்விட நமது நண்பர் நாச்சிமுத்து வந்திருக்கிறார் பயமில்லாமல் கதவைத்திற அம்மா!

(கதவு திறக்கவில்லை. சற்று நேரம் காத்திருந்து மறுபடியும் கதவைத் தட்டி முன் போலவே சொல்லுகிறார். பதிலில்லை.)

நல்: ஐயோ! கூப்பிடுமுன் ஓடி வரக்கூடிய என் குழந்தை இவ்வளவு நேரம் கூப்பிட்டும் பதில்கூட சொல்லவில்லை. ஐயா நாச்சிமுத்து, யார் என்ன செய்துவிட்டார்களோ தெரியவில்லையே? ஐயோ! வசந்தா! அம்மா! ஐயா! எனக்கு உசுரெல்லாம் இந்த ஒரு குழந்தைதானே!

(என்று நல்லப்பர் ஓலமிட ஆரம்பித்து விட்டார்.)

நாச்: அழுவாதிங்க, எதற்காக அழுகிறீர்கள்? இன்னும் தட்டிக் கூப்பிடுங்கள். அம்மா தூங்குதோ என்னுமோ, அழவேண்டாம், கூப்பிடுங்கோ.

நல்: (அழுகைக் குரலோடேயே)...அம்மா வசந்தா இன்னேரமாகக் கத்துகிறேன், உனக்கு மனமிரங்கவில்லையா? இங்கே யாருமில்லை நான்தான். உங்கப்பா—வந்திருக்கிறேன். (என்று உரக்கக் கத்துகிறார். அதற்கு மேல் உள்ளே கதவின் மேல் கை வைத்துத் தாழ்பாளை நீக்கி சிரமப்படுவது போல நல்லப்பருக்குத் தெரிகிறது) ...இந்தாய்யா, இப்பத்தான், கதவைத் திறக்கிறாற்போலிருக்கிறது.....திற அம்மா. கதவைத் திற.

நம்மை வீட்டுக்கு அனுப்ப ஐயா வந்திருக்கிறார், பயப்படாமல் கதவைத்திற:

(கதவு திறக்கப்படுகிறது. வாடி வதங்கிய முகத்துடன் வசந்தா நெடுநாள் நோய் கிடந்தவள் போலத் தள்ளாடிக்கொண்டு காணப்படுகிறாள். தந்தையைக் கண்டதும் "அப்பா" என்று தாவி நல்லப்பருடைய மார்பின் மீது சாய்கிறாள்,)

நல் : என்னும்மா? ஏன்? உடம்புக்கு என்ன? (என்று சொல்லிக் கொண்டே மகளைத் தாங்கிக் கொண்டு நடத்தி உள்ளே யிருந்த ஒரு படுக்கையின்மீது படுக்க வைத்து முகத்தைத் தடவிக் கொடுத்து) வசந்தா, ஏனம்மா என்ன சங்கடம் உனக்கு?

வச : (மிகவும் தனிந்த குரலில் மெள்ள மெள்ள) அப்பா...சொம்ப ...தாகமாக...இருக்கிறது...கொஞ்சம்...

நாச் : கொஞ்சம் காப்பி கொடுங்கள்...தயாராக இருக்கிறது.

(வேலைக்காரியைக் கூப்பிட்டு ஏ குப்பாயி! காப்பியைக் கொண்டா.)

நல் : ஏம்மா கொஞ்சம் காப்பி சாப்பிடுகிறாயா?

வச : அப்பா...காப்பி...வேண்டாம்...வெந்நீர் கொடுங்கள்.

(வேலைக்காரி ஓடிப்போய் வெந்நீர் கொண்டு வருகிறாள். அதில் கொஞ்சம் வசந்தா குடிக்கிறாள். கணப்பு மாறி தகப்பனாரைப் பார்த்து சற்று புன்முறுவல் செய்கிறாள்.)

நல் : ஏம்மா? என்ன? சொல்லு. இதோ இவர் நமக்கு உபகாரம் செய்ய வந்திருக்கிறார்கள். நம்மை வீட்டுக்குக் கொண்டு போய் விடுவார். பயப்படாதே.

வச : எனக்கு நோய் ஒன்று மில்லையப்பா. நேற்று ராத்திரி அவர்கள் ரெண்டு பேரும் மாறி மாறி வந்து என்னோடு பேச்சு கொடுத்து தொந்தரவு செய்து கொண்டிருந்தார்கள். அவர்களை வெளியே போகச் சொல்லிக் கதவைத் தாழ்ப்பாள் போட்டு விட்டு, வேகமாகத் திரும்பி வந்து அந்த நாற்காலியில் உட்காரப் போனேன். நாற்காலியைப் பார்க்காமல் நாற்காலி இல்லாத இடத்தில் வேகமாக உட்கார்ந்து விட்டேன். மடார் என்று மண்டையில் பின்புறம் சுவரில்மோதிக் கீழே விழுந்து விட்டேன். விழுந்ததுதான் தெரியும். எவ்வளவு நேரம் நினைவில்லாமல் கிடந்தேனென தெரியாது. சொம்ப நேரமாக கதவைத் தட்டின சத்தம் கனவுக் கண்டது போல் கேட்டுக் கொண்டே இருந்தது. இப்பத்தான் உங்கள் குரல் போலத் தெரிந்து மெள்ள மெள்ள எழுந்து கதவண்டை வந்

தேன். நீங்கள் அழுவது போலக் கேட்டது. தாழ்ப்பாள் சொம்பவும் கெட்டியாகப் பாய்ந்திருந்ததால் சீக்கிரம் திறக்க முடியவில்லை.

நாச் : பார்த்தீர்களா? இப்படித்தான் ஏதாவது இருக்குமென்று நான் நினைத்தபடியே இருக்கிறது... (வசந்தாவைப் பார்த்து) அம்மா நீங்கள் பயப்பட வேண்டாம். அந்தப் பயல்கள் இனி உங்களிடம் வந்து பேச்சு வைத்துக் கொள்ளாமல் நான் பார்த்துக் கொள்ளுகிறேன். இதோ வேலைக்காரி இருக்கிறாள் நீங்கள் சொன்னபடி நடப்பாள். வெந்நீர் இருக்கிறது ; ஸ்நானம் செய்து ஆகாரம் சாப்பிடுங்கள்.

வச : ஸ்நானம் வேண்டாம். மண்டை சொம்ப வலிக்கிறது. பல் விளக்கிவிட்டு கொஞ்சம் படுத்திருக்கிறேன். மத்தியானத்துக்கு மேல் வேணுமானால் குளித்துவிட்டு சாப்பிடுகிறேன்.

நாச்: உங்கள் இஷ்டம் எப்படியோ அப்படிச் செய்யுங்கள். அப்பாவும் இங்கேயே இருப்பார். நானும் வந்து கவனித்துக் கொள்ளுகிறேன். சீக்கிரம் வீட்டுக்குப் போகலாம். நிம்மதியாக இருங்கள். (வேலைக்காரியிடம்) குப்பாயி ஜாக்ரதையாகப் பார்த்துக் கொள் ; தெரியுமா?

குப் : தெரியுமுங்கோ.

காட்சி 45

இடம் : ஆஸ்பத்திரி
காலம்: காலை

[சுந்தரம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்ட மூன்றாவது நாள் காலையில் வழக்கம் போல் பெரிய டாக்டர் வந்து புண்ணுக்குக் கட்டு கட்டிவிட்டு சுந்தரத்தின் தேக நிலைமையைப் பலவிதமாகப் பரிசோதித்துப் பார்த்து மிகவும் திருப்திகரமாக இருப்பதாகச் சந்தோஷம் அடைகிறார். சுந்தரம் மிகவும் சுசிகரமான வழக்கங்களும், வெகு நல்ல ஒழுக்கமும் உடையவன் ஆனதால் அவனுடைய புண் வெகு விரைவில் ஆறிவந்தது. கட்டு கட்டிவிட்டு பெரிய டாக்டர் போனபின் சுந்தரம் வசந்தாவையும் நல்லப்பரையும் நினைத்து கவலை கொண்ட முகத்துடன் படுக்கையில் உட்கார்ந்திருக்கிறான்.

அவனுடைய கட்டிலுக்கு எதிரில் இருந்த கட்டிலில் படுத்திருந்த முனுசாமிக்கு ஜ்வரம் வந்து அதன் மேல் ஜன்னி குணம் கண்டிருந்தது. அதனால் அவன் அடிக்கடி உளறிக் கொண்டேயிருந்தான். இது வரையிலும் உருப்படி தெரியாத வார்த்தைகளை முணுமுணுத்து உளறிக்கொண்டிருந்த முனுசாமி திடீரென்று படுக்கையில் நிமிர்ந்து உட்கார்ந்துகொண்டு, பயத்தால் நடுங்கினவன் போல "ஐயோ! நான் ஒண்ணும் பண்ணிலிங்களே, பெரிய மொதலாளியையும் அவுங்க மகளையும் மலைக்குக்கொண்டு போவிலிங்க. கொளத்தூரு நாச்சிமுத்து ஊட்டுக்கல்ல கொண்டுபோனுங்க" என்று பலமாகக் கத்துகிறான்.

சுந்தரம் அதைக் கேட்டு எதிர்பாராத சந்தோஷமடைந்து எழுந்துபோய் முனுசாமியைத் தொட்டுத் தட்டிக் கொடுத்து]

சுந்: என்னப்பா சொன்னாய்? நல்லப்பரையும் வசந்தாவையும் குளத்தூர் நாச்சிமுத்து வீட்டுக்கா கொண்டு போனார்கள்?
(முனுசாமி சுந்தரத்தை முறைத்துப் பார்த்து)

முனு : இல்லிங்கோ..... ஆமாங்க..... மலைக்குத்தாங் கொண்டு போனுங்க...நானெண்ணும் பண்ணிலிங்க.

(என்று சொல்லிவிட்டு மறுபடியும் படுத்துக்கொள்ளுகிறான். இன்னும் ஏதாவது சொல்லுவானுக்குமென்று சுந்தரம்

வெகு நேரம் எதிர்பார்க்கிறான். முனுசாமி பேசவே யில்லை. ஈரம் அதிகரித்து அழுக்கிக்கொண்டது. சுந்தரம் தன்னுடைய கட்டிலுக்குப்போய் உட்காருகிறான்.)

சுந்: வசந்தாவும் நல்லப்பரும் குளத்தூரில்தான் இருக்க வேண்டும், சந்தேகமில்லை. அந்த நாச்சிமுத்து என்பவன் யாரோ தெரிய வில்லை...உடனே போலீசுக்குத் தெரியப்படுத்தி அங்கே தேடிப் பார்க்கச் செய்ய வேணும்.

(என்று தனக்குத்தானே, பேசிக்கொண்டு, வசந்தா இருக்கிற இடம் தெரிந்துவிட்ட சந்தோஷத்தில் உள்ளம் குளிர்ந்து, உடல் பூரித்துக் குதூகலத்தில் இருக்கிறான். திடீரென்று நினைத்துக்கொண்டு தலையணையின் கீழ் தான் வைத்திருக்கிற —வசந்தா கொடுத்த—பணப்பையை எடுக்கிறான். அதில் 'வசந்தா' என்று வர்ண நூல்களால் எழுத்துக்கள் பின்னியிருப்பதை திருப்பித் திருப்பிப் பார்க்கிறான். அது வரையிலும் அந்தப் பைக்குள் என்ன இருக்கிறது என்று அவன் பார்க்கவேயில்லை. காளியம்மாள் வீட்டில் அட்டாணியிலிருந்து வசந்தாவைச் சுந்தரம் கீழே இறக்கி விட்டபோது அந்தப் பையை வைத்திருக்கும்படி வசந்தா சுந்தரத்திடம் தந்தாள். அதை வாங்கின உடனே சுந்தரம் தன்னுடைய இடுப்பில் அறைஞாண் கயிற்றில் அதை முடிந்து மடியில் பந்தோபஸ்து செய்து கொண்டிருந்தான். ஆஸ்பத்திரியில் அவனுடைய உடம்பில் இடுப்புக்கு மேல் இருந்த உடைகளை மட்டும் எடுத்துவிட்டு குண்டு பாய்ந்த காயத்துக்கு அவசரமாகக் கட்டுக் கட்டினார்கள். விடிந்து சிறிது நேரத்துக்கெல்லாம் சுந்தரத்துக்கு நல்ல நினைவு வந்தது. அப்போது இடுப்பில் உறுத்திக்கொண்டிருந்த அந்தப் பையை அவனே மெல்ல அவிழ்த்தெடுத்து அதைத் தலையணையின் கீழ் வைத்திருந்தான். இப்போது அதை எடுத்துப் பலமுறை திருப்பித் திருப்பிப் பார்த்துவிட்டு சுமுக்கு நீக்கி அதில் என்ன இருக்கிறதென்று பார்க்கிறான். அந்தப் பையில் நூறு ரூபாய் நோட்டுகளடங்கிய ஒரு கத்தையும் அநேக வைர நகைகளும் இருக்கின்றன. ரூபாயை எண்ணிப் பார்க்காமல் நகைகளை மட்டும் ஒவ்வொன்றாகப் பார்த்துவிட்டு, மறுபடியும் பைக்குள் எல்லாவற்றையும் போட்டு, முன் போல் தலையணைக்குக் கீழே வைத்துவிடுகிறான். எழுந்திருக்கிறான். மீண்டும் உட்காருகிறான். கொஞ்சம் படுத்து ஆலோசிக்கிறான். மறுபடியும் எழுந்து உட்காருகிறான். அப்படி இருக்கையில் உதவி டாக்டர் வருகிறார்.]

டாக்டர்: என்ன சார்..... அலுங்காமல் படுத்திருக்காமல் அடிக்கடி எழுந்து உட்கார்ந்து தேகத்துக்கு அசைவு கொடுக் கிறீர்களே ?

சுந்: எழுந்திருப்பதால் எனக்கு ஒன்றும் சிரமம் இல்லையே. இன்னும் நான் அசையாமல் படுத்தேதான் இருக்கவேணுமா?

டாக் : இப்போது சிரமம் இல்லாவிட்டாலும், அடிக்கடி தேகம் அசைந்தால் புண்ணுக்குக் கட்டியிருக்கிற 'பாண்டேஜ்' இடம் மாறும். அது நல்லதல்ல. எதற்கும் நீங்கள் இன்னும் நாலைந்து நாளைக்குப் படுத்தே இருப்பதுதான் நல்லது.

சுந் : சரி, அப்படியே செய்கிறேன்.....ஒரு சமாசாரம் உங்களிடம் சொல்ல வேணும்.....சாவகாசம் இருக்குமா ?

டாக் : ஓ ! இப்போது சாவகாசந்தான், சொல்லுங்கள், என்ன ?

(இந்த சமயத்தில் முனுசாமி மறுபடியும் உளறியடித்துக் கொண்டு எழுந்திருக்கிறான். டாக்டர் அவனிடம் போய் அவனைப் படுக்கவைத்துப் பரிசோதிக்கிறார். முனுசாமியின் நிலைமை உடனே கவனிக்க வேண்டியதாக இருப்பதை யறிந்து அறையை விட்டு வேகமாகச் செல்கிறார். சிறிது நேரத்துக்கெல்லாம் மருந்தோடு வந்து முனுசாமிக்கு ஒரு 'இஞ்சக்ஷன்' கொடுக்கிறார்..... அதன் பிறகு முனுசாமி தூங்குகிறவன்போல் அமைதியாகிவிடுகிறான். டாக்டர் மீண்டும் சுந்தரத்திடம் வருகிறார்.)

டாக் : அவனுக்கு ஜன்னி கண்டிருக்கிறது..... இந்த 'இஞ்சக்ஷன்' செய்யாதிருந்தால் அபாயம்..... சரி, என்னமோ சொல்ல விரும்பினீர்களே, என்ன ?

சுந் : சொல்லுகிறேன்.....உங்களுக்குக் குளத்தூர் தெரியுமா ?

டாக் : தெரியும். வெகு நன்றாகத் தெரியும்.

சுந் : அங்கே நாச்சிமுத்து என்ற பேருடைய யாராவது இருக்கிறார்களா ?

டாக் : இருக்கிறார்.....அவர் ரொம்பப் பேர்போன ஆசாமி. ஏன் அவருக்கு கென்ன ?

சுந் : அவர் எப்படிப் பட்டவர் ?

டாக் : அவன் பெரிய 'பிளாக் கார்ட்' சார். ஒண்ணும் நம்பர் 'ரௌடி' இருபது நாளைக்கு முன்னால்கூட அவனும் இன்னும் சில பேரும் சேர்ந்து ஒரு ஆசாமியைக் கொன்று புதைத்து விட்டதாகக் கேஸ் வந்தது. புதைத்த பிணத்தைத்தோண்டி யெடுத்து 'போஸ்ட் மார்ட்டம்' செய்தோம்.

சுந் : கேஸ் என்ன ஆச்சு ?

டாக் : என்ன ஆகும். கணக்கு வழக்கில்லாமம் லஞ்சம் கொடுத்தால் எப்பேர்ப்பட்ட கேசும் ஒன்று மில்லாமற் போகுது!

சுந் : அப்படிப்பட்டவனு அவன் !

டாக் : அவன் வெளிக்கு ரொம்ப பெரிய மனிதன் போலத்தான். அவனுக்கு சிநேகமில்லாத அதிகாரிகளே கிடையாது. கவர்னர் வரையிலும் அவனுக்குச் சிபார்சு பேச ஆள்கள் இருக்கிறார்கள். எதை வேணுமானாலும் செய்வான். எப்படியோ தப்பித்துக் கொள்ளுவான்.

சுந் : என்னைச் சுட்ட கொள்ளைக் காரர்களுக்கும் அவனுக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்குமோ ?

டாக் : இந்தப் பிராந்தியத்தில் நடக்கிற எல்லாக் கொள்ளையிலும் அவனுக்குப் பங்கிருக்கும். எல்லாக் கொலையிலும் அவனுக்கு சம்பந்தமிருக்கும்...இந்தப் புரட்சிக்காரக் கும்பலுக்கே முன் பணம் கொடுத்து ஒத்தாசை செய்கிறவன் அவன்தான் என்று கேள்வி.

சுந் : அவனுடைய அக்ரமங்களைப் போலீசார் கண்டு பிடித்து அடக்க முடியாதா ?

டாக் : எப்படியோ அடக்க முடியாமல்தானே அவனுடைய அமுல் நடந்து வருகிறது. போலீசார் அவனை மடக்கினால் சப் மாஜிஸ்டிரேட் விட்டுவிடுகிறார். சப்மாஜிஸ்ட்ரேட் தண்டித்தால் டிப்டிகலெக்டர் விடுதலை செய்து விடுகிறார். டிப்டி கலெக்டர் அவனுக்கு விரோதமாகத் தீர்ப்பு சொன்னால் ஜில்லா கலெக்டர் அதை மாற்றி விடுகிறார். ஜில்லாகலெக்டர் தண்டனை கொடுத்தால் ஜில்லா ஜட்ஜ் ரத்து செய்து விடுகிறார். ஜில்லா ஜட்ஜ் ஜெயிலுக்கு அனுப்பினால் ஹைகோர்ட் அப்பீலில் வீட்டுக்கு வந்து விடுகிறான். ஹைகோர்ட்டில் தண்டனை ஊர்ஜிதமானால் பிரிவிகவுன்சிலில் ஜெயித்து விடுவான்.....

சுந் : அடேயப்பா ! அவ்வளவு கெட்டிக்காரனா அவன் ?...சரி இப்போது இந்தக் கேசைக் கண்டுபிடிக்க வேலை செய்கிற போலீஸ் இன்ஸ்பெக்டர் எப்படிப்பட்டவர் ?

டாக் : இவர் மிகவும் யோக்யர். சப்இன்ஸ்பெக்டரும் அப்படித்தான். முன்னிருந்த போலீஸ் அதிகாரிகள் அவனுக்கு வேண்டியவர்களாக இருந்தார்கள் என்றுதான் இந்த இன்ஸ்பெக்டரும். சப்இன்ஸ்பெக்டரும் புதிதாக இங்கே மாற்றப் பட்டிருக்கிறார்கள். இவர்கள் இரண்டு பேரும் நல்லவர்களாக இருந்தால் மட்டும் என்ன பயன் ? அவனுக்கு உளவு சொல்லுகிற பெருச்சாளிகள் ரொம்பபேர்கள் இருக்கிறார்கள்.....சரி எதற்காக நாச்சிமுத்துவைப் பற்றி இவ்வளவும் கேட்கிறீர்கள் ?

சுந் : ஒருக்கால் நல்லப்பரையும் அவருடைய மகளையும் அங்கே கொண்டு போயிருப்பார்களோ என்று ஒரு யோசனை வந்து கேட்டேன்.

டாக்: இருந்தாலும் இருக்கும்...ஆனால் அந்த உளவை நன்றாகத் தெரிந்து கொண்டு திடீரென்று போய் அவனை அமுக்க வேண்டும். மாமூல் வழியில் போலீசார் அவனைச் சந்தேகிக்கிறார்கள் என்று தெரிந்தால் எவனாவது ஒருத்தன் போய் அவனுக்கு உளவு சொல்லி விடுவான். அப்புறம் நல்லப் பரையும் அவர் மகளையும் பார்க்கவே முடியாது...ஒரு வருஷத்துக்கு முன்னால் இப்படித்தான் ஒரு பெண்ணை போன இடம் தெரியாமல் செய்து விட்டான். அது பிரமாதமான கேஸ் நடந்து ஒன்று மில்லாமல் போச்சு...அந்தப் பெண் எனக்குச் சொந்தக்காரப் பெண். அதற்காக நான் ரொம்ப வேலை செய்தேன். அப்போது தான் இந்த நாச்சிமுத்துவின் விஷயங்களை யெல்லாம் இவ்வளவு தெரிந்து கொண்டேன். அந்தப் பாதகனை நினைத்தாற்கூட எனக்கு எரிச்சல் உண்டாகிறது.

சுந்: உங்களுக்கு இவ்வளவு விஷயங்கள் தெரிந்திருக்கும் என்று நான் நினைக்கவேயில்லை. அகஸ்மாத்தாக உங்களோடு பேசினதில் அநேக உண்மைகளை அறிந்து கொண்டேன். ரொம்பவந்தனம்.....சரி ஒருக்கால் நல்லப்பரும் அவருடைய பெண்ணும் அங்கே இருக்கிறது உண்மையானால் அதற்கு நாம் என்ன செய்ய வேணும்?

டாக்: அதற்கு நான் சொல்லுகிறேன், கேளுங்கள்... நாச்சிமுத்துக்கு மிகவும் ரகசியமான அநேக மறைவிடங்களும் சுரங்க வழிகளும் இருக்கின்றனவாம். அவற்றுள் எந்த இடத்தில் நல்லப்பரை மறைத்து வைத்திருக்கிறான் என்பதை முதலில் உளவறிய வேண்டும். அதற்குமேல் நாம் நாச்சிமுத்துக்கும் தெரியாமல் நேராக அந்த இடத்தைத் திடீரென்று முற்றுகை செய்து அங்குள்ள எல்லாரையும் கைதி செய்து விட்டுச் சோதனை போடவேண்டும்.

சுந்: அந்த உளவு கண்டு சொல்லக்கூடியவர்கள் யார்?

டாக்: அதற்குத்தான் ஆள் கிடைப்பது கஷ்டம். யார் போனாலும் அவர்களை நாச்சிமுத்து ஒன்று கொன்று விடுவான், இல்லாவிட்டால் லஞ்சம் கொடுத்துச் சரிப்படுத்தி விடுவான்.

(பெரிய டாக்டர் வருகிறார். பேச்சு நின்றுவிடுகிறது.)

காட்சி 46

இடம் : நாச்சிமுத்துவின் ரகசியவீட்டு மேல்மாடி அறை
காலம் : காலை

(நாச்சிமுத்து மிகவும் விநயத்துடன் செய்த பரிவான காரியங்களால் நல்லப்பருக்கு பயம் தெளிந்து நாச்சிமுத்துவை முற்றிலும் நம்பி அவன் சொன்னது எதையும் செய்யத் தயாராகி விட்டார். வசந்தாவுக்கு மாற்றுப் புடவைக்காக கருப்பண்ணன் கொண்டு வந்த புடவை மூட்டை இருந்தது. ஆனல் நல்லப்பர், கட்டியிருந்த வேஷ்டியும் அணிந்திருந்த சட்டையோடும் வந்தவர். அதனல் நல்லப்பருடைய அந்தஸ்துக்குத்தகுந்த பிக்க விலையுயர்ந்த வேஷ்டிகளையும் துண்டுகளையும் வஸ்திரங்களையும் அனுப்பி நாச்சிமுத்து அவருடைய ஸ்னைத்துக்கு ஏற்பாடு செய்தான். வசந்தா வெந்நீரைச் சாப்பிட்டுக் களைதீர்ந்து ஓய்ந்திருக்கப் படுத்துக்கொண்டபின்)

நாச்சி : அம்மா இங்கேயே வேலைக்காரியோடு இளைப்பாறிக் கொண்டு இருக்கட்டும். நாம் கொஞ்சம் மேலே போய் உங்களிருவரையும் வீட்டுக்குக் கொண்டுபோய் விடுகிறது எப்படி, என்பதைப்பற்றி ஆலோசிப்போம்.

நல் : ஆஹா. அதற்கென்ன தடை. வாங்க போவோம்.

(இருவரும் மாடிக்குப் போகிறார்கள். நேருக்கு நேராக இரண்டு நாற்காலிகளில் உட்காருகிறார்கள்)

நாச்சி : நான் நேற்று ராத்திரியே உங்களைக் கொண்டுபோய் வீட்டில் விட்டுவிடலாம் என்று ஏற்பாடு செய்தேன். ஆனல் இப்போ புதுசா வந்திருக்கிற போலீஸ் இன்ஸ்பெக்டர் பண்ணுகிற கெடுபிடியினல் இந்தப் பசங்கள் இன்னும் ரெண்டு நாள் சென்று உங்களை அனுப்பலாம் என்று.....

நல் : இன்ஸ்பெக்டர் என்ன கெடுபிடி செய்கிறார்?

நாச்சி : இங்கே உங்களைக் கொண்டுவந்த இந்த முட்டாள் பசங்களுக்கு...நான்...உங்களிடத்தில் சொல்லி மன்னிப்பு வாங்கித் தருவதாக சத்தியஞ் செய்துவிட்டேன். அதற்கப்புறந்தான் அவர்கள் நீங்கள் இங்கே இருக்கிற ரகசியத்தைச் சொல்லி என்னையும் இங்கே வரவிட்டார்கள். இல்லாவிட்டால் இங்கே வந்திருக்கவே முடியாது.

நல் : ஏன் நான் இன்ஸ்பெக்டரிடம்—வேணுமனுல் சூப்ரண்டி டமோ அல்லது கலெக்டரிடமோ சொல்லி அவர்களை மன் னித்துவிடச் சொல்லுகிறேன்.

நாச்சி : நீங்கள் செய்வீர்கள். அது எனக்குத் தெரியும். ஆனால் எனக்கு ஒரு கஷ்டம் திடீரென்று வந்துவிட்டது. அதற்காக நான் இரண்டுநாள் வெளியூருக்குப் போய்வர வேண்டியிருக் கிறது.

நல் : உங்களுக்கு என்ன கஷ்டம் ?

நாச்சி : ஆமாங்க...அந்தக் கஷ்டம் வராதிருந்தால் இன்றைக்கு ராத்திரியே கூட உங்களை உங்கள் வீட்டில் கொண்டுபோய் விட்டு விடுவேன்.

நல் : அந்தக் கஷ்டம் என்ன ? சொல்லுங்கள்.

நாச் : உங்களை வீட்டுக்குக் கொண்டுபோய்விட நானே வந்தால் தான் நல்லது. மற்றவர்கள் யாரையும் நம்பி உங்களையும் அம்மாளையும் இரவில் அனுப்ப எனக்கு இஷ்டமில்லை. இந்தப் பேக்கிரிப் பசங்களோடு சேர்ந்தவர்கள் ரொம்பப்பேர் திரிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களிடத்தில் துப்பாக்கி, வெடி குண்டு எல்லாம் இருக்கின்றன.

நல் : ஐயையோ ! வேறு யாரையும் நம்பி எங்களை அனுப்பிவிட வேண்டாமே. நீங்களே கொண்டுவந்து எங்களை வீட்டில்விட்டு விடுங்கள்...அதற்காக உங்களுக்கு என்ன வேணுமானாலும்...

நாச்சி : அடடா ! அதைத் தாங்கள் சொல்லவாவேணும் ? அது எனக்குத் தெரியாதுங்களா? அதைப்பற்றிக் கவலையில்லைங்க. ...திடீரென்று இன்று காலையில்தான்...தெரிந்தது...இந்தக் கஷ்டம் இல்லாவிட்டால் இன்று இரவே உங்களை...நானே...

நல் : அது என்ன கஷ்டம், அதைத்தான் சொல்லுங்களேன்.

நாச்சி : சொல்லுவேன். ஆனால் தங்களுக்கு இப்படிப்பட்ட கஷ் டங்கள் நேர்ந்துவிட்ட இந்தச் சமயத்தில் அதைச் சொல்லி சங்கடப் படுத்தக்கூடாது என்றுதான் யோசிக்கிறேன். தாங்கள் தங்களுடைய வீட்டிலிருக்கிறபோது சொன்னால் இதைப்போல ஆயிரம் பங்கு கஷ்டத்தைக்கூட நீக்கிக் காப் பாற்றுவீர்கள். இந்தச் சமயத்தில் நான் உங்கள் கஷ்டங்களைத் தீர்க்கிறதை விட்டு விட்டு, என் கஷ்டங்களை உங்களிடம் சொல் லிக்கொள்வது நன்றாக இருக்காது.

நல் : பரவாயில்லை சொல்லுங்கள். நான் வீட்டுக்குப்போய் சேர்ந்த பிறகாவது உங்களுக்கு உதவலாமல்லவா ?

நாச்சி : ஒன்றுமில்லே. இன்றைக்குச் சாயந்திரத்துக்குள் நான் ஒரு ஆசாமிக்கு இரண்டு லக்ஷம் ரூபாய் கொடுத்தாக வேண்டும். இல்லாவிட்டால் என் மானமே போய்விடும். அதற்காக உடனே போய் எங்காவது ஏற்பாடு செய்யவேணும். இப்போது இருக்கிற பண நெருக்கடியில் இன்றைக்கே இரண்டு லக்ஷம் கிடைக்குமோ, இல்லையோ. இன்றைக்கே கொடுக்க முடியாவிட்டால் அந்த ஆசாமியிடம் நாலைந்து நாள் வாய்தா கேட்டுக்கொண்டு அச்சூருக்காவது போய் அதை வாங்கி வந்து தீர்த்துவிட வேணும். இல்லாவிட்டால் என் மானமே போய்விடும்.

நல் : அடடா. நான் என் வீட்டிலிருந்தால் இரண்டுலக்ஷம் என்ன? ஐந்துலக்ஷம் பத்துலக்ஷம் கூடத் தருவேனே. நீங்கள் செய்கிற உபகாரத்துக்கு எவ்வளவு தந்தாலும் தகுமே.

நாச்சி : நீங்கள் கண்டிப்பாகத் தருவீர்கள். அதை நான் அறிவேன். ஆனால் இன்றைக்கு சாயந்திரத்துக்குள் அந்த ஆசாமிக்கு நான் பணம் தந்து விடுவதாக வாக்களித்து விட்டேன். நான்போய் எங்காவது முயற்சி செய்துவிட்டு வருகிறேன். அதுவரையிலும் தாங்கள் கொஞ்சம் தயவுசெய்து...

நல் : தாங்கள் போனால் எப்போது திரும்பி வருவீர்கள் ?

நாச்சி : பணம் கிடைத்துவிட்டால் சாயந்திரமே வந்துவிடுறேன். இன்றைக்கு இரவேகூட உங்களை வீட்டிற்குக் கொண்டுபோய் விட்டு விடுவேன். பணம் கிடைக்காவிட்டால் நாலைந்துநாள் ஆனாலும் ஏற்பாடு செய்துகொண்டு தான் வரவேணும்.

நல் : ஐயையோ ! அதுவரையிலும் எங்கள் கதி என்ன ?

நாச் : அதுதான் எனக்கும் வருத்தமாக இருக்கிறது.

நல் : சாயந்திரத்துக்குள்ளாக அந்தப்பணத்தைத் தந்துவிட்டால் இன்றைக்கே நாங்கள் வீட்டுக்குப் போய்விடலாமா ?

நாச் : இந்தச் சங்கடம் வராதிருந்தால் அந்த இன்ஸ்பெக்டர் கெடுபிடியைக் கூட சட்டை செய்யமாட்டேன். இன்றைக்கே உங்களை வீட்டுக்கு அனுப்பத்தான் எண்ணியிருந்தேன். இந்தக் கஷ்டம் குறுக்கே வந்ததனால்தான் இன்னும் இரண்டு மூன்று நாள் பொறுத்துக்கொள்ளச் சொல்லி உங்களைக் கேட்டுக் கொண்டேன்.

நல் : சாயந்திரத்துக்குள் உங்களுக்குப் பணம் கிடைக்கும்படி நான் செய்கிறேன்...

நாச்சி : ஐயையோ ! அது வாண்டாங்க... இந்தச்சமயத்திலா உங்களிடத்தில் நான் பணம் வாங்குவது ? உங்களுக்கு உபகாரம்

செய்வதற்கு லஞ்சமா வாங்குவேன்? அது நல்லாயில்லே. நான் வேறு எங்காவது போய் ஏற்பாடு செய்துகொள்ளுகிறேன். நீங்கள் கவலைப்படாமல் இரண்டு மூன்றுநாள் பொறுத்துக் கொண்டிருங்கள்.

நல்: பரவாயில்லே, அதனாலென்ன? நானே பின்னல் உங்களுக்குத் தரவேணும் என்று நினைத்ததில் கொஞ்சம் இப்போதே கொடுத்தாலென்ன?...உடனே உங்களுக்குப் பணம் கிடைக்கும்படிச் செய்கிறேன்...ஒரு காரியம் செய்யுங்கள்.

நாச்சி: என்ன காரியம்?

நல்: என்னுடைய இரும்புப் பெட்டிகளின் சாவிக் கொத்தை... என்னை இங்கே கொண்டுவந்தவர்களில் கருப்பா குள்ளமாக தடிச்சவனுக இருக்கிறான் பாருங்கள் அவன் பிடுங்கிக்கொண்டான். அதைக் கொஞ்சம் வாங்கிக்கொண்டு வாங்க.

நாச்: அப்படியா! உங்களுடைய சாவிகளைக் கூடவா இந்தப் பயல்கள் எடுத்துக்கொண்டான்கள்! அதை நான் வாங்கித் தருகிறேன்...ஆனால் தாங்கள் இங்கே இருக்கிறபோது அங்கே இரும்புப் பெட்டியை யார் திறப்பது?

நல்: அதற்கெல்லாம் நான் வழி சொல்லுகிறேன்...சாவிக் கொத்தை எடுத்துக்கொண்டு என்னுடைய மானேஜரிடம் போங்கள்...அவரைத் தெரியுமல்லவா உங்களுக்கு?

நாச்: நல்லாத் தெரியும் மகாதேவர்தானே?

நல்: ஆமாம்...மகாதேவனிடம் போங்கோ...நான் அவருக்கு ஒரு கடிதம் தருகிறேன். அவரே இரும்புப் பெட்டியைத் திறந்து உங்களுக்கு வேண்டிய பணத்தை எடுத்துத் தருவார்.

நாச்சி: அவர் என்னை ஏதாவது சந்தேகித்தால்?

நல்: சந்தேகிக்க மாட்டான். சந்தேகிக்க இடமில்லாமல் நான் என் கைப்பட கடிதம் தருகிறேன். என்னுடைய சாவிக் கொத்தைப் பார்த்தாலே நீங்கள் என்னிடமிருந்து என் சம்மதத்தின் மேல்தான் வந்திருக்கிறீர்கள் என்பதை அறிந்து கொள்வான். அவன் ரொம்ப புத்திசாலி.

நாச்: போலீஸ்காரர்கள் ஏதாவது...நீங்கள் இல்லாத சமயத்தில் பெட்டிகளைத் திறக்கக்கூடாது என்று ஏற்பாடு செய்திருந்தால்?

நல்: செய்திருக்கமாட்டார்கள். அப்படிச் செய்திருந்தாலும் மகாதேவன் வேறு இடங்களிலிருந்து எனக்காக எவ்வளவு பணம் வேணுமானாலும் வாங்கித்தர முடியும். அதுவும் முடியாவிட்டாலும் அவனிடத்தில் இருக்கிற என்னுடைய 'செக்' புத்த

கத்தை வாங்கிக்கொண்டு வாருங்கள். நான் அவன் பேருக்கு செக் தருகிறேன். அவனே அதை மாற்றி உங்களுக்கு உடனே பணம் தருவான்.

நாச்: அதையும் அந்தக் கடிதத்தில் விவரமாக எழுதிவிடுங்கள்.

நல்: விவரமாக எழுதித் தருகிறேன்.

நாச்: சரி நான்போய் அந்த சாவிக்கொத்தை வாங்கிக்கொண்டு வரட்டுங்களா?

நல்: ஆமாம்...அதோடு கடிதம் எழுதக் காகிதமும் பேனவும் கொண்டாங்க.

(நாச்சிமுத்து வேகமாக எழுந்து போகிறான். சிறிது நேரம் அங்குமிங்கும் திரிந்துவிட்டுத் திரும்பிவந்து தன்னிடத்தில் ஏற்கனவே தயாராக வைத்திருந்த சாவிக் கொத்தை நல்லப்பரிடம் கொடுக்கிறான். அவர் அதை வாங்கித் திருப்பித் திருப்பிப் பார்த்து பூரிப்படைகிறார்.)

நல்: சாவிக்கொத்தைக் கேட்ட உடனே தந்துவிட்டார்களா?

நாச்: தராமல்?...நான் சொன்னபடி கேட்காவிட்டால் இந்தப் பச்சங்களுக்கு நான் தங்களிடத்தில் மன்னிப்பு வாங்கித் தரு வேனு?

நல்: என்னிடமிருந்துச் சாவிக்கொத்தோடு பிடுங்கிக் கொண்டு போன பணம்—இருபதாயிரம் ரூபாய்க்குமேல்—மோதிரங்கள், கடுக்கன்கள்—முதலான அதையெல்லாம் என்ன செய்தார்கள்?

நாச்: அடேடே! அது வேறையா! அதை என்னிடம் நீங்கள் சொல்ல வில்லையே! அதையும் எல்லாம் வாங்கிவிடுகிறேன்...

(என்று எழுந்திருக்கிறான்.)

நல்: அதை அப்புறம் பார்த்துக் கொள்ளலாம். முதலில் நீங்கள் போய் பணத்தை வாங்கிவந்து சாயங்திரத்துக்குள் கடனைத் தீர்த்துவிட்டு...இன்றைக்கு இரவே எங்களை வீட்டுக்கு...

நாச்: அதைத் தாங்கள் சொல்லவேணுமா? அதற்காகத்தானே நான் உங்களுக்கு இவ்வளவு தொந்தரவு—இப்படி நீங்கள் துன்பத்தில் சிக்கிக் கொண்டிருக்கிற இந்தச் சமயத்தில்—கொடுக்கிறேன்.

நல்: எனக்கென்ன தொந்தரவு? எனக்காகத்தானே நீங்கள் இவ்வளவு பாடுபடுகிறீர்கள். சாமியே வந்தாற்போல இங்கே வந்து சேர்ந்தீர்கள்...சரி. கடிதம் எழுதித் தருகிறேன். நீங்கள் நேரத்தோடு போய்ப் பணத்தை வாங்கிவந்து அந்த ஆச்சாமிக்குத் தந்துவிட்டு...

நாச் : அப்புறம் வேறே ஜோலியில்லிங்க...உடனே இன்றைக்கே உங்களோ வீட்டில் கொண்டுவந்து நானே விட்டு விட்டு மறு வேலே பார்க்கிறேன்.

நல் : ரொம்ப சந்தோஷம். இந்த உபகாரத்தை ஒருநாளும் மறக்கமாட்டேன்.

(என்று கடிதம் எழுதுகிறார். எழுதிமுடித்து அதை நாச்சி முத்துக்கு வாசிக்கிறார்.)

கடிதம்

மகாதேவனுக்கு, நலம். இது மிகவும் ரகசியமான கடிதம். இதை மிகவும் அவசரக் கடிதமாக மதித்து இதிலுள்ளபடி உடனே செய்யவேண்டியது. கொஞ்சம்கூட தாமதிக்கக் கூடாது என்பதை வெகு கண்டிப்பாக அறியவேண்டியது.

இந்தக் கடிதம் கொண்டுவரும் அன்பருடைய உதவியால் வசந்தாவும் நானும் ஒரு வெகு ரகசியமான இடத்தில் மிகவும் சௌக்யமாக இருக்கிறோம். இன்று இரவு நாங்கள் வீட்டுக்கு வந்து விடக் கூடும். அதற்காக மிகவும் அவசரமாக இரண்டு லக்ஷம் ரூபாய் உடனே வேண்டியிருக்கிறது. இவர் வசமாக என்னுடைய இரும்புப் பெட்டிகளின் சாவிக்கொத்தை அனுப்பி யிருக்கிறேன். ரொக்கம் வைக்கிற பெட்டியின் சாவி உனக்குத் தெரியும். அதைத் திறந்து ரொக்கமாக இரண்டு லக்ஷம் ரூபாய்....

நாச் : எவ்வளவுங்க ?

நல் : இரண்டுலக்ஷம். ஏன் ? அவ்வளவுதானே வேண்டுமென்றீர்கள்; போதாதா ? வேணுமானால் இன்னும் சேர்த்து எழுதுகிறேன்.

நாச் : வட்டிகிட்டி கேட்பானே, என்னமோ. எதற்கும் இன்னும் கொஞ்சம் சேர்த்தே எழுதினால்...

நல் : சேர்த்தே எழுதுகிறேன். இன்னும் ஐம்பதினாயிரம் சேர்த்து எழுதுகிறேன்; போதுமா ?

நாச் : தங்களிஷ்டம். எனக்கு எவ்வளவு தந்தாலும் சந்தோஷம். எனக்குள்ள எல்லா கஷ்டங்களையும் தாங்கள் நீக்கியதாக இருக்கும்.

நல் : சரி, அப்படியானால் மூன்று லக்ஷமாக எழுதுகிறேன்.

நாச் : ரொம்ப சந்தோஷம்...ஆனால் அந்த மூன்று என்கிற லக்கம் எனக்கு ராசியில்லை. அதனால்...

நல் : நான்கு லக்ஷமாக எழுதுகிறேன்.

நாச் : தர்மராஜாபோல்...கொடுக்கிறது கொடுக்கிறீர்கள்.நாலாக இருப்பானேன் ? முழுசாக ஐந்து என்றுதான் இருக்கட்டுமே. மகாராஜா. உங்களுக்கென்ன குறைவு ?

நல்: சரி, ஐந்து லக்ஷமாகவே எழுதிவிடுகிறேன். திருப்திதானே?

நாச்: போதும், போதும். அதிகமாக ஆசைப்படக் கூடாதுங்க. ஐந்துலக்ஷம் தங்களுக்கு ஐந்து தம்பிடி. ஆனாலும் எனக்கு அதுதான் ஐம்பது கோடி. போதும் அப்படியே எழுதிவிடுங்கள்.

(உடனே நல்லப்பர் இரண்டு லக்ஷம் என்பதை ஐந்து லக்ஷமாகத் திருத்துகிறார்.)

நாச்: அதைத்திருத்தினால் நான்தான் திருத்திவிட்டேன் என்ற சந்தேகம் வரும். தயவுசெய்து வேறு கடிதமே எழுதிவிடுங்கள்.

நல்: ஆமாம். அது உண்மைதான்.

(வேறு கடிதம் எழுதுகிறார். எழுதி முடித்துவிட்டு முன்விட்ட இடத்திலிருந்து படிக்கிறார்.

"அதைத் திறந்து சொக்கமாக ஐந்து லக்ஷம் ரூபாய் (ரூ. 500000) இவரிடமே வெகு ரகசியமாகக் கொடுத்தனுப்ப வேண்டும். பெட்டியைத் திறக்கப் போலீஸ் தடை எதாவது இருந்தால், பணம் எதற்காக என்று யாருக்கும் சொல்லாமல் நம்முடைய மற்ற மில்களில் சேர்ந்திருக்கும் பணத்திலிருந்தாவது போதாவிட்டால் கைமாற்று வாங்கியாவது சரியாக ஐந்து லக்ஷம் மாலை ஆறு மணிக்குள் எனக்கு வந்து சேரும்படி இவரிடம் அனுப்பவேண்டியது. அப்படிச் சேகரம் செய்ய முடியாவிட்டால் என்னுடைய மில் கணக்கு 'செக்கு' புத்தகத்தை இவரிடம் அனுப்பவேணும். அதில் உன்பேருக்கு ஐந்து லக்ஷம் கொடுக்க ஒரு 'செக்' அனுப்புகிறேன். அதை நீயே உடனே மாற்றி ரொக்கத்தை இவரிடம் கொடுத்தனுப்ப வேண்டியது. இதில் இம்மிகூட பிசகாமல் கவனித்துக் கொள்ளவேண்டும். பணம் சாயந்திரத்துக்குள் வந்து சேராவிட்டால் நாங்கள் இன்று வீட்டுக்கு வந்து சேருவது முடியாமற் போகும். ஜாக்ரதை"

அன்புள்ள

பெ. மு. நல்லப்பன்.

நல்: (கடிதத்தைப் படித்து முடித்துவிட்டு) என், சரிதானே?

நாச்: சொம்ப சரிதானுங்க, தங்களுக்கு நான் செய்கிற உதவி தாங்கள் செய்கிற இந்த உபகாரத்துக்கு ஈடாகுங்களா?

நல்: அதென்ன அப்படிச் சொல்லுகிறீர்கள்? எங்கள் உயிரையே காப்பாற்றிய உங்களுக்கு நான் கொடுக்கிற இந்தப் பணம் எம்மாத்திரம்?...இன்றைக்கு இரவு நாங்கள்...

நாச்: சந்தேகமே வேண்டாம். நானே உங்கள் வீட்டில் கொண்டு வந்து விட்டு விட்டு வருகிறேன்.

(கடிதத்தையும் சாவிக் கொத்தையும் நல்லப்பர் கொடுக்கிறார். வாங்கிக்கொண்டு வணங்கிவிட்டு நாச்சிமுத்து போகிறான்.)

காட்சி 47

இடம் : ஆஸ்பத்திரி
காலம் : பிற்பகல்

(செங்கோடன் மனைவி காளியம்மாள் சுந்தரத்தைப் பார்க்க ஆஸ் பத்திரிக்கு வருகிறாள். ஆஸ்பத்திரியின் உள்ளே சுந்தரம் படுத்திருக்கிற இடம் ஒரு தனி அறை. அது மற்ற நோயா ளிகள் படுத்திருக்கும் கூடத்துக்கப்பால் உள்ளது. அங்கே போக அநுமதி வேண்டும். அந்தக் கூடத்தின் வாசலுக்கு அருகில்வந்து, காளியம்மாள் உள்ளே தலையை நீட்டி எட்டி யெட்டிப் பார்த்துக்கொண்டு உள்ளே போகலாமோ போகக் கூடாதோ என்று கூசிக் கூசி நிற்கிறாள். அப்போது ஆஸ் பத்திரி வேலையாள் ஒருவன் வருகிறான். அவனைப் பார்த்து)

காளி : ஐயா ! இங்கே - நம்ப ... சுந்தரமைய்யா படுத்திருக்கிறாரே, அது எங்கிங்கே ?

வேலை : என் ?

காளி : நான் அவரைப் பாக்குணுங்க.

வேலை : நீ அவரைப் பாக்காட்டி என்ன ?

காளி : நாம் பாக்காமெ, பின்னே ஆரய்யர் பாக்கணும் ?

வேலை : நீ யாரு ?

காளி : நானு ? நாந்தான் காளியம்மா. போய்ச் சொல்லுங்க நான் வந்திருக்கிறேனுண்ணு.

வேலை : காளியம்மாளும் மூளியம்மாளும் இப்ப அவரைப் பாக்க முடியாது.

காளி : என்னுய்யா மூளி-கீளின்னு ரொம்ப எளக்கமாப் பேசுறே? கொஞ்சம் நாக்கெ உள்ள வச்சிப் பேசு.

வேலை : இந்தா ! இங்கே சத்தங்கித்தம் போடாதே. அந்த ரூம்புலே பெரிய டாக்டர் மண்டை உடைஞ்சுபோன ஒருத்த னுக்கு மருந்து குடுத்துக்கிட்டிருக்கிறாரு. இப்ப அங்கே ஆரும் போகக் கூடாது.

காளி : சரி. இன்னுங் கொஞ்சம் நேரங் களிச்சிப் பாக்கிறேன். அதைச் சொல்லாமெ என்னுமோ மூளிகீளின்னு பேசுறிங் களே.

வேலு : எவ்வளவு நேரங் களிஞ்சாலும் இண்ணைக்குப் பாக்க முடியாது. நாளைக்கு வா, போ.

காளி : என்னய்யா வெகையாட்டா இருக்குதா ஒனக்கு? மூணு நாளா அவரைப் பாக்காமெ தூக்கம் வர்லெ. சோறு கூடச் சரியாக் குடிக்காமெ ... ஒம்பது கல்லு நடந்து வந்திருக் கிறேன். நாளைக்கு வா இங்கிறியே, கொஞ்சமாவது நெஞ் சிலே ஈரம் எரக்கமில்லாமெ?

வேலு : ரொம்ப ஈரம் எரக்கத்தைக் கண்டவதான். அம்மா நீ இங்கே கூச்சல் போடாதே, டாக்டர் கோவிச்சுக்குவாரு, போ.

காளி : அட! அந்த டாக்குட்டரைத்தான் கொஞ்சம் கூப்பிடுங் களேன். நாங்கேட்டுப் பாக்குறேன்.

வேலு : அடெ போம்மா வெளியே; இதென்ன ஆஸ்பத்திரியா இல்லே சந்தேண்ணு நெனச்சியா?

காளி : ஆஸ்பத்திரீண்ணுதான் வந்திருக்கிறேன். சந்தையிலியா கொண்டு போயி குண்டுபட்டவங்களைப் போடுவாங்க?

(உதவி டாக்டர் வருகிறார்)

உ. டா : என்ன சத்தம்? யாரம்மா நீ?

காளி : ஐயா. நாந்தான் அந்தக் காளியம்மா. என்னூட்டுலேதான் சுந்தரம் ஐயா, வசந்தம்மா, நல்லப்பரு எல்லாரும் அண் ணைக்கு ராத்திரி ஒளிஞ்சிக்கிறதுக்கு நான் எடங்குடுத்தேன். என் ஊட்டுக்குத் தீப்பிடிச்சிதான் அவுங்களெல்லாம்.....

உ.டா. : சரி...சரி... போதும். அந்தக் காளியம்மாள் நீதானா? உன்னைப் பற்றி சுந்தரம் சொன்னார்... சுந்தரத்தைப் பார்க்க வந்தாயா?

காளி : ஆமாஞ்சாமி ... இவரென்னுமோ என்னை மூளி—கீளி—ண்ணு வெளியே போவச் சொல்றாரே?

உ.டா. : (பியூனைப் பார்த்து) ஏண்டா பூல். அப்படியா சொல் றது? (காளியம்மாளைப் பார்த்து) சரி, கொஞ்சம்பொறு. அந்த ரூமில் படுத்திருக்கிற இன்னொரு ஆளுக்கு கொஞ்சம் அபாய மாக இருக்கிறது. அவனை வேறே இடத்துக்குக் கொண்டு போகப் போகிறார்கள். அப்புறம் போய் நீ சுந்தரத்தைப் பாக்கலாம்.

காளி : ஆமாஞ்சாமி, ஒம்பது கல்லு சோறு தண்ணியில்லாமெ நடந்து வந்திருக்குறேன், அந்த ஐயாவைப் பாக்கணு முண்ணு.

(**உதவி** டாக்டர் போகிறார். பியூனும் போகிறான். காளியம்மாள் காத்திருக்கிறாள். சிறிது நேரத்துக்குள் சுந்தரம் இருக்கிற அறையில் இருந்த முனுசாமியை அலாதியான வேறொரு இடத்துக்கு விசேஷ கவனிப்புக்காகத் தூக்கிக்கொண்டு போகிறார்கள். அதன் பிறகு சிறிது நேரம் சென்று, உதவி டாக்டரின் உத்தரவால் முன்னேவந்த பியூனே காளியம்மாளை கூட்டிக்கொண்டு போய் சுந்தரம் இருக்கிற அறைக்கு வழிகாட்டி விட்டுப் போய்விடுகிறான். காளியம்மாள் சுந்தரம் இருக்கிற அறைக்குள் எட்டிப் பார்த்துவிட்டு நுழைகிறாள். சுந்தரம் எங்கேயோ பார்த்துக்கொண்டு ஏதோ சிந்தனையாகப் படுத்திருக்கிறான்.)

காளி : சுந்தரம் ஐயா ! சொகமா இருக்கிறீங்களா ?

(சுந்தரம் திரும்பிப்பார்த்து காளியம்மாளைக்கண்டு வெகு சந்தோஷத்துடன் விலுக்கென்று எழுந்து உட்கார்ந்து)

சுந் : வாம்மா, காளியம்மா ... உங்கள் வீடு வெந்து போனதைப் பற்றி இப்பத்தான் நினைத்துக் கொண்டிருந்தேன்.

காளி : ஊடு போனப் போவுதுங்க. சாமி புண்ணியத்திலே நீங்க பொளச்சிகிட்டிங்களே, அதே போதும்.

(என்று கட்டிலுக்கு அருகில் உட்காருகிறாள்.)

சுந் : எல்லாம் உன்னுடைய ஆசீர்வாதம்தான்.

காளி : என் ஆசீர்வாதங்களா ! அல்லாம் நம்ம அம்மாவும் ஐயாவும் செஞ்ச புண்ணியந்தானுங்க. அம்மா வந்தாங்களாமே... எங்கிங்கோ ?

சுந் : அம்மா இந்த ஊரில்தான் இருக்கிறார்கள். எங்கள் மாமன் வீடு இந்த ஊர்தான். அங்கே தங்கியிருக்கிறார்கள். இன்னும் கொஞ்ச நேரத்தில் இங்கே வருவார்கள்.

காளி : வசந்தம்மா கெடைக்கிலியாமே ! எதாவது துப்பு சிக்கிச் சிங்களா ?

சுந் : வசந்தாவும் நல்லப்பரும் எங்கிருக்கிறார்களோ தெரியவில்லை. என் உடம்பைப் பற்றிக் கூட எனக்குக் கவலையில்லை. வசந்தா என்ன துன்பத்துக்கு ஆளானாளோ, அதே விசாரந்தான் ... தூக்கமே வருவதில்லை.

காளி : பின்னே, இருக்காதுங்களா ? ஒங்க உசுராச்சுங்களே அந்த அம்மா.

சுந்: எனக்கு மட்டுமா, எங்கள் குடும்பத்துக்கே வசந்தாதான் ஜீவன்.

காளி: அவங்களை மகிழ்க்குக் கொண்டு போறதாகத் தானே எல்லாரும் சொன்னுங்க. அங்கே இல்லையாமே?

சுந்: அங்கே இல்லை. அது நிச்சயம்..

காளி: வசந்தம்மாவுக்கும் நல்லப்ப மொதலாளிக்கும் ஒண்ணும் தீம்பு வந்திருக்காதே?

சுந்: இருக்காது ..... செங்கோடன் வரவில்லையா?

காளி: வல்லிங்க. மூணு நாளா நிக்க நெழலில்லாமெ வெகு பாடு பட்டு எங்க ஊட்டுக்காரர்தான் கொஞ்சம் கீத்தும் மூங்கிலும் வாங்கியாந்து ஒரு சின்ன கொட்டாயி போட்டுதுங்க. அது இன்னும் பூர்த்தியாகலிங்க. அந்த வேலையும் கொளந்தைங்களையும் அவுக பாத்துகிட்டுமூண்ணு நானு ஒங்களைப் பாக்க ... மூணு நாளா ஒங்க நெனைப்பும் வசந்தம்மா நெனைப்பும் தான் சாமி எனக்கு. பாளாப்போன இந்தப் பொரட்சிக்காரனுங்க ... நாங்க ... ஏளைங்க ... எங்க பாவத்திலே கையை வச்சி ... ஊட்டைக் கொளுத்திச் சாம்பலாக்கிப்பிட்டாங்களே. இவனுங்கதானே பொரட்சி பண்ணி ஏளைங்களைக் காப்பாத்தப் போறுங்களாம்!

சுந்: அந்த வீடுகளையெல்லாம் நான் முன் போலவே எல்லாருக்கும் கட்டித்தரச் செய்கிறேன் ... உன்னுடைய வீட்டை நல்ல மச்சு வீடாக்கித் தருகிறேன். பயப்படாதே, காளியம்மா.

காளி: மச்சு வீடு இல்லாட்டிப் போவுதுங்க ... சேர்த்துக்கு வச்சிருந்த எல்லாத் தவசமும் வெந்து போச்சுங்களே.

சுந்: ஓ. ஆமாம். அதைத்தான் முதலில் கவனிக்க வேணும்.

(என்று சொல்லிக்கொண்டே தலையணையின் அடியில் வைத்திருந்த வசந்தாவின் பணப்பையை எடுத்து அதை அவிழ்த்து இரண்டு நூறுரூபாய் நோட்டுகளை எடுத்து)

இந்தா இதை நீ உன் குடும்பத்துக்கு வைத்துக் கொள் ... பின்னல் இன்னும் தருகிறேன்.

(என்று ஒரு நூறுரூபாய் நோட்டைத் தந்துவிட்டு)

இதை மாற்றி வீடு வெந்து போனவர்களுக்குள் சோற்றுக்கு தானியம் இல்லாமல் கஷ்டப் படுகிறவர்களுக்கு உன் இஷ்டம் போல் ஆளுக்குக் கொஞ்சம் கொடு.

(என்று இன்னொரு நூறுரூபாய்நோட்டைக் கொடுக்கிறான். காளியம்மாள் வெகு சந்தோஷத்துடன் வாங்கிக்கொண்டு)

காளி : (கையை நீட்டிப் பையைச் சுட்டிக்காட்டி) அந்தப் பையி... அட்டாணியிலிருந்து எறங்கனப்போ வசந்தம்மா குடுத்தது இல்லிங்கோ?

சுந் : ஆமாம். இந்தப் பணமெல்லாம் வசந்தாவின் பணம்தான். வசந்தா கொடுக்கிற தர்மந்தான் இது.

காளி : வசந்தம்மா குடுத்தாலும் நீங்க குடுத்தாலும் எல்லாம் ஒண்ணுதானே. வசந்தம்மா பணம் ஒங்குளுது அல்லங்களா?

சுந் : ஆமாம். நானும் எங்கள் தாயாரும் செலவு செய்கிற எல்லாப் பணமும் வசந்தாவின் பணம்தான் ... அப்படிப்பட்ட வசந்தாவைப் பாதுகாக்க முடியாமல் ... அவளுக்கு என்ன அவமதிப்பு நேர்ந்ததோ ... காளியம்மா! நீ போனதும் கொஞ்சம் செங்கோடனை வரச் சொல்லு.

காளி : அவுங்களும் ஒங்களைப் பாக்கணுமுண்ணு பறவாப் பறந்தாங்க. நாம் போனதும் அவுங்க வருவாங்க. எதாச்சியும் அவுங்ககிட்டெ சொல்லணுங்களா? நாம் போயி சொல்லி வரச் சொல்றேன்.

சுந் : ஒன்றுமில்லை; குளத்தூர் என்று ஒரு ஊர் இருக்கிறது பார், அங்கே போய் ...

காளி : கொளத்தூருங்களா! அங்கே ஒங்களுக்கு என்ன ஆகுணும் சொல்லுங்க. நாஞ் செய்யச் சொல்றேன்.

சுந் : குளத்தூரைப் பற்றி உனக்குத் தெரியுமா?

காளி : ஐயோ! அதென்ன சாமி அப்பிடிக் கேக்கிறிங்கோ. கொளத்தூரு எங்க அம்மாளைப் பெத்தப் பாட்டி ஊரு ஆச்சே. எனக்குக் கண்ணுலங்கூட அங்கேதான் நடந்தது. இன்னும் அங்கே எங்க அம்மாளைப் பெத்த பாட்டி இருக்குறு. தாய் மாமன் இருக்கிறாரு.

சுந் : அப்படியா! ரொம்ப நல்லதாச்சு.... அங்கே நாச்சிமுத்து என்று யாரோ இருக்கிறாராமே, அவரைத் தெரியுமா உனக்கு?

காளி : நல்லாத் தெரியும். எங்க மாமன் அவர்கிட்டெதான் வேலைக்கு இருக்கிறாரு.

சுந் : அந்த நாச்சிமுத்து எப்படிப்பட்டவர்?

காளி : அவரா? அவரு சூராதி சூரருங்க. ரொம்பக் கெட்டிக்காரரு. அவரைப் பத்தி என்னென்னமோ சொன்னுங்க ... அதெல்லாம் நெஜப்பிலே இல்லிங்க ... நானு அங்கே போயி ரொம்ப நாளாச்சி ... இப்ப எப்படியோ, அது தெரியாதுங்க.

சுந் : உங்கள் மாமனுக்கு அவரிடத்தில் என்ன வேலை ?

காளி : வேலை என்னுண்ணு தெரியாதுங்க. அவர் கிட்டேதான் மாமன் வேலை பாக்குறாருண்ணு அதுதான் எனக்குத் தெரியும்.

சுந் : உங்கள் மாமன் உன்னிடத்தில் பிரியமாக இருப்பாரா ?

காளி : ஐயோ ! ... நானு சின்ன புள்ளையாயிருக்கிறப்போ என்னை எங்க மாமன் இடுப்பை உட்டு எறக்கவே மாட்டாரே. இப்பவும் எம் மேலே எங்க மாமனுக்கு ரொம்பப் பிரியம். பத்து நாளைக்கு முன்னாலே கூட வந்து என்னைப் பாத்துப்புட்டு ஏங் கொளந்தைகளுக்கு என்னென்னுமோ துணிமணி, காசு, பணம் எல்லாந் தந்துபுட்டுப் போனுங்க.

சுந் : உன் மாமனுக்கு செங்கோடனிடத்திலும் பிரியம்தானே ?

காளி : ஊஹூம் ... எம்மேலை இருக்கிற பிரியம் எங்க ஊட்டுக் காரர்மேலே இல்லிங்க. இவுங்க மேலே எங்க மாமனுக்குக் கொஞ்சம் கோவம்.

சுந் : ஏன் ?

காளி : இவுரு அவுங்களை சரியா மதிக்கிறதில்லிங்கோ. என்னையும் ஏங் கொளந்தைகளையும் அங்கே அனுப்பச் சொல்லி அஞ் சாறு தரம் மாமன் சொல்லியனுப்புனாருங்க. இவுரு சட்டை பண்ணலிங்க. அதுக்குக் கோவம்.

சுந் : அப்போ ... செங்கோடனை அங்கே அனுப்பினால் பய னில்லை.

காளி : ஏன் ? என்னத்துக்கு ? ஏங்கிட்டெ சொல்லுங்க. எங்க ஊட்டுக்காரர் போனா — அந்தப் பொரச்சிக்காரரை நம்பு னப்பிலே ... அதையும் இதையும் போட்டுக் கொளப்பிப்புடு வாருங்க. கொளத்தாருலே ஒங்களுக்கு என்ன ஆவணும், நாஞ்செய்றேன், சொல்லுங்க.

சுந் : காளியம்மா. அது ரொம்ப ரகசியமான விஷயம்...நீ எழுந்து போய் யாராவது நாம் பேசுவதை கேட்கிறார் போல் இந்தப் பக்கத்தில் இருக்கிறார்களா பாத்துவிட்டு வா, சொல்லு கிறேன்.

(காளியம்மாள் எழுந்துபோய் அக்கம் பக்கமெல்லாம் பார்த்து விட்டு வருகிறாள்.)

காளி : ஆரும் இல்லிங்க. சொல்லுங்க.

சுந் : காளியம்மா, நீ ரொம்பவும் நம்பத்தகுந்த உபகாரி. உன்னை சகன் என் உடன்பிறப்புபோல் எண்ணுகிறேன். நான் சொல்

லப்போவதை வெகு கவனமாகக் கேளு. உன்னால் முடியுமானால் நீயே குளத்தூருக்குப் போய் நான் சொல்லுவதை அறிந்து கொண்டு வா. உன்னால் முடியாவிட்டால் இதைப் பற்றி யாருக்கும் — செங்கோடனுக்குக் கூட — சொல்லி விடாதே. ரொம்ப ரகசியம். இப்போது இது வெளியில் தெரிந்துபோனால் அப்புறம்...வசந்தாவையும் நல்லப்பரையும் உயிரோடு பார்க்க முடியாது.

காளி : ஐயோ ! என் உசுர் போனாலும் நான் யார்கிட்டவும் சொல்லமாட்டனுங்க. நீங்க என்னை நம்புங்க, சாமி சாக்கியா... நான்...

சுந் : சரி...கேளு—(காதோடு சொல்லுகிறான்) வசந்தாவையும், நல்லப்பரையும் கொளத்தூரில் அந்த நாச்சிமுத்து வீட்டில் வைத்திருக்கிறார்களாம்.

காளி : ஊம்...இருக்குமுங்கோ...அவர் இந்தப் பொரட்சிக் காரனுங்களுக்கு வேண்டியவருண்ணு...யாரோ...எங்க மாமன் தானுட்டம் இருக்குது...சொன்னது நெனப்புக்கு வருதுங்க.

சுந் : நீ போய்...தந்திரமாக...உங்கள் மாமன் மூலமாக...நீ தெரிந்துகொண்டு பேசுவதாகக் காட்டிக்கொள்ளாமல்... மெள்ள...ஏதோ வேடிக்கையாகப் பேசுகிறமாதிரி பேசி, நல்லப்பரும், வசந்தாவும் அங்கேதான் இருக்கிறார்களா...அவர்களை எந்த இடத்தில் எப்படி மறைத்து வைத்திருக்கிறார்கள்... அந்த இடத்துக்குப் போவதானால் வழி எப்படி...காவல் காக்கிறவர்கள் உண்டா ; எத்தனைபேர்...வசந்தா சுகமாக இருக்கிறாளா ?...என்று அவர்களைப்பற்றிய எல்லா விவரங்களையும் யாருக்கும் சந்தேகத்துக்கு இடங்கொடுத்து விடாமல் அறிந்து வர வேணும...முடியுமா ?

காளி : என்னுமோ ஒங்க புண்ணியத்தில் எனக்கும் கொஞ்சம் புத்தி இருக்குதுங்க. நானே போறேனுங்க...எங்க மாமன் கிட்டே கொஞ்சிக் கொலவிப் பேசினா அவரு மறந்தாப்பிலே எல்லாம் சொல்லிப்பிடுவாருங்க. எனக்கு வளி தெரியும். இதுக்குத்தான் ஒதவாட்டி நான் இருந்தென்ன போயென்ன ? நானு இண்ணைக்கே எங்க பாட்டிக்கு ஒரு பொடவை, மாமன் பொண்டாட்டிக்கு பொடவை, மாமனுக்கு வேட்டி, கொளந்தைகளுக்குத் தீனி துணிமணி எல்லாம் வாங்கிக்கிட்டுப் போயி எங்க மாமனை சந்தோஷப்படுத்தி மொள்ள மொள்ள எல்லா ரகசியத்தையும் தெரிஞ்சிக்கிட்டு வர்றேன். போவுட்டுங்களா? நேரத்தோட போயி கடையிலே பொடவை வேட்டியெல்லாம் வாங்கிக்கிட்டு இன்னும் ஒம்பது மைலில் நடக்கணும்...

சுந் : ஆமாம், புடவை வேஷ்டி எல்லாம் வாங்கப் பணம் வேண்டாமா ?

காளி : இப்ப நீங்க குடுத்த பணத்துலே வாங்கிக்கிறேன். வேணு முண்ணு அப்பறம் ஒங்ககிட்டே வாங்கிக்கிறேன்.

சுந் : நான் கொடுத்தது உன் வீட்டுச் செலவுக்கு. அதைக் கொண்டு புடவை வேஷ்டி வாங்காதே. அதற்கு வேறே தருகிறேன்.

(என்று மறுபடியும் வசந்தா பையை அவிழ்த்து இன்னும் இரண்டு நூறுரூபாய் நோட்டுகளை எடுத்து)

இந்தா, இதைப் புடவை வேண்டி தின்பண்டம் எல்லாம் தாராளமாக வேண்டிய மட்டும் வாங்கி வைத்துக்கொள்ளு

என்று இருநூறு ரூபாயைக் கொடுத்துவிட்டு மறுபடியும் பத்து நூறுரூபாய்நோட்டுகளை எடுக்கிறான். காளியம்மாள் கண்ணை விரித்து, வாயைத் திறந்துகொண்டு சுக்கரம் பத்துநூறு ரூபாய் நோட்டுகளை எண்ணுவதைப் பார்த்துக்கொண்டு நிற்கிறாள்...

இந்தா, இதைப் பத்திரமாக இடுப்பில் வைத்துக்கொள், உன் மாமனோடு பேசும்போது...எதாவது பணம கொடுடபதனால் பிரயோசனம் உண்டு என்று உனக்குத் தோன்றினால் இதில் எவ்வளவு வேணுமானாலும் உன் மாமனுக்கு இரசியமாகக் கொடுத்து வேண்டிய விஷயங்களை அறிந்துகொண்டு வா. வசந்தாவும நல்லப்பரும் குளத்தூரில் இல்லாவிட்டாலும் வேறு எங்கே இருக்கிறார்கள் என்பது உங்கள் மாமனுக்குத் தெரிந்திருந்தால் அதையும் மெதுவாக அறிந்துகொள். சரி, போய் வா. காளியம்மா உன்னைத்தான் வசந்தாவை மீட்க வேணும்.

காளி : இவ்வளவு பணத்தை நான் கண்ணாலெ கூடப் பார்த்த தில்லியே. எங்கிட்டெ இவ்வளவு பணம் இருக்கிறதை ஆரா வது பாத்தா நான் எங்கியோ திருடிக்கிட்டு வந்திருக்கிறே னுண்ணுதான் நெனைப்பாங்க.

சுந் : புடவை வேஷ்டி வாங்குவதற்கு வேண்டியதைத் தவிர மற் றதை யெல்லாம் மடியில் மறைத்து வைத்துக்கொள்ளு. நீ உங்கள் ஊருக்கு நடந்து போகாதே. ஒரு வண்டி வைத்துக் கொள்ளு. தெரியுமா.

காளி : நான்தான் ரொம்ப பணக்காரி ஆயிட்டேனுங்களே! ஒங்க புண்ணியமா, வண்டியிலியே போறனுங்க. எனக்கும் நடக்க அலுப்பாத்தானிருக்குது.

சுந் : நீ உண்மையாகவே பணக்காரியாகப் போகிறாய். சந்தேக மில்லை. வசந்தாவும் நல்லப்பரும் வந்துவிட்டால் எனக்கும் உனக்கும் பணத்துக்கு என்ன பஞ்சம்?

(முகமலர்ச்சியுடன் கும்பிடுபோட்டுவிட்டு காளியம்மாள் பணத்தை இடுப்பில் பந்தோபஸ்து செய்துகொண்டு போகிறாள்.)

காட்சி 48

இடம் : ஆஸ்பத்திரி
காலம் : சாயுங்காலம்

[காளியம்மாள் போனபின் சிறிது நேரத்துக்கெல்லாம் போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் சுந்தரத்தைப் பார்க்க ஆஸ்பத்திரிக்கு வருகிறார். சுந்தரம் எழுந்து படுக்கையில உட்கார்ந்த வண்ணம் கும்பிட்டு அவரை வரவேற்கிறான் அருகிலிருந்த ஒரு நாற்காலியை அவரே கட்டிலுக்கருகில் இழுத்துப் போட்டுக் கொண்டு உட்காருகிறார்.]

இன் : உடம்பு எப்படியிருக்கிறது ?

சுந் : உடம்பு சௌக்கியம்தான். புண்ணும் ஆறிவருகிறது. வலித்கிலி ஒன்றும் இல்லை. இன்னும் ஐந்தாறு நாளில் நான், ஆஸ்பத்திரியை விட்டுப் போய் விடலாம் என்று டாக்டர் சொன்னார் ..... வசந்தா — நல்லப்பர் விஷயமாக ஏதாவது துப்பு கிடைத்ததா ?

இன் : அது தானே கிடைக்கவில்லை. நானும் என் சாமர்த்திய மெல்லாம் காட்டி ஓய்வு ஒழிச்சலில்லாமல் எங்கெங்கேயோ தேடிப் பார்த்து விட்டேன். பதினைந்து மைல் தூரம் வரையில் சுற்றிலும் உள்ள எல்லா இடத்தையும் சோதனை செய்து விட்டேன். உங்களை ஆஸ்பத்திரிக்கு கொண்டு வந்த அன்று இரவே மலைவீட்டைச் சோதனைசெய்தேன். உடனே உங்கள் நிலைமை எப்படியிருக்கிறதென்று அறிய இங்கே வந்தேன். அந்தச் சமயத்தில் மாந்தோப்பிலிருந்து ஆலம்பாடி முனியப்பன் கோவிலுக்கு ஒரு மோட்டார் போனதாக அறிந்து ஆலம்பாடிக்கு ஓடினேன. அங்கே முனியப்பன் கோவிலுக்கருகிலுள்ள ஒரு வீட்டுவரை கார் போயிருந்த அடையாளம் தெரிந்தது. அந்த வீட்டில் யார் இருக்கிறார்கள் என்று அறிய மெதுவாகக் கதவைத் தட்டினேன். உள்ளே இருந்தவர்கள் பூட்டைத் திறக்கச் சொன்னார்கள். அதன் பிறகுதான் வெளியில் பூட்டப்பட்டிருந்ததை அறிந்தேன். பூட்டை உடைத்து உள்ளே பார்த்தால் நல்லப்பருடைய பட்டாளத்தலைவன் வீரபத்ரனும் அவனுடைய சிப்பாய்களும் அங்கே அடைபட்டிருந்தார்கள்.

சுந் : ஏன் ?

இன் : அவனையாரோ எப்படியோஏமாற்றி நல்லப்பர் வீட்டுக்குக் காவல் இல்லாதபடி செய்ய அங்கே பூட்டிவிட்டார்களாம்.

சுந் : எப்படி?

இன் : அதை யெல்லாம் இன்னும் பூரா விசாரிக்க வில்லை. முதலில் நல்லப்பரும் அவருடைய பெண்ணும் என்ன ஆனார்கள் என்பதைக் கண்டுபிடிக்க வேணும்..... அந்தப் புரட்சிக் காரர்களுக்கு மலை வீட்டைவிட வேறு மறைவிடங்கள் எங்கெங்கே இருக்கின்றன ?

சுந் : அது எனக்கெப்படித் தெரியும்?

இன் : என் நீங்களும் அவருடன் சொம்ப உறவாக இருந்ததாகத் தான் தெரிகிறது. அந்த புரட்சிக கட்சிக்குத் தலைவனான முத்துவீரப்பனும் நீங்களும் சேர்ந்துதான் ' இன்பமாளிகை ' ஹோட்டலில் ஏழெட்டு மாசத்துக்கு முன்னாலேயே கலந்து பேசித் திட்டம் போட்டீர்களாம்.

சுந் : முத்துவீரப்பனும் நானும் ' இன்பமாளிகை ' ஹோட்டலில் பேசினதும் திட்டம் போட்டதும் உண்மைதான். ஆனால் எங்கள் பேச்சு கொலையும் கொள்ளையும் இல்லாத முறையில் ஒரு பொருளாதாரப் புரட்சி உண்டாக்க வேண்டும் என்பது தான். புரட்சி பேசுகின்றவர்கள் மனசை சாத்வீக முறைக்குத் திருப்ப வேணும் எனறுதான் நான் முத்து வீரப்பனோடு சேர்ந்தது.

இன் : சேர்ந்து என்ன ஆச்சு ? கொள்ளையும் கொலையுந்தானே நடந்தது !

சுந் : அதற்கு நான் என்ன செய்வேன்? முத்துவீரப்பனும் கூட அதில் சம்பந்தப் படவில்லை. எங்களுக்குத் துளிகூட தெரியாமல் கருப்பண்ணனும் வீராசாமியும் அவனோடு சேர்ந்து கொள்ளையில் பங்குவாங்க நினைத்த காலிகளும் செய்த வேலை இது.

இன் : இந்தக் கேசில் நீங்களோ முத்து வீரப்பனோ சம்பந்தப் பட வில்லை. அது நன்றாகத் தெரிகிறது. இருந்தாலும் இந்தப் புரட்சிக்காரருடைய ரகசியங்களையெல்லாம் கண்டறிய அந்த முத்துவீரப்பனையும் ' அரெஸ்ட் ' செய்யச் சொல்லியிருக்கிறேன்.

சுந் : என்னையும் ' அரெஸ்ட் ' செய்யுங்கள். (சிரிக்கிறான்)

இன் : உங்களை ' அரெஸ்டு ' செய்ய வேண்டியதில்லை... நீங்கள் அந்தப் புரட்சிக் கூட்டத்தில் சேர்ந்தவர் அல்ல என்பதைத் தீர விசாரித்து அறிந்து கொண்டேன். (என்று சிரிக்கிறார்)

சுந் : என்னைப்பற்றி என்ன விசாரித்தீர்கள் ?

இன் : உங்களைப் பற்றிய எல்லாம் எனக்குத் தெரியும். உங்கள் தந்தை, தாயார், மாமா, மாமாவின் பெண், எல்லாரைப் பற்றியும் எனக்குத் தெரியும். உங்களுக்கும் நல்லப்புருடைய மகளுக்கும் உள்ள ஸ்நேகம், அதற்காக உங்கள் மாமா வருத்தப்படுகிறது. ..... அது மட்டும்மல்ல. நீங்கள் இந்த நாலுந்து மாதத்திற்குள் அனுப்பியிருக்கிற தந்திகளின் நகல்கள் கூட என்னிடத்தில் இருக்கின்றன. (சிரிக்கிறார்)

சுந் : எல்லாம் சேர்த்து என்னைப் பற்றித் தங்களுக்கு என்ன அபிப்பிராயம் ? (புன் சிரிப்பு)

இன் : மொத்தத்தில் நீங்கள் நல்ல பனிதர். சொம்பவும் யோக்கியர்தான். உங்கள் மாமாவின் பெண்ணை நீர் ஏங்க விட்டது தான் எல்லோருக்கும் வருத்தம்.....ஆனால் அது உங்கள் காதலைப் பற்றிய விஷயம். காதலைக கட்டாயப் படுத்த முடியாது என்று சொல்லுவீர்கள். அதில் நான் தலையிடக் கூடாது. (பலமாகச் சிரிக்கிறார்..... இருந்தாலும்.....

சுந் : (இன்ஸ்பெக்டருடன் தானும் சிரித்து விட்டு) ஆமாம் காதல் என்பது விளக்க முடியாத விஷயம்தான். அதைப் பற்றிப் பின்னல் பார்த்துக் கொள்ளுவோம். இப்போது வசந்தாவைக் கண்டு பிடிக்க ஏதாவது புது முயற்சிகள் உண்டா ?

இன் : அதுதான் எனக்கும் விசாரம் ..... அந்த மலை வீட்டுக்குப் போகிற பாதையில் அந்த இரவில் உங்களைச் சுட்டபிற்பாடு ஒரு இரட்டை மாட்டு வண்டி போனதாகத் தகவல் கிடைத்தது. அதைத் தொடர்ந்து விசாரித்ததில் அந்த வண்டி குளத்தூர் பக்கம் போனதாகச் சொன்னார்கள்.....

சுந் : குளத்தூருக்குப் போனீர்களா ?

இன் : நான் போக முடிய வில்லை..... சூப்ரண்ட் இந்தக் கேசைப் பற்றி தீவிர நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்படி என்னுடன் கலந்து ஆலோசிக்க வந்திருக்கிறார். நான் அவருடன் இருக்க வேண்டியிருந்தது.....

சுந் வேறு யாராவது போய்ப் பார்த்தார்களா? சப் இன்ஸ்பெக்ட போனார்?

இன் : சப் இன்ஸ்பெக்டரும் என்னோடு இருக்கவேண்டியிருந்தது. அதனால் ஒரு ஹெட் கான்ஸ்டேபிளைப் போய் விசாரித்து வரும்படி அனுப்பினோம். அவன் போய் விசாரித்துப் பார்த்து விட்டு அங்கேயும் இல்லை யென்று வந்து விட்டான்.

சுந் : (முகத்தை வெகு வருத்தத்தோடு சுளித்து, நொச்சக் கொட்டி விட்டு) அங்கே யாரை விசாரித்தார்களாம் ?

இன் : ஏன் குளத்தூரைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா ?

சுந் குளத்தூரைப் பற்றி எனக் கொன்றும் தெரியாது. அங்கே யாரை.....

இன் : அங்கே நாச்சிமுத்து என்ற ஒரு மிராசுதார் இருக்கிறாராம். அந்த ஊரைப் பற்றிய எந்த விவகாரத்தையும் அவர் மூலமாகத் தான் விசாரிப்பது வழக்கமாம். அவருடைய சம்மதமில்லாமல் போலீஸ்காரர் அங்கே ஒன்றும் செய்யமுடியாதாம். அவரை விசாரித்ததில் அன்றிரவு அங்கே வந்த இரட்டை மாட்டு வண்டி ஒரு தோட்டத்திலிருந்து நெல் மூட்டைகளைக் கொண்டு வந்தது என்று தெரிய வந்ததாம்.

சுந் : நாச்சிமுத்து பெரிய மிராசுதாரா? நம்பத் தகுந்தவரா ?

இன் : ஆமாம் மிகப் பெரிய மிராசுதாராம். அவரைப் பற்றி பல பேர் பல விதமாகச் சொன்னார்கள். நான் இங்கே வந்து இருபத் தேழு நாள் தான் ஆச்சு. இந்தப் பக்கத்திலுள்ள யாரார் எப்படி, என்று விசாரித்தறிய நேரமில்லை.

சுந் : நல்லப்பர் வீட்டுக்குள் கொள்ளையடிக்கப் புகுந்தவர்களில் முக்கியமானவர்களை யெல்லாம் பிடித்து விட்டீர்களா ?

இன் : வீராசாமி, கருப்பண்ணன், என்ற இரண்டு பேரைத் தவிர மற்ற முக்யஸ்தர்களையெல்லாம் 'அரெஸ்ட்' செய்து விட்டேன். அத்துடன் அன்று இதில் சம்பந்தப் பட்டிருந்தவர்களில் சுமார் நூற்று நாற்பத்தாறு பேர்களையும் கைது செய்திருக்கிறேன்.

சுந் ; அந்தக் கருப்பண்ணனும், வீராசாமியுந்தான் வசந்தாவைக் கடத்திக்கொண்டு போயிருப்பார்கள். அவர்களைப் பிடித்து விட்டால் வசந்தாவும் நல்லப்பரும் இருக்கிற இடம் தெரிந்து விடுமே.

இன் : அதற்குத்தானே நானும் அலைகிறேன், பார்ப்போம்..... இந்த வீராசாமி கருப்பண்ணன் முதலானவர்களுக்கு வேறு தாலுக்கா, வேறு ஜில்லாக்களில் ரகசியமான மறைவிடங்கள் எதாவது இருக்கிறதா என்பதைக் கண்டு பிடிக்க வேணும்... உங்களுக்கு எதாவது காதில் விழுந்திருக்கிற இடம் உண்டா? அதைக் கேட்கத்தான் வந்தேன். அதை விட்டு ஏதேதோ பேசிவிட்டோம்.

சுந் : எனக்கு இந்தப் புரட்சி இயக்கத்தைச் சேர்ந்தவர்களுடைய ரகசியங்கள் ஒன்றுமே தெரியாது. சுத்த சாத்வீக முறையில் நியாயமான ஒரு பொருளாதாரப் புரட்சி வரவேண்டும் என்று

நம்பினேன். அதற்காக என்னுடைய பள்ளிக்கூடத்தோழனை முத்துவீரப்பனோடு சேர்ந்து ஒரு முயற்சி செய்யலாம் என்று எண்ணினேன். அது இப்படியாகும் என்று கனவிலும் விரும பினதில்லை.

இன் : அநேக நல்ல இளைஞர்கள் அப்படி எண்ணித்தான் இதில் மாட்டிக் கொண்டு தவிக்கிறார்கள் ..... சரி...நான் போய் வருகிறேன். சூப்ரண்டைச் சந்திக்க வேணும். 'புரட்சி' என்று சொல்லிக் கொண்டு கொள்ளையும் கொலையும் செய் கிற கும்பல்களைக் கருவறுக்க வேணும் என்று சூப்ரண்ட் பெரிய திட்டம் போட்டுக் கொண்டிருக்கிறார்.

சுந் : சூப்ரண்ட் எப்படிப் பட்டவர் ?

இன் : ரொம்ப கண்டிப்பானவர். ரொம்ப 'ஆனஸ்ட் ஆபீசர்' டிபார்ட்மெண்டில் அவருக்கு வெகு நல்ல பேர்.

சுந் : நீங்களும் அவரும் சேர்ந்து வேலை செய்தால் இந்தக் கொள் ளைக்காரக் கும்பலை ஒடுக்கி விடலாம்.

இன் : அதென்ன ! என்னைப் பற்றி உங்களுக்கு அவ்வளவு நல்ல அபிப்பிராயமா ?

சுந் : ஆம் தாங்களும் வெகு 'ஆனஸ்ட் ஆபீசர்' என்று சொல்லி அதற்காகத்தான் உங்களை இங்கே மாற்றினார்களாம்.

இன் : அதார் சொன்னது ? பேஷ் ! தேவலையே நீங்கள். ரொம்ப வந்தனம். நான் போய் வருகிறேன் ..... உங்கள் மாமா வருத்தப் படுவதையும கொஞ்சம் கவனித்துக் கொள்ளுங்கள்.

[என்று சிரித்து சுந்தரத்தின் இடது கையைப் பிடித்து கைகுலுக்கி விட்டு இன்ஸ்பெக்டர் போகிறார்)

காட்சி 49

இடம் : நாச்சிமுத்துவின் ரகசிய வீடு

காலம் : மாலை

[மறு காளே நல்லப்பரையும் வசந்தாவையும் வீட்டுக்குக் கொண்டு போய் விட்டு விடுவதாக ஐந்து லக்ஷம் ரூபாய் கொடுக்க மானேஜருக்குக் கடிதம் வாங்கிக் கொண்டு போன நாச்சிமுத்து அதன் பிறகு மூன்று நாள் நல்லப்பரை எட்டிக்கூடப் பார்க்கவில்லே. கடிதத்தில் இருந்தபடி மானேஜர் நாச்சிமுத்துக்கு ஐந்து லக்ஷம் ரொக்கமாகத் தந்துவிட்டு நல்லப்பரை வசந்தாவும் அந்தப் பணத்திலில் ஆப்பி வந்து விடுவார்கள் என்று எதிர் பார்த்துக் கொண்டிருந்தார். பணத்தை வாங்கிக் கொண்ட நாச்சிமுத்து மானேஜரிடம் நல்லப்பர் இன்னும் இரண்டு மூன்று நாளைக்குள் வீட்டுக்கு வந்துவிடுவாரென்று கெடு வைத்துப் போனான். அதனால மானேஜரும் அதிகப்படாமல் காத்துக் கொண்டிருந்தார். மூன்று நாள்வரை நல்லப்பரிடம் போகாமலிருந்த நாச்சிமுத்து நான்காவது நாள் காலையில் போகிறான். நாச்சிமுத்துவைக் கண்டதும் தந்தையுடன் இருந்த வசந்தா எழுந்து எட்டப் போய் நிற்கிறாள்

நல்லப்பரைக் கண்டு நாச்சிமுத்து வெகு வணக்கத்தோடு குப்பிடுகிறான். நல்லப்பரும் குப்பிட்டு.]

நல் : வாங்கோ. என்னுங்க இப்படிச் செய்துவிட்டீங்களே. அன்றைக்கே வீட்டுக்குக் கொண்டுபோவதாகச் சொல்லி பணத்துக்குக் கடிதமும் சாவிக்கொத்தும் வாங்கிக்கொண்டு போனீர்களே! மூன்று நாளாச்சே. எட்டிக்கூடப் பார்க்கவில்லேயே... ஏன்?...மானேஜர் பணம் கொடுத்தானல்லவா?

நாச்: ஐயோ! பணத்துக் கென்னங்க? தாங்கள் பிரபுவாச்சே. நீங்கள் சொல்லி, பணம் கிடைக்காமல் போகுமா! மானேஜர் கடிதத்தைப் படித்துப் பார்த்தவுடனே பெட்டியைத் திறந்து பணத்தை எடுத்து எண்ணிக்கொடுத்து விட்டாருங்க. அதில ஒன்றும் அட்டி இல்லிங்க.

நல் : பின் ஏன் மூன்று நாளாகக் காணேம்?

நாச் : இந்தப் போலீசு தொந்தரவுதானுங்க. அன்றைக்கே நான் உங்கள் மானேஜரிடம் போகும்போதே இங்கே போலீசார் வரப்

போகிறார்கள் என்று கேள்விப்பட்டேன். அதுக்காக வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகிட்டுத்தான் காத்திருந்தேன். அந்தப் போலீசார் அன்றைக்கும் வரவில்லை. அடுத்த நாளும் வரவில்லை. நேற்றுத்தான் வந்தார்கள். அவர்களை ஒருவிதமாகச் சரிப்படுத்தி அனுப்பினேன்.

நல் : ஏன், அவர்கள் வந்தால் தான் என்ன ?

நாச் : அவர்கள் வந்து நீங்கள் இங்கே இருக்கிறதை அறிந்து விட்டால் அப்புறம் இந்தப் பசங்களையும் அவர்களிடம் நானே பிடித்துக் கொடுத்து விடவேண்டும். பிறகு இவர்களுக்கு மன்னிப்பு வாங்கித்தருவதாக நான் செய்த சத்தியமும் பொய்யாப் போகும். தாங்கள் சொன்னதும் பொய்யாகப் போய்விடும். கொம்ப மன்னித்து கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள். இன்றிரவு தப்பினால் நாளை ராத்திரி நிச்சயமாக உங்களையும் அம்மாளையும் தாட்டி விடுகிறேன்.

நல் : அதையாவது உறுதியாகச் சொல்லுங்கள்.

நாச் : உறுதி என்னுங்க; இது சத்தியம்.

நல் : இன்றைக்கே முடியாதா ?

நாச் : இன்றைக்கே கொண்டுபோய் விட்டு விடலாம் என்றுதான் பார்க்கிறேன்...நாளைக்கு தப்பவே மாட்டேன்.

நல் : சரி, ஒரே பேச்சாக நாளைக்கு நிச்சயந்தானே

நாச் : அதில் சந்தேகமே வேண்டாம்.

நல் : என் மகள் வருத்தத்தினால் மிகவும் இளைத்து விட்டாள். சாப்பிடவே மாட்டேனெனகிறாள். என்னைபற்றிக் கவலையில்லை...

நாச் : அந்தப் பெண்ணினுடைய முகத்துக்காகத்தானே நானும் இவ்வளவு தூரம் இந்தக் கொள்ளைக்காரப் பசங்களுடன் ஓரியாடி இங்கே வந்தேன்...சரி நான் போய் நாளைக்கு வேண்டிய ஏற்பாடுகளைக் கவனிக்கிறேன்...ஆனால் ஒரு யோசனை உங்களையும் அம்மாளையும் கேட்டுக்கொண்டு அப்படிச் செய்யலாமென்று நினைக்கிறேன்.

நல் : என்ன யோசனை ? சொல்லுங்கள்...வசந்தாவையும் கேட்க வேணுமா...(வசந்தா இருந்த இடத்தைப் பார்த்து) அம்மா வசந்தா இங்கே வா...(வசந்தா வருகிறாள்)

நாச் : போலீஸ் சூப்ரண்ட் வந்திருக்கிறாராம். அவர் சொம்பப் பொல்லாதவர். எங்கே பார்த்தாலும் போலீஸ்காரனை நிறுத்தி வைத்திருக்கிறாராம். கொள்ளைக் கார்களைச் சோதனை செய்து

என்று யார்மேலே சந்தேகம் வந்தாலும் சுட்டுவிடச் சொல்லி உத்தரவாம். நாளை ராத்திரி உங்களைக் கூட்டிக்கொண்டு நானும் போகும்போது எங்காவது ஆபத்து வந்து விடுமோ என்று எனக்கே பயமாக இருக்கிறது. ஏற்கனவே நேற்று போலீஸ்காரன் என்வீட்டுக்கு வந்து போயிருக்கிறான்.

நல் : அதற்காக என்ன பண்ணலாம் ?

நாச் : அதனாலே, காட்டுத் தடத்தில் நேராக உங்கள் வீட்டுக்குப் போக வேண்டாம். இங்கிருந்து இரண்டுமைல் தூரத்தில் ரயில்வே ஸ்டேஷன் இருக்கிறது. அதில் உங்களை ஏற்றி விடுகிறேன். நேராக மணற் பள்ளம் ஜங்ஷனில் இறங்கி வீட்டுக்குப் போய் விடலாம். நான்கூட உங்களோடு வந்தால் என்னைச் சந்தேகித்து 'அரஸ்ட்' செய்தாலும் செய்து விடுவார்கள் என்று பயமாக இருக்கிறது.

நல் : அதுசரி, அப்படியே செய்து விடுங்கள். அதுவும் நல்லது தான் எங்களுக்கு உபகாரம் செய்ய வந்து உங்களுக்கு ஒரு கஷ்டம் வரக்கூடாது. சரி ரயிலிலேயே போவோம்...(வசந்தா பக்கம் திரும்பி) ஏம்மா ?

வச : ஆமாம் ரயிலில் போவதே நல்லது. நாம வந்த அந்தக் காட்டுத் தடத்தில் மாட்டு வண்டியில் மறுபடியும் போக வேண்டாம்.

நாச் : ரொம்ப நல்லது அப்படியே செய்து விடுகிறேன். ரயிலுக்கு நானும் வருகிறேன். நீங்கள் நாளை இரவு ஒருமணி வண்டிக்குத் தயாராக இருங்கள். நான் போய் நாம் நாளை புறப்படுவதை யாரும் அறியாதபடி ஏற்பாடு செய்கிறேன்.

(கும்பிட்டுவிட்டு நாச்சிமுத்து போகிறான் ரகசிய வழிகளைக் கடந்து தன்னுடைய வீட்டில் தனது அறைக்குப் போய் உட்கார்ந்து கொண்டு தன் அந்தரங்கக் காரியதரிசியாகிய வேணுவைக் கூப்பிடுகிறான். வேணு வருகிறான்]

நாச் : வேணு, கங்காணியைப் பார்த்தாயா ?

வேணு : பார்த்தேன். சிலோனுக்குப் பாஸ்போர்ட் நாளைக்கே கிடைப்பது சந்தேகம் என்று சொல்லச் சொன்னார்.

நாச் : நாளைக்குக் கிடைக்காதா ? பின் என்றைக்குக் கிடைக்குமாம் ?

வேணு : 17-ம் தேதிதான் கிடைக்குமாம்.

நாச் : ஐயையோ! நான் அவர்களை நாளை இரவு ஒரு மணி வண்டிக்குத் தயாராக இருக்கச் சொல்லி விட்டேனே! கங்காணி பாஸ்போர்ட்டோடு வருவதாகச் சொன்னாரே ?

வேணு : பாஸ் போர்டுக்காகத்தான் முயற்சி செய்து கொண்டி ருக்கிறார். இப்ப வந்து உங்களிடம் விவரம் சொல்லுவார்.

நாச் : நான் மறுபடியும் போய் நல்லப்பரிடத்தில் பயணம் ராஜாக்கு இல்லே என்று சொல்லவேணும்...சரி...நான் கொடுத்த பணத்தை நான் சொன்னவர்களுக்குக் கொடுத்து விட்டாயா ?

வேணு : கொடுத்து விட்டேன். டிக்கட்வாங்கத் தந்த பணம் என்னிடத்தில்தான் இருக்கிறது. நாளைக்குப் போக முடியாது என்று தெரிந்து டிக்கட் வாங்க வில்லே.

நாச் : அது நல்லதுதான். கங்காணியும் நம்மோடு கொளும்புக்கு வருவதாகச் சொன்னாரே; வருவது நிச்சய மாச்சா ?

வேணு அவர் வருவது நிச்சயந்தான். அவருடைய பாஸ்போர்ட் 21-ம் தேதிக்கப்புறம் செல்லாது. அவர் நம்மோடு புறப்பட் டுத்தான் ஆக வேணும். உங்களுக்கும் அந்த அம்மாளுக்கும் தான் பாஸ்போர்ட் தயார் செய்யவேணுமாம்.

நாச் : உனக்கு ?

வேணு : எனக்குக் கங்காணியின் வேலைக்காரனுக்கு இருக்கிற பாஸ்போர்ட்டே போதுமாம்

நாச் : எனக்கும் அந்தப் பெண்ணுக்கும் வேண்டிய பாஸ்போர்ட் எங்கிருந்து வரணுமாம ?

வேணு : அது எங்கேயிருந்தும்வர வேண்டிய தில்லிங்க. கங்காணி யாருடைய சினேகிதர் ஒருத்தர் பெண்ஜாதியோடு சிலோன் போக பாஸ்போர்ட் வாங்கியிருக்கிறாராம். அவர் இப்போது போக வில்லேயாம். அதை வாங்கி உங்களுக்கு உபயோகப் படுத்திக் கொள்ளலாம் என்று சொன்னார். அந்த சினேகிதர் அவசரமாக வெளியூர் போயிருக்கிறாராம்; 17-ம் தேதிதான் வருவாராம்.

நாச் : நாளைக்கு மறு நாளாவது நிச்சயமாக பாஸ்போர்ட் கிடைக் குமா ?

வேணு : கிடைக்குமாம, கங்காணி இங்கே வந்து நேரில் தங்களி டம் விவரம் சொல்லுவதாகச் சொன்னார்.

நாச் : அது இருக்கட்டும் வைத்தியரைப் பார்த்தாயா ?

வேணு : பார்த்தேன் தாங்கள் கேட்ட மருந்தைத் தந்தார். [என்று ஒரு கண்ணாடி குப்பியை நாச்சிமுத்துவிடம் தருகிறான்.]

நாச் : இதைப்பற்றி வைத்தியர் எதாவது என்னிடம் சொல்லச் சொன்னாரா ?

வேணு : ஆமாம் சொன்னார். இந்த பஸ்பத்தில் ஒரு சிட்டிகை எடுத்து சாதத்திலாவது, பாலிலாவது, அல்லது, குடிக்கிற தண்ணீரிலாவது கலந்து கொடுத்து விட்டால் அதைச் சாப்பிட்ட உடன் இருபத்தி நாலுமணி நேரம் வரையிலும் ஒரே மப்பாக இருக்குமாம். சொன்னதை யெல்லாம் செய்வார்களாம். வேறு ஒன்றும் கெடுதல் வராதாம்.

[இந்தச் சமயத்தில் கங்காணி வருகிறார்.]

நாச் : வாங்கோ. கங்காணியாரே, என்ன பாஸ்போர்ட் சிக்கிச்சா?

கங் : நான் போய் அவைகளை வாங்கிக்கொண்டு வந்து விடுகிறேன். நிச்சயமாகக் கிடைக்கும். ஆனால் நாளைக்கே புறப்பட முடியாது. 17-ம் தேதி புறப்படலாம்.

நாச் : நீங்களும் வருகிறீர்கள் அல்லவா ?

கங் : ஆஹா, அதிலென்ன சந்தேகம் ?

நாச் : கண்டிக்குப் பக்கத்திலுள்ள அந்தப் பங்களாவை நமக்காகக் காலி செய்யச் சொல்லி தந்தி கொடுத்து விட்டீங்களா ?

கங் : வேண்டியதில்லை. அது காலியாகத்தான் நம்முடைய வசத்திலேயே இருக்கிறது. வெகு நல்ல பங்களா. அங்கே நீங்கள் இருப்பதை யாரும் அறிய முடியாது. அவ்வளவு ஒதுக்கான இடம்.

நாச் : சரி 17-ம் தேதியாவது பயணம் நிச்சயந்தானே ?

கங் : நிச்சயம்—சந்தேகமே இல்லை...ஆனால் நல்லப்பரும் அவர் மகளும் நம்மோடு சிலோன் வரையிலும் பேசாமல் வருவார்களா ?

நாச் : அதற்கெல்லாம் மருந்து என்னிடமிருக்கிறது. நீங்கள் யோசிக்க வேண்டாம்.. நல்லப்பரை சிலோனுக்குக் கூட்டிக் கொண்டு போகப் போவதில்லை. அவரை வண்டியில் வைத்து அவருடைய வீட்டுக்கு அனுப்பிவிட்டு நானும, அந்தப் பெண்ணும் வேணுவும் பட்டும்தான் ரயிலுக்கு வருவோம். உங்களுக்கும் சேர்த்து மூன்று முதல் வகுப்பு டிக்கட்டும் ஒரு 'சர்வண்ட்' டிக்கட்டும் வாங்குங்கள்.

கங் : நல்லப்பர் தன்னுடைய மகளை விட்டு விட்டு அவர் மட்டும் வீட்டுக்குப் போவாரா ?

நாச் : போகிறாரா இல்லையா பாருங்கள். அதெல்லாம் எனக்குத் தெரியும். அதை என்னோடு விட்டு விடுங்கள். நீங்கள்மட்டும் பாஸ்போர்ட்டைத் தயார் செய்யுங்கள்.

கங் : பாஸ்போர்ட்டைப் பற்றிக் கவலையே வேண்டாம். அதற்கு நான் ஏற்பாடு செய்கிறேன்.

நாச் : சரி...(அலமாரியைத் திறந்து இரண்டு ஆயிரம் ரூபாய் எடுத்து) இந்தாங்க, இது உங்கள் கையில் இருக்கட்டும். இன்னும் எப்போது எவ்வளவு வேணுமானாலும் தருகிறேன்.

கங் : (வணங்கி வாங்கிக்கொண்டு) நான் போய் பாஸ்போர்ட்டுகளை வாங்கிக்கொண்டு நாளை சாயந்திரம் வந்துவிட முயற்சி செய்கிறேன்.

நாச் : ஆமாமாம்...அதுதான் முதலில் கவனிக்க வேண்டியது. அதைப் பாருங்கள். பயணம் 17-ம் தேதி நிச்சயம் என்பது நினைவில் இருக்கட்டும். இன்றைக்குத் தேதி 14-பதினாலு, தெரியுமா ?

கங் : அது தெரியும்

[**கங்காணி போகிறான்**]

காட்சி 50

இடம் : குளத்தூரில் காளியம்மாளின் வீடு.

காலம் : மாலை

[ஆஸ்பத்திரியில் சுந்தரத்திடம் விடைபெற்றுக்கொண்ட காளியம்மாள் நேராக அவ்வூர் கடைத் தெருவுக்குப் போய் புடவைகள், வேஷ்டிகள், குழந்தைகளுக்குச் சட்டைகள், தின்பண்டங்கள் முதலியவற்றை ஏராளமாக வாங்கிக் கொண்டாள். குளத்தூருக்கு (தன்னுடைய வீட்டு வழியாகப் போக) ஒரு ஜட்கா வைத்துக் கொண்டு, முதலில் தன் வீட்டுக்குப் பக்கத்தில் செங்கோடன் போட்ட பந்தலுக்கு அருகில் வண்டியை நிறுத்தி இறங்குகிறாள். வண்டியில் இருந்த ஏவுமதிச் சாமான்களை இறக்காமல் உள்ளே போய்ச் செங்கோடனிடத்தில் ஏகாந்தமாக]

காளி : மச்சான்! சுந்தரமையா சொகம்மா இருக்குறாரு... இந்தா, இதை ஒங்கிட்டே குடுக்கச் சொன்னாரு—தவசம் வாங்கிக்கச் சொல்லி (என்று ஒரு நூறு ரூபாய் நோட்டைத் தருகிறாள்)

செங் : (நோட்டை வாங்கித் திருப்பித் திருப்பிப் பார்த்து விட்டு) நூறு ரூபாயா?...தவசம் வாங்கிக்கவா! காளியம்மா, சுந்தரம் ஐயா எவ்வளவு நல்லவரு பாரு. அவுங்க அப்பன் அம்மா மாதிரியே தருமராஜாவா இருக்குறாரு.

காளி : ஆமாம். தருமராஜாதான், நம்ப குடிசையைக் கூட மச்சு வீடாக் கட்டித் தாரமுண்ணு சொல்லியிருக்கிறாரு. இந்தத் தருமராஜா அந்தத் தருமராஜாத்தி வசந்தம்மா இருக்கிற எடத்தைக் கண்டு பிடிக்க எனக்கு ஒரு வேலை வச்சிருக்கிறாரு. நான் போயிட்டு சுருக்கா வந்துட்டேன். பொறப்படறப்போ 'எங்கே போறெண்ணு' கேட்டுப்புடாதே மச்சான். நாம் போயிட்டுவாறேன். கொளந்தைகளைப் பாத்துக்கோ.

செங் : மவராசியாப் போயிட்டுவா—எங்கே வேணுமுண்ணாலும். எப்படியாச்சிம் வசந்தம்மாவும் நல்லப்பரும் கெடைச்சா போதும். சுந்தரம்மய்யாவுக்கு நாம்ப என்ன பாடுபட்டாலும் தகும்.

காளி : சரி சாமியெக் கும்புடு, வசந்தம்மா வந்துடணும்—அந்த ராஜாத்திக்கும் சுந்தரம் ராஜாவுக்கும் கண்ணுலமாகணும்—

நம்ப புள்ளே குட்டி சொகமடைய வேணும்—இண்ணு கும்புட்டு என்னே அனுப்பு...நடக்க வாண்டாமுண்ணு சுந்தரம் ஐயாவே வண்டி வச்சிக்கச் சொல்லி அதுக்கு வேறே பணங்குடுத்திருக் கிறாரு.

செங் : பின்னென்ன, நமக்கு யோகந்தான். நான் சாமியைக் கும் பிட்டேறன். மவராசியாப் போயிட்டுவா—நீ.

[காளியம்மாள் வண்டியில் ஏறிக்கொள்ளுகிறாள். வண்டி போகி றது. வண்டி குளத்தூரில் காளியம்மாளின் மாமன் வீட் டண்டை நிற்கிறது. காளியம்மாள் இறங்கி உள்ளே போகி றாள். காளியம்மாளைக் கண்ட அவளுடைய பாட்டி]

பாட்டி : வாடி என் கண்ணே ! காளியம்மா ! வந்திட்டியா? நான் சாவரத்துக் குள்ள நீ வருவியா—நானும் பாப்பனுண்ணு தவுசு பண்ணிகிட்டு இருந்தேன். செத்திருந்தா ஆறுமாசமா யிருக்கும், அ—ப்—பி—டிக் கெடந்தேன். பாக்கணுமுண்ணு சொல்லிச் சொல்லி அனுப்புனேன், ஓம் புருசன் அனுப்பு வெனு...இண்ணுட்டானே! இப்பவாச்சியும் வந்தியே...

[என்று காளியம்மாளின் முகத்தை இரு கைகளாலும் தடவி, தன் கன்னத்தில் நெட்டி முறித்துக் கொள்ளுகிறாள்]

காளி : ஆமாம் அம்மாயி நானும் கெஞ்சிக் கெஞ்சிப் பாத்தேன் அனுபபவே மாட்டமுண்ணுட்டாரு.

மாமன் } போவுட்டும், இப்பவாவுது வந்தியே காளியம்மா.
மனைவி } ஒன்னைக் கண்டது பொதையலெடுத்தாப்பிலே இருக் குது.

[காளியம்மாள் தான் கொண்டுவந்த வெகுமதிகளே யெல்லாம் மூட்டையை அவிழ்த்து எடுத்துவைக்கிறாள். தின்பண்டங் களைக் குழந்தைகளுக்குத் தருகிறாள். புடவை வேஷ்டிகளே யெல்லாம் ஒவ்வொன்றாக வைத்துவிட்டு]

காளி : அம்மாயி ! மாமனெங்கே?

பாட்டி : ஓம் மாமனுக்குத்தான் வேலே ஒளியரதே இல்லேயே. இப்ப என்னுமோ ராத்திரிக் காவலாம். அஞ்சாறு நாளாக காலம்பற வந்துட்டு பொளுது சாஞ்சும் பண்ணேயக்காரர் ஊட்டுக்குப் போயிட்ருன். இப்பத்தாம் போனன். விடிஞ்சி தான் வருவான்.

காளி : பகலெல்லாம் பண்ணேயக்காரர் ஊட்டுக்குப் போயிடு வாங்க !, ராத்திரியிலே தான் ஒக்காந்துப் பேச மாமனுக்கு நேரமிருக்கு முண்ணல்ல நான் இப்ப வந்தேன்.

பாட்டி : வந்தா என்ன? காலம்பர வந்துடுவான். அப்பறம் பேசேன்—பேசறதெல்லாம் மாமனேடே—இப்ப எங்களோட பேசேன்.

காளி : அம்மாயி! இந்தா இது ஒனக்கு...(என்று பாட்டியிடம் அவளுக்கென்று வாங்கி வந்த புடவையைத் தருகிறாள்) அத்தே! இந்தா இது ஒனக்கு (மாமன் மனைவியிடம் புடவையைத் தருகிறாள்) அது அவனுக்கு...இது இவளுக்கு... இது அவளுக்கு (என்று மாமனுடைய ஏழு குழந்தைகளுக்கும் வாங்கிவந்திருந்த துணிமணிகளைத் தருகிறாள்)...இது எங்க மாமனுக்கு—

(என்று மாமனுக்கு வாங்கிவந்த ஜரிகை வேஷ்டிகளைப் பாட்டியிடமும் மாமியிடமும் காட்டுகிறாள். அவர்கள் இருவரும் வேஷ்டிகளை வாங்கிப் பார்த்துவிட்டு)

பாட்டி : வேட்டி நல்ல கெண்டை வேட்டியாயிருக்குதே! இது என்ன வெலை காளியம்மா?

காளி : வெலையைப் பத்தி என்ன பாட்டி. எங்க மாமனுக்கு நல்ல வேட்டியா வாங்கித் தரவேணுமுன்னு எனக்கு சொம்ப நாளா ஆசை, பாட்டி.

மாமன் } மனைவி } இப்படி வேட்டி அவங்க ஆயுசிலே கட்டனதில்லே.

காளி : ஏன்? பொடவைக்கு மட்டும் என்ன அத்தை? அதுவும் கெண்டை வச்சதுதான்.

மாமி : ஆமாமாம். அதுரம் நல்லாத்தான் இருக்குது.

பாட்டி : எல்லாமே நல்லாத்தானிருக்குது...அதெல்லாம் வச்சுப் புட்டு காளியம்மாளுக்கு மொதல்லே சோறு போடு...பழமை யெல்லாம் பொறகு பேசலாம்.

(எல்லோரும் சாப்பிட்டுவிட்டுப் பல பழமைகளைப் பேசிக் கொண்டே தூங்கிவிடுகிறார்கள். காளியம்மாள் வெகு நேரத் தோடு விழித்துக் கொண்டு, சுத்தி செய்து கொண்டு வெகு ஆவலோடு மாமனுடைய வரவுக்கு எதிர்பார்த்து வழியைப் பார்த்துக் கொண்டே வாசற்படிக்கு அருகிலே உட்கார்ந்து கொண்டிருக்கிறாள். விடிந்து சிறிது நேரத்துக்கெல்லாம் காளியம்மாளின் மாமன் மலையாண்டி காச்சிபுத்து வீட்டி லிருந்து வருகிறான்.)

காளி : (மலையாண்டி வாசலுக்குள் நுழையுமுன்) வாங்க மாமா, நேத்தே புடிச்சி காத்திருக்கிறேனே மாமா, ஒங்களைப் பாக்க

மலை : (காளியம்மாளை உற்றுப் பார்த்துவிட்டு) அட! காளியம் மாளா! இங்கே வர ஒனக்கு வழி கூடத் தெரிஞ்சிடிச்சா? ஒம் புருசன் மனசோடப் போகச் சொல்லி அனுப்பிட்டானா?

காளி : அவங்க மனசு கெடக்கட்டும் மாமா. நாந்தான் ஒரே புடியாப் புடிச்சி நாம் போயி மாமனைப் பாத்துப் புட்டுத்தான் வருவேண்ணேன். அப்பறம் அவுங்கதாம் என்னு பண்ணுவாங்க.

மலை : இரு, இதா மூஞ்சே கழுவிக்கிட்டு வந்துட்ரேன். வெடிய வெடிய தூக்கம் முளிச்சது. மூதேவி புடிச்சாப்பிலே எப்படியோ இருக்குது.

(காளியம்மாளே எழுந்து ஓடி மாமனுக்கு முகங்கழுவத் தண்ணீர் கொண்டு வந்து கொடுக்கிறாள். மலையாண்டி கொஞ்சம் சாம்பலை எடுத்துப் பல்லை விளக்கிவிட்டு முகம் கைகால் அலம்பிக் கொண்டு கொஞ்சம் திருநீறு பூசிக்கொண்டு ... கல்ல இடத்தில் உட்கார்ந்து கொண்டு)

மலை : வா, காளியம்மா, வா. இப்படி ஒக்காரு. எனக்கு என்ன கொண்டாந்தே.

காளி : மாமா ஒங்களுக்கு எல்லாங் கொண்டாந்திருக்கிறேன். இண்ணையோட ஒங்களுக்கு யோகம் மாமா. இனிமே நீங்க இப்படித் தூக்கம் முளிச்சித் துன்பப்பட வேண்டிய செல வில்லை.

மலை : அடெ என்னு மோம்மா நீ காளி மகமாயி சொல்லுப்பிலே அல்ல சொல்றே? நானு இப்ப வாரப்போ வழியிலே இருக்கிற காளியாயி கோயிலிலே பூந்து "எப்பம்மா தாயே, எனக்கு நல்ல காலம் வரும்" இண்ணு கும்பிட்டு புட்டு வந்ததுக்குச் செரியா ...இங்கே ஒரு காளியம்மா எனக்கு வரங்குடுக்கிறாளே!

காளி : ஆமாம்மாமா, வரங்குடுக்கத்தாம்மாமா வந்திருக்கிறேன். அந்தக் காளி மகமாயிதான் என்னைப் போகச்சொன்னு.

(என்று காளியம்மாள் வேகமாக எழுந்து போய் மாமனுக்கு வாங்கி வந்த வேஷ்டிகளையும் வஸ்திரங்களையும் எடுத்துக் கொண்டு வந்து மலையாண்டியிடம் கொடுக்கிறாள். மலையாண்டி விலையுயர்ந்த அந்த ஜரிகை வேஷ்டிகளை வெகு வியந்து பார்த்துவிட்டு]

மலை ; இது ஆருக்கு காளியம்மா?

காளி : எங்க மாமனுக்கு.

மலை : எனக்கா ! இவ்வளவு ஒசத்தியான வேட்டி நாங் கட்டலாமா?

காளி : ஏன் மாமா, ஒங்களுக்குத்தான் காளி மகமாயி வரங்குடுத்துப்புட்டாளே? இனிமேலே நீங்க இதையும் கட்டலாம், இதுக்கு மேலே ஒசத்தியான வேட்டிகூடக் கட்டலாம்.

மலை : ஓம் புண்ணியத்திலே அப்பிடியே நடக்கட்டும்.

[இதற்குள் மலையாண்டியின் மனைவி தனக்கும் தன் மாமியாருக்கும் குழந்தைகளுக்கும் தந்த புடவைகளையும், சட்டை பாவாடை முதலியவற்றையும் கொண்டுவந்து கொடுத்து]

மாமன் மனைவி : இது எனக்கு...இது மாமியாருக்கு...இதெல்லாம் பசங்களுக்கு

[என்று தனித்தனியாகக் காட்டுகிறாள். மலையாண்டி சந்தோஷம் தாங்கமாட்டாமல் காளியம்மாளைப் பார்த்துப் பார்த்து மகிழ்ச்சி காட்டிவிட்டு]

மலை : காளியம்மா! இதுக்கெல்லாம் ரொம்பப் பணம் ஆயிருக்குமே!

காளி : ஆனா என்னா மாமா? ரொம்ப நாளா, நான் இங்கே வரவேயில்லியே. இந்த கொளந்தைகளுக்கும் அம்மாயிக்கும் கூட ஒண்ணும் செய்யிலியேன்னு அல்லாம் சேத்து வச்சி வாங்கியாந்தேன் மாமா...என் மாமா இப்பிடி எளைச்சி?...கொஞ்சம் கறுத்துக் கூடப் போனிங்களே. காச்சலாப் படுத்திருந்த அம்மாயி கூட இப்பிடி எளைச்சி போவிலியே.

பாட்டி : ஆமாம்மா. காளியம்மா. இவன் நாளுக்கு நாள் இப்பிடி துரும்பாப் போறானேண்ணுதான் எனக்கு வெசனமாருக்குது. நான் போனப் போறேன். சாகவேண்டிய கட்டை. இவனிப்படி எளைச்சிப்போறானே! செரியா சோறு குடிக்கிறதில்லே...

காளி : ஏன் மாமா அப்பிடி?

மலை: ஒளைச்சி ஒளைச்சி ஓடாப் போகவேண்டியது தானே. புள்ளே குட்டிக்காரனு போயிட்டேன். செலவு ரொம்ப. வரும்படி கட்றதில்லே. என்ன பண்றது காளியம்மா?

காளி : ஏன் மாமா உங்களுக்குத்தான் நாச்சிமுத்து கேட்டதெல்லாம் தருவாராமே?

மலை: ஐயோ! அதாரு சொன்னது? எனக்கு நாச்சிமுத்து பண்ணையக்காரர் கேட்டதெல்லாங் குடுக்குறுப்பிலே இருந்தா நானேன் இப்படியிருக்கிறேன்?

காளி : அப்பிடி அடிக்கடி நாச்சிமுத்து ஒங்களுக்குப் பணந் தாராருண்ணுதான் சொல்லிக் கிட்டாங்க.

மலை : அப்பிடி ஒண்ணும் நாச்சிமுத்து எனக்கு சும்மா தந்துடல்லே. ரொம்ப செலவா இருந்தப்ப என் சம்பளம் கட்லேண்ணு பத்து, இருவது, அம்பதுண்ணு சம்பளத்துக்கு மேலே வாங்கிக்கிட்டே வந்தேன்; அது எல்லாஞ் சேர்ந்து ஒரு நானூறு ரூபாயாச்சு. அதுக்கு ரெண்டு மூணு வருசத்துக்கு முன்னலே ஒரு அண்டிமாண்டு எளுதித்தரச் சொன்னாரு. எளுதித் தந்தேன். அது என்னடாண்ணு இப்ப வட்டி கிட்டி அல்லாஞ் சேந்து எட்டு நூறுக்கு மேலே ஆயிடிச்சிண்ணு போன மாசம் அதுக்கு என் தோட்டத்தை எளுதி வாங்கிக்கிட்டாரு...அவரா எனக்குக் கேட்டதெல்லாம் தர்றவரு

காளி : ஐயையோ! அப்பிடின்னு தோட்டம் போனதுதான்.

மலை : போனுப்பிலே தான்.

காளி : மாமா...தோட்டத்தை உடப்புடாது. அதை இப்பவே மீட்டுப் புடணும்.

மலை : எங்கேருந்து மூட்றது? அதுக்கு இந்த ஊட்டை வித்தாத் தான். அதுக்கும்...இந்த ஊர்லே...அந்த நாச்சிமுத்துப் பண்ணையக்காரர் கிட்டேதான் போவணும். எப்பிடி மூட்றது?

காளி: நாச்சிமுத்துக்கு நீங்க எவ்வளவு குடுக்கவேணும்?

மலை : எட்டு நூறும் அம்பதும் குடுக்கவேணும்.

காளி : அதை நான் தர்றேன் மாமா. நீங்க அந்த—எங்கப் பாட்டன் சொத்தை—உடனே மீக்க வேணும். அது போயிட்டா இந்த கொளந்தை குட்டிக்கெல்லாம் என்ன வளி?

மலை : எட்டுநூத்தி அம்பது ரூவாயிக்கு நீ எங்கே போவே? ஒங்கிட்டே அவ்வளவு பணம் ஏது.

காளி : எங்கிட்டே இருக்குது மாமா. எட்டு நூத்தி அம்பது போதாட்டி ஆயிரமாத் தர்றேன் மாமா.

மாமன்/மனைவி : ஆமாம் காளியம்மா, அப்படிப் பண்ணு. ஒம்புண்ணியத்திலே இந்தப் புள்ளேங்க பொளைக்கட்டும்.

பாட்டி : காளியம்மா நீ மவராசியாயிருப்பே, அந்த நெலம் ஆறு தலைமுறையா நம்பகிட்டெ இருந்த நெலம். அதை எளந்து போகாமே பண்ணிவையம்மா. காலங் காத்தாலே சாமி சொல்ருப்பிலே சொல்றே.

[மலையாண்டி மிக்க வியப்படைந்து, வாயைப் பிளந்துகொண்டு காளியம்மாளைப் பார்த்துக் கொண்டிருக்கிறான்.]

காளி : என்ன மாமா, என்ன யோசிக்கிறிங்க. நான் பணந்தர்றேன், நம்ப நெலத்தை நமக்கே மீட்டுப் புடுங்க. இதுக்கென்ன ஓசனே?

மலை : காளியம்மா? நீ சிறுபுள்ளேயாயிருக்கிறப்போ இருந்து சொம்ப வெளையாட்டுக்காரி. வெளையாட்டுக்குத்தான் சொல்றியா? நெச்சம்மாத்தானு?

காளி : நெசம்மா மாமா. சாமி சாக்கியா. நான் பணந்தாறேன்.

மலை: ஒனக்கேது அவ்வளவு பணம். ஒஞ்சங்கதி எனக்குத் தெரியாதா!

காளி : எங்க மாமனுக்குத் தெரியாத சங்கதி எங்கிட்டே ஒண்ணுமில்லே. அது நெசந்தான்... ஆனா... இதுக்கு நான் பணந்தர்றேன்.

மலை : எப்பிடித் தருவே?

காளி : எப்பிடியோ ஒங்களுக்கென்ன? எட்டு நூத்தி அம்பது அல்லாட்டி ஆயிரம் ரூபா நான் தர்றேன்.

மலை : காளி, நீ கேலி தாம் பண்றே !

காளி : இல்லே மாமா கேலியில்லே. நெசமாத்தான். பணம் நாந்தர்றேன்.

மலை : ஒனக்கேது அவ்வளவு பணம்? அதைச் சொல்லு. (சிரிக்கிறான்.)

காளி : (சிரித்துவிட்டு) அதைச்சொல்லாட்டி நீங்க நம்ப மாட்டிங்க .....அதையும் வேணுமுன்னு சொல்லிப்பிட்றேன்.

மலை : சொல்லு.

காளி : மாமா! ஏளெட்டு மாசத்துக்கு முன்னலெ எங்க ஊட்டுக் காரரு அஞ்சுரூவாயெக்குடுத்து ஏம்பேருக்கு ஒரு லாட்டிரிச் சீட்டு போட்டாங்க. அந்த அஞ்சு ரூபா தொலஞ்சி போச்சின்னு நாந்திட்டிக்கிட்டே இருந்தேன்...அது அந்த மகமாயி காளியம்மா கிருவையிலே எனக்குப் பத்தாயிரம் ரூபா லாட்ரி வந்துடிச்சி. நாலஞ்சு நாளைக்கு முன்னலேதான் வந்தது... அதுலே இருந்துதாம் மாமா, பொடவை வேட்டியல்லாம் ஒங்களுக்கு வாங்கியாந்தேன்...மாமா நீங்க முன்னே வந்திருந்தப்ப கூட நானு—அவுங்க அஞ்சுரூவாயெக் கொண்டுபோயி லாட்ரியிலே தொலச்சுபுட்டாங்களேன்னு ஒங்கிட்டெ சொன்னேனெ; மாமா, நெனவில்லியா

மலை : ஆமாமா நெனவிருக்குது. அப்பிடிண்ணுசரி...ஆனா—ஒம் புருசன் நீ எனக்கு இவ்வளவு பணந்தாரதை ஒத்துக்குவானு?

காளி : ஏன் ஒத்துக்காமே? பணம் ஏம் பேருக்குத்தானே வந்தது. நாந்தானே கை நாட்டுப் போட்டுப் பணம் வாங்கினேன்?

மலை : அப்போ சரி, ஏம் மனம் குளுந்தது...ஆனா நெலத்தை பணங் குடுத்து மூட்டுப்புட்டா, அப்பறம் இங்கே இருக்கப் படாது. வேறே எங்காச்சியும் பொளப்பு தேடணும். நாம்ப எப்பவும் பண்ணேயக்காரருக்குக் கடங்காரனு இருந்தாத்தான் அவுங்களுக்குப புடிக்கும்.

காளி : நெலத்தை மீட்டுப்புட்டா அப்பறம் ஏம் மாமாநீங்க இப்ப பிடித் தூக்கமில்லாமே ஒளச்சி ஒளச்சி உருகிப் போவணும்?

அல்லாரும் எங்க ஊருக்கு வந்துடுங்க, அங்கே நாம்ப ஒரு புது பண்ணை வைக்கலாம்.

மலை : ஆமாம் அப்பிடிச் செஞ்சிடாத்தாந் தேவிலே. இந்த பொளப்பு எனக்கு சுத்தமாப் புடிக்கிலே. சாமிக்குப் பயந்து ஒளைக்கிறவனுக்கு இனிமே இங்கே எடமில்லே. பளிகாரப் பசங்களுக்குத்தான் இங்கே எடமிருக்குது.

காளி : மாமா நானு அந்தக் காளி மகமாயி சொல்றப்பிலே சொல்றேன். ஆமாம், இனிமே இந்த நாச்சிமுத்துகிட்டே நீங்க வேலை பண்ணவாண்டாம். அங்கே இருந்தா எண்ணைக்கும் ஆபத்துதான். இந்தாங்க ஒடனே அவுங்க கடனைத் தீத்துப் புட்டு மறு சோலி பாருங்கோ...

(காளியம்மாள் தன் மடியிலிருந்த ஆயிரம் ரூபாய் நோட்டுகளை எடுத்து மலையாண்டி கையில் வைத்து)

மாமா இதிலே ஆயிரம் ரூவா இருக்குது. அந்த எட்டு நூத்தி அம்பதையும் வீசி எறிஞ்சுப்புட்டு நெலத்தைத் திருப்புங்க. மீதிப்பணத்தைச்செலவுக்கு வச்சிக்கங்க—இன்னும் வேணுமுங்கிறதை நாந் தாறேன். இனிமே இங்கிருந்தா போலீசுக்காரன் ஒங்களையும் சேத்துப் புடிச்சிக்கிட்டுப்போயிருவான்.

மலை : (நோட்டுகளைத் திருப்பி திருப்பி எண்ணிப் பாத்து விட்டு) ஆமாங் காளியம்மா இனுமே இங்கே இருக்கப்படாது. நேத்தே போலீசுக்காரன் வந்தான்.

காளி : மாமா நீங்க ராத்திரியெல்லாம் தூக்கம் முளிச்சுபுட்டு ரொம்பகளைச்சிப் போயிருக்கிறிங்கோ. கொஞ்சம் சோறுகுடிச்சிபுட்டுவாங்க. ஒங்ககிட்ட ரொம்ப ரகசியமா ஒரு சேதி சொல்லணும்.

[உடனே எழுந்து, பணத்தைக் கொண்டுபோய் பந்தோபஸ்து செய்துவிட்டு மலையாண்டி சோறுண்ணப் போகிறான். காளியம்மாளின் பாட்டியும் மாமன் மனைவியும் வெகு சந்தோஷமடைந்து காளியம்மாளைப் பலவிதமாகப் புகழ்ந்து வாழ்த்துகிறார்கள். காளியம்மாள் மாமனுடைய குழந்தைகளுடன் கொஞ்சிக் கொண்டிருக்கிறாள்.]

காட்சி 51

இடம் : மலையாண்டி வீடு
காலம் : முற்பகல்

[மலையாண்டி அரைகுறையாக வெகு அவசரத்தில் சோறுண்டு விட்டு வருகிறான். காளியம்மாளை மாமனைத் தனியே கூட்டிக் கொண்டு கொல்லைப்புறத்துக்குப் போய் இருவரும் ஏகாந்த மாக உட்காருகிறார்கள்.]

காளி : மாமா எங்க ஊட்டுக்கு நெருப்பு வச்சிட்டாங்களே, தெரியுமா ?

மலை : ஐயோ ! அடிதப்போ ?

காளி : அஞ்சு நாளாச்சி. கொளந்தை குட்டியெல்லாம் குந்த நெளலில்லாமெ தவிக்குது. (என்று முன்றானையைக் கண் களில் மூடி அழுகிறாள்)

மலை : அதாரு பண்ணின வேலை? சொல்லு, அளுவாட்டி என்ன ?

காளி : எல்லாம் ஒங்க நாச்சிமுத்துதான்.

மலை : எங்க நாச்சிமுத்துப் பண்ணையக்காரரா ? அடப்பாவி! ஒன்னூட்டுக்கு என்னத்துக்கு நெருப்பு வச்சான் ?

காளி : (அழுகுரலாக) வெவரமாச் சொல்றேன் கேளுங்க மாமா. நாலஞ்சி நாளைக்கு முன்னாலே எங்க ஊரு பெரிய மொதலாளி நல்லப்பர் ஊட்டுக்குள்ளே இந்தப் பொரட்சி பேசுற கொள்ளை காரங்க பூந்தாங்க.

மலை : ஆமாம் அப்படிண்ணுதான் இங்கே பேசிக்கிட்டாங்க.

காளி : கொள்ளைக்காரரு வாரது தெரிஞ்சி அந்தப் பெரிய மொத லாளியும் அவரு மகளும் ஊட்டை உட்டுத் தப்பி ஓடியாந் தாங்க...அந்தப் பெரிய மொதலாளியே ஒங்களுக்குத் தெரியு மில்லே மாமா ?

மலை : நானெங்கே அவரைக் கண்டேன் ?

காளி : அவர் மக-சும்மா ரதிமாதிரி- சொம்ப நல்ல பொண்ணு அவளை இந்தக் கொள்ளைக்காரர் தூக்கிக்கிட்டுப் போயிடத்

தொரத்திக்கிட்டு வந்தாங்க. அந்தப் பொண்ணும் அந்த மொதலாளி நல்லப்பரும் நடு ஜாமத்திலே என் ஊட்டுக் குள்ளே வந்து ஒளிஞ்சாங்க. நானு அவுங்களே மறைச்சி வச்சிட்டேன். கொள்ளேக்காரருங்க என்னேவந்து கேட்டாங்க. நானு அவங்களுக்கு வேறே எடத்தைக் காம்பிச்சி அனுப் பிட்டேன்.

மலே : நல்ல வேலே செஞ்சே. அதுதாம் புண்ணியம்.

காளி : அந்தப் புண்ணியந்தாம் மாமா பத்தாயிரம் ரூபா வந்தது. அப்பறம் மாமா. அந்தக் கொள்ளேக்காரப் பசங்க எங்க ஊருக்கே நெருப்பு வச்சிட்டாங்க.

மலே: ஐயோ!

காளி : எங்க ஊட்டுக்கும் தீப்புடிச்சிக்கிச்சி.

மலே : அப்பறம்?

காளி : நானு அவச்சரம் அவச்சரமாக அவுங்களே ஊட்லே இருந்து வெளியிலே தாட்டுனேன்.

மலே : தப்பிச்சிட்டாங்களா?

காளி : கேளுங்க. அந்தப் பொண்ணேக் காப்பாத்தறத்துக்கு நம்ம வக்கிலு சினிவாசர் இருந்தார் பாரு?

மலே : அதாரு, அது?

காளி : அவர்தாம் மாமா ஒங்குளுக்கு நல்லாத் தெரியுமே, என் கண்ணலத்துக்குப் பணங்குடுத்தாரே. நீங்களுந்தானே... மாமா...அவர் ஊட்டுக்கு கண்ணலத்துக்கு பணம் வாங்கப் போனப்போ கூடப் போனிங்க?

மலே : ஓ! அவரா! செங்கோடனுக்கு முன்னூறு ரூவா குடுத் தாரே, அவரா? எனக்குத் தெரியும்.

காளி : ஆமாமாம், அவருடைய மகன் சுந்தரமுண்ணு இருக்கு ருரு. அந்தச் சுந்தரம் ஐயா மொதலாளி நல்லப்பர் பொண்ணே காப்பாத்தக் கூட்டிக்கிட்டு ஓடுனுரு. இந்தக் கொள்ளேக்காரப் பசங்க அந்தச் சுந்தரம் ஐயாவை டுப்பாக்கியிலே சுட்டுப்புட் டாங்க.

மலே : ஐயோ! அவுரு செத்துப் போயிட்டாரா?

காளி : சாவுலே மாமா, காளி மகமாயி காப்பாத்திபுட்டா. ஒடம் புலே ஓரத்திலேதான் கொஞ்சம் காயமாம். அவர் குண்டு பட்டு கீளே உளுந்தப்பறம் அந்தப் பொண்ணேயும் நல்லப்ப ரையும் இங்கே இளுத்துக்கிட்டு வந்து ஒங்க ராச்சிமுத்து மறைச்சி வச்சிருக்கிருராம்.

மலை : அப்பிடியா ! (என்று கொஞ்சம் யோசனை செய்து விட்டு) அந்தப் பொண்ணுக்கு என்ன வயசு ?

காளி : அதுக்கு இருவதுக்குள்ள இருக்கும்.

மலை : ரொம்ப அளகாயிருக்குமா அந்தப் பொண்ணு ?

காளி : ஐயோ ! ரதிகூட எங்க வசந்தம்மாளுக்கு ஈடுகட்டுவாளா !

மலை : சரி-சரி-சரி.... அப்...பிடி...ச் சொல்லு.

(என்று மலையாண்டி தலையை அசைத்துவிட்டுக் குனிந்து கொண்டு வலது கை விரல்களை நெற்றியில் ஊன்றிக் கொண்டு மீண்டும் யோசனை செய்கிறான்.)

காளி : ஏன் மாமா, என்ன யோசிக்கிறிங்க ? தெரிஞ்சா சொல்லுங்க மாமா. நமக்கு ரொம்பப் புண்ணியம். அந்தப் பொண்ணு தங்கமான கொணம். நம்புளுக்கு எதைக் கேட்டாலும் குடுக்கும். அந்தப் பொண்ணை சுந்தரந்தான் கட்டிக்கப் போறாரு. அவருக்கு இந்தச் சமயத்துலே நானு நன்னி விசுவாசம் காட்டமெப்போலு...மாமா... ஒங்ககிட்டே சொல்லி அந்தப் பொண்ணு இருக்கிற எடத்தை எப்படியாவது கண்டுகிட்டு வர்றேனுண்ணு காளியாயி. பேராலே சத்தியம் செஞ்சி குடுத்துட்டு வந்தேன் மாமா. ஏம் மொகத்துக்காக அந்தப் பொண் இருக்கிற எடத்தைச் சொல்லுங்க மாமா.

மலை : நான் அந்தப் பொண்ணைப் பாக்கிலே. ஆனா...ரொம்ப அளகான பொண்ணு ஒருத்தியை நாச்சிமுத்து கொண்டாந் திருக்குறாரு. அவளை அவரு கல்யாணம் பண்ணிக்கப் போறாருண்ணு குசுகுசுண்ணு வேலைக்காரப் பசங்க பேசிக்கிட்டது காதுலே உளுந்தது. அது அந்தப் பொண்ணைத்தானிருக்கும்.

காளி : ஆமாம் மாமா, அதே பொண்ணுதாம் மாமா. அந்தக் கருப்பண்ணனும் வீரா சாமியும் அந்தப் பொண்ணை தூக்கிக்கிட்டுப் போக நெனைச்சி...அது இப்போ—இங்கே...

மலை : வீராசாமியா ?

காளி : அவனைத் தெரியுமா மாமா ஒங்குளுக்கு ?

மலை : அவந்தான் அடிக்கடி நாச்சிமுத்துகிட்ட வாரவனுச்சே. இப்பக்கூட இங்கேதான் இருக்கிறான். அந்த ரகுசிய ஊட்லே இருக்கிறான். ரெண்டுதரம் நாச்சிமுத்துகிட்டே போனதைப் பாத்தேன்.

காளி : அப்பிடிண்ணு—மாமா...சமுசியமே இல்லே. அந்தப் பொண்ணும் நல்லப்பரும் இங்கேதான் இருக்குறாங்க..... மாமா...அவுங்களை அந்த எடத்துலே மாமா வச்சிருக்காங்க ?

அதைச் சொல்லுங்க மாமா. ஒங்குளுக்குக் கோடி புண்ணியம் மாமா.

மலை: அந்தப் பொண்ணை நாச்சிமுத்து அந்த ரகசிய ஊட்லே வச்சிருக்கிறாரு. அங்கே யாரும் போகமுடியாது. அதுக்கு கூண்ணு செல பளிகாரப் பச்ங்க இருக்குறாங்க. அவுங்கதான் அங்கே போலாம்.

காளி : நீங்க அங்கே போறதில்லையா மாமா ?

மலை : நான் ஒருதரம் அதுக்குள்ளே போயிருக்கிறேன். அவ்வளவுதான். இப்ப எல்லாம் நான் அதுக்கு வெளியே விடிய விடிய காவல்தான்.

காளி : அந்த எடம் எங்கே மாமா இருக்குது ? அங்கே போகணுமுண்ணு வளி எப்பிடி ? அதைச் சொல்லுங்க மாமா.

மலை : அது நாச்சிமுத்து ஊட்டுக்குப் பின்னுலே ஒரு காட்டுக்குள்ளே இருக்குது. அங்கே போரத்துக்கு வளி வீட்டுக்குப் பின்னுலே ஆருங் கண்டுபுடிக்க முடியாத ஒரு எடத்திலே இருக்குது. அங்கே செவுத்தோட செவுரா ஒரு கதவு இருக்குது. பாத்தா கதவுண்ணு, கண்டுபுடிக்க முடியாது...அந்தக் கதவைத் தொறக்க ரெண்டு பேத்துக்கிட்டதான் ரெண்டு சாவி இருக்குது. மத்தவங்க ஆரும் அதைத் தொறக்கவே கூடாது. கிட்டெ கூடப் போவ முடியாது.

காளி : அதாரு, அந்த ரெண்டு பேரு ?

மலை : நாச்சிமுத்து ஒண்ணு- அவனோட கையாளு வேணு ஒண்ணு இவுங்க ரெண்டு பேத்துகிட்டெதான் ஆளுக்கு ஒரு சாவி இருக்குது. சாவி கெடைச்சாக் கூட அல்லாரும் அந்தக் கதவைத் தொறக்க முடியாது.

காளி : ஏன் ?

மலை : பூட்டு கதவுலே இல்லே...பக்கத்துலே ஒரு மாடம் இருக்குது. அந்த மாடத்துலே ஒரு வெளக்கு இருக்குது. பாத்தா வெறும் வெளக்காட்டந்தான் இருக்கும். அந்த வெளக்கைத் திருவி எடுத்தா அங்கே சாவி போட்ற தொவாரம் இருக்குது. அதுலே சாவி போட்டாத்தான் தொறக்கலாம்.

காளி : அந்த எடத்தை நாம்ப பாக்கலாமா மாமா ?

மலை : ஐயோ ! தலையே போயிடும். ஒடனே கொண்ணு குளி தோண்டிப் போட்டுடுவாங்க, பளிகாரப் பசங்க. அதுக்குத்தானே எனக்கு இங்கே இருக்கவே புடிக்கிலே.

காளி : ஆமாம் மாமா, நீங்க இனிமேலே இந்தப் பளிகாரனுங்க ளோட இருக்கவே கூடாது.....மாமா அந்த ரகசிய ஊட் டுக்குப் போற வளியே எனக்குக் காட்றிங்களா ?

மலை : ஐயோ அது முடியாது. நான் வேணுமுண்ணு அது கிட்டே போகலாம். ஒன்னே என்னுண்ணு கூட்டிப் போய் காட்றது ? ஒன்னே அங்கே கண்டு கிட்டா, அப்பறம் திரும்பி வரமாட்டே. அப்படி ஒனக்கு எடத்தை காட்டுனலும் நீ அதெப் பாத்து என்னு பண்ண முடியும் ? அந்தச் சாவி நாச்சிமுத்து இடுப்பிலியும் வேணு இடுப்பிலியுந்தானே இருக்குது.

காளி : அந்தச் சாவி அவங்க இடுப்பிலேயேதான் இருக்குமா ? கீளே வைக்கவே மாட்டாங்களா ?

மலை : ஊஹூம்– அண்ணக்கவுத்திலியே என்னேரமும் அதை அந்த ரெண்டு பேரும் முடிஞ்சி வச்சிருக்கிறுங்க. எப்பவும் வேறே எங்கியும் வைக்கிறதேயில்லே.

காளி : அந்தக் கதவைத் தொறந்தா அப்பறம் ?

மலை : அந்தக் கதவெத் தொறந்துட்டா போதும். அதுலே செவுரோட செவுரா ஒரு தடம் போவுது. நூறு மாரு தூரம போனு இன்னொரு கதவு சும்மா சாத்தி சங்கிலி போட்டிருக் குது. அதைத் தாண்டி இன்னுங் கொஞ்ச தூரம் போனு ஒரு தோப்பு. தோப்புக்கு நடுவே அந்த ஊடு. இப்படிப் பளிகார வேலையல்லாம் அந்த ஊட்லேதான் நடக்கிற வளக்கம்.

காளி : அந்தக் கதவு இருக்கிற எடத்தை மட்டும் எனக்குக் காமிச்சுடு மாமா.

மலை : காளியம்மா அந்த ஆசை வைக்காதே. அப்பறம் நம்ப ரெண்டு பேத்துக்கும் ஆபத்து. கொண்ணே கொண்ணு புடுவானுங்க.

காளி : போனுப் போவுது. அந்தக் கதவுகிட்டே போறத்துக்கு வளியெ மட்டும் நல்லா வெவரமாச் சொல்லுங்க மாமா. மத்த தெல்லாம் நாம் பாத்துக்கிறேன்.

மலை : அது வேணுமுண்ணு சொல்றேன். கேளு ! நாச்சிமுத்து குடியிருக்கிற பெரிய ஊடு- பழைய ஊடு இருக்குது பாரு- ஒனக்குதான் அது தெரியுமே.

காளி : ஆமாம் தெரியும்.

மலை : அந்த ஊட்டு வாசல்லே இருந்து நேரா வடக்கே அந்த செவுத்தோடப் போயி தெக்கே திரும்புணும். திரும்புனு அங்கே ஒரு பெரிய கதவு செவப்புச் சாயம் அடிச்சிருக்கும்.

அந்தக் கதவைத் தொறந்து உள்ள போனதும் பீச்சங்கை பக்கம் நேராப் போனா அங்கே ஒரு பொட்டி வண்டி நிக்குது. அந்தப் பொட்டி வண்டி நிக்கிற ஊட்டுக்குள்ள போனதும் சோத்துக்கை பக்கம் திரும்புனா செவுத்துலே ரெண்டு பெரிய மாடம் தெரியும். அந்த ரெண்டு மாடத்துக்கும் நடுவிலே அந்தக் கதவு இருக்குது. அந்த மாடங்களைப் பாத்து நின்னா சோத்துக்கை மாடத்திலே இருக்கிற வெளக்கைத் திருவி எடுத்துப்புட்டா சாவி போட தொவாரம் இருக்கும்.

காளி : மாமா, போலீசுக்காரர் வந்தா அந்த எடத்தை நீங்க காட்டுவீங்களா ?

மலை : வாண்டாங் காளியம்மா அந்த வம்பெல்லாம் எனக்கு வாண்டாம். எந்தப் போலீசுக்காரன் வந்தாலும் நாச்சிமுத்து சரிப்படுத்திப் பிடுவாரு. அப்பறம் நமக்குத் தான் ஆபத்து... ஒனக்கு இதெல்லாம் நான் சொன்னேனுண்ணு போலீசுக் காரரிடம் சொல்லிடாதே. அவனே போயி நாச்சிமுத்து கிட்ட சொல்லிப்பிடுவான். அப்பறம் பணந்தந்தாக்கூட நம்ப நெலத்தைத் திருப்பித் தரமாட்டாங்க.....நேத்துத்தான் ஒரு போலீசுக்கார ஏட்டு வந்தான்: அவனுக்கு வாசல்லியே லஞ்சம் குடுத்து அனுப்பிப் பிட்டாங்களே. போலீசெல்லாம் அவுங்க பக்கம்.

காளி : நீங்க ஒண்ணுக்கும் பயப்படவேண்டாம் மாமா. அதெல் லாம் நாம் பாத்துக்கிறேன். வசந்தம்மாளைக் காப்பாத்திப் புட்டா அப்பறம் நீங்களும் நானும் கேக்கிறதெல்லாம் கெடைக் கும். ஒங்க நெலங்கூடப் பெருசில்ல. பத்தாயிரம் இருவ தாயிரம் வேணுமுண்ணாலும் நான் உங்களுக்கு வாங்கித் தர்றேன். நீங்க இப்பவே குடும்பத்தோட எங்கூருக்கு வந்து டுங்க.

மலை : இப்பவே இதை உட்டுப் போயிட்டாலும் தேவலைதான். ஆனா...காளியம்மா...நீ போயி எதாச்சியும் ஏற்பாடு பண்ணி அந்தப் பொண்ணைக் காப்பாத்துற துண்ணா ஒடனே பண்ணு னும் இல்லாட்டி வேறே எங்கியாச்சிம் அந்தப் பொண்ணை தாட்டிப்பிடுவாங்க.

காளி : அப்பிடியா ? அதெப்பிடி மாமா தெரியுது ?

மலை : நேத்து நான் காவலுக்குப் போறப்போ நாச்சிமுத்தும் அந்த வேணுவும்.....என்னுமோ.....கண்டிக்குப் போகணு முண்ணு பேசிக்கிட்டாங்க. எங்காதுலே உளுந்துது. அந்த வேணு கெட்டபய. அந்தப்பொண்ணை கண்டிக்குக் கொண்டு போனாலும் போயிடுவாங்க.

காளி : அப்பிடிண்ணு நானு இப்பவே போயி வேணுமுங்கிற தெல்லாம் செய்யிறேன், மாமா.

மலை : என்ன செய்யப் போறே ?

காளி : நீங்க ஒண்ணுக்கும் பயப்படாதிங்க மாமா. ஒங்களைப் பத்தி யாருக்கும் நான் சொல்ல மாட்டேன். என்ன செய்றேனுண்ணு பாத்துக்கிட்டு இருங்க. அப்பறம் ஒங்களை ஒரு பெரிய பண்ணையக் காரராக்கிப்பிடப் போறேன்.

மலை : சரி எங்க ஊட்டுக்காரிக்கிட்டே கூட.....எங்கம்மா கிட்ட கூட....இதெல்லாம் ஒண்ணுஞ் சொல்லிப்பிடாதே. வெரசாப் போயி எல்லாஞ் செய்யி.

காளி : மாமா...மறந்து போனேன்...அந்தப் பொண்ணு...நாச்சி முத்து ரகசிய ஊட்டிலே இருக்கிற அந்தப் பொண்ணும் அவுங்கப்பன் பெரிய மொதலாளியும் சொகமாக இருக்குறாங்களா?

மலை: ரொம்ப சொகமா வச்சிருக்கிறப்பிலேதான் தெரியுது.நித்த நித்தம் அவுங்களுக்குண்ணு பாலும், தயிரும், நெய்யும், காய் கறியும் ரொம்ப ரொம்பக் கொண்டு போறாங்க. அதெல்லாம் பின்னே ஆருக்கு ?

காளி : அந்த ரகசிய ஊட்டிலே ரொம்பக் காவல் இருக்குதா? எத்தினி பேர் இருப்பாங்க?

மலை : அந்த ரகசிய ஊட்டுக்கு உள்ளுக்குள்ள காவல் ஆளுங்க ரொம்ப இல்லே. அங்கே வேலைக்காரரும் இந்த வீராசாமியுந் தான் இருக்குறாங்க. வெளியிலேதான் காவலல்லாம்.

காளி : வெளியிலே எத்தனிபேர் இருக்கிறாங்க ?

மலை : வெளியிலே நாப்பது அம்பது பேர் இருப்பாங்க. மேலே கூட இருக்கும்.

காளி : அவுங்க கிட்டே துப்பாக்கி இருக்குதா ?

மலை : எல்லாரு கிட்டேயும் துப்பாக்கி இல்லே. நாச்சிமுத்து... வேணு... இன்னம் ரெண்டு மூணு பேத்துகிட்டெதான் கைத் துப்பாக்கி...

காளி : நீங்க எங்கே மாமா காவல்?

மலை : நானு அந்தப் பெரிய கதவுக்கிட்டே வெடிய வெடிய இந்த அஞ்சாறு நாளாத்தான் காவல். இதுக்கு முன்னாலே எனக்குக் காவல் இல்லே. வண்டி மாடுகள்...குதிரைகள்... நாலஞ்சி நாய்கள்.....இதுகளைப் பாத்துக்கிறதுதான் எஞ் சோலி.

காளி : சரி நாம் போயி மத்த வேலையெல்லாம் பாக்குணும், போயிட்டுவர்றேன் மாமா. ஒங்குளுக்கு வேண்டிய தெல்லாம்—சுந்தரம் ஐயாவும்—வசந்தம்மாவும் செய்வாங்க. நீங்க துளி கூட கவலைப்படாதிங்க. இனிமேலே நீங்க...மாமா... இந்த நாச்சிமுத்துக்கு ஒளைக்க வேண்டிய வேலையில்லை. நான் வர்றேன். இன்னும் பணம் வேணுமுண்ணு எங்கிட்டெ சொல்லுங்க.

மலை : காளியம்மா.....ரொம்ப நாள் செண்ணு வந்தே...இருந்து ஒரு வேளை...ஏங்கூடச் சாப்புட்டு புட்டு போகக் கூட...

காளி : அதுக்கென்ன மாமா, நாளை மய்க்கா நாள் மறுக்கா வர்றேன்...இப்ப ஒடனே போவுணும.

மலை : ஆமாம். போயி சுருக்கா வந்து அந்தப் பொண்ணை காப்பாத்தச் சொல்லு.

(காளியம்மாள் போகிறாள்)

காட்சி 52

இடம் : ஆஸ்பத்திரி
காலம்: மாலை

[சுந்தரம் கட்டிலின்மீது உட்கார்ந்திருக்கிறான். சுந்தரத்தின் தாயார் மீனாட்சியம்மாள் கட்டிலுக்கருகில் ஒரு நாற்காலியில் அமர்ந்திருக்கிறார். பக்கத்தில் சுந்தரத்தின் தங்கைகள் நின்று கொண்டிருக்கிறார்கள்.]

மீனா : டாக்டர் என்னப்பா சொன்னார் ?

சுந் : எதைப்பற்றி அம்மா ?

மீனா : உன் உடம்பைப் பற்றித்தான். இன்னும் எத்தனை நாளைக்கு ஆஸ்பத்திரியில் இருக்கவேணுமாம் ?

சுந் : என் உடம்பைப்பற்றி துளிகூட கவலைப்பட வேண்டாம்மா. புண் நன்றாக ஆறி வருகிறது. கொஞ்சங்கூட வலியில்லை. மற்றபடி பசி, தாகம், தூக்கம் எல்லாம் எப்போதும்போல் இருக்கின்றன. இன்னும் நாலைந்து நாளில் வீட்டுக்குப் போய் விடலாம் என்று டாக்டர் சொன்னார்.

மீனா : மறுபடியும் நம்பவீட்டுக்குப் போகவேண்டாம். நம்ப குடும்பம் முழுக்க இங்கேயே இருந்துவிட வேணுமென்று உன் மாமா சொல்லுகிறார்.

சுந் : மாமா ரொம்ப நாளாக அப்படித்தானே சொல்லிக்கொண்டிருக்கிறார்.

மீனா : மாமா இஷ்டப்படிதான் கொஞ்சநாள் இருந்தால் என்னப்பா ?

சுந் : மாமா நமக்கு வேண்டிய தெல்லாம் செய்வார். நாம் இங்கே சௌக்யமாக இருக்கலாம். அதிலெல்லாம் எனக்கு சந்தேகமில்லையம்மா. இருந்தாலும் நம்முடைய வீட்டை மூடிவிட்டு நாம் இங்கென்னத்திற்கு இருக்கவேணும் ? வேலை கிடைக்காமல் சாப்பாட்டுக்குக் கஷ்டப்பட்ட காலத்தில் கூட நாம் சுதந்தரமாக இருந்துவிட்டோம். இப்போது அப்படிக் கஷ்டம் நமக்கு ஒன்றுமில்லை. நானிப்படி ஆஸ்பத்திரிக்கு வரவேண்டியிருந்ததால் இப்போது நீங்களெல்லாம் மாமா வீட்டில் தங்கியிருப்பது சரி. எனக்கு உடம்பு சரியாகி விட்டால் அப்புறம்

நம்ம வீட்டைப் பாழடைய விட்டு விட்டு நாம் இங்கேயே இருக்கவேணும் என்பது சரியா ?

மீனு : என்னம்மோ அவன் சொம்ப ஆசைப்படுகிறான். அவனுக்கும் நம்மை விட்டால் வேறுயார் ? ஒரு பெண்ணை வைத்துக் கொண்டு நம்மையேதானே அவனும் நம்பியிருக்கிறான் ?

சுந் : அதைப்பற்றி இப்ப என்னம்மா அவசரம் ?...இதைச் சொல்லச் சொல்லத்தான் மாமா இன்றைக்கு உங்களைமட்டும் தனியாக அனுப்பி விட்டாரா ?

மீனு : அதற்கென்று இல்லை...

சுந் : பின்னே தினந்தினம் ரெண்டுவேளையும் உங்களோடு இங்கே வருகிறவர் இன்றைக்கு மட்டும் ஏன் வரவில்லை ? நீங்கள் தனியாக இதையெல்லாம் என்னிடம் சொல்லவேணும் என்றுதானே ?

மீனு : (கொஞ்சம் சிரித்து) மாமா சொம்ப வருத்தப் படுகிறான். ராஜேஸ்வரி நீ இங்கே இப்பிடிக் கிடக்கிறுயென்று கேள்விப் பட்ட நாளாகச் சரியாகச் சாப்பிடுவதில்லை. உன்னை இங்கே வந்து பார்க்கவேணும் என்று ஒவ்வொரு நாளும் எங்களோடு புறப்பட்டாள். மாமா அவளை இங்கே வரக்கூடாது என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டான்.

சுந் : ஏன் அப்படிக் கண்டித்து விட்டார் ?

மீனு : அவனுக்கு சொம்ப கோபம்.

சுந் : என்ன கோபம் ? யார்மேலே கோபம் ?

மீனு : உன்மேலேதான் கோபம் ?

சுந் : எதற்காக ?

மீனு : நீ ராஜேஸ்வரியை ஏமாற்றி விட்டாய் என்று ?

சுந் : நான் யாரையும் ஏமாற்றவில்லை. ராஜேஸ்வரி என்ன சொல்லுகிறாள் ?

மீனு : அவள் என்ன சொல்வாள் பாவம்...ஏன், நீதான் உன் மாமாவுக்கு ஒரு வார்த்தை சொல்லி விடேண்டா சாமி.

சுந் : மாமாவுக்கு நான் என்ன சொல்லவேணும் ?

மீனு : ராஜேஸ்வரியைக் கல்யாணம் பண்ணிக்கிறேன் என்றுதான்...சொல்லிவிடேன்.

சுந் : அம்மா எனக்குக் கல்யாணப் பேச்சு பேசக்கூடிய சமயமா இது ?

மீனு : கல்யாணம் இப்பச் செய்துகொள்ள வேண்டாம். பொறுத்தாவது அவளுக்கு கல்யாணம் செய்து கொள்கிறேன், என்று ஒரு வார்த்தை சொன்னால் என்ன ?

சுந் : சொல்லாவிட்டால் ?

மீனு : நீ அவளுக்கு கல்யாணம் செய்து கொள்ளப் போகிறது இல்லையென்று அவளை வேறு யாருக்கோ கொடுத்துவிட மாமா ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறோம்.

சுந் : மாமாவுக்கும் ராஜேஸ்வரிக்கும் பிரியமானால் அவள் யாரை வேணுமானாலும் கட்டிக்கொள்ளட்டுமே. நாமேன் விசாரப் படவேண்டும் ?

மீனு : ஐயோ ! அதென்ன அப்படிச் சொல்லுகிறயப்பா ? அவளும் உன்னையேதான் கட்டிக்கொள்வேன் என்று சொல்லிக் கொண்டிருக்கிறாள். நீயும் அவளையேதான் கட்டிக்கொள்வேன என்று சொன்னாய்...

சுந் : வாஸ்தவந்தான், சொன்னேன. அதற்கப்புறந்தான ஒரு தரம் மாமா நம்ம வீட்டுக்கு வந்திருந்தபோது " சுந்தரம் ! ராஜேஸ்வரி உனக்கேயதான கல்யாணம் செயதுகொள்வேன் என்று சொல்லிக் கொண்டிருப்பதாலல்லவா நீ எனக்கு இவ்வளவு அலட்சியம் செய்கிறாய் ? நான் ராஜேஸ்வரியை உனக்குத் தரப்போவதில்லை. வேணுமானால் பார்" என்று சொல்லி விட்டாரே—அதற்கப்புறந்தான நான் ' ராஜேஸ்வரியைத் தான மணந்துகொள்வேன் ' என்று சொல்லுவதையும் விட்டு விட்டேன்.

மீனு : அது...மாமா சுமமா...அப்போ விளையாட்டாகச் சொன்னது. மாமா நம்மையெல்லாம் அவர் வீட்டுக்கே வந்துவிடச் சொன்னபோது நீ முடியாது என்று சொன்னதற்காக அவன் அப்படிப் பரிகாசமாக மிரட்டினான். அதென்ன பிரமாதம் ? அவன் ராஜேஸ்வரியை உனக்கேதான தரவேணும் என்று துடிக்கிறான். நீ அவளைத்தான் கல்யாணம் செயது கொள்ள வேணும். அட்டி சொல்லாதேப்பா...மாமாவைக் கவனிக்காவிட்டாலும் ராஜேஸ்வரியை நீ கைவிடக் கூடாது. அவளுடைய மனம் உடைந்து போகும். அவளைப்போல் பெண கிடைப்பது அருமை. உன்மேல் அவள் எனன பிரியம் வைத்திருக்கிறாள் ! அவளை...

சுந் : அம்மா இப்போது என்னத்திறகு இந்தப் பேச்செல்லாம். வசந்தா என்ன சதியாலோ தெரியவில்லை. எனக்கு நினைப்பெல்லாம் அதிலேயே இருக்கிறது. வசந்தாவை இப்படிப் பறிகொடுத்து விட்டு நாம இதையெல்லாம் பேசிக்கொண்டிருப்பது பாவம்.

மீனு : வசந்தாவைப் பற்றி நாம் விசாரப்பட வேண்டியது சரி தான். ஆனால் அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?

சுந் : அம்மா இப்போது இந்தப் பேச்சுக்கெல்லாம் நேரமில்லை. என்னுடைய நினைப்பெல்லாம் வசந்தாவைப் பற்றித்தான். ராஜேஸ்வரியை...

(இந்த சமயத்தில் குளத்தூர் போயிருந்த காளியம்மாள் அங்கே வருகிறாள்.)

சுந் : காளியம்மா! வந்துட்டியா வா. வா. வர. (மீனுட்சியம்மாளைப் பார்த்து) அம்மா! இவதான் செங்கோடன் மனைவி, காளியம்மாள். (காளியம்மாளைப் பார்த்து) காளியம்மா! இவர்கள்தான் என் தாயார்.

(காளியம்மாள் கும்பிடுகிறாள்)

மீனு : செங்கோடன் பெண்ஜாதியா! செங்கோட்டைத் தெரியும். காளியம்மாளை நான் பார்த்ததேயில்லை...செங்கோடன் கல்யாணத்துக்கு (சுந்தரத்தைப் பார்த்து) உங்க அப்பாதான் மூன்னூறு ரூபாய் கொடுக்கச்சொல்லி நான்தான் கொடுத்தேன். அப்போ... செங்கோடன்கூட வேறு யாரோவந்திருந்தார்கள்.

காளி : அவுங்க மச்சான்...எங்க மாமானுந்தான் வந்திருந்தாங்க மவராசி நீங்க பணங்குடுத்து கண்ணாலம் பண்ணி வச்ச வெளக்குத்தான் என்னூட்லே எரியிற வெளக்கு தாயே..

சுந் : (அம்மாளைப் பார்த்து) அம்மா காளியம்மாள் எனக்கும் வசந்தாவுக்கும் பெற்ற தாய் போல—அன்றைக்கு ராத்திரி செய்த பரிவுகளை என்ன சொல்லட்டும்!

காளி : நான் என்ன பண்ணிப்பிட்டேன்...நாங் குடுத்து வச்ச வளா யிருந்தா என்னூட்லே நெருப்புப் புடிச்சிருக்குமா? நீங்களெல்லாம் அப்பிடி ஓடியிருப்பிங்களா? ஒங்களை (சுந்தரத்தைச் சுட்டி) அந்தப் படுபாவிங்க சுட்டிருப்பாங்களா? அந்த ராச்சாத்தி வசந்தம்மாளைக் கொண்டு போயி இப்பிடிச் செறை வச்சிருப்பாங்களா!

மீனு : வசந்தாவைச் சிறைவைத்தா இருக்கிறார்கள்? எங்கே?

சுந் : எங்கேயாவது சிறை வைத்திருப்பாங்களோ என்று காளியம்மா வருத்தப்படுது. (காளியம்மாளைப்பார்த்து) காளியம்மா! வசந்தாவைக் கண்டுபிடிக்க வில்லையே என்ற வருத்தம் அப்புறம் பேசலாம். கவலைப்படாதே...தானிய தவசம் எல்லாம் வாங்கினையா? செங்கோடனும் குழந்தைகளும் சௌக்கியமா?

காளி : அல்லாஞ் சொகந்தானுங்க. தவசமல்லாம் ஒங்க புண்ணி யத்திலே வாங்கிக்கிலாமுங்க. இருக்க எடந்தானே இல்லிங் கோ. கொட்டாயி போட்டது சொம்பச் சின்னது.

மீஞ் : சுந்தரம்! செங்கோடன் வீட்டை நாம் முன்போலவே கட்டித் தந்துவிட வேணுமப்பா.

சுந் : காளியம்மாள் வீட்டை மறுபடியும்—முன்னிருந்த மாதிரி அல்ல அம்மா...மச்சுவீடாகக் கட்டித் தருவோம. அங்கே வெந்துபோன மற்றெல்லா வீடுகளையும் முன் போல் நாமே கட்டித் தந்து விடலாம்....வசந்தாவும் நல்லப்பரும் வந்து விட்டால் இதெல்லாம் ஒரு பிரமாதமா?

மீஞ : ஆமாப்பா...அது நல்ல புண்ணியம்.

(சுந்தரத்தின் மாமா நடராஜன் வருகிறார். சுந்தரம் வணங்கு கிறான். நடராஜனும் வணங்கி, சுந்தரத்தின் புண்ணுக்குக் கட்டி கிருந்த கட்டுகளைத் தொட்டுப் பார்த்து விட்டு)

நட : வலி ஒன்றுமில்லையே?

சுந் [illegible] வலியில்லை, மாமா.

நட : (மீஞட்சியம்மாளைப்பார்த்து)அக்கா நாளைய தினம் கோவிலில் அபிஷேகத்துக்கு ஏற்பாடெல்லாம் செய்து விட்டேன். இப் போ சாயந்திரம் போய் சுவாமி தரிசனம் செய்து வரவேணும் என்றுயே, போகலாமா?

மீஞ : போகலாம் (என்று எழுந்திருக்கிறாள்)

சுந் : மாமா. இவதான் காளியம்மாள். இவர்கள் வீட்டில் தான் எங்களுக்கு ஒளிய இடங் கொடுத்து...அன்றைக்கி ராத்திரி

நட : ஓ! காளியம்மாள் என்றது இந்தம்மாள்தானு! சொம்ப நல்ல மனுஷி...சந்தோஷம். எம்மா காளியம்மா !நீயும் நம்ப வீட்டி லேயே தங்கலாமே?

(காளியம்மாள் ' ஆவட்டுங்க ' என்று நடராஜனைக் கும்பிடுகிறாள். நடராஜனும் மீஞக்ஷியம்மாள் முதலானவர்களும் போன பிறகு காளியம்மாள் சுந்தரத்தின் கட்டிலுக்கருகில் தானாக வந்து உட்காருகிறாள்.)

காளி : நீங்க உசார் படுத்துனதே கண்டுகிட்டனுங்க. நம்ப அம்மா தானேண்ணு நான் மெய்மறதியா யிருந்துட்டேனுங்க.

சுந் : நீ சொம்ப புத்திகூர்மையுள்ள மனுஷியென்பது எனக்குத் தெரியும்...சரி, போன காரியம் என்ன?

காளி : வசந்தம்மாவும் பெரிய மொதலாளியும் அங்கேதான் இருக்குறுங்க. நாம்ப ஒடனே வேணுமுங்குறதெல்லாம்செய்து வசந்தம்மாவைக் கொண்டாந்துபுடணும்.

சுந் : எந்த இடத்தில், எப்படி, இருக்கிறார்கள்? விவரமாகச் சொல்லு...மெள்ளப் பேசு, இப்ப இது யாருக்கும் தெரியப் படாது.

காளி : (கட்டிலுக்கு மிகச் சமீபத்தில் வந்து காதோடு) நாச்சி முத்துக்கு சொம்ப ரகசியமான ஒரு ஊடு இருக்குது. அதுக் குப் போறவளி யாரும் கண்டுபிடிக்க முடியாதபடி ஒரு செவுத் துலே இருக்குது. அந்தக் கதவை தொறக்கற சாவி நாச்சி முத்துக்கிட்டே ஒண்ணு, அவனேட கையாளு வேணுங்கரவங் கிட்டே இன்னெரு சாவி—ரெண்டு சாவி இருக்குது. இந்த ரெண்டு பேருந்தான் அதைத் தொறக்கமுடியுமாம். சாவியை ரெண்டுபேரும் எப்பப் பாத்தாலும் இடுப்பிலேயே, அண்ணக் கவுத்திலியே, வச்சிருக்கிறுங்களாம். சாவி கெடைச்சாக்கூட அந்தக்கதவை அல்லாரும் தொறந்துட முடியாது. கதவுக்குப் பக்கத்துலே ஒரு மாடமிருக்குதாம். அதுலே ஒரு வெளக்கு இருக்குதாம். வெளக்கைத்திருவி எடுத்துட்டா அங்கே சாவி துவாரம் இருக்குதாம். அதெல்லாம் வெவரமா கேட்டுகிட்டு வந்துட்டேன். வீராசாமி அங்கேதான் இருக்குறுனும், எங்க மாமனே வீராசாமியெ பாத்தாங்களாம்.

சுந் : இதெல்லாம் உன் மாமனே சொன்னதா?

காளி : ஆமாங்க. எங்க மாமன் சொம்ப ஒக்கியிருங்கோ—பித்த லாட்டம் பொய்யி பேச மாட்டாருங்க. நீங்க குடுத்த ஆயிரம் ரூபாயும் சொமப ஒதவுச்சிங்க.

சுந் : அதை உங்க மாமனுக்குத் தந்தாயா?

காளி : அதெத் தராட்டி கூட எங்க மாமன் எனக்குக் கேட்ட தெல்லாம் சொல்லுவாரு. எங்க மாமன் நெலத்தை நாச்சி முத்து எட்டுநூத்தி அம்பது ரூவாயிக்கு எழுதி வாங்கிக் கிட்டானும். சொம்ப வருத்தமாச் சொன்னுங்க. இனிமேலே அங்கே வேலைக்கு இருக்க புடிக்கிலேண்ணும் சொன்னுங்க. நானுஒடனே நெலத்தை மீட்டுப் புடச் சொல்லி இந்த ஆயிரத் தையும் தந்தேன். எங்க மாமனுக்கு பொகு சந்தோசம் வந்தி டிச்சு...அப்பறம் மாமனே மட்டும் தனியா கொல்லைக்குக் கூட் டிக்கிட்டு போயி—வீடுவெந்தது—ஒங்களைச் சுட்டது, வசந் தம்மாளை கருப்பண்ணனும் வீராசாமியும் கொண்டு போயி ருப்பாங்கோ இங்கிறது — எல்லாத்தையும் சொன்னேன்... எனக்கு ஒரு கஷ்டமுண்ணுஎங்க மாமன் பொறுக்க மாட்டாங்க அப்பறம் மாமன் நாச்சிமுத்து ரகசியமெல்லாம் சொல்லிப்பிட் டாரு. எங்க மாமன்தான் உடனே போய் ஒங்ககிட்டே சொல்லி

வசந்தம்மா தப்பிக்கிறத்துக்கு வேண்டியதெல்லாம் பண்ணச் சொன்னரு. அந்த அம்மாகூ கண்டிக்குக் கொண்டு போவுணு மூண்ணு நாச்சிமுத்துவும்—அந்த வேணுாங்கரவனும் பேசிக் கிட்டாங்களாம். அது எங்க மாமன் காதுலியே உளுந்துதாம். நாம்ப தாமுசிக்கக் கூடாது.

சுந்: கண்டிக்கு என்னைறக்குப் போகிறார்களாம்?

காளி: அது தெரியிலிங்க. அதென்னத்துக்கு நமக்கு? நாம்ப ஒடனே போயி செய்ய வேணுமுங்கிறதெல்லாம் செஞ்சி வசந் தம்மாகூயும் பெரிய மொதலாளியையும் காப்பாத்தணும்.

சுந்: சரி, போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் பேசி அதற்கு வேண்டி யதை யெல்லாம் இப்போதே செய்கிறேன்.

காளி: போலீசா? ஐயோ அது வாண்டாங்க. நேத்துக் கூடப் போலீசுக்காரரு போயி அந்த நாச்சிமுத்துக்கிட்டே பணம் வாங்கிக்கிட்டு வந்துட்டாங்களாமே. எங்க மாமனே சொன் னுங்க.

சுந்: எனக்கு நேற்றே இது தெரியும். நான் சொல்லப் போகிற போலீஸ் இன்ஸ்பெக்டர் அப்படிப்பட்டவரல்ல. வசந்தாவை மீட்கவேண்டிய வழிகூயெல்லாம் நான் அவரோடு ஏற்பாடு செய்கிறேன். காளியம்மா! நீயும் மறுபடியும் குளத்தூருக்குப் போலீஸ்காரரோடு போகவேண்டியிருக்கும். நான் சொல்லுகிற வரைக்கும் நீ இங்கே இருக்கவேணும்.

காளி: வசந்தம்மாகூ மீட்டுகிட்டு வர நீங்க என்ன சொன்னலும் செய்ய நாங் காத்திருக்கிறேன். போலீசாருக்கு நானே வளி காட்டுறேன். மாமன் சொன்ன வளியெல்லாம் எனக்குத் தெரியும். நானும் கூட வந்தாத்தான் நல்லது. வாயிலே சொன்னத் தெரியாது.

சுந்: நானும் வருகிறேன். நீ வழி காட்டு. வசந்தாவை நீயும் நானுமே போய் அழைத்து வருவோம்.

காளி: நீங்க வரலாங்களா? ஒடம்புக்கு...டாக்டரு போவச் சொல்லுவாரா?

சுந்: நான் அலுங்காமல் மோட்டாரில் வந்து இன்ஸ்பெக்டருக்கு யோசனை சொல்லுவேன். அதனல் உடம்புக்கு ஒன்றும் கெடு தல் வராது...டாக்டரிடம் கேட்டுக் கொள்ளுகிறேன்...நீ மட்டும் காளியம்மா, குளத்தூருக்கு நீ போய் வந்த விவரங்கூ வேறு யாரிடமும் சொல்லி விடாதே.

காளி: உசுரு போறதா இருந்தாலும் நான் சொல்லிப்புடுவேனு?

சுந்: நீ போய் சின்ன டாக்டர் இருந்தால் நான் கூப்பிட்டதாகக் கொஞ்சம் வரச் சொல்லு.

(காளியம்மாள் போகிறாள். கொஞ்சநேரத்தில் உதவி டாக்டர் வருகிறார்.)

உ. டாக் : என்னைக் கூப்பிட்டீர்களாமே?

சுந் : ஆமாம் டாக்டர், நீங்கள் அந்த நாச்சிமுத்துவைப் பற்றிச் சொன்னதெல்லாம் உண்மைதான்.

உ. டாக் : பார்த்தீர்களா! அவனைப் பற்றி உங்களுக்கு யார் சொன்னது? எப்படி அறிந்தீர்கள்? ஏதாவது துப்பு கிடைத்ததா?

சுந் : துப்பு மட்டுமா? நிச்சயமான சேதியே வந்திருக்கிறது. அதையெல்லாம் விவரமாக உங்களிடத்தில் பின்னால் சொல்லுகிறேன்.....இப்போது ஒரு தாங்கள் உதவி செய்யவேண்டும்.

உ. டாக் : என்ன?

சுந் : இங்கே 'டெலிபோன்' இருந்தால் உடனே நான் சர்க்கிள் இன்ஸ்பெக்டரைப் பார்க்க விரும்புவதாக அவரைக் கொஞ்சம் வரச் சொல்லுங்கள்.

உ. டாக் : இங்கே 'போன்' இல்லை. பக்கத்தில் இருக்கிறது. நான் போய்ப் 'போன்' பேசி இன்ஸ்பெக்டரை வரச் செய்கிறேன்.

(உதவி டாக்டர் போகிறார்...சிறிது நேரத்தில் திரும்பி வந்து)

உ. டாக் : இன்ஸ்பெக்டரும் சப்இன்ஸ்பெக்டரும், சூப்ரண்ட்டுடன் செங்குளம் என்ற கிராமத்துக்குப் போயிருக்கிறார்களாம். இன்று இரவு அல்லது நாளை காலையில்தான் வருவார்களாம்.

சுந் : ஐயையோ! ஒரு இரவு தாமதமானால் எவ்வளவோ விபரீதம் நடந்து விடலாமே டாக்டர்.

உ. டாக் : நாச்சிமுத்துவைப் பற்றி என்ன தகவல் கிடைத்திருக்கிறது. அதைச்சொல்லுங்கள். நான் வழி சொல்லுகிறேன்.

உ. டாக் : உட்காருங்கள் சொல்லுகிறேன்.

(உதவி டாக்டர் நாற்காலியில் உட்காருகிறார்)

சுந் : செங்குளம் என்ற ஊருக்கு இங்கிருந்து எவ்வளவு தூரம்?

உ. டாக் : இருபது மைல் இருக்கும். ஏன்?

சுந் : நல்லப்பரும் அவருடைய பெண்ணும் நாச்சிமுத்து வசத்தில் தான் இருக்கிறார்களாம். நீங்கள் சொன்ன மாதிரியே அவனுக்கு ஒரு வெகு ரகசியமான வீடு இருக்கிறதாம்..... வசந்தாவை கண்டிக்குக் கொண்டுபோய்விடப் பேசிக்கொண்டிருந்தானும். ...முதலில் நாம் பக்கத்து ரயில்வேஸ்டேஷன்

கரைக் கண்காணிக்க வேணும். உடனே **மண்டபம்** என்கிற இடத்துக்கு நம்முடைய ஆள் யாரையாவது அனுப்பி அங்கே அவர்களைக் கப்பலுக்கு விடாமல் தடுத்து விட ஏற்படாக வேணும். கண்டிக்குபோகிற பேச்சு நேற்றுதான் காதில் பட்டதாம். இன்றைக்குஅல்லது நாளைக்குத்தான் புறப்படுவார்கள். இன்றைக்கே ரயில்வேக்களில் நாம் ஜாக்ரதை செய்தால் நல்லது.

உ. டாக்: அதைப் போலீசார் மூலமாகச் செய்தால்தான் நல்லது.

சுந்: அதற்குஎன்ன செய்யலாம்? செங்குளத்துக்கு யாரையாவது அனுப்பலாமா?

உ. டாக்: வேறு யாரையும் அனுப்பக் கூடாது. அதுவும் இன்ஸ்பெக்டருக்குத் தவிர இங்குள்ள மற்ற போலீஸ்காரர் யாருக்கும் இது தெரியக்கூடாது. தெரிந்தால் நாச்சிமுத்துக்குத் தகவல் போய் விடும்...இருபதுமைல்தான்...ஒரு கார் கிடைத்தால் நானே போய் வந்து விடுவேன். அந்த நாச்சிமுத்துப் பயலே எப்படியாவது மடக்கி விட்டால் தான் என் ஆத்திரம் தீரும்?

சுந்: எங்கள் மாமாவின் காரை அனுப்பச் செய்கிறேன். போய் விவரம் சொல்லி இன்ஸ்பெக்டரை உடனே கூட்டிக் கொண்டு வந்து விடுங்கள். மற்ற 'பிளான்களை' அவரோடு பேசிக்கொள்வோம்.

உ. டாக்: சொம்ப நல்லதாப் போச்சு. நானே போய் வருகிறேன்.

[உதவி டாக்டர் சுந்தரத்திடமிருந்து அவனுடைய மாமாவுக்கு மோட்டார் காருக்காக ஒரு கடிதம் வாங்கிக் கொண்டு போய்விடுகிறார். அதன் பின் சுந்தரம் நாச்சி முத்து வீட்டைப் பற்றி காளியம்மாளுடைய மாமன் சொன்ன மற்ற விவரங்களையும் நுணுக்கமாக விசாரித்துக் கொள்ளுகிறான்.]

காட்சி 53

இடம் : ரகசிய வீடும், நாச்சிமுத்து அந்தரங்க அறையும்

காலம் : சாயுங்காலம்

[பெரிய இடங்களில் சிபார்சுகள் பேசி தங்களை இந்தக் கேசிலிருந்து விட்டுவிடும்படி நாச்சிமுத்து செய்துவிட முடியும் என்ற நம்பிக்கையினால் வீராசாமியும் கருப்பண்ணனும் நாச்சிமுத்துக்கு அடங்கி அவன் சொன்னபடி இருந்து வருகிறார்கள். கருப்பண்ணன் வெகு மூர்க்கன். வீராசாமி சூழ்ச்சிக்காரன். இருவரும் தனித்தனியே வசந்தாவின் மீது காமப்பித்து கொண்டுவிட்டவர்கள். மேலே வீட்டுக்கு வசந்தாவை மட்டும் கொண்டுபோய்விட்டால் பிறகு சமயோசிதம் போல் பலாத்காரம் செய்தாவது தங்கள் ஆசையைத் தீர்த்துக்கொள்ளலாம் என்று அவனவன் மனசுக்குள்ளேயே திட்டமிட்டிருந்தார்கள். மேலே வீட்டுக்குப் போக முடியாமல் நாச்சிமுத்துவிடமே வந்து அவனுக்கு அடங்கிபிருக்க வேண்டி நேர்ந்துவிட்டதால் அவர்களுடைய காமத் திட்டம் கைகூட வழியில்லாமற் போய்விட்டது. ரகசிய வீட்டிற்கு வந்துசேர்ந்த முதல் நாளே நடந்த பேச்சுகளிலிருந்தே வீராசாமி வசந்தாவிடத்தில் வைத்த காம இச்சை பலிக்கத் தக்கதல்லவென்பதைக் கண்டு கொண்டான். ஆனால் கருப்பண்ணனுக்கு வசந்தாவிடத்தில் உதித்த காமவெறி நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே வந்தது நாச்சிமுத்துவின் கட்டளைகளுக்குப் பயந்து வசந்தாவும் நல்லப்பரும் இருக்கிற பக்கத்துக்கு கருப்பண்ணன் போக முடியவில்லை. ஆனாலும் தூரத்திலிருந்துகொண்டே தினந்தினம் வசந்தா தன் தம்பையை விட்டு வேலைக்காரியுடன் ஸ்நானத்துக்காகப் போகும் போதும் வரும்போதும் கருப்பண்ணன் காமக்கண் கொண்டே பார்த்துக்கொண்டு இருப்பான். அப்படி வசந்தா ஒரு சாயங்காலம் சட்டிடத்தைவிட்டுத் தனியாக இருக்கிற ஸ்நான அறைக்குள் போனதைப் பார்த்துக் கொண்டேயிருந்த கருப்பண்ணன்]

கருப் : (தனக்குள்ளே) இப்பப் போயி கட்டிப் புடிச்சி ஒரு முத்த மாச்சியும் குடுத்துப்புட்டேன். வந்ததெல்லாம் வரட்டும், இப்ப உட்டா அப்பறம் சிக்காது.....

(என்று எழுந்திருக்கப் போகும்போது, வீராசாமி வந்து விடுகிறான்)

வீரா : என்ன கருப்பண்ணு. என்னமோ மொனகிக்கொண்டிருந்தாயே, என்ன?

கருப் : வந்து தொலேச்சியா : நீ. ஒண்ணுலே தான் எல்லாம் பாழாப் போச்சி.

வீரா : என்னுலெ என்ன பாளாப் போச்சி?

கருப் : அண்ணேக்கே நேரா இவுங்கோ மலேக்குக் கொண்டு போயிருந்தா நம்ப இஷ்டம் போல இருந்திருக்கலாமா? ஒன்னுலேதான் இங்கே வந்து மாட்டிக்கிட்டோம்.

வீரா : இங்கே வராமலிருந்தால் இன்னேரம் நீயும் நானும் போலீசுக்காரனிடத்தில் மாட்டிக்கொண்டிருப்போமே?

கருப் : போலீசுக்காரன் நம்மகிட்ட வர்றத்துக்குள்ள என்னென்னுமோ பண்ணியிருக்கலாமே.

வீரா : என்ன பண்ணியிருப்பாய்?

கருப் : இனிமே அதையெல்லாம் பேசி என்னப் புரோச்சனம்?

வீரா : ஏன் பிரயோஜனமில்லே? இங்கே வராவிட்டால் நமக்கு நல்லப்பர் மடியிலிருந்த பணம் கிடைத்திருக்குமா? மோதிரம் கடுக்கன் இதெல்லாம் கிடைத்திருக்குமா?

கருப் : பணம் என்ன பெரமாதம்? பணத்தை வச்சிக்கிட்டு என்னு சொகமடைஞ்சோம்? இந்தப் பணமில்லாட்டியும் அங்கே போயிருந்தா நம்ப இஷ்டப்படி.....

வீரா : அங்கேதான் போக முடியாமற் போச்சே. அதைத் திருப்பித் திருப்பிப் பேசி என்ன லாபம். கொஞ்சம் முன்னுலேயே நல்லப்பர் வீட்டில் புகுந்திருந்தால் அவர்களோ வீட்டுக்குள்ளேயே மடக்கி நம்முடைய திட்டம் போல மலேக்கே போயிருக்கலாம்.

கருப் : அதையும் நீதாங் கெடுத்தே.

வீரா : அதை நான்னென்ன கெடுத்தேன்?

கருப் : பத்தரை மணிக்கே வந்துபுட்டேனுண்ணு எங்கிட்டே சொல்லிப்பிட்டு ஆலம்பாடிக்குப் போயி பன்னெண்டு மணிக்கு மேலே வந்தே. பதிஞ்ரு மணிக்கே ஊட்டுக்குள்ளே பூந்திருந்தா இன்னேரம் நாம்ப மலே ஊட்லே நம்பப் பிரியம் போல.....

(இந்தச் சமயத்தில் நாச்சிமுத்துவின் அந்தரங்கக் காரியஸ்தனை வேணு அங்கே வருகிறான்.)

வேணு : உங்கள் இரண்டு பேரையும் எஜமான் வரச் சொன்னார்.

கருப்
வீரா } நாச்சிமுத்தா?

வேணு : ஆமாம்.

வீரா : இப்போதே போக வேணுமா. அல்லது வழக்கம்போல் இருட்டின பிற்பாடு போகலாமா ?

வேணு : இருட்டின பிற்பாடுதான் உங்களை அவர் சந்திப்பார். ஆனால் நான் இப்போது கொஞ்சம் வெளியில் போய்வர வேண்டியிருக்கிறது. அதனால் உங்களை இப்போதே ரகசிய வழிக்கு வெளியில் கொண்டுபோய் விட்டுவிட்டுக் கதவைப் பூட்டிக்கொண்டு போக வேணும். நீங்கள் காடிகானுவுக்குப் பக்கத்து அறையில் இருங்கள். நான் வெளியில் போய் வந்து எஜமானிடத்துக்கு இருட்டின பிறகு அழைத்துக் கொண்டு போகிறேன்.

(மூன்று பேரும் போகிறார்கள். கள்ள வழியைக் கடந்ததும் வேணு, வீராசாமியையும் கருப்பண்ணனையும் அடுத்த அறைக்குப் போகச் சொல்லிவிட்டு அவர்கள் பார்க்காதபடி மாடத்திலுள்ள விளக்கை எடுத்துவிட்டு அறையைப் பூட்டிக் கொளுகிறான். பிறகு அவர்களைப் பார்த்து அந்த அறைக்குள்ளேயே இருக்கச் சொல்லி, இருட்டின உடன் வருவதாகப் போய்விடுகிறான். வீராசாமியும் கருப்பண்ணனும் ஏதேதோ குசுகுசுப்பாகப் பேசிக்கொண்டும் தனித் தனியே சிந்தனை செய்துகொண்டும் காத்திருக்கிறார்கள். இருட்டி வெகு நேரமாகியும் வேணு வரவில்லை. மிகவும் அலுத்துப் போய் இருவரும் வெளியில் வருகிறார்கள். கண்ணுக்கெட்டினவரை யாரும் இல்லை. மெள்ள மெள்ள இருவரும் நாச்சிமுத்துவின் அந்தரங்க அறைக்குப் போகிற வழிக்கு வந்து பார்க்கிறார்கள். அங்கும் யாருமில்லை. கொஞ்சங் கொஞ்சமாக நாச்சிமுத்துவின் அந்தரங்க அறைக்குப் பக்கம் வரும்போது உள்ளே பேச்சுக்குரல் கேட்கிறது. 'வசந்தா',...'வீராசாமி'...'கருப்பண்ணன்' என்ற பெயர்கள் காதில் விழுந்து ஜன்னலுக்கருகில் இருவரும் மறைந்து நின்று ஒட்டுக் கேட்கிறார்கள். நாச்சி முத்துவும் வேணுவும் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.)

நாச் : சரி, இருக்கட்டும்.....கங்காணியைப் பார்த்தாயா ?

வேணு : பார்த்தேன். பாஸ்போர்ட் நாம் எதிர்ப்பார்த்ததற்கு முன்னாலேயே கிடைத்து விட்டதாம். அதையெல்லாம் எடுத் துக்கொண்டு இங்கே வருவதாகச் சொன்னார்.

நாச் : இன்றைக்கே சிலோனுக்குப் புறப்பட முடியுமா ?

வேணு : இன்றைக்கு முடியாதாம். நாளைக்கு நிச்சயமாகப் புறப்படலாம் என்று சொன்னார்.

நாச் : நாளைக்குப் போறதானாலும் இன்றைக்கே டிக்கட்டுகளை வாங்கிவிட வேணும். நாளைக்கு டிக்கட் கிடைக்காமற் போகலாம். நான் ஸ்டேஷன் மாஸ்டருக்கு ஒரு கடிதம் தருகிறேன். நீ கங்காணியையும் கூட்டிக்கொண்டு ஸ்டேஷன் மாஸ்டரிடம் என் கடிதத்தையும்—அதோடு நான் கொடுக்

கிறதையும்—கொடுத்து, பாஸ்போர்ட்டையும் காட்டி நாளை ராத்திரி ஒரு மணி வண்டிக்கு கொளும்புக்கு டிக்கட் வாங்கிவிடு. எனக்கும், வசந்தாவுக்கும், கங்காணிக்கும் மூன்று பஷ்ட்கிளாஸ் டிக்கட்டுகள்; உனக்கு ஒரு 'சர்வெண்ட்' டிக்கட் வாங்கிவிடு.....

(என்று முன்னலேயே தயாராக வைத்திருந்த ஒரு கடிதத்தையும் அத்துடன் ரூபாய் நோட்டுகளையும் ஒரு கவரில் போட்டுத் தருகிறான்.)

நாச்: நாளைக்குச் சாயங்திரம் வரைக்கும் நான் பல பேத்தைப் பார்க்க வேண்டிய ஜோலி ரொம்ப இருக்குது. போலீசு சூப்ரண்டை நாளை சாயங்திரம் சந்திக்க ஏற்பாடு செய்திருக்கிறேன். டிப்டி கலெக்டர் அறிமுகப்படுத்தி வைக்கிறதாகச் சொல்லியிருக்கிறார். நான் நாளைக்கு வீட்டிற்கு வர கொஞ்சம் நேரமானாலும் ஆகும். இப்பவே நான் சொல்லுவதை யெல்லாம் கேட்டுவைத்துக்கொண்டு அதன்படி எல்லாம் செய்ய வேணும், ஜாக்கிரதை.

வேணு: ஆகட்டுங்க.

நாச்: முதலில் பயணம் நாளைக்கு நிச்சயந்தானு என்பதை அறிந்துகொள். நிச்சயமானால் இப்பவே டிக்கட்டுகளை வாங்கிவிடு. நான் நாளை சாயங்திரம் வீட்டுக்கு வர நாழி யானாலும், நீ முன்னலேயே அங்கே போய் வசந்தாவும் அவளுடைய தகப்பனாரும் சாப்பிடுவதைப் பக்கத்திலேயே இருந்து பார்த்துக்கொள்ள வேணும். அவர்கள் சாப்பாட் டைப்பற்றி நான காலமே உன்னிடம் சொன்னதெல்லாம் நினைப்பிருக்கிறதா?

வேணு: இருக்குதுங்க- அதை மறப்பேனா?

நாச்: ஆமாம், ஜாக்ரதை. அந்தப்படி அவர்கள் சாப்பாட்டை நீயே கவனித்து அவர்களைப் பயணத்துக்குத் தயார் செய்து வைக்கவேணும். ராக்கனிடத்திலும் சங்கிலியிடத்திலும் நம்ம 'ரப்பர் டயர்' குதிரை வண்டிகள் இரண்டையும் தயாராக வைத்திருக்கும்படி முன்னலே சொல்லிவிடு. நான் சரியாகப் பதினொன்றரை மணி அல்லது பன்னிரண்டு மணிக்கு அங்கே வருவேன். வசந்தாவையும் நல்லப்பரையும் கூட்டிக்கொண்டு வந்து நல்லப்பரை ராக்கன் வண்டியில் ஏற்றிவிடுவேன். அவர் ஏறின உடனே அவன் அதை வேகமாக ஓட்டிக் கொண்டுபோய் அவருடைய வீட்டுக்குக் கொஞ்சம் தூரத் திலேயே அவரை இறக்கி விட்டுவிட்டு வண்டியைத் திருப்பிக் கொண்டு வந்துவிடச் சொல்லி வை. வசந்தாவைச் சங்கிலி வண்டியில் ஏறச் செய்கிறேன், நீ அதில் முன்னால் ஏறிக் கொள். நான் பின்னால் ஏறினவுடன் வண்டியை ரயில்வே

ஸ்டேஷனுக்கு ஓட்ட வேணும். கங்காணியை ஸ்டேஷனுக்கு நேராக வந்துவிடும்படி இப்பவே சொல்லிவிடு... எல்லா வற்றையும் சரியாகக் கேட்டுக்கொண்டாயா?

வேணு : கேட்டுக்கொண்டேன்- கவனமாகச் செய்கிறேன்... வீராசாமி கருப்பண்ணன் ரெண்டு பேரையும் என்னுமோ...

நாச்: ஓ! ஆமாம் அவர்களைக் கூட்டிவரச் சொன்னேனே, போய் கூட்டிக்கொண்டு வா.

(இதைக் கேட்டதும் ஒட்டுக் கேட்டுக்கொண்டிருந்த வீராசாமியும் கருப்பண்ணனும் வீட்டுக்கு வெளியே போய்விடுகிறார்கள். வீராசாமி கருப்பண்ணனிடம் ரகசியமாக "கருப்பண்ணு நீ ஒண்ணும் பதட்டமாப் பேசிவிடாதே, நான் நாச்சி முத்தோடு பேசுகிறேன்" என்கிறான். அதற்குள் வேணு வருகிறான்.)

வீரா : இருட்டி ரொம்ப நேரமாச்சே, உங்களைக் காணோமே என்று இப்பத்தான் வந்தோம். நாச்சிமுத்து ஐயா இருக் கிறாரா?

வேணு: இருக்கிறார். கூட்டிக்கொண்டு வரச்சொன்னார். வாங்க போகலாம்.

(மூன்று பேரும் நாச்சிமுத்துவின் அந்தரங்க அறைக்குள் போகிறார்கள். நாச்சிமுத்து வரவு சொல்லி, ஒரு பெஞ்சைக் காட்டி உட்காரச் சொல்லுகிறான். வீராசாமியும், கருப் பண்ணனும் உட்காந்த பிறகு)

நாச்: (வேணுவைப் பார்த்து) நீ போய் நான் சொன்ன காரியங் களைப் பார்த்துவிட்டு வா. முதலில் நாளைக்குப் பயணம் நிச்சயந்தானு என்பதைத் தெரிந்துகொண்டு வா. அப்புறம் மற்றதெல்லாம்.....போ

(வேணு போகிறான்)

நாச்: வீராசாமி! நாளைக்கு—இல்லாவிட்டால்—நாளை நின்று அந்தப் பெண்ணையும் கல்லப்பரையும் அவர்களுடைய வீட்டுக்கு அனுப்பிவிட வேணும். உங்கள் அபிப்பிராயம் என்ன?

வீரா : எங்கள் அபிப்பிராயம் எதற்கு? உங்கள் இஷ்டம் எப்படியோ அப்படிச் செய்யுங்கள்.

நாச்: அவர்களை அனுப்பிவிடாவிட்டால் போலீஸ்காரர்கள்— புதுசாக வந்திருக்கிற இன்ஸ்பெக்டரும் சப்இன்ஸ்பெக்டரும் மிகவும் பொல்லாத பேர்வழிகளாம். எப்படியாவது இங்கே வந்து நம்ம ரகசியங்களையெல்லாம் அறிந்துவிட நேரிடலாம். அதற்காகத்தான் இவர்களை வீட்டுக்கு அனுப்பிவிட்டு

சூப்ரண்டை சந்தித்து உங்கள் இருவரையும் இந்தக் குற்றத்திலிருந்து விலக்கிவிடும்படியாக ஏற்பாடு செய்துவிட்டு நானும் கொஞ்ச நாள் எங்கேயாவது சந்தடியில்லாத இடத்துக்குப் போயிருந்து நிம்மதி பெறலாம் என்று தீர்மானித்திருக்கிறேன்.

வீரா : சூப்ரண்ட் மட்டும் எங்களை விட்டுவிடுவாரா ?

நாச் : சூப்ரண்ட், இன்ஸ்பெக்டர், சப் இன்ஸ்பெக்டர் இவர்களைப் போல் பிடிவாதக்காரரல்ல. ஈரம்—இரக்கம், தயவு—தாட்சண்யம் உள்ளவர். நம்ம டிப்டி கலக்டருக்குச் சொந்தக்காரர். டிப்டி கலக்டர் நமக்கு என்ன வேணுமானாலும் செய்வார். அவர் சூப்ரண்டிடம் எனக்காகப் பேசுவதாகச் சொல்லியிருக்கிறார். உங்களிருவரையும் விட்டுவிடவேண்டிய ஏற்பாடுகளை நான் செய்கிறேன். நீங்கள் பயப்பட வேண்டாம்.

வீரா : அதை மட்டும் மறக்காமல் செய்துவிடுங்கள், போதும்.

நாச் : அதற்காகத்தான் நாளைக்கு சூப்ரண்டை நான் சந்திக்க டிப்டி கலெக்டர் வீட்டில் ஒரு 'டீ பார்ட்டி', ஏராளமான செலவில் ஏற்பாடு செயதிருக்கிறேன்.

கருப் : நீங்க எந்தூருக்குப் போவப்போறீங்க ?

நாச் : எதாவது ஒரு நிம்மதியான இடத்துக்குப் போய் இந்தத் தொல்லைகளையெல்லாம் மறந்திருக்கலாம் என்று நினைக்கிறேன்.

கருப் : ஏன்? அந்த எடத்துக்கு எங்களையும் கூட்டிக்கிட்டுப் போங்களேன்!

நாச் : நீங்கள் இப்போது உடனே வெளியூருக்குப் போனால் உங்களை வேண்டுமென்றே தொடர்வார்கள்.

வீரா : கருப்பண்ணு நீ சும்மா இரு. அவசரப்படாதே. நாம் எங்கேயும் போகக்கூடாது. நாம் நம்முடைய வீட்டுக்கே போவோம்.

நாச் : வசந்தாவையும் நல்லப்பரையும் அனுப்பும்போதே நீங்களும் உங்கள் வீடுகளுக்குப் போய்விடுவதுதான் நல்லது. மற்ற விஷயமெல்லாம் நான் பார்த்துக்கொள்ளுகிறேன்.

வீரா : உங்கள் பிரியம் எப்படியோ அப்படிச் செய்யுங்கள் நீங்கள் எங்கே போனாலும் எங்களை.....

நாச் : எங்கே போனாலும் உங்களை மறக்கமாட்டேன். அதைப் பற்றிக் கவலை வேண்டாம். நான் பார்த்துக்கொள்ளுகிறேன்...

நாளைய 'டி பார்ட்டி' விஷயமாக ஏற்பாடு செய்யப் போக வேண்டும்... வாங்க உங்களை அங்கே விட்டுவிட்டு நான் போய் வருகிறேன்... நான் வெளியூருக்குப் போகிறதுகூட எப்போது என்று இன்னும் தீர்மானம் ஆகவில்லை. எல்லாம் நான் வந்து சொல்கிறேன். வாங்க போகலாம்.

(என்று நாச்சிமுத்து எழுந்திருக்கிறான். மற்ற இருவரும் அவனுடன் எழுந்திருக்கிறார்கள். எல்லாரும் ரகசிய வீட்டுக்குப் போகிற கதவிருக்கும் இடத்துக்கு வருகிறார்கள். மற்ற இருவரையும் அடுத்த அறையில் இருக்கச் சொல்லி விட்டு நாச்சிமுத்து மட்டும போய் மாடத்திலிருந்த விளக்கைத் திருகியெடுத்துவிட்டுக் கதவைத் திறந்துவைத்து விட்டு, மறுபடியும் அந்த இருவரையும் அழைத்து ரகசிய வழியில் அவர்களை அனுப்பிவிட்டுக் கதவைப் பூட்டிக் கொண்டு போகிறான்.

ரகசிய வழிக்குள் நுழைந்த வீராசாமியும் கருப்பண்ணனும் வழியைக் கடந்து உள்ளே தோப்புக்குள் போனவுடன்)

கருப்: என்ன வீராசாமி, 'காத்திருந்தவன் பொண்டாட்டியை ஏத்து வந்தவன் கொண்டு போனானும்' அப்பிடியல்ல இருக்குது—கதை. நாம்ப என்ன பாடுபட்டு—எவ்வளவு திட்டம்போட்டு என்னென்ன செஞ்சி—வசந்தாளைக் கொண்டாந்தோம்? இவன் அலுங்காமெ அவளைக் கொளும்புக்குக் கொண்டு போறானமே!... 'பஷ்டுகிளாசி'லே! அடேயப்பா! என்ன சொந்தத்தோட ஏற்பாடு பண்ணிக்கிட்டாம் பாத்தியா?

வீரா: எனக்கும் ரொம்ப ஆத்திரந்தான் வருகிறது. என்ன செய்வது?

கருப்: இந்த நாச்சிமுத்து ரொம்ப மோசக்காரப் பயல். இவன் அந்த வசந்தாவைக் கொண்டுபோக உட்டுப்புட்டா நீயும் நானும் உசுரோட இருந்து என்ன புரோசனம்?

வீரா: அதற்கு நாம் என்ன செய்ய முடியும்? நாம்தான் எக்கச் சக்கமாக சிக்கிக்கொண்டிருக்கிறோமே? நமக்கு அவன் சிபார்சு பேசுவதுகூட கெட்டுப்போகும். சும்மா இரு கருப்பண்ணு.

கருப்: இவனு நமக்குச் சிபார்சு பண்ணப் போறவன்? இவன் அந்தப் பொண்ணை சிலோனுக்குக் கூட்டிக்கிட்டுப் போயிட்டு நம்பளை நடுத் தெருவுலேதான் உடப்போறான். இவனை நம்பாதே வீராசாமி.

வீரா: இனிமேல் நாம் வேறு என்ன பண்ண முடியும்?

கருப்: வீராசாமி! என்னு வந்தாலுஞ் சரி, இவன் அந்தப் பொண்ணை அடிச்சிக்கிட்டுப் போக நாம்ப விடக்கூடாது.

வீரா : நாம் அதை எப்படித் தடுக்க முடியும்?

கருப் : நீ ஒரு பயங்காளி... நாம்ப இவ்வளவு பாடுபட்டு அந்தப் பொண்ணை கொண்டாரது—இந்த நாச்சிமுத்து அவளை கொளும்புக்குக் கூட்டிக்கிட்டுப் போவானும்—நாம்ப ரெண்டு பேரும் அதைப் பார்த்துக்கிட்டே இருந்துட்டு தலையிலே கையை வச்சிக்கிட்டு ஊட்டுக்குப் போயிட வேணுமாம். அட எளவே! இவனென்ன கொம்பனா? பாத்துப்புடுறேன் அந்த ராசாத்தியே இவன் கூட்டிக்கிட்டுப் போறதை.

வீரா : கருப்பண்ணு ஆத்திரப்பட்டு கண்டபடி யெல்லாம் கத்தாதே. யார் காதிலாவது விழப் போகிறது.

கருப் : யார் காதுலே வேணுமுன்னாலும் உளுட்டுமே. நான் என்ன ஒன்னட்டம் பயங்காளியா?

வீரா : நீ பயங்காளியல்ல. சொம்ப தைரியசாலிதான். இப்போ என்ன செய்ய வேண்டுமென்கிறாய்?

கருப் : என்ன செய்ய வேணுமா? அந்தப் பொண்ணை இந்த நாச்சிமுத்து அடிச்சிக்கிட்டுப் போக நாம்ப உடக்கூடாது. உசுரு போனாலுஞ் சரி. நான் உடப்போறதில்லே.

வீரா : விடாமல் நீ என்ன செய்வாய்?

கருப் : நாஞ் செய்யிறதை அப்பறஞ் சொல்றேன். நீயும் என்னோட சேந்து அவன் அந்தப் பொண்ணை ரயிலேத்திக் கொண்டுபோறதைத் தடுக்கணும்.

வீரா : எப்படி?

கருப் : எப்பிடியா? சொல்றேங் கேளு: நாளைக்கு ராத்திரி இவன் அந்தப் பொண்ணையும் அவங்கப்பனையும் வண்டியேத்த கூட்டிக்கிட்டுப் போவப்போறானா?

வீரா : ஆமாம்.

கருப் : நாம்ப ரெண்டு பேரும் அவுங்ககூடவே வெளியிலே வருவோம். ஊட்டுக்குப்போறமுண்ணு கொஞ்சம் முன்னாலியே நாம்ப ரெண்டு பேரும் போயி எங்காச்சியும் மறஞ்சி இருப்போம். அவன் அந்த நல்லப்பரை ஒரு வண்டியிலே ஏத்தி ஊட்டுக்கனுப்பிப்பிட்டு இன்னொரு வண்டியிலே அந்தப் பொண்ணை வச்சிக்கிட்டு இவனும் அந்த வேணுவும் ரயிலுக்குப் போவாங்களா?

வீரா : ஆமாம்.

கருப் : ரயிலுக்குப் போற பாதையிலே நம்ப மலைக்குப் போற தடம் ஒண்ணு இருக்குது தெரியுமா?

வீரா : தெரியும்.

கருப் : அங்கே நாம்ப காத்திருந்து அவனே மடக்கிப்பிடலாம. அங்கே வண்டி வந்ததும் நாம்ப நாச்சிமுத்தைக் கூப்பிட்டு ஒரு சேதி சொல்லுனுமுண்ணு வண்டியை நிறுத்தச் சொல்லுவோம். நாச்சிமுத்து எறங்குவான். நான் அவன் மூளே கலங்கருப்புலே ஓங்கி ஒரு அடி குடுத்து அவன் மணிக்கட்டைப் புடிச்சி ஒடிச்சிப்புட்றேன். அதே சமயத்திலே நீ அந்த வேணுவை இளுத்துத் தள்ளி மொதல்லே அவன் சோத்துக் கையை ஒடிச்சிப்புடு. ரெண்டு பேத்தையும் அசைய முடியாதபடி கட்டிப் போட்டுப்புடுவோம். அப்பறம் அந்த நாச்சிமுத்து மடியிலே இப்ப—கொளம்புலே போயி குடுத்தனம் செய்ய...ரொம்பப் பணம் வச்சிருப்பான்... இருக்கிறதெல்லாம் எடுத்துக்கிட்டு வசந்தாவையும் இளுத்துக்கிட்டு நம்ப மலே வீட்டுக்கே போயிடுவோம். அப்பறம் பாத்துக்கலாம்.

வீரா : வண்டிக்காரன் இருக்கிருனே, அவன் சும்ம இருப்பானு?

கருப் : மொதல்லே இவுங்க ரெண்டு பேத்தையும் கீளே தள்ளுவோம். இவுங்க ரெண்டு பேத்துக்கிட்டேதான் துப்பாக்கி கிப்பாக்கி இருக்கும்..... வண்டிக்காரன் என்ன பண்ணிப்பிடுவான்? தப்பிச்சிக்கிறதுக்கு உளுந்தடிச்சி ஓடுவான். இல்லாட்டி போனாலும் அவனேயும் நான் பாத்துக்கிறேன். நீ மட்டும் நான் நாச்சிமுத்தெ மடக்குற சமயத்திலியே அந்த வேணுவை அமுக்கிக்க. மத்ததெல்லாம் நான் பாத்துக்குறேன்.

வீரா : கருப்பண்ணு நீ ரொம்பக் கெட்டிக்காரன். உன் மூளே நல்ல வேலே செய்யுது. உன் திட்டம் நல்லாத்தான் இருக்குது. ஆனல் அப்படிச் செய்தால் நமக்கு அபாயம் அதிகமாகிவிடும்.

கருப் : அப்பிடின்னு அவன் அந்தப் பொண்ணே சிலோனுக்கு அடிச்சிக்கிட்டுப் போறதை பாத்துக்கிட்டு சும்மா இருக்கச் சொல்றியா? அது என்னலே முடியாது.

வீரா : நாச்சிமுத்து வசந்தாவை சிலோனுக்குக் கொண்டுபோக நாம் விடக்கூடாது. அவவளவுதானே உன் ஆசை?

கருப் : ஆமாம்.

வீரா : அதற்கு நான் வழி சொல்லுகிறேன், கேளு.

கருப் : என்னு?

வீரா : நாம் அவனே மலேக்குப் போகிற தடத்துக்கிட்டே மடக்கவும் வேண்டாம். அடிக்கவும் வேண்டாம். கையைக் காலே

ஒடிக்கவும் வேண்டாம். வீட்டுக்குப் போவதாகச் சொல்லி ரகசிய வீட்டைவிட்டு கொஞ்சம் முன்னுலேயே வெளியில் வந்து நாம் ரயில்வே ஸ்டேஷனுக்குப் பக்கமாகப் பாதையில் காத்திருப்போம். வண்டி வந்ததும் நிறுத்தச் சொல்லி 'அந்தப் பெண்ணை வீட்டுக்கு அனுப்பிவிடுவதாக எங்களிடம் சொல்லிவிட்டு அவளைத் தனியாக ரயிலுக்குக் கூட்டிக் கொண்டு போகிறயே, இதுதான் உன்னுடைய யோக்யதையா?' என்று கேட்போம். அவன் பதில் சொல்ல முடியாமல் நம்மைக் கெஞ்சுவான். யாரிடத்திலும் சொல்ல வேண்டாமென்று நமக்குப் பணம் கொடுக்கிறேன் என்பான். நீ சொன்னதுபோல இப்போ அவனிடம் நிறையப் பணமிருக்கும். நம் இஷ்டம் போலக் கறந்துகொள்ளலாம்.

கருப்: பணத்தை வாங்கிக்கிட்டு அந்தப் பொண்ணை அவன் கொண்டு போயிட உட்டுட்றதாக்கும்? என்னு லெஞ்சமா?

வீரா: இல்லே, பணத்தை வாங்கிக்கொண்டு பின்னுலேயே நாமும் ஸ்டேஷனுக்குப் போய் நாச்சிமுத்து, நல்லப்பர் மகளே ஏமாற்றி சிலோனுக்குக் கூட்டிக்கொண்டு போகிறன் என்று அங்கே எல்லோரிடமும் காட்டிப் புகார் கிளப்பிவிட்டால் அப்பறம் அவன் ரயிலேறிவிட முடியுமா?

கருப்: நம்பளையும் சேத்துப் புடிச்சிக்கிட்டா?

வீரா: நீ மறைவாக இரு. நான் போய் நம்மை யாரும் கண்டு கொள்ளாதபடி ஸ்டேஷனில் புகார் கிளப்பிவிட்டுவிட்டு வந்து விடுகிறேன்.

கருப்: இந்த டேசன் மாஷ்டர்தான் அவனுக்கு சொம்ப வேண்டிய வராச்சே.

வீரா: இருந்தால் என்ன? ஜனங்கள் கண்டுகொண்ட பிறகு ஸ்டேஷன் மாஸ்டர் மறைக்க முடியுமா? அப்படி இலலாவிட்டாலும் நீ உன் வீட்டுக்குப் போ. நான் மணற்பள்ளம் ஜங்ஷனுக்குப் போய் அங்கே இவளைப் பிடித்துக் கொள்ளச் செய்கிறேன்.

கருப்: ஆமாம், அது நல்ல ஒச்சை..... ஆனு மொதல்லே நாம்ப அவங்கிட்டெ முடிஞ்சவரைக்கும் பணம் கறந்து புடனும்.

வீரா: அதை நான் செய்கிறேன். உனக்குக் கொஞ்சம் அதிகமாகவே தருகிறேன்.

கருப்: வாண்டாம் வாண்டாம் சரியா பாதி குடுத்தாப் போதும்.

காட்சி 54

இடம் : ஆஸ்பத்திரி

காலம் : அதிகாலை

[பெரிய இன்ஸ்பெக்டர் சுந்தரத்திடம் வருகிறார். சுந்தரம் அரைத் தூக்கம் போல் படுத்துக் கொண்டிருக்கிறான்.]

இன். குட்மார்னிங்; தூக்கமா?

[சுந்தரம் வெகு அவசரமாக எழுந்து வணங்கி]

சுந்: வாருங்கள். தூக்கமல்ல, நீங்கள் இன்னும் வரவில்லையே என்று நினைத்துக் கொண்டே கண்ணை மூடிக்கொண்டிருந்தேன். சின்ன டாக்டர் உங்களைச் சந்தித்தாரா?

இன்: சந்தித்தார். அவர் வந்ததனால் தான் நான் இப்போதாவது வரமுடிந்தது. இல்லாவிட்டால் இன்றைக்குச் சாயங்காலம் தான் இங்கே வருவதாக இருந்தேன்.

சுந்: அங்கே என்ன அவ்வளவு முக்யமான வேலை?

இன்: அங்கே ஒருவெகு முக்யமான கேஸ்—'இன்வெஸ்டிகேஷன்'—அதைக் கண்டு பிடிக்கத்தான் என்னை இங்கே மாற்றினார்கள்...போன வருஷம் ஒரு யௌவனப் பெண் காணாமற் போனாள். அவள் என்ன ஆனாள் என்பது இன்னும் தெரியவில்லை. அதை முன் விசாரித்த போலீஸ் அதிகாரிகள் அந்தப் பெண் கிணற்றில் விழுந்து இறந்து போனதாகவும் பிரேதம் எரிக்கப்பட்டு விட்டதாகத் தெரிகிறதாகவும் அதை முடிவு செய்து விட்டார்கள். அது பொய்யென்று அந்தப் பெண்ணின் சொந்தக்காரர்கள் மேலிடங்களுக்கு விண்ணப்பம் அனுப்பி—அதன் மேல் அதை மீண்டும் விசாரிக்க எனக்கு உத்தரவு வந்திருக்கிறது.

சுந்: ஓ! அந்தக் கேஸா?

இன்: அதைப்பற்றி உங்களுக்குத் தெரியுமா?

சுந்: கேள்விப்பட்டிருக்கிறேன். அதில் நாச்சிமுத்துக்கு சம்பந்தம் உண்டு என்று கூடச் சொல்லப்பட்டது.

இன் : ஆமாம் அதே கேஸ்தான்.

சுந் : அதில் நாச்சிமுத்து சம்பந்தம் உண்மைதானு ?

இன் : அது விஷயமாகத்தான் செங்குளத்தில் கொஞ்சம் துப்பு கிடைத்திருக்கிறது. அதில் நாச்சிமுத்துவின் சம்பந்தத்தை ஊர்ஜிதமாக்கக் கூடிய சாட்சியங்கள் இன்னும் அகப்பட வில்லை. ஆனால் அவன் சம்பந்தப் பட்டிருக்கிறான் என்று அனுமானிக்கப் போதுமான காரணங்களிருக்கின்றன. கிடைத் திருக்கிற துப்புகளைத் தொடர்ந்து புலன்வைத்து விசாரித் தால் கண்டு பிடித்து விடலாம் என்று நம்புகிறேன்.

சுந் : மறுபடியும் செங்குளத்துக்கு போக வேண்டுமா ?

இன் : ஆமாம். டாக்டர் வந்து நீங்கள் என்னை வெகு அவசரமாகப் பார்க்க விரும்புவதாகச் சொன்னதனால் அதை அப்படியே விட்டு விட்டு வந்தேன்.

சுந் : டாக்டர் வந்து என்ன சொன்னார் ?

இன் : டாக்டர் வந்து நல்லப்பருடைய பெண்ணை சிலோனுக்குக் கொண்டு போக ஏற்பாடு செய்திருக்கிறார்களாம். ரயில்வே ஸ்டேஷன்களுக்கும் 'மண்டபம்' என்ற இடத்துக்கும் தகவல் அனுப்பி அதைத் தடுக்க வேண்டிய எச்சரிக்கைகளை செய்யச் சொன்னார்.

சுந் : அவ்வளவுதானு சொன்னார்? அதற்குமேல் ஒன்றும்சொல்ல வில்லையா?

இன் : அவ்வளவுதான் சொல்ல நேரமிருந்தது. டாக்டர் அங்கே வந்தபோது நான் சூப்ரண்டுடன் ஒரு வெகு ரகசியமான விஷ யத்தைப் பேசிக் கொண்டிருந்தேன். டாக்டர் என்னை வெகு அவசரமாகப் பார்க்க வந்திருப்பதாக ஒரு துண்டுச் சீட்டு எனக்கு வந்தது. நான் போனேன். டாக்டர் இதை மட்டும் சொல்லி என்னையும் அவருடைய காரில் உங்களிடம் வரும்படி அழைத்தார். மேலே பேசுவதற்குள் நானும் சூப்ரண்டும் அவ சரமாக ஒரு இடத்துக்கு போக வேண்டியிருந்தது. நான் இதற்கு வேண்டிய எச்சரிக்கைகளை அனுப்பிவிட்டு விரைவில் உங்களிடம் வருவதாகச் சொல்லி டாக்டரை அனுப்பி விட நேர்ந்தது.

சுந் : ரயில்வே ஸ்டேஷன்களுக்கு எச்சரிக்கை அனுப்பியாச்சா?

இன் : சப்இன்ஸ்பெக்டரை அனுப்பினேன். அவர் வேண்டியவற் றைச் செய்திருப்பார். நல்லப்பர் மகளை சிலோனுக்குக் கொண் டுப்போகப் போகிறதாக உங்களுக்கு எப்படித் தெரிந்தது ?

சுந் : உட்காருங்கள் சொல்லுகிறேன். உங்களிடம் ரொம்பப் பேச வேண்டும்.

[என்று சுந்தரம் தானே நாற்காலியை இழுத்து கட்டிலுக்கருகில் போட்டு இன்ஸ்பெக்டரை உட்காரச் சொல்லிவிட்டு, அந்த அறையின் கதவைச் சாத்திவிட்டு வந்து கட்டிலில் உட்காருகிறான்]

சுந் ; நல்லப்பரையும் வசந்தாவையும் நாச்சிமுத்துதான் ஒரு வெகு ரகசியமான இடத்தில் மறைத்து வைத்திருக்கிறானும். இன்றைக்கோ நாளைக்கோ வசந்தாவைச் சிலோனுக்குத் தாட்டி விட அவன்தான் ஏற்பாடு செய்திருக்கிறானும்.

இன் : யார் சொன்னது? அங்கே அப்படி ஒன்றும் சந்தேகிக்க இடமில்லை யென்றல்லவா—'ஹெட்கான்ஸ்டேபிள்' ரிபோர்ட் செய்திருக்கிறான்?

சுந் : நீங்கள் அனுப்பின 'ஹெட்கான்ஸ்டேபிள்' நாச்சிமுத்துவிடத்தில் பணம் வாங்கிக் கொண்டு வந்து விட்டானும்.

இன் : உங்களுக்கு எப்படித் தெரியும் ?

சுந் : எனக்கு மிகவும் நம்பத்தகுந்த ஒருவர் குளத்தூருக்குப் போய் அங்கே அந்த நாச்சிமுத்து வீட்டிலேயே நெடுநாளாக வேலை பார்த்துக் கொண்டு வருகிற ஒரு மிகவும் யோக்யமான மனிதரிடத்திலிருந்து நாம் யாரும் அறியவே முடியாத பல ரகசியங்களை அறிந்து வந்திருக்கிறார். அவர் சொல்லுவது முற்றிலும் நம்பத்தகுந்தது.

இன் : அப்படியா! நாச்சிமுத்து பரம அயோக்யனாகத் தான் இருக்க வேணும் என்பதை அவன் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு ஏராளமான லஞ்சம் கொடுக்க முயல்வதிலிருந்து தெரிந்து கொண்டேன். ஆனால்...

சுந் : உங்களுக்கு ஒன்றும் தரவில்லையா?

இன் : எனக்கும்தான் தந்திருக்கிறான்.

சுந் : என்ன ?

இன் : இரண்டு நாளைக்குமுன் 'புது இன்ஸ்பெக்டரைக் கண்டு கொள்ள வந்தேன்' என்று என்னைப் பார்க்க வந்தான். நான் அவனை ஒரு கண்யமுள்ள கனவானுக்குச் செய்ய வேண்டிய மரியாதையுடன் வரவேற்று உபசரித்தேன். கொஞ்ச நேரம் பலவிஷயங்களைப் பேசிக் கொண்டிருந்து விட்டு எனக்கு வெகுமதியாக ஒரு மிக விலையுயர்ந்த, வைரங்கள் பதித்த தங்க 'ரிஸ்ட் வாட்ச்' தந்தான். அது மூவாயிரம் ரூபாய்க்கு மேல் விலை பெறக்கூடியது.

சுந் : வாங்கிக் கொண்டீர்களா?

இன் : ஓ! வாங்கிக் கொண்டேன்...முன்பின் அறியாத எனக்கு அவ்வளவு விலையுயர்ந்த வெகுமதியைக் கொடுத்ததிலிருந்தே அவன் சர்க்கார் உத்யோகஸ்தர்களை வசப்படுத்திக்கொண்டு

தன்னுடைய அக்ரமங்களிலிருந்து தப்பித்துக்கொண்டு வந்திருக்கிறான் என்பதைக் கண்டு கொண்டேன். இருந்தாலும் அதை வாங்கிக் கொள்ள மறுத்தால் உடனே உஷாராகி விடுவான் என்று வாங்கி வைத்திருக்கிறேன்.....அதிருக்கட்டும்.....அவனைப் பற்றி உங்களுக்குக் கிடைத்திருக்கிற எல்லாத் தகவல்களையும் எனக்குச் சொல்லுங்கள்.

சுந்: அந்த நாச்சிமுத்துவினுடைய வீட்டுக்குப் பின்னால் ஒரு காட்டுக்குள் அவனுக்குச் சொந்தமான ஒரு ரகசியமான வீடு இருக்கிறது. அந்தவீட்டில் வசந்தாவும் நல்லப்பரும் மறைத்து வைக்கப் பட்டிருக்கிறார்களாம். அந்த வீட்டுக்குப் போகக் கூடிய கள்ளவழி வெகு மர்மமானது.

இன் : அந்த மர்மம் குளத்தூருக்குப் போய் வந்த உங்கள் ஆசாமிக்குத் தெரியுமா?

சுந்: தெரியும். அந்த ஆசாமியே உங்களுடன் வந்து அந்த மர்மத்தை உங்களுக்குக் காட்டச் செய்கிறேன்.

இன் : அவர் வந்து காட்ட வேண்டியதில்லை. சொன்னால் போதும். மற்ற வேலையை நான் பார்த்துக் கொள்ளுகிறேன்.

சுந்: வாயாற் சொன்னால் போதாது. நீங்கள் கண்டு பிடித்துவிட முடியாது. அங்கே பழகினவர்கள் கூடவே வந்து காட்டினால் தான் தெரியும். அந்தக் கள்ளவழி இருக்கிற இடத்துக்குப் போவதற்கு முன்னால் அந்த வழியின் கதவைத் திறக்க அதன் சாவி வேண்டுமே? அதற்கென்ன செய்வீர்கள்?

இன் : அந்தச் சாவி யாரிடத்திலிருக்கிறது?

சுந் : ஒன்று நாச்சிமுத்துவிடம் அவனுடைய இடுப்பிலேயே என்னேரமும் இருக்கிறதாம். இன்னொரு சாவி அவனுடைய அந்தரங்கக் கையாள் 'வேணு' என்பவனிடம் இருக்கிறதாம்.

இன் : வேணுவா !

சுந்: ஆம். என்ன !

இன் : செங்குளத்தில் இப்போது நான் விசாரித்துக் கொண்டிருக்கிற கேஸில் இந்த 'வேணு' என்ற பேர் சொம்ப அடிபடுகிறது...சரி அப்புறம்?

சுந்: அந்த வேணுவும் அந்தச் சாவியை எந்நேரமும் தன் இடுப்பிலேயே வைத்திருக்கிறானும்.

இன் : சரி, அதை நான் பார்த்துக் கொள்ளுகிறேன். அப்புறம் !

[இந்தச் சமயத்தில் கதவைத் திறந்து கொண்டு உதவி டாக்டர் உள்ளே வருகிறார்]

சுந் : டாக்டர்! நீங்கள் உங்கள் சொந்தக்காரப் பெண் யாரோ காணுமற் போனதாகச் சொன்னீர்களே, அந்தக் கேசைக் கண்டு பிடிக்கத்தான் செங்குளத்தில் நம்ம இன்ஸ்பெக்டர் வேலை செய்து கொண்டிருக்கிறாரும்.

உ. டாக் : அப்படியா! (இன்ஸ்பெக்டரிடம்) ஆமாம் சார்; அதைக் கண்டு பிடித்து இந்த நாச்சிமுத்துவின் கொட்டத்தை அடக்க வேணும்.

இன் : நாச்சிமுத்துவா அந்தப் பெண்ணை மறைத்து விட்டான்?

உ. டாக் : அவனும் அவனுடைய காரியஸ்தன் வேணுவும்தான் அதில் முக்யம். அந்தப் பெண் கிணற்றில் விழுந்து செத்துப் போனதாகச் சொன்னது பொய். அதைப் பற்றிய அநேக தகவல்கள் எனக்குத் தெரியும். அதையெல்லாம் நான் சொல்லியும் கூட போலீசார் அதைக் கவனிக்கவில்லை.

இன் : அந்தத் தகவல்களையெல்லாம் எனக்குக் கொடுங்கள்.

உ. டாக் : தருகிறேன். 'டியூட்டி'களைப் பார்த்து விட்டு, மறுபடியும் உங்களைச் சந்திக்கிறேன்.

[என்று சொல்லி சுந்தரத்தின் புண்ணுக்குக் கட்டுக்கட்ட 'ட்ரெஸ்ஸிங் ரூமுக்கு' கூட்டிக்கொண்டு போகிறார். கட்டுக்கட்டி சுந்தரத்தைக் கொண்டுவந்து விட்டுவிட்டு இன்ஸ்பெக்டரிடம் விடை பெற்றுக்கொண்டு உதவி டாக்டர் மற்ற நோயாளிகளைக் கவனிக்கப் போகிறார். அதே சமயத்தில் மீனாட்சியம்மாளும் காளியம்மாளும் அங்கே வருகிறார்கள். இன்ஸ்பெக்டரைக் கண்டு வணங்குகிறார்கள்]

சுந் : (இன்ஸ்பெக்டரிடம்) இன்ஸ்பெக்டர் ஸார், இவர்கள்தான் என்னுடைய தாயார்.

இன் : அப்படியா? நானும் பார்க்க வேணுமென்றிருந்தேன். அம்மாளைப் பற்றியும் உங்கள் தகப்பனாரைப் பற்றியும் நான் சந்திக்கிற ஒவ்வொருவரும் மிகவும உயர்வாகப் பேசுகிறார்கள். புண்ணியவதியாகிய இவர்களைப் பார்க்கக் கிடைத்தது பாக்யம் தான்.

சுந் : (காளியம்மாளைக் காட்டி) என் தாயாருக்கு அடுத்தபடி எனக்கு அன்பு செய்கிற காளியம்மாள் இவர்தான்.

இன் : காளியம்மாளா! எந்தக் காளியம்மாள்?

காளி : அண்ணைக்கி ராத்திரி என்னோட பேசினிங்களே, அந்தக் காளியம்மா தான் நானு.

இன் : ஓ! அந்தக் காளியம்மாள் தானா? ரொம்ப சந்தோஷம். காளியம்மாள் பலே சாமர்த்தியமுள்ள மனுஷியென்று ஊர்

முழுக்கப் பேசுகிறார்கள். காளியம்மாள் புரூஷன் செங்கோடன் தானே நல்லப்பர் வீட்டுக்குள் கொள்ளைக்காரர்கள் நுழையப் போகிறார்கள் என்ற தகவலை உங்களுக்குத் தந்தது?

சுந் : ஆமாம்.

இன் : செங்கோடனும் காளியம்மாளும் உங்களுக்குப் பெரிய உபகாரிகள்.

காளி : ஐயோ (மீனாட்சியம்மாளைக் காட்டி) இந்த மவராசியும் இவுங்க ஊட்டுக்காரரும் எங்களுக்குச் செஞ்ச ஒபகாரத்தைக் காட்டிலும நாங்க என்ன இவுங்களுக்குப் பண்ணிப்பிட்டோம்? ...சுந்தரமையாவைச் சுட்டுப்புட்டு—அந்த—என் கட்டித்தங்கம்—வசந்தம்மாளை...அந்த...நா...அந்த கொள்ளைக்காரப் பசங்க இளுத்துக்கிட்டுப் போவ உட்டுப்புட்டமெ, அதுதான் நாங்க பண்ணுன ஒபகாரம்.

சுந் : இன்ஸ்பெக்டர் ஸார்! காளியம்மாள் எங்களுக்குச் செய்திருக்கிற உபகாரத்தை அளவிடவே முடியாது. காளியம்மாளால் தான் என்னுடைய வாழ்க்கையின் லக்ஷியமே கைகூடப் போகிறது.

இன் : அப்படியா!

சுந் : ஏனென்றால்...சுருக்கமாகச் சொல்லுகிறேன்...இந்தக் காளியம்மாள் தான் குளத்தூருக்குப் போய் விட்டு வந்திருக்கிற அந்த...நான், சொன்னேனே...அந்த ஆராமி...இந்த அம்மாளுடைய தாய் மாமன் தான்—அங்கே...தெரிஞ்சுதா!

இன் : அடடா! அப்படியா, சொம்ப நல்லதாய்ப் போச்சு.

சுந் : காளியம்மாளை நீங்கள் நம்புவீர்களல்லவா?

இன் : காளியம்மாளை நான் எந்தக் காரியத்துக்கும் முழுக்க-முழுக்க நம்புவேன்.....அப்படியானால் நானும் காளியம்மாளும கொஞ்சம் தனியாகப் பேசவேணும்.

சுந் : தாராளமாகப் பேசுங்கள். (காளியம்மாளைப் பார்த்து) ஏன் காளியம்மா?

காளி : அதுக்குத்தானே காத்துக் கெடக்கிறேன். சுந்தரமையாவுக்கும் வசந்தம்மாவுக்கும் ஒதவாமெ இந்த கட்டெ இருந்தென்ன, போயென்ன?

இன் : நானும் காளியம்மாளும் கொஞ்சம் பேசி விட்டு விருகிறோம்.

[இன்ஸ்பெக்டர் காளியம்மாளை அழைத்தக்கொண்டு வெளியே போகிறார். அவர்களிருவரும் வெளியே போன பிறகு மீனாட்சியம்மாள் சுந்தரத்தைப் பார்த்து]

மீனு : வசந்தாவும் நல்லப்பரும் இருக்கிற இடத்தைப்பற்றி எதாவது துப்பு கிடைத்திருக்குதாப்பா?

சுந் : காளியம்மாள் எதாவது சொன்னுளா அம்மா?

மீனு : நீ என்னமோ அவளே இங்கேயே இருக்கச் சொன்னேயாம். அவ்வளவு தான் சொன்னுள்.

சுந்: காளியம்மாள் உபகாரியம்மா. மிகவும் நம்பத் தகுந்த மனுஷி. நமக்காகக் குளத்தூருக்குப் போய் சில விஷயங்களே அறிந்து வரச் சொன்னேன். அப்படியே போய் நமக்கு ரொம்ப அனுகூலமான விஷயங்களே அறிந்து வந்தாள். அதை யாரிடமும் சொல்ல வேண்டாம் என்று சொல்லியிருந்தேன். அதனுல் அவள் உங்களிடம் கூட சொல்லவில்லே, பார்த்தீர்களா!

மீனு : நேற்றே அவள் என்னமோ 'சிறை வைத்திருக்கிறுர்கள்' என்று சொன்ன போதே நீ அதை மறைக்க, பேச்சை மாற்றினதை கண்டு கொண்டேனே—

(புன்சிரிப்பு)

சுந் : (கல கலவென்று சிரித்து) அம்மா! அம்மா! அந்த ஒரு வார்த்தையிலேயே கண்டு கொண்டீர்களே!

மீனு : அப்படி நீ எச்சரிக்கை செய்தது ரொம்ப நல்லதுதான்... நேற்று என்னுமோ நீ சொன்னதாக சின்ன டாக்டர் உன் மாமாவுடையகாரை எடுத்துக்கொண்டு போனுரே அதென்ன?

சுந் : அதுவும் வசந்தாவை மீட்க வேண்டிய காரியத்துக்காகத் தான்.

மீனு : வசந்தாவும் நல்லப்பரும் வந்து விடுவார்களா?

சுந் : வந்து விடுவார்கள் என்றுதான் நினைக்கிறேன்.

மீனு : போகட்டும் போ. நம்முடைய பூஜாபலன் அதுதான்..... நேற்று உன் மாமாவுக்கு வெகு சந்தோஷம். ராஜேஸ்வரிக்கு ஒரே குதூகலம்.

சுந் : எதற்காக?

மீனு : நீ மாமாவுக்கு 'கார்' வேணும் என்று கடிதம் அனுப்பினதற்காக.

சுந் : கடிதம் எழுதினதற்காக என்ன சந்தோஷம்?

மீனு ; மாமா விஷயத்தில் உன் மனம் கொஞ்சம் மாறியிருக்கிறது என்பதாகத்தான், வேறென்ன? ராஜேஸ்வரியும்.....

சுந் : சரி. அம்மா. நீங்கள் மறுபடியும் அந்தப் பல்லவியை ஆரம்பித்து விட்டீர்களா? கூர் கேட்டதற்கும் அதற்கும் துளி கூட சம்பந்தமில்லே.

மீனு : சரி. அப்புறம் உன்னிஷ்டம்.

காட்சி 55

இடம் : நாச்சிமுத்துவின் அந்தரங்க அறை
காலம் : மாலை

[நாச்சிமுத்தும் வேணுவும் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.]

நாச் : டிக்கெட்டுகள் எங்கே?

வேணு : எங்கிட்டேதான் இருக்குது.

(என்று மூன்று முதல் வகுப்பு டிக்கட்டுகளையும் ஒரு மூன்றாவது வகுப்பு டிக்கட்டையும் எடுத்துக் கொடுக்கிறான். வாங்கிப் பார்த்துவிட்டு நாச்சிமுத்து அவற்றைத் தன் 'மணிபர்ஸில்' வைத்துக் கொள்ளுகிறான்.)

நாச் : நான் இப்ப டிப்டி கலெக்டர் வீட்டு 'டீபார்ட்டிக்'குப் போகிறேன். எட்டு மணிக்குள் வந்துவிடுவேன். கொஞ்சம் அதிகம் ஆனாலும் ஆகும். நீ நல்லப்பரும் அவருடைய பெண்ணும் சாப்பிடுவதற்கு முன்னால் அங்கே போய்விட வேணும்... வைத்தியர் கொடுத்த மருந்து...ரெண்டு பொட்டணம் உன்னிடம் கொடுத்தேனே, அதெங்கே?...

வேணு : இருக்குதுங்க. பத்தரமா வச்சிருக்கிறேன்.

நாச் : ஆமாம். ஜாக்ரதை. அதை நீ உபயோகப் படுத்தப் போகிற மாதிரியில்தான் இருக்குது நம்முடைய பயணம். அதிலே நீ ஏமாந்ததையோ அப்புறம் என் மானமே போச்சு...

வேணு : தெரியுங்க. கொஞ்சங்கூடப் பெசகமாட்டேன்...ஆனால் அந்த மாதிரிப் பொட்டணம் இனனும் நாலு இருந்தாத் தேவலிங்க.

நாச் : என்னத்துக்கு?

வேணு : சோத்திலே போடத் தப்பிப் போச்சின்னா—தண்ணியிலே போடுவேன்—தண்ணியிலே போட்டதைக் குடிக்காட்டி பாலிலே போடுவேன்.

நாச் : ஓ! ஆமாமா...நீ ரொம்ப யோசனைக்காரன்...ஆனா அது சிட்டிகைக்கு மேலே உள்ளுக்குப் போனால் ஏதாவது கெடுதலானாலும் ஆகும். அதனால் நீ ரொம்ப ஜாக்ரதையாக கவனித்துக் கொள்ள வேணும். சோற்றிலோ, தண்ணீரிலோ,

பாலிலோ ஆளுக்கு ஒரு சிட்டிகை சாப்பிட்டுவிட்டால் போதும்; அதற்குமேல் கூடாது. தெரியுதா.

வேணு : நல்லாத் தெரியுதுங்க.

(காச்சிமுத்து அலமாரியைத் திறந்து மருந்து டப்பியை எடுத்து முன் தந்துள்ளதுபோல் நான்கு சிறு பொட்டணங்கள் மடித்துக் கொடுக்கிறான்.)

நாச் : இந்த மருந்தைச் சமையற்காரனுக்கோ வேலைக்காரிக்கோ அந்த கருப்பண்ணன் வீராசாமிக்கோ யாருக்கும் தெரியாமல் நீயே அவர்களுக்குப் பரிமாறுவதைக் கவனித்துக் கொள்ளுகிற மாதிரி சாப்பாட்டிலோ தண்ணீரிலோ கலந்து அதை அவர்கள் இரண்டு பேரும் சாப்பிட்டார்களா என்பதை நன்றாகக் கவனித்துக கொள்ள வேணும். ஆம்...மா...ம்... இதிலே த—ப்—பி—னி—யோ...

வேணு : தப்பவே மாட்டேன். முன்னே ஒரு பொண்ணுக்கு... ஆனா அது வேறே மாதிரி மருந்து—நாந்தானே காப்பியிலே கொடுத்தேன்.

நாச் : ஆமாமாம், அப்படித்தான்...அது தூக்கம் வரக் கொடுத்தது. இதிலே கொஞ்சம் மப்புதான்வரும். சொன்னபடி கேட்கச் செய்யும் சரி. எல்லாம் பார்த்துக்கொள்...அந்த வீராசாமி கருப்பண்ணன் இரண்டு பேரையும்கூட வீட்டுக்குப் போய் விடத் தயாராக இருக்கச் சொல்லு...போய் 'கார்' கொண்டு வரச் சொல், டிரைவரை.

வேணு : எனக்கு ஒரு யோசனே படுதுங்க.

நாச் : என்ன ?

வேணு : அந்தப் பெரியவரைக் குதிரை வண்டியிலே வச்சி ஊட்டுக்கு அனுப்பிப்பிட்டு அந்தம்மா—நீங்க—நானு மூணுபேரும் 'கார்'லியே ரயிலுக்குப் போனு என்னங்க ?

நாச் : ஐயோ ! அது வேண்டாம். காரிலே போய் இறங்கினால் எல்லாரும் கவனிப்பார்கள் ? காரைப் பார்த்தாலே நம்முடைய கார் என்று கண்டு கொள்வார்கள்.

வேணு : நம்ப 'ரப்பர் டயர்' வண்டிகளேக்கூட யாரும் அடையாளம் கண்டு கொள்வார்களே. புது வண்டிகள். வண்டிகள் மேலே நம்ப விலாசம் வேறே இருக்குது.

நாச் : ஓ ! ஆமாம். அப்ப அந்தப் புது ரப்பர் டயர் வண்டிகள் வேண்டாம். பழைய வண்டிகளேயே கட்டச் சொல்லு. நீ இப்

பவே அங்கே போய் இன்றைக்குப் பயணம் நிச்சயம் என்று நல்லப்பர் வீராசாமி கருப்பண்ணன் முதலியவர்களிடத்தில் சொல்லிவிட்டு வந்துவிடு. அப்புறம் வண்டியைக் கவனிக்கலாம்.

வேணு : ஆகுட்டுங்க.

(நாச்சிமுத்து அறையை விட்டு வெளியில் வந்து, முற்றத்தைக் கடந்து வீதியில் நிற்கிற தன்னுடைய வெகு விலையுயர்ந்த மோட்டார் வண்டியில் ஏறிக்கொண்டு டிப்டிகலெக்டர் வீட்டு விருந்துக்குப் போகிறான்.)

காட்சி 56

இடம் : ஆஸ்பத்திரி

காலம் : மாலை

[இன்ஸ்பெக்டர் ஆஸ்பத்திரிக்கு வருகிறார். டாக்டருடைய அனுமதியின் மேல் மாமா வீட்டிலிருந்து வந்த சிற்றுண்டிகளையும் காப்பியையும் சாப்பிட சுந்தரம் ஆரம்பிக்கிறான். உள்ளே வந்த இன்ஸ்பெக்டரைக் கண்டதும் சுந்தரம் எழுந்து வரவேற்கிறான்.]

சுந்: வாருங்கள். நல்ல சமயத்தில் வந்தீர்கள். கொஞ்சம் 'டிபன்' சாப்பிடுங்கள்.

இன்: எனக்கு விருந்து சாப்பிட நேரமில்லை. டிப்டி கலெக்டர் வீட்டில் எங்கள் சூப்ரண்டுக்காக நாச்சிமுத்து ஏற்பாடு செய்திருக்கிற விருந்துக்கே நான்போக நேரம் கிடைக்காது.

சுந்: டிப்டி கலெக்டர் வீட்டில்!...நாச்சிமுத்து என்ன விருந்து ஏற்பாடு செய்வது!

இன்: விருந்து நாச்சிமுத்து நடத்துகிற விருந்துதான். எங்கள் சூப்ரண்டையும் என்னையும் வசப்படுத்திக் கொள்ள அவன் செய்திருக்கிற சூழ்ச்சி—அது. டிப்டி கலெக்டர் நாச்சிமுத்துக்கு ரொம்ப வேண்டியவர். முன்னே இந்த ஊரில் தாசில்தாராக இருந்தவர். அவர் மூலமாக சூப்ரண்டுக்குச் சொல்லச் செய்து போலீசாருக்கு நல்ல பிள்ளையாகி விடலாம் என்பது அவனுடைய தந்திரம்...இந்த விருந்துக்கு நாச்சிமுத்தே என்னை நேரில் வந்து அழைத்தான். டிப்டி கலெக்டர் வீட்டில் சூப்ரண்டுக்கு நடக்கிற விருந்துக்கு இவன் என்ன வந்து அழைப்பது என்று அவன் கூப்பிடும்போதே எனக்குச் சந்தேகம்...சரி நேரமாகிறது. காளியம்மாள் எங்கே?

சுந்: காளியம்மாளும் என் தாயாரும் இன்னும் கொஞ்ச நேரத்தில் இங்கே வருவார்கள்.

இன்: காளியம்மாள் வந்தால் இங்கேயே இருக்கச் சொல்லுங்கள். நான் ஏழுமணி சுமாருக்கு இங்கு போலீஸ் 'மோட்டார் வானு'டன் வருகிறேன். குளத்தூருக்குக் காளியம்மாள் எங்களுடன் வரவேண்டும். காளியம்மாளிடம் இதைச் சொல்லத்தான் வந்தேன்.

சுந் : உங்கள் 'பிளான்' எப்படி ?

இன் : அதை இப்போது யாருக்கும் சொல்லக் கூடாது...நேர மாகிறது...நான் போய் வருகிறேன்...காளியம்மாளைத் தயா ராக இருக்கச் செய்யுங்கள்...உடனே உங்கள் மாமா வீட்டுக்கு ஆள் அனுப்பி காளியம்மாளை வரச் செய்யுங்கள்.

சுந் : காளியம்மாள் மட்டுமா ? நானும் உங்களுடன் வருகிறேனே ?

இன் : நீங்கள் எதற்கு ? டாக்டர் உங்களைப் போக அனுமதிக்க மாட்டார்.

சுந் : டாக்டரிடம் நான் கேட்டு அனுமதி பெற்றுக் கொள்ளு கிறேன் ஸார். ரொம்ப தயவு செய்து என்னையும் கூட்டிக் கொண்டு போங்கள்...வச்சுதாவுக்கு நீங்கள் விடுதலை கொடுப்பதை நான் கண்ணாரப் பார்க்க வேணும். எனக்கு அதே ஏக்கமாக இருக்கிறது. எப்படியாவது தயவு செய் யுங்கள். தடை சொல்லக் கூடாது. மிகவும் கெஞ்சி உங்க ளைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன் : (சிரித்துக் கொண்டு) ஆமாம் அது காதல் விஷயம். உங்க ளுக்கு ரொம்ப ஏக்கமாகத்தானிருக்கும். சரி.....டாக்டர் சம்ம தித்தால் எனக்கு ஒன்றும் ஆட்சேபணையில்லை.....ஆனால் போலீஸ் வானில் நெறுக்கிக் கொண்டு போனால் உங்கள் புண் அதிர்ந்து கொள்ளுமே ?

சுந் : நீங்களும், நானும், காளியம்மாளும் எங்கள் மாமா காரில் போகலாம். அது புதுக் கார். அலுங்காமல் போகிறதாம்.

இன் : நான் உங்களோடு 'ப்ளெஷர்' சவாரிக்கு ஆசைப்பட்டால் என் வேலை கெட்டுப் போகும். நான் என்னுடைய ஜவான்க ளோடு கூடவே இருக்க வேணும். நீங்களும் காளியம்மாளும் வேணுமானால் உங்கள் மாமா காரில் எங்கள் வான் வண்டி யோடு வந்து நான் சொல்லுகிற இடத்தில் காரிலேயே இருங் கள். நான் வந்து காளியம்மாளைக் கூட்டிக் கொண்டு போகும் போது நீங்களும் வரலாம்.....நான் ஏழு மணிக்குள் வந்து விடுகிறேன்.

(இன்ஸ்பெக்டர் புறப்படுகிறார். அப்போது மீனாட்சியம்மாளும் காளியம்மாளும் உள்ளே வருகிறார்கள். இன்ஸ்பெக்டரைக் கண்டு வணங்குகிறார்கள்.)

இன் : காளியம்மா ! நாம் பேசிக்கொண்ட பிளானை யாரிடத்தி லும்.....சுந்தரத்திடம்கூட—சொல்லிவிடக் கூடாது.....

காளி : சொல்ல மாட்டேன்.....சொல்லப் படாதது இன்னு அவரும் கேக்க மாட்டாரு.

(சிரிக்கிறாள். எல்லோரும் சிரிக்கிறார்கள்.)

இன் : காளியம்மா ! நீங்கள் இங்கேயே இருக்கவேணும். நான் வந்து கூட்டிக் கொண்டு போகிறேன்.

(இன்ஸ்பெக்டர் போய்விடுகிறார்.)

சுந் : (தாயாரைப் பார்த்து) அம்மா, நீங்கள் இப்போது மாமா காரில்தானே வந்தீர்கள் ?

மீனு : ஆமாம்.

சுந் : இன்னும் கொஞ்ச நேரம் இருந்துவிட்டு, நீங்கள் வீட்டுக்குப் போய் இறங்கிக் கொண்டு காரை இங்கே அனுப்புங்கள். நானும் காளியம்மாளும் கொஞ்சம் வெளியே போய்வர வேணும்.

மீனு : நீ இப்ப வெளியே போகலாமா? டாக்டர் ஏதாவது சொல்ல மாட்டாரா ?

சுந் : டாக்டர் ஒன்றும் சொல்ல மாட்டார். கொஞ்ச தூரந்தான். நோகாமல் போய்வர மாமா கார்தான் நல்லது. மாமாவிடம் சொல்லி அனுமதி கேட்டுக்கொண்டு அனுப்புங்கள்.

மீனு : மாமா கிட்ட அனுமதி கேட்கவா வேணும். அவன்தான் இந்தக் காரையும் இதைப்போல எத்தனை கார் வேணுமானாலும் உனக்குத் தரக் காத்திருக்கிறானே.

சுந் : அதுதான் தெரியுமே. இப்போதைக்கு இந்தக் காரைக் கொண்டுபோக அவரிடம் சொல்ல வேண்டாமா ?

மீனு : நான் சொல்லிக் கொள்ளுகிறேன். நீ மட்டும் டாக்டரைக் கேட்டுக் கொண்டு அவர் போகச் சொன்னால் போய் வா.

சுந் : அப்படியே செய்கிறேனம்மா.

காட்சி 57

இடம் : போலீஸ் கச்சேரி

காலம் : மாலை

[பெரிய இன்ஸ்பெக்டரும் சப் இன்ஸ்பெக்டரும் போலீஸ் ஸ்டேஷனில் ஒரு அறையில் உட்கார்ந்து வெகு ரகசியமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அறையின் கதவு உள்ளே தாழிடப்பட்டிருக்கிறது.]

பெ. இ : நான் காலையில் குறித்துக் கொடுத்தபடி எல்லாக் காரியங்களையும் முடித்து விட்டீர்களா?

சப் : அநேகமாக முடித்துவிட்டேன். 'சிவ் ஸார்ஜெண்ட்' ஜோன்ஸ் துரையே இங்கே வருகிறார். அவரும் அவருடன் பொறுக்கியெடுத்த பதினைந்து 'ரிஸர்வ்' ஜவான்களும் ஒரு 'வான்' வண்டியில் சரியாக ஆறு மூப்பதுக்கு இங்கே வருவார்கள்.

பெ. இ : மற்ற நான்கு வான்களையும் குளத்தூருக்குப் போகிற வெவ்வேறு பாதைகளில் போகச் சொல்லியிருக்கிறதா?

சப் : ஆம், வெவ்வேறு பாதைகளில் போய் நாச்சிமுத்துவின் வீட்டுக்கு வெகு தூரத்திலேயே ஜன சந்தடியில்லாத இடங்களில் வண்டிகளை நிறுத்திவிட்டு ஒவ்வொருவராக இறங்கிப் போய் அங்கங்கே மறைந்திருக்கச் சொல்லியிருக்கிறது.

பெ. இ : மறைந்திருந்து?

சப் : இருட்டின உடன் ஒவ்வொருவராக வந்து வீட்டுக்குப் பக்கமாகச் சூழ்ந்து கொள்ள வேணும் என்று கட்டளையிடப் பட்டிருக்கிறது.

பெ. இ : நாச்சிமுத்துவின் மோட்டார் வண்டி 'டூ பார்ட்டி'யிலிருந்து திரும்பி அவனுடைய வீட்டுக்கு வந்து, அவன் காரிலிருந்து இறங்கி வீட்டுக்குள் போவதை அறிந்து கொண்ட பிறகுதான் வீட்டை நெருங்க வேணும் என்பதைச் சொல்லியிருக்கிறீர்களா?

சப் : சொல்லியிருக்கிறேன்.

பெ. இ : நாச்சிமுத்து டீ பார்ட்டியிலிருந்து வீட்டுக்குப் போகிற பாதையில் ஜவான்கள் யாரும் கண்ணுக்குப் படும்படியாக இருந்துவிடக் கூடாது என்பதையும் சொன்னீர்களா ?

சப் : சொன்னேன்.

பெ. இ : சொம்ப சரி.....இப்போது (கைகடியாரத்தைப் பார்த்து) மணி நாலு-பத்துதான். இன்னும் டீ பார்ட்டி ஆரம்பமாக இருபது நிமிஷம் இருக்கிறது. நீங்கள்—டீ பார்ட்டிக்கு விருந்து சாப்பிடப் போகிறவர்கள் போல் அங்கே உடனே போக வேணும். போலீஸ் உடையைக் களைந்து விட்டு சாதாரண உடையில் போகவேண்டும்.....நாச்சிமுத்து டீ பார்ட்டிக்கு வந்த உடனே நீங்கள் வெகு வேகமாக ஒரு காரியம் செய்ய வேணும்.

சப் : என்ன ?

பெ. இ : டிப்டி கலெக்டர் வீட்டில் நீங்கள் உள்ளே போய்விடாமல் வெளியிலேயே இருக்க வேணும். நாச்சிமுத்து டீ பார்ட்டிக்கு வந்து அவன் உள்ளே போன உடனே நீங்கள் யாருக்கும் தெரியாதபடி அங்கிருந்து நழுவிவிட வேணும். நழுவி, நம் முடைய காரில் வேகமாகக் குளத்தூருக்குப் போக வேண்டும்.....என்ன ?

சப் : சரி.

பெ. இ : அங்கே நாச்சிமுத்துவின் வீடு தெரியுமல்லவா ?

சப் : தெரியும்.

பெ. இ : நாச்சிமுத்து வீட்டில் அவனுடைய அந்தரங்கக் காரிய தரிசி 'வேணு' என்பவன் இருப்பான்.

சப் : வேணுவா ?

பெ. இ : ஆமாம் 'வேணு' எழுதிக் கொள்ளுங்கள்.....மறந்து போகும்.

(சப் இன்ஸ்பெக்டர் 'வேணு' என்ற பெயரைக் குறித்துக் கொள்கிறார்.)

சப் : சரி.

பெ. இ : அந்த வேணுவை அவசரமாக அவனுடைய எஜமான் நாச்சிமுத்து கூட்டிக்கொண்டு வரச் சொன்னதாகக் கூப்பிடுங்கள். அவன் வருவான். உங்கள் காரிலேயே அவனை நேராக இங்கே ஸ்டேஷனுக்குக் கொண்டு வந்து விடுங்கள்.

சப் : கூப்பிட்ட உடனே அவன் வந்து விடுவானா ?

பெ. இ : ஆம் சரியான கேள்வி. அவன் வர மறுக்கலாம். அதற்காக அவன் மறுக்க முடியாதபடி ஒரு தந்திரம் செய்ய வேணும்.

சப் : எனன தந்திரம் ?

பெ. இ : முதலில் நீங்கள் வேணுவைக் கண்டு பிடியுங்கள். எங்கேயாவது போயிருந்தாலும் அங்கே போய் அவனைக் கண்டு பிடியுங்கள். அவனுடன் வேறு யாராவது இருந்தால் அவர்களுக்கு முன்னால் ஒன்றும் பேசாமல் அவனை மட்டும் ஒரு ரகசியம் சொல்ல வந்ததுபோல் தனியாக உங்கள் மோட்டாருக்குப் பக்கமாக அழைத்துக் கொண்டு போங்கள்— தெரியுதா ?

சப் : தெரியுது.

பெ. இ : அவனிடத்தில் காதோடு "நாச்சிமுத்து டீ பார்ட்டிக்குப் போகும் வழியில் அவருடைய மோட்டார் பள்ளத்தில் சாய்ந்து விட்டது. நாச்சிமுத்துக்குக் கொஞ்சம் அடிபட்டு விட்டது. வண்டியும் கொஞ்சம் கெட்டுவிட்டது. பாண்டிநாதத்துக்குப் பக்கத்தில் ஒரு மரத்தடியில் நாச்சிமுத்து மயக்கமாகப் படுத்திருக்கிறார். நானும் டீ பார்ட்டிக்குப் போக இந்தக் காரில் போனேன். அவருடைய மோட்டார் சாய்ந்து அவர் மரத்தடியில் இருப்பதைக் கண்டு என் வண்டியை நிறுத்தி போய்ப் பார்த்தேன். அவர் எனக்கு ரொம்பப் பழக்கமானவர். அவர் உடனே போய் உங்களைக் கையோடு கூட்டிக் கொண்டு வரச் சொன்னார். ஏறுங்கள் போய் அவரையும் கூட்டிக் கொண்டு இதே காரில் வந்து விடுவோம்" என்ற தினுசில் நீங்கள் பேச வேண்டும். அவன் மறுக்கவே மாட்டான்.

சப் : ரொமப நல்ல யுக்தி...இதைச் சொன்னால் அவன் மறுக்கவே மாட்டான்.

பெ. இ : சரி, புறப்படுங்கள். முதலில் உங்கள் போலீஸ் உடுப்பை மாற்றிக் கொண்டு டீ பார்ட்டிக்குப் போங்கள்.

சப் : நான் திரும்பி வருவதற்குள் ஸார்ஜெண்ட் வந்து விட்டால் ?

பெ இ : வந்தால் வரட்டும். நீங்கள் வந்த பிறகுதான் மற்ற யோசனைகள். குளத்தூர் ஒன்பது மைல்தானே. நீங்கள் ஸார்ஜெண்ட் வருவதற்குள் இங்கே வந்துவிடலாம்.

(சப்இன்ஸ்பெக்டர் போகிறார்.)

காட்சி 58

இடம்: டிப்டி கலெக்டர் பங்களா

காலம்: மாலை

[போலீஸ் சூப்ரண்டை சுந்தோஷப்படுத்த வென்றே டிப்டி கலெக்டர் மூலமாக நாச்சிமுத்து ஏற்பாடு செய்த டீ பார்ட்டிக்கு அழைக்கப்பட்டிருந்த முக்யமான அதிகாரிகளும் கனவான்களும் ஒவ்வொருவராக வருகிறார்கள்.

டிப்டி கலெக்டர் வீட்டுக்கு முன்னால் மகர தோரணங்கள் கட்டப்பட்ட வாசல் பந்தலுக்கருகில் கூட்டம் ஏராளமாகக் கிற்கிறது. 'டீபார்ட்டியோடு' 'மோகனசுந்தரி' என்ற வெகு பிரபலமான யௌவனப் பெண்மணியின் பரத நாட்டியக் கச்சேரியும் ஏற்பாடாகியிருந்தபடியால், நாட்டியத்தை மட்டுமாவது பார்க்கவென்று அழைப்பில்லாத ஜனங்களும் வந்து குவிகிறார்கள்; நாட்டியம் பார்க்க உள்ளே போக இடம் கிடைக்காவிட்டாலும் வெளியே நின்று கொண்டிருந்து 'மோகனசுந்தரி' வரும்போது அவளையாவது பார்க்கலாமென்று ஜனத்திரள் வாசலில் நெருக்கியடித்துக் கொண்டிருக்கிறது. அந்தக் கூட்டத்தோடு ஒருவராக சப்இன்ஸ்பெக்டர் சாதாரண உடையில் இடிபட்டுக் கொண்டிருக்கிறார்.

நாச்சிமுத்துவின் கார் வருகிறது. சப்இன்ஸ்பெக்டர் ஜனங்களைத் தள்ளிக் கொண்டு காரிலிருந்து இறங்குகிறது யாரென்று கவனிக்கிறார். முப்பத்தைந்து வயதுள்ள நாச்சிமுத்து வெகு ஆடம்பரமான உடையில் கெம்பீரமான தோற்றத்துடன் மோட்டாரிலிருந்து இறங்குகிறான். அவனை டிப்டிகலெக்டரே வாசலிலேயே வரவேற்று உள்ளே கூட்டிக்கொண்டு போகிறார். நாச்சிமுத்து உள்ளே போனதும் சப்இன்ஸ்பெக்டர் ஜனக் கூட்டத்தை விட்டு அவர் வந்த மோட்டார் வண்டிக்கு வந்து அதில் ஏறிக் கொள்கிறார். டிரைவரிடம் ரகசியமாகக் குளத்தூருக்கு ஓட்டச் சொல்லுகிறார். வண்டி போகிறது.

டிப்டி கலெக்டரின் பங்களாவின் காம்பவுண்டில் நவீனமுறையில் மேஜை நாற்காலி போட்ட 'டீபார்ட்டி' நடக்கிறது. மேஜைகளின்மீது புஷ்பச் செடிகளும் மிக விலையுயர்ந்த கோப்பைகளும் தட்டுகளும் காணப்படுகின்றன. பரிமாறுதல் நடக்கிறது. விருந்தினர் உண்ணுகிறார்கள். மற்றவர்களெல்லாம் விருந்துண்பதைக் கவனித்துக் கொள்ளும் முறையில் டிப்டி கலெக்டரும் நாச்சிமுத்துவும் அங்கங்கே போய் விசாரிப்பு செய்கிறார்கள். அப்படியே இருவரும் ஒரு ஒதுக்கான இடத்துக்குப் போய்]

டி. க : இன்று காலையில் சூப்ரண்டோடு ஒரு மணி நேரம் உங்களைப்பற்றி பேசிக் கொண்டிருந்தேன்.

நாச் : சூப்ரண்ட் என்ன சொன்னார்?

டி. க : அவர் ரொம்ப நல்லவர். உங்களுக்கு வேண்டிய உதவி செய்ய அவர் தயார்...ஆனால்...

நாச் : 'ஆனால்' என்பதற்கே இடமிருக்கக் கூடாது. தாங்கள் தான் எப்படியாவது நான் சொன்ன விஷயங்களுக்கெல்லாம் அவருடைய ஒத்தாசை எனக்குக் கிடைக்கும்படிச் செய்ய வேண்டும்.

டி. க :அதற்காகத்தான் அவரோடு பேசினேன். மறுபடியும் பேசப் போகிறேன். அவர்யார் தெரியுமா?...அவருடைய மனைவி என் மனைவிக்கு தங்கை.

நாச் : அப்படியா! அது என்னுடைய நல்ல காலம்தான்.

டி. க :அதிலொன்றும் தடையில்லை. ஆனால் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் தான் கொஞ்சம் உங்கள் விஷயத்தில் தாக்ஷண்யமில்லாமல் இருப்பார் போல் தோன்றுகிறதாக சூப்ரண்ட் சொன்னார்.

நாச் : அப்படி ஒன்றுமில்லை. சர்க்கிள் இன்ஸ்பெக்டரை நான் பார்த்துப் பேசிவிட்டேன். அவர் என் விஷயத்தில் இனிமேல் நிர்தாக்ஷண்யமாக இருக்கமாட்டார்.

டி. க : அவரை நீங்கள் பார்த்தாச்சா?

நாச் : பார்த்தேன், மிகவும் அன்பாகவும் மரியாதையாகவும் வரவேற்றுப் பேசினார். அவருக்கு என் ஞாபகார்த்தமாக ஒரு அன்பளிப்பும் தந்தேன். சந்தோஷமாக வாங்கிக் கொண்டார்.

டி. க : ரொம்ப நல்லது. பெரிய இன்ஸ்பெக்டருக்காகத்தான் சூப்ரண்ட் கொஞ்சம் யோசனை செய்தார். இனிமேல் யோசிக்க வேண்டியதில்லை..... நாட்டியக் கச்சேரிக்குப் பிறகு ராத்திரி சாப்பாடு சூப்ரண்டுக்கு என் வீட்டில் தான்—அவரும் நானும் மட்டும் தான். நீங்களும் இருங்கள், அவருடன் பேசுவோம்.

நாச் : நான் ஒரு கல்யாண விஷயமாகக் கொஞ்சம் சீக்கிரமாகப் போக வேண்டியிருக்கிறது. நாட்டியக் கச்சேரி முடிகிற வரைக்கும் கூட இருக்க முடியாது. வீட்டில் சில விருந்தாளிகளை இருக்கச் சொல்லிவிட்டு வந்தேன்.

டி. க : சூப்ரண்டும் எட்டேகால் மணிக்கு எங்கேயோ போகவேண்டும் என்றார். நீங்கள் அதுவரைக்குமாவது இருங்கள். சாப்பாட்டுக்கு முன்னால் உங்களை அறிமுகப் படுத்துகிறேன். நீங்கள் கொஞ்ச நேரம் பேசிவிட்டுப் போய்விடலாம். பிறகு அவருடன் விவரமாக நான் பேசிக் கொள்ளுகிறேன்.

நாச் : சரி எட்டரை மணி வரைக்கும் இருக்கிறேன்.

(இதற்குள் 'டீபார்ட்டி' முடிந்து நாட்டியக்கச்சேரி ஆரம்பமாகிறது. விருந்து நடந்த இடத்துக்குப் பக்கத்தில் அமைக்கப்பட்டிருந்த அழகான மேடையில் மோகன சுந்தரி பரதநாட்டியம் செய்கிறாள்.

காட்சி 59

இடம்: போலீஸ் ஸ்டேஷன்

காலம்: மாலை ஆறு மணி

(குளத்தூருக்குப் போன சப்இன்ஸ்பெக்டர் மோட்டார் கார் வருகிறது. போலீஸ் ஸ்டேஷனுக்கருகில் நிற்கிறது. வண்டியிலிருந்து முதலில் சப்இன்ஸ்பெக்டர் இறங்குகிறார். அவருக்குப் பின் 'வேணு' இறங்குகிறான். இருவரும் கச்சேரிக்குள் போகிறார்கள். அங்கே பெரிய இன்ஸ்பெக்டர் மேஜைக் கருகில் நாற்காலியில் உட்கார்ந்திருக்கிறார்.)

சப் : (சல்யூட் செய்து) 'வேணு' வந்திருக்கிறார்.
(வேணுவைச் சுட்டிக் காட்டி)

இவர் தான் வேணு.

(வேணு சுமார் 30 வயதுள்ளவன். நாகரீகமான உடை தரித்து வாட்ட சாட்டமாக இருப்பான்)

பெ. இ : 'வெரி க்ளாட்' நீங்கள் தானே நம்ம நாச்சிமுத்து அவர்களுடைய காரியஸ்தர் வேணு என்பவர்?

(அவசரமாக நாச்சிமுத்து மோட்டார் பள்ளத்தில் விழுந்து விட்டதென்று அழைத்துக் கொண்டு வரச் சொன்னார் என்று கூட்டிக் கொண்டு வந்து போலீஸ் கச்சேரியில் பெரிய இன்ஸ்பெக்டருக்கு முன்னால் நிறுத்தி விட்டதில் வேணு திடுக்கிட்டு மிகவும் திகைப்படைந்தவனாக நாலாபக்கமும் பார்த்து விழித்துக் கொண்டிருக்கிறான்.)

வேணு : ஆமாம்.....அவர் எங்கே ?

பெ. இ : யார், உங்கள் எஜமான் நாச்சிமுத்துவா?.....அவர் டீபார்ட்டியில் இருக்கிறார். சீக்கிரம் அவரும் இங்கே வந்துவிடுவார்.....அவரைக் கூட்டிக்கொண்டு வரச்சொல்லுகிறேன்... ...டேய் ஜமால்!.....

(உடனே அதுவரையிலும் மறைவிலிருந்த வெகு திடகாத்திரமான இரண்டு போலீஸ் ஜவான்கள் மின்னல் வேகத்தில் வருகிறார்கள். இரண்டு ஜவான்களும் வேணுவின் இரண்டு கைகளையும் ஆளுக்கொரு கையாக நறுக்கென்று பிடித்துக் கொளளுகிறார்கள். அவர்களுக்குப் பின்னால் வந்த இன்னொரு ஜவான் வேணுவின் கைகளுக்கு விலங்கு போடுகிறான்.

வேணு . ஐயோ! இதென்ன அநியாயம்?

(என்று விலங்கு போட இடங்கொடுக்காமல் கைகளை விடுவித்துக் கொள்ள கொஞ்சம் போராடுகிறான். கடைசியில் விலங்குகள் பூட்டப்பட்டு விடுகின்றன.)

பெ. இ : (வேணுவைப் பார்த்து) உன் எஜமான் நாச்சிமுத்துவுடன் நீயும் கொளும்புக்குப் போகிறாயாமே?

வேணு : கொளும்புக்கா! நானு இல்லியே. ஆர் சொன்னது?

பெ. இ : நீயும் பெரியசாமி கங்காணியும் கொளும்புக்கு மூன்று முதல் வகுப்பு டிக்கட்டும் ஒரு மூன்றும் வகுப்பு டிக்கட்டும் வாங்கியிருக்கிறீர்களே, அது யார் யாருக்கு?

வேணு : நான் வாங்கிலியே.....எனக்குத் தெரியாதே. நான் சும்மா ரயில் ஸ்டேஷனுக்கு கங்காணி கூடப் போனேன். அவர் தான் ஸ்டேஷன் மாஸ்டர்கிட்டப் போய் யாருக்கோ டிக்கட் வாங்கினார்.

பெ. இ : டேய் தோண்ணூத்தேழு! அந்த கதவைக் மூடு...

(வாச்சல் கதவைக் காட்டுகிறார், ஜவான் அந்தக் கதவை மூடுகிறான்)

இவனைச் சோதனை செய்யுங்கள்.

(இரண்டு ஜவான்கள் வேணுவின் சட்டைப் பைகளைச் சோதிக்கிறார்கள். அவற்றில் சில காகிதங்களும் ஒரு மணிபர்சும், இன்னும் இருநூதெல்லாம் எடுத்து ஜவான்கள் மேஜையின் மீது வைக்கிறார்கள்.)

பெ. இ : இடுப்பிலும் மடியிலும் பாருங்கள்.

(இடுப்பில் ஒரு தோல் பெல்ட் இறுக போடப்பட்டு இருக்கிறது. அந்த பெல்ட்டில் ஒரு ரிவால்வர் சொறுகப்பட்டிருக்கிறது. அதை ஒரு ஜவான் எடுத்து இன்ஸ்பெக்டரிடம் தருகிறான்.)

பெ. இ: இந்த ரிவால்வருக்கு 'லைஸென்ஸ்' வாங்கியிருக்கிறாயாப்பா?

(வேணு விழிக்கிறான்)

பெ. இ : (ஜவான்களிடம்) பெல்ட்டை அவிழ்த்து இன்னும் மடியில் என்ன இருக்கிறதென்று பாருங்கள்.

(பெல்ட்டை அவிழ்க்கிறார்கள். அந்த பெல்ட்டின் இருபுறத்திலும் இரண்டு பைகள் இருக்கின்றன. அவற்றில் ஒன்றில் ஏராளமான நோட்டுகளும் மற்றொன்றில் ஆறு சிறு பொட்டலங்களும் இருக்கின்றன. அவைகளை மேஜையின் மீது வைக்கிறார்கள். வேஷ்டியின் மடியில் ஒன்றுமில்லை என்று சொல்லுகிறார்கள்.

பெ. இ. : அரணுக்கயிற்றில் ஏதாவது இருக்கிறதா பாருங்கள்.

(வேணு வேஷ்டிக்குக்கீழ் ஒரு குட்டையான டிராயர் சல்லடம் கட்டியிருந்தான். அந்த சல்லடத்தைச் சுற்றிலும் தடவி பார்த்ததில் தொப்புளுக்குக்கீழ் என்னமோ கெட்டியாகத் தட்டுப்பட்டது. அது அரைஞாண் கயிற்றுக்கும் வயிற்றுக்கும் இடையில் சொறுகப்பட்டு வயிற்றோடு அழுந்தியிருந்தது. அதை ஜவான் பிடித்து இழுத்தான். அது ஒரு சிறு தோல் பை. அந்தப் பை ஒரு கயிற்றினால் அரைஞாணில் கட்டப் பட்டிருந்தது அந்தக் கயிற்றை அறுத்து ஜவான் அந்தத் தோல் பையை இன்ஸ்பெக்டரிடம தருகிறான். இன்ஸ்பெக்டர் அதை வாங்கி நசுக்கிப் பார்த்து விட்டு)

பெ. இ:ஆ!...இதற்காகத்தான் வேணுவை இங்கே அழைத்துக் கொண்டு வந்தது.

(என்று சொல்லிக் கொண்டே அந்தத் தோல் பைக்குள் இருந்த ஒரு ஆறு அங்குலம் நீளமுள்ள சாவியை எடுத்து முகத்துக்கு நேராக உயர்த்திப் பிடித்துத் திருப்பித் திருப்பிப் பார்த்து விட்டு)

பெ. இ : இதுதானே உங்கள் ரகசிய வீட்டுக்குப் போகிற வழியின் சாவி?

(வேணு பதில் பேசாமல் நடுங்கிக் கொண்டு விழிக்கிறான்)

பெ. இ : ஜமால்! கொண்டு போ லாக்கப்புக்கு. லாக்கப் செய்து விட்டு நீயும் நூத்தி நாலும் நான் மறுபடியும் வரும் வரைக்கும் அங்கேயே இருங்கள்.

(இரண்டு ஜவான்கள் வேணுவை கூட்டிக்கொண்டு போய் கொட்டறையில் அடைத்துப் பூட்டுகிறார்கள். வேணுவை கொட்டறைக்குக் கொண்டு போனபின் பெரிய இன்ஸ்பெக்டர் கொட்டறைக்குப் போகும் கதவைப் பூட்டிக்கொள்ளச் சொல்லி சப் இன்ஸ்பெக்டருக்கு உத்தரவிடுகிறார். சப் இன்ஸ்பெக்டர் பூட்டுகிறார். சாவியை இன்ஸ்பெக்டர் வாங்கிக் கொள்ளுகிறார். இருவரும் மேல்மாடிக்குப் போகிறார்கள். அங்கேதான் பெரிய இன்ஸ்பெக்டருடைய 'ஆபீஸும்: அந்த அறையில் கதவைத் தாழிட்டுக்கொண்டு பெரிய இன்ஸ்பெக்டர் தன்னுடைய ஆபீஸ் நாற்காலியில் அமர்ந்து இன்னொரு நாற்காலியை பக்கத்தில் போடச் செய்து சப் இன்ஸ்பெக்டரை உட்காரச்சொல்லுகிறார். இருவரும் பக்கம் பக்கமாக இருந்து)

பெ. இ : (வெகு ரகசியமாக) நாச்சிமுத்துக்கு உடனே தகவல் கொடுத்து விடக்கூடிய ஜவான்களும் ஹெட்கான்ஸ்டபிளும் இந்த வேணுவை நாம் 'லாக்கப்' செய்திருப்பதை அறிந்து விடக்கூடாது. அதற்காகத்தான் லாக்கப்புக்குப் போகிற வழியின் கதவைப் பூட்டச் சொன்னேன். உடனே நீங்கள் செய்ய வேண்டிய வெகு முக்யமான வேலை இருக்கிறது.

சப் : என்ன சொல்லுங்கள்.

பெ. இ : நீங்கள் உங்கள் 'யூனிபாரம்' உடைகளைப் போட்டுக் கொண்டு உடனே 'டபார்ட்டிக்குப்' போக வேணும்...நாச்சி முத்து அங்கிருந்து அவனுடைய வீட்டுக்குப் போக வண்டி யேறிப் போனவுடன் நீங்கள் இங்கே வந்து எனக்குத் தகவல் கொடுக்க வேணும். அது தெரிந்த பிறகு தான் நாம் இங்கி ருந்து புறப்பட வேணும்...இந்த வேணு விஷயத்தை இப் போது யாருக்கும்...சூப்ரண்டிடத்தில் கூட ...சொல்லி விடக் கூடாது. ஜாக்ரதை.

சப் : அப்படியே ஆகட்டும்.

(சப் இன்ஸ்பெக்டர் போகிறார்.)

காட்சி 60

இடம் : ரிஸர்வ் போலீஸ் தலைமைக் காரியாலயம்

காலம் : மாலை 5-30 மணி

[பெரிய இன்ஸ்பெக்டருடைய உத்தரவினால் சப் இன்ஸ்பெக்டர் 'ரிஸர்வு' போலீஸ் அதிகாரிகளுடன் பேசி ஏற்பாடாகியிருந்த படி 'ரிஸர்வு' போலீசார் குளத்தூருக்குப் போக மோட்டார் வான்களில் வந்து ஏறுகிறார்கள். ஒவ்வொரு வண்டியாக துப்பாக்கி தாங்கிய 'ரிஸர்வ்' ஜவான்களுடன் புறப்படுகிறது

வண்டிகள் வெவ்வேறு திக்குகளில் போகின்றன. குளத்தூருக்குப் போகிற வெவ்வேறு தடங்களில் நாச்சிமுத்துவின் வீட்டுக்கு வெகு தூரத்திலேயே வான்கள் நிறுத்தப்பட்டு ஜவான்கள் ஒவ்வொருவராக இறங்கிச் சென்று வெவ்வேறு இடங்களில் பதுங்குகிறார்கள்.

காட்சி 61

இடம் : டிப்டி கலெக்டர் வீட்டுக்கு முன்னால்

காலம்: இரவு 9 மணி

காட்டியக் கச்சேரியிலிருந்து போலீஸ் சூப்ரண்டும் டிப்டி கலெக்டரும் நாச்சிமுத்தும் கக்சேரி நடந்து கொண்டிருக்கும் போதே வெளியேறுகிறார்கள் மூருரும் டிப்டி கலெக்டர் வீட்டுக்குள் போகிறார்கள். டிப்டி கலெக்டர் நாச்சிமுத்துவை போலீஸ் சூப்ரண்டுக்கு அறிமுகப்படுத்த, அவருடன் பேசிக் கொண்டிருந்து விட்டு நாச்சிமுத்து வெளியில் வருகிறுன். நாச்சிமுத்துவின் அழகான மோட்டார்கார் வாசலுக்கு முன்னால் வந்து நிறுத்தப்படுகிறது.

நாச்சிமுத்துவைக் கவனித்துக் கொண்டே சப்இன்ஸ்பெக்டரும் அங்கே காணப்படுகிறார். நாச்சிமுத்து தன் மோட்டாரில் ஏறுகிறுன். வண்டி போகிறது.

உடனே சப் இன்ஸ்பெக்டர் அவர் வந்த மோட்டாரில் ஏறிக் கொள்ளுகிறார். வண்டி போகிறது.

காட்சி 62

இடம்: போலீஸ் ஸ்டேஷன்

காலம்: இரவு 9—1

[சப் இன்ஸ்பெக்டர் மோட்டார் போலீஸ் கச்சேரிக்கு வருகிறது சப் இன்ஸ்பெக்டர் இறங்குகிறார். அங்கே ஏற்கனவே ஜோன்ஸ்துரையும் பதினைந்து 'ரிஸர்வ்' போலீஸ் ஜவான்களும் வந்த மோட்டார் 'வான்' நின்று கொண்டிருக்கிறது. சப் இன்ஸ்பெக்டர் உள்ளே போகிறார். அங்கே பெரிய இன்ஸ்பெக்டரும் 'ஷெட்ஸார்ஜன்ட்' ஜோன்ஸ் துரையும் மட்டும் இருக்கிறார்கள்.]

சப்: (சல்யூட் செய்து) அவர் புறப்பட்டு போய் விட்டார்.

பெ. இ; எவ்வளவு நேரமாச்சு?

சப்: இப்போதுதான்...ஐந்தாறு நிமிஷம் இருக்கும்.

(பெரிய இன்ஸ்பெக்டர் லாக்கப்புக்குப் போகிற வழியின் கதவு பூட்டப்பட்டிருந்ததைத் தானே திறந்து இரண்டெட்டு உள்ளே போய் "ஜமால்" என்று கூப்பிடுகிறார். ஜமால் சாயபு வருகிறான்.)

பெ. இ: (தணிந்த குரலில்) இந்தா, இந்த சாவியை வைத்துக் கொள். நீ இதைப் பூட்டிக்கொண்டு போய் சாப்பிட்டுவிட்டு கைதிக்கும் இன்னொரு ஜவானுக்கும் சாப்பாடு கொண்டு வந்து போட்டும் பார்த்துக் கொள். நான் மறுபடியும் வருகிறேன். ஜாக்ரதை.

[பெரிய இன்ஸ்பெக்டர் போகிறார். ஜோன்ஸ் துரையையும் சப் இன்ஸ்பெக்டரையும் கூட்டிக்கொண்டு 'ரிஸர்வ்' மோட்டார் வானில் மூவரும் ஏறுகிறார்கள். வண்டி ஆஸ்பத்திரிக்குப் போகிறது.]

காட்சி 63

இடம்: ஆஸ்பத்திரி

காலம்: இரவு 9-20

[காளியம்மாளும் சுந்தரமும் இன்ஸ்பெக்டரை எதிர்பார்த்துக் கொண்டு காத்திருக்கிறார்கள். சுந்தரத்தின் மாமாவுடைய 'மோட்டார் கார்' வாசலில் நிற்கிறது. சுந்தரம் அவனுடைய வலது அள்ளையில் தோளோடு சேர்த்து மார்பையும் சுற்றி கட்டப்பட்டிருந்த 'பேண்டேஜோடு' காணப்படுகிறான். தரையில்சுவரோரமாகக் காளியம்மாள் உட்கார்ந்திருக்கிறாள்

பெரிய இன்ஸ்பெக்டர் மட்டும் வண்டியிலிருந்து உள்ளே வருகிறார். சுந்தரம் வணங்குகிறான். காளியம்மாள் எழுந்து கும்பிடுகிறாள்.

பெ. இ: காளியம்மா! புயப்படுங்கள் (என்று சுந்தரத்தை ஏற இறங்க பார்த்து) என்ன இந்த வேஷத்தோடு நீங்களும் வரத் தான் வேண்டுமா?

சுந்: (இரண்டு கரங்களையும் கூப்பி) தயவு செய்து தடை சொல் லாமல் நானும் வர அனுமதிக்க வேணும.

(என்று அவசரமாகத் தன் சட்டையை மாட்டிக்கொள்ளுகிறான்)

பெ. இ: சரி. உங்கள் வண்டி எங்கள் வண்டிக்குக் கொஞ்ச தூரத்திலே தொடர்ந்து வரட்டும்.

[பெரிய இன்ஸ்பெக்டர் போய் வண்டியில் ஏறிக் கொள்ளுகிறார். வண்டி போகிறது.

சுந்தரமும் காளியம்மாளும் நடராஜன் காரில் ஏறுகிறார்கள். போலீஸ் வண்டியைப் பின்பற்றி இவர்கள் மோட்டாரும் போகிறது]

காட்சி 64

இடம் : நாச்சிமுத்துவின் வீடு

காலம் : இரவு மணி 9-30

['டூ பார்ட்டி' யிலிருந்து திரும்பி வந்த நாச்சிமுத்துவின் மோட்டார் வண்டி அவனுடைய வீட்டு வாசலுக்கு வந்து நிற்கிறது. நாச்சிமுத்து இறங்கி உள்ளே போகிறான். தன்னுடைய அந்தரங்க அறைக்குள் நுழைகிறான். அங்கே அன்றைக்கு ரயிலுக்குக் கொண்டு போக வேண்டிய பெட்டிகள், படுக்கை, கூஜா, குடை முதலிய எல்லாவற்றையும் வேணு தயார் செய்து வைத்திருக்கிறதைப் பார்த்து சந்தோஷப்பட்டு]

நாச் : (தனக்குத்தானே) வேணு கெட்டிக்காரப் பயல்.....டேய், வேணூ! (கூப்பிடுகிறான்.....உடனே) ஓ! மறந்து போனேன். அவன் இந்நேரம் நல்லப்பரும் வசந்தாவும் சாப்பிடுவதைக் கவனித்துக்கொள்ள அங்கே போய்இருப்பான்.....டேய் சின்னப்.....

(வேலைக்காரனைக் கூப்பிட்டுவிட்டு உடைகளைக் களைகிறான் சின்னப்பா வருகிறான்,)

நாச் : ரயிலுக்குப் போக வேணும்? எனக்கு சாப்பாடு போடச் சொல்லு.

[ரயிலுக்குப் போகத் தயார் செய்து கொள்ள உணவருந்த வீட்டுக்குள் போகிறான். அந்த வீட்டுக்குள் பெண்கள் யாருமில்லை. அங்கே சமையற்காரர்களும் மற்ற வேலையாட்களும்தான். நச்சிமுத்து கல்யாணமாகி மனைவியை இழந்தவன். அவனுக்கு ஒரு ஆண் குழந்தை உண்டு. அந்தக் குழந்தைபிறந்த பிரஸவத்தில்தான் அந்த மனைவி இறந்தாள். அந்த ஆண் குழந்தை நாச்சிமுத்துவின் தாய் தந்தையுடைய வளர்ப்பில் அங்கிருந்து ஒரு மைல் தூரத்தில் இவர்களுக்குச் சொந்தமான இன்னொரு பண்ணையில் இருந்து வருகிறது. மனைவி இறந்தபின் மறுமணம் செய்து கொள்ளாமல் விபசார வாழ்க்கை நடத்திக் கொண்டு மனம்போன போக்கெல்லாம் போய்க் கொண்டிருக்கிறவன் நாச்சிமுத்து]

நாச்சிமுத்து சாப்பிடுவதற்கு உள்ளே போன சிறிது நேரத்துக்கெல்லாம் ஸார்ஜெண்டும், பெரிய இன்ஸ்பெக்டரும், சப்

இன்ஸ்பெக்டரும் வந்த 'ரிசர்வ்போலீஸ்' மோட்டார் வண்டி நாச்சிமுத்தவின் வீட்டுக்குக் கொஞ்சம் தூரத்திலேயே நிறுத்தப்படுகிறது. அதிலிருந்த ஜவான்கள் ஒவ்வொருவராக இறங்கி நாச்சிமுத்து வீட்டின் தலைவாசலுக்குப் பக்கத்தில் வீட்டு வெளிச்சம் படாத இடங்களில் நின்று கொள்ளுகிறார்கள். ஸார்ஜெண்டு ஜோன்ஸ் தான் கையில் வைத்திருந்த 'எலக்ட்ரிக் டார்ச்' விளக்கினால் முன்னாலேயே வந்து அங்கங்கே பதுங்கியிருக்கிற எல்லா ஜவான்களும் தெருவில் வரும்படி 'சிக்னல்' வெளிச்சம் அடிக்கிறார். சுந்தரமும் காளியம்மாளும் இருக்கிற கார் வருகிறது. போலீஸ் வண்டிக்குச் சற்று தூரத்தில் நிற்கிறது. பெரிய இன்ஸ்பெக்டர் அந்த வண்டியை ஒரு ஓரமாக நிறுத்தச் சொல்லி மறுபடியும் வந்து கூப்பிடுகிறவரைக்கும் சுந்தரமும் காளியம்மாளும் வண்டியை விட்டு இறங்கக் கூடாதென்று சொல்லிவிட்டுப் போகிறார்.

பெரிய இன்ஸ்பெக்டரும், ஸார்ஜெண்டும் சப்இன்ஸ்பெக்டரும் நாச்சிமுத்து வீட்டின் 'வெளிகேட்'டுக்குப் போகிறார்கள். பெரிய இன்ஸ்பெக்டர் வெளிமிலேயே ஒரு திருண்டஇடத்தில் நின்று கொள்ளுகிறார். ஸார்ஜெண்டும் சப்இன்ஸ்பெக்டரும் காம்பவுண்டு கேட்டுக்கு உள்ளே போகிறார்கள். அங்கே மிகப் பிரகாசமான ஒரு விளக்கின் வெளிச்சம் உட்புறத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கிறது. காம்பவுண்டு கேட்டுக்கு வெளியில் வெளிச்சமில்லாத இடங்களில் சமீபமாக இருக்கிற ஜவான்களுக்கு ஏதாவது உத்தரவு செய்ய வேணுமானால் சௌகரியமாக இருப்பதற்காக காம்பவுண்டு கேட்டுக்கு அருகிலேயே உட்புறத்தில் ஸார்ஜெண்ட் நின்றுவிடுகிறார். சப்இன்ஸ்பெக்டர் மட்டும் வீட்டின் தலைவாசலுக்குப் போகிறார். அங்கே ஒரு காவற்காரன் இருக்கிறான்.]

சப் : எஜமான் இருக்கிறாரா?

காவ : சாப்பிடப் போயிருக்கிறார்.

சப் : சரி வரட்டும்.

[என்று சொல்லிக்கொண்டே உள்ளே போய் அங்கிருந்த அலங்காரமான சோபாக்களில் ஒன்றில் உட்கார்ந்து நாச்சிமுத்துவின் வரவுக்காகக் காத்திருக்கிறார்.]

காட்சி 65

இடம் : ரகசிய வீடு

காலம் : இரவு 10 மணி

[நாச்சிமுத்து 'டூபார்ட்டிக்குப்' போகும்போது சொல்லிப்போன படி அவன் போன உடனேயே வேணு ரகசிய வீட்டுக்குப் போயிருந்தான். நல்லப்பரிடம் தனியாகவும், வீராசாமி கருப்பண்ணன் இவர்களிடம் தனியாகவும் அவரவர்கள் இருக்கிற வெவ்வேறு பாகத்துக்கும் போய் அன்றைக்கு எல்லாரும் அதை விட்டுப் போய்விடுவதற்கான எல்லா ஏற்பாடுகளும் முடிந்து விட்டதென்றும் இரவு பதினேரு மணிக்கு மேல் புறப்படத் தயாராக இருக்க வேணும் என்றும் சொல்லிவிட்டு வந்தான். நல்லப்பருக்கும் வசந்தாவுக்கும் தினந்தினம் அவர்கள் இருக்கிற அறைக்கே சாப்பாடு எடுத்துக்கொண்டு போய் அங்கேயே அவர்கள் சாப்பிடுவது வழக்கம். அப்படி வழக்கமாகச் சாப்பாடு கொண்டு போகிற வேலைக்காரர்களிடத்தில், தான் எட்டு மணிக்குள் வந்து விடுவதாகவும் தான் வந்த பிறகுதான் சாப்பாடு எடுத்துக் கொண்டு போகவேண்டும் என்று வேணு கண்டிப்பாகச் சொல்லியிருந்தான். நல்லப்பரிடத்திலும் தான் வரும் வரைக்கும் சாப்பிடாமல் இருக்கும்படி. சொல்லியிருந்தான் அதற்குக் காரணம் நல்லப்பரையும் வசந்தாவையும்வீட்டுக் கனுப்பப் போவதனால் அவர்களுக்கு அன்றைக்கு விசேஷ விருந்திட்டு அனுப்பவேணும் என்று நாச்சிமுத்து சொல்லியிருப்பதாகவும், அதற்காகப் பலவித பலகாரபக்ஷணங்களையும் பழங்களையும் தான் கொண்டு வரப்போவதாகவும் அதனால் தான் வருவதற்குள் சாப்பிட்டுவிடக் கூடாதென்றும் நல்லப்பரிடத்திலும் கேட்டுக் கொண்டிருந்தான். ஆனதினால் ஒன்பது மணிவரையிலும் சாப்பிடாமல் காத்திருந்தும் வேணுவரவில்லை. அதன் பிறகு அதிகம் பசிக்கிறதாக நல்லப்பர் அடிக்கடி கேட்டு சாப்பாடு கொண்டு வரச் செய்து தந்தையும் மகளும் சாப்பிட்டு விட்டுப் பயணத்துக்குத் தயாராக இருக்கிறார்கள். தனக்கும் தந்தைக்கும் விடுதலை கிடைக்கும் என்ற சந்தோஷத்தில் வசந்தா அன்று மாலையிலேயே தலையைவாரி தானே பின்னிக் கொண்டு, வீட்டில் இருப்பது போல உடைகளை ஒழுங்கு செய்து கொண்டு வெகு உத்ஸாகத்தோடு இருக்கிறாள். அது நாள் வரையிலும் சரியாக சாப்பிடாத அவள் அன்று இரவு வயிறுறப் புசித்து, வெகு பரபரப்பாக

அடிக்கடி அறையை விட்டு வெளியே வந்து நாச்சிமுத்தாவது வேணுவாவதுவருகிறார்களா என்று எட்டியெட்டிப் பார்த்துக் கொண்டிருக்கிறாள். என்று மில்லாத உத்ஸாகத்துடன் அவள் தன்னை அலங்காரம் செய்துகொண்டதையும் அடிக்கடி வெளியில் வந்து போவதையும் தூரத்திலிருந்து வழக்கம்போல் கருப்பண்ணன் ஆசைக் கண்ணோடுபார்த்துக் கொண்டேயிருக்கிறான். வீராசாமிக்கு இந்த எண்ணமெல்லாம் இல்லை. அவன் நாச்சிமுத்துவிடம் கூடியமட்டும் பணத்தையும் பறித்துக் கொண்டு, அவன் வசந்தாவை சிலோனுக்குக் கூட்டிக்கொண்டு போய்விடாதபடி ரயில்வே ஸ்டேஷனில் புகாரும் செய்து விட்டு, அதன் பின் தான் தன்னுடைய வீட்டுக்குப் போனால் போலீஸ்காரர்கள் வீட்டுக்கு வந்து பிடித்துக் கொண்டு போய்விடலாம் என்று அஞ்சி, நேராக வீட்டுக்குப் போகாமல் வேறு எங்கேயாவது போய் தலைமறைவாக இருக்கலாமா என்பதைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தான். அதனால் கருப்பண்ணன் அடிக்கடி போய் தூரத்திலிருந்து கொண்டு வசந்தாவைப் பார்த்துக் கொண்டிருந்ததை அவன் கவனிக்கவே இல்லை.

கல்லப்பரும் வசந்தாவும் தங்கியிருந்த இடம், கீழ் தளத்தில் ஒரு விஸ்தாரமான அறை. அந்த அறையிலும் அதன் முன் வாரத்திலும் பிரகாசமான விளக்குகள் இருந்தன. வெளியில் வருவதும் உள்ளே போவதுமாக இருந்த வசந்தாவை அந்த அறைக்கு எதிரில் சற்று தூரத்திலிருந்த ஒரு இருண்ட இடத்தில் உட்கார்ந்து கொண்டு கருப்பண்ணன் பார்த்துக் கொண்டே இருக்கிறான். பார்க்கப் பார்க்க கருப்பண்ணனுக்குக் காமவெறி அதிகரிக்கிறது]

கருப்: (தனக்குத்தானே) அடடா; இந்த ரதியை நாலேயோட கண்ணுலெக் கூடக் காங்க முடியாதே! வந்ததெல்லாம் வரட்டும்...இப்பவே...போயி அந்த ராசாத்தியெக் கட்டிச் சேத்துப் புடிச்சிக்கிட்டு...கடிச்சி...ஒரு முத்தமாச்சியும் ... குடுத்துப் புட்டா என்ன?

...என்று எழுந்திருக்கிறான். அந்தச் சமயத்தில் அறையைவிட்டு வெளிவாரத்தில் நின்று யாராவது வருகிறார்களா என்று எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த வசந்தா உள்ளே போய் விடுகிறாள். கருப்பண்ணன் மறுபடியும் உட்காருகிறான் ...அதன் பிறகு நெடு நேரம் வசந்தா வெளியில் வரவில்லை. கருப்பண்ணன் இருந்த இடமும் அந்தக் கட்டிடத்தில் ஒரு பகுதி. வசந்தா இருக்கிற அறைக்கு இடது புறத்தில் ஒரு நடைவழி உண்டு. அந்த வழி கட்டிடத்தின் பின் பகுதிகளுக்குப் போகும் தடம். அந்த வழியில் மறைந்து நின்று கொண்டால் வசந்தா வெளியே வந்தாலும் ஆள் இருப்பது அவளுக்குத் தெரியாது. கருப்பண்ணன் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து இருட்டிலேயே நடந்து வசந்தா வெளியில் வந்தாலும் அவளுக்குத் தெரியாதபடி அந்த நடைவழிக்குப் போகமுடியும். அதை அறிந்திருந்த கருப்பண்ணன்

மெள்ள எழுந்து மெதுவாக நடந்து எலியைப் பிடிக்கப் போகும் பூனைபோல் அந்த இடத்துக்குப் போகிறான். அங்கே மறைந்து நின்று கொண்டு வசந்தா மறுபடியும் வெளியில் வருவாளா என்று பார்த்துக் கொண்டிருக்கிறான். அந்தச் சமயத்தில் வசந்தாவும் நல்லப்பரும் அறைக்குள் பேசிக் கொள்ளுகிறார்கள்.]

வச : அப்பா! மணி பத்துக்கு மேல் இருக்குமே? எட்டு மணிக்கு முன்னாலேயே வருவதாகச் சொல்லிவிட்டுப்போன அவர் வரக் காணுமே?

நல் : இப்படியேதான் நித்த நித்தம் இன்றைக்கு நாளைக்கு என்று ஏமாற்றிக் கொண்டு வருகிறார்கள். இன்றைக்குக்கூட நம்மை வீட்டுக்கு அனுப்புவார்களா என்பது சந்தேகந்தான்.

வச : ஐயோ!

நல் : அன்றைக்கே நம்மை வீட்டுக்குக் கொண்டுபோய் விட்டுவிடுவதாகச் சொல்லி அந்த நாசகிமுத்து—என்னுமோ அவச்சரம் என்று பணங்கேட்டார். நான் நம்மை வீட்டுக்குக் கொண்டு போய் விடுவதற்கு, எவ்வளவு கொடுத்தாலும் தகும் என் றெண்ணி நம்ப மானேஜருக்குக் கடிதம் கொடுத்து ஐந்து லட்சம் ரூபாய் தரச் சொன்னேன். அதையும் வாங்கிக் கொண்டு.....

வச : ஐந்து லட்சமா;

நல் : ஆமாம் சொக்கமாக ஐந்து லட்சம்.....

[இதைக் கேட்ட கருப்பண்ணன் "அட அயோக்யப் பயலே இப்பிடிவேறே... அனசு லச்சமா!... ஒனக்கு!... ஆவுட்டும்... அந்த அஞ்சு லச்சம் இண்ணைக்கு அவன் ரயிலுக்குப் போறப்ப அவன் படியிலெதானிருக்கும்... அதைக் கறந்து புட்றேன்... தராட்டி அந்த ராஸ்கோலை ஆகியே சுட்டுப் புட்றேன்... அந்த சுந்தரத்தை சுட்டாப்புலே" என்று தனக்குத் தானே சொல்லிக் கொள்ளுகிறான்]

வச : அப்பா! ஏன்னப்பா! இந்த நாசகிமுத்து படுமோசக்காரராக இருப்பார் போலிருக்கிறதே. அந்த கருப்பண்ணன் வீரா சாமிகூட நல்லவர்கள் என்று.....

நல் : அப்படித்தான் தெரியுது. இன்று என்ன மோசம் செய்ய நினைத்துக் கொண்டு இப்படி ஏமாற்றுகிறார்களோ தெரிய வில்லை. ஹூம்.....என்னென்ன பாவம் செய்தோமோ, இப்படிவந்து.....

வச : ஆமாம் அப்பா.....பாவம் செய்யாமலா நமக்கு இந்தக் கதி வரும்?

காட்சி 66

இடம் : நாச்சிமுத்து வீடு

காலம் : இரவு 10-15

[நாச்சிமுத்து உணவருந்தி விட்டு கூடத்துக்கு வருகிறான். அங்கே சப் இன்ஸ்பெக்டர் இருப்பதைக் கண்டு]

நாச் : வாங்க சார். வாங்க, வாங்க, அடடா! என்ன அதிருஷ்டம் இன்றைக்கு—உங்களைப் பார்க்க உங்கள் வீட்டுக்கு இரண்டு தடவை வந்தேன். தாங்கள் கிடைக்கவில்லை—இன்றைக்கு டூ பார்ட்டியில் கூட தங்களைக் காணோமே?

சப் : ஏன் நான்தான் வந்திருந்தேனே!? நீங்கள் அங்கிருந்து புறப்படும் போது உங்கள் காருக்குப் பக்கத்தில் நான் நின்று கொண்டிருந்ததைப் பார்த்தீர்களே?

நாச் : ஆமாம் அங்கே பார்த்தேன். டி பார்ட்டியில் உங்களையும் பெரிய இன்ஸ்பெக்டரையும் தேடித் தேடிப் பார்த்தேன்; காணவே காணோமே? இன்ஸ்பெக்டர் வரவேயில்லையாமே ஏன்?

சப் : அவருக்கு இன்றைக்கு ஸ்டேஷனில் ஒரு வெகு முக்யமான வேலைவந்துவிட்டது.

நாச் : அப்படியா! அவர் வராதது தான் எனக்கு ரொம்ப வருத்தம்.

சப் : ஆமாம், அவர் வராதது உங்களுக்கு ரொம்ப வருத்தம் உண்டாக்கக்கூடிய விஷயம்தான்.

நாச் : மோகன சுந்தரியின் 'டான்ஸ்' ரொம்ப நன்றாயிருந்தது. தாங்கள் பார்த்தீர்களோ?

சப் : எனக்கு வெளியில் ஜனக்கூட்டத்தை சமாளிக்க வேண்டிய பந்தோபஸ்து வேலையே சரியாக இருந்தது.

நாச் : புது 'சூப்ரண்ட்' ரொம்ப நல்லவராக இருக்கிறார் ஸார். டிப்டிகலெக்டர் வீட்டுக்குள் கூட்டிக்கொண்டுபோய் என்னோடு வெகு நேரம் பேசினார். நான் சில விஷயங்கள் சொன்னேன். அதையெல்லாம் கேட்டுவிட்டு எனக்கு எந்த சமயத்தில் என்ன சகாயம் வேணுமானாலும் செய்வதாக வாக்களித்தார்.

சப் : உங்களுக்கென்ன, சர்க்காரே.....நீங்கள் சொன்னபடிதான்;

நாச் : என்னமோ.....தங்களைப் போன்ற நல்ல உத்யோகஸ்தர்களுடைய தயவினால் சர்க்காரிடத்தில் எனக்குக் கொஞ்சம். செல்வாக்கு இருப்பது ஒரு பாக்யம்தான்.....கொஞ்சம் இருங்கள்.

[என்று எழுந்து தன்னுடைய அந்தரங்க அறைக்குப் போகிறான். சிறிது நேரத்தில் திரும்பி வந்து ஒரு தங்க 'ரிஸ்ட்வாச்'சை சப் இன்ஸ்பெக்டரிடம் நீட்டி]

நாச் : என்னுடைய ஞாபகமாக இதைத் தாங்கள் ஏற்றுக் கொள்ள வேணும். வீட்டுக்கே இதைக் கொண்டு வந்திருந்தேன். தாங்கள் அகப்படவில்லை.

சப் : (கை கெடிகாரத்தை வாங்கிப் பார்த்துவிட்டு) எனக்கா! இவ்வளவு உயர்ந்த 'ரிஸ்ட்வாட்ச்'! எனக்குத் தகுமா?

நாச் : இதுவும் தகும், இதற்கு மேலும் தகும். உங்கள் குணத்துக்கு எதுவும் தகும்—...தாங்கள் வந்ததில் எனக்கு வெகு சந்தோஷம்...சரி, அப்புறம் வேறென்னும் விசேஷமில்லையே?

சப் : ஒரு சின்ன விசேஷம் ..... அதற்காகத்தான் வந்தேன்.

நாச் : என்ன விசேஷம்? சொல்லுங்கள். எதுவானாலும் நான் செய்கிறேன்.

சப் : கொஞ்சம் தயவு செய்து என்னோடு தாங்கள் வரவேணும்?

நாச் : எங்கே வரவேணும்? என்ன காரியமானாலும் இங்கிருந்தே செய்கிறேன்.....சொல்லுங்கள்.

சப் : பாண்டி நத்தம் வரையிலும் தாங்கள் வந்தால் அந்தக் காரியம் இன்னதென்று உங்களுக்குத் தெரியும்.

நாச் : பரவாயில்லை. நான் வரவேண்டும் என்ற அவசியமில்லை. காரியத்தைச் சொல்லுங்கள். எதாயிருந்தாலும் இங்கிருந்தே .....இப்போதே உங்களுக்கு முடித்துத்தருகிறேன்.

சப் : இல்லை. அதை இங்கே சொல்லக்கூடாது. நீங்கள் வந்தால் தான் அது முடியும்.

நாச் : இன்றைக்கு...ஒரு கல்யாண காரியமாய் நான் இப்போதே அவசரமாகக்.....கொஞ்சம்.....வெளியே போகவேணும்..... சொம்பவும் மன்னித்துக் கொள்ளுங்கள். இன்றைக்கு நான் வரமுடியாமல் இருக்கிறது. என்ன செய்வேன்?

சப் : எப்படியாவது இப்போதே உங்களைக் கையோடு கூட்டிக் கொண்டு வரவேணும் என்பது சூப்ரண்ட் உத்தரவு. நான் கீழ்ப்படிந்துதானே ஆகவேண்டும்?

நாச்: சூப்ரண்ட் உத்தரவா! 'சூப்ரண்ட்'டிடத்திலேயே நான் அவசரமாக வெளியூருக்குப் போகவேணும் என்று சொல்லித் தானே விடை பெற்றுக் கொண்டு சீக்கிரமாக வந்தேன்..... போய் அவரிடம் அதைச் சொல்லுங்கள்.

சப்: சூப்ரண்ட் உங்களோடு பேசினபோது இந்த விஷயம் அவருக்குத் தெரியாது.

நாச்: அது எப்படியிருந்தாலும் சரி, இப்போ எனக்கு வெகு அவசரமான வேலை இருக்கிறது. அதனால் நான் வர முடிய வில்லையென்பதை நீங்கள் போய் சூப்ரண்டிடம் சொல்லுங்கள், அவர் ஒன்றும் சொல்லமாட்டார்.

சப்: சூப்ரண்ட் ஒன்றும் சொல்லாவிட்டாலும் இன்ஸ்பெக்டர் ஒத்துக்கொள்ள மாட்டாரே ?

நாச்: என் விஷயத்தில் இன்ஸ்பெக்டர்கூட ஒன்றும் சொல்ல மாட்டார்.....போங்கள்.

சப்: அவர் ஒத்துக் கொள்ளமாட்டார். என்மீது ரொம்பவும் கோபித்துக் கொள்வார்.

நாச்: உங்களுக்கென்ன? நான் சொன்னேனென்று நீங்கள் போய்ச் சொல்லுங்கள், சார்.....சூப்ரண்டும் ஒன்றும் சொல்ல மாட்டார்...இன்ஸ்பெக்டரும் கோபித்துக்கொள்ளமாட்டார் போங்கோ.....எனக்கு இப்ப ரொம்ப அவசரமான காரியம் இருக்கிறது. நான் இன்னேரம் போயிருக்கவேணும். இப்பவே ரொம்ப 'லேட்' ஆய்விட்டது.

சப்: கொஞ்சம் வந்து, இன்ஸ்பெக்டர் எதற்காக வரச்சொன்னார் என்பதைக் கேட்டுவிட்டு அப்புறம் வேணுமானால் உங்கள் அவசர காரியத்தை.....

நாச்: ஓ! அது முடியாது. சப்இன்ஸ்பெக்டர் சார்! தயவு செய்து மன்னிக்க வேண்டும் இன்றைக்கு நான் எங்கும் வரமுடியாது. என்னைத் தொந்தரவு செய்ய வேண்டாம்.

சப்: நீங்கள் அதைவிட அதிகமாகத் தயவு செய்து என்னை மன்னிக்கவேண்டும். உங்களைக் கையோடு கூட்டிக் கொண்டு போகாவிட்டால் எனக்குப் பெரிய 'பிளாக் மார்க்' வரும். இன்ஸ்பெக்டர் அவ்வளவு கண்டிப்பாகச் சொல்லியனுப்பினார்.

நாச்: இன்ஸ்பெக்டர் கிடக்கட்டும் ஸார். நீங்கள் போய் சூப்ரண்டிடத்திலேயே சொல்லுங்கள். சூப்ரண்டுக்கு மேலேயா இன்ஸ்பெக்டர்?

சப்; அப்படிப்போய் நான் இன்ஸ்பெக்டர் உத்தரவைமீறி சூப்ரண்டிடத்தில் சொல்லக்கூடாது,

நாச்: சரி அதெல்லாம் என்னத்திற்கு? இப்போ எனக்கு வெகு அவசரமான ஜோலியிருக்கிறது. யார் கூப்பிட்டாலும் வர முடியாது

சப்: உங்களைக் கூட்டிக் கொண்டு போகாமல் நான் போகக் கூடாது.

நாச்: என்ன சார் உங்களுக்கு பயித்தியம் கியித்தியம் பிடித்திருக்கிறதா? ..... சப்இன்ஸ்பெக்டர்! நீங்கள் புதுசு, சிறு பிள்ளை. என்னைப் பற்றி உங்களுக்குத் தெரியாது.....

சப் நான் புதுசுதான். சிறுபிள்ளை தான். ஆனாலும் உங்களைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும்.

நாச்: சரி, இப்போது என்ன செய்ய வேண்டுமென்கிறீர்.

சப்: நீங்கள் என்னோடு பாண்டிதத்துக்கு இப்பவரவேண்டும்

நாச்: வரமுடியாது, போங்கள்.

சப்: அப்படிச் செல்லக்கூடாது. உங்களைக் கையோடு கூட்டிக் கொண்டுதான் நான் போகவேணும்.

நாச்: சரி...சரி நீர் பைத்தியந்தான். இந்நேரம் நான் என்னமோ என்று நினைத்து உம்மோடு பேசினேன்.....எனக்கு சொம்ப அவசர வேலையிருக்கிறது. நான் கண்டிப்பாக வரமுடியாது. வெளியே போங்கள்.

சப்: நீங்களும் வந்தால் தான்.

நாச்: ஓய். உம்முடைய பைத்தியக்காரத்தனத்தை யாரிடத்தில் காட்டுகிறீர். மரியாதையாகப் போய்விடும். ம்ம்ம் 'கெட்டவுட்

[சப் இன்ஸ்பெக்டர் பதில் பேசாமல் உட்கார்ந்தே இருக்கிறார்]

நாச்: ஏன் இன்னும் உட்கார்ந்திருக்கிறீர்? எழுந்திரும்...என் நேரத்தை வீணாக்க வேண்டாம்.

[சப் இன்ஸ்பெக்டர் பதிலும் சொல்லவில்லை. எழுந்திருக்கவும் இல்லை. நாச்சிமுத்துக்குக் கோபம் வருகிறது. சப் இன்ஸ் பெக்டருக்கு நேராகச் சமீபத்தில் வந்து நின்று கொண்டு, ஜகயை நீட்டிக் கதவைக் காட்டி]

நாச்: நான் அவசர வேலையாக வெளியே போகவேண்டும்...எழுந்திரும்.....சூப்ரண்டிடத்திலும் இன்ஸ்பெக்டரிடத்திலும் நான் பேசிக் கொள்ளுகிறேன். உமக்கென்ன நீர் போம்.....

[சப் இன்ஸ்பெக்டர் அசையவில்லை]

நாச்: நீர் மரியாதையாகப் போகமாட்டீர்?

[என்று மேஜை மீதிருந்த மணியைத் தட்டுகிறான். ஏவலாள் சின்னப்பன் வருகிறான்.]

நாச் : டேய்! மருதப்பனையும் தண்டாயுதத்தையும் வரச்சொல்லு.

[சின்னப்பன் வேகமாகப் போகிறான். சிறிது நேரத்தில் இரண்டு குண்டர்கள் வருகிறார்கள்.]

நாச் : (சப்இன்ஸ்பெக்டரைச் சுட்டிக்காட்டி) இவருக்குப் பாண்டி நாத்தம் போவதற்கு வழி காட்டுங்கள். வெளி வாசலைத் தாண்டி அந்த...வேப்பமரத்துமூலை...இருக்குது பாரு...அது வரைக்கும் கூடவே போய் வழிகாட்டி அனுப்பிவிட்டு வாங்க. (சப்இன்ஸ்டரைப் பார்த்து) போங்க சார்.

[அந்த குண்டர்கள் தன்னைப் பலாத்காரமாக இழுத்து அப்புறப் படுத்துவார்கள் என்பதற்குப் பயந்து விட்டவர் போல சப் இன்ஸ்பெக்டர் அவர்கள் தன்னருகில் வருவதற்குள் தாமாகவே எழுந்து வெளியே போகிறார்.....நாச்சிமுத்து அதைப்பார்த்துக் கேலி செய்வது போல தனக்குத்தானே கண்ணடித்து சிரித்துக் கொள்ளுகிறான். குண்டர்கள் சப் இன்ஸ்பெக்டரைத் தொடர்ந்து போகிறார்கள். வீட்டின் கிலிவாசலைக் கடந்து அதற்கு தூரத்தில் மறைவில் இருக்கிற வெளிவாசலுக்கு வருகிறார்கள். அங்கே சார்ஜண்ட்துரை, சப்இன்ஸ்பெக்டர் வந்து சொல்ல வேண்டிய சமிக்கைக்காக எதிர் பார்த்துக் கொண்டு நிற்கிறார். சப்இன்ஸ்பெக்டர் சார்ஜெண்டுடன் இங்கிலீஷில் ஏதோ கொஞ்சம் காதோடு சொல்லுகிறார். உண்மையாகவே வழி தெரியாத சப்இன்ஸ் பெக்டருக்கு வழி காட்டத்தான் போகிறதாக எண்ணிக் கொண்டிருக்கிற குண்டர்கள், சப்இன்ஸ்பெக்டர் சார் ஜெண்டுடன் பேசிமுடிகிற வரையிலும் காத்திருக்கிறார்கள். பேசி முடிந்ததும், சப்இன்ஸ்பெக்டர் அந்தக் குண்டாகளைப் பார்த்து)

சப் : அந்த வேப்ப மரத்து மூலை எங்கேயப்பா இருக்கிறது?

குண் : வாங்க காட்டுறோம்.

சப் : எவ்வளவு தூரம் இருக்கும்?

குண் : ஒரு பர்லாங்கு...ஒண்ணரை பர்லாங்கு இருக்கும்.

சப் : சரி...அதைக் காட்டுங்கள்...வாங்க போகலாம்.

மூன்று பேரும் போகிறார்கள். அவர்கள் பின்னாலேயே சார் ஜெண்டும் போய் அங்கே இருட்டில் இருக்கிற ஜவான்களில் ஆறுபேரை வெகு அவசரமாகத தயார் செய்து சப்இன்ஸ் பெக்டருக்குப் பின்னால் அனுப்புகிறார். அந்த ஆறுபேரும் குண்டர்களுக்குப் பின்னால் கொஞ்சம் எட்டவே போகி றார்கள். சப்இன்ஸ்பெக்டர் முன்னாலும் குண்டர்கள் அவ ருக்குப் பின்னாலுமாக குறிப்பிட்ட வேப்ப மரத்து மூலைக்கு வருகிறார்கள். அங்கே ஒரு சாந்தல் கம்பத்தடியில் வெளிச் சத்தில் நின்று)

குண்: இந்தாங்க, நேரே வடக்கே போற பாதையிலே : போங்க...

(என்று சொல்லிக் கொண்டிருக்கிற சமயத்தில் பின்னால் வந்த ஆறு ஜவான்களில் இருவர் மின்னல் போல் பாய்ந்து ஓடி வந்து, தங்கள் கையிலிருந்த துப்பாக்கியைத் திருப்பிக் கொண்டு அதன் கட்டையினால் அந்தக் குண்டர்கள் தலையில் தனித்தனியே இருவரும் ஏககாலத்தில் ஓங்கி அடிக்கிறார்கள். குண்டர்கள் இருவரும் "ஐயோ... அப்பா" என்று தலையைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்து விடுகிறார்கள். அதே சமயத்தில் மற்ற நான்கு ஜவான்களும் இரண்டிரண்டு பேர்களாகக் குண்டர்களை அழுத்திக் கொண்டு அவர்களுக்கு விலங்கு போட்டு விடுகிறார்கள்.)

காட்சி 67

இடம் : நாச்சிமுத்துவின் அந்தரங்க அறை

காலம் : மேற்சொன்ன நிகழ்ச்சி நடக்கிற அதே சமயம்

(சப்இன்ஸ்பெக்டரும் குண்டர்களும் கூடத்தைவிட்டு வெளியே போன பிறகு நாச்சிமுத்து தன்னுடைய அறைக்குள் சென்று ரகசிய வீட்டுக்குப் போகவும் அதன் பிறகு ரயிலுக்குப் புறப்படவும் தன்னைத் தயார் செய்து கொள்ளுகிறான். என்றுமில்லாத முறையில் தன்னை அலங்காரம் செய்து கொள்ள ஆரம்பிக்கிறான். அந்தக் காரியங்களைச் செய்து கொண்டே,)

நாச் : டேய்!.....

[சின்னப்பன் வருகிறான்.]

நாச் : மருதப்பனும் தெண்டாயுதமும் வந்த உடன் வெளி வாசலைப் பூட்டிவிடச் சொல்லு. எனக்கு ரொம்ப வேலை இருக்கிறது. யாரையும் உள்ள விடவேண்டாம் ... வண்டிக்காரனிடம் வண்டிகளை முன் பக்கத்து வாசலுக்குக் கொண்டு வரும்படி வேணு சொல்லியிருப்பான்...இப்போ நான் சொன்னதாக நீ போய்ச் சொல்லி, வண்டிகளைப் பின் பக்கத்து வாசலுக்குக் கொண்டு போய் சரியாகப் பனிரண்டு மணிக்குத் தயாராக நிறுத்தி வைக்கச் சொல்லு.

(சின்னப்பன் போகிறான். நாச்சிமுத்து தான் கட்டியிருந்த வேஷ்டியை அவிழ்த்துவிட்டு, நல்ல சலவை வேஷ்டி கட்டிக் கொள்வதற்காகத் தன் 'பெல்ட்டை' கழற்றி மேஜைமீது வைக்கிறான். இடுப்பில் சொறுகியிருந்த 'ரிவால்வர்' கைத்துப்பாக்கியை எடுத்து அதையும் மேஜைமீது வைக்கிறான். அரைஞாண் கயிற்றில் முடிந்திருக்கிற ரகசிய வீட்டுச் சாவியைத் தொட்டுப் பார்த்துக்கொள்ளுகிறான். வேஷ்டியைக் களையப்போகிற சமயத்தில் பின்னல் டக்...டக்... என்று பூட்ஸ் போட்டுக்கொண்டு நடக்கிற சத்தம் கேட்கிறது. நாச்சிமுத்து திரும்பிப் பார்க்கிறான். சார்ஜெண்ட் துரை ஜோன்ஸ் உள்ளே வருகிறார்.]

சார் : அல்லோ! குடவனிங்.

நாச் : (திடுக்கிட்டு) ... ஓ! சார்ஜெண்ட் துரையா? வாங்க ஸார் ஏது இன்னேரத்திலே?

சார் : சொம்மா...உங்களைக்...கான்பதுக்காக...வந்தது. ஆர்...யூ ...பீயிங்...வெல்? ...சொகம் தானே?

நாச் : உங்களைப் போன்ற நல்ல துரைகளின் தயவிருக்கும்போது எனக்கென்ன குறைவு?

சார் : வெரி--கிளாட்-டு-சீ.யூ...

(என்று சொல்லிக்கொண்டே மேஜையின்மீதிருந்த ரிவால்வரை கவனிக்கிறார். மெதுவாக மேஜைக் கருகில் நடந்து ரிவால் வரைக் கையில் எடுத்து அதைத் திருப்பிப் பார்த்துக் கொண்டே)

இந்த...'கோல்ட்'மேக்...மெத்த நல்ல 'வெரி குட்'...ரிவால்வர்'

(என்று தன் கைபிலேயே அதை வைத்துக் கொளுகிறார்.)

ஆனக்கா...இண்ட...நேரட்டில் வந்து ... உங்களுக்குத்..... தொண்டரவு பன்ன... 'ஐ யாம்...வெரி சாரி.

நாச் : தொந்தரவா! எனக்கென்ன தொந்தரவு? நீங்கள் வந்ததில் எனக்கு சந்தோஷம்தான், தொந்தரவில்லை... என்ன வேணும்?

சார் : உங்களை...அழைத்துக் கொண்டு போகவேண்டும்.

நாச் : என்னையா! என்னை எங்கே அழைக்கிறீர்கள்?

சார் : பாண்டி நட்டம்.

நாச் : எதற்காக?

சார் : தி...போலீஸ்...வாண்ட்...யூ...போலீஸ்...காரர்கள்.

நாச் : கொஞ்ச நேரத்துக்கு முன்னால் தானே சப்இன்ஸ்பெக்டரிடம் விவரமாகச் சொல்லியனுப்பினேன். அவரை நீங்கள் எதிரில் பார்த்திருப்பீர்களே?

சார் : எஸ்...சபின்ஸ்பெக்டரைப் பார்ட்டேன்...அவருக்கு உட்டரவு வேறை...எனக்கு...ஆர்டர்...வேறை...ஐ யாம் சாரி.

நாச் : உங்களுக்கு என்ன உத்தரவு?

சார் : எனக்கு...உட்டரவு ... உங்களை...உடேனே 'அ ரெ ஸ் ட்' செய்து...கொண்டு வரவேண்டும்...என்று.

நாச் : அரெஸ்டா! என்னையா!...யாருடைய உத்தரவு?

சார் : சர்க்கார் உட்டரவு,

நாச் : என்ன சார்...கேலி செய்கிறீர்களா? அதார் அந்த சர்க்கார்?

[என்று கோபச் சிரிப்பு சிரிக்கிறான்]

சார் : கேலி...இல்லை...உங்களை...அரெஸ்ட் செய்து கொண்டுவர வேண்டும்...அதுதான் எனக்கு ஆர்டர்.

நாச் : என்னை எதற்காக அரெஸ்ட் செய்வது?

சார் : அது...எல்லாம்...போலீஸ்டேஷனுக்குப் போனால்டாண்டெரியும்.

நாச் : சார்ஜெண்ட் சார்...உங்களுக்கு எவ்வளவு பணம் வேணுமானாலும் இப்போது தருகிறேன்...தயவு செய்து...

சார் : நோ...நோ...நோ...நான் அப்படிப்பட்ட ஆள்—அல்ல...அந்தப் பேக்சுக் கூடாது...

நாச் : என்னை அரெஸ்ட் செய்ய உங்களுக்கு வந்த உத்தரவு எங்கே? காட்டுங்கள்.

சார் : அது இன்ஸ்பெக்டரிடம் இருக்கிறது.

நாச் : சரி; அப்படியானால் இன்ஸ்பெக்டர் வரட்டும். அவரோடு பேசுகிறேன். நீங்கள் போய் அவரை வரச் சொல்லுங்கள்.

சார் : 'நான்ஸென்ஸ்'...ஏய்...ராம்சந்தர்...

(என்று சார்ஜண்ட் யாரையோ கூப்பிடுகிறார். உடனே நிபுநிபு வென்று துப்பாக்கி தாங்கிய ஏழெட்டு ஜவான்கள் அறைக்குள் வருகிறார்கள். அவர்களைப்பார்த்து)

சார் : 'ஹாண்ட் கவ்...

(உடனே ஒரு ஜவான் கை விலங்குகளை எடுக்கிறான். மற்ற ஜவான்கள் நாச்சிமுத்தை சூழ்ந்து கொண்டு இரண்டு பேர் அவனுடைய கைகளைப்பிடிக்கிறார்கள். நாச்சிமுத்து நிமிறிக் கொண்டு,)

நாச் : டேய் சின்னப்பா நம்ம ஆட்களைக் கூப்பிடு...என்ன அக்ரமம் இது...

(நான்கு ஜவான்கள் நாச்சிமுத்தைப் பலமாகப் பிடித்துக் கொண்டு கைகளுக்கு விலங்குபோட முயல்கிறார்கள். நாச்சிமுத்து நிமிறுகிறான், நிணறுகிறான், குமுறுகிறான்; வெகு நேரம் விலங்கு போடவிடாமல் போராடுகிறான். கடைசியில் ஜவான்கள் ஐந்தாறுபேர் அமுத்திக்கொண்டு விலங்கைப் பூட்டி விடுகிறார்கள்.)

நாச் : சார்ஜெண்ட் சார். நீங்கள் கூப்பிடுகிற இடத்துக்கு நானே வருகிறேன்...தயவு செய்து விலங்கை எடுத்துவிடச் சொல்லுங்கள்.

சார் : 'ஆல்ரைட்' சத்தம் கேயாமல் வந்தால் 'ஹரண்ட்கவ்வை' கல்ட்டிப் போடச் செய்குறேன், கம் ஆன்.

(என்று சார்ஜண்ட் முன்னால் நடந்து வெளியே போகிறார். நாச்சிமுத்துக்கு அழுகையும் ஆத்திரமும் வந்து – அடியெடுத்து வைக்கமாட்டாமல் தவிக்கிறான் ஜவான்கள் அவனுடைய கையைப்பிடித்து மெதுவாக இழுத்து, நடக்கத் தூண்டுகிறார்கள். அவனுடைய கால்கள் தள்ளாடுகின்றன. விலங்கிட்ட இரண்டு கைகளாலும் முகத்தை மோதிக் கொண்டு அழுதுகொண்டு மெள்ள மெள்ள சார்ஜெண்ட்டுக்குப் பின்னால் போகிறான். வீட்டு வாசலைக் கடந்து வெளி வாசலுக்குப் போகிறார்கள். வழக்கமாக அங்கே இருந்து கொண்டிருக்கிற காவலாளிகளும் வேலைக்காரர்களும்கூட அப்போது அங்கில்லை—ஏனென்றால் வசந்தாவை ரயிலுக்கு கொண்டு போவதைத் தனக்கு மிகவும் அந்தரங்கமான இரண்டொரு ஆட்களைத் தவிர மற்றயாரும் அறியக்கூடாதென்று நாச்சிமுத்தே செய்திருந்த ஏற்பாட்டின்படி எல்லா வேலையாட்களுக்கும் வெவ்வேறு வேலை கொடுத்து இரவு பத்து மணிக்குமேல் அங்கே யாரும் இருக்காதபடி வேணு உத்தரவுகள் செய்திருந்தான்—வெளிவாசலுக்கு வெளியில் பெரிய இன்ஸ்பெக்டர் சார்ஜெண்டின் வரவுக்காக இருட்டில் மறைந்து நின்று பார்த்துக் கொண்டே இருக்கிறார். நாச்சிமுத்து விலங்கிடப்பட்டு வருவதை இன்ஸ்பெக்டர் பார்க்கிறார். பார்த்து விட்டு மறுபடியும் இருட்டில் மறைந்து கொள்ளுகிறார்.

வெளி வாசலைக் கடந்து நாச்சிமுத்தைக் கூட்டிக்கொண்டு சார்ஜெண்டும் ஜவான்களும் அவர்கள் வந்த மோட்டார்வான் நிற்கிற பக்கம் போகிறார்கள். அங்கே சப்இன்ஸ்பெக்டர் மோட்டாருக்கு அருகில் நின்று கொண்டிருக்கிறார். சார்ஜெண்ட் தன் கையிலிருந்த 'எலக்ட்ரிக்' விளக்கினால் நாலாபக்கமும் வெளிச்சம் காட்டி நாச்சிமுத்து விலங்கிடப்பட்டு வருவதை சப்இன்ஸ்பெக்டர் அறியும்படிச் செய்கிறார். உடனே அந்த மோட்டார் வானின் கதவு திறக்கப்படுகிறது. அதில் நாச்சிமுத்தை ஏறச் செய்கிறார்கள். ஏற்கனவே அதில் மூன்றே விலங்கிடப்பட்ட இரண்டு குண்டர்களும் இருக்கிறார்கள்.)

காட்சி 68

இடம் : நாச்சிமுத்து வீட்டுக்கருகில்

காலம் : முன்னிகழ்ச்சிக்கு அடுத்தபடி

(நாச்சிமுத்துவை போலீஸ் மோட்டரில் ஏற்றிவிட்டதைப்பார்த்து விட்டு, பெரிய இன்ஸ்பெக்டர் அந்தப் போலீஸ் மோட்டாருக்குப் பக்கத்தில் காளியம்மாளும் சுந்தரமும் இருக்கிற காருக்கு வருகிறார். தான் கையில் வைத்திருந்த மின்சார விளக்கின் வெளிச்சம் காட்டி காளியம்மாளையும் சுந்தரத்தையும் இறங்கி வரும்படி சமிக்கை செய்கிறார். காளியம்மாளும் சுந்தரமும் வண்டியை விட்டு இறங்குகிறார்கள்.)

பெ. இ : (காளியம்மாள் காதோடு) அந்த ரகசிய வீட்டுக்குப் போகிற வழியைக் காட்டு.

காளி : அதுக்குச் சாவி வேணுமே?

பெ. இ : அந்த சாவி என்னிடத்தில் சிக்கிவிட்டது, வா.

காளி : அப்பிடிண்ணு சரி, வாங்க.

(என்று காளியம்மாள் வெகுதீவிரம் காட்டி முன்னால் போகிறாள். காளியம்மாள் முன்னாலும் அவளுக்குப்பின் இன்ஸ்பெக்டரும் அவருக்குப்பின் சுந்தரமுமாக நாச்சிமுத்து வீட்டின் வெளிவாசல் வரைக்கும் போகிறார்கள். அங்கே முன்னாலேயே இன்ஸ்பெக்டர் தயார்ப்படுத்தி வைத்திருந்த பத்து ஜவான்கள இவர்களோடு சேர்ந்து கொள்ளுகிறார்கள. எல்லாரும் காளியம்மாளைப்பின் தொடர்ந்து போகிறார்கள. ரகசிய வீட்டுக்குப் போகிற கள்ளக்கதவு இருக்கிற இடத்துக்குப் போனதும் காளியம்மாள் இன்ஸ்பெக்டரிடம் சொல்லி வெளிச்சம் காட்டச் செய்கிறாள்.)

காளி : ஒங்க சோத்துக்கை பக்கத்துக்கு வெளிச்சம் காட்டுங்க.
[இன்ஸ்பெக்டர் வெளிச்சம் அடிக்கிறார்.]

காளி : அதோ பாருங்க...செவுத்திலே ரெண்டு பெரிய மாடாக்குளி தெரியுது பாத்தீங்களா?

பெ. இ : ஆமாம்.

காளி : மாடத்துலே வெளக்கு தெரியுது பாருங்க.

பெ. இ : தெரியுது.

காளி : அந்த சோத்துக்கை பக்கத்து மாடத்துலே இருக்கிற வெளக்கைத் திருவி எடுங்கோ.

[இன்ஸ்பெக்டர் அப்படியே திருகி விளக்கை எடுக்கிறார்.]

காளி : அங்கே சாவி போட்ர தொவாரம் இருக்குது. அதுலே சாவியைப் போட்டுத் திருப்புங்கோ.

(இன்ஸ்பெக்டர் கொஞ்ச நேரம் சிரமப்பட்டு அதன்பின் துவாரத்தைக் கண்டு பிடித்து சாவியைப் போட்டுத் திருப்புகிறார். சாவி சரியாகத் துவாரத்தில் படிந்தும் பூட்டு திறக்கமுடியவில்லை. பலமுறை முயன்று பார்த்தும் பலனில்லை. இன்ஸ்பெக்டர் திகைக்கிறார். காளியம்மாளுக்குக் குருட்டாம் போக்காக ஒரு எண்ணம் உதிக்கிறது.)

காளி : சாவியைப் பீச்சகைப் பக்கம் திருப்பிப் பாருங்க.

(அப்படியே இன்ஸ்பெக்டர் பூட்டினை வழக்கமாகப் பூட்டுவதற்குத் திருப்புகிற மாதிரி இடது கைப்பக்கம் திருப்பிப் பார்த்தார். சாவி முன் போல் எதிர்ப்பில்லாமல் பூட்டுக்குள் சுழன்றது. கொஞ்சம் அமுத்தித் திருப்பினார். பூட்டுத் திறந்த மாதிரி ஓசை கேட்டது. ஆனால் கதவு திறக்கவில்லை. இரட்டைப் பூட்டாக இருக்குமென்று மறுபடியும் முன் போலவே இடது பக்கம் திருப்பினார். படக்கென்று பூட்டு திறந்தது. அதனுடன் அதுவரை சுவரோடு சுவராக இருந்த ஒரு கதவு சந்து விட்டது. அதை இழுத்தார். கொஞ்சம் கொஞ்சமாக அந்தக்கனமான கதவு வழிவிடுகிறது. கதவைத் திறந்தபின் இன்ஸ்பெக்டர் இரண்டு ஜவான்களை அங்கே காவல் வைத்து, உள்ளேயிருந்து யார் வந்தாலும் அவர்களைப் பிடித்து வைக்கும்படி உத்தரவிட்டுவிட்டு இன்ஸ்பெக்டரும், மற்றவர்களும் உள்ளே போகிறார்கள். இன்ஸ்பெக்டர் முதலிலும் காளியம்மாள் அவருக்குப் பின்னலும் சுந்தரம் அதற்குப் பிறகும் ஜவான்கள் இவர்களுக்குப் பின்னலும் அந்தக் களவழியில் போகிறார்கள். இடையிடையேபடிகள் இருக்கின்றன. இன்ஸ்பெக்டர் வெளிச்சம் போட்டு ஏற்ற இறக்கங்களுக்கு எச்சரிக்கை செய்து கொண்டே போகிறார். சுமார் நிருதூறுகஜதூரம் போனபின் அங்கே ஒரு கதவு மூடப்பட்டிருக்கிறது. அந்தக் கதவுக்கு அடுத்தாற்போல் தான் நல்லப்பர் முதலானவர்கள் இருப்பதாக எண்ணிக் கொண்டு இன்ஸ்பெக்டர் கதவை ஓங்கி ஓங்கித் தட்டுகிறார். கொஞ்ச நேரம் அவர் அப்படிப் பலமாகக் கதவைத் தட்டின பிறகு தான் காளியம்மாளுக்கு மாமன் சொன்னது நினைவுவந்தது.)

காளி : அந்தக் கதவு சும்மா சங்கிலி மட்டும் மாட்டியிருக்குமாம். அதைப் பாத்துத் தொறங்க.

(இன்ஸ்பெக்டர் வெளிச்சம் போட்டுப் பார்க்கிறார். காளியம்மாள் சொன்னபடியே சங்கிலி மட்டும் மாட்டப்பட்டிருக்கிறது. அதை நீக்கின உடன் கதவு திறந்தது. எல்லாரும் உள்ளே போகிறார்கள்.)

காட்சி 69

இடம்: ரகசிய வீடு

காலம்: அதே சமயம்

(வசந்தாவும் கல்லப்பரும் அவர்கள் தங்கியிருக்கும் அறைக்குள் பேசிக்கொண்டிருப்பதை ஒட்டுகேட்டுக் கொண்டு, வசந்தா மறுபடியும் வெளியே வராமாட்டாளா என்று கருப்பண்ணன் காத்துக் கொண்டு நடைவழியில் மறைந்து நிற்கிறான். வசந்தா மறுபடியும் வெளியில் வந்தால் அவளைக் கட்டித் தழுவி ஒரு முத்தமாவது கொடுத்துவிட வேணும் என்பது அவனுடைய ஆசை முன்னே தந்தையுடன் பேசிக்கொண்டிருந்த வசந்தா, பேச்சை நிறுத்திவிட்டு அன்றைக்கும் விடுதலை கிடைக்காதோ என்ற கவலையுடன் திடீரென்று எதையோ நினைத்துக் கொண்டு மௌனமாகக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தாள். அதை கல்லப்பர் கவனித்து)

கல்: என்மா? ஏன் அழுகிறாய்?

வச: அப்பா! குண்டு பட்ட சுந்தரம் என்ன ஆனாரோ என்று அதே கவலையாக இருக்குதப்பா. இன்றைக்குக் கூட நமக்கு விமோசனம் கிடைக்காது போலிருக்கிறதே. மணி பனிரண்டுக்குமேல் இருக்குமே! ஒரு மணி வண்டிக்கு ரயிலுக்குப் போகத் தயாராக இருக்கச் சொன்னார்களே!

கல்: ஆமாம்மா எனக்கும் அடிக்கடி சுந்தரத்தின் நினைப்பு வருகிறது. என்ன செய்யலாம். இப்படி வந்து சிக்கிக்கொண்டோம். சுந்தரத்தின் குடும்பத்துக்காவது எதாவது உதவி செய்யக்கூட வழியில்லாமற் போய்விட்டதே! இன்றைக்குக் கூட நம்மை விடமாட்டார்கள். ஒரு மணி வண்டிக்குப் போகலாம் என்ற நம்பிக்கை போய்விட்டது. இந்த நாச்சி முத்து என்னமோ பெரிய சூழ்ச்சி செய்து கொண்டிருக்கிறான்.

வச: என்னப்பா உலகத்தில் எவ்வளவோ சிக்கலான குற்றங்களை யெல்லாம் போலீசார் கண்டு பிடித்து விடுகிறார்களே; நம்ம ஊர் போலீசார் நாம் இருக்கு மிடத்தைத் தேடக்கூட முயன்றிருக்க மாட்டார்கள் போலிருக்கிறதே?

கல்: அவர்கள் மனசு வைத்திருந்தால் இன்னேரம் கண்டு பிடித்திருக்க முடியும். ஆனால் அவர்களுக்குப் பணங்கொடுத்து

யாராவது சரிப்படுத்தி யிருப்பார்கள். நாம் இன்னும் எத்தனை நாளைக்கு இங்கே இந்த நரகவேதனைப் படவேணுமோ தெரியவில்லையே...

(என்று கல்லப்பர் தலையைக் கவிழ்த்துக் கொண்டு கண்களை மூடிக்கொண்டு வலது கையால் நெற்றியைத் தாங்கிக் கொண்டு சிந்தனையில் மூழ்குகிறார். அப்போது வசந்தா சாய்ந்து கொண்டிருந்த ஜன்னலுக்கு நேராகத்தான் அந்த ரகசிய வீட்டுக்குள் வருகிற களவழி அமைந்திருந்தது. அதனால் யாரோ கதவைத் தட்டுகிற சப்தம் வசந்தாவின் காதில் லேசாக விழுந்தது. அந்த சப்தம் பெரிய இன்ஸ்பெக்டர் களவ வழியிலிருந்த இரண்டாவது கதவைத் தட்டின ஓசை. அந்த ஓசையைக் கேட்டுத் தன்னையும் தன் தையையும் ரயிலுக்கு அழைத்துப் போவதற்குத்தான் யாரோ வருகிறார்கள் என்ற ஆத்திரத்தில் வசந்தா அறையை விட்டு வெளியே வருகிறாள். கருப்பண்ணன் அதைப் பார்க்கிறான். தன் ஆசை நிறைவேறிவிடும் என்ற பூரிப்பு அவன் முகத்தில் பொங்குகிறது. வெளியே வந்த வசந்தா, கதவைத் தட்டின ஓசை வந்த இடத்தைப் பார்த்துக் கொண்டே அந்த வராந்தாவின் கோடிக்குப் போய் யாராவது வருகிறார்களா என்று மிகவும் ஏக்கத்தோடு பார்த்துக் கொண்டு நிற்கிறாள். ஒரே பாய்ச்சலில் கருப்பண்ணன் கல்லப்பர் இருந்த அறையின் கதவைமூடி வெளிப்பக்கம் சங்கிலி மாட்டிவிடுகிறான். வசந்தா நிற்கிற பக்கம் வேகமாகப் போகிறான். வசந்தா காலடி ஓசையைக் கேட்டுத் திரும்புகிறாள்.

கருப்: ராசாத்தி! இண்ணைக்கு ஊருக்குப் போறிங்களே... மனுக்கா எப்ப ராசாத்தி ஒன்னைப் பாக்கப்போறேன்.

[என்று இரண்டு கைகளையும் கவைபோல விரித்துக் கொண்டு கிட்டுகின்றான்.]

வச: பிரியமிருந்தால் எப்போது வேணுமானாலும் பார்க்கலாம். வழிவிடுங்கள்.

கருப்: ராசாத்தி...ராசாத்தி...ஒன்னைக் கும்புட்றேன்...ஒரே ஒரு முத்தங் குடுத்துப்புடு...ராசாத்தி...

வச: சீச்சி.

(என்று அவனை விலகிக் கொண்டு போக முயல்கிறாள். வசந்தா திரும்புகிற பக்கமெல்லாம் கருப்பண்ணன் குறுக்கிடுகிறான். நறுக்கென்று கருப்பண்ணன் வசந்தாவின் கையைப் பிடிக்கிறான். வெடுக்கென்று கையை இழுத்துக்கொண்டு வசந்தா பின்னுக்குப் போகிறாள். கருப்பண்ணன் அவளைத் தழுவிப் பிடிக்கத் தாவுகிறான். வசந்தா நழுவிக்கொள்ளுகிறாள். தாவிப்பிடித்த வேகத்தில் வசந்தாவின் ஆடையின்

முன்ருணே கருப்பண்ணன் கையிற் ஒக்கிக் கொள்ளுகிறது. முன்ருணையைப் பிடித்துக் கொண்டு இழுக்கிருன்.

அந்த சமயத்தில் அந்த வராந்தாவுக்குச் சமீபத்தில் வந்துவிட்ட இன்ஸ்பெக்டர் கோஷ்டியிலிருந்த சுந்தரம் "டேய்! கருப் பண்ணு!" என்று இடி இடித்ததுபோல் கத்துகிருன். அந்த முழக்கத்தைக் கேட்டுக் கருப்பண்ணன் நடுக்கிட்டுத் திரும் புகிருன். அந்தத் தருணம் பார்த்து வசந்தா வெடுக் கென்று முன்ருணையை இழுத்துக் கொண்டு ஒடி அறையைத் திறந்து உளளே புகுந்து தாழிட்டுக் கொள்ளுகிருள். கருப் பண்ணன் இருந்த வராந்தாவில் பிரகாசமான வெளிச்சம் இருந்தது. இன்ஸ்பெக்டர் கோஷ்டி வந்து கொண்டிருந்த இடம் இருள். அதனல் தன்னே 'டேய் கருப்பண்ணு' என்று அதட்டியது நாச்சிமுத்துதான் என்று நினைத்துக்கொண்ட கருப்பண்ணன்]

கருப் : ஏண்டாப்பா...ஒனக்கு மட்டும் இவ சொம்ப உரிமையா ? எவ்வளவு பாடுபட்டு நாங் கொண்டாந்தேன் அவளே !...நீ அலுங்காமெ கண்டிக்குக் கூட்டிக்கிட்டுப் போயி கண்ணலம் பண்ணிக்கப் பாக்கிறியா! நாச்சிமுத்தா!...நீ அவளே ரயிலேத் திக்கொண்டு போறதைப் பாத்துப் புட்டேன்...

[என்று வீராப்புடன் வருகிறவர்களே எதிர் பார்த்து நிற்கிருன்.

கருப்பண்ணன் வசந்தாவைப் பலாத்காரம்செய்ய முயன்றதை யும் அவள் தப்பித்துக் கொண்டு ஒடினதையும் பார்த்த காளியம்மாளின் பெண்மனம் மிகவும் துடிதுடித்து இன்ஸ் பெக்டரையும் தாண்டிக் கொண்டு முதலில் ஒடி வராந்தா வில் ஏறி காளியம்மாள் கருப்பண்ணனுக்கு முன்னல் காட்சியளிக்கிருள்.]

கருப் : அடே ! நீ யாரு ?

காளி : நானு ? நானெரு மனுசிதான்...தெரியிலியா?

[கருப்பண்ணன் காளியம்மாளே முறைத்துப் பார்க்கிருன்.

இந்த சமயத்தில் இன்ஸ்பெக்டரும் வராந்தாவின் மீது ஏறி வெளிச்சத்துக்கு வருகிரர். போலீஸ் உடையிலிருந்த இன்ஸ் பெக்டரைக் கண்டதும் கருப்பண்ணனுக்கு அச்சமும் ஆத் திரமும் வருகிறது.]

இன் : கருப்பண்ணு ! உன்னைக் கைது செய்கிறேன்.

கருப் : ஏன் ? என்னே என்னத்துக்குக் கைது பண்றது? அந்த நாச்சிமுத்தெக் கைது பண்ணுங்க...அவன்தான் வசந்தாளே கொளம்புக்குக் கூட்டிக்கிட்டுப் போவப் போருன்.

இன் : ' ஹாண்ட் கவ்.'

[என்று ஒழே இருந்த ஜவான்களுக்குக் கட்டளையிடுகிறார் ஜவான்கள் மேடைக்கு வருகிறார்கள். ஜவான்களுக்குப் பின்னால் சுந்தரமும் மேடைக்கு வருகிறான். சுந்தரத்தைப் பார்த்ததும் கருப்பண்ணனுக்கு ஆவேசம் வந்து விடுகிறது.]

கருப் : டேய் சுந்தரம்! நீ இன்னுமா உசுரோடு இருக்கிறே? நீதான் போலீசாருக்குச் சொல்லிக் குடுத்து கூட்டியாந்திருக்குறே.

[என்று கருப்பண்ணன் தன் இடுப்பிலிருந்த ரிவால்வரை எடுக்கிறான், பக்கத்தில் நின்று கொண்டிருந்த காளியம்மாள் சட்டென்று கருப்பண்ணனுடைய கையை ரிவால்வரோடு கெட்டியாகப் பிடித்துக் கொள்கிறாள். நாலைந்து ஜவான்கள் கருப்பண்ணனை அழுத்திக்கொண்டு ரிவால்வரைப் பிடுங்கிக் கொண்டு கைகளுக்கு விலங்கு போட்டு விடுகிறார்கள். விலங்கு போட்டும் கூட கருப்பண்ணன் உறுமிக்கொண்டு ஜவான்களை உதைக்கிறான். ஒரு ஜவான் தன் கையிலிருந்த துப்பாக்கிக் கட்டையினால் கருப்பண்ணன் காலில் பலமாக ஒரு அடி கொடுத்து விடுகிறான். அதன்பின் கருப்பண்ணன் அடங்கி விடுகிறான்.]

இன் : கருப்பண்ணா, உன் கூட்டாளி எங்கே?

கருப் : ஆரு? வீராசாமியா?

இன் : ஆமாம்.

கருப் : தோ அங்கே ஒரு ரூம்புக்குள்ள இருக்குறான். அந்த சோதாப் பயலாலெதான் நான் இங்கே வந்து மாட்டிக்கிட்டேன்.

இன் : அந்த ரூமைக் காட்டு...(சுந்தரத்திடம் திரும்பி) சுந்தரம் நான்போய் அந்த வீராசாமியை 'அரெஸ்ட்' செய்கிறேன். நீங்கள் வசந்தாவைப் பார்த்து சந்தோஷம் கொண்டாடி நல்லப்பரையும் கண்டு...உத்ஸாகப் படுத்துங்கள்...

சுந் : நான்மட்டுந்தானா...நீங்களே வந்து வசந்தாவுக்கும் நல்லப்பருக்கும் விமோசனம் தந்துவிட்டு அப்புறம் போய் வீராசாமியைப் பிடிக்கலாம், அதற்கென்ன அவசரம்?

இன் : சரி...

[சுந்தரம் முன்னாலும் காளியம்மாள் பின்னாலும் இன்ஸ்பெக்டர் இவர்களுக்குப் பின்னாலுமாக வசந்தா ஒடிப்புகுந்துகொண்ட அறையின் கதவுக்கருகில் வருகிறார்கள். கதவைத்தட்டும்படி இன்ஸ்பெக்டர் சுந்தரத்துக்கு ஜாடை செய்கிறார். சுந்தரம் இன்ஸ்பெக்டரே கதவைத் தட்ட வேணுமென்று திருப்பி

ஜாடை காட்டுகிறான். அவர்களுக்குள் தீர்மானம் ஆகிற வரைக்கும் காத்திருக்காமல் காளியம்மாள், தானே கதவைத் தட்டுகிறாள்]

காளி : அம்மா...வசந்தம்மா...ஒங்களோப் புடிச்சிருந்த பூதை யெல்லாம் உட்டுப்போச்சி, கதவைத் தொறங்க. ஊருக்குப போவலாம்.

வச : (உள்ளேயிருந்து) யாரது ?

காளி : நாந்தான் காளியம்மா.

வச : காளியம்மாளா ! அது யாரென்று தெரியவில்லையே.

காளி : ஒங்களோ அட்டாணி மேலே ஒளிய வச்சாளே, அந்தக் காளியம்மாதான்.

(படக்கென்று தாழ்ப்பாள் நீங்குகிற சப்தம் கேட்கிறது. கதவுக்கு அடுத்து நின்ற காளியம்மாள் சுந்தரம் முன்னால் இருக்கும்படி தான் பின்னால் நகர்ந்து கொள்கிறாள். கதவு திறக்கிறது. முன்னால் நிற்கிற சுந்தரத்தைக் வசந்தா பார்க்கிறாள். கூவரம் இல்லாமலும் ஸ்நானம் இல்லாமலும்சற்றே மாறியிருக்கிற சுந்தரத்தின் முகத்தை உற்றுப் பார்க்கிறாள். சுந்தரம் மௌனமாகப் புன்சிரிப்புச் செய்கிறான். உடனே உடை பாளாத்தை அறிந்துகொண்டு, குபிலென்று வசந்தா சுந்தரத்தின் பக்கம் சாய்கிறாள்)

வச : ஆ ! பிழைத்துக் கொண்டீர்களா ! எனக்குப் போன உயிர் வந்து விட்டது.

[என்று சுந்தரத்தின் இரண்டு கைகளையும் பிடித்துத் தன் கண்களில் ஒற்றிக்கொண்டு]

வச : வேறு எது வந்தாலும் வரட்டும், நீங்கள் உயிர் தப்பினதொன்றே போதும் எனக்கு...

(என்று சிறிதுநேரம் தன் கண்களிலேயே சுந்தரத்தின் கைகளை அழுத்திக் கொண்டிருந்துவிட்டு பிறகு தலைநிமிர்ந்து)

நாங்கள் இங்கே இருப்பதை எப்படிக் கண்டுபிடித்தீர்கள் ?

(வசந்தாவின் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் வடிகிறது)

சுந் : எல்லாம் காளியம்மாளின் கருணையினாலும் இன்ஸ்பெக்டருடைய சாமர்த்தியத்தினாலும் தான்.

(என்று இருவரையும் சுட்டிக் காட்டுகிறான். மகளைத் தள்ளிக் கொண்டு நல்லப்பர் முன்னால் வந்து சுந்தரத்தைக் கட்டித் தழுவப் போகிறார்.)

இன்: ஓ அவரைக் கட்டிப்பிடித்து விடாதீர்கள். குண்டு பாய்ந்த புண் இன்னும் பூரா ஆறவில்லை... ஆஸ்பத்திரியில் இருந்த படியே வசந்தாவின் விடுதலையைக் கணவரப் பார்க்க வேணு மென்ற ஆவேசத்தினால் வந்துவிட்டார்.

(என்று நல்லப்பரைத் தடுக்கிறார். நல்லப்பர் சுந்தரத்தைத் தொட்டுப் பார்த்து புண்ணைப்பற்றி விசாரித்துவிட்டு இன்ஸ் பெக்டரைப் பலமுறை முகருக்கிப் பாராட்டுகிறார். சற்று தூரத்தில் கருப்பண்ணன் விலங்கிடப்பட்டு கைதியாக நிற்பதைக் கண்டு சந்தோஷப் பித்து கொண்டு, குதிக்கிறார்—சிரிக்கிறார்—கூத்தாடுகிறார்.

இன்ஸ்பெக்டர், சுந்தரமும் காளியம்மாளும் வசந்தாவோடும் நல்லப்பரோடும் பேசிக்கொண்டிருக்க விட்டுவிட்டு, கருப் பண்ணனைக் கூட்டிக்கொண்டு ஜவான்களுடன் வீராசாமி இருக்கிற அறைக்குப் போகிறார்.

அந்த ரகசிய வீட்டின் கேரெரு பகுதியிலுள்ள ஒரு அறையில் வீராசாமியும் கருப்பண்ணனும் தங்கியிருந்தார்கள். அவர் களுக்கென்று ஒரு தனி வேலைக்காரனும் மற்ற வசதிகளும் அதகே ஏற்பாடு செய்யப் பட்டிருந்தன. அன்று மாலையிலி ருந்தே, வெளியே போனதின் போலீசாருக்கு அகப்பட்டு விடாதிருக்க எங்கே போய்த் தலைமறைவாக இருக்கலாம் என்பதைப் பற்றியே வீராசாமி சிந்தித்துக் கொண்டிருந் தான். இரவுசாப்பாடு முடிந்த உடன் அறைக்குள் சென்று வீராசாமியும் கருப்பண்ணனும் அவரவர்கள் மூட்டையை கட்டிக்கொண்டு நாச்சிமுத்துவின் வரவுக்குக் காத்திருந் தார்கள். அப்படி காத்திருக்கும் போதுதான் கருப்பண்ணன் தனியே வந்து-வந்து-வசந்தாவைப் பார்த்துக் கொண்டி ருந்தது. கருப்பண்ணனைக் கவனிக்காமல் வெகு நேரமாக அறைக்குள் படுத்திருந்த வீராசாமியின் கவனம் கருப்பண ணன் கட்டி வைத்திருந்த சிறு மூட்டையின் மீது சென்றது. மெள்ள எழுந்தான்; கதவைத் தாழிட்டுக் கொண்டு கருப் பண்ணனுடைய சிறு மூட்டையை அவிழ்த்து சோதித்தான். அதில் வீராசாமியிடம் சொல்லாமல் கருப்பண்ணன்மறைத் துக் கொண்ட நல்லப்பருடைய இரண்டு வைரமோதிரங்கள் இருந்தன. அவற்றை எடுத்துத் தன் மடியில் மறைத்து முடிந்து கொள்ளுகிறான்—வீராசாமி.

இந்தச் சமயத்தில் கருப்பண்ணன் வழிகாட்ட அந்த அறைக்கு வந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் கதவைத் தட்டுகிறார்.]

கருப்: ஏ! வீராசாமி கதவைத் தொற. தாப்பா போட்டுக்கிட்டா தப்பிச்சிக்கலாமுண்ணு பாத்தியா? வா, ஒனக்கும் ஓலே வந்து டிச்சி. ஒன்னலெ வந்த வெணே தான்...

வீரா : கருப்பண்ணு! எங்கே போயிருந்தாய் இன்னேரம் ?... நாச்சிமுத்து வந்துவிட்டாரா, இதோ வந்துவிட்டேன்.

(என்று அவசரமாகக் கருப்பண்ணன் மூட்டையைக் கட்டி வைத்துவிட்டு எழுந்து வந்து கதவைத் திறக்கிறான். இன்ஸ் பெக்டரும் ஜவான்களும் உள்ளே போகிறார்கள். அவர் களைக் கண்டதும் திடுக்கிட்டு)

வீரா : ஐயோ! போலீசா! இங்கேயே வந்து விட்டார்களா? இன்ஸ்பெக்டர் சார், என்னை ஒன்னும் தொந்தரவு செய்ய வேண்டாம். பேசாமல் நானே உங்களோடு வருகிறேன்.

இன் : அதுதான் புத்திசாலித்தனம்...ஹாண்ட் கப்.

[ஜவான்கள் அவனுக்கு விலங்கு போடப் போகிறார்கள். வீராசாமி தகராறு செய்யாமல் தானே கைகளை நீட்டி விலங்குபோட விடுகிறான்.

வீராசாமிக்கும் கருப்பண்ணனுக்கும் சொந்தமான பொருள்கள் என்று அந்த அறையிலிருந்தவைகளைப் போலீசார் எடுத்துக் கொண்டு, அவ்விருவரையும் நடத்திக் கொண்டு வசந்தா கல்லப்பர் அறைக்கு வருகிறார்கள். இன்ஸ்பெக்டருடைய உத்தரவு பிரகாரம் அந்த ரகசிய வீட்டிலுள்ள எல்லா வேலைக்காரர்களும் ஒரு இடத்தில் வந்து சேருகிறார்கள். முன்னால் நான்கு ஜவான்களும் பின்னால் நான்கு ஜவான் களுமாக கருப்பண்ணனும் வீராசாமியும் முதலில் போக உத்தரவாகிறது. அதன்பின் அங்கிருந்த எல்லா வேலைக் காரர்களும் போகிறார்கள். அதற்குப் பின்னால் இன்ஸ் பெக்டரும் கல்லப்பரும் போகிறார்கள். அதற்குப்பின் காளியம்மாளும் வசந்தாவும் சுந்தரமும் நடக்கிறார்கள். ரகசிய வீட்டின் ரகசியக் கதவைக் கடந்த உடன் இன்ஸ் பெக்டர் மற்றெல்லாரையும்போகச் சொல்லிவிட்டு கதவை முன்போலவே மூடி பூட்டிவிட்டு மாடத்திலிருந்து எடுத்த விளக்கையும் திருகிவைத்துவிடுகிறார். எல்லாரும் வெளி வாசலுக்கு வருகிறார்கள். நாச்சிமுத்துவின் வீட்டுக்கு வெளியிலிருந்து உளளேயும் உள்ளேயிருந்து வெளியேயும் யாரும் போகமுடியாதபடி போலீஸ் பாரா போட்டு சப் இன்ஸ்பெக்டரை ஜவான்களுடன் நிறுத்திவிட்டு மற்றவர் களெல்லாம் மோட்டார் வண்டிகள் இருந்த இடத்துக்குப் போகிறார்கள். கருப்பண்ணனையும் வீராசாமியையும் முன் னாலேயே நாச்சிமுத்தும் அவனுடைய குண்டர்களும் உட் கார்ந்திருக்கிற போலீஸ் மோட்டாரில் ஏற்றுகிறார்கள். சார்ஜெண்டும் ஜவான்களும் அதில் ஏறிக்கொளளுகிறார்கள். கல்லப்பரும், வசந்தாவும், காளியம்மாளும் சுந்தரம் வந்த காரில் பின்சீட்டில் உட்காருகிறார்கள். இன்ஸ்பெக்டரும் சுந்தரமும் முன்சீட்டில் டிரைவரோடு உட்காருகிறார்கள். முதலில் போலீஸ் வண்டி போகிறது. பின்னால் நடராஜர் வண்டி போகிறது.]

காட்சி 70

இடம் : நல்லப்பர் மாளிகை

காலம் : மாலை

[நாச்சிமுத்தைக் கைது செய்து நல்லப்பரையும் வசந்தாவையும் கண்டு பிடித்துவிட்ட சேதி வெகு வேகமாகப் பரவி பாண்டி நத்தமும் அதன் சுற்றுப் புறங்களும் ஒரே பரபரப்பாக விளங்குகின்றன. பத்திரிகைகள் எல்லாம் கொட்டை எழுத்துக்களில் அதைப் பிரசுரம் செய்து போலீசாரை மிகவும் பாராட்டி எழுதின.

நல்லப்பரைக் கண்டு அவரையும் அவருடைய மகளையும் வாழ்த்துவதற்கு மனிதர்களும் பக்தர்களும் கூட்டங்கூட்டமாக வந்து குவிகின்றார்கள்.

சுந்தரத்தைப் பார்க்க வந்த கும்பல்களுக்கு ஆஸ்பத்திரியில் இடமில்லாமல் அடக்குமுறையால் ஜனங்களை அப்புறப் படுத்த வேண்டியதாயிற்று.

காளியப்பாளையும் அவளுடைய குடும்பம் முழுவதையும் தங்கள் வீட்டுக்கே வந்துவிடும்படி வசந்தா வற்புறுத்திய தால் அவளுடைய விருப்பத்துக்கிணங்கி செங்கோடனையும் குழந்தைகளையும் நல்லப்பருடைய மோட்டாரை அனுப்பி நல்லப்பருடைய வீட்டுக்கே கொண்டுவந்து விட்டார்கள். அதனால் நல்லப்பரையும் வசந்தாவையும் பார்க்கவரும் ஜனங்கள் செங்கோடனையும் காளியம்மாளையும் தெரிசிக்க விரும்பினர்கள்.

நாச்சிமுத்துவைக் கைது செய்ததின் சுமார் பதினைந்து நாள் வரையிலும் அவனுடைய குடியிருப்பு வீட்டையும் ரகசிய வீட்டையும் போலீசார் விஸ்தாரமான சோதனைகள் செய்தார்கள். சுமார் ஏழெட்டு வருஷங்களாக அந்த வட்டாரத்தில் நடந்திருக்கிற கொலைகளில் சம்பந்தப் பட்ட ஏராளமான சொத்துகளும் ஆயுதங்களும் கண்டு பிடிக்கப்பட்டன. அநேக கொலைகளுக்கும் சில கொலை களுக்கும் நாச்சிமுத்து மிகவும் சம்பந்தப்பட்டவன் என்பதற்கான ஆதாரங்கள் அநேகம் அகப்பட்டன. மதுரையிலிருந்து அதற்கென்றே தருவிக்கப்பட்ட அதிகாரி கள் நாச்சிமுத்துவின் மேல் குற்றப் பத்திரிகை தயார் செய்கிறார்கள்.

காச்சிமுத்துவைக் கைது செய்த அப்போது போலீஸ் மோட்டார் வண்டிக்குப் பின்னால் வந்த கடராஜனுடைய 'ப்ரொஷர் கார்' நேராக ஆஸ்பத்திரிக்குப் போய் அங்கே சுந்தரத்தை விட்டுவிட்டு, போலீஸ் ஸ்டேஷனில் பெரிய இன்ஸ்பெக்டரை இறக்கிவிட்டு, மற்றவர்களை கல்லப் பருடைய மாளிகைக்குக் கொண்டுபோய்விட்டது.

அதற்கு அடுத்த நாள் முதற்கொண்டு தினந்தினம் வசந்தாவும் கல்லப்பரும்—சில சமயங்களில் வசந்தா மட்டும் ...ஆஸ்பத் திரிக்கு வந்து சுந்தரத்தின் சௌக்யத்தைக் கவனித்துவிட்டுப் பேசிக்கொண்டிருந்துவிட்டுப் போவார்கள். சுமார் பத்து நாளைக்குப்பிறகு சுந்தரம் ஆஸ்பத்திரியிலிருந்து 'டிஸ்சார்ஜ்' செய்யப்பட்டான். அந்த நாளை முன்னாலேயே அறிந் திருந்த வசந்தா அவள் மட்டும் ஆஸ்பத்திரிக்கு வந்திருந்து அங்கிருந்து விடுபட்ட சுந்தரத்தை நேராகத் தன்னுடைய வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போய்விட்டாள். அன்றைக்கு ஆஸ்பத்திரியிலிருந்து மகன் வீட்டுக்கு வந்துவிடவேண்டிய நாள் என்பதை அறிந்திருந்த மீனாட்சியம்மாள் சுந்தரத்தை அவனுடைய மாமன் வீட்டுக்குக் கூட்டிக்கொண்டுபோகத் தானும் தம்பி கடராஜனும் தன்னுடைய குழந்தைகளுடன் ஆஸ்பத்திரிக்கு வந்தாள். சுந்தரம் சிறிது நேரத்துக்கு முன்னால்தான் வசந்தாவுடன் கல்லப்பர் வீட்டுக்குப் போய் விட்டதை அறிந்தாள்.

கல்லப்பர் வீட்டுக்குச் சுந்தரம் போக வேண்டியது சரிதான். ஆனாலும் ஆஸ்பத்திரி இருக்கிற அதே ஊரில் வசிக்கும் அவனுடைய மாமன் வீட்டை எட்டிக்கூடப் பார்க்காமலும், உபசாரத்துக்காகவேனும் மாமனிடத்திலும் ஒரு வார்த்தை கூட சொல்லிக்கொள்ளாமலும், சுந்தரத்தையே நிரந்தரமாக நிரந்தரமாக பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கிற ராஜேஸ்வரி யைத் துளிகூட மதிக்காமலும், வசந்தாவுடன் சுந்தரம் போய்விட்டதில் மீனாட்சியம்மாளுக்கு வந்த வருத்தம் எந்த விதத்தாலும் விவரிக்க முடியாதது. சுந்தரம் வசந்தாவுடன் போய்விட்டான் என்றதைக் கேட்டதும் மீனாட்சியம்மா ளுக்கு மாரடைப்பு வந்துவிட்டதுபோல் மயக்கம உண்டாகி, நெஞ்சை அழுத்திக் கொண்டு வெகு நேரம் அசைய முடியாமல் உட்கார்ந்துவிட்டாள். அதை அநுமானித்த கடராஜன் டாக்டரிடம் சொல்லி உடனே அதற்கு உப சாந்தியான பரிகாரங்களைச் செய்வித்து வீட்டுக்கு அழைத்துப் போனார்.

அவர்கள் கடராஜனுடைய வீட்டுக்குத் திரும்பிப் போன கொஞ்ச நேரத்துக்கெல்லாம கல்லப்பருடைய கார் கடராஜன் வீட்டுக்கு வந்தது. மீனாட்சியம்மாளையும் அவருடைய குழந்தைகளையும் சுந்தரம் அழைத்துக் கொண்டுவரச் சொன்னதாக டிரைவர் சொன்னான். அதற்கு மீனாட்சியம்மாள் என்றும் வராத கோபத்துடன் "நான் இனி மேல் என் குழந்தைகளுடன் இங்கேயேதான்

இருக்கப் போகிறேன். வேறு எங்கும் வரமாட்டேன் என்று சொல்லிவிடு" என்றார். அதைக் கேட்டுக்கொண்டு பக்கத்தில் நின்ற ராஜேஸ்வரி கலகலவென்று சிரித்து 'என்ன அத்தை உங்களுக்குக்கூட இவ்வளவு கோபம் வருகிறதே" என்றாள். அதற்கு மீனாட்சியம்மாள் "ஆமாண்டியம்மா உனக்குத்தான் கோபமும் இல்லை, ரோசமும் இல்லை. உன்னைத் துளிகூட மதிக்காத அவனையேதான் கட்டிக் கொள்ள வேண்டும் என்று அலைகிறாய். அவன் அந்தப் பணக்காரியையே கட்டிக்கொண்டு அந்த மாளிகை மேலேயே இருக்கட்டும். நான், நீ யாரைக் கட்டிக்கொண்டாலும் உன்னோடேயே இருந்துவிடுகிறேன்" என்றார். அதைக்கேட்டு மறுபடியும் அதிகமாகச் சிரித்து ராஜேஸ்வரி பூரிப்படைந்தாள்.

சுந்தரம் நல்லப்பர் வீட்டுக்கு வந்தபின், நல்லப்பரும் வசந்தாவும் சுந்தரமும் அடிக்கடி கூடிக் கூடிப் பேசி அதன் பயனாக நல்லப்பருடைய மாளிகையில் ஒரு பெரிய விழாக் கொண்டாடி அதில் மிகவும் முக்கியமான சில விஷயங்களை வெளியிடுவதென்றும் தீர்மானிக்கப்படுகிறது. அந்த விழாவிற்கு 'விமோசன விழா' என்று பெயரிடுவதென்றும் நிச்சயிக்கப்பட்டது. அதற்கு மாகாணத்திலுள்ள எல்லா பிரபல உத்தியோகஸ்தர்களையும் அழைப்பதென்றும் அப்போது ஒரு பெரிய விருந்தும் அன்னதானமும் நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது. அதன்படி நல்லப்பர் வீட்டின் முன்னால் ஒரு பிரம்மாண்டமான கொட்டகை போடப்பட்டு வெகு அபூர்வமான முறையில் அலங்காரம் செய்யப்பட்டது. அந்த அலங்காரங்களுக்கும் விழாவின் அழைப்புகளை அச்சிட்டு அவரவர்களுக்கு அனுப்புவதற்கும் வேண்டிய காரியங்களைக் கண்காணிப்பதில் சுந்தரமும் வசந்தாவும் வெகு பாடுபட்டு உழைத்தார்கள். எந்த இடத்துக்கும் எந்த நேரத்திலும் சுந்தரமும் வசந்தாவும் ஜோடியாகவே போய் எல்லாக் காரியங்களையும் இரண்டு பேரும் சேர்ந்தே கவனிப்பதைக் கண்ட கிராமத்து ஜனங்கள் 'கல்யாணத்துக்கு முன்னாலேயே இவர்கள் இவ்வளவு சகஜமாக எங்கும் போகிறார்களே' என்று அதிசயப்பட்டு பேசிக்கொள்ளலானார்கள்.

விழாவிற்கு இரண்டு நாளைக்கு முன்னால் வசந்தாவும் சுந்தரமும் நந்தவனத்துக்குப் போய் பக்கம் பக்கமாக ஒரு மேடையின் மீது உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள்.]

சுந் : வசந்தா! முன்னொரு நாள நாமிருவரும் இதே இடத்தில் இதே மாதிரி உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தபோது உங்கள் அப்பா வந்து பார்த்து கோபித்துக்கொண்டாரே, ஞாபகமிருக்கிறதா?

வச : ஏன் ஞாபகமிருக்காது? அதை மறக்கக்கூட முடியுமா?

சுந்: இப்போது பார்த்தால் என்ன சொல்லுவார்?

வச: ஆனந்த பரவசமடைந்து கூத்தாடுவார்.—

சுந்: விழா முடிந்த உடன் அதே கொட்டகையில் உன்னுடைய திருமணத்தை வெகு விமரிசையாக நடத்தவேணுமென்று உங்கள் அப்பா சொல்லுகிறார்.

வச: ஏன் என்னுடைய திருமணம்? உங்களுடைய திருமணமும் தான்.

(என்று கலகலவென்று சிரிக்கிறாள்.)

சுந்: ஆமாம்.

(என்று சுந்தரமும் வசந்தாவோடு சிரிக்கிறான். கொஞ்ச நேரம் ஒரு பேச்சுமில்லாமல் இருவரும் ஒருவரையொருவர் பார்த்து சிரித்துக் கொள்ளுகிறார்கள்.)

வச: கல்யாணத்தைப் பற்றி உங்கள் தயாருக்கிருந்த வருத்தத்தை மாற்றி விட்டீர்களா?

சுந்: இல்லை. இன்னும் என் தாயாருக்குள்ள வருத்தம் அப்படியேதான் இருக்கிறது. அதனால்தான் அவர்களைக் கூட்டிக் கொண்டுவர அனுப்பின டிரைவரிடத்தில் இனிமேல் அவர்கள் அங்கேயே மாமா வீட்டில் இருந்துவிடப் போவதாகச் சொல்லியனுப்பிவிட்டார்கள்.

வச: ஐயையோ! அப்படி அவர்கள் வருத்தப்படும்படி நீங்கள் விடலாமா? எத்தனை நாளைக்கு உங்களுடைய எண்ணத்தை அவர்களிடம் சொல்லாமல் இப்படி மறைத்துவைக்கப் போகிறீர்கள்?

சுந்: எனக்கும் அது வருத்தம்தான். சீக்கிரம் என் கருத்தை அவர்களிடம் சொல்லிவிடுகிறேன்.

வச: ராஜேஸ்வரி என்ன சொல்லுகிறாள்?

சுந்: ராஜேஸ்வரியைப் பற்றி எனக்குக் கவலையே இல்லை.

வச: ராஜேஸ்வரியைப் பற்றி நீங்கள் எப்படி நினைத்தாலும் உங்கள் மாமாவை நீங்கள் எப்படி மதித்தாலும் உங்கள் தாயாரிடத்தில் நீங்கள் ஒளி மறைவில்லாமல் உங்கள் எண்ணத்தைச் சொல்லி அவர்களைச் சமாதானப்படுத்திவிட வேணும்.

சுந்: அப்படியே செய்துவிடுகிறேன்; நீ கவலைப்படாதே. ஆனால் உன்னைப் பற்றி உன் தகப்பனையின் அபிப்பிராயத்தை நான் அறிந்த பிறகுதான் என்னைப் பற்றி என் தாயாரிடத்தில் நான் பேசலாமென்றிருக்கிறேன்.

வச : என் தந்தை இனி நாம் என்ன சொன்னாலும் அதற்கு வெகு சந்தோஷமாகச் சம்மதிப்பார். நாச்சியார்புத்துவீட்டுச் சிறைவாசம் அவரை முற்றிலும் புது மனிதராக்கிவிட்டதை நிரூபிக்க இந்த 'விமோசன விழா'வில் அவர் வெளியிடப் போகிறதாகச் சொன்ன வெகு புரட்சிகரமான விஷயங்களே போதுமானவையல்லவா ?

சுந் : அது வாஸ்தவம்தான். ஆனாலும் அது வேறு விஷயம், இது வேறு விஷயம். தன்னுடைய ஒரே குழந்தையான அருமை மகளை, அவர், மூன்று வெறுத்துவிட்ட ஒருவனுக்கே மணவியாகக் கொடுக்க மறுபடியும் சந்தோஷத்தோடு சம்மதிப்பாரா என்பதை நாம் வெறும் அநுமானத்தால் நிச்சயித்துவிட முடியாது. அதை அவரே மனமார வாய் விட்டுச் சொன்னால்தான் தெரியும்.

வச : இது வரையிலும் எங்கப்பா அதைப்பற்றி உங்களிடம் ஒன்றுமே சொல்லவில்லையா ?

சுந் : அதற்குச் சந்தர்ப்பமே வாய்க்கவில்லை. விழாவுக்காகப் போடப்பட்டிருக்கிற கொட்டகையை நேற்று உங்கள் அப்பா பார்த்துக்கொண்டிருந்தபோது நாம் இருவரும் போட்டுக் கொடுத்த கொட்டகையின் 'பிளானும்' அதற்குச் செய்யப் பட்டிருக்கிற அலங்காரங்களும் வெகு அழகாக அமைந்திருப் பதாக மெச்சி மகிழ்ந்து கொண்டிருந்தார். அந்த சமயத்தில் பேச்சோடு பேச்சாக 'வசந்தாவின் விவாகத்தையும் இந்தக் கொட்டகையிலேயே நடத்திவிடலாம் என்று எண்ணுகிறேன்' என்று மானேஜரிடம் சொல்லிக்கொண்டிருந்தது என் காதில் விழுந்தது. அதைத் தவிர உன் கல்யாணத்தைப் பற்றி அவர் யாரிடத்திலும் ஒண்ணும் பேசினதாகத் தெரிய வில்லை.

(இந்த சமயத்தில் ஒரு வேலைக்காரன் வருகிறான்.)

வேலை : (வணங்கி) பெரிய இன்ஸ்பெக்டர் ஒங்களைப் பார்க்க வந்திருக்குறாங்க.

சுந் : அவரை இங்கே அழைத்துக் கொண்டு வா.

(வேலைக்காரன் போகிறான். சற்று நேரத்தில் பெரிய இன்ஸ் பெக்டர் வருகிறார். சுந்தரமும் வசந்தாவும் எழுந்து வணங்கி)

சுந் } வச } வாங்க சார் ; வாங்க, வாங்க. உட்காருங்கள்.

(இன்ஸ்பெக்டர் உட்காருகிறார்.)

சுந் : நாச்சிமுத்து 'கேஸ்' உங்களுக்கு மூச்சுவிடக்கூட நேர மில்லாமல் அலையச் செய்கிறது.....

இன் : ஆமாம் சார்... அடடா என்னேன்ன அக்ரமங்கள் செய்திருக்கிறான் சார்... இந்த நாச்சி முத்து... ஏழு வருஷமாக.

வச : அவைகளையெல்லாம் கண்டுபிடித்துவிட்டீர்களா ?

இன் : எல்லாவற்றையும் கண்டுபிடிக்க எவ்வளவு நாளாகுமோ சொல்ல முடியாது. இப்போது கண்டுபிடித்திருக்கிற வரைக்கும் சாட்சியங்களைச் சேகரித்துக் குற்றப் பத்திரிகை தயார் செய்யவே இரண்டு மூன்று மாசங்களாகும்... இதில் அநேக பெரிய பெரிய உத்யோகஸ்தர்கள் மாட்டிக்கொள்ளப் போகிறார்கள்... யாராயிருந்தாலும் நான் விடப்போவதில்லை.

சுந் : உங்களைப்போன்ற உத்யோகஸ்தர்கள் இருந்தால் கொள்ளை களும் கொலைகளும் இவ்வளவு சுலபமாக நடக்குமா ?

இன் : சொம்ப சந்தோஷம்... இப்போ... எனக்கு நிற்க நேரமில்லை. நாச்சிமுத்து கோஷ்டியைப் பற்றிய வெகு சுவாரஸ்யமான பல கதைகள் சாவகாசமாக உங்களுக்குப் பின்னால் சொல்லுகிறேன். இப்போ வெகு அவசரமாக உங்களிடத்தில் சில விஷயங்களை அறிந்துபோக வந்தேன்.

சுந் : என்ன ?

இன் : முத்துவீரப்பன் உங்களோடு படித்தவனுமே, வாஸ் தவமா ?

சுந் : ஆம். பி. ஏ. கிளாசில் இரண்டு வருஷம் நாங்கள் சேர்ந்து படித்தவர்கள்.

இன் : அவனைப் பற்றி உங்களுக்குத் தெரிந்ததையெல்லாம் சொல்லுங்கள்.

சுந் : நானும் அவனும் பள்ளிக்கூடத்திலும் வெளியிலும் மிகவும் நெருங்கிப் பழகினவர்கள். அவன் நல்ல புத்தி கூர்மை உள்ளவன். எல்லா பாடத்திலும் நல்ல மார்க் வாங்குவான். சுறுசுறுப்பான சுபாவமுள்ளவன். படபடப்பாகத்தான் பேசுவான். பொய் பித்தலாட்டம் இல்லாதவன் ஆனால் முரட்டுப் பேர்வழி. அடிதடிக்கு அஞ்சமாட்டான்... நாங்கள் இருவரும் ஒரே வருஷத்தில் பி. ஏ. பாஸ் செய்தோம். பள்ளிக் கூடத்தை விட்டபின அவனைப்பற்றி எனக்கு ஒன்றும் நேராகத் தெரியாது. அரசியல் புரட்சிகளை நடத்துவதற்கான விஷயங்களை அறிந்துவர ஐரோப்பாவுக்குப் போய்வந்ததாகக் கேள்விப்பட்டேன். பிறகு புரட்சிப் பிரசாரம் செய்து வருவ

தாக அறிந்தேன். கடைசியாக ஒரு புரட்சிப் பிரசங்கக் கூட்டத்தில் அவனைச் சந்தித்தேன்...

இன் : இன்ப மாளிகை ஹோட்டலில் நீங்கள் என்ன பேசினீர்கள் ?

சுந் : நானும் அவனோடு 'புரட்சி' இயக்கத்தில் சேருவதாகவும், ஆனால் கொள்ளை கொலை முதலிய பலாத்கார முறைகளை அவன் விட்டுவிட வேண்டும் என்று நான் சொன்னேன்... அவன் புரட்சி உண்டாக்குவதற்கு ஓரளவாவது பலாத்காரம் அவசியம் வேண்டியதுதான் எனறு சொன்னான்... நான் சம்மதிக்கவில்லை. அதன் பிறகு அவன் என்னுடைய வழிக்கு இணங்குவதாக வாக்களித்தான்.

இன் : அதன்படி நடந்து கொண்டானா

சுந் : நடந்துகொண்டதாகத்தான் அனுமானிக்கிறேன். வீராசாமியின் வேகத்தையும் கருப்பண்ணனுடைய மூர்க்கத்தனத்தையும் அப்போதைக்கப்போது அவன் அடக்கி வந்ததாகத்தான் கேள்விப்பட்டேன்.

இன் : அவனும் அப்படித்தான் வாக்குமூலம் கொடுத்திருக்கிறான். வீராசாமியும் கருப்பண்ணனும் செய்துவிட்ட காரியங்களிலிருந்து பலாத்காரத்தில் தனக்கிருந்த கொஞ்சம் நம்பிக்கைகூட முற்றிலும் போய்விட்டதாகவும், தான் இனி இந்தப் புரட்சி இயக்கத்தில் கலந்து கொள்வதில்லையென்றும் தன்னை விட்டுவிடவேணும் என்றும் எழுதிக்கொடுத்திருக்கிறான்.

சுந் : அவனை விட்டுவிட வேண்டியதுதான். அவன் நம்பத் தகுந்தவன்...அவனைக் கருப்பண்ணனோடும் வீராசாமியோடும் சேர்த்து அளவிடக் கூடாது.

இன் : வேகமான பிரச்சங்கங்கள் செய்திருப்பதைத் தவிர அவன் பலாத்காரமான குற்றங்கள் எதிலும் சம்பந்தப்பட்டிருப்பதாகச் சாட்சியம் கிடைக்கவில்லை. அவன் வாக்குமூலத்தை நமபலாமா என்று அறிந்துபோகத்தான் இப்போது வந்தேன்... அவனைக் குற்றவாளிகளோடு சேர்ப்பதா இல்லையா என்ற விஷயத்தை இன்றைக்கே தீர்மானித்து ஆகவேண்டியிருந்தது. அதற்காக வந்தேன். அவனுடைய வாக்குமூலத்தை நம்பலாமா ?

சுந் : முற்றிலும் நம்பலாம். அதற்கு நான் ஜாமீன். அவனை விடுதலை செய்து என்னிடம் அனுப்புங்கள்.

இன் : சரி... ரொம்ப சந்தோஷம்... நான் போய் வருகிறேன்... கொட்டாரத்தைப் பார்த்தேன். ரெகு அழகாக இருக்கிறது... கல்யாண மண்டபம்தான்...

சுந் : ஆமாம், கல்யாண மண்டபம்தான். வசந்தாவின் திருமணம் அதிலேதான் நடக்கப்போகிறது.

இன் : ஏன், உங்கள் திருமணம் ?

சுந் : எனக்கும் என்றுதான் எண்ணிக்கொண்டிருக்கிறேன்.

இன் : எண்ணிக்கொண்டிருக்கிறீரா ! சுந்தரம், பலே பேர்வழி, நீர். எல்லாரையும் விழுங்கி ஏப்பமிட்டுவிடக் கூடியவர்.

(இன்ஸ்பெக்டர் சிரிக்கிறார். வசந்தாவும் சுந்தரமும் அவருடன் சேர்ந்து சிரிக்கிறார்கள். இன்ஸ்பெக்டர் போகிறார்.)

காட்சி 71

இடம்: நல்லப்பருடைய மாளிகை

காலம்: மாலை

['விமோசன விழா' நடப்பதற்குக் குறிப்பிட்ட நாளில் காலையில் நல்லப்பருடைய வாசஸ்தலத்துக்கு அருகிலும் அவருடைய ஆதிக்யத்துக்கு உட்பட்ட மில்களிலும் அவருக்குச் சொந்த மான விவசாயப் பண்ணைகளிலும் அங்கங்கே ஏழைகளுக்கு அன்னதானம் நடக்கிறது. அவருடைய மில்களிலும் பண்ணைகளிலும் வேலை செய்கிற பாட்டாளிகளுக்கு மட்டு மல்ல; வந்தவர்களுக்கெல்லாம் சாப்பாடு நடக்கிறது. அந்தந்த இடத்துக்குத் தகுந்படி கொட்டு முழக்கங்களும் வாத்தியக் கச்சேரிகளும் நடக்கின்றன; அந்த வட்டாரத்தில் அதுவரையிலும் கண்டறியாத களியாட்டங்களில் தொழிலாளரும் விவசாயிகளும் ஈடுபட்டு கொள்ளுகிறார்கள். அதனால் வரையிலும் நல்லப்பர் என்ற பெயரைச் சொல்லவும் நடுநடுங்கி மனதுக்குள்ளே சபித்துக் கொண்டிருந்த கிராமவாசிகள் வாய்விட்டு அவரை வாழ்த்துகிறார்கள்.

அந்த விழாவுக்கு மாலையில் நம்முடைய மாகாணத்தின் கவர்னர் தலைமை வகிக்கப் போகிறார் என்று பல ஜில்லாக்களின் கலெக்டர்களும், உயர்தர உத்தியோகஸ்தர்களும் காலையிலிருந்து நல்லப்பருடைய விருந்தினர்களாக வந்து குவிகிறார்கள். அவர்களுக்கெல்லாம் ஒரு தனி இடத்தில் அமோகமான விருந்து நடக்கிறது.

மாலை நாலு மணிக்கு 'டீ பார்ட்டி.' அதன் பின் கவர்னருடைய தலைமையில் விழா ஆரம்பிக்கப்படும். சில பிரசங்கங்கள் நடந்த பிறகு பாட்டுக் கச்சேரிகள்; அப்புறம் இரவு விருந்து. அதற்கப்புறம் நாட்டியக் கச்சேரி. கடைசியாக வாண வேடிக்கை. இப்படியாக நிகழ்ச்சிகளின் முறை நிச்சயிக்கப்பட்டிருந்தது.

டீ பார்ட்டிக்குச் சற்று முன்னால் கவர்னர் 'காரில்' வருகிறார். சாதாரண முழக்கத்துடன் அவரை எதிர்கொண்டு மாளிகையிட்டு வாசலுக்கு நல்லப்பர் உள்ளே அழைத்துக்கொண்டு போகிறார். விருந்தாளிகள் பின் விழா கூடுகிறது. கொட்டகையின் ஒரு கோடியில் ஒரு விஸ்தாரமான மேடை. அதில் அக்ராசனாதிபதிக்கும் பெரிய பெரிய உத்தியோகஸ்தர்களுக்கும் ஆசனங்கள். மேடைக்குக் கீழ் நேராக கனவான்கள் அமரு

மிடம். வலது புறத்தில் பெண்களுக்குப் பிரத்யேக இடம். இடதுபுறத்தில் மில் தொழிலாளிகளுக்கும் விவசாயிகளுக்கும் மற்றபள்ள கிராம ஜனங்களுக்கும் தனி இடம். ஒலி பெருக்கிகளும் மின்சார விசிறிகளும் விளக்குகளும் ஒவ்வொரு பகுதியிலும் ஏராளமாக அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆயிரக்கணக்கான மக்கள் வெகு அமைதியுடன் அமர்ந்திருக்கிறார்கள். கொட்டகை முழுவதிலும் திரும்பின பக்கமெல்லாம் சிறிதும் பெரிதுமாக எண்ணிறந்த தேசீயக் கொடிகள் நிகழ்கின்றன. மேடையின் பின்பகுதியில் அக்ராசனத்துக்கு நேராக ஒரு கனத்த ஸ்தூபி காணப்படுகிறது. உயரமான அதன் உச்சியில் ஏதோ ஒரு பொருள் நாற்புறமும் மூவர்ணத் திரை போட்டு மூடப்பட்டிருக்கிறது.

அக்ராசனர் மேடைக்கு வருகிறார். நல்லப்பர் காட்டுகிற நடு ஆசனத்தில் அமர்கின்றார். அவருக்கு இடதுபுறத்தில் நல்லப்பர் உட்காருகின்றார். நல்லப்பருக்குப் பின்னால் சுந்தரமும் முத்துவீரப்பனும் அமர்கிறார்கள். அவர்களுக்குப் பின்னால் செங்கோடனும் காளியம்மாளுடைய மாமன் மகியாண்டியும் வெகு கூச்சப்பட்டுக் கொண்டு நாற்காலியில் உட்காரத் தெரியாமல் கோணிக்கொண்டு அமர்ந்திருக்கிறார்கள். மேடையின் ஒருபுறத்தில் பெண்களுக்கென்று ஒதுக்கப்பட்டிருந்த பகுதியில் வசந்தாவும் காளியம்மாளும் வசந்தாவின் தாயாரும் மீனாட்சியம்மாளும் அவருடைய பெண்களும் இருக்கிறார்கள்.....(பலமுறை மோட்டாரை அனுப்பியும் மீனாட்சியம்மாள் விழாவுக்கு வர விரும்பவில்லை. கடைசியாக வசந்தாவின் வற்புறுத்தலின் மேல் நல்லப்பரே நேரில் பாண்டிநத்தம்போய் கடராஜனையும் மீனாட்சியம்மாளையும் விழாவிற்கு அழைத்தார். தாய் மனம் தள்ள, மீனாட்சியம்மாள் மட்டும் குழந்தைகளுடன் வந்தார்கள். விடைபெற்றுக்கொள்ளக்கூட வீட்டுக்கு வராமல் சுந்தரம் ஆம்பத்திரியில் இருந்தபடியே வசந்தாவுடன் போய்விட்டதில் மிகவும் கொதிப்படைந்திருந்த கடராஜன் 'சுந்தரம் மிகவும் நன்றிகெட்டவன். அவன் இருக்கிற நிலையைக்கூட இனி நிரும்பிப் பார்க்கமாட்டேன்' என்று விழாவிற்கு வர மறுத்தேவிட்டார்.)

விழா ஆரம்பமாகிறது. வழக்கப்பிரகாரம், தலைமை வகித்து விழாவை கடத்திக் கொடுக்கும்படி அக்ராசனரை சுந்தரம் சிரேரேபித்து அதை முத்துவீரப்பன் ஆமோதிக்கிறான். தலைவர் முன்னுரை பேசுகிறார்.]

தலைவர்: மகா ஜனங்களே! இந்த விழாவிற்குத் தலைவராக இருக்கும்படிக் கிடைத்தற்கு நான் மிகவும் சந்தோஷப்படுகிறன். அதற்காக ஸ்ரீமான் நல்லப்பர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்த விழா வெகு விசேஷமானது. வழக்கமாகப் பணக்காரர்கள் அதி

காரிகளை அழைத்து, அவர்களுக்கு விருந்து நடத்தி, வெகு மதியளித்து, மாலையிட்டு மகிழ்வித்து. பின்னல் அந்த அதி காரிகளின் தயவை நங்களுடைய சுயநலக் காரியங்களுக்காகப் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கத்துடனேயே நடத்தப்படு கிற விழா அல்ல—இந்த விழா. அதனல்தான் இந்த விழா வுக்குத் தலைமை வகிக்க நான் இசைந்தேன். நம்முடைய நாட் டில் பல இடங்களின் அமைதி குலைந்திருக்கின்றது; அதன் பயனுகக் கொள்ளைகளும் கொலைகளும் அதிகரித்து விட்டன. ஓடும் ரயில் வண்டியைக் கவிழ்த்து ஒரு பாவமும் அறியாத குஞ்சு குழந்தைகளையும் கொலை செய்யக் கூடிய வன்னெஞ்சம் நமக்குள் வந்துவிட்டது. இவ்வளவு தீமைகளுக்கும் மூல காரணம் பொருளாதார ஏற்றத்தாழ்வுதான் என்பது எல்லா ருக்கும் தெரியும். இந்தப் பொருளாதார ஏற்றத் தாழ்வின் கொடுமைகளைக் குறைக்கவேணும் என்பதுதான் உலக நலத் தைப் பற்றி சிந்திக்கக் கூடிய எல்லாருக்கும் எப்போதும் ஏக் கம். மனிதனுக்குமனிதன் சமசுகத்தோடு வாழமுடியாதபடிஎப் படியோ மக்களுக்குள் நுழைந்து விடுகிற இந்த வேற்றுமை களைச் சட்டங்களின் மூலமாகச் சரிப்படுத்தக்கூடிய அரசியல் முறையை அமைக்கவும் கூடவில்லை. அப்படி ஒரு அரசியலை அமைத்தாலும் அது வெறும் ராணுவ பலத்தைக் கொண்டு எந்த நேரத்திலும் குடிகளைக் கத்தி முனையால் பயமுறுத்திக் கொண்டேதான நடத்த வேண்டிய ராஜாங்கம் ஆகிவிடு கிறது. அங்கே நிலவுகின்ற அமைதி வெறும் கல்லறையின் அமைதியாகவும் அங்கே காணப்படுகிற கட்டுப்பாடு வெறும் தேன் கூட்டிலுள்ள கட்டுப்பாடாகவும்தான் இருக்க முடியும். அங்கே பலவிதமான மக்களும் ஒருவருக்கொருவர் உறவாக இருப்பது ஒரு 'சர்க்கஸ்' காக்ஷியில் கூடாரத்துக்குள் கொண்டு வரப்பட்ட சிங்கமும் யானையும் ஒன்றுடொன்று கொஞ்சிக் குலவி உறவு கொண்டாடிக் கொள்வது போலத் தான் இருக்கும் ... ஆதலால் அரசாங்க அதிகாரங்களால் இந்த வேற்றுமையின் தீமைகளை விலக்க முடியாது. தனித் தனி மனிதனுடைய அன்பு உணர்ச்சியினலும் தியாக புத்தி யினலும்தான் இந்த ஏற்றத் தாழ்வுகளால் உண்டாகும் துன் பங்களிலிருந்து நமக்கு விமோசனம் கிடைக்கும். அந்த விமோ சனத்துக்கு அத்யாவசியமான மனப்பான்மை திடீரென்று உதயமாகிவிட்ட திரு. நல்லப்பர் அவர்கள் இங்குள்ள அனை வரும் வெகு ஆச்சரியம் அடையக்கூடிய சில தீர்மானங்களை இப்போது வெளியிடப் போகிறார்கள். அதற்காகத்தான் இந்த விழா—நமது நாட்டிற்கே வெகு முக்யமானது. அதனல் தான் இதற்குத் தலைமை வகிக்க நானும் மிக்க மகிழ்ச்சியோடு சம்மதித்தேன்.....(நிகழ்ச்சி முறைக் குறிப்புத் தாளைப் பார்க் கிறார்) இப்போது நல்லப்பருடைய அந்தரங்கக் காரியதரிசி யான சுந்தரம் பேசுவார்.

(தலைவர் ஆசனத்தில் அமர்கிறார். சபையில் கரகோஷம். ஸ்ரீ சுந்தரம் ஒலி பெருக்கியண்டை வந்து பேசுகிறார்)

சுந்தரம் : மேன்மை தங்கிய தலைவரவர்களுக்கும் சபையோருக்கும் வணக்கம் ..... செல்வச் சீமானுகிய நல்லப்பரவர்களுடைய வீட்டுக்குள் கொள்ளையடிக்கப் புகுந்ததும் அதைத் தொடர்ந்து நடந்த விஷயங்களும் இங்குள்ள எல்லாருக்கும் தெரியும். கொள்ளையடிக்கப் போனவர்கள் வழக்கமாகக் கொள்ளையடித்து ஜீவிக்கிற குறற பரம்பரையைச் சேர்ந்த வர்கள் அல்ல. சூதும்வாதும் சூழ்ச்சிகளும் தெரியாத கிராம வாசிகள். அந்த ஏழைக் குடியானவர்களைக் கொள்ளைக்கார ராக்கியது அவர்களுடைய தரித்திரத்தின் கொடுமைதான். கோடானுகோடி மக்கள் உண்ணக் கஞ்சியும், உடுக்கக் கந்தை யும், நிறக நிழலும் இல்லாமல் தவிப்பதைப் பார்த்துக் கொண்டு ஒரு சில தனி மனிதர்கள் மட்டும் ஏராளமான மில் நிலங்களையும் தொழிற்சாலைகளையும் தங்களுக்கே சொந்தம் என்று வைத்துக் கொண்டு அவைகளிலிருந்து அடைகின்ற செல்வத்தையெல்லாம் தாங்கள் மட்டும் அனுபவித்து வரு கிற அநீதியே இந்தக்கொள்ளைகளையும் கொலைகளையும் தூண்டு வது. இந்தச் சில பணக்காரர்களை ஒழித்து அவர்களிடம் இருக்கிற செல்வத்தையெல்லாம் ஏழைகளுக்குப் பங்கு போட் டுக் கொடுத்து விடுவோம் என்று பேசுகின்றவர்கள் பேச் சைக் கேட்டுத்தான் இந்த ஏழை மக்கள் தங்களுடைய தரித் திரத்துக்கு 'விமோசனம்' வந்துவிட்டதாக நம்பி இப்படிப் பட்ட குற்றங்களுக்கு உடன்படுகிறார்கள். ஏழை மக்களை இப்படித் தூண்டி விடுகிறவர்கள் 'பொது உடைமை' என்றும் 'சமதர்மம்' என்றும் மேலான தத்துவங்களைச் சொல்லித் தான் ஆசை மூட்டுகின்றார்கள். இயற்கையாகவும் செயற்கை யாகவும் ஒரு நாட்டில் உள்ள எல்லாப் பொருள்களும் அந்த நாட்டிலுள்ள எல்லா மக்களுக்கும் 'பொது உடைமை' ஆக வேண்டும் என்பதும், எல்லா மனிதர்களும் சரி சமானமாக வாழ்க்கைக்கு வேண்டிய எல்லா வசதிகளும் கிடைக்க 'சமதர் மம்' நடக்க வேண்டும் என்பதும் மிகவும் உன்னதமான லக்ஷி யங்கள். உலகத்தில் தோன்றிய எல்லாப் பெரியவர்களும் இந்த லக்ஷியங்களைத்தான் போதித்திருக்கிறார்கள். 'சமதர் மம்' என்ற ஒன்றை மட்டும் நாம் சரியாக உணர்ந்து நடப் போமானால் சமுதாயத்தில் சச்சரவே இருக்காது. சமதர்மம் பேசுகின்றவர்கள் எல்லாரும் உணவுக்கும் பணத்துக்கும் மட்டும் சமதர்மம் கேட்கிறார்களே ஒழிய உயிருக்குச் சமதர்மம் காட்டுவதில்லை. பிறனுடைய உயிரைத் தன்னுடைய உயி ருக்குச் சமமாக எண்ணுத ஒருவன் 'சமதர்மம்' பேசுவது வெறும் பித்தலாட்டம். தன்னைக் காட்டிலும் பணக்காரனை இருக்கிறவனைக் கொள்ளையடித்தோ கொன்றோ அவனுடைய

செல்வத்தைப் பறித்துப் பிறருக்குப் பங்கு போட்டுத் தருவதாகச் சொல்லுகிறவன் தன்னைக்காட்டிலும் ஏழைகளாக இருக்கிறவர்களுக்குத் தன்னுடைய சொந்தப் பணத்தையும் சுக சௌகரியங்களையும் பங்குபோட்டுத் தந்துவிடத் தயாராக இல்லை. எவனொருவன் எல்லாருடைய உயிரையும் தன்னுயிர் போலக் கருதி தனக்குள்ள வசதிகளை யெல்லாம் தன்னைக் காட்டிலும் ஏழைகளாக உள்ளவர்களுக்காகவே உதவுகின்றானோ அவன் ஒருவன்தான் 'சமதர்ம' வாதி. அப்படிப் பட்ட சமதர்ம ஞானத்தை வாழ்க்கையில் நடந்து காட்டிய ஒரே ஒரு உத்தமன்

சமனிலாத இந்த நாட்டின் ஞான வாழ்வின் சக்தியை
சரிசமான மாகமற்ற உயிரையெண்ணும் சாந்தனை
அமரனாகி நம்மைக் காக்கும் அண்ணல் காந்தி ஐயனை
அஞ்சலிக்கும் யாவருக்கும் சஞ்சலங்கள் தீருமே.

[எல்லு சுந்தரம் அக்ராசனருக்குப் பின்னாலிருந்த ஸ்தூபியின் உச்சியை நோக்கிக் கரங்குவித்து வணங்குகிறான். அந்த ஸ்தூபியின் உச்சியில் மூடியிருந்த திரை விலகுகின்றது. காந்தியண்ணலின் உருவச்சிலை காட்சியளிக்கிறது. சபையோர் கரகோஷம் செய்து ஆரவாரித்து அஞ்சலி செய்கிறார்கள்.]

சுந்: காந்தி மகான் உபதேசித்து நடந்து காட்டிய சமதர்மத்தைக் கடைபிடித்தால்தான் இந்த உலகத்துக்கே கதி மோட்சம் பிறக்கும். அந்தக் காந்தீய சமதர்ம தத்துவத்தை ஒட்டி இந்த நாட்டின் ஏழை மக்களுக்கு ஒரு விமோசனம் பிறக்கக் கூடிய நோக்கத்தோடுதான் நமது நல்லப்பரவர்கள் இந்த விழாவில் சில வியக்கத்தகுந்த விஷயங்களை வெளியிடப் போகிறார்.

[சுந்தரம் பின்னால் போய் ஆசனத்தில் அமர்கிறான். விழாத் தலைவர் நிசழ்ச்சித் தாளைப் பார்த்துவிட்டு]

தலை: அடுத்தபடியாக ஸ்ரீ முத்துவீரப்பன் பேசுவார்.

(முத்துவீரப்பன் முன்னால் வருகிறான்)

முத்து: கனதை மிகுந்த தலைவரவர்களுக்கும் மற்றுமுள்ள சகோதர சகோதரிகளுக்கும் தாழ்மையான வணக்கம்..... என்னுடைய சிறு வயதிலிருந்து ஏழைகளையும் பிச்சைக்காரர்களையும் கண்ட போதெல்லாம் என் மனம் மிகவும் இரக்கமுற்றுத் துன்பப்படும். என்னுடைய இளமையில் தாய் தந்தையரோடு நான் ஆலய வழிபாட்டுக்காக புண்ணிய ஸ்தலங்களுக்கு அடிக்கடி போவதுண்டு. அந்த ஸ்தலங்களில் கோயிலுக்கு முன்னால் ஆயிரக்கணக்கான பிச்சைக்காரர்கள்

கூனும்—குருடும், மொண்டியும்—முடமும், எலும்பும் தோலும் —நோயும் நொடியுமாக வரிசை வரிசையாக உட்கார்ந்து கொண்டு வாய் வெறித்துக் கையேந்திக் கதறுகின்ற காட்சிகள் என் மனதைக் கலக்கும். ஐயோ! இந்த அநாதைகளைக் காப்பாற்ற ஒரு கடவுள் இல்லையா! இவர்களை ஆதரிக்க ஒரு அரசாங்கம் இல்லையா! இத்தனை ஏழைகள் இப்படித் தவிக்கிறபோது எத்தனை பணக்காரர்கள் என்னென்ன வீண் செலவுகள் செய்கிறார்களே! என்ற எண்ணங்கள்தான் மனதில் தோன்றும். அப்போதைக்கு என்னால் முடிந்த பிச்சைக் காசுகளைப் போட்டுவிட்டு வீட்டுக்கு வந்தபின் அந்தப் பரிதாபக் காட்சியை அடிக்கடி நினைத்து ஆயாசப்படுவேன். நான் மாணக்கனாக இருக்கும்போதே, என் பள்ளிக்கூடப் படிப்பு முடிந்த பின் இந்த ஏழ்மையைப் போக்கக்கூடிய முயற்சிகளில் உழைக்க வேணும் என்று உறுதி கொண்டேன். பள்ளிப் படிப்பு முடிந்து நான் பி. ஏ. பாஸ் செய்த பின், இந்த நோக்கத்துடன் பல அரசியல் கட்சிகளில் சேர்ந்தேன். சில சேவா சங்கங்களில் ஊழியம் செய்தேன். ஒன்றிலும் என் நோக்கம் நிறைவேறக்கூடிய நம்பிக்கை வரவில்லை. இந்த அரசாங்கத்தை அடியோடு மாற்றி உடனடியாக ஒரு புதுமையான சமுதாயத்தை அமைத்தால்தான் நான் எண்ணினது நிறைவேறும் என்று நம்பினேன். அதற்குப் புரட்சி செய்வது ஒன்றுதான் வழியென்று தீர்மானித்து புரட்சிக் கட்சியில் சேர்ந்தேன். ஐரோப்பிய நாடுகளில் நடந்த புரட்சி இயக்கங்களின் இலக்கியங்களைப் படித்தேன். அதுவும் போதாதென்று நேராக ஐரோப்பாவுக்குச் சென்று அங்குள்ள புரட்சித் தலைவர்களைக் கண்டு புரட்சி நடத்தும் முறைகளை அறிந்து வரவேணும் என்று பல ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றேன். புரட்சி இயக்கத்தின் தாயகமாகிய ருஷ்யாவுக்குள் நான்போகவே முடியவில்லை. ருஷ்யாவுக்குள் அன்னியர் போக மிகவும் கட்டு திட்டமான அனுமதி வேண்டும். அந்த அனுமதியைக் கோரி இரண்டு மாதம் காத்திருந்தும் அனுமதி கிடைக்கவில்லை. அதைவிட்டு புரட்சிக்காரர்கள் மிகுந்த வேறு சில ஐரோப்பிய நாடுகளுக்குப் போனேன். அந்த நாடுகளில் மக்கள் படும் துன்பங்களைப் பார்த்த போது புரட்சி இயக்கத்தில் எனக்கிருந்த நம்பிக்கையில் பாதிக்குமேல் பறந்து போய் விட்டது. மாஜினியும், கரிபால்டியும் சுதந்தரத்தை நிலைநாட்டினதாக நாம் படித்த இதாலி தேசத்தின் தலைநகரமாகிய ரோமாபுரியில் நம் நாட்டிலுள்ளதைக் காட்டிலும் அதிகமான பிச்சைக்காரர்கள் இருப்பதைக் கண்டு பிரமித்து விட்டேன். நவீனமான எந்திர தந்திர வசதிகளும், வேறு பல சுகபோக சுகாதார சாதனங்களும் நிறைந்திருந்தாலும் சமுதாய சமாதானத்திலும் ஜீவகாருண்ய வாழ்க்கையிலும் அந்த நாடுகளுடன் நம்முடைய நாட்டை ஒப்பிட்டுப் பார்த்தால்

நம்முடைய தமிழ்நாட்டைச் சொர்க்கம் என்றுதான் சொல்ல வேண்டும். ஐரோப்பாவிலிருந்து திரும்பி வரும்போதே ஆயுத பலத்தால் செய்யக்கூடிய புரட்சியில் எனக்கு நம்பிக்கை மிகவும் குறைந்து விட்டது. இருந்தாலும் புரட்சியில் இருந்த நம்பிக்கை மட்டும் போகவில்லை. தற்காப்புக்காகவும் பய முறுத்துவதற்காகவும் மட்டும் ஓரளவு ஆயுதபலத்தை வைத்துக் கொண்டு தீவிரமான பிரசாரம் செய்து மக்களு டைய மனதைக் கவர்ந்து அரசாங்கத்தை அடியோடு மாற்றி விடக்கூடிய அளவில் புரட்சி செய்யத் தீர்மானித்தேன். அந்த சமயத்தில் தான் என்னுடைய பள்ளித் தோழராகிய சுந்தர மும் என்னோடு புரட்சி இயக்கத்தில் சேர்ந்தார். அவரோடு சேர்ந்த பின் ஆயுதபலத்தில் எனக்கிருந்த கொஞ்ச நம்பிக் கையும் இன்னும் குறைந்து விட்டது. இந்தப் புரட்சி இயக் கத்தை நடத்துவதற்குச் சரியான யோசனை சொல்லக்கூடிய தலைவர்கள் வெகு சிலர். ஆனால் அதை நடத்துவதற்குச் சேருகின்றவர்கள் பெரும்பாலும் வெறும் கொள்ளையடித்துப் பங்கு போட்டுக் கொள்ளச் சேர்ந்த கூட்டாளிகளாகவே இருக் கிறார்கள். அதனால்தான் நான் போட்டிருந்த திட்டங்களை முற்றிலும் புறக்கணித்துவிட்டு வீராசாமியும் கருப்பண்ண னும் நான் இங்கில்லாத காலத்தில் ஸ்ரீ நல்லப்பர் வீட்டில் கொள்ளையடிக்கப் புகுந்தார்கள். இதைப் போலவே வேறு இரண்டு இடங்களிலும் என்னோடு சேர்ந்தவர்கள் செய்து விட்டார்கள். ஆதலால் இந்தப் புரட்சி இயக்கம் மிகவும் தீமை விளைக்கக் கூடிய தென்று அதைக் கட்டோடு விட்டொழித்து விலகி விட்டேன்.

உண்மையான சமதர்மம் வளரவேண்டுமானால் அதற்கு நண்பர் சுந்தரம் சொன்னதுபோல எம்மான் காந்திமகாத்மா வின் வழி ஒன்றுதான் கதிமோக்ஷம். பணக்காரர்களுடைய வீடுகளைக் கொள்ளையடித்து அங்குள்ள மேஜை நாற்காலி களையும் சுவர்களையும் புரட்டித்தள்ளுவதால் மட்டும் புரட்சி வந்து விடாது. முதலாளிகளைக் கொன்று அவர்களுடைய உடலைப் புரட்டி விடுவதால் புரட்சி வந்து விடாது. ஓடும் ரயில் வண்டி கவிழ்ந்து புரண்டு உருண்டு போகச் செய்து விடுவதால் புரட்சி வந்துவிடாது. பணக்காரர்களிடத் திலும் ஏழைகளிடத்திலும், முதலாளியிடத்திலும் தொழிலா ளியிடத்திலும் அரசாங்கத்திடத்திலும் குடிகளிடத்திலும் மனப் புரட்சி உண்டாக வேண்டும். அதுதான் நம்முடைய கெட்ட வழக்கங்களைப் புரட்டித்தள்ளிவிட்டு புதிய சமுதாயம் புலப்படச் செய்யும். அப்படிப்பட்ட மனப் புரட்சியை உயர்திரு நல்லப்பரவர்கள் இப்போது நிரூபிக்கப் போகிறார்கள்.

ஸ்ரீநல்லப்பர் வீட்டில் கொள்ளைக்குப் புகுந்த குற்றவாளி களோடு சேர்க்கப்பட்டிருந்த என்னை விடுதலை செய்த போலீ

சாருக்கும், அதற்கு அனுகூலம் செய்து என்னை இங்கே அழைத்து வந்து பேச்சு செய்த என்னுடைய பள்ளித் தோழர் சுந்தரம் அவர்களுக்கும் என் மனமார்ந்த வந்தனத்தை தெரிவித்துக் கொள்ளுகிறேன். (கரகோஷம். முத்து வீரப் பன் உட்காருகிறான்.)

தலை: இப்போது ஸ்ரீமான் நல்லப்பர் அவர்கள் இந்த விழாவினால் எண்ணிறந்த ஏழை மக்களுக்கு அவரால் கிடைக்கப் போகிற விமோசனத்தை வெளியிடுவார்.

(வழக்கமாக அவர் அணிகின்ற ஆடம்பர உடைகளில்லாமல் மிகவும் சாமான்ய உடையில் தோன்றிய நல்லப்பர் பேசுகிறார்:)

நல்லப்: அக்ராசனர் அவர்களுக்கும் மகாஜனங்களுக்கும் வணக்கம். மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் என்னுடைய வேண்டுகோளுக்கு இணங்கி இந்த விழாவிற்குத் தலைமை வகிக்கிற பெரும் பாக்யத்திற்காக என் மனமார்ந்த வந்தனங்களை அவருக்குத் தெரியப்படுத்திக் கொள்ளுகிறேன். என்னுடைய சிறு பிராயத்தில் மிகவும் பச்சாத்தாபமுள்ள நல்ல பிள்ளை என்று என்னைப் பலபேர் பாராட்டினது இன்னும் என் ஞாபகத்தில் இருக்கிறது. என் தந்தை இறந்து அவருடைய செல்வங்களுக்கெல்லாம் நான் அதிகாரியானபின் கொஞ்சங் கொஞ்சமாக செல்வச் செருக்கு என்னை மூடிக் கொண்டது. அது என் அறிவைக் கெடுத்து அன்பைத் தடுத்து, ஆன்மாவை மறைத்துவிட்டது. பணம் சேரச்சேர அந்தப் பணத்தையே வாழ்க்கையின் பயனாகக் கருதி பல பாபங்களைச் செய்து விட்டேன். அந்த பாபங்களுக்குத் தண்டனை தான் என் வீட்டில் கொள்ளைக்காரர்கள் புகுந்து அதனால் நானடைந்த வேதனைகள். கொள்ளைக்காரர்களுக்குப் பயந்து கொல்லை வழியாகக் குப்பைக் குழியில் இறங்கி அதிலிருந்து வெகு பாடுபட்டு ஒரு மேட்டில் ஏறி, இருட்டில் வேலிகளுக்குள் புகுந்து, கல்லிலும் முள்ளிலும் வதியிலும் வரப்பிலும் நடந்து தத்தித் தள்ளாடிக் காளியம்மாள் வீட்டுக்குள் ஓடி ஒளிந்தோம். அங்கே நான் ஒளிந்து கொள்ளக் கிடைத்த இடம் ஒரு தானியத் தொம்பை. அதனுள் நான் உடலைக் குறுக்கிக் கொண்டு உட்காரவும் இடமில்லாமல் நின்று கொண்டு தவித்த தவிப்பை நரக வேதனை என்றுதான் சொல்ல வேண்டும். அப்படி ஒளிந்திருந்த வீட்டுக்கும் கொள்ளைக்காரர்கள் நெருப்பு வைத்துவிட, அதிலிருந்து தப்பி ஓட நான் தத்தளித்த தத்தளிப்புக்கு நரகவேதனைகூட ஈடாகாது. அதற்குப் பின் சுந்தரத்தைக் கொள்ளைக்காரர்கள் சுட்டுவிட, என் மகளும் நானும் பிடிபட்டு இழுபட்டு அடைந்த அவமதிப்புகளுக்கு அளவேயில்லை. வீராசாமி என்பவன் பளீ

சென்று என் கன்னத்தில் ஓங்கி அறைந்த அறைச்சீல் அப்படிப்பல சமயங்களில் நான் என்னுடைய வேலைக்காரர்களை அறைந்திருக்கிற கொடுமையை அறிவுறுத்தியது. அதன் பின் நாச்சிமுத்து வீட்டில் நான் அனுபவித்த சிறைவாசம் என் கருத்தைக் கலக்கி, சிந்தனைகளைக் கிளப்பி, கண்ணைத் திறந்து விட்டது. வாழ்க்கையின் லக்ஷியங்களில் எனக்கிருந்த மயக்கங்களை நீக்கிவிட்டது.

ஒரு விதமான உழைப்பும் செய்யாமல் பாட்டாளிகளின் உழைப்பினால் வரும் பலன்களை யெல்லாம் தனக்கே கொட்டிக் கொண்டு சுகப்பட விரும்புகிற சோம்பேறித் தனத்தில் இருந்துதான் பொருமையும் கொள்ளையும் புரட்சியும் கொலைகளும் புறப்படுகின்றன என்ற உண்மை இப்போதுதான் எனக்குப் புலனுயிற்று. தங்களுக்குக் கிடைத்த செல்வம ஏழைகளுக்கு உதவும்படி ஆண்டவன் தங்களிடத்தில் ஒப்பித்த தர்ம சொத்து என்று பணக்காரர்கள் எண்ண வேண்டும். பணம் இல்லை யென்பதற்காகக் கொலை கொள்ளை முதலிய பாபங்களைச் செய்துவிடக்கூடாது என்று ஏழைகள் எண்ண வேண்டும். இந்த இரண்டு நல்லெண்ணங்கள்தான் சமதர்ம சமுதாயத்தைக் காப்பாற்றும் என்று காந்தி மகாத்மா தெளிவாகக் காட்டியிருக்கிறார். அந்த உபதேசத்தின்படி பணக்காரன் என்று சொல்லப்படுகிற நான் என்னுடைய பங்குக் கடமையை இப்போதே செய்துவிடத் தீர்மானித்து விட்டேன். அந்தத் தீர்மானத்தின்படி :-

(1) எனக்குச் சொந்தமான சுமார் ஐயாயிரத்து எழுநூறு ஏகரா நன்செய் விளைநிலங்களில் என்னுடைய குடும்பத்துக்காக இருநூறு ஏகரா நிலங்களை மட்டும் வைத்துக்கொண்டு, மற்றதை யெல்லாம் தகுதியுள்ள ஏழை உழவாளிகளிடம் ஒப்படைத்து கூட்டுப்பண்ணை நடத்தச் செய்து அதனுலுண்டாகும் விளைபொருள்களை யெல்லாம் அவர்களுக்குளளேயே பங்கிடு செய்து விடும்படி தர்மசாசனம் செய்துவிடப்போகிறேன். ஜில்லா கலெக்டரைத் தலைவராகக் கொண்ட ஒரு தர்ம கர்த்தாக் கழகம் அதற்கு வேண்டிய சட்டதிட்டங்களைச் செய்து அதைப் பரிபாலிக்கும். என் குடும்பத்துக்குச் சொந்தமாக வைத்துக்கொண்ட இருநூறு ஏகரா நிலத்தில் காளியம்மாளுக்குப் பதினைந்து ஏகராவும், செங்கோடனுக்குப் பதினைந்து ஏகராவும், காளியம்மாளுடைய மாமன் மலையாண்டிக்குப் பத்து ஏகராவும், என்னுடைய வேலைக்காரன் நஞ்சப்பனுக்கு ஐந்து ஏகராவும், என்னுடைய மகள் வசந்தாவின் பணிப்பெண் செல்லம்மாளுக்கு ஐந்து ஏகராவும் தானமாகத் தந்துவிடத்தீர்மானித்துவிட்டேன். மீதிஉள்ள நூற்றைம்பது ஏகராவில் ஒரு நூறு ஏகராவை என் குடும்பத்துக்கு வைத்

துக் கொண்டு, மற்ற ஐம்பது ஏகராவை என்னுடைய பழைய நண்பரும் பிரபல வக்கீலும் என் காரியதரிசி சுந்தரத்தின் தகப்பனருமான காலஞ்சென்ற சீனிவாசன் அவர்களுக்கு நான் செலுத்த வேண்டிய நன்றிக்காக அவருடைய மனைவி மீனாக்ஷியம்மாளுக்கும் அவருடைய பெண் குழந்தைகளுக்கும் தானமாகத் தந்துவிடப் போகிறேன். விவசாயத்துக்குத் தகுதியற்ற புன்செய் நிலங்களில் முக்காற் பங்கை வீடில்லாத ஏழைகள் வீடுகட்டிக்கொள்ள தர்மகர்த்தா கழகத்திடம்விட்டு விடப்படும்.

(2) என்னுடைய பெயரிலும் என் மனைவியின் பெயரிலும் பல பாங்குகளில் இருக்கிற சுமார் ஐந்து கோடி ரூபாயில் ஐம்பது லக்ஷம் ரூபாய் என் மகள் வசந்தாவுக்கும், இருபத்தைந்து லக்ஷம் என் மனைவிக்கும், இன்னொரு இருபத்தைந்து லக்ஷம் எனக்கும் போக, மீதியை பெண்கள் கல்விக்கும் பிரஸவ ஆஸ்பத்திரிகளுக்கும் கிராமப் புனருத்தாரணத்திற்கும் சமயோசிதப்படி பங்கிட்டுச் செலவு செய்ய அதற்கென்று ஒரு தனி தர்மகர்த்தா கழகம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்கும் ஜில்லா கலெக்டர் தலைவராக இருப்பார். ஆனால் அங்கத்தினர்களும் காரியதரிசியும் வேறாக இருப்பார்கள். இந்தக் கழகத்துக்குச் சுந்தரம் ஒரு அங்கத்தினராகவும் என் மகள் வசந்தா காரியதரிசியாகவும் இருப்பார்கள்.

(3) என்னுடைய நிர்வாகத்தின் கீழ் ஐந்து 'மில்கள்' நடக்கின்றன. அவைகள் அனைத்தும் லிமிடெட் கம்பெனிகள். ஆனாலும் அவற்றின் மூலதனங்கள் பெரும் பகுதியும் என் பேராலும், என் மனைவியின் பேராலும், என் மகனின் பேராலும் வாங்கப்பட்ட பங்குகளாகவே இருக்கின்றன. அந்தப் பங்குகளில் கால்வாசியை என் காரியதரிசி சுந்தரத்துக்கு மாற்றி அவருக்கே சொந்தமாக்கிவிடப் போகிறேன். இது வரையிலும் நான் பார்த்து வந்த 'மானேஜிங் டைரக்டர்' வேலையையும் அவருக்குத் தருகிறேன். சுந்தரத்துக்கு மாற்றப்பட்டது போக மீதிப் பங்குகளுக்கு வரக்கூடிய வீதாசார வருமானத்தில் சரிபாதியை அந்தந்த மில்களில் வேலை செய்கின்ற பாட்டாளிகளுக்கே அவரவர்கள் உழைப்புக்கேற்றபடி பகிர்ந்து கொடுத்துவிடத் தீர்மானித்திருக்கிறேன். மற்ற பாதி வருமானத்தை நான் குறிப்பிட்டுள்ள ஆலயங்களுக்கும் அன்ன சத்திரங்களுக்கும் உசிதப்படி செலவுசெய்ய ஏற்பாடு செய்திருக்கிறேன். அதற்கும் ஒரு தனிக் 'கமிட்டி' ஏற்பாடு செய்திருக்கிறேன். அந்தக் கமிட்டியில் மில் தொழிலாளிகளின் தலைவர்களே பெரும்பாலும் அங்கத்தினர்களாக இருப்பார்கள். இந்தச் சங்கத்தில் சுந்தரமும் முத்து வீரப்பனும் அங்கம் வகிப்பார்கள்.

(4) என் மனைவியின் ஆபரணங்களும் என்னுடைய மகளின் ஆபரணங்களும் அவரவர்களுக்கே சேரும். என்னுடைய சொந்த உபயோகத்தில் இருந்து வந்த ஆபரணங்களையும் மற்றும் விலையுயர்ந்த பொருள்களையும் விற்று என் இரும்புப் பெட்டிகளில் இருக்கிற சொக்கப் பணத்தோடு சேர்த்து நான் ஒரு சர்வோதய சங்கம் ஆரம்பித்து காந்தீயப் பிரசாரம் செய்யத் தீர்மானித்து விட்டேன்.

(5) இப்போது அரசாங்கத்தின் அனுமதியின் மேல் எனக்கும் என் மகளுக்கும் விடுதலை கொடுத்த போலீஸ் இன்ஸ்பெக்டர் அவர்களுக்கு ஐம்பதினாயிரம் ரூபாயும், சப்இன்ஸ்பெக்டர் அவர்களுக்கு இருபதினாயிரம் ரூபாயும், சார்ஜண்ட் தலைவர் ஜோன்ஸ் துரைக்கு இருபதினாயிரம் ரூபாயும், அவர்களுடன் எங்களை பிடிக்க வந்த ஜவான்களுக்குப் பகிர்ந்து கொடுக்க இருபதாயிரம் ரூபாயும் கவர்னர் அவர்களுடைய கையால் இங்கேயே பகிரங்கமாகச் சன்மானம் செய்யும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். அத்துடன் நாச்சிமுத்து வீட்டில் நாங்கள் சிறையிருந்த போது எங்களுக்குப் பணிவிடைகள் செய்த ஒன்பது வேலைக்காரர்களுக்கும் ஆளுக்கு ஐந்நூறு ரூபாயையும் தலைவர் அவர்கள் மூலமாகவே தரவேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

(அந்த வெகுமதித் தொகைகளையும் பெயர் ஜாபிதாவையும் கவர்னரிடம் தருகிறார். கவர்னர் அவர்களுக்கு பரிசளிக்கிறார். பரிசளிப்பு முடிந்தபின் தலைவர் முடிவுரை பேசுகிறார்.)

தலை : சபையோர்களே! ஸ்ரீ நல்லப்பரவர்கள் வெளியிட்ட விஷயங்கள் அவருக்குத் திடீரென்று உண்டாகியிருக்கிற அபார தியாகத உணர்ச்சியைக் காட்டுகின்றது. இப்படிப்பட்ட தியாகத்தை எந்த முதலாளியிடத்திலும் நாம் இதுவரையிலும் கண்டதில்லை. இதை அன்னிய நாடுகளும் கேட்டு அதிசயிக்கும். எல்லா பணக்காரர்களும் நல்லப்பர் வெளியிட்ட நல்லுணர்ச்சியோடு சிறிதளவாயினும் தியாகம் செய்வார்களானால் இந்த நாட்டில் புரட்சி எண்ணங்களால் நடக்கின்ற கொடுமைகள் நீங்கி உண்மையான சமர்தம சமூதாயம் உண்டாகும். இனி உழைப்பாளிகளுக்கும் ஏழைகளுக்கும் ஒருவார்த்தை : வாழ்க்கைக்கு வேண்டிய வசதிகளை விரும்பி அதற்கான எல்லா முயற்சிகளையும் செய்ய ஒவ்வொரு மனிதனுக்கும் உரிமை உண்டு. ஆனால் அந்த வசதிகள் விரும்பியபடி கிடைக்காமற் போய் விட்டால் அதற்காக அக்ரமங்களைச் செய்து விடக்கூடாது என்ற திடமான நம்பிக்கை எல்லாருக்கும் இருக்க வேண்டும். தீமைகளைச் செய்து நன்மைகளை அடைய ஒருக்காலும் முடியாது. தீமை செய்ததால் நன்மை வந்து

விட்டது போலக் கொஞ்ச காலத்துக்குத் தோன்றினாலும் முடிவில் அந்தத் தீமையே திரும்பி வந்து நம்மை அழுத்திக் கொள்ளும். அப்படி அவர் செய்த தீமைகள் தான் அவரை வந்து அழுத்திக் கொண்டதாக நல்லப்பர் உணர்ந்து சொன்ன நியாயம் தான் உண்மை. ஆகையால் ஏழைகளாக இருக்கும்படி நேர்ந்து விட்டாலும் கொள்ளையும் கொலையும் செய்தால் சமதர்மம் உண்டாக்கிவிட்டமுடியும் என்றுசொல்லப் படுகின்ற துர்ப்போதனைகளைக் கேட்டு ஏமாந்து போகாமல் இருக்கும்படி எல்லாரையும் கேட்டுக் கொள்ளுகிறேன். ஸ்ரீசுந்தரமும் ஸ்ரீ முத்து வீரப்பனும் சொன்னபடி காந்திமகானுடைய நன்னெறியைக் கடைப்பிடித்தால் அவர் கனவு கண்ட ராமராஜ்யத்தை நாம் நிலை நாட்ட முடியும்.

(அக்ராசனத்தில் அமர்கின்றார். கரகோஷமும் 'மகாத்மா காந்திக்கு ஜே' என்ற முழக்கமும் நெடுநேரம் ஒலிக்கிறது. பாட்டுக்கச்சேரி ஆரம்பமாகிறது.)

காட்சி 72

இடம் : முற்பகல்
காலம்: நல்லப்பர் வீட்டு மேல்மாடியில்
அவருடைய பிரத்யேக அறை

(விமோசன விழாவுக்கு மூன்று நாளைக்குப் பிறகு நல்லப்பரும் சுந்தரமும் நல்லப்பருடைய அந்தரங்க அறையில் ஏகாந்தமாக இருந்து, விழாவில் வெளியிடப்பட்ட தானங்களுக்கு வேண்டிய சட்டபூர்வமான சாசனங்களை, ஏற்கனவே சட்ட நிபுணர்கள் எழுதி 'டைப்' அடிக்கப்பட்டிருந்தவற்றைச் சரிபார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த சமயத்தில்,)

நல் : சுந்தரம்! என் மனம் இப்போது சந்தோஷப் படுகிறதைப் போல் இதுவரையிலும் நான் அனுபவித்ததேயில்லை. எந்த நேரமும் எதாவது விவகாரத்தை நினைத்து விசாரப்பட்டுக் கொண்டு மிகவும் பலவாகவே இருந்து கொண்டிருந்த என் உள்ளம் இந்த மூன்று நாளாக மிகவும் நிம்மதியாக இருப்பதைக் கண்டால் எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது.

சுந்: உண்மையான நியாகத்தின் பலன் அதுதான்.

நல் : இதுவரையிலும் என்னைக் கண்டதும் பயந்து நடுங்கி ஒதுங்கிப் பதுங்கின ஜனங்கள் இந்தமூன்று நாளாக என்னைக்கண்டு முகம் மலர்ந்து கைகுவித்துக் களிப்படைகிறார்கள். அதைக் கண்டு நான் என்றுமில்லாத ஆனந்தம் அடைகிறேன்.

சுந் : ஆம் அதைத்தான்

ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்கண் ணவர்

என்று வள்ளுவர் சொல்லியிருக்கிறார்.

நல் : ஆம் இவ்வளவு உவகைக்கும் காரணம் நீயும் வசந்தாவும் தான். உங்கள் இருவருக்கும் தான் இதற்காக நான் வந்தனம் செலுத்த வேண்டும்.

சுந் : அதெப்படி?

நல் : நீங்கள் இருவரும் சொன்ன யோசனையின் மேல் தானே இந்த விழாவே ஏற்பாடாயிற்று?

சுந்: அதற்காக!

நல்: உங்கள் இருவருக்கும் தான் நான் நன்றி சொல்ல வேண்டும்.

சுந்: தங்களுடைய நன்றிக்கு நான் தகுதியானவன் அல்ல. வசந்தாதான் இதற்காக முழுதும் புகழத்தக்கவள்.

நல்: அதேன் அப்படிச் சொல்லுகிறாய்? நீங்கள் இரண்டு பேரும் சேர்ந்து தானே எனக்கு இந்த யோசனை சொன்னீர்கள்?

சுந்: ஒரு விழா நடத்தி அதில் சிலபேருக்கு நம்முடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ள வெகுமதிகள் கொடுக்க வேணும் என்று சொன்னது மட்டும்தான் என் யோசனை. அதற்கு மேல் இவ்வளவு விஸ்தாரமான தானங்களை எண்ணினது வசந்தாதான். வசந்தா சொன்னதற்கு மிகவும் அதிகமாகவே தாங்கள் தானம் செய்துவிட்டீர்கள். அந்த தானங்களை வெகு சந்தோஷத்துடன் ஒத்துகொண்டது இந்த சொத்துக்களுக்கெல்லாம் ஏகபோக உரிமைக்காரியான வசந்தா. அப்படியிருக்க நானென்ன செய்துவிட்டேன்?

நல்: சுந்தரம்! நீ இப்படிச் சொல்வது உனக்கு சரிதான். இருந்தாலும் இந்த விழா இவ்வளவு சிறப்பாக நடந்ததற்கு நீ என்னென்ன செய்திருக்கிறாய் என்பது எனக்குத் தெரியும்... சரி... அதைப்பற்றி விவாதம் வேண்டாம்... இந்த விழாவைக் காட்டிலும் முக்யமான வேறொரு விஷயம் இருக்கிறது...

சுந்: என்ன?

நல்: இந்தக் கொட்டகையிலேயே காந்தி மகான் சிலையின் அடியில் உன்னுடைய திருமணத்தையும் நடத்தி மகிழத் தீர்மானித்திருக்கிறேன்.

சுந்: இதே கொட்டகையில் அண்ணல் காந்தியின் அடிநிழலில் தங்களுடைய ஆசீர்வாதத்தோடு என் விவாகம் நடப்பதை மாபெரும் பாக்யமாகத்தான் மதிப்பேன். அப்படி நடக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை. அது தங்களுடைய வாக்கிலிருந்தே வரவேணும் என்றுதான் நானும் காத்திருந்தேன்.

நல்: உன் அருமை பெருமைகளை அறியாதபடி முன் ஒரு நாள் நீ வசந்தாவுக்குக் கடிதம் எழுதினதற்காக நான் கோபித்துக் கொண்டு உன்னை மிகவும் அவமதித்து அனுப்பிவிட்டதை நீ மன்னித்து அதை மறந்துவிட வேண்டும்.

சுந்: தாங்கள் கோபித்துக் கொண்டதில் குற்றமில்லை. அந்த நிலைமையில் யாரும் அப்படித்தான் கோபித்துக்கொண்டிருப்பார்கள். மன்னிக்க வேண்டிய விஷயம் அதில் ஒன்றுமில்லை. அதை நான் முற்றிலும் மறந்துவிட்டேன்.

நல் : ரொம்ப சந்தோஷம்... நீ முன் இஷ்டப்பட்டபடியே வசந்தாவை உனக்கே மணம் செய்துகொடுத்துவிட வேண்டும் என்பது இப்போது என்னுடைய ஆசை.

சுந் : நான் இஷ்டப்பட்டபடி தாங்கள் செய்வதானால் தாங்கள் வசந்தாவின் இஷ்டத்தைக் கேட்டு அதன்படி செய்ய வேண்டும்.

நல் : அதைக் கேட்பானேன்? உன் இஷ்டமும் வசந்தா இஷ்டமும் ஒன்றுதானே?

சுந் : என் இஷ்டமும், வசந்தா இஷ்டமும் ஒன்றுதான். அந்த இஷ்டம் அவள் பிரியப்படுகிற மணவாளனுக்கு அவளைத் தாங்கள் விவாகம் செய்துகொடுக்க வேணும் என்பதுதான்.

நல் : என்ன சுந்தரம் நீ சொல்லுவது பெரிய புதிராக இருக்கிறதே! (என்று திகைப்புக் குறி காட்டி) வசந்தாதான் உன் மீது அளவு கடந்த பிரியம் வைத்திருக்கிறாளே!

சுந் : ஆம், வசந்தா என் மீது அளவற்ற பிரியமுள்ளவள். எனக்கும் வசந்தாவிடத்திலுள்ள பிரியம்போல் வேறு யாரிடத்திலும் இல்லை.

நல் : பின்னென்ன?

சுந் : எங்களுக்குள் இருக்கிற பிரியத்தின் சிறப்பை யாரும் எளிதில் நம்ப முடியாது. அந்தப் பிரியத்தை நான் விவரித்துச் சொல்லுவதற்கு முன் தாங்கள் வசந்தாவின் விவாகத்தை அவளிஷ்டப்படி செய்வதாக எனக்கு ஒரு வரம் தரவேண்டும்.

நல் : வசந்தாவின் விவாகத்தை அவள் இஷ்டப்படியே செய்கிறேன். இதில் எள்ளளவும் தவறமாட்டேன். வசந்தாவின் இஷ்டம் என்ன? சொல்லு. அதன்படியே எல்லாம் செய்கிறேன். இது சத்தியம்.

சுந் : ரொம்ப வந்தனம். தாங்கள் வாக்களித்தால் அது தவறாது என்பதை நான் அறிவேன்.

(என்று சுந்தரம் தயங்குகிறான்)

நல் : தவறமாட்டேன் சொல்லு. வசந்தாவின் இஷ்டம் என்ன?

(சுந்தரம் தயங்கி பதில் சொல்லத் தாமதமாகிறது.)

நல் : ஏன் தயங்குகிறாய்? கூச்சமில் சொல்லு சுந்தரம். எனக்குள்ள எதையும் நமக்கு எந்த விதத்திலும் சொந்தமில்லாத வழிப்போக்கர்களுக்குக்கூடத் தந்துவிடக்கூடிய மனம் வந்துவிட்ட நான், வசந்தாவும் நீயும் இஷ்டப்படுகிறதைச் செய்ய

மறுத்துவிடுவேனு? வசந்தாவின் இஷ்டம் என்ன? சொல்லு.

சுந்: வசந்தாவின் இஷ்டம் என்னவென்றால்: வசந்தா யாரைக் காதலிக்கிறாளோ அவனுக்கே தாங்கள் சந்தோஷமாக அவளை விவாகம் செய்துகொடுக்க வேணும் என்பதுதான்.

நல்: அதிலென்ன தடை? வசந்தா உன்னைத்தானே காதலிக்கிறாள்? உனக்கு அவளைத் தர.....

சுந்: வசந்தா என்னைக் காதலிக்கவில்லை.

நல்: என்ன! என்ன! என்ன! வசந்தா உன்னைக் காதலிக்கவில்லையா!... என்ன சுந்தரம்! என்ன இது!

(என்று நல்லப்பர் மூச்சுத் திணறி விழிக்கிறார்.)

சுந்: இல்லை. வசந்தா என்னைக் காதலிக்கவில்லை.

நல்: இல்லையா?

சுந்: இல்லை.

நல்: நீயாவது அவளைக் காதலிக்கிறாயல்லவா?

சுந்: நானும் அவளைக் காதலிக்கவில்லை.

நல்: நீயும் அவளைக் காதலிக்கவில்லையா?

சுந்: இல்லை.

நல்: (சுந்தரத்தை ஏற இறங்கப் பார்த்துவிட்டு) என்ன சுந்தரம்! நீ சொல்லுவது முழு மோசமாக இருக்கிறதே! நீ வசந்தாவுக்கு எழுதிய காதல் கடிதத்தைக் கையும் மெய்யுமாகப் பிடித்து நானே என் கண்ணால அதைப் படித்துப் பார்த்திருக்க, நீ அதை இப்படி மறைக்கிறாயே. நீ கூட....

சுந்: தாங்கள் மிகவும் தயவு செய்து பொறுத்தருள வேண்டும். நான் வசந்தாவுக்கு எழுதிய காதல் கடிதத்தில் வசந்தாவின் மேல் நான் காதல் கொண்டிருப்பதாக எழுதவில்லையே.

நல்: பின் என்ன எழுதியிருந்தாய்?

(என்று அழுத்தமாகக் கேட்டு முறைத்துப் பார்க்கிறார்.)

சுந்: வசந்தா வேறொருவர் மேல் காதல் கொண்டுவிட்டதை நான் ஆமோதிப்பதாக எழுதியிருந்தேன். அவ்வளவுதான்.

நல் : அப்படியா !

(என்று சிறிது நேரம் மூக்கின் மேல் விரலை வைத்து யோசனை செய்து பார்த்துவிட்டு, திடீரென்று எழுந்திருக்கிறார். ஒரு இரும்புப் பெட்டியண்டை போகிறார். சாவியைத் தேடி அதைத் திறக்கிறார். அதில் ஒரு சிறு 'டிராயரை' இழுத்து அதிலிருந்து ஒரு காகிதக் கத்தையை எடுத்து, அதில் முன்னே செல்லம்மாளிடமிருந்து வழி மறித்து வாங்கிய சுந்தரம் எழுதிய கடிதத்தைத் தேடி எடுக்கிறார். விரித்து வாசிக்கிறார். தலையை அசைக்கிறார். விரித்துப் பிடித்த கடிதத்தோடு சுந்தரத்திடம் வருகிறார். கடிதத்தைச் சுந்தரத்திடம் தந்து,)

நல் : நீ சொல்லுகிறபடியும் அர்த்தம் பண்ண இடமிருக்கிறது.

சுந் : நான் சொல்லுகிற அர்த்தம்தான் நான் எண்ணினது. சந்தர்ப்பங்களை ஒட்டி அர்த்தம் செய்யவும் இடமிருக்கலாம். ஆனால் அது நான் எண்ணி எழுதினதல்ல. பாருங்கள்.

(என்று கடிதத்தைப் படிக்கிறான்.)

கடிதம்

வசந்தா ! உன்னுடைய நீண்ட கடிதம் என் மனதை உருக்குகின்றது. உன்னுடைய காதலின் வலிமையை நன்றாக அறிந்து கொண்டேன். உன்னுடைய விருப்பத்தை என் மனப்பூர்வமாக ஆமோதிக்கின்றேன். நீ கடிதத்தில் குறித்திருக்கிற எல்லா காரியங்களையும் ஒன்றுவிடாமல் செய்துமுடிப்பேன். இது சத்தியம்.

சுந் : (கடிதத்தைப் படித்துவிட்டு) பார்த்தீர்களா ? இதில் நான் வசந்தாவிடத்தில் காதல் கோருவதாக அர்த்தம் செய்ய என்ன இருக்கிறது ?

நல் : சரி, நீ சொல்லுகிற அர்த்தத்தையே நான் ஒத்துக்கொள்கிறேன்... அது போனாற் போகட்டும்... அந்தக் கடிதத்தில் நீ குறிப்பிட்டிருக்கிற 'காதலின் வலிமை' என்கிறாயே, அது என்ன ? அவள் விருப்பம் என்ன ? வசந்தாவின் நீண்ட கடிதத்தில் அவள் குறிப்பிட்ட காரியங்கள் என்னென்ன ? அவற்றை ஒன்றுவிடாமல் நீ செய்து முடித்தது என்னென்ன ?

சுந் : சொல்லுகிறேன். அதையெல்லாம் தங்களிடத்தில் சொல்லத்தான் நான் இவ்வளவு பீடிகை போட்டுக்கொண்டேன். தாங்கள் தயவு செய்து நிதானமாக வசந்தாவின் நிலைமைக்கு அனுதாபத்தோடு கேட்க வேண்டும். கோபித்துவிடக் கூடாது.

நல் : என்னுடைய கோபமெல்லாம் போய் வெகு நாளாய் விட்டது. நிதானமாகவே அனுதாபத்தோடு கேட்கிறேன், சொல்லு.

சுந்: ரொம்ப சந்தோஷம்... எனக்கு முன்னால் தங்களுடைய அந்தரங்கக் காரியதரிசியாக இருந்தது யார்?

நல்: நம்ம ராஜப்பாவின் மகன் மோகனரங்கன். ஏன் அவனுக்கென்ன?

சுந்: அவனே ஏன் வேலையைவிட்டு நீக்கினீர்கள்?

நல்: நான் அவனே வேலையிலிருந்து நீக்கவில்லை. நான் ஊரில் இல்லாதபோது என் மனைவி அவன் மீது கோபங்கொண்டு அவனே மிகவும் கண்டித்துப் பேசிவிட்டாளாம். அதனால் அவனுகவே என்னிடம் சொல்லாமல் கூட நின்று கொண்டான்.

சுந்: தங்கள் மனைவியவர்கள் அவன் மீது எதற்காகக் கோபங் கொண்டார்கள்?

நல்: அவன் வசந்தாவிடத்தில் ஒழுங்கீனமாக நடந்துகொண்டானும். அதற்காக.

சுந்: என்ன ஒழுங்கீனம்?

நல்: வசந்தாவுக்கு முத்தங் கொடுக்க முயன்றனும். அதை என் மனைவியே பார்த்துவிட்டாள்.

சுந்: அதைத் தவிர மோகனரங்கன் தங்களிடத்தில் வேறு குற்றம் ஏதாவது செய்ததுண்டா?

நல்: இல்லை, வேலையில் வெகு கெட்டிக்காரனுகவும், மிகவும் நம்பத் தகுந்தவனுகவும்தான் இருந்தான்.

சுந்: பின் ஏன் தாங்கள் அவனே அடிக்கடி வெறுத்துப் பேசினீர்களாம்?

நல்: என் மனைவி சொன்ன காரணத்துக்காகத்தான். அதையும் நெடுநாளைக்கு அப்புறம்தான் என் மனைவி என்னிடத்தில் சொன்னுள். முதலில் அவன் என்னிடத்தில் சொல்லிக் கொள்ளாமல் அமெரிக்காவுக்குப் போய்விட்டதற்காகத்தான் வருத்தமாகப் பேசினேன். பிறகு என் மனைவி சொன்னதைக் கேட்டு அவனைக் கொஞ்சம் வெறுத்துத்தான் இருந்தேன்.

சுந்: அந்த நினைப்பில்தான் தாங்கள் என்னையும் வெறுத்து வெளியிற் போகச் சொன்னீர்கள் அல்லவா?

நல்: ஆமாம். அது மிகவும் உண்மைதான்.

சுந்: சரி, இனி என் கடிதத்திலிருந்து தாங்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்லுகிறேன்.

நல்: சொல்லு.

சுந்: மோகனரங்கன் மிகவும் நல்லவன். முதலில் தங்களுடைய அனுதாபம் அவனுக்குக் கிடைக்க வேணுமென்று மிகவும் கேட்டுக்கொள்கிறேன். தங்களுடைய மனைவியவர்கள்

மோகனரங்கன் வசந்தாவுக்கு முத்தம் கொடுக்க முயன்றதை —ஏன் முத்தம் கொடுத்தேவிட்டதை—பார்த்துவிட்டதாகச் சொல்லுகிற அந்த நாளுக்கு வெகுநாள் முன்னிலிருந்தே அவர்கள் இருவரும் காதலர்கள். நாங்கள் மூன்று பேரும் பள்ளிக்கூடத்தில் படிக்கிறபோதே வசந்தா மோகனரங்கன் மீது ப்ரேமை கொண்டிருந்ததை நான் அறிவேன். மோகன ரங்கன் உண்மையிலேயே அவன் பெயருக்குத் தகுந்தபடி மோகன வடிவம் உள்ளவன் என்பதைத் தாங்களும் ஒப்புக் கொள்வீர்கள். பள்ளிக்கூடத்தில் அவர்கள் இருவருக்கும் வளர்ந்த பாச்சத்தினால்தான் வசந்தா உங்களிடம் சிபார்சு பேசி அவனுக்கு உத்யோகம் வாங்கித் தந்தாள். இங்கே அவன் வேலை பார்த்துக் கொண்டிருந்த போது அவர்களு டைய காதல் கலைக்க முடியாத உறுதியடைந்து கல்யாண ஒப்பந்தமும் செய்து கொண்டார்கள். அந்த சமயத்தில்தான் நீங்கள் வசந்தாவை கணேசருக்கு இரண்டாம் தாரமாகக் கொடுத்துவிடப் பேச்சு வார்த்தைகள் ஆரம்பித்தீர்கள். அந்த பேச்சுவார்த்தைகளால் இவர்களுடைய கல்யாண ஒப்பந்தம் பின்னும் பலமடைந்தது. அப்போது முத்தங் கொடுத்துக் கொண்டதைத் தான் அம்மாளவர்கள் பார்த்து விட்டது.

நல்: இதெல்லாம் உனக்கெப்படி தெரியும்?

சுந்: வசந்தா எனக்கனுப்பிய வெகு நீண்ட கடிதத்தினால் தான்.

நல்: சரி. அப்புறம்?

சுந்: மோகனரங்கன் வேலையிலிருந்து நின்று விட்டான். அதன் பின் அமெரிக்காவுக்குப் போய்விட்டான். அவன் அமெரிக்கா வுக்குப் போகும் போது ஒரு விஸ்தாரமான கடிதம் எழுதி அதை அவனுடைய தந்தைமூலமாக வசந்தாவுக்கு சேர்ப்பித் தான். வசந்தாவும் அதற்குப் பதில் எழுதி அதே ராஜப்பா மூலம் அனுப்பிவிட்டாள். அதனாலும் இவர்களுடைய கல்யாண ஒப்பந்தம் இன்னும் பலமடைந்தது.

நல்: ராஜப்பாவே தூது நடந்திருக்கிறாரா!

சுந்: வசந்தாவைப் போன்ற மகாலக்ஷ்மி மருமகளாக வரப்போகி றாள் என்றால் யார்தான் தூது நடக்க மாட்டார்கள்? ராஜப்பா நடந்ததில் என்ன விந்தை?

நல்: அதன் பிறகு?

சுந்: அதன் பிறகு நான் உங்களுக்குக் காரியதரிசி ஆனேன். அதுவும் வசந்தாவின் சிபார்சினால்தான்...மோகனரங்கனை

வசந்தா சிபார்சு செய்தது அவன் மேல் வசந்தாவுக்கிருந்த மோகத்தால். என்னே உங்களுக்கு வசந்தா சிபார்சு செய்தது வெறும் அன்பினால். என்னுடைய கஷ்டங்களை அறிந்து கருணை ததும்பிய பெருங்குணத்தால் ஒரு நண்பனுக்குச் செய்ய வேண்டிய கடமை என்றே வசந்தா எனக்காகத் தங்களிடத்தில் கண்ணீர் வடித்து வேலை வாங்கிக் கொடுத்தாள். அப்போது எனக்கு வசந்தா அந்த உதவி செய்யாதிருந்தால் எங்கள் குடும்பம் அலங்கோலமாகியிருக்கும். இன்னேரம் என் தாயார் இறந்து போயிருக்கவும் நேர்ந்திருக்கும்.

நல்: ஆம். அது உண்மைதான். வசந்தா கண்ணீர் வடித்து என்னைக் கெஞ்சியிராவிட்டால் உனக்கு நான் உத்யோகம் கொடுத்தே இருக்கமாட்டேன்.

சுந்: அதற்காக நானும் என் குடும்பமும் வசந்தாவுக்கு என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

நல்: அதிருக்கட்டும்; மீதியையும் சொல்லு.

சுந்: காமப் பேச்சோ காதல் பேச்சோ எனக்கும் வசந்தாவுக்கும் இடையில் வந்ததே இல்லை. எங்களுக்குள் இருந்தது கள்ளங் கபடமற்ற தூய அன்புதான். தங்கையும்—அண்ணனும், தந்தையும்—மகளும் அல்லது தாயும்—மகனும் போலத்தான் நாங்கள் நடந்து வந்திருக்கிறோம். எங்களுக்குள் இருக்கும் பரிசுத்த அன்பைப் போல் காதலிலும் காமத்திலுங்கூட இருக்குமோ தெரியாது.

நல்: ரொம்ப சந்தோஷம். அப்புறம்?

சுந்: அந்தத் தூய அன்பினால் தனுடைய அந்தரங்கங்களையெல்லாம் எனக்கு விஸ்தாரமாக எழுதி வசந்தாவை கணேசருக்கு கல்யாணம் செய்துகொடுத்துவிடத் தாங்கள் கட்டாயப்படுத்த எண்ணியிருப்பதாகப் பயந்து அப்படி நேரிடுவதற்கு முன்னால் மோகனரங்கன் இங்கே வந்து விடும்படி அவருக்குத் தந்தியும் தபாலும் பணமும் அனுப்பச் சொல்லி அவள் எழுதிய நீண்ட கடிதத்தில் வசந்தா கேட்டுக் கொண்டிருந்தாள்.

நல்: மோகனரங்களுக்குத் தந்தியும் தபாலும் பணமும் அனுப்பினையா?

சுந்: அனுப்பினேன்.

நல்: பணம் எது?

சுந் : வசந்தாவின் சொந்தச் செலவுகளுக்கென்று தாங்கள் அப்போதைக்கப்போது கொடுக்கும் பணங்களைச் சேர்த்து வைத்ததில் இருந்து வசந்தா கொடுத்தது.

நல் : எவ்வளவு?

சுந் : ஐயாயிரம் ரூபாய்.

நல் : மோகனரங்கனுக்கு அதை அனுப்பியாச்சா?

சுந் : தந்தி மூலமாகவே பணத்தையும் அனுப்பியாச்சு.

நல் : மோகனரங்கன் வந்துவிட்டானா?

சுந் : நேற்றே விமான மூலம் சென்னைக்கு புறப்பட்டுவிட்டான், நாலைந்து நாளில் இங்கே வந்துவிடுவான்.

நல் : பேஷ்! சுந்தரம், உன் பெருங்குணத்தை என்னென்று பாராட்டுவேன்! நீ வசந்தாவுடன் சகோதரனைப் போல இருந்து வந்திருப்பதால் நீ எனக்கு மகன் போல. நான் தானம் செய்துவிட்ட சொத்துகள் போக எனக்கென்று மிச்சமாகிற எல்லாவற்றிற்கும் நீயே உரிமைக்காரன். உன் இஷ்டப்படியும் வசந்தாவின் இஷ்டப்படியும் வசந்தா மோகனரங்கனையே மணந்துகொள்ளட்டும்... ஆமாம் உன் கல்யாணத்தை விழா நடந்த கொட்டகையிலேயே நடத்திவிட எண்ணியிருப்பதாக ஆரம்பத்தில் நான் சொன்னபோது நீ 'ஆமாம், அதற்காகத்தான் காத்துக் கொண்டிருக்கிறேன்' என்றாயே, அது என்ன?

சுந் : ஆமாம், இன்னும் அதற்காகத்தான் காத்துக்கொண்டிருக்கிறேன்.

நல் : உனக்குப் பெண்?

சுந் : எனக்கா? எனக்காக நெடுநாளாகக் காத்திருக்கிறாள் ராஜேஸ்வரி; என் மாமன் மகள். எங்களுக்குள் கல்யாண ஒப்பந்த சபதம் செய்துகொண்டு அநேக ஆண்டுகளாயின.

நல் : ஆ! இப்படியா அதை மறைத்து வைத்துக்கொண்டிருந்தாய, இத்தனை நாளும்! சுந்தரம்! நீ ஒரு அபூர்வமான பிறவி.

காட்சி 73

இடம் : நல்லப்பர் வீடு

காலம் : மூற்பகல்

[**'ஸ்ட்ரைக்'** செய்யப் பேசினுன் என்று நல்லப்பர் காரியாலயத்திலிருந்து நீக்கப்பட்டுவிட்ட ராமநாதனும், புரட்சிக் கூட்டத்தாேடு போனதாக வேலையிலிருந்து விலக்கப்பட்ட கோவிந்தனும் நல்லப்பர் வீட்டுக்குள் கொள்ளையடிக்கப் போவதற்காகத் தயாரான மாந்தோப்புக் கூட்டத்தில் அன்று ராத்திரி இருந்தார்கள். கொள்ளைக்காரர்கள நல்லப்பர் வீட்டுக்குள புகுந்து அவர்கள் எதிர்பார்த்தபடி நல்லப்பர் அங்கே இல்லாமற்போனதின் ஏமாற்றத்தால் உண்டான கோபத்தில் அங்கிருந்த பலவிலையுயர்ந்த பொருள்களை உடைத்து நாசமாககி மேஜை நாற்காலிகளுக்கு நெருப்பு வைக்க ஆரம்பித்தார்கள். அதைக் கோவிந்தனும் ராமநாதனும் தடுக்க முயன்றார்கள். அது முடியாமற் போனதனல் உண்டான தகராறுகளால் இவர்கள் இருவரும் வந்த வழியிலேயே நழுவித் தங்கள் வீட்டுக்குப் போய்விட்டார்கள். மாந்தோப்பில் அன்றிரவு கூடியிருந்தவர்களெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாகத் துப்பறிந்து போலீஸார் சைந்து செய்தபோது ராமநாதனும் சோவிந்தனும் அங்கே இருந்ததையும் பிடிபட்டவர்கள் சொல்லிவிட்டார்கள். அதனல் இவர்களுக்கும் 'வாரண்ட்' பிறப்பிக்கப் பட்டிருந்தது. அதையறிந்து இவர்கள் இருவரும் வீட்டைவிட்டு மறைந்து போனர்கள். பிறகு நல்லப்பரும் வசந்தாவும் மீட்கப்பட்டு விழா கடப்பதை அறிந்து வீட்டுக்குத் திரும்பி வந்தார்கள். அவர்கள் இருவரும் செங்கோடனைக் கண்டு தங்கள் கதையைச் சொல்லி, செங்கோடன் மூலமாக சுந்தரத்தைச் சந்தித்து தங்கள்மீது இருகிற 'வாரண்ட்டுகளை' ரத்து செய்துவிடப் போலீசாருக்கு சிபார்சு செய்யும்படி கேட்டுக்கொண்டார்கள். சுந்தரம் தன்னுடைய ஆபீஸ் அறையில் உட்கார்ந்திருக்கிறன். செங்கோடனும், கோவிந்தனும், ராமநாதனும் அருகில் ஒரு பலகையின் மீது அமர்ந்திருக்கிறார்கள்.]

சுந்: நான் இன்னும் கொஞ்ச நேரத்தில் என் தாயாரையும் மாமாவையும் பார்த்துவரப் பாண்டிநாத்தம் போகிறேன். போலீஸ்

இன்ஸ்பெக்டரையாவது சப்-இன்ஸ்பெக்டரையாவது கண்டு பேசி உங்கள் இருவரையும் நீக்கிவிடச் செய்கிறேன்.

(கோவிந்தனும், ராமநாதனும் கும்பிடுகிறார்கள். இந்தச் சமயத்தில் சப்-இன்ஸ்பெக்டரே அங்கே வந்துவிடுகிறார். சுந்தரம் எழுந்து)

சுந்: வாங்க சார். உட்காருங்கள் (ஆசனமளித்து) என்ன ஆச்சரியம்! இப்போதுதான் உங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தேன். நீங்களே வந்துவிட்டீர்கள். உங்களுக்கு ஆயுசு நூறு! (என்று சிரிக்கிறான்.)

சப்: உங்கள் வாழ்த்துதலுக்கு ரொம்ப வந்தனம். (சிரிக்கிறார்.)

(செங்கோடனும், கோவிந்தனும், ராமநாதனும் போலீஸ் அதிகாரி என்ற அச்சத்தாலோ மரியாதைக்காகவோ எழுந்து நிற்கிறார்கள். சுந்தரம் அவர்களை உட்காரச் சொல்லி சமிக்கை செய்கிறான். அவர்கள் உட்காருகிறார்கள்.)

சுந்: (சப்-இன்ஸ்பெக்டரைப் பார்த்து) மாந்தோப்பில் அன்றிரவு கூடியிருந்த எல்லாரையும் கண்டு பிடித்தாகி விட்டதா?

சப்: பெரும்பாலும் ஆகிவிட்டது. இன்னும் ஒரு பத்து இருபது பேர்கள்தான் அகப்படவில்லை.

சுந்: அவர்களையும் நான் பிடித்துத் தருகிறேன்.

சப்: பிடித்துக் கொடுங்கள். உங்களுக்கும் நல்லப்பர் வெகுமதி கொடுப்பார். (என்று சிரிக்கிறார். எல்லாரும் சிரிக்கிறார்கள். சிரித்தபின்) அவர்களை யெல்லாம் பிடித்துத்தான் என்ன பலன்? அவர்களில் பெரும்பாலும் கொள்ளையடிக்கிற பணத்தில் உடனே பங்கு கிடைக்கப் போகிறது என்ற ஆசையினால் அப்போதைக்கு வந்த கும்பல்தான். குற்றம் செய்கிற நோக்கத்தோடு கூடியவர்கள் அதில் சுமார் இருபத்தைந்து பேர்கள்தான்.

சுந்: அந்த இருபத்தைந்து பேர்களைத் தவிர மற்றவர்களை என்ன செய்யப்போகிறீர்கள்?

சப்: என்ன செய்வது? நல்ல நடத்தைக்கு ஜாமீன் வாங்கிக் கொண்டு விட்டுத் தொலைக்கவேண்டியதுதான். அவர்களும் அந்தக் கூட்டத்தில் இருந்தார்கள் என்பதைத் தவிர வேறு குற்றம் செய்ததாகச் சொல்ல ருசுவில்லை.

சுந்: அப்படிப்பட்டவர்கள் ஜாபிதாவில் கோவிந்தன் ராமநாதன் என்ற பெயர்கள் இருக்கின்றனவா?

சப்: ஆம். அவர்கள் மீது வாரண்டுகள்கூட இருக்கின்றன.

சுந்: அவர்கள்மேல் என்ன குற்றம் ருசுவாயிருக்கிறது?

சப்: கொள்ளைக்குப் போனவர்களோடு இருந்ததாகச் சொல்லப் படுகிறது. அவ்வளவுதான்.

சுந்: அவர்கள் இருவரும் எனக்கு நன்றாகத் தெரிந்தவர்கள். என்னால்தான அவர்கள் முத்து வீரப்பனைப் பார்க்க மாந் தோப்புக்குப் போக நேரிட்டது. முடியுமானால் அவர்களை விடுவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

சப்: பார்க்கிறேன். அவர்கள் பிடிபடாமல் ஒளிந்துகொண்டிருப் பதால் சந்தேகம் அதிகமாகிறது. அவர்கள் சரணடைந்து தங்கள் நிலைமையை விளக்குவார்களானால் சுலபமாகவிருக்கும்.

சுந்: இந்த இடத்திலேயே அவர்கள் இருவரும் உங்களுக்கு 'சரெண்டர்' ஆகிறார்கள். இதோ இவர்கள்தான் அந்த இரண்டு பேரும்.....

(என்று கோவிந்தனையும், ராமசாமியையும் காட்டுகிறான். அவர் கள் எழுந்து சப்-இன்ஸ்பெக்டரைக் கும்பிடுகிறார்கள்.)

சப்: சரி, அவர்களைக் கூட்டிக்கொண்டுபோய் அவர்களுடைய வாக்குமூலங்களை வாங்கிக்கொண்டு, விட்டுவிடப் பார்க்கி றேன்.

சுந்: அவர்களுக்கு ஜாமீன் வேணுமானால் நான் தருகிறேன்.

சப்: வேண்டியதில்லை. உங்கள் வாய்மொழியே போதும்.....சரி .....இப்போது நான் வந்த காரியம் வேறு.

சுந்: என்ன?

சப்: நல்லப்பரவர்களைப் பார்த்துக் கொஞ்சம் பேசவேணும்.

சுந்: ரகசியமா?

சப்: கொஞ்சம் ரகசியம்தான்.....ஆனால், நீங்கள் அறியத்தகாத ரகசியமல்ல.

சுந்: (மற்றவர்களை யெல்லாம் வெளியே போகும்படி ஜாடை காட்டி அவர்கள் போனபின்) என்ன?

சப்: ஒன்றுமில்லை.....இந்த வீரபத்ரன் அந்த வீராச்சாமியிடம் ஆயிரம் ரூபாய் வாங்கிக்கொண்டிருக்கிறான். மேலும் பணம் தருவதாகச் சொன்னதில் ஆசை வைத்துதான் இவன் வீரா சாமி சொன்னதற்கெல்லாம் உடன்பட்டு நல்லப்பர் வீட்டுக் குக் காவலே இல்லாமல் எல்லாரையும் ஆலம்பாடிக்கு அனுப்பிவிட்டுத் தானும் போயிருக்கிறான். இவனையும் வீரா சாமிக்கு உடந்தையாக இருந்ததாகச் சேர்த்து விடலாமா என்று நல்லப்பரைக் கேட்கவேணும்.

சுந்: வீரபத்ரனைப்பற்றி நேற்றே நானும் நல்லப்பரும் பேசிக் கொண்டோம். இனிமேல் தனக்கும் தன் வீட்டுக்கும் எந்த விதமான காவலும் வேண்டியதில்லையென்றும் வீரபத்ரனையும் மற்ற சிப்பாய்களையும் நீக்கிவிட வேணும் என்றும் சொல்லி விட்டார்.....என்னைக் கேட்டால் வீரபத்ரன் ஒரு முட்டாள். பணத்தாசையால் ஏமாந்துபோய் வீராசாமி சொன்னதை யெல்லாம் கேட்டுவிட்டான் என்றாலும் நல்லப்பர் வீட்டுக்குள் கொள்ளைக்காரர்கள் நுழைய வேண்டுமென்று துரோகம் செய்துவிட்டவன் அல்ல. ஆகையினால் அவனைக் கொள்ளைக் காரர்களோடு சேர்ப்பது நியாயம் அல்ல.

சப்: நானும் அப்படித்தான் எண்ணுகிறேன். எதற்கும் நல்லப் பரவர்களை கேட்டுக்கொண்டு செய்யவேணும் என்று இன்ஸ் பெக்டர் என்னை அனுப்பினார்.

சுந்: நல்லப்பரைக் கேட்போம். ஆனால் அவரும் நான் சொன்ன படிதான் சொல்லுவார்.

சப்: கேட்டு விடுவோம்.

சுந்: ஆஹா—அப்படியே செய்வோம்.
(இருவரும் நல்லப்பரைப் பார்க்கப் போகிறார்கள்.)

காட்சி 74

இடம் : பாண்டிநத்தத்தில் நடராஜன் வீடு
காலம் : மாலை

[சுந்தரத்தின் மாமன் நடராஜனுக்கு வெகு கோபம். மீனாட்சியம்மாளும் அவருடைய குழந்தைகளும்கூட விழாவிற்குப் போனது அவருக்குப் பிரியமில்லை. நல்லப்பரே நேரில் வந்து அழைத்ததற்காக விழாவுக்கு மட்டும் போய்விட்டு விழாவில் பிரசங்கங்கள் முடிந்த உடனே திரும்பி வந்துவிடுவதாகச் சொல்லி மீனாட்சியம்மாள் மிகவும் கேட்டுக்கொண்டதின்மேல் நடராஜன் தன்னுடைய மோட்டார் வண்டியிலேயே மீனாட்சியம்மாளையும் குழந்தைகளையும் விழாவுக்கு அனுப்பினர். நடராஜனிடம் சொல்லி வந்தபடியே மீனாட்சியம்மாள் விழாவில் பிரசங்கங்கள் முடிந்த உடனேயே சுந்தரத்திடம்கூட சொல்லிக் கொள்ளாமல் பாண்டிநத்தத்துக்குப் போய்விட்டார்.

விழாவில் நடந்த விஷயங்களை யெல்லாம் கேட்டு சுந்தரத்துக்கும் வசந்தாவுக்கும் கல்யாணத்தை உத்தேசித்ததான் நல்லப்பர் அவருடைய மில்களில் சுந்தரத்துக்குக் கால்வாசி பங்கும் தந்து அவர் பார்த்து வந்த 'மானேஜிங் டைரக்டர்' வேலையையும் அவனுக்கே தந்திருக்கிறார் என்று நடராஜன் எண்ணிக்கொண்டார். அதனால் ராஜேஸ்வரியைச் சுந்தரம் மணந்து கொள்ளக்கூடும் என்ற ஆசை வைப்பதற்கு இனி இடமே இல்லை யென்று அவர் தீர்மானித்துவிட்டார்.

சுந்தரம் குண்டு பட்டு ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டதற்கு முன்னாலேயே நடராஜனுக்குச் சுந்தரத்தின்மேல் இருந்த நம்பிக்கை போய்விட்டது. அதனால் ராஜேஸ்வரிக்கு இளமையும் படிப்பும் செல்வமும் உள்ள இன்னொரு மாப்பிள்ளைக்குக் கொடுத்து விடுவதென்று தீர்மானித்து, ஏறத்தாழ பேச்சு வார்த்தைகளும் முடிந்துவிட்ட நிலைமையில் இருந்தது. ராஜேஸ்வரியின் சம்மதம் பெற வேண்டிய ஒன்றுதான் பாக்கி யிருந்தது. அந்த சமயத்தில்தான் சுந்தரம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டான். அதை யறிந்து நடராஜன் மனங் கேளாமல் தானே போய் மீனாட்சியம்மாளை கூட்டிக்கொண்டு வந்தார். மீனாட்சியம்மாள் நடராஜன் வீட்டில் இருந்து கொண்டு நடராஜனும் அவளும் போய், தினந் தினம் சுந்தரத்தை ஆஸ்பத்திரியில் பார்த்து அவனுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து வந்ததனாலும் அதனால் அப்போது சுந்தரம் நடராஜனிடத்தில் காட்

டிய மகிப்பினாலும் சுந்தரத்தின் மனம் பழையபடி ராஜேஸ்வரி பக்கம் மாறிவிடும் என்று நடராஜன் எண்ணினார். அதனால் முன்பேசிக்கொண்டிருந்த மாப்பிள்ளை வீட்டாருக்கு முடிவான பதில் ஒன்றும் சொல்லாமல் நிறுத்தியிருந்தார். சுந்தரம் ஆஸ்பத்திரியிலிருந்து தன்னிடம் சொல்லிக் கொள்ளாமல்கூட வசந்தாவுடன் போய்விட்டதனாலும், விழாவில் நடந்த விஷயங்களைக் கேட்டு சுந்தரம் வசந்தாவைத்தான் விவாகம் செய்துகொள்ளப் போகிறான் என்று நம்பிவிட்டதனாலும், உடனே முன் பேசி நிறுத்தியிருந்த வரனுக்கே ராஜேஸ்வரியைக் கொடுக்க முகூர்த்தம் நிச்சயம் செய்துவிட நடராஜன் முனைந்து விட்டார். விழாவுக்கு மறுநாளே பேச்சுகளை முடித்து முகூர்த்தம் நிச்சயிப்பதற்காக தானே அவர்களிடம் வரப் போவதாக மாப்பிள்ளை வீட்டாருக்கு நடராஜன் எழுதினார். அவர்களும் இவரை வரச்சொல்லி பதில் எழுதினார்கள். நடராஜன் அந்த மாப்பிள்ளையின் ஊருக்குப் போயிருக்கிறார்.

போகும்போது ராஜேஸ்வரியிடம் "ராஜேஸ்வரி! இனிமேல் அந்த அயோக்யப் பயல் சுந்தரத்தை நீ கனவில்கூட நினைக்கக் கூடாது. இதுவரையிலும் நான் பார்த்து வந்த வரன்களுக்கெல்லாம் 'அது சொள்ளை, இது சொத்தை' என்று சொல்லிக்கொண்டிருந்த மாதிரி நீ இனிமேலும் சொல்லிக் கொண்டிருக்க முடியாது. நான் பார்த்து யாரைத் தீர்மானிக்கிறேனோ அதற்கு நீ சம்மதித்தவிடவேண்டியதுதான். எல்லா விதத்திலும் விரும்பத் தகுந்த நல்ல வரனைத் தான் நான் தீர்மானிப்பேன்" என்று சொல்லிவிட்டு ராஜேஸ்வரியின் பதிலைப் பற்றிய விசாரமே இல்லாமல் நடராஜன், தன் மோட்டாரில் அந்த மாப்பிள்ளை இருக்கிற ஊருக்குப் போய்விட்டார்.

மாலை ஆறுமணி இருக்கும். ராஜேஸ்வரி மாடியிலுள்ள தன் அறையில் தலைவாரி பூமுடித்துக்கொண்டு மற்றும் அலங்காரங்களையெல்லாம் வழக்கமாகச் செய்து கொள்வதைக் காட்டிலும் அதிகமாகச் செய்துகொள்ளுகிறாள். புடவை ரவிக்கை முதலியவற்றைப் பொருக்கி யெடுத்து அணிந்து கொண்டு வெகுநாளாகப் பெட்டியிலேயே கிடந்த வைரத் தோடுகளையும் மாலைகளையும் பூட்டிக்கொள்ளுகிறாள். கண்ணுக்கு மை தீட்டுகிறாள். கஸ்தூரிப் பொட்டிட்டுக் கொள்ளுகிறாள். வாசனைகளைப் பூசிக்கொள்ளுகிறாள். கடைசியாக நிலைக் கண்ணாடியில் தன் அலங்காரங்களை அழகு பார்த்துகொண்டிருக்கிறாள்.

மீனாட்சியம்மாள், ராஜேஸ்வரி இருந்த அறைக்குள் வருகிறாள். ராஜேஸ்வரி அதனையைக் கண்டு வெகு சந்தோஷத்துடன்]

ராஜே: அத்தை! இந்தப் புடவை எனக்குப் பொருந்துகிறதா பாருங்கள்.

(என்று அத்தைக்கு அருகில் வருகிறாள்.)

மீனு : உனக்கு எதுதான் பொருந்தாது ?

(என்று அதுவரையிலும் இல்லாத மாதிரியில் ராஜேஸ்வரி தன்னை அலங்கரித்துக்கொண்டிருக்கிற அழகைப் பார்த்து கொஞ்ச நேரம் மகிழ்ந்து பாராட்டிக்கொண்டிருந்து விட்டு, திடீரென்று தன் இரண்டு கைகளாலும் முகத்தை மூடிக் கொண்டு விம்மி விம்மி அழத் தொடங்குகிறாள்.)

ராஜே : (அத்தையின் கைகளைப் பிடித்துக்கொண்டு) அத்தை ஏன் அழுகிறீர்கள் ?

மீனு : (விம்முதலைக் கொஞ்சங் கொஞ்சமாக விட்டு) நான் கொடுத்துவைக்கர்த பாவியாகி விட்டேனே என்றுதான்.

ராஜே : நீங்களா பாவி ? அத்தை, உங்களைக் காட்டிலும் புண்ணியம் செய்தவர்கள் யாருமில்லையென்று ஊரே சொல்லுமே.

மீனு : நான் புண்ணியம் செய்தவளானால் இப்படியெல்லாம் நடக்குமா ?

ராஜே : என்ன நடந்துவிட்டது ?

மீனு : நீ எங்கேயோ யார் வீட்டுக்கோ போகப் போகிறாயே..... அது போதாதா நான் பாவஞ் செய்தவள் என்பதற்கு ?

ராஜே : நான் எங்கும் போகமாட்டேன். உங்களோடுதான்— அத்தை இருப்பேன்.

மீனு : அது சரி, நீ எங்கேயிருந்தாலும் நான் உன்னோடுதான் இருக்கப் போகிறேன். அது நிச்சயம்.....இவன் இப்படி எங்கள் ஆசையில் மண்ணைப் போட்டுவிட்டானே !

ராஜே : யார் உங்கள் ஆசையில் மண்ணைப் போட்டுவிட்டது ?

மீனு : சுந்தரந்தான்.

ராஜே : அத்தானா ? அவர் யாருடைய ஆசையிலும் மண் போட மாட்டாரே ?

மீனு : ஐயோ ! இன்னுமா அந்த நம்பிக்கை வைத்துக்கொண்டிருக்கிறாய் நீ?

ராஜே : எனக்கு அந்த நம்பிக்கை போகவே போகாது.

மீனு : அவனுக்குத்தான் உன்னுடைய நினைப்பே இல்லாமற் போச்சே ?

ராஜே : அவருக்கு என் நினைப்பு இல்லாமற் போனால் போகட்டும். எனக்கு அத்தானுடைய நினைப்பு ஒன்றேதான் எப்போதும்.

மீனு : எத்தனை நாளைக்கு இப்படி நீ அவன் நினைப்பாகவே இருப்பாய் ?

ராஜே : ஏன், இந்த ஜன்மம் முழுதும்தான்.

மீனு : அவன்தான் வசந்தாவைக் கல்யாணம் செய்துகொள்ளப் போகிறானே ? நீ அவனையே நினைத்துக் கொண்டிருந்து என்ன லாபம் ?

ராஜே : அவர் யாரைக் கல்யாணம் செய்துகொள்வாரோ செய்து கொள்ளட்டும். அத்தை ! நான் அத்தானைத்தான் கல்யாணம் செய்துகொள்வேன்.

(சிரிக்கிறாள்)

மீனு : அவன் இஷ்டப்படாமலா நீ அவனையே கலியாணம் செய்து கொள்ளப் போகிறாய் ?

ராஜே : அவர் இஷ்டப்படாவிட்டால் எனக்குக் கலியாணமே வேண்டாம்.

(சிரிக்கிறாள்.)

மீனு : அடியென் கண்ணே ! (மீண்டும் கண்கலங்கி—கண்ணைத் துடைத்துக்கொண்டு) வேண்டாம்மா இப்படியெல்லாம் பேசி இன்னும் பிடிவாதம் செய்து கொண்டிருக்காதே. தம்பி..... நடராஜன்.....சொப்ப நொந்து போயிருக்கிறான். நீ இன்னும் சண்டித்தனம் செய்தால் அவன் மனம் உடைந்து போகும். சுந்தரம் எப்படியோ செய்து கொள்ளட்டும். நீ நல்ல இடத்தில் வாழ்க்கைப்பட்டு குஞ்சு குழந்தைகளோடு சௌக்கியமாக இருக்க வேணும்.

ராஜே : அப்படியே ஆகட்டும் அத்தை, உங்கள் ஆசீர்வாதம் பலிக்கும்.

(சிரிக்கிறாள்)

மீனு : சந்தோஷம்; நானும உங்கம்மாவும் கோவிலுக்குப் போய் விட்டு வருகிறோம். நீ இங்கேயே இருக்கிறாயா ?

ராஜே : விழாவுக்குத்தான் என்னை விட்டுவிட்டுப் போய் விட்டீர்கள். கோவிலுக்காவது கூட வருகிறேனே.

மீனு : வேண்டாமம்மா, நீ வீட்டிலேயே இரு. தம்பி வந்தாலும் வந்து விடுவான்—மத்தியானமே வந்திருக்க வேணும்—விருந்தாளிகளைக் கூட்டிக்கொண்டு வருவான். நீ வீட்டில் இல்லாதிருந்தால் கோபித்துக் கொள்வான்.

ராஜே : அப்படியானால் சரி.

[மீனாட்சியம்மாள் போகிறாள். ராஜேஸ்வரி தன்னுடைய 'பியானோ' வாத்தியத்தை வாசித்துக்கொண்டு பாடுகிறாள்.]

காரிருள் மறைந்தது கதிரொளி விரிந்தது
கவலைகள் யாவையும் கறைந்தொழிய
பேரருள் சுரந்திடப் பெருவழி திறந்திடும்
பிரிந்துற வேண்டாம் இனிமனமே
சீரொடு சிறப்புகள் சிக்கிரம் பெறப்படும்
தேடிய இன்பம் கூடிடுமே
பாருள அனைத்தையும் காத்திடும் பரம்பொருள்
பக்கத்தி லிருந்திடப் பயமேது.

[இப்படிப் பல பல பாட்டுகளைச் சங்கீத பரவசத்தோடு பாடிக் கொண்டிருக்கிறாள்...காலையிலேயே மாமன் வீட்டுக்கு வர வேணுமென்று புறப்பட்ட சுந்தரம் இடையே கேரிட்ட பல அலுவல்களால் காலைப் பயணத்தை ஒத்திப்போட்டு மாலை நான்கு மணிக்கு நல்லப்பருடைய மோட்டாரில் பாண்டிரத்தம் வந்து, போலீஸ் இன்ஸ்பெக்டரையும் இரண்டு டாக்டர்களையும் அவர்கள் இருக்குமிடங்களிற் போய்ப் பார்த்துவிடு, மாமன் வீட்டுக்கு வர பணி ஆறுக்கு மேல் ஆகிவிட்டது. சுந்தரம் தன்னுடன் செங் கோடனையும் கூட்டிக்கொண்டு வந்திருந்தான். மாமன் வீட்டுக்குக் கொஞ்சம் மறைவான இடத்திலேயே மோட் டாரை நிறுத்தி செங்கோடனை மட்டும் அனுப்பி, வீட்டில் மாமா இருக்கிறாரா, தன் தாயார் இருக்கிறாரா, யாரார் எங்கெங்கே இருக்கிறார்கள் என்பதை அறிந்து வரச் சொன் னான் சுந்தரம். செங்கோடன் போனான். வீட்டின் முன் புறத்தில் யாருமில்லை. மேல் மாடியிலிருந்து பாட்டு சத்தம் மட்டும் கேட்டது. கொஞ்சம் கொஞ்சமாக எட்டியெட்டிப் பார்த்துக்கொண்டே பின் கட்டுக்குப் போனான். அங்கே ஒரு வேலைக்காரி வீட்டைப் பெறுக்கிக் கொண்டிருந்தாள். அவளைக் கேட்டான். அவள் நடராஜன் ஊரில் இல்லை யென்றும், பெண்டுகளும் குழந்தைகளும் கோயிலுக்குப் போயிருப்பதாகவும், ராஜேஸ்வரி மட்டும் மேல்மாடியில் இருப்பதாகவும் சொன்னாள். திரும்பி வந்து செங்கோடனை வண்டியில் இருக்கச் சொல்லிவிட்டு சுந்தரம் மட்டும் போய் மாமன் வீட்டுக்குள் நுழைகிறான். வாசலுக்கு வலது புறத்தில் கோடியிலிருக்கிற சுவர் ஓர மாக இருந்த பியானோவின் அருகில் சுந்தரம் வந்த பக்கத் துக்கு முதுகு காட்டி உட்கார்ந்துகொண்டு ராஜேஸ்வரி பாடிக்கொண்டிருக்கிறாள். அடிமேல் அடிவைத்து நடந்து, சுந்தரம் அவளுக்கு வெகு சமீபமாகப் போய்நின்று

தலையை ஆட்டிக் கொண்டு பாட்டை ரஸிக்கிறான். அப் போது பாடிக்கொண்டிருந்த பாட்டு முடியப் போகிறதை அறிந்து ராஜேஸ்வரியின் தோளைத் தொடவோ கண்ணைப் பொத்தவோ சுந்தரம் தன் கையை மெதுவாக உயர்த்து கிறான். அதே சமயத்தில் பாட்டை முடித்துக்கொண்டே ராஜேஸ்வரி தலையை நிமிர்ந்து எதிரே அவளுக்கு நேராக சுவரில் இருந்த கண்ணாடியை அகஸ்மாத்தாகப் பார்க் கிறாள். அதில் தனக்குப் பின்னால் ஏதோ உருவம் அசைவதைக் கண்டு திடுக்கிட்டுத் திரும்புகிறாள். சுந்தரத் தைப் பார்த்ததும்]

ராஜே : அத்தான்! வந்துவிட்டீர்களா!

[என்று குபீரென்று சுந்தரத்தின் மீது சாய்கிறாள். சுந்தரம் அவளை அப்படியே தாங்கிப் பிடித்துத் தன் மார்போடு அணைத்துக்கொண்டு அவளுடைய முதுகைத் தடவிக் கொடுத்து, சடையை நீவிப் பார்த்து, சடையின் உச்சி யில் கனத்திருந்த பூ முடிப்பை முகர்ந்து பார்த்துச் சிறிது நேரம் மௌனமாக களிப்பில் மூழ்கி மெய்மறந்து கிற் கிறான்.]

காட்சி 75

இடம்: நடராஜன் வீடு

காலம்: அதே சமயம்

[ராஜேஸ்வரி மட்டும் தனியாக இருக்கிற மாடிக்குச் சுந்தரம் போவதை வேலைக்காரி பார்த்துக் கொண்டிருந்தாள். அந்த வேலைக்காரி நெடுநாளாக நடராஜன் வீட்டில் இருந்து வருகிறவள். நடராஜன் வீட்டு விஷயங்கள் எல்லா வற்றையும் ஏறத்தாழ அறிந்தவள். சுந்தரம் ஆஸ்பத்திரி யில் படுத்திருந்த போது தினந்தினம் அவள்தான் வீட்டிலிருந்து பசும் பாலும் பழங்களும் மற்றும் வேண்டிய பொருள்களும் கொண்டு போய்க் கொடுத்தவள். ராஜேஸ்வரி - சுந்தரம் விவகாரத்தையும் அறிந்து ராஜேஸ் வரிக்கு அனுதாபம் உள்ளவள்.

கோயிலுக்குப் போயிருந்த மீனாட்சியம்மாளும் மக்களும் நடராஜன் மனைவியும் திரும்பி வந்தார்கள். அவர்கள் வரவுக்காகத் துடித்துக் கொண்டிருந்த அந்த வேலைக்காரி அவர்கள் வீட்டுக்குள் நுழைவதற்கு முன்னால் எதிர்கொண்டு ஓடி, மீனாட்சியம்மாளிடமும் நடராஜன் மனைவிபிடமும் சுந்தரம் ராஜேஸ்வரியோடு மாடியில் இருப்பதை ரகசிய மாகச் சொன்னாள். அதைக்கேட்ட மீனாட்சியம்மாள் மற்றவர் களை யெல்லாம் அங்கேயே இருக்கச் சொல்லிவிட்டுத் தான் மட்டும் தனியே மாடிக்கு ஏறினாள். சத்தமில்லாமல் நடந்து அறைக்குள் மெளள எட்டிப் பார்த்தாள். சுந்தரம் ராஜேஸ் வரியை அணைத்துக் கொண்டு கிற்பதைப் பார்த்து விட்டாள். உடனே மீனாட்சியம்மாள் தன் தலையை இழுத்துக் கொண்டு வாசலுக்கருகில் வெளிச்சமில்லாதிருந்த இடத்துக்கு ஒதுங்கி பூரிப்பு தாங்க மாட்டாமல், மாரடைப்பு வந்தவள்போல்உட்காந்து சுவரில் சாய்ந்து கொள்ளுகிறாள்.

உள்ளே ராஜேஸ்வரியை அணைத்துக் கொண்டிருந்த சுந்தரம் அணைப்பைத் தளரவிட்டு ராஜேஸ்வரியின் தோள்களைப் பிடித்து அவள முகத்தைத் தன் முகத்துக்கு நேராகக் கொண்டு வந்து முத்தமிடப் பார்க்கிறான். ஆனால் ராஜே ஸ்வரி மயக்க மூற்றவளாக காணப்படுகிறாள். சுழுத்து தவண்டு, கண்கள் மூடியிருக்கின்றன. முகம் வேர்த்து நனைந்து கண்ணிலிருந்த மையும் கஸ்தூரிப் பொட்டும் கரைந்து வழிகின்றன. அதைக கண்ட சுந்தரம் அவளை அருகிலிருந்த ஒரு ஆசனத்தில் அமரச செய்து தன்னுடைய

இடது கரத்தால் தன் மேல்வேஷ்டியைக் கொண்டு அவள் முகத்தைத் துடைத்து விடுகிறான். சற்று நேரத்தில் ராஜேஷ் வரியின் மயக்கம் மாறி கண்ணைத் திறந்து சுந்தரத்தைப் பார்த்து புன் முறுவல் செய்து, நாணம் வந்து, எழுந்து தலைகுனிந்து நிற்கிறாள். சுந்தரம் அவளுடைய இரண்டு தோள்களையும் பிடித்துக் கொண்டு]

சுந் : நம்முடைய விரதம் முடிந்தது. கவலைப்படாதே. நாம் இனி மேல் பிரிந்திருக்க வேண்டியதில்லை.

ராஜே : விழா முடிந்த மறுநாளே வருவீர்கள் என்று எதிர்பார்த்தேன். எத்தனை நாளைக்கு இப்படி நெஞ்சை அழுத்திக் கொண்டிருப்பது? அத்தான்! இன்றைக்கு நீங்கள் வராதிருந்தால்...(என்று நிறுத்துகிறாள்.)

சுந் : வராதிருந்தால்?

ராஜே : வராதிருந்தால் அப்பா இன்னொரு வரனைப் பார்த்துக் கொண்டு வந்து அவரைக் கல்யாணம் செய்துகொள்ளச் சொல்லிக் கட்டாயப்படுத்த ஆரம்பித்திருப்பார்.

சுந் : இத்தனை நாளும் அப்படிக் கட்டாயப் படுத்தவில்லையா?

ராஜே : இதுவரையிலும் அப்பா கட்டாயப் பேச்சு பேசினதேயில்லை. என் இஷ்டத்தையே மதித்து அநேக வரன்களுடைய படங்களைக் காட்டி என் கருத்தைக் கேட்டுக்கொண்டிருந்தார். விழாவுக்கு அப்புறந்தான் என்னை உடனே யாருக்கோ கொடுத்துவிடப் போவதாகவும் நான் அட்டி சொல்லலே கூடாதென்று கண்டித்துவிட்டு மாப்பிள்ளை இருக்கிற ஊருக்குப் போயிருக்கிறார்.

சுந் : மாமா என்றைக்கு வருவார்?

ராஜே : இன்றைக்கு மத்யானமே வந்திருக்கவேணும். இன்னும் கொஞ்ச நேரத்தில் வந்தாலும் வந்துவிடுவார். அவர் விருந்தாளிகளோடு வருவாரென்று சமையல் பலமாக நடக்கிறது.

சுந் : என் தாயாருக்கு நம்முடைய விரதத்தைப்பற்றி எதாவது தெரியுமா?

ராஜே : அத்தைக்கா? அவர்களுக்கெப்படித் தெரியும்! நானாவது நீங்களாவது சொன்னால்தானே தெரியும்! உங்கள் அனுமதி இல்லாமல் நான் சொல்லுவேனா?...அத்தையவர்களும் நீங்கள் வசந்தாவைத்தான் கல்யாணம் செய்து கொள்ளப் போவதாக நம்பிக்கொண்டு என்னைப் பார்க்கும் போதெல்லாம் அழுகிறார்கள்.

சுந்: சரி, நான் கொஞ்சம் வெளியில் போய்விட்டு வருகிறேன். அதற்குள் மாமாவும் வந்துவிடட்டும்-ராத்திரி விருந்து சாப் பாட்டுக்கு நானும் வந்து விடுகிறேன். நான் ஒன்பது மணிக் குள் வந்து விடுவேன். சாப்பாட்டுக்கு மேல்...

ராஜே: அத்தான்! நான் சொல்வதைக் கேளுங்கள். எங்கள் அப்பாவுக்கு வேணுமானால் பின்னால் சொல்லிக் கொள்ளலாம். அத்தைக்கு இப்போதே நீங்களே சுருக்கமாகவாவது சொல்லி விட்டுப் போங்கள். அவர்கள் சங்கடப்படுவது என்னால் சகிக்க முடியவில்லை.

சுந்: அம்மா கோயிலுக்குப் போயிருக்கிறார்களாமே. அவர்களும் வருவதற்குள் நான் வந்து விடுகிறேன்.

ராஜே: இன்னேரம வந்திருப்பார்கள். நான் பார்த்து வருகிறேன். வந்திருந்தால் அத்தையை மட்டும் அழைத்து வருகிறேன்... இருங்கள், அத்தான்...போய் விடாதீர்கள்.

(என்று சுந்தரம் பதில் சொல்லுமுன் ராஜேஸ்வரி கீழே போக அந்த அறையின் வாசலண்டை வருகிறாள். உள்ளே நடந்த பேச்சுகளை முழுதும் கேட்டுக் கொண்டிருந்த மீனாட்சியம் மாள் ராஜேஸ்வரி வேளியே வருவதற்குள் எழுந்து அப் போதுதான் கோயிலில் இருந்து வந்ததுபோல ராஜேஸ் வரிக்கு எதிரில் வருகிறாள்)

ராஜே: அத்தை! நீங்க நீங்க வந்துவிட்டீர்களே! வாங்க... வாங்க...வந்து பாருங்கள்! (என்று கொம்மாளம் போட்டுக் கொண்டு கூப்பிடுகிறாள்.)

மீனா: (பதட்டம் இல்லாமல் வெளியிலேயே நின்றுகொண்டு) என்னம்மா...என்னத்தைப் பார்க்கச் சொல்லுகிறாய்? உன் அலங்காரத்தைத்தான் முன்னாலேயே பார்த்தேனே? உன் னைப் பார்க்கப்பார்க்க எனக்கு சங்கடந்தான் அதிகப்படுகிறது.

ராஜே: என்னைப்பார்க்க அல்ல அத்தை. வாங்களேன், உள்ளே வந்து இங்கே யார் வந்திருக்கிறார் என்று பாருங்களேன்.

மீனா: யார் வந்திருக்கிறார்கள்?...(என்று மீனாட்சியம்மாள் உள்ளே போகிறாள். சுந்தரம் அங்கிருப்பது முன்னாலேயே தனக்குத் தெரியும் என்பதைக் காட்டிக்கொள்ளாமல், சுந்த ரத்தைப் பார்த்ததும்)...ஆ! சுந்தரமா! அட என் சாமீ! என்ன இப்படியெல்லாம் மூடுமந்திரம் செய்யக் கற்றுக்கொண் டிருக்கிறீர்கள்?

சுந்: என்னம்மா? நாங்கள் என்ன மூடுமந்திரம் செய்துவிட் டோம்?

மீனு : நீ வசந்தாவைக் கல்யாணம் செய்து கொள்ளப் போவதாக ஊரே அமளிப்படுகிறது...இதுவரையிலும் மாமா வீட்டையும் ராஜேஸ்வரியையும் திரும்பிக்கூடப் பாக்க மாட்டேனென் றிருந்த நீ, திடீரென்று இங்கே வந்து யாருமில்லாத சமயம் பார்த்து நீங்கள் இரண்டுபேரும் இப்படி ஏகாந்தமாக இருப் பது மூடு மந்திர மல்லவா ? (என்று சிரிக்கிறாள்.)

சுந் : நானும் ராஜேஸ்வரியும் ஏகாந்தமாக இருப்போம் என்பது எங்கள் சிறு பிராயத்திலிருந்தே நிச்சயமாகிவிட்ட விஷயம் தானேயம்மா ? இதிலென்ன மூடு மந்திரம் ?

மீனு : அப்படியானால் நீ வசந்தாவைக் கல்யாணம் செய்துகொள் ளப் போவதாகச் சொல்லுகிறார்களே! அது என்ன ?

சுந் : அம்மா, உட்காருங்கள் சொல்லுகிறேன். (என்று தாயாரை உட்காரச் செய்கிறான். தானும உட்காருகிறான். ராஜேஸ் வரியையும் உட்காரச் சொல்லுகிறான். ஆனால் ராஜேஸ்வரி உட்காராமல் அத்தைக்குப் பின்னால் அவளிருந்த நாற்காலி யைப் பிடித்துக்கொண்டே நின்று கொண்டிருக்கிறாள்)... அம்மா ! வசந்தாவை நான் கல்யாணம் செய்துகொள்ளப் போவதாக மற்றவர்கள் நினைத்துக்கொண்டால் அது என் குற்றமா ?

மீனு : என்ன ! என்ன ! வசந்தாவை நீ கல்யாணம் செய்து கொள்ளப் போவதாகச் சொல்லுவது உண்மையல்லவா ?

சுந் : உண்மையல்ல. வசந்தாவைக் கல்யாணம் செய்துகொள்ள வேணும் என்று நானும் நினைத்ததில்லை. என்னைக் கல்யாணம் செய்துகொள்ள வேணும் என்று அவளும் விரும்பினதில்லை. நாங்கள் இருவரும் அண்ணன் தங்கை போலத்தான் இருக் கிறோம்.

மீனு : அப்படியா ! அட என் கண்ணே ! ஊரெல்லாம் என்னென் னமோ சொல்லுகிறார்களே. நீ நடந்துகொண்ட மாதிரியில் நானும் அப்படித்தானே நம்பிவிட்டேன். இதெல்லாம் மூடு மந்திரமல்லவா ?

சுந் : அம்மா! வசந்தாவை மாடு முட்டித் தள்ளிவிடும்போல் துரத் தியபோது நான் குறுக்கிட்டு அவளைக் காப்பற்றினேன் அல் லவா ?

மீனு : ஆமாம்.

சுந் : அப்போது மாடு என்னை முட்டி எனது இடது தோளில் பலத்த காயத்தோடு விழுந்துவிட்டேன் பாருங்கள்.

மீனு : ஆம்மாம்.

சுந்: அந்த சமயத்தில் வசந்தா தன் கையிலிருந்த புத்தகங்களை எறிந்துவிட்டு என்னருகில் வந்து உட்கார்ந்து என்னைத் தன் மீது சாய்த்துப் பிடித்துக்கொண்டு 'அண்ணா! என்னைக் காப்பாற்ற வந்து உங்களுக்கு இப்படி அபாயம் நேர்ந்துவிட்டதே' என்று கதறினாள். என்னுடன் ஆஸ்பத்திரிக்கு வந்து எனக்கு சிகிச்சை நடக்கிற வரைக்கும் கூடவே இருந்தாள். அன்று முதல் நாள் முற்றிலும் முணுமுடைந்து ஆஸ்பத்திரியை விட்டு வீட்டுக்கு வருகிற வரையிலும் தவறாமல் தினந்தினம் அங்கே வந்து என் சௌகரியங்களைக் கவனித்தாள். அப்போது நாங்கள் கல்யாணத்தையோ காதலையோ கருதவேண்டிய பருவமில்லாத இளைஞர்கள். அன்று முதல் இன்றளவும் நான் அவளிடத்தில் காதல் நிவேதனம் கொள்ளும்படி அவள் நடந்து கொண்டதே இல்லை. மேலும் ராஜேஸ்வரியும் நானும் வெகு நாளைக்கு முன்னாலேயே சத்தியம் செய்து கொண்டது போலவே வசந்தாவும் மோகனரங்கனும் வெகு நாளைக்கு முன்னாலேயே ஒருவரை ஒருவர் ஒருவர் காதலித்து கல்யாண ஒப்பந்தம் பேசி, சத்தியம் செய்து கொண்டிருந்தார்கள்.

மீனு: யார்? உங்களுடன் படித்தானே அந்த மோகனரங்கனு? அவனைத்தான் நல்லப்பர் வீட்டிலிருந்து ஓட்டிவிட்டதாகச் சொன்னார்களே!

சுந்: ஆமாம், வசந்தாவும் அவனும் கல்யாணம் செய்துகொள்ளக் கூடிய அளவு நேசமாகி விட்டதைக் கண்டுபிடித்துதான் அவனை ஓட்டி விட்டார்கள். அதை நல்லப்பர் வீட்டில் நான் வேலைக்குச் சேர்ந்தபிறகு வசந்தாவே எனக்குத் தெரியப் படுத்தினாள். அப்படியிருக்க நான் வசந்தாவைக் கல்யாணம் செய்துகொள்ள எண்ணுவேனா அம்மா?

மீனு: இதெல்லாம் யாருக்குத் தெரியும்? அது இருக்கட்டும், ராஜேஸ்வரி கல்யாணத்தைப் பற்றி உன்மாமா அத்தனை கடிதம் எழுதினானே, அப்போது நான் கேட்டதற்கெல்லாம் ராஜேஸ்வரியைக் கல்யாணம் செய்து கொள்ளத் துளிகூடப் பிரியம் இல்லாதவன் போல பதில் சொன்னாயே, அது ஏன்?

சுந்: அதா? அது மாமாவின் பணாமதையைக் குறைக்கவேணு மென்று நானும் ராஜேஸ்வரியும் சேர்ந்து மேற்கொண்ட விரதம்.

(என்று சிரிக்கிறான். ராஜேஸ்வரியும் சேர்ந்து சிரிக்கிறாள்)

மீனு: நீயும் இவளும்—சேர்ந்து மேற்கொண்ட விரதமா! அதென்ன விரதம் அது?

சுந் : அதா ? (மறுபடியும் சுந்தரமும் ராஜேஸ்வரியும் சேர்ந்து சிரிக்கிறார்கள்) அதா ! சொல்லுகிறேன் நிதானமாகக் கேளுங்கள். அதைச் சொல்லிவிட்டால் உங்களுக்குள்ள சந்தேகமெல்லாம் போய்விடும். நிதானமாகக் கேளுங்கள்.

மீனு : ஆமாம் அதைச் சொல்லு, நிதானமாகவே கேட்கிறேன்.

சுந் : எங்கள் அப்பா உயிரோடு இருக்கிற வரையிலும் அவரும் நீங்களும் செய்துவந்த தாராளச் செலவுகளையும் தானதர்மங்களையும் மாமா ஏளனம் செய்துகொண்டே வந்தாரே, நினைவிருக்கிறதா ?

மீனு : ஆமாம்...அதற்கென்ன? சிக்கனமாக இருக்கவேணுமென்று தானே அப்படிச் சொல்லிக்கொண்டிருந்தான்.

சுந் : அதுசரி...சிக்கனத்துக்காகத்தான்...பிறகு அப்பா இறந்த பிற்பாடு நமக்கு சொம்ப கடனிருந்ததைப் பார்த்து மாமா கண்டித்தாரா ?

மீனு : அதனாலென்ன ?

சுந் : அதனால் ஒன்றுமில்லை. உன்னுடைய நகைகளையும் குழந்தைகள் மேலிருந்த நகைகளையும் நமக்கிருந்த சொற்ப நிலத்தையும் காமே விற்றுக் கடன்களையெல்லாம் தீர்க்கிற வரைக்கும் மாமா பக்கத்தில் வந்தாரா ?

மீனு நம்முடைய கடன்களை நாம்தானே தீர்க்கவேண்டும்

சுந் : ஆமாம் ; நம்முடைய கடன்களை நாமேதான் தீர்த்தோம். வேறு யார் கட்டினது ?...அதைப்பற்றி வருத்தமில்லை. கடன் சொம்ப இருக்கிறதைக் கண்டு மிகவும் கண்டித்த மாமா 'கடனைக் கட்ட என்ன செய்கிறீர்கள்' என்று கூடக் கேட்கவில்லை. அப்படிக் கேட்டால் தான் கடனைக் கட்டவேண்டி வந்துவிடுமோ என்று எட்டிக் கூடப் பார்க்காமல் இருந்துவிட்டார் அல்லவா ?

மீனு : போனால் போகுன். அது அவன் சுபாவம். இதனாலென்ன ?

சுந் : கடனை யெல்லாம் பாக்கியில்லாமல் நாம் கட்டிவிட்டதைக் கண்ட பின் தன் பெண்ணை நான் கட்டிக்கொள்ள வேணுமே என்ற ஒன்றைமட்டும் கருதி—அவரே வந்து நம்மெல்லாரையும் அவர் வீட்டுக்கே வந்து விடும்படி அழைத்தார். அல்லவா ?

மீனு : ஆமாம். அதிலென்ன தப்பு ?

சுந்: அதற்காக மூன்று தரம் நேரில் வந்தார். ஏழெட்டு கடிதங்கள் எழுதினார்...கடனைக்கட்ட வழி தெரியாமல் நாம் தவித்துக் கொண்டிருந்த போதெல்லாம் எட்டிக் கூடப் பார்க்காத அவர், கடன்களைக் கட்டியான பிறகு தன் வீட்டுக்கு வந்து எச்சில் சோறு தின்று கொண்டிருக்கக் கூப்பிடுகிறாரே என்று எனக்கு வந்த எரிச்சலால் நான் மாமாவின் விருப்பத்திற்கு இணங்கவில்லை. அதனால் உனக்குக்கூட வருத்தம் அல்லவா, அம்மா?

மீனு: இதையெல்லாம் ஏண்டாப்பா இப்போ கிளறுகிறாய்?

சுந்: என்னம்மா, நான் சொல்லுவதை நிதானமாகக் கேட்பதாகச் சொன்னீர்களே?

மீனு: சரி சொல்லு, சொல்லு.

சுந்: கடைசி தடவையாக நம்மையெல்லாம் அவருடைய வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போக மாமா வந்தபோது, நான் சம்மதிக்காததைக் கண்டு மாமா என்ன சென்னார்? நினைவில் இருக்கிறதா அம்மா?

மீனு: என்ன சொன்னார்?

சுந்: "சுந்தரம்! ராஜேஸ்வரி உன்னையேதான் கட்டிக்கொள்ளுவேன் என்று சொல்லுவதனால் தானே நீ என்னை இப்படி அவமதிக்கிறாய்? நான் ராஜேஸ்வரியை உனக்குக் கொடுக்கப் போகிறதில்லை. வேணுமானால் பார்" என்று மாமா சொல்லவில்லையா?

மீனு: ஆமாம் அது விளையாட்டாகச் சொன்னது. அதனாலென்ன?

சுந்: அதனால் நானும் விளையாட்டாகத்தான் மாமாவின் பணச் செருக்கைக் குறைக்க வேணுமென்று ராஜேஸ்வரியை ஒரு விரதம் மேற்கொள்ளச் சொன்னேன்.

மீனு: அப்பாடா! அந்த விரதத்தைக் கேட்டதற்கா இந்தப் பழையகதைகளையெல்லாம் கிண்டினாய்? சரி அந்த விரதத்தைச் சொல்லு.

சுந்: மாமா அப்படி சபதம் பேசிவிட்டு வந்த இரண்டு மூன்று நாளைக்குப் பிறகு ஒருநாள் மாமாவும் மாமியும் வீட்டிலில்லாத சமயம் பார்த்து நான் இங்கே வந்தேன். ராஜேஸ்வரியைக் கூட்டிக்கொண்டு இந்த அறைக்கே வந்தேன். ராஜேஸ்வரியைப் பார்த்து "ராஜேஸ்வரி, நான் உன்னைத்தவிர இந்த ஜன்மத்தில் வேறு யாரையும் கட்டிக்கொள்ளப் போவதில்லை. இது கடவுளின்மேல் ஆணை. நீ என்னைத்தவிர யாரையும் கல்

யாணம் செய்துகொள்ள மாட்டேன் என்று சொல்லிக்கொண் டிருப்பது சத்தியந்தானே' என்று கேட்டேன். இவள் (ராஜேஸ்வரியைச் சுட்டிக்காட்டி) உடனே விம்மி விம்மி அழ ஆரம்பித்து விட்டாள். அவள் அழுகையை மாற்றி 'அப்படி யானால் நீயும் நான் சொன்ன மாதிரி சத்தியம் செய்' என் றேன். அவள் சந்தோஷத்தோடு சத்தியம் செய்தாள். உடனே நான் "நாம் இருவரும் கொஞ்ச நாளைக்கு ஒரு விரதம் மேற் கொள்ள வேண்டும்" என்றேன். இவள் அதற்குச் சம்மதித்து 'என்ன விரதம்?' என்றாள். "நான் உன்னைக் கல்யாணம் செய்து கொள்ளப் பிரியமே இல்லாதவன் போலச் சில நாளைக் குப் பாசாங்கு செய்து நடந்து கொள்வேன். நீ, உன்னை யார் கேட்டாலும் எப்போதும் போல என்னைத்தவிர வேறு யாரை யும் கட்டிக்கொள்ளவே மாட்டேன் என்று சொல்லிக் கொண்டே இருக்கவேண்டும். மற்றபடி நமக்குள் அப்போ தைக் கப்போது கடிதங்கள் ஆள் மூலமாக—தபாலில் அல்ல—நடந்து கொண்டிருக்க நான் ஏற்பாடு செய்கிறேன்" என்று சொன்னேன். இவள் உடனே அதற்குச் சம்மதித்து மறுபடியும் சத்தியம் செய்தாள். இதுதானம்மா எங்கள் விரதம்? இப்போது புரிந்ததா?

மீனு: நல்ல விரதமப்பா இது! நீங்கள் இரண்டு பேரும் சேர்ந்து என்னையும் தம்பியையும் திண்டாடித் திணரவைத்து விட்டீர் களே? மாமா மேல்தான் உனக்குக் கோபம், எனக்காவது இந்த விரதத்தைப் பற்றிக் கொஞ்சம் சொல்லி யிருக்கக் கூடாதோ?

சுந்: உங்களுக்குச் சொல்லியிருந்தால் நீங்கள் உடனே உங்கள் தம்பிக்குத்தான் முதலில் சொல்லியிருப்பீர்கள். பெண்டு களுக்குப் பெற்றபிள்ளைகளைக் காட்டிலும் கூட உடன் பிறப்பு கள் தானே ஒசத்தி! (சிரிக்கிறான். மீனுட்சியம்மாளும் ராஜேஸ் வரியும் சேர்ந்து சிரிக்கிறார்கள். அந்தச் சிரிப்பு ஓய்வதற்குள் மோட்டார் வண்டியின் 'ஹார்ன்' சப்தம் சற்று தூரத்தில் கேட்கிறது. அதை உற்றுக் கேட்டுவிட்டு)

ராஜே: அத்தை! அப்பா வந்துவிட்டார் போலிருக்கிறது. நம்ம மோட்டாரின 'ஹார்ன்' சத்தம்தான் அது...

மீனு: நீங்கள் இருங்கள், நான் போய்ப் பார்த்து வருகிறேன்.

ராஜே: சீக்கிரம் போங்கள்...அப்பா புது மனிதர்கள் யாரையா வது என்னைக் காட்ட இங்கே கூட்டிக்கொண்டு வந்தாலும் வந்துவிடுவார்.

(மீனுட்சியம்மாள் விரைவாகப் போகிறார். சுந்தரம் உடனே ராஜேஸ்வரியைக் கட்டித் தழுவி ஒரு முத்தம் மிட்டுவிட்டு)

சுந்: மோட்டாரிலிருந்து யார் யார் இறங்குகிறார்கள் என்பதை மாடியிலிருந்தே எட்டிப் பார்க்கலாம் வா.

[என்று ராஜேஸ்வரியையும் கூட்டிக் கொண்டு மாடியின் முன் பக்கத்துக்கு வந்து எட்டிக் கீழே பார்க்கிறார்கள். அப்போது நடராஜனுடைய மோட்டார் வாசலுக்கு நேராக வந்து நிற்கிறது - வண்டியிலிருந்து நடராஜன் முதலில் இறங்குகிறார். அடுத்தாற்போல் ஒரு வாலிபன் இறங்குகிறான். அதன்பின் நடுத்தர வயதுள்ள ஒரு ஐயாவும் ஒரு அம்மாளுமாக இறங்குகிறார்கள். கடைசியாக ஒரு கிழவருமாக கிழவியும் இறங்குகிறார்கள். எல்லாரும் வீட்டுக்குள் போகிறார்கள். கார் அதன் நிலையத்துக்குப் போய்விடுகிறது.)

சுந்: (ராஜேஸ்வரியின் காதோடு) நான் இங்கேயே இருக்கிறேன். நீ மட்டும் போய் அறையில் இரு. மாமா வரட்டும். சமயம் பார்த்து அவசியமானால் நான் வருகிறேன்.

(ராஜேஸ்வரி அறைக்குப் போய் விடுகிறாள். சுந்தரம் பக்கத்தில் மறைவில் இருக்கிறான்.)

காட்சி 76

இடம் : நடராஜன் வீடு

காலம் : முன் நிகழ்ச்சியின் சமயம்

[மாடியிலிருந்து இறங்கி வந்த மீனாட்சியம்மாள் விருந்தினர்களை வாசற்படியண்டையிலேயே வரவேற்கிறாள்.

நடராஜன் தன்னுடன் வந்தவர்களை மீனாட்சியம்மாளுக்கு அறிமுகப்படுத்த அருகிலிருந்த வாலிபனைக் காட்டி]

நட : இவர்தான் ராஜேஸ்வரிக்கு நான் பார்த்திருக்கிற மாப்பிள்ளை. பி. ஏ. பாஸ் செய்திருக்கிறார். இன்சினீரிங் காலேஜில் படித்துக் கொண்டிருக்கிறார். இந்த வருஷத்தோடு படிப்பும் முடியும். அப்புறம் நல்ல உத்தியோகம் கிடைக்கும். (நடுத்தர வயதான ஐயாவையும் அம்மாளையும் காட்டி) இவர் மாப்பிள்ளையின் தகப்பனார்.....இவர்கள் தாயார். பெரிய விவசாயிகள். சுமார் நூறு ஏக்கரா நஞ்சை உண்டு. வீடு லக்ஷம் ரூபாய் பெறும். (கிழவர்களைச் சுட்டிக் காட்டி) இவர் மாப்பிள்ளைக்குப் பாட்டனார்.....இவர்கள் பாட்டி.

(எல்லாரையும் வீட்டுக்குள் அழைத்துக் கொண்டுபோய் கூடத்தில் உட்காரச் செய்துவிட்டு நடராஜன் மீனாட்சியம்மாளைத் தனியே ஒரு ஓரத்துக்கான இடத்துக்குக் கூட்டிக்கொண்டுபோய்)

நட : ராஜேஸ்வரி எங்கே?

மீனு : மாடியில் இருக்கிறாள்.

நட : லக்ஷணமாக அலங்காரம் செய்து கொண்டிருக்கிறாளா?

மீனு : இன்றைக்கென்னமோ இதுவரைக்கும் இல்லாத மாதிரி, அப்படி அமோகமாக அலங்காரம் செய்துகொண்டிருக்கிறாள். பார்க்கப் பதினாயிரம் கண்கள் வேணும். எனக்கே ஆச்சரியமாக இருந்தது.....நான்.....

நட : (மீனாட்சியம்மாள் பேச்சை முடிப்பதற்குள்) அப்படியா! நான் போய்ப் பார்க்கிறேன். (என்று மளமளவென்று மாடிக்குப் போகிறார்)

(மாடியில் ராஜேஸ்வரி தன்னுடைய அறையில் பியானோ வாசிக்கிறவள்போல் உட்கார்ந்து கொண்டு யாராவது வருவார்

கள் என்று திரும்பித் திரும்பி வாசலைப் பார்த்துக்கொண்டிருக் கிறான். நடராஜன் அறைக்குள் நுழைகிறார். தந்தையைக் கண்டு ராஜேஸ்வரி எழுந்து)

ராஜே: என் அப்பா இன்னேரம்? மத்தியானமே வந்து விடுவீர்கள் என்று வெகுநேரம் எல்லாரும் சாப்பிடாமல் காத்திருந்தோம்.

நட: பட்டணத்திலிருந்து அந்தப் பிள்ளையாண்டான் சாயந்திரம் தான் வந்தார். அதனால் காலையில் புறப்பட முடியவில்லை. (ராஜேஸ்வரியின் அலங்காரத்தைப் பார்த்து) ஆ! இப்படித் தான் உன்னைப் பார்க்க வெகு லக்ஷணமாக இருக்கிறது..... இத்தனை நாளும் இந்த வயிரத்தோடுகளையும் வளையல்களையும் தொடக்கூட இஷ்டமில்லாமல் இருந்தாய். இன்றைக்கு...

ராஜே: இன்றைக்கு என்னுடைய நோன்புக்கு வரம் பலிக்கிற நாள் அப்பா.

நட: வாஸ்தவம்தான். உன் நோன்புக்குத் தகுந்த வரன் பலித்து விட்டது. தடையில்லை.....வா, கீழே போகலாம்..... வந்து பார்.....அவரை.

ராஜே: ஆமாப்பா. என் நோன்புக்குத் தகுந்த வரன் பலித்து விட்டது. கீழே வந்து நான் யாரைப் பார்க்க வேணும்?

நட: நான் அழைத்து வந்திருக்கிற அந்த வரனைத்தான்...வந்து பாரு.....பி. ஏ. பாஸ் செய்திருக்கிறார். இன்ஜினீர் வேலைக்குப் படித்திருக்கிறார். பெரியபணக்காரக் குடும்பத்திலேபிறந்தவர். பெற்றோருக்கு ஒரே மகன். நல்ல குணவான். பார்ப்பதற்கு மன்மதன் போலத்தான்.....வா.....வந்து நீயே பாரேன்.

ராஜே: 'மன்மதன் போல' என்பது என்னத்துக்கப்பா. அந்த மன்மதனே நேராக வந்தாலும்கூட நான் அத்தானைத் தவிர மற்றவர்களை விரும்பலாமா?

நட: ஐயையோ!.....ராஜேஸ்வரி!.....என்னம்மா! மறுபடியும் உன் பழைய பல்லவியே ஆரம்பித்து விட்டாயே! என் மூக்கை அறுத்து முகத்தில் கரி பூசிவிடுவாய் போலிருக் கிறதே! நான் போகும்போதே இனிமேல் இந்த மாதிரி நீ அவனையே நினைத்துக் கொண்டிருக்க முடியாது என்று சொல்லி விட்டுத்தானே போனேன்? வேண்டாம், இனிமேல் அந்தப் பயலை நினைக்காதே.

ராஜே: நானென்னப்பா செய்வேன். நான் அவரைத் தவிர வேறு யாரையும் கல்யாணம் செய்துகொள்ள மாட்டேன் என்று அத்தானுக்குச் சத்தியம் செய்து கொடுத்து விட் டேனே?

நட : ஆமாம்.....நீ அவனைத் தவிர வேறு யாரையும் கல்யாணம் செய்து கொள்வதில்லையென்று சத்தியம் செய்து கொடுத்திருக்கிறாய். ஆனால் அவன் உன்னைத் தவிர வேறு ஒருத்தியைத்தான் கலியாணம் செய்துகொள்வேன் என்று சத்தியம் செய்துகொண்டிருக்கிறான்.....நன்றாயிருக்கிறது! உங்களுக்கு மத்தியில் சிக்கிக்கொண்டு நான் மானங்கெடுவது? இதற்குத்தான் உன்னைப் பெற்று வளர்த்து.....

ராஜே : அத்தான் என்னையேதான் மணந்து கொள்வார். வேறு ஒருத்தியையும் விரும்ப மாட்டாரப்பா.

நட : இப்படி எத்தனையோ தரம் நீ சொல்லியாச்சு. அவன் உன்னை நினைப்பது கூட இல்லை. இந்தப் பைத்தியக்காரப் பேச்சுக்கெல்லாம் இனிமேல் நான் இடங்கொடுக்க மாட்டேன்.

ராஜே: அத்தான் என்னைக் கலியாணம் செய்துகொள்ள விரும்பினால் கூட நீங்கள் இடங்கொடுக்க மாட்டீர்களா ?

நட : அவனா ! அவன்தான் வசந்தாவைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறானே. அவனெங்கே உன்னை விரும்பப் போகிறான் ? உனக்கேன் இன்னும் இந்தப் பைத்தியம் ? அவன் பேச்சை விட்டுத் தொலை. தங்கமான வரனை நான் கொண்டு வந்திருக்கிறேன். வந்து பாரு. அவன் அந்த வசந்தாவையே கட்டிக்கொள்ளட்டும.

ராஜே : அப்பா ! வசந்தாதான் மோகனரங்கனைக் கல்யாணம் செய்துக்கொள்ளப் போகிறாளே, அவனை அத்தான் எப்படி கட்டிக்கொள்வது ?

நட : மோகனரங்கனையா ! வசந்தாவா ! யார் சொன்னது ?

ராஜே : வசந்தாவும் மோகனரங்கனும் பள்ளிக்கூடத்தில் படிக்கிறபோதே ஒருவரையொருவர் காதலித்து கலியாண ஒப்பந்தம் பேசி சத்தியம் செய்துகொண்டிருக்கிறார்களாம். இப்போ வசந்தாவுக்கும் மோகனரங்கனுக்கும் விவாகம் நிச்சயமாகியிருக்கிறதாம்.

நட : உனக்கெப்படித் தெரியும் ?

ராஜே : அத்தானே வந்து அத்தையிடம் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்.

நட: அத்தானா ; யார் சுந்தரமா ! இங்கேயா ! நம்ம வீட்டுக்கா ! வந்தானா என்ன ?

ராஜே : அத்தையைக் கேளுங்கள்.

நட : சுந்தரமா வந்து, வசந்தா மோகனரங்கனைக் கல்யாணம் செய்துகொள்ளப் போவதாகச் சொன்னானும் ?

ராஜே : ஆமாம்.

நட : அப்படிச் சொல்லு. இவனே ஏய்த்துவிட்டு வசந்தா மோகனரங்கனைக் கல்யாணம் செய்துகொள்ளப் போவது தெரிந்த பிறகுதான் இவனுக்கு இங்கே வர வழி தெரிந்ததோ ! சரி—சரி—இல்லாவிட்டால் அவனேன் இங்கே வருகிறான் ?

ராஜே : அப்படியல்ல அப்பா. வசந்தா அத்தானை மணந்து கொள்வதாக ஆசை காட்டினதுமில்லை, அத்தான் அவளை மணந்துகொள்ள ஆசைப்பட்டதும் இல்லை. அவர்கள் இருவரும் உடன்பிறப்புகள் மாதிரி. அத்தான் என்னைத் தவிர வேறு யாரையும் கல்யாணம் செய்துகொள்ளக் கருதியிருக்க மாட்டார்.

நட : அப்படியானால் நான் எத்தனை கடிதங்கள் எழுதினேன் ! உன் அத்தை எத்தனை தரம் கேட்டார்கள் ! உன்னைத் தவிர யாரையும் விவாகம் செய்துகொள்ள விருப்பமில்லாதவனாக இருந்தால் ஏன் அவன் அப்படி அலட்சியம் செய்தான் ?

ராஜே : அதற்குக் காரணம் அவர்தான் சொல்லவேண்டும்.

சுந் : (சொல்லிக்கொண்டே சுந்தரம் அறைக்குள் வருகிறான்) நீங்கள்தான் 'ராஜேஸ்வரியை உனக்குக் கொடுக்கப் போவதில்லை. வேண்டுமானால் பார்' என்று சொல்லிவிட்டீர்களே !

நட : (வெகு ஆச்சரியத்தோடு சுந்தரத்தைப் பார்த்து) அட ! சுந்தரமா ? நீ எப்போ வந்தாய் ?

சுந் : நான் வந்து வெகு நேரமாச்சு.

நட : நான் எப்போ ராஜேஸ்வரியை உனக்குத் தரமாட்டேன் என்றேன் ?

சுந் : எங்களைக் குடும்பத்தோடு இங்கேயே வந்துவிடச் சொல்லி அழைக்க வந்தீர்களே.....கடைசிதரமாக.....அப்போ..... நீங்கள் சொல்லவில்லையா, மாமா ? நினைத்துப் பாருங்கள்.

நட : ஓ ! அதா ! அது விளையாட்டாகச் சொன்னது. அதை மனதில் வைத்துக்கொண்டா—

சுந் : நானும் விளையாட்டாகத்தான் மாமா இப்படி மௌனம் சாதித்தேன். அதை நீங்கள் மனதில் வைக்க வேண்டாம். சரி ; இப்போது என்ன சொல்லுகிறீர்கள் ? ராஜேஸ்வரியை எனக்குத் தர உங்களுக்குச் சம்மதம்தானே ?

நட. இனிமேல் நானென்ன தருவது?.....போதும் படுத்தின பாடு. இன்னும் கேலி வேறே செய்யாதே.....என்னைத் திண்டாட வைக்க வேணுமென்று நீங்கள் செய்த சூழ்ச்சியை அறியாமல் இப்போ அவர்களை நானே போய் அழைத்துக்கொண்டு வந்துவிட்டேனே. இனி என்ன சொல்லி அவர்களைத் தாட்டுவது?.....

ராஜே: அவர்களைத் தாட்டுவதற்கென்று ஒன்றும் சொல்ல வேண்டாம் அப்பா. அவர்களை முறைப்படி உபசரித்து விருந்து செய்யுங்கள். அவர்கள் பார்க்க வந்த என்னைப் பார்த்துவிட்டு சாவதானமாகப் போகட்டும்.

நட: அப்புறம்?

ராஜே: அப்புறமென்ன? எனக்கு விருப்பமில்லை என்பதைப் பின்னல் எழுதி விடுங்கள்.

நட: சரி, அதைத் தவிர வேறு வழியில்லை. நான் கீழே போய் சாப்பாட்டைக் கவனிக்கிறேன. (சுந்தரத்தைப் பார்த்து) சுந்தரம் நீயும் சாப்பிட்டு விட்டுப் போகலாம.

சுந்: இங்கேயே சாப்பிடவேணும் என்றுதான் எண்ணி வந்தேன். ஆனால் இப்போதுள்ள நிலைமையில் நான் இங்கே அவர்களோடு சாப்பிடவேண்டாம். நான் யார் என்ன என்று நீங்கள் சொல்லவேண்டி ஏற்படும். அது அவ்வளவு நன்றாக இராது. நான் போய்விட்டு நாளை மறுதினம் வருகிறேன்.

ராஜே: ஆமாம். அப்பா, அதுவும் நல்ல யோசனைதான்.

சுந்: நான் போய்விட்டு நாளை அல்லது மறுநாள் வருகிறேன். ராஜேஸ்வரிக்கும் வசந்தாவுக்கும் ஒரே முகூர்த்தத்தில் 'விமோசன விழா' நடந்த அதே கொட்டகையில் திருமணம் நடத்த வேணுமென்று நல்லப்பர் தீர்மானித்திருக்கிறார். அது உங்களுக்கு சம்மதம்தானே மாமா!

நட: (கலகலவென்று சிரித்துவிட்டு) என்னைக் கேட்பானேன்? அவருக்கும் உனக்கும் எப்படிப் பிரியமோ அப்படி செய்யுங்கள்.

சுந்: சரி, நான் போய்வருகிறேன். அம்மாளிடம் சொல்லுங்கள்.

(என்று சுந்தரம் மாடியை விட்டிறங்கி விருந்தாளிகள் இருக்கும் கூடத்துக்குப் போகாமல் வெளியே போய்விடுகிறான்.)

காட்சி 77

இடம் : சுந்தரத்தின் சொந்த வீடு

காலம் : பிற்பகல்

[கடராஜன் அழைத்துக் கொண்டுவந்த விருந்தினர்களுக்கு மிக்க உபசாரங்களுடன் விருந்து நடந்தது. ராஜேஸ்வரியின் அழகையும் நடை நொடி பாவனைகளையும் இனிமையான சுபாவத்தையும் கண்டு பெண் பார்க்கவந்தவர்களுக்கு வெகு திருப்தி. வரதனை வந்த வாலிபன் உடனே முகூர்த்தத்திற்குத் தேதி நிச்சயம் செய்து விடும்படி தாய் தந்தையரிடமும் பாட்டன் பாட்டியிடமும் ரகசியமாகப் பேசி தன் ஆசையை வெளிப்படுத்திக் கொண்டான். அவனுடைய பெற்றோர்களும் பாட்டன் பாட்டியும்கூட அப்படியே ஆர்வம் சொன்னார்கள்.

ஆனால் கடராஜன் யோசனை செய்து விரைவில் கடிதம் எழுதுவதாகச் சொல்லி அவர்கள் முகம் கோணுகபடி பேசி மறுநாளே அவர்களைத் தன்னுடைய மோட்டாரிலேயே ஊருக்கு அனுப்பிவிட்டார். வந்தவர்கள் போய்விட்டதை அறிந்து கொண்டு சுந்தரம் அவனுடைய மாமா வீட்டுக்கு வந்தான். மோகனரங்கன் சென்னைக்கு வந்து விட்டதாகவும் அவன் அங்கிருந்து நேராக சுந்தரத்தின் வீட்டுக்கு வந்து விட்டுப் பிறகுதான் தன்னுடைய சொந்த வீட்டுக்குப் போக விரும்புவதாகவும் சுந்தரத்துக்குத் தந்தி கொடுத்திருந்தான். அதனால் மோகனரங்கனை வரவேற்கத் தாயாரையும் தங்கைகளையும் கூட்டிக் கொண்டு தன்னுடைய வீட்டுக்கே போயிருக்க வேணும் என்று சுந்தரம் கடராஜனிடம் சொன்னான். தடையின்றி கடராஜன் சம்மதித்தார். மோகனரங்கன் வரவை எதிர்பார்த்துக் கொண்டு சுந்தரம் தன்வீட்டில் காத்திருந்தான். மோகனரங்கனை அழைத்துவர ரயில்டிக்கு சுந்தரம் தன்னுடைய மாமாவின் மோட்டார் வண்டியை அனுப்பியிருந்தான்.

அந்த மோட்டார் சுந்தரத்தின் வீட்டுக்கு முன்னால் வந்து நிற்கிறது. மோட்டார் சப்தத்தைக்கேட்டுச் சுந்தரம்வெளியேவருகிறான். மோகனரங்கன் வண்டியிலிருந்து இறங்குமுன் சுந்தரம் மோகனரங்கனைக் கைகுலுக்கி மெதுவாகக் கட்டித்தழுவி வரவேற்கிறான். இருவரும் உள்ளே போகிறார்கள். உள்ளே மோகனரங்கனை வரவேற்கக் காத்திருந்த மீனாட்சியம்மாள்]

மீனு : வாப்பா. மோகன். சௌக்யமா?

மோக : அம்மா, உங்களுடைய ஆசீர்வாதம் எனக்குப் பரிபூரண மாக இருக்கும் போது சௌக்யத்துக்கு என்ன குறைவு?

மீனு : ரொம்ப சந்தோஷம். வசந்தாவும் நீயும் சகல சம்பத்துக் களும் நிறைந்து நீடுழி வாழவேண்டும்.

மோக : (இருகரங் குவித்து மீனுட்சியம்மாளுக்கு முன்னால் தலை வணங்கி) அம்மா! அந்தச் சம்பத்து எனக்குக் கிடைக்கப் போவது என் அருமை சுந்தரத்தின் ஒப்பற்ற உதவியினால் தானே. அதுவும் உங்கள் ஆசீர்வாதமே.

[மூன்று பேரும் உட்காருகிறார்கள். மீனுட்சியம்மாளின் மற்ற குழந்தைகள் உள்ளேயிருந்து வந்து சுற்றிக்கொண்டு வேடிக் கை பார்க்கிறார்கள். அவர்களைக் கண்டதும் மோகனரங்கன் தன் பெட்டிகளைக் கொண்டுவரச் செய்து அவற்றிலிருந்து அந்தக் குழந்தைகளுக்கென்று அவன் வாங்கி வந்த பலவித மான வெகுமதிப் பொருள்களையும் விளையாட்டுச் சாமான் களையும் எடுத்துக் கொடுத்து மகிழ்ந்து விட்டு மீண்டும் சுந்தரத்துக்கு அருகில் அமருகிறான். மோகனரங்கன் மேல் காட்டு உடையிலில்லாமல் தமிழ்காட்டு உடையில் இருந்த தைப் பார்த்து,]

சுந் : என்ன மோகன். நீ மேல் நாட்டு உடையில் பூட்டும் ஹாட்டு மாய் வருவாய் என்றல்லவோ எதிர் பார்த்தேன்?

மோக : அந்த உடை இங்கே எதற்கு? அப்படி வந்திருந்தால் நீயே என்னைப் பரிகாசம் பண்ணுவாய்.

சுந் : (சிரித்து விட்டு) நான் மட்டுமா? வசந்தாகூட அதைப் பரிகாசம் செய்வாள்!

மோக : அதிருக்கட்டும்.....உனக்குக் குண்டுபட்ட புண்முழுதும் ஆறிவிட்டதா?

சுந் : எனக்கு குண்டுபட்டது உனக்கு எப்போது தெரிந்தது?

மோக : நான் சென்னைக்கு வருகிற விவரத்தைப் பற்றி பம்பா யிலிருந்து உனக்குத் தந்தி கொடுத்தேனல்லவா?

சுந் : ஆமாம்.

மோக : தந்தியைக் கொடுத்துவிட்டுத் திரும்பினேன். என் பக்கத்தில் நம்மோடு படித்த சிவசுப்ரமணியன் வந்து நின் றான். அவன் லண்டனுக்குப் போக பம்பாய் வந்தவன். அவனோடு பேசிக் கொண்டிருந்த போது உன்னைப் புரட்சிக் கூட்டத்தார் ரிவால்வாரால் சுட்டுவிட்டதாகவும் முதுகில் குண்டு பாய்ந்து ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனதாகவும் யாரோ சொன்னதாகச் சொன்னான். எனக்குத் தலையில் இடி விழுந்தது போலிருந்தது. ஆஸ்பத்திரியில் உன் நிலைமை

எப்படியிருக்கிற தென்று தெரியுமா என்று அவனைக் கேட்டேன். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனது மட்டும் தான் கேள்விப்பட்டதாகவும் அதற்கு மேல் ஒன்றும் தெரியாதென்றும் சொன்னான். அத்தோடு நிறுத்தாமல் முதுகில் குண்டு பாய்ந்திருப்பதால் சுந்தரம் பிழைத்துக் கொள்வான் என்ற நம்பிக்கைக்கு அதிக இடமில்லை என்றும் சொல்லி விட்டான். (மீனாட்சியம்மாளைப் பார்த்து) எனக்கு அப்போது எப்படி இருந்திருக்கும் பாருங்கள். அம்மா.

மீனு : கேட்க வேணுமாப்பா? உன மனம் தவிப்பாய் தவித்திருக்கும்.

மோக : வசந்தாவைக் கல்யாணம் செய்து கொள்ளப் போவதாக எனக்கிருந்த இன்பமெல்லாம் எங்கேயோ பறந்து விட்டதம்மா ஒரே மயக்கமுண்டாகி நான் இறங்கியிருந்த ஹோட்டலுக்குப் போய் சாப்பிடாமல்கூட படுக்கையில் படுத்துச் செயலற்றுக் கிடந்தேன். சென்னைக்கு வருகிற விமானத்தில் எனக்கு ஒரு 'சீட் ரிசர்வ்' செய்யச் சொல்லி நான் அனுப்பியிருந்த ஆள் திரும்பி வந்து, எனக்கு இடம கிடைத்துவிட்டதாகச் சொன்ன போதுதான் கொஞ்சம் சுரணை வந்தது. விமான நிலையத்துக்குப் போனதும், விமானத்தில் ஏறினதும் சென்னையில் வந்து இறங்கினதும் கனவு போலத்தான் நினைவிலிருக்கிறது. நான் சுந்தரத்துக்கு அனுப்பிய தந்தியில் குறித்திருந்த சென்னை விலாசத்துக்குப் போய்ச் சேர்ந்தேன். அங்கே எனக்கு ஒரு தந்தி வந்து காத்திருந்தது. வெகு ஆத்திரத்தோடு அதை வாங்கிப் பிரித்துப் பார்த்தேன். அது சுந்தரம் எனக்கு அனுப்பியிருந்த பதில் தந்தி. அதைப் பார்த்த பிறகு தானம்மா என் உயிர் என் உடலில் இருக்கிற உணர்ச்சி எனக்கு வந்தது. நான் கொஞ்சம் புண்ணியம் செய்தவன் தான் எனற பூரிப்பு என்னுள்ளத்தில் முதல் முதல் அப்போது தான் அம்மா - என்னையும் அறியாமல் - உண்டாயிற்று. அதுவரையிலும் நான் இந்தப் 'புண்ணியம்' 'பாவம்' என்ற பேச்சுக்களைப் பற்றி எண்ணியதேயில்லை.

மீனு : ஆமாப்பா. புண்ணியம், பாவம் என்று எண்ணிப்பார்க்காமல் எதையும் செய்துவிடக்கூடாது. நாம் செய்கிற நல்வினையும் தீவினையும் தானே நம்முடைய சுகத்தையும் துக்கத்தையும் உண்டாக்குகின்றன.

மோக : அது உண்மை தானம்மா..... (சுந்தரத்தைப் பார்த்து) எங்கே எந்த இடத்தில் உன் மீது குண்டுபட்டது? காட்டு.

சுந் : (தன் சட்டையை நீக்கி, பாதுகாப்புக்காக பிளாஸ்திரி போட்டு இன்னும் கட்டுகட்டியிருந்த வலது அள்ளைப் புறத்

தைக் காட்டி) நீ இன்னேரம் பேசின அந்தப் புண்ணியத்தால் தானே என்னமோ அந்தக் குண்டு உடலுக்குள் பாயாமல் ஓரத்தில் பட்டு ஓடிவிட்டது. 'பாண்டேஜ்' பலமாக இருப்பதைப் பார்த்து பயந்து விடாதே. காயம் லேசானதுதான். அதேகமாக ஆறிவிட்டது.

மோக : நல்லவேளை உன்னுடைய புண்ணியம் ஒருபுறமிருக்க, (மீனுட்சியைக் சுட்டி) அம்மாவும் ஐயாவும் செய்த புண்ணியங்கள் வீணாய்ப்போகுமா.....ஆமாம், இங்கே புரட்சி இயக்கம் அவ்வளவு பலமடைந்து விட்டதா என்ன ?

சுந் : 'புரட்சி இயக்கம்' என்று சொல்லத் தகுந்தது இங்கு ஒன்றும் இல்லை. 'புரட்சி' என்றும் 'பொதுவுடைமை' சமதர்மம் என்றும் சொல்லிக் கொண்டு கொள்ளையும் கொலையும் நாச வேலைகளும் நடக்கத் தூண்டுகின்ற சிறு சிறு ரகசிய முயற்சிகள்தான் அங்கங்கே நடக்கின்றன..... அமெரிக்காவில் பொதுவுடைமை இயக்கம் இருக்கிறதா ?

மோக : வெளிப்படையாக இப்படி இயக்கம் அங்கே ஒன்றுமில்லை. ஆனால் மறைமுகமாகப் புரட்சி மனப்பான்மை இருப்பதாக சந்தேகப்படுகிறார்கள். இருந்தாலும், அமெரிக்காவில் செல்வாக்குடைய எல்லா அரசியல் கட்சிகளும் இந்தப் புரட்சி முயற்சிகளை அருவருக்கிறவர்கள். ஐரோப்பாவிலும், ஆசியாவிலும் இருக்கிற அளவுக்கு அமெரிக்காவில் இது பரவ முடியாது

சுந் : அமெரிக்காவில் ஏழைகள் அதிகமாக இல்லை. அதனால் தான் அங்கே புரட்சி மனப்பான்மை பரவமுடியாது.

மோக : ஆ ! அப்படி ஒன்றும் எண்ணிவிடாதே. அமெரிக்கா செல்வம் மிகுந்த நாடுதான். ஆனாலும் மனிதனுடைய சுகதுக்கங்கள் அங்கேயும் இதே மாதிரிதான் இருக்கின்றன. ஆகாயத்தை இடித்துக் கொண்டிருக்கிற மாடமாளிகைகள் மலிந்த அந்த அமெரிக்காவிலும் வீடுவாசல் இல்லாமல் வீதிகளில் சாக்கடை ஓரத்தில் இரவெல்லாம் பனியில் விறைத்துக் கொண்டு படுத்துக்கிடக்கிற ஏழைகள் ஏராளமாக இருக்கிறார்கள்.

சுந் : உண்மைதானா ?

மோக : முற்றிலும் உண்மை; நானே கண்ணாரக் கண்டது. மேலும் இந்த உலகத்தில் அமெரிக்காவில்தான் தொழிற் சாலைகள் அதிகமாக உள்ளது. அவ்வளவு தொழிற்சாலைகள் இருந்தும் அங்கேயும் சுமார் அறுபது லட்சம் தொழிலாளிகள் வேலைகிடைக்காமல் திண்டாடுகிறார்கள்.

சுந் : அப்படியா? அங்கே கூடுமான வரையிலும் எல்லா மக்களும் மனிதனுக்கு வேண்டிய வசதிகளுடன் செளக்ய மாக இருப்பதாக அல்லவா எண்ணினேன்?

மோக : இக்கரைக்கு அக்கரை எப்போதும் பச்சைதான். நானும் அங்கே போவதற்கு முன் அப்படித்தான் எண்ணிக் கொண்டிருந்தேன். எல்லாருக்கும் சமசௌக்யம் என்பது எந்த நாட்டிலும் இல்லை. எங்கே போனாலும் சுகப்படுகிற வர்கள் சொற்பமாகவும், அவதிப்படுகிறவர்கள் அதிகமாகவும் தான் இருக்கிறார்கள்.

சுந் : அப்படியானால் சமரச உணர்ச்சி அங்கேயும் குறைவு தான் என்று சொல்லு?

மோக : சமரச உணர்ச்சி எங்கும் குறைவுதான். என்ன சமரசம் பேசினாலும் ஏழை - பணக்காரன் அல்லது முதலாளி பாட்டாளி என்ற வித்தியாசமே இல்லாது போய்விட்டாலும், புத்திசாலி - புத்தியில்லாதவன் என்றோ, திறமையுள்ளவன் - திறமையில்லாதவன் என்றோ, தைரியசாலி-கோழை என்றோ, அல்லது தலைவன் - தொண்டன் என்றோ வேற்றுமைகள் வந்தே விடுகின்றன. அந்த வித்யாசங்களுக்குத் தகுந்தபடி தான் பொருளாதார சௌகரியங்களும் விநியோகமாகின்றன. ஆகையினால் வெறும் பொருளாதார முறையில் சமரச உணர்ச்சி உண்டாக்க ஒருநாளும் முடியாது. ஜீவகாருண்ய முறையில் சமரசத்தை உணர்ந்தால் அல்லாமல் மனிதருக் குள் அமைதி வராது. தெய்வ நம்பிக்கையும், ஆன்ம உணர்ச்சியும் ஜீவகாருண்யமும் சேர்ந்தால்தான் உண்மை யான சமரசம் உண்டாகும்.

சுந் : அதற்கு என்ன செய்யலாம்?

மோக : கேட்பானேன்? காந்திமகான் வாழ்ந்து காட்டிய வழி ஒன்றே ஒன்றுதான் உலகிலுள்ள குழப்பங்களைக் குறைக்க வல்லது.

சுந் : அடடா! என்ன மோகன், உனக்குக்கூட காந்தீயத்தில் இவ்வளவு ஆர்வம் வந்துவிட்டதே! இங்கிருந்தபோது நீ காந்தீயக் கூட்டங்களுக்குக்கூட வரமாட்டாயே!

மோக : ஆம். இங்கிருந்த போது நான் காந்தீயத்தின் பெருமையைச் சரியாக உணரவில்லை. அதற்காக வெட்கப்பட வேண்டியதுதான். வெளிநாடுகளுக்குப் போன பிறகுதான் அந்த அற்புதப் பிறவியின் மகிமையை அறியலானேன். அமெரிக்காவில் காந்தியண்ணலுக்கு இருக்கிற பெருமையைக் கண்டால் நாம் நாணமடைய வேண்டும்.

சுந் : அமெரிக்கர்களுக்கு காந்தியத்தில் அவ்வளவு நம்பிக்கையா ?

மோக : காந்தியத்தில் அவர்களுக்கு எவ்வளவு நம்பிக்கையோ அது எனக்குத் தெரியாது. ஆனால் அமெரிக்காவில் அவ்வளவு செல்வமும் விஞ்ஞான வெற்றிகளும் இருந்தும் அவைகளிலெல்லாம் அவர்களுக்குக் கிடைக்காத ஏதோ ஒரு திருப்தி காந்தியத்தில் இருப்பதாகக் கருதுகிறார்கள். அதனால்தான் காந்திஜீ பிறந்து, வளர்ந்து, வாழ்ந்த இந்த நாட்டிலும்கூட இல்லாத அளவு அவ்வளவு பெரிய ஞாபகச் சின்னத்தை காந்தி மகானுக்கு எழுப்ப வேணும் என்று அங்குள்ள ஜனங்களும் அரசாங்கமும் ஏகமனதாகத் துடிக்கிறார்கள்.

சுந் : அதைப் பார்த்துத்தான் உனக்கு இவ்வளவு காந்தி பக்தி வந்ததா ?

மோக : ஆம், உண்மையில் அதைப் பார்த்துத்தான்.

சுந் : ஜவஹர்லால் நேரு அமெரிக்காவுக்கு வந்திருந்தாரே, அவரைப் பற்றி அமெரிக்கர்கள் என்ன நினைக்கிறார்கள் ?

மோக : ஜவஹரை நான் அங்கே பார்த்தேன். அவர் பேசின அநேக பிரசங்கங்களுக்கும் போயிருந்தேன். ஜவஹருக்கு அமெரிக்கர் அளித்த வரவேற்பைப் போல் இதுவரையில் அவர்கள் வேறு யாருக்கும் நடத்தினதேயில்லை.

சுந் : ஆம், ஜவஹர் உலகத்தில் ஒப்பரிய ராஜ தந்திரியாக விளங்குகிறார் ; அதனால் தான்.....

மோக : அதனால் மட்டுமல்ல. காந்திமகான் போதனைகளை உலகத்தில் பரப்பி உலகசமாதானத்தை உண்டாக்க ஜவஹர்தான் சரியான மனிதர் என்பதற்காகத்தான் அவருக்கு அங்கே அவ்வளவு மரியாதை. ஜவஹர் அங்கே பேசின ஒவ்வொரு பிரசங்கத்திலும் காந்தியத்துக்குப் பலம் தேடும் நோக்கத்தோடுதான் பேசினார்.

சுந் : ஆம்.....சரி நாம் சாப்பிடுவோம். பிறகு மற்ற விஷயங்களைப் பேசுவோம்.

(எல்லோரும் உணவருந்த எழுந்திருக்கிறார்கள்.)

காட்சி 78

இடம்: சுந்தரத்தின் வீடு

காலம்: மாலை

[சாப்பாட்டுக்குப் பிறகு சுந்தரமும் மோகனரங்கனும் தனியே வெகுநேரம் பேசிக்கொண்டிருக்கிறார்கள். நல்லப்பர் வீட்டில் கொள்ளைக்காரர்கள் புகுந்த விவரமும், அதன் பிறகு நடந்த எல்லா விஷயங்களையும் ஒன்றுவிடாமல் சுந்தரம் சொல்லச் சொல்ல மோகனரங்கன் வெகு ஆவலோடு கேட்கிறான். கடைசியில்,]

மோ: என்ன! சுந்தரம்! திடீரென்று நல்லப்பர் இவ்வளவு புரட்சிகரமான மாறுதல் அடைவாரென்று யாராவது நினைத்திருக்க முடியுமா? உண்மையாகவே நல்லப்பர் வெகு நல்லவராக மாறிவிட்டாரே!

சுந்: ஆம். இது ஒரு அற்புதம்தான். காந்தி மகான் வாழ்க்கை எத்தனையோ கல் நெஞ்சர்களைக் கருணைமூர்த்திகளாக மாற்றியிருக்கிறது.

மோ: இருந்தாலும் காந்தி மகான் வாழ்க்கையினால் மாறுதலடைந்தவர்களுக் குள்ளேயும் கூட நல்லப்பரைப் போல் இவ்வளவு பெரிய செல்வத்தைத் திடீரென்று இப்படித் துறந்தவர்கள் யாரும் இல்லை. அவருக்கு வந்திருக்கிற தியாக உணர்ச்சி அபாரம்.

சுந்: ஆம். அவர் செய்திருக்கிற தானங்களின் முழு விபரமும் உனக்குத் தெரிந்தால்...

மோ: ஏன் எனக்கு முற்றிலும் தெரியுமே!

சுந்: எப்படி? நான் இன்னும் விவரமாக உனக்குச் சொல்லவில்லையே?

மோ: நீ சொல்லாவிட்டா லென்ன? விமோசன விழாவில் நல்லப்பர் வெளியிட்ட தானங்களின் முழு விவரமும் பட்டணத்தில் பத்திரிகைகளிலேயே பார்த்துவிட்டேனே.

சுந்: ஓ! பத்திரிகையில் பார்த்தாயா! பத்திரிகையில் முழு விவரமும் போட்டிருந்ததா?

மோ: கவர்னரே தலைமை வகித்து நடத்திய விழா ஆனதால் முழு விவரமும் போடாம இருப்பார்களா?

சுந்: அப்படியா! பத்திரிகையில் வெளியானதை நான் பார்க்கவில்லை. ஆம், நீ சொன்னது போல் நல்லப்பருக்கு வந்துவிட்ட திடீரென உணர்ச்சி அபாரம்தான். அதற்காக நீ நல்லப்பரைக் கண்டு பாராட்ட வேண்டாமா?

மோ: ஆம். நான் எங்கள் வீட்டுக்குப் போய் என் தாய் தந்தையரைப் பார்த்துவிட்டு உடனே நல்லப்பரைப் பார்க்கப் போவோம். நல்லப்பருக்கு என்மேல் கோபம் ஒன்றும் இல்லையே?

சுந்: கோபம் என்றும் இல்லை. உன்னை மருமகனாக வரவேற்கக் காத்திருக்கிறார்.

மோ: அப்படியா! வசந்தாவின் விருப்பத்திற் கிணங்கி நீ எனக்குத் தந்தி, தபால், பணம்—அனுப்பினதெல்லாம் அவருக்குத் தெரியுமா?

சுந்: தெரியும், நானும் வசந்தாவும் நடந்துகொண்ட நேசத்தைக் கண்டு வசந்தா என்னைத்தான் காதலிக்கிறாள் என்று எண்ணிக்கொண்டு நல்லப்பர் வசந்தாவை எனக்குத் தர விரும்பினார். பிறகு கொஞ்சங் கொஞ்சமாக வசந்தாவின் காதல் யாரிடத்தில் என்பதை விளக்கினேன். அவரும் வசந்தா காதலிக்கிற உன்னையே மருமகனாக சந்தோஷத்தோடு ஒப்புக்கொண்டு உனக்கும் எனக்கும் ஒரே முகூர்த்தத்தில் 'விமோசன விழா' நடந்த அதே கொட்டகையில் வெகு விமரிசையாக விவாகம் நடத்த ஏற்பாடு செய்திருக்கிறார்.

மோ: உனக்கு உன் மாமன் மகள் ராஜேஸ்வரிதானே?

சுந்: அட! அதெப்படி உனக்குத் தெரியும்?

மோ: நீ சொல்லா விட்டால்—எனக்குத் தெரியாதென்று எண்ணுகிறாயா? நான் அமெரிக்காவுக்குப் போகுமுன் உன்னைப் பார்க்க ஒருநாள் உங்கள் வீட்டுக்கு வந்திருந்தேன். நீ அப்போது வீட்டிலில்லை. உன் தாயாரோடு நெடுநேரம் பேசிக்கொண்டு உனக்காகக் காத்திருந்தேன். அப்போது உன் மாமாவும் ராஜேஸ்வரியும் மோட்டாரில் அங்கே வந்து உடனே போய் விட்டார்கள். அவர்கள் போன பிறகு அந்தப் பெண்ணைத்தான் உனக்கு மணம் செய்யப் போவதாகவும் ராஜேஸ்வரி உன்னையே மணந்துகொள்ள விரும்புவதாகவும், நீயும் அவளையேதான் விரும்புவதாகவும் உன் தாயார் சொன்

னுர்கள்...இப்போது இங்கு ரயிலிலிருந்து வரும்போது இந்த மோட்டார் உன் மாமாவுடையது என்று தெரிந்து டிரைவரிடத்தில் ராஜேஸ்வரிக்கு கலியாணம் ஆகவில்லையா என்று கேட்டேன். அவன் ராஜேஸ்வரி உனக்காகத் தவம் செய்து காத்துக் கொண்டிருந்ததைப் பெரிய கதையாகச் சொன்னான்.

சுந்: என்ன கதை சொன்னான் ?

மோ: நீ நெடுநாளாக ராஜேஸ்வரியை மணந்துகொள்ள விருப்பமில்லாதவன் போலிருந்த தாகவும் பிறகு சமீபத்தில் ஒரு நாள் திடீரென்று நீயே உன் மாமா வீட்டுக்குப்போய் ராஜேஸ்வரியை மணந்துகொள்ளச் சம்மதித்து விட்டதாகவும் எல்லாம் விவரமாகச் சொன்னான்.

சுந்: (கலகலவென்று சிரித்து) உன் விவாகம் நிச்சயமான பிறகுதான் என் விவாகத்தை எண்ண வேணும் என்றுதான் அப்படி விருப்பமில்லாதவன் போல் இருந்தேன். அதேமாதிரி உன் விவாகம் நிச்சயமான மறுநாள்தான் மாமா வீட்டுக்குப் போனேன்.

மோ: சுந்தரம்! நீ எனக்காகப் பட்டிருக்கிற கஷ்டங்களுக்காக நான் எந்த விதத்தில் நன்றி கூறுவதென்று தெரியவில்லை.

சுந்: நீ எனக்கொன்றும் நன்றி செலுத்த வேண்டியதில்லை. வசந்தாவுக்குத்தான் நீ நன்றி செலுத்தவேண்டும். நானும் வசந்தாவுக்கு நன்றி செலுத்தவேண்டும். வசந்தாவின் பெருங்குணம்தான் என் குடும்பத்தைத் தக்க சமயத்தில் காப்பாற்றினது. வசந்தாவின் திட சித்தத்தினால் தான் நீ இப்போது இங்கு வரமுடிந்தது. அவளுடைய தூண்டுதலினால் தான் நல்லப்பருக்கு இவ்வளவு தியாக உணர்ச்சி உண்டானது. எண்ணிறந்த ஏழை மக்களுக்கு விமோச்சனம் விடிந்ததும் வசந்தாவின் அன்பினால்தான்.

மோ: ஆம். வசந்தாவின் குணம் மிகவும் அபூர்வமானது தான். பொதுவாகவே பெண்களின் பெருமையினால்தான் ஆண்களுக்குச் சிறப்புகள் வருகின்றன.

சுந்: ஆம். அது மிகவும் உண்மை. என்னுடைய சிறப்பும் ராஜேஸ்வரியின் பெருமையினால்தான். பல துன்பங்களைச் சகித்துக்கொண்டு நமக்காகவே காத்திருந்த இந்த இரண்டு பெண்களுக்கும்தான் நாமிருவரும் நன்றி செலுத்தவேண்டும்.

மோ: ஆம். ராஜேஸ்வரியின் பெருமையை 'டிரைவர்' சொன்ன பிறகுதான் நான் அறிந்தேன். அதற்குமுன் அவள் வெகு அழகான பெண் என்பதும் அவளை நீ மணந்து கொள்ளப் போகிறாய் என்பதும மட்டும்தான் எனக்குத் தெரியும்.

சுந் : சரி, நீ நல்லப்பரைப் பார்க்க வேண்டாமா ?

மோ : ஆம். நான் போய் முதலில் என் தாயாருக்கும் தந்தைக்கும் வணக்கம் செலுத்திவிட்டு என் சகோதர சகோதரிகளையும் பார்த்துவிட்டு வந்துவிடுகிறேன். பிறகு நீ ஏற்பாடு செய்கிறபடி எப்போது வேணுமானலும் நல்லப்பரையும் வசந்தாவையும் பார்க்கலாம்.

சுந் : ஓஹோ ! வசந்தாவைக் கூட உடனே பார்க்க வேணுமா? (என்று சுந்தரம் சிரிக்கிறான். மோகனரங்கனும் குறிப்பை யறிந்து சிரிக்கிறான்).....சரி நீ உன் பெற்றோரைப் பார்க்க வேண்டியதுதான் முதல் கடமை—அவர்களைப் பார்த்து விட்டு வந்துவிடு. பிறகு நல்லப்பரையும் வசந்தாவையும் பார்ப்போம்.

(மோகனரங்கன் விடைபெற்றுக்கொண்டு நடராஜன் காரிலேயே தன் வீட்டுக்குப் போகிறான்)

காட்சி 79

இடம் : நல்லப்பருடைய மாளிகை

காலம் : மாலை

[நல்லப்பருக்கு திடீரென்று ஏற்பட்ட ஞானோதயத்தினால் அவருடைய தினசரி வாழ்க்கை முற்றிலும் மாறிவிட்டது. முன்னந்த நேரத்திலும் பணத்தைப் பெருக்குவதற்கே சிந்தனை செய்துகொண்டு, கணக்குப் புத்தகங்களையே புரட்டிப் புரட்டிப் பார்த்துக் கொண்டும் இருந்த அவர், இப்போது ஆன்ம சிந்தனைக்கான நூல்களையும் மகாத்மா காந்தியின் சரித்திரத்தையும் அவருடைய ஆதாரக் கல்வி, சர்வோதய சங்கம் முதலிய திட்டங்களைப் பற்றிய புத்தகங்களையுமே எந்நேரமும் படிக்கலானார். தாம் ஆரம்பிக்கப் போகிற சர்வோதயத் திருப்பணிகளுக்கு வேண்டிய திட்டங்களைத் தாமே தயார் செய்து கொண்டிருக்கிற சமயத்தில் சுந்தரமும், மோகனரங்கனும் அவரைப் பார்க்க வருகிறார்கள். முன் அவரைப் பேட்டிகாண வருகிறவர்கள் காத்திருக்க வென்று உபயோகப்பட்டு வந்த விஸ்தாரமான அறையில் இருந்த விலையுயர்ந்த நாற்காலிகள், மேஜைகள், சோபாக்கள் முதலியவற்றை அப்புறப்படுத்திவிட்டு தரையில் சுவர் ஓரமாக விரிக்கப்பட்டிருந்த பெரிய பாயின்மேல் ஒரு ரத்தினக் கம்பளத்தின் மேல் வெள்ளை உறை போட்ட சிறிய பஞ்சு மெத்தையில் நல்லப்பர் உட்கார்ந்திருக்கிறார். பக்கத்தில் ஒரு மேஜைப் பெட்டியின் மீது பல புத்தகங்களும் எதிரில் ஒரு சிறிய சாய்வு மேஜையும் இருக்கின்றன. அதற்குப் பின்னால் அவருக்கு நேராக ஒரு பலகையின் மீது ஒரு சிறு விநாயகர் விக்ரஹமும், நடராஜர் விக்ரஹமும், சீதாராம விக்ரஹமும், மகாத்மா காந்தியின் சிறு உருவச் சிலையும் காணப்படுகின்றன. சுந்தரம் முன்னும் மோகனரங்கன் பின்னுமாக நல்லப்பர் ஏகாந்தமாக இருந்த அந்த அறைக்குள் வருகிறார்கள். மோகன ரங்கன் முகமலர்ச்சியோடு இருகரம் குவித்து, தாழ்ந்து வணங்கி நல்லப்பரை நமஸ்கரிக்கிறான்.]

நல் : வாப்பா மோகன். எப்போது வந்தாய் ?

மோ : நேற்று மாலையில் வந்தேன்.

நல் : ரொம்ப சந்தோஷம். உட்காருங்கள்.

(இருவரும் உட்காருகிறார்கள்)

நல் : அமெரிக்கா பிரயாணம் சௌகரியமாக இருந்ததா ?

மோ : ரொம்ப சௌகரியமாக இருந்தது.

நல் : ஏன் அமெரிக்காவுக்குப் போகும்போது என்னிடம் சொல்லிக் கொள்ளாமல் போய்விட்டாய் ?

மோ : அப்போதிருந்த நிலைமையில் தங்களைச் சந்திக்க மிகவும் அஞ்சி விட்டேன்.

நல் : சரி. அமெரிக்காவுக்குப் போன காரியம் முடிந்ததா ?

சுந் : அதெப்படி முடியும் ? இப்போதுதான் தொழிற்சாலையில் சேர்ந்தேன். அதற்குள் உடனே நான் இங்கு வந்தாக வேணும் என்று சுந்தரம் கட்டாயப்படுத்தி.....

நல் : சுந்தரமா கட்டாயப்படுத்தினது ?

(என்று சிரிக்கிறார். எல்லோரும் சிரிக்கிறார்கள்.)

மோ : அது சுந்தரத்தின் கட்டாயமல்ல. வசந்தாவின்.....

சுந் : வசந்தாவின் கட்டாயம் கூட அல்ல.....

மோ : இல்லை. என்னுடைய ஆசைதான் உடனே இங்கு வரச் சொல்லி கட்டாயப் படுத்திவிட்டது.

சுந் : ஆ ! அதுதான் உண்மை.

நல் : உன் ஆசைக்கும் வசந்தாவின் விருப்பத்துக்கும் நான் வெகு சந்தோஷத்தோடு சம்மதம் தந்துவிட்டேன். நீங்கள் இருவரும் மணந்து கொள்வதில் எனக்கு மிக்க மகிழ்ச்சிதான். மூகூர்த்தமும் நிச்சயித்து விட்டேன். உனக்கும்—வசந்தாவுக்கும், சுந்தரத்துக்கும்—ராஜேஸ்வரிக்கும் ஒரே முகூர்த்தத்தில் விவாகம்.

மோ : சுந்தரம் சொன்னான்.....எல்லாம் விவரமாக.....எங்கள் இருவருக்கும் ஒரே முகூர்த்தத்தில் திருமணம் நடப்பது எனக்கு மிகவும் இன்பமான விஷயம்.

நல் : சரி. மறுபடியும் நீ அமெரிக்காவுக்குப் போகவேணுமா ?

மோ : தாங்கள் எப்படிச் சொல்லுகிறீர்களோ அப்படிச் செய்கிறேன்.

நல் : நான் ஒன்றும் அதற்குத் தடை சொல்லவில்லை. உன் விருப்பப்படி செய்யலாம். உன்னைப் போன்ற பல இளைஞர்கள் அயல்நாடுகளுக்குச் சென்று புதுப்புது அறிவுகளையும் கலைகளையும் சேகரித்து வர வேண்டியதுதான். ஆனால் வெறும் விஞ்ஞான மோகங்களிற் சிக்கிக்கொண்டு உலகத்தின்

துன்பங்களை அதிகப்படுத்திவிட்ட பொய்யான நாகரீகத்தைப் பற்றி எந்த நிமிஷத்திலும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

மோ : விஞ்ஞானமும் அவசியந்தானே? மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அது உபயோகப்படுகிறதல்லவா?

நல் : மனிதனுடைய வாழ்க்கைக்குப் பல வசதிகளை விஞ்ஞானம் உண்டாக்குவது உண்மைதான். அந்த அளவோடு விஞ்ஞானம் நிற்குமானால் நல்லதுதான். ஆனால் இப்போது உலகத்தில் பரவியிருக்கிற விஞ்ஞான ஆசை பெருவாரியான மக்களுடைய வாழ்க்கைத் தரத்தைக் குறைக்கச் செய்யுமேயல்லாது உயர்த்தாது.

மோ : அதெப்படி?

நல் : சொல்லுகிறேன். அதை மகாத்மா காந்தி வெகு தெளிவாக இந்தப் புத்தகத்தில் விளக்கியிருக்கிறார். (என்று ஒரு புத்தகத்தைக் காட்டி விட்டு) ஒரே இடத்தில் பணம் சேருவதனால் எவ்வளவு தீமை உண்டாகிறதோ அதைப்போலவே ஒரே இடத்தில் தொழில்கள் அதிகரிப்பதனாலும் உண்டாகிறது. ஒரே இடத்தில் வியாபாரம் அதிகரிப்பதனாலும் உண்டாகிறது. அதை மறுக்கவே முடியாது.

மோ : அதற்கென்ன செய்யலாம். வசதிகள் உள்ள இடத்தில் தானே விஞ்ஞானமும் தொழில்களும் அதிகரிக்கும்?

நல் : அப்படியானால் பணமும் அதிகரிப்பதற்கு வசதியுள்ள பணக்காரனிடத்தில்தானே அதிகமாக இருக்கவேணும்? ஒரே மனிதனிடத்தில் அதிகப் பணம் குவிந்திருப்பதற்கு மட்டும் குற்றம் சொல்லுவானேன்?

(எல்லோரும் சிரிக்கிறார்கள்.)

சுந் : உண்மைதான். அதை மாற்றுவது எப்படி?

நல் : அதை மற்றத்தான் காந்திமகான் தன் வாழ்நாளெல்லாம் முயன்றிருக்கிறார். அங்கங்கே விவசாயம், அங்கங்கே தொழில்கள், அங்கங்கே வியாபாரம் என்ற முறையில் ஒவ்வொரு இடமும் அதனதன் தேவைகளை அதுவே பூர்த்தி செய்துகொள்ளக் கூடிய முயற்சி வேண்டும்.

மோ : அதற்கு அங்கங்கே நீர்வளமும் நிலவளமும் மற்ற தொழில்களுக்கு வேண்டிய வசதிகளும் இயற்கையாகவே அமைந்திருந்தால் தானே அது முடியும்?

நல் : ஆம். இது மிகவும் புத்திசாலித்தனமான கேள்விதான். இங்கேதான் நமக்கு விஞ்ஞானம் வேண்டும். இயற்கை வளங்

கள் இல்லாத இடங்களில் அந்த வளங்களை அங்கே உண்டாக்கத்தான் விஞ்ஞான சக்திகள் உதவ வேண்டும். இப்போது விஞ்ஞானத் திறமை பெரும்பாலும் துர்விநியோகப் படுத்தப்பட்டு ஆக்க வேலைகளைக் காட்டிலும் அழிவு வேலைகளிலேதான் குறி வைத்திருக்கிறது. விஞ்ஞான சக்தி ஒரே இடத்தில் பெருகுவதும் பணம் ஒரே இடத்தில் பெருகுவதைப் போலத்தான் தீமை விளைக்கும். அதைத்தான் மாற்ற வேண்டும்.

சுந்: அதற்கு என்னதான் மாற்று?

நல்: அதற்கு மாற்று காந்திமகான் வாழ்ந்து சாட்டி நமக்குக் கற்பித்த ஒரே வழிதான். அதாவது விஞ்ஞான மோகங்களை விட்டொழிக்க வேண்டும். எந்திர தந்திர வாழ்க்கையை மிதப்படுத்த வேண்டும். மனிதனுடைய உடலுழைப்பில் நம்பிக்கை வேண்டும். எந்த விதத்திலாவது ஓரளவு உடலுழைப்பில்லாத எவனுக்கும் சுகமடையும் உரிமை இல்லை என்பதை உணர்த்த வேண்டும். பொதுவாக சத்தியம் அஹிம்சை என்ற இரண்டுக்கும் புறம்பான எல்லா விஞ்ஞான முயற்சிகளையும் விலக்க வேண்டும் என்ற மனப்பான்மையை உலக மக்களுக்குள் உண்டாக்க வேண்டும்.

மோ: மிக உயர்ந்த லக்ஷியம்தான். ஆனால் அது முடியக்கூடிய காரியமா என்பதுதான் சந்தேகம்.

நல்: முடியுமா முடியாதா என்பதைப்பற்றி கவலைப்பட்டுக் கொண்டிருப்பது சரியல்ல. முடிந்தவரை அறிவாளிகள் இதற்கேதான் முயலவேண்டும். எல்லா மனிதருக்கும் ஏக காலத்தில் இந்த நல்லுணர்ச்சிகள் வந்துவிட முடியும் என்று நான் சொல்லவில்லை. ஆனால் அங்கங்கே இப்போதும் சில ரிடத்திலாவது இருந்து வருகிற இந்த நல்லுணர்ச்சியை அங்கங்கே அதிகப்படுத்த வேண்டும்.

மோ: அப்படியானால் விஞ்ஞான வளர்ச்சி கெடுதலா?

நல்: விஞ்ஞானம் வளர்வது கெடுதல் என்று சொல்லக் கூடாது. விஞ்ஞான சக்திகளை துர்விநியோகப் படுத்துகிற வெறிகள் வளர்வதுதான் கெடுதல். விஞ்ஞானம் மனித சமூகத்துக்குச் சரியான வழியில் பயன்படுவதற்கு காந்திமகான் காட்டிய மெய்ஞ்ஞானமும் அதனுடன் சேரவேண்டும். அந்த மெய்ஞ்ஞான உணர்ச்சி இல்லாததனால்தான் அணுகுண்டும் ஹைட்ரஜன் குண்டும் உலகத்தை அலட்டிக் கொண்டிருக்கின்றன. இந்த விஞ்ஞானக் குண்டுகளின் ரகசியங்களை அதிகமாக அறிந்திருப்பதாகச் சொல்லப்படுகிற அமெரிக்காவிலேயே கூட இந்தக் குண்டுகளால் பூமியின் மேல்மட்டம் வெகு சீக்கிரத்

தில் ஆசமாகப் போவதாகப் பயம் உண்டாகி, அங்கே சிலர் பாதாள வீடுகளைக் கட்டிக்கொண்டிருப்பதாகப் பத்திரிகையில் படிக்கிறோம்.....பார்த்தீர்களா?

சுந்
மோ } : ஆம்.

நல் : இது விஞ்ஞான வெறிகளின் எதிரொலி. ஆகையினால் உலகத்தில் சமாதானம் உண்டாவதற்கும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளின் தீமைகள் குறைந்து, பெரும்பாலும் மனிதரின் வாழ்க்கைத் தரம் உயருவதற்கும் வெறும் விஞ்ஞான வளர்ச்சி மட்டும் போதாது. காந்தியண்ணல் கடைசியாக நமக்கு உபதேசித்த 'சர்வோதய' மனப்பான்மை ஒன்றுதான் மானிட சமூகத்தையும் மனிதப் பண்புகளையும் காப்பாற்றும்.

மோ : சர்வோதய மனப்பான்மை என்றால்?

நல் : சர்வோதய மனப்பான்மை என்பது "எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே" என்று சொன்னபடி ஒவ்வொரு மனிதனும் தனக்கு அக்கம் பக்கமாக உள்ள எல்லாரும் சுகமாக வாழ வேண்டும் என்று நினைப்பதுதான்.

மோ : சர்வோதயம் என்பது அவ்வளவுதானா?

நல் : ஆம். சர்வோதயம் என்பது அவ்வளவேதான். அந்த மனப்பான்மையை நடைமுறையில் காட்ட, நாம் நடத்த வேண்டிய வாழ்க்கைத் திட்டத்திற்காக சிற்சில காரியங்கள் உண்டு. அவை இடத்துக்கு இடம் மாறுபடும். அதைப் பற்றிக் கவலை வேண்டாம். ஆனால் சர்வோதயம் என்பது நாமும் நம்மைப் போலவே மற்ற எல்லா மக்களும் குறைவற்று வாழவேண்டும் என்று அந்தரங்க சுத்தியோடு பிரார்த்தனை செய்கிற எண்ணம் ஒன்றுதான். இந்த எண்ணத்தை நினைப்பூட்டிக் கொண்டே இருந்தால் ஒவ்வொரு மனிதனும் தனக்கு உள்ளதைக் கொண்டு தன்னைக்காட்டிலும் மெலிந்தவருக்கு இயன்றதான தர்மம் செய்ய எண்ணம் வரும். அதுதான் சரியான 'சமதர்ம' உணர்ச்சியை உண்டாக்கும். மற்றபடி அரசாங்க சட்டதிட்டங்களால் கட்டாயப்படுத்தப் படுகிற சமதர்மம் நீடிக்காது. அரசாங்கத்தின் சட்டதிட்டங்கள் சரியாக நடப்பதற்கும் கூட இந்த மனப்பான்மைதான் வேண்டும். எந்த நாட்டில் இந்த 'சர்வோதய' மனப்பான்மை அதிகமாக இருக்கிறதோ அந்த நாட்டில்தான் அமைதியும் மகிழ்ச்சியும் அதிகமாக இருக்கும். அதையறிந்துதான் காந்தியடிகள் இதை அவருடைய அநுபவத்தின் தீர்மானத் திட்டமாக நமக்குத் தந்துபோனார்.

சுந்: (இரண்டு கைகளையும் தட்டி சந்தோஷ ஆரவாரம் செய்து) நெடுங்காலமாக காந்திமகானுடன் நேரிற் பழகினவர்களுக்கும் கூட இவ்வளவு காந்தீய பக்தி இல்லையே! தாங்கள் இவ்வளவு சீக்கிரத்தில் காந்தீயத்தை இவ்வளவு தெளிவாகச் சொல்லுகிறீர்களே!

நல்: சீக்கிரம் என்பது ஒன்றுமில்லை. இருள் நீங்கினால் உடனே வெளிச்சம்தானே? காந்தீயத்தைப்பற்றி எனக்கிருந்த அஞ்ஞானம் திடீரென்று விலகியது. உடனே உண்மை முழுதும் எனக்கு வெட்ட வெளிச்சமாகிவிட்டது. அவ்வளவுதான். எளிய வாழ்க்கையும் தூய ஒழுக்கமும்தான் மனிதனை மனிதனுக வாழவைக்கும். அன்த நடத்திக் காட்டத்தான் அண்ணல் காந்தி அவதரித்தார். அதை நினைப்பூட்டிக் கொள்ளத்தான் சர்வோதய சங்க முயற்சிகள் இடைவிடாது செய்து கொண்டிருக்க வேண்டும். விஞ்ஞானத்தை வளர்க்கின்றவர்கள் வளர்க்கட்டும். நான் இந்த சர்வோதய எண்ணத்தை வளர்க்கவே சபதம் மேற்கொண்டு விட்டேன்.

சுந்: ஏன், நான்?

மோ: நானும் வேணுமானால்.....

நல்: நீங்கள் இருவரும் அதில் தீவிரமாக ஈடுபடக் கொஞ்ச நாளாக வேணும்...நான் ஒரு திட்டம் தயார் செய்து கொண்டிருக்கிறேன். முடிந்த உடன் உங்களுக்குக் காட்டுகிறேன். நீங்களும் அதில் சேர இடமிருக்கிறதாக உங்களுக்குத் தோன்றினால் இப்போதே நீங்களும் அதில் சேருவதற்கு எனக்கு ஆட்சேபமில்லை...சரி நான் அதை எழுதி முடிக்கிறேன்.

சுந்: எழுதுங்கள். நானும் மோகனரங்கனும் அவன் சந்திக்க விரும்புகிற பல நண்பர்களையும் பார்த்துவிட்டு வருகிறோம்.

நல்: செய்யுங்கள்...ஆனால் எங்கே போனாலும் சரியாக எட்டரை மணிக்கு இங்கே வந்து விடுங்கள்...கல்யாணத்துக்கு முன் நடக்கவேண்டிய நிச்சயார்த்த விருந்து இன்றைக்கு.

(சிரிக்கிறார். மற்ற இருவரும் சிரிக்கிறார்கள்)

நல்: நடராஜனும் அவர் மனைவியும் ராஜேஸ்வரியும் வருகிறார்கள். ராஜப்பாவும் அவர் குடும்பம் முழுவதும் வருகிறார்கள். மீனாட்சியம்மாளையும் அவருடைய பெண்களையும் அழைத்து வர ஆள் அனுப்பியிருக்கிறேன். சில கண்ணியமான நண்பர்களும் வருகிறார்கள்...போய் சீக்கிரம் வந்து விடுங்கள்.

(நல்லப்பருக்கு வணங்கிவிட்டு இருவரும் வெளியேபோகிறார்கள்)

சுந்: மோட்டாரிலேயே ஊருக்குள் போய் நண்பர்களை யெல்லாம் பார்த்து விட்டு வந்துவிடலாம்.

மோ : போகலாமா ? (தயங்கி) ஏன் அவர்களோ நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாமே ?

சுந் : எட்டரை மணி வரையிலும் இங்கே என்ன செய்யப் போகிறோம் ? இப்போதே போய் வந்து விடலாமே ?

மோ : போகலாம்.....

(என்று சிரிக்கிறான்)

சுந் : ஏன் என்ன யோசிக்கிறாய் ?...ஓ ! மறந்து விட்டேன். நீ வசந்தாவைப் பார்க்க வேணும். அல்லவா ?

(சிரிக்கிறான்)

மோ : (பதில் சொல்லாமல் சிரிக்கிறான்)

(உடனே சுந்தரம் தலைவாசலண்டை நின்றுகொண்டிருந்த நஞ்சப்பனுக்குக் கை காட்டி அவனைக் கூப்பிடுகிறான். நஞ்சப்பன் வருகிறான்.)

சுந் : நஞ்சப்பா ! வசந்தா அம்மாள் இப்போது எங்கே இருக்கிறார்கள் ?

நஞ் : மாடியில் அவர்கள் ரூமில் என்னமோ எழுதிக் கொண்டிருக்குதுங்க.

சுந் : செல்லம்மா அங்கே இருக்குதா ?

நஞ் : செல்லம்மா இப்பதான் நந்தவனத்துப் பக்கம் போச்சிங்க.

சுந் : (மோகனரங்கனைப் பார்த்து) மோகன் நீ போய் வசந்தாவைப் பார்த்துவிட்டு வா.

மோ : ஏன், நீயும் வாயேன்.

சுந் : நான் இங்கேயே இருக்கிறேன். நீ மட்டும் போய்ப் பார்த்து விட்டு வா.

மோ : போகட்டுமா ?

(சிரிக்கிறான்)

சுந் : தடையென்ன ? தாராளமாகப் போ.

(சிரிக்கிறான்)

[மோகன் வீட்டுக்குள் நுழைந்து மாடிக்குப் போகிறான்.

வசந்தாவுக்கு மோகனரங்கன் ஊருக்குவந்துவிட்டது தெரியாது. ஆனால் ஒவ்வொரு நிமிஷமும் அவன் வந்துவிட்ட சேதிக்கு எதிர் பார்த்துக்கொண்டிருந்தாள்.

மோகனரங்கனும் சுந்தரமும் நல்லப்பரைக் கண்டு பேசிக் கொண்டிருந்த சமயத்தில் வசந்தா தன்னுடைய மாடி

அறையில் மேஜைக் கருகில் நாற்காலியில் உட்காராந்து கொண்டு சர்வோதய சங்க விஷயமாக நல்லப்பர் எழுதச் சொல்லியிருந்த பல குறிப்புகளை எழுதிக்கொண்டிருந்தாள்.

மேஜையின்மீது அவளுக்கு நேராக எப்போதும் ஒரு சரஸ்வதி படமும், லட்சுமி படமும், காந்தி-கஸ்தூரிபாய் படமும் இருக்கும். தினம் தினம் மாலையில் விளக்கு வைத்தவுடன் நந்தவனத்திலிருந்து அப்போதைக்கு சேகரித்து வரும் புஷ்ப பங்களைத் தொடுத்து மாலை சாத்தி அந்தப் படங்களுக்கு ஆராதனை செய்வது வசந்தாவின் வழக்கம்.


எழுதிக்கொண்டிருந்த அவள், ஆராதனை நினைப்பு வந்து செல்லம்மாளைக் கூப்பிட்டு நந்தவனத்துக்குப் போய் புஷ்பங்களைக்கொண்டு வரச் சொன்னாள். செல்லம்மாள் போனபின் தன் நகைப் பெட்டியைத் திறந்து அதனடியில் அது நாள் வரையிலும் மறைத்துக் கிடந்த ஒரு போட்டோப் படத்தை எடுக்கிறாள். அது மோகனரங்கனின் வடிவப் படம். அமெரிக்காவுக்குப் போகுமுன் அவன் தந்தது. தகப்பனாருக்குப் பயந்து வசந்தா அதனை வெளியில் எடுப்பதில்லை.

அதை இப்போது எடுத்துப் பல முறை பார்த்துவிட்டு மற்றப் படங்களை விட்டு தூரமாகவேறொரு இடத்தில் அதைவைத்து, எட்டநின்று அழகு பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

அந்தச் சமயத்தில் மோகனரங்கன் அந்த அறைக்குள் வருகிறான். காலடி ஓசையைக் கேட்டு வசந்தா திரும்பிப் பார்க்கிறாள். மோகனரங்கனைக் கண்டதும் ஒரே பாய்ச்சலாக அவன் பக்கம் தாவுகிறாள்.

மோகனரங்கனும் தன் இரண்டு கைகளையும் அகல விரித்து எதிர்கொண்டு வசந்தாவை வாரி அணைத்து முகத்தோடு முகம் வைத்து இன்பத்தில் முழுகி நிற்கிறான்.]

மங்களம்.


மாமன் மகள்
நாமக்கல் கவிஞர்